வெளியீடு 14–12–1983] [Issued 14-12-1983

31 மார் 1984
2705
தமிழ்நாடு
எழும்பூர், -600 00

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 4, 1983—தொகுதி XLVIII எண் 1
Monday the 4th April 1983 Volume XLVIII No. 1

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009
Legislative Assembly Department Fort St. George
Madras-600 009.

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

V211,31 N83

N83-48-1

136025

600 008

## உள்ளடக்கம்

4—4—1983

பக்கங்கள்

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சர் அவையும்.

(i) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

(iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர் பட்டியல்.

1. வினாக்கள்—விடைகள்.
உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 9—31

2. ஒத்திவைப்புத் தீர்மானம் :
தனியார் பேருந்து ஒன்று கோவில்பட்டிக்கு அருகே மாட்டு வண்டிகளின் மீது மோதி பலருக்கு மரணம் விளைவித்துள்ளது. 31—45

3. அறிக்கை அளித்தல் :
விதி 109 (1)-ன் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அளித்த விடை குறித்து. 45—46

4. கவன ஈர்ப்பு :
திருநின்றவூரிலுள்ள இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு. 46—50

5. அரசினர் தீர்மானங்கள் :
(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல். 50
(ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல். 50
(இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல். 51

6. அறிவிப்பு :
மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல். 51

பக்கங்கள்

7. தகவல் கோரல் :

வெளியில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அவையில் விவாதிப்பது. 52—69

8. வரவு–செலவுத் திட்டம், 1983–84—வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.
(ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் } 61—230
(இ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 61, 62, 63<br>191—228 |
| திரு. அ. ரகுமான்கான் | 64—74 |
| திரு. கே. குப்புசாமி | 74—84 |
| திரு. ந. சிவஞானம் | 84—90 |
| திரு. கா. கோபால கிருஷ்ணன் | 90—93 |
| திரு. ரா. கிருஷ்ணன் | 93—102 |
| திரு. பூ. மு. நரசிம்மன் | 103—106 |
| திரு. இரா. கருப்பையா | 106—116 |
| திரு. சி. கணேசன் | 116—121 |
| திரு. தி. அன்பழகன் | 121—124 |
| திரு. பாபு ஜனார்த்தனன் | 126—132 |
| திரு. இரா. சண்முகம் | 139—144 |
| திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் | 144—154 |
| திரு. இல. பலராமன் | 154—160 |
| திரு. ந. குலசேகர பாண்டியன் | 160—164 |
| திரு. மே. அ. இராசகுமார் | 171—172 |
| திரு. என். வரதராஜன் | 172—174 |
| டாக்டர் கே. சமரசம் | 174—180 |
| திரு. என். வி. என். சோமு | 182—191 |

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள். 231—233


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்:

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, வக்ஃபுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)— வேளாண்மை, வேளாண்மை ... மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு, குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதி சீட்டு வழங்கல், நீங்கலாக மது விலக்கு பயண இசைவுச் சீட்டு பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம, எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சு காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர் பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்புப் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதிசினிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அநாதை காலநடைப் விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றம் பட்டவர்கள் நலம் சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### Governor of Tamil Nadu.

Thiru S. SUNDAR LAL KURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, Distric Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN(Minister for finance) —Finance, Legislature, Election, Food, Fisheries. Backward Classes Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity) Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY, (Minister for Rural Industries)— Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6 Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)— Information and Publicity, Film Technology. Tourism, Torism Development Corporation, Cinematograpy Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture) Agriculture, Agriculture Refinance, Agricultural Engineering wing and Agro Engeneering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Localt Administration), Municipal Administration Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Watter Supply and Drainage Board, Town Planning and Accommodation Countrol.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation —Agro Service Co-operative Societi s, Irrigation iucluding Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJEDRAN (Minister for Public Works and Khadi) Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery and Printing Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.**

பேரவைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

**மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி தா. இராசாம்பாள்.
5. திரு. கு. ரமணி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ. பி. எல்.

துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி. (குழு அலுவலர்)
திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்
திரு. பெ. பள்ளிக்கொண்ட பெருமாள், பி.ஏ.,பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ.,பி.எல் (சார்புச்செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல். (எஜ்டேட் அலுவலர்.
திரு. பி. கோதண்டராமன், பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)

திரு. சீ. பாலசுப்பிரமணியன் (தலைமை நிருபர்.)

(விவாதப் பதிப்பாளர்.)

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
**27—1—1983 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப் பெற்ற பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3 | அப்துல்ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9 | அரங்கராசன், திரு, வெ. | உப்பிலயாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 20 | ஆறுமுகம், திரு. க. | அரியலூர் |
| 21 | அனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. | பொன்னேரி |
| 23 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி தா. | தலைவாசல் (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 27 இராசாராம், திரு. க. | டனமரத்துப்பட்டி |
| 28 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 29 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ. வ.) |
| 30 இராசேந்திரன், திரு, எஸ். என். | தூத்துக்குடி |
| 31 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 34 இராமச்சந்திரன், திரு. செஞ்சி. ந. | செஞ்சி |
| 35 இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ. வ.) |
| 39 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 40 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 இராஜராம்நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ. வ.) |
| 45 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி, | அம்பாசமுத்திரம் |
| 46 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 49 உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 51 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 54 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 55 கந்தசாமி, திரு. பி. | பொங்லூர் |
| 56 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 கருணாநிதி, டாக்டர். மு. | அண்ணாநகர் |
| 58 கருப்பசாமி பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 கலித்தீர்த்தான், திரு. கோ. | சங்கராபுரம் |
| 63 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 64 கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ. வ.) |
| 65 காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 66 கிட்டப்பா, திரு. எம். | மாயவரம் |
| 67 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 70 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 75 குருசாமி, திரு. செ. | வந்தவாசி (செ. வ.) |
| 76 குமரிஅனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 குப்புசாமி, திரு. ப. | அந்தியூர் (செ. வ.) |
| 78 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 அமிர்தராஜ், திரு. (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 84 | கோபால், திரு. ஆர். டி. | கம்பம் |
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ. வ.) |
| 86 | கோவேந்தன், திரு எம். ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | ஆரூர் (செ. வ.) |
| 96 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு சீ. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 104 | சிவபெருமாள், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன் திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிபாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ. வ.) |
| 225 | செல்வராஜன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர் |
| 131 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சி-2 |
| 132 | சௌரிராஜன், டாக்டர் திரு கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி திரு. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்ககிரி (செ. வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர் திரு. கே. | முதுகுளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராஜன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ. வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |

| எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு.பி. | சங்கரநயினார் கோவில் (செ. வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு.பூ.மு. | பள்ளிபட்டு |
| 155 | நல்லப்பன், திரு.தி.கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே.பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு.பி.ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு.ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது திரு.இ.என்.எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு.செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர் திரு. பி. எஸ். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு.இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு.சு. | மேட்டுப்பாளையம் |
| 118 | பழனிமுத்து, திரு.சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு.பா. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு.என். | பழனி (செ.வ) |
| 171 | பாண்டியன், திரு.பி.எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபுகோவிந்தராஜன், திரு. | கூடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு.க. | மானாமதுரை (செ. வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு.ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு.பி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு.வி.பி. | வேடசந்தூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 180 | பாலுச்சாமி, திரு.ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு.எம். | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே.சி.டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை சென்னை. |
| 184 | பூங்காவனம், திரு, என்.ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு ஏ. | தாராபுரம் (செ. வ.) |
| 180 | பெரிசாமி, திரு.ரா. | தொட்டியம், (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ. வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா.கு | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு.ப. | இராயபுரம் சென்னை |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம்.எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு.பி. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு.பி. | திருச்சி-2 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துச்சாமி, திரு.சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு.என். | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு.மு.ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாமபட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புத்தூர் |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்க்சாமி, திரு.ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 212 | ராம்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு, | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம் திரு. எம்.கே. | முசிறி |
| 214 | ரெத்தினராஜ், திரு.எஸ். | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு.என். | திண்டுக்கல் |
| 216 | விஜயலட்சுமி செல்வி, வி. | வீரபாண்டி |
| 2'7 | வின்சென்ட் திரு, மி. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு.எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 219 | விஜயபாலன், திரு.என். | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 | வீராணம்பலம் திரு.க,வெ. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு.ப. | காஞ்சிபுரம் |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 226 | வெங்கடேசன், திரு.பி.எம். | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு.த. | தண்டாரம்பட்டு |
| 229 | வேலப்பன். திரு.சி.வி. | கபிலர்மலை |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 | ஜான்வின்சென்ட். திரு.மு. | நான்குநேரி |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 | ஹாஜாஷெரிப், திரு. கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு.ஜே. | திருவட்டார் |
| 235 | மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. சே இராஜா முகமது—அமைச்சர்
5 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி,—தலைமை வழக்கறிஞர்

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1983 ஏப்ரல் 4.

பங்குனி 21, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை".

யாரிடத்தும் குற்றம் இன்னதென்று ஆராய்ந்து, கண்ணோட்டம் செய்யாமல், நடுவுநிலைமை பொருந்தி, செய்யத்தக்கதை ஆராய்ந்து செய்வதே நீதி முறையாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

**வீரப்பனூர் கிராம மக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம்.**

*வினா எண் 629—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் உள்ள வீரப்பனூர் கிராம மக்களுக்கு குடும்ப ரேஷன் கார்டு வழங்காமல் 2 வருட காலமாக 600 போலி ரேஷன் கார்டு மூலமாக சர்க்கரை மோசடி செய்யப்பட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 1980 ஆம் ஆண்டு பொது மக்களிடம் இருந்து புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(ஆ) வீரப்பனூர் கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடையில் பதிந்துள்ள குடும்ப அட்டைகளை ஒரு சிலர் தவறாகப் பயன்படுத்தி வருவது திருவண்ணாமலை துணை ஆட்சியர் அவர்களால் 26—12—1980 அன்று கண்டு பிடிக்கப்பட்டு,

அக்கடையில் பதிந்திருந்த 600 குடும்ப அட்டைகள் நீக்கம் செய்யப் பட்டன. பிறகு கிராமத்தில் ஒவ்வொரு இல்லந்தோறும் சோதனை செய்தபின் உண்மையான குடும்பங்களுக்கு 1982-ல் நடைபெற்ற கணக்கெடுப்பின் அடிப்படையில் 418 குடும்ப அட்டை கள் வழங்கப்பட்டு, அதன் மூலம் அத்தியாவசியப் பண்டங் களான அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் முதலியன விநியோகிக்கப்படுகின்றன.

**திரு. பெ. சு. திருவேங்கடம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப்பகுதியில் உள்ள வீரப்பனூரில் மட்டும் அல்ல பல்வேறு பகுதிகளில் அங்கு இருக்கின்ற மலைவாழ் மக்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய அட்டைகள் கிடைக்க வில்லை. அதிலே இடையில் இருக்கின்ற தரகர்கள் அந்த அட்டை களைப் பெற்றுக்கொண்டு அதற்குண்டான பொருட்களை பெற்றுக் கொள்கிறார்கள். நான் கூட இதுபோன்ற கேள்வி ஒன்றினைப் போட்டிருக்கிறேன். அது பின்னால் வரும் என்று நினைக்கிறேன். ஆகவே இதை மறு பரிசீலனை செய்து அட்டைகள் நியாயமாகக் கிடைக்க வேண்டியவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீரப்பனூர் பற்றிய விவரம் என்னிடத்தில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அந்த பழங்குடி மலைவாழ் மக்களுக்கு அந்த அட்டையில் விவரம் தெரியாததன் காரணமாக, அதன் விளைவு தெரியாததன் காரணமாக அவர்களிடமிருந்து சிலபேர்கள் அந்த அட்டைகளை வாங்கி அதை தாங்கள் பயன்படுத்திக்கொள்கிறார் கள் என்ற அடிப்படையில் திருவண்ணாமலை கோட்ட ஆட்சியர் சென்ற போது இது போன்ற அட்டைகள் பிடிக்கப்பட்டு, அட்டை களே கிடைக்கவில்லை என்று சொன்ன 48 பேருக்கு அட்டைகள் வழங்கப்பட்டது. பிறகு 1982-ல் புதிதாக அட்டைகள் வழங்க கணக்கெடுத்தபோது ஒவ்வொரு குடும்பத்திலும் சோதனை செய்து அட்டைகள் இல்லாதவர்களுக்கு 410 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. அது மாதிரி வேறு சில கிராமங்களிலும் இருக் கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது போன்ற முறையீடு வருமானால் அல்லது அதுபோன்ற தன்மை இருக்குமானால் தனியாக விசாரித்து இந்த குறைகளை போக்கு வதற்கு நடவடிக்கைகளை அரசு மேற்கோள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஷன்களில் வழங்கப் படுகின்ற சர்க்கரை போன்ற பல்வேறு பொருள்களை இப்படி தொடர்ந்து போலி அட்டைகளைப் பெற்று ரேஷன் பெறு



கிறார்கள். மற்றும் விநியோகிப்பதில் பல்வேறு ஊழல்கள் நடை பெறுகின்றன என்று தொடர்ந்து பல புகார்கள் வந்து இருப்பதின் காரணமாக இவைகளை எல்லாம் நல்ல முறையில் நடைமுறைப் படுத்துவதற்கு, இவைகளைக் கண்காணிப்பதற்கு சர்வ கட்சியைக் கொண்ட உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழுவை ஒவ்வொரு கிராமத்திற்கும் அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய கருத்தை உணவு மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வந்த போது நான் குறிப்பிட்டு சொன்னேன். அதற்கான செயற்குறிப்புகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நியாயவிலைக் கடைக்கும் ஒரு குழு அமைக்கவேண்டும் என்பதையும் அந்தக் குழுவிலே எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் பொதுமக்களிடத்திலே நெருங்கிய தொடர்பு கொண்டு இப்படிப்பட்ட குற்றம் குறைகளை கண்டு பிடிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாக அதிலே இருப்பது நல்லது என்று கருதி அது பற்றிய செயற்குறிப்பினை உருவாக்கும் படியாக துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அது முற்றிலும் முடிந்தபிறகு நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி களை அரசு மேற்கொள்ளும்.

வெளி மாநிலங்களிலிருந்து நெல் கொள்முதல் செய்யும் திட்டம்.

*வினா எண். 630—**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்** : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அண்மையில் ஏற்பட்டுள்ள வறட்சியைச் சமாளிக்க . வெளி மாநிலங்களிலிருந்து நெல் கொள்முதல் செய்ய தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : (அ) வெளி மாநிலங்களிலிருந்து நெல் வாங்க உத்தேசம் இல்லை. அரிசி மட்டும் வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து நெல் கொள்முதல் இல்லை. ஆனால் அரிசி கொள்முதல் செய்வ தற்கு அரசாங்கத்தினிடத்தில் திட்டம் இருப்பதாக அமைச்சர்

அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்த எந்த மாநிலத்திலிருந்து எந்த முறையில் கொள்முதல் செய்வதற்கு முயற்சிக்கப்படுகிறது. இதற்கு மத்திய அரசினுடைய ஒத்துழைப்பு ,உண்டா ? என்ன விலையில் கொள்முதல் செய்ய உத்தேசித்து இருக்கிறோம். என்ன விலையில் கிடைக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து ஒரு மாநிலத்தை விட்டு நெல் இன்னொரு மாநிலத்திற்குப் போவதற்கு அவர்களே அனுமதிக்கவில்லை. அரிசியாகத்தான் போகவேண்டும் என்று அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகம் பிற மாநிலத்தினுடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தோடு தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக வாங்குகிற முயற்சிக்கு மத்திய அரசு அனுமதிப்பதில்லை. அரசு அரசோடு தொடர்பு கொண்டு வாங்குவதற்கும் மத்திய அரசு அனுமதிப்பதில்லை. தனிப்பட்ட வியாபாரிகள் பஞ்சாப், அரியானா, ஆந்திரம் போன்ற பிற மாநிலங்களிலிருந்து —அங்கே லெவி கொடுத்துவிட்டு அரிசியை எடுத்துச் கொண்டு வருகிறார்கள். ஒரு லட்சம் டன்னாவது பிற மாநிலங்களிலிருந்து அரசு வாங்குவதற்கு மத்திய அரசு அனுமதிக்க வேண்டுமென்று நாம் கேட்டுக் கொண்டோம். மத்திய அரசு அரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலிருந்து 20 ஆயிரம் டன்னும் ஆந்திர மாநிலத்திலிருந்து 50 ஆயிரம் டன்னும் பெறலாமென அனுமதித்திருக்கிறார்கள். அந்த முயற்சிகளில் அரசு ஈடுபட்டு இருக்கிறது. ஆனால் விலை பற்றி விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவர் அவர்களே, இப்போது கூட ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. அண்டையில் இருக்கின்ற ஆந்திர மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்வதற்காக மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற விலையைவிட அதிகப்படியாக 20 ரூபாய் கொடுக்கவேண்டுமென்ற அவசியம் ஏற்படும் என்று தெரிகிறது. அதேபோல் தமிழ்நாட்டிலே உள்ள விவசாயிகளுக்கும் அதிகப்படியான விலை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, லெவி மூலமாக குறிப்பிட்ட விலைக்குக் கொள்முதல் செய்த அரிசியிலிருந்து நாம் மாதம் ஒன்றிற்கு 80 ஆயிரம் டன் அரிசியும் 40 ஆயிரம் டன் கோதுமையும் தரவேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். ஆகவே லெவி மூலமாக வருகிற வகைகளிலே மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 15 ஆயிரம் டன் அரிசியும் 15 ஆயிரம் டன் கோதுமையும் தான் தருவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் வெளிச் சந்தையிலே வாங்கிக்கொள்ளலாம் என்ற அளவுக்கு அனுமதி தந்து இருக்கிறார்கள். வெளிச்சந்தையிலே வாங்கலாம் என்கிறபோது லெவி கொடுத்ததற்குப் பிறகு வெளியிலே



விலையில்தான் நாம்
குறைந்த தொகையை ஏற்றிவைக்கிற
வாங்கவேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகளிலேதான் பற்றாக்
குறையாக இருக்கிறநிலை மொத்தமாக தமிழகத்திலே இருப்பதன்
காரணமாக வெளிமாநிலங்களிலிருந்து எப்படியேனும் அரிசி
வரவேண்டுமென்ற அடிப்படையில் வெளிமாநிலங்களிலிருந்து
கூடுதல் செலவழித்து நாம் வாங்க வேண்டிய அவசியம் இந்தச்
சமயத்தில் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. தனிப்பட்ட வியாபாரி
கள் பலர் சென்று வாங்குவதன் காரணமாக வெளிச் சந்தையிலே
ஓரளவிற்கு கூடுதலாக விலை இருந்தாலும் இப்போது அரிசி
கிடைக்கிறது என்ற அளவுக்கு—ஓரளவுக்கு விலைகூட தாழ்ந்
திருக்கிறது என்ற சூழ்நிலை ஏற்படுவதன் காரணமாக—தனிப்
பட்ட வியாபாரிகள் பெரும் முயற்சிகள் எடுத்து ஆந்திராவிற்குப்
போய் தங்களுடைய விருப்பப்படி கொள்முதல் செய்து
கொண்டு வந்து அவர்களுடைய விருப்பப்படி ஆங்காங்கே வெளிச்
சந்தையில் கொடுப்பதன் காரணமாக நம்முடைய விநியோகத்
தின் மூலமாகத் தரப்படுகிற அரிசியை மட்டுமே நம்பியிராமல்
வெளிச் சந்தையிலேயும் அரிசி வாங்கப்படுகிற நிலைமை இருக
கிறது. விலை கூடுதலாக இருக்கிறது, ஆனால், அரிசியிலே
தட்டுப்பாடு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**திரு. செ. செம்மலை :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிவில்
சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஆந்திர மாநிலத்திலே கொள்முதல்
செய்யும்போது ஆந்திர மாநில கோவாப்ரேடிவ் மார்க்கட்டிங்
பெடரேஷன் அங்கே இருந்து தமிழ்நாட்டிற்கு அரிசி கொடுப்
பதற்கு முன்வருவதாகவும் ஆனால் அதன் விலை மத்திய அரசு
நிர்ணயித்த விலையைவிட 20 ரூபாய் கூடுதலாக இருப்பதாகவும்
சொல்லப்படுகிறது. ஆந்திர மாநிலத்திலே அந்த மாநில
கோவாப்ரேடிவ் மார்க்கட்டிங் பெடரேஷனிடமிருந்து கொள்
முதல் செய்கிறபோது மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு வாங்கு
வதற்கு மத்திய அரசை வற்புறுத்த நம் அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலி
லேயே குறிப்பிட்டதைப் போன்று லெவி கொள்முதல் மூலம்
வாங்கிவைக்கப்படுகிற மத்தியத் தொகுப்பிலிருந்து தருகிற
போதுதான் அந்தக் கொள்முதல் விலைக்கு நமக்குக் கொடுப்
பார்கள். வெளிச் சந்தையிலே வாங்குவதற்கு அனுமதி தருகிற
போது மாநில அரசு மட்டுமல்ல, நுகர்பொருள் வாணிபக்
கழகம் மூலமாக அல்லது கூட்டுறவுச் சங்கம் மூலமாக வாங்குகிற
போது வெளிச் சந்தையிலே தனிப்பட்ட வியாபாரிகள் அதிக
பேரம் பேசாத அளவுக்கு ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி வாங்கிக்
கொடுக்கிறபோது ஓரளவுக்கு அதிகமான விலை கொடுத்துத்தான்
வாங்க வேண்டிய அவசியம் ஏற்படும். நம்முடைய நெருக்கடி
நிலைமையை உத்தேசித்தும் பற்றாக்குறையை உத்தேசித்தும்
கூடுதலானாலும் தமிழகத்திற்கு அரிசி வரவேண்டும் என்ற அடிப்
படையில் அந்த அளவுக்கு வாங்குவதற்கான முயற்சிகளை எடுத்து
வருகிறோம். எந்த அளவுக்கு அது நடைபெறுகிறது என்ற விவ
ரக் குறிப்புகள் அது நடைமுறைப்படுத்தப்படுகிற போதுதான்
நமக்கு வரும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, வெளிச் சந்தையிலே, மற்ற மாநிலங்களிலே அதிக விலை கொடுத்தாவது அரிசி தமிழ்நாட்டிற்கு வரவேண்டுமே என்ற எண்ணத்திலே சொன்னார்கள். அதே நிலையில் அரிசியாகவோ நெல்லாகவோ கொடுக்க முன்வருகிற நம்முடைய விவசாயிகளுக்கு—வெளிச் சந்தையிலே வாங்குகிற விலையைக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

(முற்பகல் 9–10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வாங்கலாம். எனக்கு வேண்டியது இங்கே இருக்கிறதை விட கூடுதலாக வந்து சேர வேண்டும் என்பது தானே தவிர, இங்கே அவர்கள் பொதுச் சந்தையிலே விற்பதை நாங்கள் வாங்கிக் கொடுப்பதிலே இங்கே அரிசியினுடைய அளவு உயர முடியாது என்ற கவலையிலேதான் நான் சொல்கிறேனே தவிர, இல்லாவிட்டால், வாங்கிக் கொள்ளலாம். இப்போது கூட நாம் சொல்லியிருக்கிறோம். வெளிச்சந்தையிலே தஞ்சை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலே இருக்கிற வியாபாரிகள் வந்து பேசியிருக்கிறார்கள். ஆகவே வெளிச்சந்தையிலே விற்பதை வெளிமாநிலங்களுக்கும், மற்ற இடங்களுக்கும் எடுத்துச் செல்லாமல் இங்கே கொடுக்க முன்வந்தால், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், மற்றவைகள் மூலமாகவும் வாங்கிக் கொள்வதன் மூலமாக முன் வந்தால் நாங்களே ஒரு அனுசரணையான நிலைமைக்கு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி வந்தால் நல்லது. அதையும் சேர்த்து வாங்குவதற்கு முயற்சி செய்யலாம் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதுபற்றிய பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆந்திராவிலே, அரியானா, பஞ்சாபிலே வாங்குவது தமிழகத்தினுடைய அரிசி நிலையைக் கூட்டுவதற்குப் பயன்படும் என்பதைத் தவிர, இங்கே இருக்கிற குப்புசாமியிடம் வாங்கி குமாரசாமியிடத்திலே கொடுப்பதிலே அதிக லாபம் இருக்க முடியாது. அங்கே இருந்து வாங்குவது நமக்கு கூடுதலாக அரிசி வரும் என்ற நோக்கம்தான்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசுகிறபோது இங்கே வாங்குவதனால் குப்புசாமியிடம் வாங்கி, குமாரசாமியிடம் கொடுப்பதனால் என்ன பிரயோஜனம் என்று சொன்னார்கள். இப்போது தமிழகத்திலே உணவு உற்பத்தி குறைந்ததன் காரணம் கட்டுப்படியில்லாத விலை. இதனால் நெல் உற்பத்தி செய்யவில்லை. என்பதல்ல. திறமையாகச் செய்ய





முடியாமல் இருக்கிறார்கள். 40 மூட்டை விளைவிக்கிற இடத்தில் 20 மூட்டைகள் தான் விளைவிக்க முடிகிறது. காரணம் அவர்களுக்கு விலை கட்டுப்பாடியாகவில்லை. ஆகவே நீங்கள் அதிக விலை கொடுப்பதன் காரணமாக அதிக உற்பத்தியைத் தமிழகத்திலே இருக்கிற விவசாயிகளே செய்ய முடியுமே; கடந்த காலத்தில் செய்யத் தவறியதை இனியாவது அப்படிச் செய்வதன் காரணமாக, வெளி மாநிலங்களுக்கு கொடுக்கிற விலையை இங்கே கொடுத்தால், இங்கே உள்ளவர்களே அதிகமான உற்பத்தியைச் செய்வார்கள். அதை அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது ஓரளவிற்கு பற்றாகுறை இருப்பதற்குக் காரணம் வறட்சி நிலைமையும், மழை பெய்யாததுமே ஆகும். இது விவசாயிகளுடைய முயற்சியின்மை என்று யாரும் சொல்ல முடியாது. மற்றொன்று, வெளி மாநிலங்களிலே வாங்குவதற்கு அனுமதியளித்திருக்கிறார்கள் என்று நான் சொல்கிறபோது, ஏற்படுகின்ற பலன் என்னவென்று சொன்னால் 20 ஆயிரம் டன் அரியானா, பஞ்சாபிலேயும், 50 ஆயிரம் டன் ஆந்திராவிலும் வாங்குகிறோம் என்று சொன்னால், அதற்கு வேண்டிய தொகையை கிரெடிட் தருகிறது ரிசர்வ் வங்கி. மத்திய அரசினுடைய அனுமதி வேண்டும், வேண்டும் என்று கேட்பதற்குக் காரணமே உடனடியாக நாம் பணத்திற்குத் திண்டாட வேண்டிய அவசியமில்லை. ரிசர்வ் வங்கி நமக்கு உடனே அனுமதி தருகிறது. அதை வாங்கி நாம் தருகிற சூழ்நிலையில் இருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கொள்முதல் விலையைவிட நாம் 15 ரூபாய் கூட்டிக்கொடுக்கிற நிலையில் தான் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சொல்வதைப் போல விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை என்பது பொதுவாகவே இருந்து வருகிற ஒரு குறைபாடாகும். அதை நாம் வற்புறுத்தி வருகிறோம். நிர்ணயிக்கிற பொறுப்பு மத்திய அரசின் குழுவினருக்கு இருப்பதன் காரணமாக மாநில அரசு கொள்முதல் விலையைக் கிட்டத்தட்ட 147 ரூபாய்க்கு அமைத்தால் நல்லது என்று சொல்கிறோம். அமைத்தால் நல்லது என்று சொல்வதற்குக் காரணம் மத்திய அரசு அதை ஏற்கவேண்டும். மத்திய அரசு ஏற்றுக்கொண்டால் ரிசர்வ் வங்கி அதை ஏற்றுக்கொண்டு நமக்கு உதவி செய்ய வேண்டுமென்பதால்தான், நாம் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். அந்தச் சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்பதிலே எல்லோருக்கும் ஒருமித்த கருத்து இருக்கிறது என்றாலும் இருக்கிற நிலைமையை அனுசரித்து நாம் அவைகளை வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால்தான் நான் அவைகளைக் குறிப்பிடுகிறேன்.

## மீனவ மக்களுக்காக இன்சூரன்ஸ் திட்டம்.

*வினா எண் 631—திரு. சி கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீனவ மக்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம் தொடங்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தேசிய மீனவர்கள் கூட்டுறவுக் கூட்டுக் கழகம் மீனவர்களுக்காக விபத்து காப்பீடு திட்டம் ஒன்றினை ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டத்தை தமிழகத்திலும் அமல்படுத்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. கணேசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குப்பங் களில் வாழ்கிற ஏழை, எளிய ஜனங்கள் செய்தித் தாள்களைக் கூட படிக்க முடியாமல் தனித்த பகுதிகளில் வாழ்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் எல்லாம் அவர்கள் வீடு தேடிச் சென்று அவர்களுக்கு உணர்த்துகிற அளவிற்கு ஏதாவது விளம்பரங்கள் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வானொலி மூலமாகச் சொல்லப்படுகிறது ; தொலைக்காட்சி மூலம் சொல்லப்படுகிறது ; செய்தித் தாள் களில் எடுத்துத் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே வீடு தேடிச் சென்றாலும் அவர்கள் புரிந்துகொள்வார்களா என்பது சந்தேக மாகத் தான் இருக்கிறது. இப்படிப்பட்ட முயற்சியை மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள்தான் மேற்கொள்ள வேண்டும். இந்த 15 ஆயிரம் ரூபாய் மத்திய அரசு திட்டம் இருப்பதை நாம் மீனளத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போதே அதை அரசு ஏற்றுக்கொள்வதாக இருக்கிறது என்று சொன்னேன். அதன்மூலமாக நல்ல பலன் ஏற்படுகிறது. இதிலே 12 ரூபாய் ஒருவர் கட்டவேண்டும். இதிலே மத்திய அரசு 6 ரூபாய் தருகிறது; நாம் 3 ரூபாய் தரவேண்டும் ; கூட்டுறவு மீனவர் சங்கத்திலே இருக்கிறவர்கள் 3ரூபாய் தர வேண்டும். இதன்மூலமாக ஒருவர் கடலிலே இறந்துவிட்டாலும் சரி, உள்நாட்டிலே ஒரு மீனவர் இறந்துவிட்டாலும் அவர்களுக்கு 15 ஆயிரம் சேரும். அல்லது விபத்து ஏற்பட்டு உடல்ஊனமுற்றவராகி விட்டால் அவர்களுக்கு 7,500 ரூபாய் இந்த நிதியிலே கிடைக்கும். அது ஒரு நல்லதிட்டம். நமக்கு கூடுதலாக செலவாகும் என்றாலும் கூட பரவாயில்லை. இந்தத் திட்டத்திலே இப்போது இருக்கிற உறுப்பினர்களுக்கு எல்லாம் தர வேண்டும் என்றால் மத்திய அரசு 6லட்சத்து 19 ஆயிரத்து 122 ரூபாய் கட்டவேண்டி வரும். மாநில அரசு 3 லட்சத்து 9 ஆயிரத்து 561 கட்ட வேண்டி வரும். எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து 3 லட்சத்து 9 ஆயிரத்து 561 ரூபாய்



கட்ட வேண்டிவரும். இந்தத் திட்டத்தை மாநில அரசு ஏற்றுக் கொள்ள இருக்கிறது. செயற்குறிப்பு வடிவில் மிக விரைவிலே மத்திய அரசிற்கு இந்தக் கருத்தை தெரிவிக்கிற நிலையில் இருக்கிறது.

திரு. சி.கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய சிறப்பான நிலையில் இறந்தவர்கள் குடும்பத்தினர் பயன் பெறுகிறார்கள். உடல் ஊனமுற்றாலும், உயிர் சேதம் அடைந்தாலும், பொருள்கள் நாசமுற்றாலும், அதற்கு வேண்டிய தொகையை அவர்கள் உரிய காலத்திற்குள்ளே பெறுவதற்கு சில கால நிபந்தனைகள் ஏதாவது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கடலிலே, இறந்து பட்டாலோ அல்லது உள்நாட்டிலே இறந்துபட்டாலோ அல்லது அவர்கள் உடல் ஊனமுற்றாலோ அந்தத் தொகைகள் வழங்கப் படும். உடமைகள் சேதப்பட்டால், இந்தத் தொகையின்கீழ் அது வராது. ஆனால் அதற்கான விதிமுறைகள், நிபந்தனைகள் வகுக்கப்படும்பொழுது, எந்த அடிப்படையிலே சான்றிதழ்கள் பெற்று வழங்கப்படவேண்டுமென்ற குறிப்புகள் பின்னால் தரப்படும்.

திரு. இ. எஸ். எம். பக்கீர்முகமது : பேரவைத் தலைவர் அவர் களே, எத்தனை பேர்கள் இதுவரையில் இன்ஷூரன்ஸ் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மீனவ மக்களை அணுகி, கம்பல்சரியாக அதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கண்டிப்பான ஒரு முறை யிலே அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மீனவர் சங்கங்களிலே உறுப்பினர்களாக இருப்பவர்களுக்குத்தான் தரவேண்டும் என்று மத்திய அரசு இந்தத் திட்டத்தை வகுத்திருக்கிறது. அந்த வகையிலே பார்த்தால் தமிழகத்திலே 475 கடல் மற்றும்உள்நாட்டு மீனவர் சங்கங்கள் இருக்கின்றன. அதிலே மொத்தம் 1,03,187 பேர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே, 1,03,187 உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தில் சேருவதற்குத் தகுதி படைத்தவர்கள் ஆவார்கள். அவர்கள் ஆவார்கள் என்று எதிர் பார்க்கிறோம். அப்படி ஆகாவிட்டாலுங்கூட, கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அவர்கள் ஆவதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். அப்படி ஆகும்போதுதான் இந்த ரூ. 15,000 கிடைக்கின்ற வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும்.

திரு. டி.மணி : பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு இன்ஸூரன்ஸ் திட்டம் துவங்கின செயற்குறிப்பின்மீது, மைய அரசுக்கு அனுப்பப்பட்ட பல்வேறு பரிந்துரைகளையும், மைய அரசினுடைய உதவிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

வெளியிட்டார்கள். ஆனால், ரூ.15,000 என்பது மிகக் குறை
வாக இருக்கிற காரணத்தால், அதை உயர்த்துவதற்கு, குறைந்த
பட்சம் ரூ. 25,000 ஆவது கிடைக்கக்கூடிய அளவிலே, மத்திய
அரசாங்கத்திடம் சிபாரிசு செய்ய அரசு முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒருகாலத்தில் இறந்துபட்டால்
எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் இருந்தது. பிறகு ரூ.1,000
ஆயிற்று. தமிழக அரசைப் பொறுத்த வரை ரூ.5,000 என்று
வைத்திருந்தோம். வேறு சில மாநிலங்களிலே இல்லாமல் இருந்
தது. ஆனால் இப்போது மத்திய அரசு கொண்டு வந்து
இருப்பது, அகில இந்தியாவிலும் கொண்டுவர எல்லா
அரசுகளும் ஏற்றுக் கொள்கின்றனவா என்று கேட்டிருக்
கிறார்கள். சிலபல மாநிலங்கள் ஒப்புதல் அளித்திருக்கின்றன. சில
பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றன. எடுத்த எடுப்பிலேயே
இப்பொழுது ரூ. 15,000 என்று வாய்ப்பு ஏற்படுத்தியிருப்பது
மகிழ்ச்சிக்குரியது. அது நடைமுறைப்படுத்தப்பட்டு, காலப்
போக்கில், மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று ஏற்ற
லாமே தவிர, எடுத்த எடுப்பிலேயே ஒன்றுமே இல்லாமல் இருப்
பதற்கு இந்த அளவுக்காவது வந்ததே என்று நாம் மகிழ்ச்சி
அடைவோமாக.

குளத்தூர், புதுக்கோட்டை தாலுக்காக்களில் உள்ள கல்
உடைக்கும் ஊழியம் பாறைகள்.

* வினா எண். 632—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு
வருவாய்த் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர், புதுக்
கோட்டை தாலுக்காக்களில் கல் உடைக்கும் ஊழியம்பாறைகள்
இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கல்குவாரிகளில் கல் உடைக்க
எந்த முறையில் அனுமதி வழங்கப்படுகிறது ?

(இ) இந்தக் குவாரிகள், இனாம்தாரிடம் உள்ளதா
அல்லது அரசுக்கு சொந்தமாக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) தெரியும்.



(ஆ) முன்னாள் புதுக்கோட்டை சமஸ்தான அரசு, திருகோகர்ணம் சாந்தார் கோயில் மற்றும் துருவரங்குளம் ஆலயங்களில் சில முக்கிய பணிகள் ஆற்றி வந்த ஊழியதாரர்கள் என அழைக்கப்பட்டவர்களுக்கு கல் உடைக்கும் உரிமையை வழங்கியதே இன்னும் நடைமுறையில் உள்ளது.

(இ) மேற்படி கல்குவாரிகள் இனாம்தாரிடமே உள்ளது. அவற்றை அரசு எடுத்துக் கொள்வதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் கல்லுடைக்கிற இடங்கள், ஊழியர் இனாம் என்று சொல்லக்கூடிய முறையிலே, தனிப்பட்டவர்களுக்கு இருப்பதன் காரணமாக அவர்கள் இப்பொழுது கல் உடைக்கவில்லை. முன்னால் யாருக்குக் கொடுக்கப்பட்டதோ, அவர்கள்—கல் உடைக்கும் தொழிலாளர்கள் உடைக்கமுடியாமல் வேறுபலர் வந்து அந்தக் கல் உடைக்கும் வேலைக்கு இடைஞ்சலாக அவர்கள் எங்களுக்கு வேண்டிய பணம் கொடுக்க வேண்டும் அல்லது நாங்கள்தான் ஏலம் விடுவோம் என்று சொல்லக்கூடிய முறையிலே இதற்குத் தடங்கல் ஏற்படுத்துகிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு வேலையும் கிடைக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், அங்கே கல் உடைப்பதற்கு அதிகமான பணமும் கேட்கிறார்கள். அரசுக்குச் சேரவேண்டிய புறம்போக்காகிய இந்த இடங்களையெல்லாம் இந்த அரசு உடனடியாகக் கையகப்படுத்தி, கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு லைசன்ஸ் முறையிலே தகுந்த கட்டணம் பெற்றுக்கொண்டு—அளித்து அவர்கள் கல் உடைக்கின்ற வகையில் உதவி செய்யஅரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 9—20)

திரு பெ. திருமாறன் : பேரவைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் மன்னர் காலத்தில் பெரும்பகுதி இனாம் கிராமமாக இருந்து இந்த இனாம் கிராமங்கள் உழுபவர்களுக்கே சொந்தமானது. அவ்வாறு உழுபவனுக்கே நிலம்சொந்தம் என்பதைப் போல அந்த மலையிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அந்த மலைப் பகுதியை எடுத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1993 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.அழகர்சாமி அவர்கள் கேட்டதற்கு நேர்மாறாக மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாறன் அவர்கள் கேட்கின்ற கேள்வி இருக்கிறது. கேள்வி நேர்மாறாக இருந்தாலும் இனாம் நிலத்தை எடுத்து யாருக்கும் தான தர்மம் செய்யத் தயாராக இல்லை என்பதை மட்டும் குறிப்பாகச் சொல்லமுடியும்.

1981—82-ல் தமிழகத்தின் வறட்சிக்கு மைய அரசு அளித்த தொகை.

*வினா எண். 633—திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

*(அ) 1981—82-ல் தமிழகத்தின் வறட்சிக்கு மைய அரசு அளித்த தொகை எவ்வளவு ?*

*(ஆ) செலவழித்த தொகை எவ்வளவு ?*

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) சென்ற ஆண்டு 1981—82 ஆம் ஆண்டு வறட்சி வருகிற பொழுது மாநில அரசு அனுமதித்த தொகை ரூ. 57.63. மத்திய அரசு அளித்த உச்ச வரம்பு ரூ. 49.77. மாநில அரசு செலவு செய்தது, 31—3—1982 வரையிலும் ரூ. 56.85. மத்திய அரசின் உதவி அதற்கு ரூ. 32.27. அதிலே கடனாகக் கொடுத்தது ரூ.22.589. மானியமாகக் கொடுத்தது ரூ. 9.61 கோடிதான்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, வறட்சி வருகிற பொழுது அதன் கடுமைக்கும் நிலைமைக்கும் தக்கவாறு மத்திய உதவி வரவில்லையே. இந்த நெறிகளை யார் வகுக்கிறார்கள் ? மனமுவந்து மத்திய அரசு கொடுப்பதைத்தான் நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமா அல்லது வறட்சி பாதிக்கப்படும் பகுதிகளில் இவ்வாறு நிதி ஒதுக்குவதற்கான நெறிமுறைகளை வகுக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இப்படியெல்லாம் வற்புறுத்தி நடக்கவில்லை என்பதால் தான், அருகாமையிலே, சில நாட்களுக்கு முன்பாக பெங்களூரில் தென் மாநில முதலமைச்சர்கள் இதைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன்.



1983 ஏப்ரல் 4]

திரு. கோவைத்தம்பி : பேரவைத் தலைவரவர்களே, இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் நிதி கோரும் பொழுது நாம் குறிப்பிடுகின்ற நிதியை விடக் குறைவாக, பாதிக்கும் குறைவாக மத்திய அரசு அனுப்புகிறது. நாம் ஒரு பட்ஜெட் போட்டுத்தான் இவ்வளவு செலவு ஆகும் என்று கருதிக் கேட்கிறோம். ஆனால் அவர்கள் அதை விடக் குறைவாகப் பணத்தைக் கொடுக்கும் பொழுது, செய்கின்ற பணிகளுக்கு ஆகும் மீதிச் செலவுக்கு மாநில அரசு என்ன செய்கிறது ? அப்படி அந்தத் தொகை கிடைக்கா விட்டால் இந்த மாநில அரசால் வறட்சி நிவாரணப் பணி கைவிடப் படுகிறதா ? மத்திய அரசு கொடுக்கின்ற தொகையைக் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று நிபந்தனை ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, முன் மாதிரியாக நான் சொல்ல வேண்டுமென்றால், மத்திய அரசு உச்சவரம்பாக ரூபாய் 49.77 கோடிதான் நிர்ணயித்தது, 1981—82 ஆம் ஆண்டில். ஆனால் மாநில அரசு இது வரையில் 56.85 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது. மக்களுடன் நேரடித் தொடர்பும், மக்களுடைய கஷ்டங்களைப் புரிந்து கொண்டிருப்பதும் மத்திய அரசா அல்லது மாநில அரசா என்று கேட்டால் மாநில அரசு தான். மக்களுக்கு இருக்கின்ற சங்கடங்களை நேரடியாகப் புரிந்து கொண்டிருக்கின்ற இந்த அரசு, மத்திய அரசு பணம் கொடுத்தாலும், கொடுக்கா விட்டாலும் தன்னுடைய கடமைகளைத் தொடர்ந்து செய்யும்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு கடனாக வழங்கியிருக்கின்ற தொகைக்கு வட்டி உண்டா ? வழங்குகின்ற கடனை எத்தனை ஆண்டுகளில் நாம் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற விவரத்தையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசாங்கம் செலவு செய்கிற பணத்தில் அதைக் கழித்துக் கொண்டு வருகிறோம். அதற்கு வட்டி இல்லை.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, 1982—83-ம் ஆண்டு தமிழ் நாட்டில் வறட்சி ஏற்பட்டபோது மைய அரசும் மாநில அரசும் எவ்வளவு பணம் செலவழித்தது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சில மணித்துளிகளுக்கு முன்னால்தான் இதை அறிவித்தேன்.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, 1981–82-ம் ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது நம் மாநில அரசு மத்திய அரசைக் கேட்டது எவ்வளவு ? அவர்கள் 49 கோடி ரூபாய் கொடுத்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது நாம் எவ்வளவு கேட்டிருக்கிறோம் ? இதுவரை எவ்வளவு அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, நாம் மதிப்பீடு செய்து அனுப்பியது ரூ. 146.8 கோடி. உச்சவரம்பு அவர்கள் நிர்ணயித்தது ரூ. 49.7 கோடி என்று அறிவித்தேன். ஆனால் இப்போது நாம் கேட்டிருப்பது ரூ. 717.7 கோடி என்பது உங்களுக்குத் தெரியும். நமக்கு இது வரை அவர்கள் தரவில்லை. சில தினங்களுக்கு முன்னால் இந்தியப் பிரதமர் இங்கே வருகை தந்திருந்தபோது ரூ. 10 கோடி தருவதாகச் சொன்னார்கள். அதை நானும் செய்தித் தாளில்தான் பார்த்தேன். இதுவரை எந்தத் தகவலும் வரவில்லை. அதே போல் இன்று கூட செய்தித் தாளில் பார்த்தேன் ரூ. 72 கோடி கொடுத்திருக்கிறார்கள் என்று. அதுவும் இன்று காலை வரை, உங்களுக்கு முன்னால் நிற்கிற வரை எனக்குத் தகவல் இல்லை, அரசாங்கத்திற்கும் தகவல் இல்லை.

**திரு. ஆர். மணிமாறன் :** தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வறட்சி நிலையை உத்தேசித்து ரெயில் மூலம் குடிநீர் தருவதாக மத்திய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சென்ற 1981–82 ஆம் ஆண்டில் இது போன்று ரெயில் மூலம் குடிநீர் தருகிற பிரச்சினையைக் குறித்து மைய அரசை அணுகி மாநில அரசுக்கு அளித்ததா ? மாநில அரசு அதை ஏற்றுக் கொண்டதா ? எந்த அடிப்படையில் இதைத் தர அவர்கள் முன் வருகிறார்கள் ? அதைப் பயன்படுத்திக் கொள்ள அரசுக்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி, வறட்சிக்கு மைய அரசு அளித்த தொகை பற்றியது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, இன்றைய செய்தித்தாளில் நானும் அப்படி ஒன்றைப் பார்த்தேன். ஆனால் சென்னை பெருநகரத்தைப் பொறுத்த வரையில் தண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்பதால் ரெயில் மூலம் தண்ணீர் கொண்டு வர முடியுமா என்று நமது அரசு அலுவலர்கள் அவர்களுடன் கலந்தாலோசித்தார்கள். அப்படிக் கலந்து ஆலோசிக்கிறபோது தண்ணீர் கொண்டு வருவதற்கு ஆயிரம் காலனுக்கு ரூ. 80 செலவாகும் என்று அவர்கள் தெரிவித்தார்கள். இப்படிக் கொண்டு வருகிற தண்ணீரைக் குடிக்க முடியுமா என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் எதிர்பாராதவிதத்தில் இன்றைய செய்தித் தாளில் இலவசமாகத் தருவது பற்றி வந்திருக்கிறது. அது பற்றி எங்களுக்கு முறையான



தகவல் இல்லை. ஆனால் இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இங்குள்ள ரெயில்வே கோச் பாக்டரிக்கு தமிழ்நாடு அரசு பத்து இலட்சம் காலன் ஒரு நாளைக்குத் தருகிறோம். துறைமுகத்திற்கு ஐந்து இலட்சம் காலன் ஒரு நாளைக்குத் தருகிறோம். ஆனால் அவர்கள் இலவசமாகத் தண்ணீர் நம்மிடத்தில் கொண்டுவந்து கொடுக்கிறேன் என்று சொல்வதற்கு முன் முதலில் நம்மிடம் தண்ணீர் வாங்காமல் அவர்களுடைய தேவையை ரெயில்வே மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்து பூர்த்தி செய்துவிட்டு அதற்குப் பிறகு நமக்குத் தண்ணீர் தருகிறோம் என்று சொன்னால் அது கொஞ்சம் நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

## மதுராந்தகம் வட்டத்திலுள்ள செய்யூர் ஆதி திராவிடர் உப்பு உற்பத்தியாளர் சங்கம்.

* வினா எண்.634— திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், செய்யூர் ஆதிதிராவிடர் உப்பு உற்பத்தியாளர் சங்கத்திற்கு ஏக்கருக்கு நிலவரி ரூ. 1-லிருந்து ரூ. 30 வரை உயர்த்தப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்த வரி குறைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** (அ) ஆம்.

(ஆ) செய்யூர் உப்பு உற்பத்தி மற்றும் விற்பனையாளர் சங்கத்தின் வரி குறைப்பு கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** தலைவர் அவர்களே, இந்த உப்பு கூட்டுறவுச் சங்கம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு ஆதிதிராவிட மக்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. திடீரென்று 1978-ல் அந்த வரியை உயர்த்தி இருக்கிறார்கள். அதனால் தற்போது அந்த உப்பு சொஸைட்டியை நடத்த முடியாத நிலை இருப்பதை அரசு அறியுமா? இந்த நிலையில் அரசாங்கம் அதற்கு ஏதாவது நிவாரணம் அளிக்கிற வகையில் இந்த வரியைக் குறைத்து மற்றபடி நிவாரணமாக ஏதாவது உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, அதுபற்றி மனுக்கள் வந்து மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரையைப் பெற்று அதற்கு இப்போது போடப்பட்டிருக்கிற வரி அல்லது குத்தகைத் தொகை நியாயம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சிபார்சு செய்திருக்கிறார். அது இன்று நடைமுறைப் படுத்தப்படுகிறது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** தலைவர் அவர்களே, இந்த செய்யூர் உப்பளம் 1979 மே மாதம் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நிவாரணம் கோரி அரசுக்கு கடிதங்கள் அனுப்பி இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறதா? இந்த சொஸைட்டியை மீண்டும் நடத்துவதற்கு அரசு ஏதாவது உதவிகள் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ;** மனுக்கள் வந்தால் அதை முறையாக அரசாங்கம் ஆய்வு செய்யும்.

(முற்பகல் 9—30)

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, நியாயமான வரி என்று சொன்னார்கள். ஆனால் வாஸ்தவத்தில் உப்பு தொழிலாளர்கள் தனியார் துறையிலேயும் வேலைக்குப் போகமுடியவில்லை; தாங்களே அந்தத் தொழிலைச் செய்து அன்றாட ஜீவனமும் செய்ய முடியவில்லை. ஆகவே அவர்கள் குறிப்பாக நலிந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்களாக இருப்பதால் அவர்களால் கொடுக்கப்பட வேண்டிய தொகையை பூராவும் ரத்து செய்து, அவர்களுக்கு இலவசமாக உதவி செய்வதற்கு ஆதிதிராவிட நலத்துறையின் மூலமாக, நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பணம் பெற்று வேலை கொடுத்து, அவர்கள் அன்றாடம் ஜீவனம் செய்வதற்கு வழிவகை செய்யவேண்டும். அதோடு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடுப்பது நியாயமான தொகை என்று சொல்லியிருக்கிறார்கள். அது எவ்வளவு என்று தெரியவில்லை. அதைத் தெரிவிப்பதோடு, அந்த நலிந்த சமுதாய மக்களுக்கு இலவசமாக உதவி புரிவதற்கு, அவர்கள் அன்றாடம் ஜீவனம் செய்வதற்கு வழிவகை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியிலேயே பதில் இருக்கிறது. இந்தக் கேள்வியின் பதிலில் ஏக்கருக்கு ரூ. 30 என்று நாம் போட்டிருக்கிறோம். அது நியாயம் என்று தெரிவித்திருக்கிறோம். ஆதி திராவிட நலத் துறையில் இருந்து பணம் பெறுவதும், வருவாய்த் 



துறையிலிருந்து பணம் கொடுப்பதும், இரண்டும் ஒன்றுதான். ஆதிதிராவிடத் துறையும், ரெவின்யூ துறையும் வேறல்ல. ஆனால் நலிந்த சமுதாயத்தினர் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதால், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதைப்பற்றி பரிசீலனை செய்வோம்.

**திரு. எஸ். என். இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்களிலே உப்பு உற்பத்தி செய்யும் தொழில்தான் மிகவும் கடினமானது. அவர்கள் உற்பத்தி செய்கின்ற உப்புப் பொருள்களுக்கு விலையும் குறைவாக இருப்பதன் காரணமாக, அவர்களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களுக்கு அளித்த பதிலே உங்களுக்கும் பொருந்தும்.

**தாளவாடி மலைப் பகுதியில் பழத்தோட்டம் அமைக்கும் திட்டம்.**

*வினா எண். 63—திரு ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், தாளவாடி மலைப் பகுதியில் பழத் தோட்டம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி மலைப் பகுதியிலே பழத் தோட்டங்களை அமைப்பதற்கு அதற்கேற்ற தட்ப வெட்ப சூழ்நிலை சாதகமாக இருப்பதால், அங்கே வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பழத் தோட்டங்களை அமைத்துக் கொடுத்தால் உதவிகரமாக இருக்கும். ஆகவே, இதை மனதில் கொண்டு, அரசு அங்கே பழத் தோட்டங்களை அமைப்பதற்கு மீண்டும் பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 4

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தாளவாடிப் பகுதி மலைவாழ் மக்களுக்கு நாம் 50 விழுக்காடு சலுகை இடுபொருள்களுக்காக வழங்குகிறோம். ஆனால் நாம் வேண்டுகின்ற அளவுக்குப் பலன் கிடைக்காத காரணத்தினால் பவானிசாகரிலே அதை அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். ரங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடியிலே சுமார் 70,000 ஏக்கர் விவசாய நிலம் இருக்கிறது. ஆர்டிகல்சர் மூலமாக 50சதவீ ம் மானியமும், அதேபோல் பழச் செடிகளும் வழங்கப்படுகிறது. அங்கே ஏற்கனவே பழத் தோட்டங்கள் இருந்தும் அனுபவம் இல்லாத காரணத்தினால், சரியாக பயன்படுத்தவில்லை. அப்படி வழங்குகின்ற உதவிகளை, அங்கே பழத் தோட்டம் ஏற்படுத்தி பயன்படுத்தும்படி ஏற்பாடு செய்தால் அந்தப் பகுதி மக்கள் பயனடைவார்கள். எனவே, அதை அரசு செய்வதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மலைவாழ் பகுதி மக்களுக்கு உதவி செய்வது என்பது வேறு. பழத் தோட்டத்தை நம் அரசின் மூலமாக நிறுவுவது என்பது வேறு. அப்படி பழப் பண்ணை அமைத்து தான் உதவி செய்ய வேண்டுமென்பதில்லை. ஆகவே, இதற்கும் அதற்கும் தொடர்பு இல்லையென்று கருதுகிறேன்.

**சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியை வேறு மாவட்டத்திற்கு மாற்றும் திட்டம்.**

*வினா எண் 636—**திரு. எம். கே. ராஜமாணிக்கம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் இயங்கிவரும் கால்நடை மருத்துவக் கல்லூரியை கால்நடை அதிகமுள்ள வேறு மாவட்டத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.



1983 ஏப்ரல் 4]

**திரு. எம். கே. ராஜமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக்
கல்லூரியை தமிழகத்தின் மைய பகுதியாகிய திருச்சி மாவட்
டத்திற்கு மாற்றும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே,
சென்னையிலே இருக்கின்ற கால்நடை மருத்துவக் கல்லூரி
அதற்குரிய சகல வசதிகளைப் பெற்று, மருத்துவ மனை, ஆய்வுக்
கூடம், நவீன கருவிகள் போன்ற அனைத்தும் பெற்றிருக்கின்றது.
அதை மாற்றுவதற்குரிய சூழ்நிலை இப்போது இல்லை.

**தமிழகத்திலுள்ள விவசாயப் பட்டதாரிகள்.**

*வினா எண். 637—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:**
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் படித்து முடித்த விவசாயப் பட்டதாரி
கள் வேலை கிடைக்காமல் இருக்கிறார்களா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவ
ரவர்களே, விவசாயக் கல்லூரியிலே படித்தவர்கள் யாரும்
வேலை இல்லாமல் இருப்பதில்லை என்ற செய்தியைக் குறிப்
பிட்டீர்கள். மிக்க மகிழ்ச்சி. அப்படியென்றால் விவசாய
பட்டதாரிகள் தேவையான அளவிற்குக் கிடைக்காத காரணத்
தால், காலி இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன.
வருகின்ற கல்வியாண்டிலே, ஒரு புதிய கல்லூரியை ஏற்படுத்
தவோ, அல்லது இருக்கின்ற கல்லூரியிலே மாணவர்களை
அதிகமாக சேர்ப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை
அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே,
ஓரளவுக்கு பட்டதாரிகள் பற்றாக்குறை இருக்கிறது. இதை
யெல்லாம் கருத்தில்கொண்டு தான் ஒரு புதிய கல்லூரியைத்
துவக்குவதற்கான திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, விவசாயப் பட்டப் படிப்பு படித்த இளைஞர்களுக்கு அரசு தரப்பிலே வேலை கொடுப்பதோடு மட்டுமல்லாமல், ஆங்காங்கே மாதிரிப் பண்ணைகளை அமைத்து, புதிய விஞ்ஞான முறையில் விவசாயம் செய்தால், நாடு முன்னேறும் என்பதற்கிணங்க அவர்களை பயன்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : தலைவரவர்களே, அந்த வகையிலே தான் பயன்படுத்தப்படுகிறார்கள்.

### ராசிபுரத்திற்கான காவிரி குடிநீர்த் திட்டம்.

*வினா எண். 638—திரு. சி. சிவ பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லிலிருந்து செல்லப்பம்பட்டி, புதுச்சத்திரம் வழியாக ராசிபுரத்திற்கு செல்லும் காவிரி குடிநீர்த்திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இந்த திட்டம் எப்போது செயலாக்கப் படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்**: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு செ. செம்மலை** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாமக்கல்லிலிருந்து செல்லப்பம்பட்டி, புதுச்சத்திரம், ராசிபுரம் வழியாக காவிரி குடிநீர்த் திட்டம் அரசினுடைய ஆய்வில் இல்லை என்று சொன்னார்கள். இந்த ஊர்களைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதி மக்கள் பெரும்பாலும் குடிநீர்ப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பிரச்சினையைத் தீர்க்க வேறு ஏதாவது திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : தலைவரவர்களே, ராசிபுரம், நாமக்கல், சேர்ந்தமங்கலம், களப்பநாயக்கன்பட்டி, ஆகிய இடங்களில் ஒரு குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டது. நாமக்கல்லிற்கு தனியாக ஒரு திட்டம் தேவை என்று வற்புறுத்தப்பட்டதால், இத்திட்டம் கைவிடப் பட்டது. ராசிபுரம் திட்டத்திற்கான பணிகளை தொடங்கி, ஆய்வு பணிகளை மேற்பார்வையிடுவதற்கு மேற்பார்வை பொறியாளர், சேலம் அவர்களிடம் இத்திட்டப் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. குழாய்களுக்கான பாதையை ஆய்வு செய்தபின்னர்தான் மேற்கொண்டு பயன்படுத்துவதுபற்றி தீர்மானிக்கப்படும்.



### திருச்சி சுப்பிரமணியபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள பீடித்தொழிலாளர்களுக்கான மருந்தகம்.

*வினா எண். 639—திரு இரா. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்தில் சுப்பிரமணியபுரம் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பீடித்தொழிலாளர்களுக்கான மருந்தகத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் பீடித்தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு மையமான ஒரு இடத்தில் மாற்றி அமைக்க எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்**: (அ) ஆம்.

(ஆ) இந்த மருந்தகத்தை திருச்சி சப்ஜெயில் காம்பவுண்டில் உள்ள பழைய மருத்துவமனைக் கட்டிடத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது. அந்தக் கட்டிடம் திருச்சி நகராட்சிக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு, திருச்சி ராஜாஜி காசநோய் மருத்துவமனையின் ஒரு பகுதிக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டது. அங்கும் இடவசதி இல்லாததால், பீடித் தொழிலாளர் அதிகமாக வசிக்கும் பகுதிகளுக்கு மையமான ஒரு இடத்திற்கு இம் மருந்தகத்தை மாற்ற மத்திய அரசின் தொழிலாளர் நல வாழ்வு ஆணையர் முயற்சி எடுத்து வருகிறார்.

**திரு. இரா. கருப்பையா** : பேரவைத் தலைவரவர்களே, திருச்சி நகரத்திலே 20.00 க்கும் அதிகமான பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதிலே பாதிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள். அந்தத் தொழிலாளிகள் திருச்சியைச் சுற்றியுள்ள கம்பரசம் பேட்டை, வாளாடி, அரியமங்கலம், பாலக்கரை போன்ற இடங்களிலே குடியிருந்து இருக்கிறார்கள். ஆகவே, இவர்கள் வந்து செல்லக்கூடிய இடத்திலே மருந்தகம் அமைக்கப்பட வேண்டியது அவசியம். இந்த மருந்தகத்தை முதலிலே அமைச்சரவர்கள் கூறியபடி, சப் ஜெயில் காம்பௌண்டில் ஏராளமான இடங்கள் காலியாக இருப்பதால் முனிசிபாலிட்டியை வற்புறுத்தி, அந்த மைய இடத்திலே இந்த மருந்தகத்தை மாற்றியமைக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : அதற்காக இது வரையில் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. எப்படியாவது திருச்சியில் ஒரு மையப் பகுதியில் கட்டிடம் கிடைப்பதற்கு தொழிற்சங்கம் கூடுமான வரை முயற்சி எடுத்தால் நல்லது. அரசும் அந்தத் துறையிலே முயற்சி எடுக்கும்.

திரு. கே. சௌந்தரராசன் : தலைவரவர்களே, திருச்சி நகரம் பீடித் தொழிலாளர்களுக்கு மையமாக இருக்கிற ஒரு மிகப் பெரிய நகரம் என்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும். கடந்த 4, 5 ஆண்டுகளாக, அந்த மத்தியப் பகுதியிலே பீடித் தொழிலாளர்களுக்கான காசநோய் மருத்துவ மனையை உருவாக்குவதாக பலமுறை கூறியிருக்கிறார்கள். பல இடங்களிலே அந்த இடத்தைப் பார்த்திருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிற அந்தத்கொண்டான் பகுதியில் ஏறக்குறைய 6 ஏக்கர் சர்க்காருக்குச் சொந்தமான இடம், புறம்போக்கு நிலம் கூட இருக்கிறது. அந்த இடத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் பார்த்திருக்கிறார்கள். அந்த இடத்திலே அந்த காச நோய் மருத்துவமனையை, பீடித் தொழிலாளர்களுக்காக அமைப்பதற்கு, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய முதிர்ந்த அனுபவத்தையும், தனக்கிருக்கிற செல்வாக்கையும் பயன்படுத்தி, அப்படிச் செய்வார்களேயானால், அதன் விளைவாக அங்கே இருக்கிற பீடித் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படும் என்பதை கருத்தில்கொண்டு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய இடத்திலே இடம் கிடைப்பதற்கு அவருடைய செல்வாக்கை உபயோகப்படுத்தினால் அதை அரசு பயன்படுத்திக் கொள்ளும்.

(முற்பகல் 9-40.)

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் தென்னூரில் வீடுகட்டும் சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்திற்கு அரசு புறம்போக்கு நிலத்தின் இடத்திலே ஒரு பகுதியை ஒதுக்கியிருக்கிறார்கள் அந்தச் சங்கத்திற்கான இடத்திலே. ஆகவே அந்த இடத்தை அரசு இந்த பீடித் தொழிலாளர்களுக்கான மருந்தகத்தை அமைப்பதற்கான முறையிலே அதைக் கொடுத்து, அந்த இடத்திலே இந்த மருந்தகத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அனைவருமே சேர்ந்து நல்ல இடத்திற்கு இந்த மருத்துவ மனையை, இப்போது இருக்கிற மன்னார்புறத்தில் இருக்கக்கூடிய அந்த மருந்தகத்தை அகற்றுவதற்கு — இங்கே வைப்பதற்கு முயற்சி எடுப்போம்.

பூமிக்கடியில் குடிநீரைச் சேமித்து வைக்கும் திட்டம்.

*வினா எண். 640—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பூமிக்கடியில் குடிநீரைச் சேமித்து வைக்கும் ஆராய்ச்சி அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கொரட்டலையார் ஆற்றிலிருந்து வரும் தண்ணீரை பூண்டி, சோழவரம், ரெட்ஹில்ஸ் நீர் தேக்கங்களில் தேக்கி வைப்பதால், சுமார் முறையே 40 சதவிகிதம், 14 சதவிகிதம் ஆவியாகவும், நீர் கசிவாகவும் விரயமாகிறது. எனவே, ஏரி நீரின் ஒரு பகுதியையும் வழிந்தோடும் நீரின் ஒரு பகுதியையும், நிலத்திற்கடியில் சேமித்து வைப்பதன் மூலமும் ஏரி நீரையும், நிலத்தடி நீரையும் இணைத்துப் பயன்படுத்தல் மூலமும், நீர் விரயத்தை குறைத்து அதனால் சேமித்த நீரால், சென்னைக்கு கிடைத்து வரும் குடிநீரின் அளவை கூடுதல் செய்ய, ஆய்வு ஒன்று ஐக்கிய நாட்டு வளர்ச்சிக் கழக உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பூமிக்கடியிலே நீரை சேகரித்து வைக்கும் போது, பக்கத்திலே இருக்கிற விவசாயிகள் அதிலே ஆழ்க்குழாய்க் கிணறுகளைப் போட்டு எடுக்கிறார்களே,—அந்த நீரை அவர்கள் எடுத்துக்கொள்கிறார்களே — அதைப் போக்குவதற்கு அரசு மாற்று நடவடிக்கை ஏதாவது வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற நிலைமைகளையும் அப்படி பூமிக்கடியிலே நீரைத்தேக்கி வைக்கும்போது, பரிசீலனை செய்யப்படும்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சி செய்வதற்கு ஏதாவது நிபுணர் குழுவை நம்முடைய அரசு அயல் நாடுகளுக்கு அனுப்பியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் சுற்றுப் பயணம் சென்று வந்திருக்கிறார்கள். இவ்வாய்வுத் திட்டத்திற்கு ஐக்கிய நாட்டு வளர்ச்சிக் கழகம் 1 மில்லியன் அமெரிக்க டாலர், அதாவது 93 லட்சம் உதவ முன்வந்துள்ளது. நமது அரசின் பங்கு 86,45,000 ஆகும். ஆய்வுக் காலம் 3 ஆண்டு காலமாகும். இந்த திட்டத்திற்காக அரசு முதல் கட்டமாக 1½ ஆண்டுக் காலத்திற்கு ரூபாய் 59.40 லட்சங்களை ஒதுக்கியுள்ளது. இவ்வாய்வுத் திட்டத்தை மேற்கொள்ள அரசு தனது ஆணை எண்

1542, தேதி 4-9-1981-ல் உத்தரவிட்டுள்ளது. இந்த ஆய்வுக்காக இரு ஐக்கியநாட்டு வல்லுநர்கள் நம் நாட்டுக்கு வந்திருக்கிறார்கள். 1982 ஜூன் முதல் தேதியிலிருந்து இந்தத் திட்டம் துவக்கப்பட்டு தற்போது பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். இட்டப்பா :** தலைவர் அவர்களே, பூமிக்கடியிலே குடிநீரைச் சேமித்து வைக்கும் ஆராய்ச்சி அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் அதைப்பற்றி நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி பூமிக்கடியிலே குடிநீரைச் சேமித்து வைக்கின்ற நேரத்திலே காவிரி நீர்ப் படுகையாகிய தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலே உள்ள, அத்தகைய காவிரி நீர்ப் படுகைகளில் பூமிக்கடியில் உள்ள குடிநீரைச் சேமித்து வைக்கும் நிலை அரசினால் உருவாக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சென்னையில் நடக்கக்கூடிய ஆராய்ச்சியின் முடிவுகள், விளைவுகள், பலன்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்து, அதன் பின்னர் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதையும் கவனிக்கலாம்.

**திரு தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு அடியில் நீரைத் தேக்கி வைப்பதற்கு ஆராய்ச்சி நடப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். குளம், குட்டைகளில் தண்ணீர் தேக்கி வைப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், பூமிக்கடியில் தண்ணீர் எவ்வாறு சேமிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு பெரிய டெக்னிகல் ப்ராசஸ். அதற்காகத்தான் இரண்டு நிபுணர்கள் எவ்வாறு அதைத் தேக்கி வைப்பது என்பதைப் பற்றி பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

குமரி மாவட்டத்தில் பல ஆண்டுகளாக பராமரிக்கப்படாமலுள்ள குடிநீர்த் திட்டங்கள்.

*வினா எண். 641—திரு. டி. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நிதிநிலை பற்றாக்குறையால் பல ஆண்டுகளாக பராமரிக்கப்படாமல் குமரி மாவட்டத்தில் உள்ள குடிநீர்த் திட்டங்களை தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிக்க ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இல்லை.





**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த நகரப் பஞ்சாயத்து, கிராமப் பஞ்சாயத்து நிர்வாகங்கள் கலைக்கப்படுவதற்கு முன்பு போடப்பட்ட பல குடிநீர் திட்டங்கள் இன்றைக்கு செயலிழந்து முடமாய் இருக்கின்றன. தண்ணீர் இருந்தும் அவை விநியோகிக்கப்பட முடியாமல் இருக்கின்றன. ஆறுதேசம் என்ற நகரப் பஞ்சாயத்தில் பழைய குழாய் தண்ணீர் திட்டத்தில் கிணற்றில் நிறைய தண்ணீர் இருக்கிறது. இருப்பினும், குழாய்கள் பழுதாகிப் போய்விட்ட காரணத்தால் அந்த கிராம மக்களுக்குத் தண்ணீர் கிடைக்காத நிலை இருக்கிறது. அந்தக் குழாய்களைச் சரிவர பராமரிக்க பொருளாதார வசதி அந்தப் பஞ்சாயத்துக்கு இல்லாததே இதற்குக்காரணம். ஆகவே, அந்தக் குழாய்களைப் பராமரிக்கவும் அதைப் பழுதுபார்த்துத் தரவும் குடிநீர் வாரியம் முன்வர வேண்டும் என்று ஒரு கோரிக்கையாகத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் இதை வைக்கிறேன். குடிநீர் வாரியம் எடுத்துச் செய்யாவிட்டால் அதைச் சீர்படுத்த முடியாது. ஆகவே, அந்த முயற்சியினை மேற்கொள்ள இந்த அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இப்போதுள்ள நிலைமையை நான் விளக்குகிறேன். குமரி மாவட்டத்தில் நாகர்கோவில், குளச்சல், குழித்துறை ஆகிய நகராட்சிகளில் உள்ள குடிநீர் திட்டங்கள் அந்தந்த நகராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. எல்லா பராமரிப்பு வேலைகளையும் அவர்களே தான் செய்து கொள்ள வேண்டும் மற்றபடி, கன்னியாகுமரி நகரியத்தில் தற்போது ஏற்படுத்தப்பட்டு வரும் குடிநீர் திட்ட வேலைகள் முடிவடைந்தும், அதுவும் நகரியத்திடம் ஒப்படைக்கப்படும். குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில், அதற்காக திட்ட வேலைகளைச் செய்து, தண்ணீர் கொண்டுவருவது, விநியோகம் செய்ய குழாய்கள் அமைத்தல், மற்றும் திறப்பு விழா செய்தல் வரையில் ட்வாட் செய்கிறது. மெயின்டனென்ஸ் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட நகராட்சியிடம் ஒப்படைக்கப்படுகிறது, அதுதான் இன்றைய நிலை. அதிலே மாற்றம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே நகராட்சிகளைப் பற்றி எடுத்துச் சொல்லவில்லை. இங்கே மிக ஆழமாக நான் எடுத்துச் சொன்னது, நகரப் பஞ்சாயத்து கிராமப் பஞ்சாயத்து ஆகியவற்றில் உள்ள நிலைமைகளைக் குறித்துதான். பாலவளை என்ற கிராமப் பஞ்சாயத்தில்—தாமரபரணி ஆற்றுப் படுகையில் இருப்பதால்—கிணற்றில் தண்ணீர் நிறைய இருக்கிறது. அங்குள்ள குழாய்கள் சரியாக இல்லாததால்—ஏதோ அடைப்பு இருப்பதாகச் சொல்லப்பட்டு கடந்த இரண்டு மாத காலமாக தண்ணீர் கிடைக்காமல் இருக்கின்ற நிலைமை அங்கே இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் குறிப்பாகத் தண்ணீர் இருந்தும், அதை மக்களுக்கு விநியோகிக் முடியாத நிலைமை—பல்வேறு நகரப் பஞ்சாயத்துகள்

கிராமப் பஞ்சாயத்துகளில் இருப்பதால், அவற்றைச் சரியான முறையில் பராமரித்துக் கொள்வதற்கான பொருளாதார வசதிகள் அவற்றிற்கு இல்லாத காரணத்தால், அதைக் குடிநீர் வடிகால் வாரியமே ஏற்று, அந்தத் தண்ணீர் குழாய்களைச் செப்பனிட்டு, அந்தத் தண்ணீர் வினியோகத்தை சீரமைத்துக் கொடுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைச் செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ;** பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் ஒரு இடத்தில் இருக்கிறது. அதை எடுத்து வினியோகிக்க ட்வாட் வரவேண்டும் என்று சொல்கிறார்கள். ஏற்றுக் கொள்கிறேன். அவர்கள் சொல்கிற யோசனையை ஆய்வு செய்யச் சொல்கிறேன். அப்படி தண்ணீர் எங்கே இருக்கிறது, எப்படி அது வினியோகிக்கப்படாமல் இருக்கிறது, எப்படி அது விடுபட்டுப்போய் இருக்கிறது என்பதைப் பற்றி எழுத்து மூலமாகத் தனியாக எழுதிக் கொடுத்தால் அதை ட்வாட் எம். டி.-க்கு அனுப்பி பரிசீலனை செய்யச் சொல்கிறேன்.

**ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் இரும்புத் தொப்பி அணிவதைக் கட்டாயமாக்கும் திட்டம்.**

*வினா எண். 642—திரு. பெ. சு. திருவேங்கடம் : திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் இரும்புத் தொப்பி அணிவதைக் கட்டாயமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமுல் படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி :** (அ) மற்றும் (ஆ) மத்திய அரசினால் 1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தில் சேர்க்கப்பட்ட புதிய பிரிவு 85-ஏயின்படி ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள்கள் ஓட்டுநர், பின்னால் அமர்ந்து செல்பவர்கள் கட்டாயமாகத் தலைக்கவசம் அணிய வேண்டும். இப்பிரிவு 1—11—1980 முதல் நடைமுறைக்கு வரும் என்று மத்திய அரசு அறிவித்தது. ஆனால் அதற்குப் பின்னர் மத்திய அரசு கட்டாயமாகத் தலைக்கவசம் அணிய வேண்டும் என்ற அறிவிப்பை ரத்து செய்துவிட்டது.

(முற்பகல் 9-50)

**திரு பெ. சு. திருவேங்கடம் :** தலைவரவர்களே, இன்றையத் தினம் ஸ்கூட்டர் அல்லது மோட்டார் சைக்கிள் விபத்து அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அதில் பலர் இறந்துவிடுகிறார்கள். குறிப்பாக தலையில் அடிபட்டு இறக்கிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு, லைசென்ஸ் வழங்கும்போது இந்தத் தலைக் கவசம் அணிவதற்கு வழிவகை செய்து கொடுக்கின்ற திட்டத்தை மத்திய அரசுக்குச் சொல்லி, மாநில அரசு செயல்படுத்த [illegible] என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, அது பற்றி யோசிக்கலாம். ஆனால் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிளில் போகிறவர்கள் அவர்களாகவே இதை வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளலாம். அணியக் கூடாது என்ற தடை இல்லை. நாம் பொதுக் கூட்டங்களிலே எவ்வளவோ பேசுகிறோம். இந்தக் கருத்தையும் எடுத்துச் சொன்னால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவரவர்களே, அவர்களே வாங்கிப் போட்டுக் கொள்ளலாம் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அவற்றின் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தால் சிலர் வாங்காமல் இருக்கலாம். ஆகவே மானிய விலையில் அவற்றை வாங்கி அணிய நம்முடைய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, 8,000 ரூபாய்க்கு மேலே கொடுத்து ஸ்கூட்டர் வாங்குகிறவர்களுக்கு 90 ரூபாய் கொடுத்து தலைக் கவசம் வாங்க முடியவில்லை என்பது '' மாட்டை வாங்க பணம் இருக்கிறது, ஆனால் கயிறு வாங்க பணம் இல்லை '' என்று சொல்வதைப் போல் இருக்கிறது. இது நியாயமில்லை.

**திரு. செ. சிவசாமி :** தலைவரவர்களே, ஸ்கூட்டரிலே இரண்டு சீட்டுகள் இருக்கின்றன. முதல் சீட்டிலே இருக்கக் கூடியவர் தொப்பி வாங்கி அணிந்து கொள்ளலாம். ஆனால் திடீரென்று இடையிலே வரக்கூடிய ஒருவர் பின்னால் ஏறிக் கொள்கிற நேரத்தில் அவருக்குத் தொப்பி எப்படி கிடைக்கும் ? ஆகவே, எல்லோருக்கும் தொப்பி வாங்கிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கோ இடைவழியில் ஏறிப் போயிருக்கிறார் என்று கருதுகிறேன். ஸ்கூட்டரில் போகிறவர்கள்தான் தொப்பியை வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும். அரசாங்கம் ஆங்காங்கே நின்றுகொண்டு தொப்பி சப்ளை செய்ய முடியாது.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, ஸ்கூட்டர் அல்லது மோட்டார் சைக்கிளில் இரண்டு பேர் தான் போக வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் சிலர் குடும்பத்துடன் குழந்தைகளையும் அழைத்துச் செல்கிறார்கள். அதனால் குழந்தைகளுக்கும் ஆபத்து ஏற்படுகிறது. ஆகவே குழந்தைகளுக்கு மட்டுமாவது அரசாங்கத்திலிருந்து இரும்புக் கவசம் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா அல்லது குழந்தைகளை ஸ்கூட்டரிலே எடுத்துச் செல்ல தடை விதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, 12 வயதுக்குக் கீழே இருக்கிற குழந்தைகளுக்கு தலைக் கவசம் தேவையில்லை என்று 85 (ஏ) சட்டத்திலே வழிவகை செய்திருக்கிறார்கள். ஒரு குழந்தையை முன்னால் அமர்த்திக் கொண்டு

போகலாம். பின்னாலும் ஏற்றிக் கொண்டு போவார்கள் என்று சொல்ல முடியாது. அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்வதாக இருந்தால் அப்படிச் செய்யக் கூடாது என்று விதி இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தயக்கம் காட்டாது.

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, இன்று போக்குவரத்துத் துறையிலே மிகக் கடுமையான விபத்துக்கள் ஏற்படக்கூடிய காலமாக இருக்கிறது. ஆகவே நடைமுறையிலே இன்று தலைக் கவசம் தேவையாக இருக்கிறது. அதனால் இந்தியா பூராவிலும் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்களில் போகிறவர்கள் தலைக் கவசம் அணிய வேண்டுமென்ற முறையை செயல்படுத்த மத்திய அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று நம்முடைய மாநில சர்க்கார் சிபாரிசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு சு முத்துசாமி :** தலைவரவர்களே, இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவரும்போது அதற்கு நாம் விதிவிலக்கு அல்ல. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்பதிலும் நமக்கு தயக்கம் இல்லை. ஸ்கூட்டர் சொந்தக்காரர்கள் தலைக் கவசம் அணிய வேண்டுமென்று நாம்கூடச் சொல்லலாம்; அப்படிச் சொல்வதிலும் நமக்குத் தயக்கம் இல்லை.

**திரு. ஜே. எஸ். இராசு :** தலைவரவர்களே, ஸ்கூட்டரிலே செல்லக்கூடியவர்கள் கட்டாயம் தலைக் கவசம் அணிய வேண்டுமென்ற விதி பெங்களூரில் இருப்பதாக அறிகிறோம். அவ்வாறு அங்கு இருப்பது உண்மையானால் அந்த விதியை ஏன் இங்கேயும் கொண்டுவரக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சு முத்துசாமி :** தலைவரவர்களே, ஏற்கெனவே நான் பதில் சொன்னேன். அதை அடிப்படையாக வைத்து, தேவை என்றால், அந்த ஏற்பாட்டை இங்கும் செய்ய அரசாங்கம் தயக்கம் காட்டாது ; அது பற்றி பரிசீலனை செய்யலாம்.

**திரு. சு. பாலன் :** தலைவரவர்களே, ஸ்கூட்டர் போன்ற வாகனங்களில் செல்பவர்களுக்கு லைசென்ஸ் வழங்கும்போது அவாகள் எல்லாம் கட்டாயம் தலைக் கவசம் அணிய வேண்டும் என்று ஆணையாளர் அவர்கள் அறிவுரை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓட்டுநர்களைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். லைசென்சைப் புதுப்பிப்பதற்கு அவர்கள் நேரில் வரவேண்டியதில்லை ; அனுப்பினால் போதும். அவர்களை நேரிலே பார்த்து ஆணையாளர் அறிவுரை வழங் வேண்டுமென்றால் அதற்கு தனியாக ஒரு ஆணையாளர் போட வேண்டும். அது தேவையில்லை. நாம் எல்லாம் பேசுவது பத்திரிகைகளிலே வரும். அவர்கள் பத்திரிகைகளைப் படித்துத் தெரிந்து கொண்டால் நன்றாக இருக்கும்.



**சேரன் போக்குவரத்துக் கழகம் மூலம் பொள்ளாச்சி நகரில் ஒரு புதிய பயிற்சிக் கழகம் ஆரம்பிக்கும் திட்டம்.**

*வினா எண் 643—**திரு. கு. ரமணி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சேரன் போக்குவரத்துக் கழகம் பொள்ளாச்சி நகரில் ஒரு புதிய பயிற்சிக் கழகத்தை ஆரம்பித்து நடத்த உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான கட்டிட வேலைகள் முடிந்து விட்டதா ?

(இ) பயிற்சி எப்பொழுது முதல் ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) ஒரு தொழில் நுட்ப பயிற்சி நிறுவனம் ஆரம்பித்து நடந்து வருகிறது.

(ஆ) பயிற்சிக்கூடக் கட்டிட வேலைகள் முடிவடைந்து விட்டன. தொழில் நுட்ப பயிற்சி நிறுவனத்திற்கான தலைமைக் கட்டிடப் பணி முடியும் தருவாயில் உள்ளது.

(இ) பயிற் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன.

**திரு. கு. ரமணி .** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இங்கே சேரன் என்ஜினீயரிங் கார்ப்பரேஷன் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. இப்போது புதியதாக கொடுக்கக்கூடிய இந்த பயிற்சிக் கூடத்தில் என்னென்ன பயிற்சிகள் அளிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே போக்குவரத்துக் கழகத்திற்காக ஓட்டுநர்களை நாம் எடுக்கிறோம். அதிலே அவர்களை தேர்ந்தெடுக்கிறபோது ஏ.பி.சி. என்று 3 பிரிவுகளாக எடுக்கிறோம். அதிலே ஏ குரூப்பிலே தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு 15 நாட்களும், பி குரூப்பிலே தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு 1 மாதமும், சி குரூப்பிலே தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு 3 மாதங்களும் பயிற்சி அங்கே அளிக்கப்படுகிறது. அதேபோலத்தான் நடத்துநர்களுக்கும் பயிற்சி அளிக்கிறோம். இதிலே ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியில் இருக்கும் ஓட்டுநர்களுக்கும், நடத்துநர்களுக்கும் கூட தேவை என்றால் அளிக்கப்படுகிறது. அதே மாதிரி டிப்ளோமா, பொறியியல் பட்டம் பெற்றவர்களுக்கும் தேவையான பயிற்சிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அட்மினிஸ்டிரேஷன் ஸ்டாஃப் என்று சொல்லக்கூடியவர்களுக்கும் தேவையான பயிற்சி அங்கே அளிக்கப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு துறைக்கும் அங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது.

என்றாலும், குறிப்பாக அங்கே பிரதானமாக நடத்துவது எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 60 மார்க்குகளுக்கு மேலே வாங்கி வெற்றி பெற்ற, போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சிறப்பாக பயிற்சி அளிக்கும் வகையில், மோட்டார் மெக்கானிக்காக 3 ஆண்டுகளுக்கு அங்கே பயிற்சி அளித்து வருகிறோம். இந்தக் குறிப்பிட்ட பயிற்சியை பொறுத்தவரையில், அதாவது மோட்டார் மெக்கானிக் என்பதைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. ஆக, இப்படி ஒவ்வொரு துறையிலும் தேவையான பயிற்சிகளை அந்தப் பயிற்சிக் கூடத்திலே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சித் திட்டத்தின் மூலம் இப்போது வேலையல் இருந்து கொண்டிருப்பவர்களுக்கும் கூட தேவை ஏற்பட்டால் பயிற்சி கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது மிக நல்ல ஏற்பாடு. அதேபோல புதியதாக அங்கே வேலைக்கு சேருவதற்காகவும் பயிற்சி கொடுக்கிற திட்டமும் அதிலே சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி கொடுப்பவர்களுக்கு, குறைந்த அளவுதான் அவர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிற நிதி உதவி அளிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அப்படியானால் குறைந்த பட்சம் அவர்களுக்குத் தேவையான ஒரு தொகையை கொடுப்பதற்கும், அந்த பயிற்சி கொடுக்கும் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும், அப்படி பயிற்சி கொடுப்பதன் மூலமாக அவர்களுக்கெல்லாம் அந்தக் கழகங்களிலேயே வேலை உத்தரவாதம் கிடைக்கும் வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா ? அப்படி இல்லையென்றால் பிற மாநிலங்களிலே உள்ள கழகங்களிலாவது அவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்கும் வகையில் உத்தரவாதம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டு பயிற்சியான மோட்டார் மெக்கானிக் பயிற்சியை அளிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்படும் அத்தனை பேரும் தொழிலாளர்களுடைய குழந்தைகளாகத் தான் இருக்க வேண்டும் என்று வைத்து, அவர்கள் அத்தனை பேரையும் கழகங்களில் எடுப்பதற்காகத்தான் இந்தப் பயிற்சியை அளிக்கிறோம். அவர்களுக்கு தரப்படும் உதவித் தொகையைப் பற்றி இப்போது குறிப்பு எதுவும் என்னிடம் தரப்படவில்லை. அந்தத் தொழிலாளர்களுடைய குழந்தைகளாகத்தான் பயிற்சி பெறுபவர்கள் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் எடுத்து பெகிறோம். எவ்வளவு காலியிடங்கள் வருகின்றனவோ, வருவரைக்கும் அவர்களை எடுக்க வேண்டிய நிலையில் இருக் அதுாம். அதற்குமேல் இருப்பவர்கள் எப்படியாவது வெளி கிறே வேலை தேடிக்கொள்ள வேண்டியவர்களாகத்தான் யிலேக வேண்டும். வேறு மாநிலங்களின் போக்குவரத்துக் இருக் களுக்கு அவர்கள் போவதற்கு விரும்புவதில்லை. இருந் கழகங் தேவையானால் அது பற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எக்கலாம்.



**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர்களுக்கு பயிற்சி தருவது போல, நடத்துநர்களுக்கும், பொது மக்களிடம் அன்பாகப் பழகக்கூடிய முறையில் பயிற்சியை அளிக்க, வேலை வாய்ப்பு தேடித்தருகிற அலுவலகங்களின் மூலமாக வேலை வாய்ப்பிற்காக வரும் நபர்களையும், வெளியிலிருந்து கேட்டுவருபவர்களுக்கும், ஒரு பயிற்சி முறையை வைத்து 6 மாதம், 1 வருடம் என்று பயிற்சி அளித்து, இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் பணியில் அமர்த்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் .

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இதிலே ஒரு சிறிய திருத்தம் தான். வேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து வரும் நபர்களைப் பெற்று, அவர்களுக்கு பயிற்சி கொடுத்து நாம் பணிகளில் அமர்த்தி வருகிறோம். நேரிடையாக வருபவர்களுக்கு பயிற்சி அளிப்பது பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அப்படி அல்லாமல் வேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து வருபவர்களுக்கு பயிற்சிக் கொடுத்து, போக்குவரத்துக் கழகங்களில் அமர்த்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தனியார் பேருந்து ஒன்று கோவில்பட்டிக்கு அருகே மாட்டு வண்டிகளின் மீது மோதி பலருக்கு மரணம் விளைவித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, தி. கா. நல்லப்பன், இரா. கருப்பையா, எம். ஆறுமுகம், ஏ. டி. கருப்பையா, என். ஏ. பூங்காவனம், டி. மணி, எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், மு. அப்பாதுரை, கே. ஆர். சுந்தரம், செ. சிவசாமி, இரெ. இராசமாணிக்கம், ப. பொன்னுரங்கம், சோ. அழகர்சாமி, பெ. சு. திருவேங்கடம், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து ஆகியோர் ''இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் அருகே உள்ள மாரியம்மன் கோவிலுக்குச் சென்றுகொண்டிருந்த மாட்டு வண்டிகளின் மீது பேருந்து மோதியதால் 8 பேர் இறந்து போனதன் விளைவாகப் பொது மக்களிடையே எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் ஒனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்து 25—3—1983 அன்று காலை 5—30 மணிக்கு என்னுடைய தொகுதியான கோவில்பட்டிக்கு அருகே உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த நான்கு குடும்பத்தினர் கோயிலுக்குச் சென்று தங்களுக்குள்ள கஷ்டங்கள் போகவேண்டும் என்றும், நெருக்கடி போகவேண்டும் என்றும் வேண்டிக் கொள்ள வேண்டும் என்று மாரியம்மன் கோயிலுக்குச் சென்ற போது ஏற்பட்டிருக்கின்றது. அப்படிச் சென்ற குடும்பத்தினர் அல்லோல கல்லோலப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் 8 பேர் இறந்திருக்கிறார்கள். மற்றும் பலர் படுகாயம் அடைந்து போதிய சிகிச்சை கிடைக்கப்பெறாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நேற்றைக்கு முன்தினம் நான் அந்த கிராமத்திற்குச் சென்று அப்படி பாதிக்கப்பட்டவர்கள் குடும்பங்களைப் பற்றி விசாரித்து வந்தேன். அது குறித்து சில விவரங்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

அந்த விபத்திலே இறந்து போனவர்களில் ஒருவர் அந்தக் கோயிலுக்குப் பக்கத்திலே உள்ள சுந்தரய்யாத் தேவர் என்பவர். அவருக்கு வயது 45. அவர் ஏற்கனவே ஒரு விவசாயக் கூலி. அவரிடத்திலே எந்தவிதமான வசதியும் இல்லாத காரணத்தால் அவர் வேலை செய்கின்ற முதலாளியிடத்திலே சென்று வண்டி மாட்டை பெற்றுக்கொண்டு போய் இருக்கிறார். அவர் இறந் திருக்கிறார். அவருடைய பயன், பொன்னுசாமி என்ற 7 வயது பையனும் அதே இடத்திலேயே இறந்து போய் இருக்கி றான். அடுத்தபடியாக அவருடைய மனைவி முத்தம்மாள் என் பவர் கை கால் உடைந்து ஆஸ்பத்திரியிலே படுக்கை வசதியும் இல்லாமல் கீழே படுக்க வைக்கப்பட்டிருக்கிறார். அப்படி அந்தப் பெண் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

அடுத்து பொன்னுசாமித் தேவர் என்பவருடைய 16 வயது மகன் இந்த விபத்திலே இரண்டு கால்களும் ஒடிந்து கால்கள் கட்டப்பட்ட நிலைமையில் வேதனையோடு, நான் சென்று பார்த்தபோது கூக்குரலிட்டு கதறிக்கொண்டிருக்கிறான்.

சுந்தரய்யாத்தேவர் என்பவருடைய மூத்த மகள், 17 வயதுடைய மகள், ஏற்கனவே கைகால் விளங்காத நிலைமையில் சப்பாணியாக வீட்டிலே இருக்கிறாள்.



அடுத்தபடியாக, வேலம்மாள் என்று சொல்லக்கூடிய 25 வயது உடையவர், மகாலிங்கத் தேவரின் மனைவி அந்த விபத்திலே இறந்திருக்கிறார். அவருடைய ஒரு வயது குழந்தை வீரலட்சுமியும் இறந்திருக்கின்றது. அப்படி இரண்டுபேர் அந்தக் குடும்பத்திலே இறந்துவிட்டார்கள். அந்த மகாலிங்கத்தேவர் என்பவர் ஒரு விவசாயக் கூலி. அவருக்கு 4 வயது குழந்தை வேறு இருக்கின்றது. அதை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டு வருகிறார்.

அடுத்து, கருப்பசாமித் தேவர் என்பவரது மகன் வேலுசாமி தேவர் என்பவருக்கு 4 குழந்தைகள் இருக்கின்றன. கடைசிக் குழந்தை பிறந்து 15 நாள்தான் ஆகின்றது. அவருக்குச் சேர வேண்டிய குடும்ப நல நிதி மற்றும் எந்தவிதமான உதவியும் கிடைக்காமல் அந்தக் குடும்பம் தவித்துக் கொண்டிருக்கிறது.

அதற்கடுத்தபடியாக கொத்தாளமுத்துத்தேவர் என்பவரின் மகன் பொன்னுசாமித் தேவர் என்பவருக்கு 5 குழந்தைகள் இருக்கின்றன. மூத்த மகனுக்கு வயது 16. மற்ற குழந்தைகள் எல்லாம் 2 வயது மூன்று வயது குழந்தைகள். அவர் மிகவும் கஷ்டமான நிலைமையில் உள்ள விவசாயக் கூலி. அடுத்தபடியாக பெருமாள்சாமி நாயக்கர் என்பவரின் மனைவி ரேணுகா தேவி. அவருக்கு வயது 30. அவரும் அவருடைய இரண்டு வயது குழந்தையும் படுகாயம் அடைந்து இருக்கின்றனர்.

அடுத்தபடியாக, சீனிவாசன் என்ற 7 வயது பையன், காயமடைந்து இருக்கிறான். அவன் நாராயணசாமி நாயக்கர் என்பவரின் மகன். ஆகவே இந்த விபத்திலே இறந்த 8 பேர் போக மீதம் உள்ளவர்கள் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு போதிய சிகிச்சை கூட இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் சிகிச்சை சரியாக தரப்படாததால் நான் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன் என்று அழைத்துச் சென்று இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: : அந்த இடம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியைச் சேர்ந்தது என்பதற்காக முழு விளக்கங்களையும் சொல்லவேண்டும் என்பது இல்லை. இந்தப் பிரச்னை குறித்து விவாதிப்பதற்காக ஏன் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்பது பற்றி மட்டும் கூறினால் போதும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஆஸ்பத்திரியிலே இருப்பவர்களின் பெயர்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். குருவம்மாள், வொய்ஃப் ஆஃப் மாரிமுத்துத் தேவர், முத்தம்மாள், வொய்ஃப் ஆஃப் லேட் சுந்தரையாத் தேவர், சமுத்திரம், சன் ஆஃப் பெருமாள்சாமி ஆகியோர் ஆஸ்பத்திரியிலே அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். திரு. ராக்கம்மாள் என்பவர் ஒரு விதவை. அவருடைய இடுப்பிலும், காலிலும்,

பலத்த அடி பட்டிருந்தும் அவர் ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீட்டில் இருக்கிறார். அடுத்து மாரிமுத்துத் தேவர் மகள் அய்யம்மாள் என்ற பெண்ணின் வலது கை முறிந்து கட்டுடன் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறாள். அதற்கடுத்தபடியாக பாண்டியக்கோனார் என்பவரின் மகன் கருப்பசாமி என்பவருக்கு நெஞ்சில் கடுமையான அடிபட்டிருக்கின்றது. அடுத்தபடியாக ஆறுமுகத் தேவர், லஷ்மணத் தேவர் ஆகியோர் கடுமையான காயம் அடைந்து கை கால் நடக்க முடியாமல் இருந்து சரியாகக் கவனிக்கப்படவில்லை என்ற காரணத்தால் வீட்டிற்குப் போய்விட்டார்கள். ஆஸ்பத்திரியிலே சரியாகக் கவனிக்கப்படவில்லை. இதிலே நான் சொல்ல வேண்டியது என்னவென்றால் இந்த விபத்து நடந்தவுடன் இந்த சர்க்கார் செய்யவேண்டிய கடமைகளைச் சரியாகச் செய்திருக்க வேண்டும்.

அரசாங்கமோ போலீஸ் அதிகாரிகளோ அங்கு சென்று சம்மந்தப்பட்ட விபத்து காரணமாக அவர்களுக்கு போதுமான நஷ்டஈடும் அவர்களுக்கு வேண்டிய உதவியும் பெற்றுத் தருவதிலும் இவர்களுக்கு உடனடியாக நல்ல சிகிச்சை கிடைப்பதிலே வேண்டிய கவனம் செலுத்தவில்லை. அவர்கள் ரொம்ப கராராய் இருந்து இருக்க வேண்டும். அப்படி அவர்கள் நடக்கவில்லை. இந்த விபத்து நடந்த உடனே விபத்துக்குள்ளானவர்களைப் பார்ப்பதற்காக அந்த கிராமத்திலே உள்ள கோபால்சாமி என்ற சமூக அந்தஸ்தில் உள்ள அவரும், அந்த ஊர் மக்களும் அந்த ஆஸ்பத்திரிக்குச் சென்று இருக்கிறார்கள். அந்த சாத்தூரிலே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரியில் உள்ள சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து முறையான நடவடிக்கை இந்த ஆஸ்பத்திரியில் எடுக்கவில்லை என்றும் இதற்கு முன்னால் இதே மாதிரி 25—11—82-ல் சித்தம்மாள் என்று சொல்லக்கூடிய 13 வயது சிறுமி ரோடில், மாடு மேய்த்துக் கொண்டிருக்கும்போது எம். டீ. டி. 2727 ஜெயகுமார் என்ற பஸ் அடித்து அந்த பெண் அங்கேயே இறந்து விட்டது. இது சம்பந்தமாக இதுவரை ஏறத்தாழ 4 மாதங்கள் ஆகியும் கூட எந்த ஒரு நஷ்டஈடோ எந்த ஒரு வழக்கோ எதுவுமே நடைமுறைப்படுத்தவில்லை. ஆகவே இந்த போலீஸ்காரர்கள் பணக்காரர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு இதிலே சரியான நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்று சொல்லி நாம் கலெக்டரிடம் போய் சொல்லுவோம் என்று இந்த கோபால்சாமி சொல்லியிருக்கிறார். இதைக் கேட்டவுடனே அங்கே இருக்கக்கூடிய போலீஸ்காரரும், ஏட்டும் அவரை பிடித்து அடித்து அங்கே பெரிய தகராறு ஆகிவிட்டது. அவரை அடித்ததால் அங்குள்ள ஜனங்கள் எல்லாம் அந்த போலீஸ்காரரை தாக்கப்போகும்போது அவர்களை சமாதானப்படுத்தியிருக்கிறார்கள்.

நான்கு மாதத்திற்கு முன்பு இதே ரோட்டில் நடந்த விபத்திற்கு எந்த நடவடிக்கையும் போலீஸ்காரர்கள் எடுக்கவில்லை. நஷ்டஈடும் கொடுக்கவில்லை, முதலமைச்சரிடமிருந்து கொடுக்கக் கூடிய அந்த ஆயிரம் ரூபாய் கூட இதுவரையில் கொடுக்கவில்லை.



ஆகவே இதுமாதிரி இதுவும் ஆகிவிடக்கூடாது என்று பேசிக்கொண்டு இருந்தார்கள். இதைக்கேட்ட அங்குள்ள போலீஸ்காரரும் ஏட்டும் அந்த கோபால்சாமியை அடித்தார்கள். இப்படி அடிப்பதைப்பார்த்த அங்குள்ளவர்கள் திருப்பி அந்த போலீஸ்காரரை அடிக்கப்போனார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை அங்கே ஏற்பட்டது.

அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு அந்த ஆஸ்பத்திரியில் உள்ள நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால் சரியாக நோயாளிகளை கவனிப்பது இல்லை. அந்த ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடிய 202-ம் நம்பர் வார்டு, 205-ம் நம்பர் வார்டில் இருக்கக்கூடிய நோயாளிகள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால் பெட்டு ஒன்றுக்கு 60 ரூபாய், 70 ரூபாய் கொடுக்கிறோம். அந்த வார்டிலுள்ள முக்கியமான டாக்டர் பெயர் ஆர். வீ. கே. அவர் முதலமைச்சருக்கு அந்த காலத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தபோது நான் தான் துப்பாக்கி குண்டை வெளியே எடுத்தேன் என்று சொல்லி அந்த செல்வாக்கை வைத்துக்கொண்டு எந்த பெட்டுக்கு ஆனாலும் சரி 70 ரூபாய் வாங்குகிறார்கள். இந்த விபத்தில் சிக்குண்டவர்களுக்கு கூட 60 ரூபாய், 70 ரூபாய் வாங்கிக்கொண்டு அந்த கட்டிலை கொடுத்து இருக்கிறார்கள். நான் நேற்று போய் கேட்டபோது இப்படி சொன்னார்கள். ஆகவே இன்றைக்கு சரியான நடவடிக்கை அங்கே எடுப்பது இல்லை. இது மாதிரியான ஒரு அக்கிரமம் அங்கே நடைபெறுகிறது. விபத்துக்கு உள்ளாகி கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குகூட காசை வாங்கிக்கொண்டு சிகிச்சை அளிக்கக்கூடிய ஒரு அக்கிரமமான நிலைமை ஆஸ்பத்திரியில் இருப்பதன் காரணமாக அங்கு சரியான சிகிச்சை செய்யப்படுவது இல்லை. ஆகவே இந்த ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடியவர்கள் டிஸ்சார்ஜ் ஆகி பலபேர் கோவில்பட்டிக்குப் போய் கையில் இருக்கக்கூடிய 30 ரூபாய், 40 ரூபாயை செலவழித்து சிதம்பரம் என்று சொல்லக்கூடிய தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். விபத்துக்குள்ளானவர்கள் மருத்துவ மனைக்கு போய் வேதனை தாள முடியாமல் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை சரியாக கவனிக்காமல் அந்த மருத்துவ மனை செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த மருத்துவ மனையில் சீரான ஏற்பாடு இல்லை. அந்த பயணீர் பஸ் விபத்து எப்படி ஆனது என்றால் அதை டிரைவர் ஓட்டுவதற்கு பதிலாக அவருக்கு பக்கத்தில் இருக்கக்கூடிய கண்டக்டர் பயிற்சி பெறுவதற்காக ஓட்டிக்கொண்டு சென்று இருக்கிறார். பக்கத்தில் இருந்து கொண்டு டிரைவர் அவருக்கு சொல்லிக்கொண்டு சென்று இருக்கிறார். இந்த சமயத்தில் எதிரிலே 3 வண்டிகள் போகும்போது வண்டி போகிறது பிரேக்கை போடு என்று பக்கத்தில் உள்ள டிரைவர் சொல்ல பயிற்சி பெற்றுக்கொண்டு இருக்கக் கூடிய அவர் பிரேக்கை அழுத்துவதற்குப் பதிலாக ஆக்சிலேட்

டரை அழுத்திவிட்டதாகவும் இதனால் அந்த 3 வண்டிகளையும் அடித்து, 4 மாடுகளும், 2 வண்டிகளும் சுக்கல் சுக்கலாக நொருங்கி இருக்கிறது. ஆகவே டிரைவர் பக்கத்தில் இருந்துகொண்டு சொல்லிக்கொண்டு போகிறார் பிரேக் அடிப்பதற்கு பதிலாக ஆக்சிலேட்டரை அழுத்தியதின் விளைவாக இவ்வளவு பெரிய சேதம் ஏற்பட்டு இருக்கிறது.

இது மட்டும் அல்லாமல் அந்த விபத்துக்கு உள்ளான ஆட்கள் ஒவ்வொருவருக்கும் 4 ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்து இருக்கிறார்கள். இந்த வண்டிக்கு, மாடுகளுக்கு நஷ்டஈடு என்னவென்று சிவகாசி சப்-கலெக்டர் இடத்திலே கேட்க சென்றிருக்கிறார்கள் அந்த ஊர் மக்கள். இங்கே என்ன ஊற்றா வருகிறது இப்படி வருகிறீர்களே என்று மிகவும் மரியாதை இல்லாமல் பேசி அவர்களை விரட்டி அடித்து இருக்கிறார்கள். இந்த சம்பவம் நடக்கும் போது முன்னாள் எம்.பி. திருமதி ஜெயலட்சுமி அம்மாள் அவர்கள் அங்கே இருந்தார்கள் என்று அந்த ஊர் மக்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அரசாங்க அதிகாரிகள் இவ்வளவு அலட்சிய போக்காக இப்படி ஏழை எளிய மக்கள் இப்படி ஒரு விபத்துக்கு உள்ளாகும்போது அனுதாபத்தோடு செய்ய வேண்டிய உதவியை செய்வதற்கு பதிலாக அலட்சியமான நிலையில் நடந்துக் கொள்வது மட்டும் அல்லாமல் இவ்வளவு மோசமான முறையில் உதவிகள் செய்யாமல் இருந்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இன்றைக்கு இந்த விபத்துக்கு உள்ளான ஆட்கள் மிக மிக ஏழைகள், 1 ஏக்கர், 2 ஏக்கர் நிலம் உள்ளவர்கள், கூலி வேலை செய்பவர்கள். இந்த விபத்துக்கு உள்ளான வண்டிகளை வைத்து இருக்கக்கூடிய கிருஷ்ணசாமி நாயக்கர் என்பவர் இதை வைத்துக் கொண்டு தான் ஜீவனம் நடத்தி வந்தார். இந்த மாட்டு வண்டியை வைத்துக் கொண்டு தான் 30 ரூபாய் 40 ரூபாய் வாடகைப் பெற்று ஜீவனம் நடத்திக் கொண்டு வந்தார். அந்த வண்டிகளும், மாடுகளும் சுக்கல் சுக்கலாக நொறுங்கிவிட்டன. அந்த வண்டியை ஓட்டிச் சென்றவர்கள் மதுரை ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். வண்டி மாட்டுக்கு இதுவரையில் எந்த நஷ்டஈடும் கொடுக்கவில்லை. ஆகவே அந்த வண்டி மாட்டுக்கு நஷ்டஈடு கொடுக்காதது மட்டுமல்லாமல் அவருக்கு வேண்டிய வைத்திய உதவியும் சீராகச் செய்யவில்லை. இன்றைக்கு விபத்துக்கு உள்ளான பெரிய ஆட்கள் ஒவ்வொருவருக்கும் 4 ஆயிரம் ரூபாயும் சிறு குழந்தைகளுக்கு 2 ஆயிரம் ரூபாயும் அந்த தீப்பெட்டி பஸ் முதலாளியிடமிருந்து அதிகாரிகள் வாங்கி கொடுத்து இருக்கிறார்கள்.



மேற்கொண்டு தொகை அதிகாரிகள் வாங்கியிருக்கிறார்களோ என்னவோ தெரியாது. இறந்தவர்களுக்கு குறைந்த பட்சம் 10 ஆயிரம் ரூபாயாவது நஷ்டஈடு பெற்றுத் தர வேண்டும். இதற்கு முன்னால் அப்படி பெற்றுத் தரப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அரசாங்கம் இறந்தவர்களுக்கு மட்டும் உதவி பெற்றுத் தருவது போதாது, விபத்திலே காயம் பட்டவர்களுக்கும் அடிபட்டு கைகால் இழந்தவர்களுக்கும் கைகால் விளங்காதவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவித் தொகையைப் பெற்றுத் தர வேண்டும். இந்த மாதிரி விபத்துக்களில்—அவை நடக்கிற காலத்திலே—அரசாங்கம் எப்படி எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் விபத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு தனியார் ஆஸ்பத்திரிகளிலே எடுத்துச் சென்று சிகிச்சை உடனடியாக நல்ல முறையிலே கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் இந்தத் தொகைகளை சம்பந்தப்பட்டவர்களுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்பதையும், இப்படிப்பட்ட அலட்சியப் போக்கு அரசாங்கத்திற்கு விபத்து சம்பந்தப்பட்ட மட்டில் இருக்கக்கூடாது என்பதைப்பற்றி விவாதிக்கவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு உதவித் தொகைகளை அரசாங்கம் பெற்றுத்தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–10)

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, இந்த இருக்கன்குடி கோயிலுக்குப் போகிறபோது 3 வண்டிகள் மீது பஸ் மோதியதால் ஏற்பட்ட நிலைமைகளையெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. அழகர்சாமி அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையே மீண்டும் நான் சொல்லவில்லையென்றாலும் மேலும் சில விவரங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்த சுந்தரய்யா தேவர் வகையறாக்கள் ஏழை எளிய குடும்பங்கள், அவர்கள் கஷ்டப்படுகிற குடும்பங்கள். பஸ்ஸிலே அவர்கள் போவதற்குகூட வசதியில்லாமல் வண்டி கட்டி—வண்டியைக் கூட இரவலாக வாங்கியிருக்கிறார்கள்—போகிறபோது தீப்பெட்டி கம்பெனி பஸ் மோதியிருக்கிறது. அந்த பஸ்ஸை முறையாக டிரைவர் ஓட்டவில்லை. அதற்குப் பதிலாக டிரைவர் பக்கத்திலே உள்ள கண்டக்டருக்குச் சொல்லிக் கொடுக்கிற பெயரால் டிரைவிங் சொல்லிக் கொடுத்துக் கொண்டு போகிற நேரத்திலே வண்டி முன்னால் போகிறபோது பிரேக்கை அணை என்று சொன்னபோது எந்த விதத்திலே பிரேக்கை அணைப்பது என்று அவருக்குத் தெரியாமல் வண்டி ஸ்பீட் அப் பண்ணி வண்டி வேகமாகப் போய் 3 வண்டிகளுக்கு சேதம் ஏற்பட்டு அந்த மாடுகள் இறந்து விட்டன. சுந்தரய்யாத் தேவருடைய குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர்கள் ஸ்பாட்டிலேயே இறந்து விட்டார்கள்.

அதோடு 15 பேர்கள் அபாயகரமான நிலைமையிலே ஆஸ்பத்திரியிலே அட்மிட் பண்ணப்பட்டு சரியாகக் கவனிக்கப்படவில்லை. கவனிக்கப்படாதது மாத்திரமல்ல, டாக்டர்கள்—அந்த இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வருகிறபோது அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்குப் பதிலாக—மாமூல் வேலையைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். மாமூல் வேலையைச் செய்வது என்பது அப்போது சரியல்ல என்று யாராவது ரெப்ரசன்ட் பண்ணினால் எனக்கு முதல்வரையே தெரியுமய்யா, முதல்வருக்கே நான் ஆப்பரேஷன் பண்ணிய ஆள், என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று கொஞ்சம் திமிரோடு பேசக்கூடிய நிலையில் டாக்டர்கள் இருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு பிரச்சினைகளை விவாதிக்க வேண்டுமென்று சொல்கிறபோது கடைசியாகச் சொல்கிறேன், உயிரின் விலை 4 ஆயிரம் என்று கூறப்படுகிறது. அரை டிக்கட்டா 2 ஆயிரம், முழு டிக்கட்டா 4 ஆயிரம் என்று விலை தருகிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் கஷ்டப்பட்ட குடும்பங்கள், குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். மனைவிக்கு இடுப்பொடிந்து போய் இருக்கிறது. ஏற்கெனவே அந்தத் தொகுதி உறுப்பினர் கூறிய கருத்தின் அடிப்படையில் குறைந்த பட்சம் அந்தக் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். ஆஸ்பத்திரியில் இருக்கிறவர்களுக்கு மீண்டும் சிகிச்சை அளிக்கக் கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அவர்களிலே பெரும்பாலானவர்கள் கை கால்களில் அடி ஏற்படக் கூடிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நட்ட ஈடு கொடுப்பதற்கு முன்வர வேண்டும். அந்த கம்பெனியிலிருந்து 10 ஆயிரம் வாங்குவதோடு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து—ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள் நாங்கள் வரவேற்கிறோம்—அது போதுமானதல்ல, அந்தத் தொகை கூட கொடுக்கப்படவில்லை. அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப் பல்வேறு விஷயங்களை விரிவாக விவாதிக்க வேண்டிய நிலைமை இருப்பதன் காரணமாக இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இந்த சம்பவம் கடந்த 25 ஆம் தேதி நடைபெற்றிருக்கிறது. இருக்கன்குடி மாரியம்மன் கோயிலுக்கு நெல்லையிலிருந்து ராமநாதபுரத்திற்கு சுந்தரய்யா தேவரும் மற்றவர்களும் 3 வண்டிகளிலே சென்றபோது தீப்பெட்டித் தொ ற்சாலைக்குச் சொந்தமான பஸ்ஸால் பாதிக்கப்பட்டு 10 பேர்கள் இறந்திருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் அவை அனைத்தையும் பற்றி சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றம் கூடக் கூடிய இந்த ஒரு மாத காலத்திலே விபத்துக்கள் நடப்பது என்பது



சர்வசாதாரணமாக ஆகிவிட்டது. அது பஸ் லாரி இது போன்ற விபத் கள். நான் கூட பல ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். ஒரு வழி கண்டு பிடித்தாக வேண்டும். ஒரு சர்க்கார் என்று இருந்து கொண்டு விபத்து நடக்கிறபோது ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசி விடுகிறோம். நஷ்டஈடு வழங்கி விடுகிறோம். எனக்கு முன்னாலே பே ிய உறுப்பினர் கூட சொன்னார்கள். உயிருக்கு விலை 4,000 ரூபாய் என்று. ஆகவே அதைப் போல கொடுத்து விட்டால் மட்டும் அரசாங்கம் ஒரு நல்ல நடவடிக்கை எடுத்து விட்டது என்பது அர்த்தமல்ல. அதற்கு மாறாக இது போன்ற விபத்துகள் நடக்காமல் முற்றுப் புள்ளி வைப்பதற்கு என்ன வழி என்று அரசாங்கம் கண்டு பிடித்தாக வேண்டும். இப்போது இதெல்லாம் சர்வ சாதாரணம். இந்த பஸ்கள் இப்போது டீக்கடைகளில் போகிறது; ரெயில்வே ஸ்டேஷன்களில் போகிறது; லாரி மீது மோதுகிறது. சைக்கிள் ரிக்ஷாவிலே மோதுகிறது; இந்த விபத்துக்கள் அன்றாட நடவடிக்கையாக, சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே நம்முடைய இலாக்கா, உதாரணமாக போலீஸ் துறையில் இருக்கிற ட்ராபிக் இலாக்கா அல்லது ஆர்.டி.ஓ. ஆபீசிலே இருக்கிற பல அதிகாரிகள் பல்வேறு இடங்களில் எல்லாம் அடிக்கடி ரோந்து வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்; அந்த பஸ்ஸை ஒரு கண்டக்டர் ஓட்டியிருக்கிறார்; டிரைவருக்குப் பதிலாக.. எனக்கு முன்னாலே பேசியவர் டிரைவர் பக்கத்திலே இருந்தார் என்றார்; எனக்குத் தெரியாது. எப்போது ஓட்டுகிறார் தெரியுமா கண்டக்டர்; டிரைவிங் கற்றுக் கொள்கிறார் காலை 3— மணிக்கு. டிரைவிங் கற்றுக் கொடுப்பது காலையில் 3— மணிக்கு. அவனும் தூங்குவான்; இவனும் தூங்குவான்; இரண்டு பேர்களும் தூங்குவார்கள். ஆகவே இப்படிப்பட்ட அவல நிலைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை தடுத்து நிறுத்தியாக வேண்டும். எனக்கு முன்னாலே பேசிய அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள். ஏனென்றால் அது அவருடைய தொகுதி. சர்க்காருடைய உதவி ஆயிரம் ரூபாய் இன்னும் போய்ச் சேரவில்லை. சர்க்கார் கொடுக்காதது முன் மாதிரியாக இருக்கிறது. தனிப்பட்ட முதலாளி தற்கு முன் மாதிரியாக இருக்கிறது. தனிப்பட்ட முதலாளி கொடுத்து விடுகிறான். அவர்களிடத்தில் இருக்கிற அதிகாரிகள் கொடுத்து விடு றார்கள். அது கொஞ்சமாக இருந்தாலும் போய்ச் சேர்கிறது. ஆனால் இவர்கள் ஆயிரம் என்று சொன்னது இன்னமும் போய் சேரவில்லை. கிட்டத்தட்ட மூன்று வாரத்திற்கு மேல் ஆகிறது. ஆகவே எவ்வளவு சுறுசுறுப்பாக அரசாங்கத்தினுடைய நடவடிக் ககள் நடைபெறுகின்றன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

அதுமட்டுமல்ல, அவர்கள் ஆக்சிடென்ட்டிலே அடிபட்டுபோய் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சரியாக கவனிக்கப்படவில்லை. ஆக்சிடென்ட்டிலே போய் சேர்க்கப்பட்ட இந்த பேஷண்ட்களுக்கே இந்த கதி என்றால் ஆர்டினரி

பேஷண்ட்களுக்கு என்ன கதி? அது என்ன மருத்துவமனையா? ஆக்சிடென்ட்டில் அடிப்பட்டு அவதிப்படுகிற மக்களுக்கு பெட் கூட கொடுக்காமல், அதற்கு ரேட் பேசி, இப்படி மோசமான நிர்வாகமாக மருத்துவமனைகள் இருக்கின்றன. இதையும் தடுத்து நிறுத்த வேண்டும். இவற்றிற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். ஏனென்றால் ஆர்டினரி பேஷண்ட் என்ன ஆவார்கள் என்பதை யோசிக்க வேண்டும். அவர்களை பார்க்கக் கூட மாட்டார்கள். அவர்களுக்கு அட்மிஷனே இருக்காது. வெளியிலேயே இருப்பார்கள். அவுட் பேஷன்ட்ஸ் ஆகி விடுவார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சொன்னார்கள். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஏற்கெனவே ஊனமுற்றவர். ஊனமுற்ற அந்தப் பெண்ணை விட்டு விட்டு எல்லோரும் மேல் உலகத்திற்கு போய்விட்டார்கள். ஆகவே இப்படிப்பட்ட பெண்ணிற்கு 4,000 ரூபாய் கொடுத்தால் போதுமா? சர்க்கார் 1,000 ரூபாய் கொடுத்தால் போதுமா? அவர்கள் பெரிய முதலாளி; அதிலும் தீப்பெட்டி முதலாளி. நிறைய கொள்ளையடிக்கிறவர். ஏன் 4,000 ரூபாய் என்ற சீலிங். எல்லோருக்கும் தாராளமாக வாங்கிக் கொடுங்களேன். இப்படிப்பட்ட ஏழைக் குடும்பங்களை காப்பாற்றாமல் வேறு என்ன செய்யப் போகிறீர்கள்? ஆகவே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மட்டுமல்ல. ஊனமுற்றவர்களுக்குக் கூட நஷ்டஈடு கொடுக்க வேண்டும். அரசாங்கம் தாராள மனசு வைத்து அதிகமான தொகையை நஷ்டஈடாக அவர்களுக்கு வழங்க வேண்டும். ஆயிரம் என்பது போதாது. அது இன்னும் போய்ச் சேரவில்லை. விரைவாக சேர்வதற்கு, கூடுதலாகக் கொடுப்பதற்கு அரசு முன் வர வேண்டும். முதலாளியிடம் அதிகமான தொகையை வாங்கிக் கொடுப்பதற்கு, இறந்தவர்கள் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல், ஊனமுற்றவர்களின் குடும்பத்திற்கும் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இதையெல்லாம் பற்றி விரிவாக, விளக்கமாக என்னைப் போல் மற்றவர்களும் பேசுவதற்கு வாய்ப்பளிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 25 ஆம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் அருகில் மாரியம்மன் கோவிலுக்கு திருவிழாவிற்குச் சென்ற நெல்லை மாவட்டம் கோவில்பட்டி தாலுக்காவிலுள்ள, ஆவல் நத்தம் கிராமத்தைச் சேர்ந்த சுந்தரய்யா தேவர் மற்றும் அவருடன் சென்ற 30 பேர்கள் கட்டை வண்டியில் பயணம் போய்க் கொண்டிருந்தபோது, பின்னாலே வந்த சாத்தூரில் இருக்கிற ஒரு தீப்பெட்டி கம்பெனிக்குச் சொந்தமான பஸ் மோதி வண்டிகள் அந்த இடத்திலேயே சுக்கு நூறாகிவிட்டன. அந்த இடத்திலேயே 10 பேகர்ள் மரணம் அடைந்திருக்கிறார்கள். இரண்டு, மூன்று மாடுகளும், ஒரு ஆடும் இறந்து விட்டன. 15 பேர்கள் கவலைக்கிடமாக இருந்திருக்கிறார்கள். அந்த





பஸ்ஸை அந்த பஸ்ஸினுடைய டிரைவர் ஓட்டவில்லை. மாறாக கண்டக்டர் தான் ஓட்டியிருக்கிறார். அவர் பயிற்சி பெறுவதற்காக ஓட்டியிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. அவர் பிரேக்கை போடுவதற்குப் பதிலாக ஆக்சிலேட்டரை அமுக்கி அதனால் பஸ் வேகமாக போய் விபத்து ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் தடுக்க பஸ் சரிவர போகிறதா என்பதை பிரேக் இன்ஸ்பெக்டர் சரியாக கவனிக்கவில்லை என்று தான் தோன்றுகிறது. பிரேக் இன்ஸ்பெக்டரிடத்திலே பரிசோதனைக்குப் பஸ் போகிறபோது அவர்கள் சரியாக கவனிக்கவில்லை. அவர்கள் ஏதோ ஒரு முறையிலே அனுமதி வழங்கி விடுகிறார்கள். ஆகவே இனிமேலாவது இந்த சர்க்கார் சாலையில் பஸ்கள் சரியாக ஓடுவதற்காக ப்ரேக் இன்ஸ்பெக்டர் சரியாக, கட்டாயமாக பரிசோதனை செய்ய வேண்டுமென்ற உத்தரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இறந்தவர் குடும்பத்திற்கு ரூபாய் 1,000 முதலமைச்சர் நிதியிலிருந்து தருவதாகச் சொல்லப்பட்டது. இதுவரையிலே அந்த உதவித் தொகை வழங்கப்படவில்லையென்று கேள்விப்படுகிறோம். அது கூடாது. உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். தீப்பெட்டித் தொழிற்சாலையிலிருந்து பெரியவர்களுக்கு ரூபாய் 4,000-மும் சிறியவர்களுக்கு ரூபாய் 2,000-மும் உதவித் தொகை அளிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அது போதாது. குறைந்தபட்சம் ரூபாய் 10,000 உதவித் தொகை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் கால்நடைகளுக்கும் சேதமுற்ற வண்டிகளுக்கும் ஏதாவது நஷ்டஈட்டை வாங்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, விபத்திலே அடிப்பட்டு ஆஸ்பத்திரியிலே இருக்கிற நோயாளிகளுக்கு ஏதாவது உதவித் தொகை வ்ழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இது போன்ற விஷயங்களை விவாதிக்கவேண்டியிருப்பதால், அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—20)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்பட்டிக்கு அருகில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற வேதனைக்குரிய நிகழ்ச்சியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள் அன்று காலை 6—00 மணி அளவில் அவல் நத்தம் கோயில்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 34 பேர்கள் 3 இரட்டை மாடு கட்டிய வண்டிகளில் இருக்கான்குடி மாரியம்மன் கோவில் திருவிழா காண சென்றுகொண்டிருந்தார்கள். '' பையனீர் மாச் பாக்டரி '' தொழிலாளர்கள் பஸ் எண். டி.என்.யு. 2977 இருக்கான்குடியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இந்த பஸ் இருக்கான்குடி சாத்தூர் சாலையில் சென்றுகொண்டிருந்த

3 வண்டிகளில் கடைசியாக சென்றுகொண்டிருந்த மாட்டு வண்டி மீது மோதியது. வண்டிகள் ஒன்றோடொன்று மோதி சாய்ந்திருக்கின்றன. மோதியதில் 8 நபர்கள் அந்த இடத்திலேயே இறந்தனர். 17 பேர்கள் காயம் அடைந்தனர். முதல் மாட்டு வண்டியில் சென்றுகொண்டிருந்த 9 நபர்கள் காயமின்றி தப்பினர். சாத்தூர் காவல் துறை இணைக்கண்காணிப்பாளர் செய்தி கேட்டு, ஸ்தலத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொண்டார். விபத்து நடந்த இடம் சாத்தூர் ஆட்டுப் பண்ணையிலிருந்து 200 மீட்டர் தூரத்திலிருக்கிறது. 50 மீட்டர் எல்லைப் பரப்பிற்குள் இறந்தவர்களின் சடலங்களும் இறந்த 3 மாடுகளின் உடல்களும் ஆடும் கோழிகளும் உடைந்த மாட்டு வண்டிகளும் சிதறிக் கிடந்தன. காயம் அடைந்தவர்கள் உடனடியாக சாத்தூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லபட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர். காயம் அடைந்த 17 நபர்களில் 12 நபர்கள் மேல் சிகிச்சைக்காக மதுரை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர். 4 மருத்துவர்கள் அடங்கிய குழு ஒன்று விருதுநகரிலிருந்து வரவழைக்கப்பட்டு சாத்தூர் மருத்துவருக்கு பிரேத விசாரணை செய்வதற்கு உதவியாக இருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் வாகன ஆய்வாளர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டுப் பேருந்தை ஓட்டி ஆய்வு செய்து, பேருந்து நல்ல நிலையில் இயங்குவதாகக் கருத்து தெரிவித்தார். ஓட்டுநர் வேத ஆசிர்வாதம் அந்தப் பேருந்தை இரவு 1 மணியிலிருந்து ஓட்டிக்கொண்டிருந்தார் என்று விசாரணையில் தெரிய வருகிறது. சாத்தூரைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து ஏற்றிக்கொண்டு வரப்பட்டுள்ள பணியாளர்களை இறக்கிவிட்டு இரண்டாவது சுற்றுக்காகன பணியாளர்களை ஏற்றிவரும்பொருட்டு இருக்கான்குடியிலுள்ள, ஆசாரப்பட்டிக்குச் சென்றுகொண்டிருந்தார். இரவு முழுவதும் தொடர்ந்து ஓட்டுநர் வண்டியை ஓட்டிவந்த அயர்ச்சியில் தூங்கியிருந்து இந்த விபத்து ஏற்பட்டிருக்கக்கூடும். காலியாகச் சென்றுகொண்டிருந்த பேருந்து ஓட்டுநரும் நடத்துனரும் காயமின்றி தப்பித்தனர் என்று தெரிகிறது. இங்குதான் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கும் எனக்கு கிடைத்திருக்கிற தகவலுக்கும் வேறுபாடு இருக்கிறது. ஓட்டுநர் இரவு முழுவதும் பல ஷிப்டுகள் ஓட்டியதன் காரணமாக, தூங்காமல் இருந்ததன் காரணமாக, அயர்ச்சியினால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கக்கூடும் என்று யூகிக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தாறுமாறாக ஓட்டுநர் ஓட்டவில்லை. ஆனால், கண்டக்டரிடத்திலே ஓட்டச் சொல்லியதன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடுகிறார்கள். அது மேலும் ஆராயப்பட வேண்டியதாக இருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதிகாரிகளுடைய வற்புறுத்தலின்பேரில், பையனீர் மாச்சுக்ஸ் நிறுவனம் இறந்துபோன பெரிய நபர்களைச் சார்ந்தவர்களுக்கு ரூபாய் 4,000-மும், மற்றும் இறந்துபோன குழந்தைகளைச் சேர்ந்தவர்களுக்கு ரூபாய் 2,000-மும் கொடுத்தது. இத்



தொகை வருவாய் மாவட்ட உள்கோட்ட ஆட்சியாளர் அவர்களால் இறந்துபோன 3 பெரிய நபர்கள், இரண்டு பெண்கள், மற்றும் 3 குழந்தைகளைச் சேர்ந்த நபர்களுக்கு வழங்கப்பட்டது. ஈமக்கிரியைக்காக ரூபாய் 1,000 இறந்துபோனவர்களைச் சார்ந்த நபர்களுக்கு வழங்க செயற் குறிப்பு வருவாய் மாவட்ட உட்கோட்ட ஆட்சியாளரால் சமர்பிக்கப்பட்டது. பிரேதப் பரிசோதனை முடிந்த பிறகு, இறந்துபோனவருடைய உடல்கள் சம்பந்தப்பட்ட உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவை அனைத்தும் சாத்தூரில் ஈமக்கிரியை செய்யப்பட்டன.

மருத்துவமனையில் இன்னும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிற நபர்கள் காயச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னர் இவ்வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

சாத்தூர் காவல் நிலையக் குற்ற எண். 258/83 பிரிவு, 279, 337, 338, 304-ஏ, 427, இறந்துபோன நபர் என்ற வகையில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இறந்துபோன பணியாளர்களுடைய பட்டியல், இறந்து போனவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, வேலம்மாள், வீரலட்சுமி என்ற 1 வயது குழந்தை, வெள்ளைச்சாமித் தேவர் 40 வயது, ரேணுகாதேவி 30 வயது, சுந்தரய்யாத் தேவர் 45 வயது, பொன்னுச்சாமி 7 வயது, பொன்னுச்சாமித் தேவர் 50 வயது, சீனுவாசன் 7 வயது என்ற வகையிலேயும், காயம் அடைந்தவர்கள், சாத்தூர் மருத்துவமனையிலிருந்து சிகிச்சை பெறுபவர்கள் கிருஷ்ணம்மாள், வீரபாண்டி, இராமசாமி, ஜெயம்மாள் முத்து, காயம் அடைந்தவர்களில், மதுரையிலிருந்து சிகிச்சை பெறுபவர்கள் கருப்புசாமி, பெருமாள்சாமி நாயகர், ராக்கம்மாள், பொன்னு இருளாண்டி, இலட்சுமணன் என்கின்ற இராசேந்திரன், முத்தம்மாள், குருவம்மாள், சோலைச்சாமி, முத்துராசு பெருமாள் அம்மாள், சமுத்திரம், பிச்சைமுத்து.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கூறுகின்றபொழுது இப்பொழுது இந்த மேச் பாக்டரிக்கு உரிமையாளர் 4,000 ரூபாய் பெரியவர்களுக்கு என்றும், 2,000 ரூபாய் குழந்தைகளுக்கு என்றும் வழங்கியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்; அது போதாது என்றும் குறிப்பிட்டார்கள். அந்தக் குடும்பங்களினுடைய நிலையை உத்தேசித்து அதிக நஷ்டயீடு வாங்க வேண்டும் என்று ஒரு கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இறந்துபோன மாடுகளுக்கான நஷ்டயீடும், வண்டி போன்றவைகளுக்கான நஷ்டயீடும் வழங்குவதும் நியாயமாகும். இவ்வளவு பொறுப்புக்கும் காரணம் அந்த பஸ். அந்த பஸ்ஸுக்கு உரிமையாளர் யாரோ, அந்த பஸ்ஸை ஓட்டி வருகிற அந்த பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டு

மென்ற நியாயத்தின் அடிப்படையிலேயும், அந்த பஸ்ஸுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்ற அந்த உரிமையாளர்கள் அந்தப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையிலேயும் அது பற்றி உள்ளபடியே மேற்கொண்டும் நாம் நடவடிக்கை எடுத்து அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

இப்பொழுது ரோடுகளிலே விபத்து ஏற்பட்டால், அப்படி இறந்து படுபவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கருணைத் தொகையாக வழங்குவது என்ற அடிப்படையினுடைய தன்மையிலே, அதிலே இறந்துபடுபவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற கருணைத் தொகை கொடுக்கின்ற அத்தகைய தன்மைகளிலே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அரசு நடவடிக்கைகள் எடுக்கிறது என்றால் பல்வேறு முறைகள் கையாளப்பட வேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். தனியார் உடனே எடுத்துக் கொடுத்துவிட்டால், அரசு கொடுக்கவில்லையென்றால் அதற்குப் பல்வேறு சுற்றாணையின் மூலம் வந்து தீர வேண்டிய அவசியம் ஏற்படுவதன் காரணமாக, அந்த நிலைமை ஏற்படுகிறது. ஆனால், நிச்சயமாக அந்த ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதைப்போன்று, அந்த நஷ்டயீடு போதவில்லை என்பது மட்டுமல்லாமல், வண்டிகள், மாடுகள் ஆகியவற்றிற்கும் சேர்த்து நஷ்டயீடு தர வேண்டுமென்ற கருத்து உள்ளபடியே வரவேற்கத் தக்க ஒன்று என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களை நான் கேட்டுக் கொள்வது, இது பற்றி ஒரு விண்ணப்பமாக எழுதி, என்னிடத்திலே தருவார்களேயானால் அதன்மீது நடவடிக்கையெடுக்க, உரிய துறை அதிகாரிகளிடத்தில் நடவடிக்கை எடுக்கச் சொல்ல வசதியாக இருக்கும். நியாயத்தின் அடிப்படையிலேயும், அந்தக் குடும்பங்களினுடைய நிலையினுடைய அடிப்படையிலேயும், அவர்களை நம்பி வாழ்கின்ற குடும்பத்திலே இருப்பவர்களை இந்த அளவிற்கு விட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையிலேயும் மேற்கொண்டு உரிய அதிகாரிகளைக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டவர்கள் கவனிக்கப்படவில்லை என்ற குறிப்பைச் சொன்னார்கள். மருத்துவமனையிலே இருக்கின்றவர்கள் அத்தனைபேர்களையும் சரியாகக் கவனிக்கவில்லை என்று சொல்லாவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்ற அந்த நிலைமைகள் இல்லை என்று நான் சொல்லவும் மாட்டேன். சில பல நேரங்களில் அப்படி வரும்பொழுது உள்ளபடியே மருத்துவத்துறை அதிகாரிகளும் மற்றவர்களும் கவனம் செலுத்துவதற்கும் அக்கறை கொள்வதற்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டிய கருத்துக்கள் மிகமிகப் பயன்படும் என்று நான் கருதுகிறேன்.



இப்படிப்பட்ட யாரும் வேதனை அடைய வேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு, யார் ஒருவரும் வருத்தம் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படாத அளவிற்கு, தங்களுக்குத் தர வேண்டிய அடிப்படைச் சிகிச்சைகள் தரப்படவில்லை என்ற வருத்தம் தராத ஒரு சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்பதுதான் அரசினுடைய எண்ணம். அதற்காகத்தான் டாக்டர்கள், மருத்துவச் சிகிச்சையாளர்கள், மற்றவர்கள் ஆகியவர்களையெல்லாம் நாம் நியமித்திருக்கிறோம். அவர்கள் கடமையைச் செய்யத் தவறுகின்றபொழுது இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. அதை அவர்கள் கவனத்திற்கொண்டு, உரிய அதிகாரிகள் தக்க நடவடிக்கைகளை, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்களின் அடிப்படையிலே எடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

இந்தப் பிரச்சினையைப்பற்றி அவர்களுக்கு நியாயம் வழங்கப்படுவதற்கும், முக்கியமானவர்களை இழந்து வருந்துகின்ற குடும்பங்களினுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கும் நடவடிக் வடிக்கை எடுப்பதற்கான முறையில் நான் முதலிலே கேட்டுக் கொண்டபடி அந்த விண்ணப்பத்தைத் தருவார்களேயானால் இருக்கின்ற நிலைமைகளை அறிந்து அதன் மூலமாக நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லி, இதற்கு மேல் இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் எடுத்துச்சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(முற்பகல் 10-30)

### 3. அறிக்கை அளித்தல்.

### விதி 109 (1)-ன்கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அளித்த விடை குறித்து.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 109-வது விதியின் கீழ் தங்கள் மூலமாக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் அன்று மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள், கேள்வி நேரத்தின்போது, சென்னையில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிக்கப்படும் 'மேன் ஹோல்கள்' பாதாளச் சாக்கடை மூடிகள் அதிகமாக திருடு போகின்றன ; அதுபற்றி நடவடிக்கை எடுக்குமாறு கேள்வி கேட்டபோது அதற்கு மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, குடிநீர் வடிகால் வாரியம் தனியாக ஏற்படுத்தப்பட்ட பின்னர் தான் திருடுகள் அதிகமாக இருக்கின்றது என்று எந்த அடிப்படையில் சொன்னார்கள் என்று தெரியவில்லை. அது மாற்றப்படக் கூடாது என்ற கருத்து இருக்குமேயானால், இதிலே அதை எப்படி நுழைத்துச் சொல்ல முடியும்? அது மாற்றப்பட்டிருந்தாலும், இன்றைக்குக் கூட அதனுடைய பராமரிப்பு ' மெயின்டனென்ஸ் ' மாநகராட்சியிடம் இருக்கிறது என்பதை சபைக்கு உண்மைக்குப் புறம்பாக அறிவித்துள்ளார்கள். இதனை 109-வது விதியின்கீழ் தங்கள் மூலம் உண்மையான தகவலைச் சபைக்கு அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராசவானந்தம்: சட்டமன்ற உறுப்பினர் திரு. சு. பாலன் அவர்கள் சுட்டிக் காட்டியதற்கு கீழ்க் கண்ட விளக்கம் தரப்படுகிறது. கழிவு நீர் அகற்றுக் குழாய்கள் மேலுள்ள ஆள் நுழை வாயில் இரும்பு மூடிகள் சென்னை பெருநகர் குடிநீர் வாரியத்தாலும், மழைநீர் அகற்று, அதாவது ஸ்டார்ம் வாட்டர் டிரெய்ன்ஸ், கால்வாய்கள் மேலுள்ள இரும்பு மூடிகள் சென்னை மாநகராட்சியாலும் பராமரிக்கப்பட்டு வருகிறது, உண்மை. கழிவு நீர் அகற்று குழாய் மூடிபோல், மழைநீர் அகற்றுக் கால்வாய் மேலுள்ள மூடிகளும் களவுக்கு உட்படுகிறது.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலில் வடிகால் வாரியத்தினுடைய மூடிகள் மட்டும் இப்போது குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். இப்படி நான் கேட்ட கேள்விக்கு இன்றைய தினம் மக்களுக்கு அந்த கழிவு நீர் அகற்றப்படுவதில் யார் செய்ய வேண்டும் என்ற நிலைமை சரியாக இல்லாத காரணத்தால் அவதிப்படுகிறார்கள். இன்றைய தினம் மக்களுக்கு நல்ல முறையில் இதை தெரிவித்திருப்பதற்கு நான் அமைச்சரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, மீண்டும் இனிமேலாவது உண்மையான தகவலை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### திருநின்றவூரிலுள்ள இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே ஹேமச்சந்திரன், டி. மணி, கே. ஆர். சுந்தரம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். இவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவர் அவர்களே ''செங்கற்பட்டு மாவட்டம் திருநின்றவூரிலுள்ள இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு செய்துள்ளதால் தொழிலாளர்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்

அறிக்கை.

செங்கல்பட்டு மாவட்டம் திருநின்றவூரிலுள்ள இண்டியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் என்னும் உருக்கு ஆலையில் 220 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இத்தொழிற்சாலையில் சி.ஐ.டி யுடன் இணைக்கப்பட்ட இண்டியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் லிமிடெட் ஒர்க்கர்ஸ் அண்ட் ஸ்டாப் யூனியன் என்னும் தொழிற் சங்கம் இயங்கி வருகிறது.

தற்சமயம் அமுலில் இருக்கும் ஒப்பந்தக்காலம் முடிவடைந்ததால், ஊதிய உயர்வு, அகவிலைப்படி, தொழிலாளர்களின் கிரேடு (grade) நிர்ணயம் செய்தல், வீட்டு வாடகைப்படி போன்ற பல்வேறு கோரிக்கைகளை சங்கம் நிர்வாகத்தின் முன் வைத்தது. இத்தொழிற்தகராறில், தொழிலாளர் துறை உதவி ஆணையர் முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நிர்வாகம் தனது சார்பில் சில கோரிக்கைகளை முன் வைத்தது. இக்கோரிக்கைகள் மீது மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும்போது குத்தகை அடிப்படையில் நியமிக்கப்பட்ட தொழிலாளர்கள் செய்யும் கம்பிகள் முறுக்கப்படும் பணியை தடுத்து நிறுத்தியதாலும் முறுக்கப்படாத கம்பிகளை அம்பத்தூர் தொழிற்சாலைக்கு முறுக்கப்படுவதற்கு அனுப்பப்படும்போது அதைத் தடுத்து நிறுத்தியதாலும் வேலை தடைபட்டது என்றும், 8-11-1982 அன்று தொழிலாளர்கள் திடீரென வேலை நிறுத்தம் செய்து மீண்டும் வேலைக்குத் திரும்பவில்லை என்றும்; பிறகு 12-11-1982 அன்று ஓர் வேலை நிறுத்த அறிவிப்பை கொடுத்து 26-11-1982 அன்றோ அல்லது அதற்கு பிறகோ வேலை நிறுத்தம் நடைபெறும் என்று சங்கம் தெரிவித்தது என்றும், நிர்வாகத்தின் சொத்துக்களுக்கு சேதமும் மற்றும் விசுவாசமான ஊழியர்களின் உயிர்களுக்கு ஆபத்தும் ஏற்படும் எனக் கருதி நிர்வாகம் 25-11-1982-ல் தொழிலாளர்கள் லே-ஆப் செய்யப் படுவார்கள் என நிர்வாகம் அறிவித்ததாகவும், 26-11-1982 அன்று தொழிலாளர்கள் நிறுவனத்தின்வாயில் முன்பு கூடி தொழிற்சாலைக்குள் பலாத்காரமாகப் புகுந்து, நிறுவனத்திற்குச் சேதமும் பணியாளர்களுக்கு ஆபத்தும் விளைவிக்கும் எண்ணத் துடன் முயற்சி செய்ததால், நிர்வாகம் 30-11-1982 முதல் நிறுவனத்தை கதவடைப்பு செய்ததாகவும் நிர்வாகத் தரப்பில் கூறப்பட்டது.

நிர்வாகத்தின் மேற்கூறிய கருத்துக்களை மறுத்து, தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யவில்லை என்றும், தொழிலாளர்களை ஆட்குறைப்புச் செய்வதில் நிர்வாகம் தீவிரமாக உள்ளது என்றும் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் சங்கம் விவாதித்தது.

இத்தொழிற்தகராறில் சென்னை இரண்டாவது தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) முன்பு நடைபெற்ற சமரச பேச்சு வார்த்தைகளில் ஒரு உடன்பாடு ஏற்பட வாய்ப்பில்லாத நிலையில் அவர் 15-2-1983 அன்று தனது சமரச முறிவு அறிக்கையை அரசுக்கு அனுப்பினார். அவ்வறிக்கையினை அரசு பரிசீலித்து தனது 11-3-1983 நாளைய 663 எண்ணுள்ள ஆணையில் கீழ்க்கண்ட 13 கோரிக்கைகளை சென்னை தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அனுப்பியுள்ளது :—

1. அகவிலைப்படி.
2. ஊதியவிகிதங்கள் மாற்றம், கிரேடுகள் நிர்ணயித்தல்.
3. சலவைப்படி.
4. இரவுநேரப்பணிபடி.
5. வீட்டு வாடகைப்படி.
6. மருத்துவப்படி.
7. தற்செயல் விடுப்பு.
8. மருத்துவ விடுப்பு.
9. தகுதிகாண் பருவத் தொழிலாளர்கட்கு ஊதிய விகிதம் முதலிய சலுகைகள்.
10. முட்டையும் பாலும் வழங்குதல்.
11. ப்ளும் அலவன்ஸ்.
12. வெப்பப்படி.
13. வேலைப்பளு சீரமைத்தல் வேலைக்குத் தக்கபடி தொழிலாளர் எண்ணிக்கை நிர்ணயித்தல் மற்றும் உற்பத்தி அளவு நிர்ணயித்தலும்.

இத்தொழிற்தகராறில் அரசு ஆணை பிறப்பித்துள்ளதை முன்னிட்டு கதவடைப்பை விலக்கிக்கொள்ளுமாறு நிர்வாகத்திற்கு சென்னை இரண்டாவது தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) அறிவுரைகள் வழங்கியுள்ளார். இதைத் தொடர்ந்து நிர்வாகம் 18-3-1983 தேதிய அறிவிப்பின் மூலம் 21-3-1983 முதல் கதவடைப்பை நீக்கியதாக தெரிவித்துள்ளது. ஆனால், தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை. வேலை நிறுத்தம் தொடர்கிறது. எனினும் நிலைமையைத் தொழிலாளர் நலத்துறை கவனித்து வருகிறது.





**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையின் அடிப்படையிலே பார்த்தால் கூட, அந்த மேனேஜ்மெண்ட் பொறுத்தவரையில் ஏற்கனவே பழைய ஒப்பந்தம் காலாவதியாகி, மீண்டும் பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றபொழுது, இருக்கின்ற முறையை மாற்றுகின்ற முறையிலே ஒரு பகுதியை காண்ட்ரேக்ட் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு நிர்வாகம் செய்வது சரியில்லை என்று சொல்லி, இன்று அந்தக் கம்பெனி எந்தவிதமான நோட்டீசும் இல்லாமல் லாக்-அவுட் செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு தொழிற்சங்கம் முறையாக வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. வேலைக்கு அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள் அப்படிப் போனவர்களை வேலைக்குஉள்ளே விடமுடியாது என்று சொல்லி, கதவடைப்பு செய்ததை ஊர்ஜிதம் செய்கின்ற முறையிலே அவர்கள்தான் மறுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையிலே அரசாங்கம் அந்தக் கோரிக்கைகளை லேபர் கோர்ட்டுக்கு, டிரிப்யூனலுக்கு அனுப்பி இருக்கிறது. அப்படி அனுப்பிய அந்த ரெபரன்சிலே சட்டவிரோதமான லாக்-அவுட்டா இல்லையா............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது கவன ஈர்ப்புத் தீர்மானம். கேள்வி வடிவத்திலே கேட்க வேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுவதுபோல் பேசக்கூடாது. தொழிலாளர்கள் பிரச்னை என்றால் இப்படித்தான் வரும். இருந்தாலும் குறைத்துக்கொண்டு கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** அந்த ரெபரன்சிலே சட்டவிரோதமான முறையிலே உள்ள லாக்-அவுட்டா இல்லையா என்றும், அப்படி சட்டவிரோதமான முறையிலே போடப்பட்டிருக்கின்ற லாக்-அவுட்டுக்கு சம்பளம் உண்டா இல்லையா என்பதைப் பற்றிகூட அந்த ரெபரன்சிலே சொல்லப்படவில்லை. அது சரியில்லை. ஆகவே சட்டவிரோதமான முறையில் லாக்-அவுட் செய்யப்பட்ட அந்தக் காலங்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது? அப்படி வழங்குவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமரசப் பேச்சுவார்த்தை முடிந்தபிறகு 13 பிரச்னைகள் தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இத் தொழில் தகராறில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கதவடைப்பை விலக்கிக்கொள்ளுமாறு நிர்வாகத்திற்கு சென்னை இரண்டாவது தொழிலாளர் துறை உதவி ஆணையாளர்

அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார். இதைத் தொடர்ந்து நிர்வாகம் 18—3—1983 ஆம் தேதி அறிவிப்பின் மூலம் 21—3—1983 முதல் கதவடைப்பு நீக்கியதாக அறிவித்துள்ளது. ஆனால் தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பவில்லை. வேலைநிறுத்தம் தொடர்கிறது. எந்த எந்தப் பிரச்னைகளை தொழில் நீதிமன்றங்களுக்கு அனுப்பவேண்டும், எது முக்கியம் என்று அரசு கருதியதோ, அவைகளை எல்லாம் அனுப்பியிருக்கிறது. சில பிரச்னைகளை அனுப்பவில்லை. இதுதான் இன்றைய நிலை.

## 5. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 210-வது விதியின் கீழ் 1983–84 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 222-வது விதியின் கீழ் 1983–84 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



### (இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 235-வது விதியின் கீழ் 1983–84 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

## 6. அறிவிப்பு

மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக்குழு, பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் மதிப்பீட்டுக் குழு (Estimate Committee) பொதுக் கணக்கு குழு (Public Accounts Committee) மற்றும் பொது நிறுவனங்கள் குழு( Public Undertakings committe) ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர் வேட்புத்தாளை 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் சட்டப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். வேட்புத்தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத்தாள்கள் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 8 ஆம் தேதி, வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9 ஆம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களுக்கு மேற்படுமாயின், 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 11 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் பகல் 1.00 மணிக்கும் இடையில் சென்னை கோட்டையில் இருக்கும் சட்டமன்ற குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(முற்பகல் 10-40)

## 7. தகவல் கோரல்

**வெளியில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அவையில் விவாதிப்பது.**

[1983 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் ஏதேனும் ஆதாரங்கள் தர விரும்பினால், அதை என்னுடைய அறையில் வந்து கொடுங்கள். அதைத்தவிர வேறு ஏதேனும் சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே முத்துத்தேவன்பட்டியில் அவர்களுக்கு பினாமி நிலம் இல்லை என்று ஆதாரம் இருப்பதாகச் சொல்லி உங்களிடத்தில் கொடுத்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுகுறித்து உங்களிடத்தில் ஆதாரம் இருந்தால் கொண்டு வந்து கொடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஆதாரம் கொடுத்திருக்கிறார்களா என்று நான்கூட முன்பே கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அதைக் கேட்டீர்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவர் என்ன சொல்கிறார் என்று தெரியாமல், அந்தப் பிரச்னைக்கு நான் எப்படி பதில் சொல்லமுடியும்? அந்தப் பிரச்னையை இங்கே கிளப்ப வேண்டாம். என்னுடைய அறையில் வந்து அதைப்பற்றிய ஆதாரங்களைக் கொடுங்கள். அதைப் பற்றி இங்கே பேசவேண்டும் என்று விரும்பினால், அலுவல் ஆய்வுக்குழு கூடியபிறகு, அதைப் பற்றி விவாதித்த பிறகு இங்கே பேசலாம். இப்போது புதிய பிரச்னை எதுவும் பேசுவது கூடாது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அந்தப் பிரச்னைபற்றி இல்லை. வேறு ஒரு பிரச்னை எழுப்ப விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தப் பிரச்னையைத் தவிர வேறு பிரச்னை என்று சொன்னால், அது பற்றி என்னிடத்தில் கலந்து பேசிய பிறகுதான் அல்லது அறிவிப்பு கொடுத்தபின் தான் இங்கே எழுப்ப முடியும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே நான்கு தினங்களுக்கு முன்பு நான் அவையில் இல்லாத நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். அதைத் தாங்கள் அனுமதித்து இருக்கிறீர்கள்.



1983 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கு நீங்கள் வந்தவுடன் பதில் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் பதில் சொல்லவேண்டும் என்று கேட்டவுடனே அதையும் நான் அனுமதித்து இருக்கிறேன். அவர்கள் கேட்டதையும் அனுமதித்தேன். நீங்கள் சொன்னதையும் அனுமதித்தேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஆதாரத்தை நான் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். தவணை கேட்பது முறைதானா என்று கேட்டார்கள். நீங்கள் கூட அவையில் சொன்னதாக 'முரசொலி' பத்திரிகையில் போடப்பட்டு இருக்கிறது. ''தவணை கேட்பது முறையல்ல'' என்று சொன்னதாக பெரிய கொட்டை எழுத்துக்களில் போடப்பட்டு இருக்கிறது. அன்று எதிர்க் கட்சித் தலைவர் இல்லாத நேரத்தில் நான் இங்கே வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது, அந்தச் சம்பவம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் இங்கே பேசினார் என்று தெரிந்தவுடனே நான் எனக்குத் தெரிந்த பதிலைக் கூறினேன். அந்த நேரத்தில் கூட, நான் கேட்ட நேரத்தில் அப்படிக்கேட்கவில்லை, எதிர்க் கட்சித் தலைவர் கேட்கவில்லை என்று சொன்னீர்கள். ஆனால் 'முரசொலி' பத்திரிகையில் தவறாக வெளியிடப்பட்டு இருக்கிறது. 'தவணை கேட்பது முறையல்ல' என்று அவைத் தலைவர் குறிப்பிட்டதாக கொட்டை எழுத்துக்களில் போடப்பட்டுள்ளது.

இன்னொன்று, இதே அவையில் எதிர்க் கட்சித் தலைவர், அவர்கள் 12—3—1983 அன்றும், 15—3—1983 அன்றும் என் மீது சில குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அவர் மீது நான் என்ன குற்றச்சாட்டுகளைச் சொன்னேனோ அதற்குத் தகுந்த ஆதாரங்களை நான் கொண்டு வந்து உங்களிடத்தில் கொடுக்கப் போகிறேன். ஆனால் என் மீது சில குற்றச்சாட்டுகளை அவர்கள் சொன்னார்கள். பினாமி சொத்துக்கள் என்று சொன்னால், திருவண்ணாமலைக்குப் போகவேண்டும், பொள்ளாச்சிக்குப் போகவேண்டும், உடுமலைப்பேட்டைக்குப் போகவேண்டும் என்று சொன்னார்கள். நான் உங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு என்ன ஆதாரத்தை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதுவரையிலும் தங்களிடத்திலே கொடுத்து இருக்கிறார்கள் என்பதை உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன். இன்னும் எத்தனையோ பினாமி சொத்துக்களை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வாங்கியிருக்கிறார்கள் என்பதை நான் ஆதாரத்தோடு இங்கே கொடுக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** புதுப் பிரச்னை வேண்டாம். நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அன்றைக்கு திரு என். எஸ். வி. சித்தன் அவர்கள் கூட கேட்டார்கள். சபையிலே ஒரு உறுப்பினர் குற்றச்சாட்டைச் சொல்கிறபோது, அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் கொடுப்பது முறையாக இருந்து வருகிறது. எதிர்க்கட்சியினர் திடீரென்று ஆளும் கட்சியினர்

மீது குற்றச்சாட்டு சொல்கிறார்கள் என்றால், அவர்களிடத்திலும் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கும் கடமை எனக்கு இருக்கிறது. ஆகவே, அப்படி ஆதாரத்தை நான் கேட்டு, அந்த ஆதாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னரே குற்றச்சாட்டு சொல்ல முடியும். ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டு சொல்ல அனுமதிப்பது மரபும் அல்ல. (குறுக்கீடு) அந்த வகையிலே தவணை தருவதற்கும் வழியும் இல்லை, வகையும் இல்லை. தவணை தருவது என்று வந்து விட்டால் ஒருவர் மீது யார் வேண்டுமானாலும் எந்தக் குற்றச்சாட்டை வேண்டுமானாலும் சொல்லலாம், அப்படிச் சொல்லிவிட்டு 4—5 நாட்கள் பொறுத்து ஆதாரம் தருவது என்று வந்தால், அதுவரையில் அந்தக் குற்றச்சாட்டு பொதுமக்கள் மத்தியில் பரவி, அந்தக் குற்றம் சாட்டப்பட்டவரின் மீது தவறான எண்ணம், அல்லது அவரின் மதிப்பு மரியாதை குறைவது ஆகிய ஏதாவது ஒன்று ஏற்படக்கூடும். அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்துவது சட்ட மன்றத்திலும் மரபு அல்ல. பாராளுமன்றத்திலும் மரபு இல்லை. ஆகவே, மரபு இல்லை என்று சொன்னேன். அது உண்மைதான்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, நான் இந்தப் பிரச்சினையை நீட்டிக்க விரும்பவில்லை. நான் அலுவல் ஆய்வுக் குழுவிலே ஆதாரங்களைக் கொடுக்க இருக்கிறேன். இங்கே சட்ட விதிமுறைகள் இருக்கின்றன. இந்த அவைக்கு என்று தெளிவாக, தனியாக சட்டவிதிகள் இருக்கின்றன. ஆனால் இதிலே ஏதோ புதுப் பிரச்சினையை இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் இந்த மன்றத்தில் இருக்கிறவர்கள்—ஒரு சவாலை ஒருவர் விடும்போது அதற்கு மறு சவாலாக இருப்பது சாதாரணமாக இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். நான் சட்ட விதிமுறைகள் பற்றி சில கேள்விகள் கேட்டிருந்தேன். ஆனால் இதுவரையில் சட்டப் பேரவையிலிருந்து எனக்கு பதில் கிடைக்கவில்லை.

நான் கொடுக்க இருக்கின்ற ஆதாரங்களை வைத்துக்கொண்டு பேரவைத் தலைவரவர்கள் 256, 257, 258-வது விதியின்கீழ் என்ன முடிவு செய்யலாம் என்று நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் கட்டாயப்படுத்தி ஆதாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற சம்பிரதாயம் இந்த அவையிலே கொண்டுவரப்படுவது சரியாக இருக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். இது வெளியே பேசப்பட்டது. நான் கொண்டு வரவில்லை. அன்றைக்கு இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. அன்பழகன் அவர்கள் இந்தப் பிரச்சனையைப் பற்றிப் பேசினார்கள். அதன் பின்னால், திரு. துரைமுருகன் அதற்கு தூபம் போட்டார்கள். அதன் பிறகுதான் இந்தப் பிரச்சினை எழுந்தது. வெளியே பேசப்பட்ட ஒரு பிரச்சினைக்கு இங்கே தீர்வு காண முயல்வது சட்டச் சிக்கல்களை ஏற்படுத்ாதா என்பதை தாங்கள் எண்ணிப்பார்த்து, இந்தக் கருத்தை நீங்கள் ஆழமாக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



எதிர்க்கட்சித் தலைவர் ஆதாரம் கேட்டார். நான் கொடுக்கிறேன் என்று சொன்னேன். இந்த அவையிலே நான் ஒரு உறுப்பினர். நான் அமைச்சராக இருந்தாலும் இந்த அவையிலே ஒரு உறுப்பினருக்குள்ள உரிமைதான் எனக்கும் உண்டு. இங்கே பேசப்பட்ட பிரச்சினையாக இருந்தால், ஆதாரம் கேட்டால் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவது சரியாக இருக்கும். ஆனால் வெளியே பேசப்பட்ட ஒரு பிரச்சினைக்கு இங்கே தீர்வு காண வேண்டுமென்பதை தாங்கள் மறு ஆய்வு செய்ய வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே 15—3—1983 அன்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி முரசொலி பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதற்கு என்ன ஆதாரத்தை இதுவரையில் எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்திருக்கிறார்கள்? நான் சொன்ன குற்றச்சாட்டோடு எதிர்க்கட்சித் தலைவர் நிறுத்திக் கொண்டிருந்தால் உண்மையிலே நான் தகுந்த ஆதாரங்களைக் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் அவர்கள் கவுண்டராக என்மீது வேறுசில குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றுக்கு என்ன ஆதாரங்களை இதுவரையில் கொடுத்திருக்கிறார்கள்? நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அதைப் போன்று அவர்கள் ஒரு தவறான பிரச்சினையை அவையில் சொன்னது பல்வேறு பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டுமா? எதிர்க்கட்சித் தலைவர் மீது நான் சொன்ன குற்றச்சாட்டுக்கு ஆதாரம் தர இருக்கிறேன். அதைப் போன்று இந்த அவையிலே, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருவண்ணாமலை போன்ற இடங்களில் என்மீது பினாமி சொத்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையும் இங்கே வந்திருக்கிறது. அதையும் விசாரிக்க வேண்டும். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு ஆதாரம் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, 12-ந் தேதி இந்த அவையில் நடைபெற்ற உரையாடல்கள், அது சம்பந்தமாக அவையினுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இறுதியாக தெரிவித்தது, அவை முன்னவர் நாவலர் அவர்கள் எழுந்து பேசியது அனைத்துமே அவை நடவடிக்கைக் குறிப்பில் பதிவாகி, அந்தக் குறிப்பு அலுவல் ஆய்வுக் குழுவில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் தரப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பைப் படித்துப் பார்க்கின்ற யாரும் நான் குறிப்பிட்ட எந்த ஒரு அமைச்சர் மீதோ உறுப்பினர் மீதோ அவர்களுக்கு பினாமியாக இந்த இந்த இடங்களில் நிலம் இருக்கிறது என்று சொன்னதாக நிச்சயமாக கருத முடியாது. அப்படிச் சொல்லாமல் இருக்கும்போது நான் ஒரு குற்றச்சாட்டை யார் மீதோ சொன்னதாக இங்கே அமைச்சர் அவர்கள் கூறுவது பொருத்தமுடையதல்ல. அன்று நண்பர் துரைமுருகன் அவர்கள் அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் வெளியிலே பேசிய ஒரு கருத்தை

இங்கே எடுத்துச் சொன்னபோதே அமைச்சர் அவர்கள் தெரிவித் திருக்கலாம். அது வெளியே அவர்கள் பேசியது. அதற்கு வெளியே விவாதித்திருக்கலாம் என்று சொல்லியிருந்தால் நான் எழுந்து பேசவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டிருக்காது. அதற்கு மாறாக அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், கேள்வி கேட்ட துரைமுருகன் அவர்களை விட்டுவிட்டு, இந்தப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் இங்கே அமர்ந்திருக்கிறார், அவர் எழுந்து சொல்லட்டும் என்று அவர்கள் சொன்ன பிறகுதான் நான் எழுந்தேன். அதுவும் 12-ந் தேதி இந்த சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்பில் பதிவாகி இருக்கிறது. நான் குறிப்பிட்டதை அனைத்துக் கட்சித் தலைவர் களும் நிச்சயமாக அறிந்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பிலும் அப்படித்தான் இருக்கிறது.

(முற்பகல் 10—50)

பிறகுதான் நான் எழுந்து சொன்னேன். முத்துத்தேவன்பட்டி யில் என்னுடைய பெயராலோ, என்னுடைய மகன் மு. க. அழகிரியினுடைய பெயராலோ 100 ஏக்கர் நிலம் இருப்பதாகச் சொல்வது தவறு. எந்த நிலமும் நான் அங்கே வாங்கவில்லை. என்னுடைய மகனின் பெயராலும் வாங்கவில்லை என்று சொன் னேன். அதன் தொடர்பாக அவர்கள் பேசும்போது, பினாமி பற்றி எல்லாம் விசாரிக்கலாம் என்று அவர் சொன்னபோது தான் நான் சொன்னேன். பினாமி பற்றி பேசுவது என்றால், அதற்கென தனியாக ஒரு நீதி விசாரணையைக் கூட நியமிக்க லாம். அப்போது இந்த அவையிலே யார் யாருக்கு பினாமி நிலம் இருக்கிறது, பினாமி சொத்து இருக்கிறது என்று பேசலாம் என்கிற கருத்திலேதான், மொத்தமாகப் பார்க்கலாம் என்று சொன்னேனே தவிர (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது நான் பேசாமல் இருந்தேன் அல்லவா, நான் பேசும்போதும் நீங்கள் குறுக்கிட வேண்டாம், தவறு இருந்தால் பின்னால் நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். யாரையும் குறிப்பிட்டு இன்னார் பினாமி நிலம் வைத்திருக்கிறார்கள் அல்லது பினாமி சொத்து வைத்திருக்கிறார்கள் என்று எந்த ஒரு அமைச்சரையோ அல்லது உறுப்பினரையோ குறித்து நான் அன்றைக்கு நிச்சய மாகக் கூறவில்லை.

வேண்டுமென்றே இப்போது அதை இட்டுக்கட்டி சொல்வது தவறாகும். நான் பேசும்போது கேட்டேன். வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்லுங்கள் நிரூபிக்க முடியுமா என்று கேட்டேன். முத்துத்தேவன்பட்டியில் 100 ஏக்கர் நிலம் கருணாநிதியின் பெயராலோ அல்லது கருணாநிதியின் மகன் மு. க. அழகிரியின் பெயராலோ இருக்கிறது என்பதை நிரூபிக்க முடியுமா என்று கேட்டேன். அவர் பேசும்போது, அடிப்படையிலேயே பினாமி என்ற இடைச்செருகல் வந்தது. தேனிக்கு அருகிலே,



உள்ள முத்துத்தேவன்பட்டியிலே, அங்கே, கருணாநிதியின் பெயரால் அல்லது மு.க. அழகிரியின் பெயரால் 100 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னதன் பேரிலேதான் விவாதம் நடைபெற்றிருக்கிறதே தவிர, வேறு அல்ல.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பிரச்சினையை திசை திருப்புகிறார்கள். ஏனென்றால், அன்று 12—3—1983 ஆம் தேதியன்று அவர் பேசினார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரம் இருந்தால் என் னுடைய கையிலே கொடுங்கள். அதையும் அறையிலே கொண்டு வந்து கொடுங்கள். நான் இதையேதான் மீண்டும் மீண்டும் தெரிவிக்கிறேன். (குறுக்கீடு).

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். கடந்த 2, 3 நாட்களுக்கு முன்பு நான் இந்த அவையிலே கேள்வி நேரம் முடிந்து, நீங்கள் இன்னொரு சப்ஜெக்ட்டை எடுப்பதற்கு முன்பு இங்கே கேட்கிற மரபின் படி நான் எழுந்து கேட்டேன். அன்றைக்கும் சரி, இன்றைக் கும் சரி அமைச்சர் அவர்கள் கேள்வி நேரம் முடிந்து நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்கு போனபிறகு இப்படிக் குறுக்கிட்டு எழுப்பு கிறாரே, இந்த அவையிலே அதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா அதை நாங்களும் பிறகு தொடரலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத்தான் ஏற் கெனவே சொன்னேன், அது பற்றி அறையிலே கொண்டு வந்து கொடுங்கள். பின்னாடி இந்தப் பிரச்சினையை வைத்துக் கொள்ளலாம், என்று (குறுக்கீடு) ஆதாரங்கள் இருந்தால் கொண்டு வந்து கொடுங்கள். பின்னாடி இந்த விவாதத்தை வைத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) அவையிலே அதை விவாதிப்பது நல்லது அல்ல.

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினேன். அவையில் கேள்வி நேரம் முடிந்த பிறகு ஜீரோ அவர் என்று ஒன்று வைத்திருக் கிறோம். அந்த நேரத்திலேதான் இப்படிப்பட்ட பிரச்சனை களை எழுப்புவார்கள். ஆனால், இந்த நேரத்திலே குறுக்கிட்டு இப்படிப்பட்ட பிரச்சினையை எழுப்புவதை அவைத் தலைவர் அனுமதிக்கிறாரா என்று தெரிந்து கொண்டால், எதிர்காலத் தில் கடைப்பிடிக்க எங்களுக்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருக்கிற விதிகளின் படி கேள்வி நேரம் முடிந்த பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பு வதுதான் முறை. இப்போது புது புது முறைகளாக நடந்துக் கொண்டிருக்கிறது. இதுவும் அப்படிப்பட்ட ஒரு புதுப்பிரச்னை

தான். ஆகவே, ஜீரோ அவர் முடிந்த பிறகு இப்படிப் பேசுவது நல்லது அல்ல. பாயின்ட் ஆப் ஆர்டர்களை எல்லாம் அடிக்கடி எழுப்புவதே நல்லது அல்ல, முறையானதும் அல்ல, மரபும் அல்ல. (குறுக்கீடு). மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தங்களுடைய ஆதாரத்தை என்னிடத்திலே அறையிலே வந்து கொடுக்குமாறு கோருகிறேன். அது குறித்து பிறகு பேசிக் கொள்ளலாம். அதை இங்கேயே கொடுக்க வேண்டாம். அப்படிக் கொடுப்பதால் அதன் மீது விவாதம் தொடர்ந்து வரும். ஆகவே, நீங்கள் அறைக்கு வாருங்கள். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நாம் பேசலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சிகள் மற்றவை எல்லாம் அவையின் நடவடிக்கைக் குறிப்பேடுகளில், நிகழ்ச்சிகளில் இருக்கின்றன. அந்த அடிப்படையிலே, இங்கே இருக்கிற தன்மையின் அடிப்படையிலே அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்தோ அல்லது இருவரையும் தாங்கள் தனியாக அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியோ தீர்ப்பு அளிக்க வேண்டுமே தவிர, இந்த அவையிலே வைத்து எந்த முடிவுக்கும் வரமுடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கூறுகின்ற அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே, அதை தலைவருடைய அறையிலே விவாதித்து, தக்க முடிவு எடுப்பதுதான் முறையாக இருக்கும். இங்கேயே விவாதத்தை வைத்துக் கொண்டு போவது சரியாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இதிலே முடிவெடுக்க இயலாது. அலுவல் ஆய்வுக் குழுவினைக் கூட்டி விவாதிக்கலாம் என்று சொன்னேன். அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவினைத் தான் நான் தெரிவிக்க முடியும். இதிலே மிக ஜாக்கிரதையாகவே நான் சொல்லி இருக்கிறேன். ஆகவே இதனை அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்துக் கொள்ளலாம். அங்கே இரண்டு பேரும் வாருங்கள் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப் பிரச்சினையை எழுப்பியதிலிருந்து எல்லாவற்றையும் நீக்கி விடலாம் என்றாலும் நான் ஒத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட உறுப்பினர் என்ற முறையில் குற்றச்சாட்டு சொன்னார்கள். இப்போது அமைச்சர் என்ற முறையில் எழுந்து பேசுகிறார்கள். அவர்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு) அவர்களுக்கு இரண்டு பொறுப்புக்களும் இருக்கின்றன. எனவே அதை மறந்துவிடமுடியாது. எனவே அலுவல் ஆய்வுக் குழுவிற்கு அவர்கள் வந்து எல்லாவற்றையும் பேச வேண்டும், அங்கே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே சட்டமன்றக் குறிப்புகள் (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொல்லி..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வந்தபிறகு அங்கே எடுக்கப்பட்ட முடிவுகளைப் பற்றி வேண்டுமானால் இங்கே பேசலாம். அவர்களே 4-ஆம் தேதி ஆதாரத்தைத் தருவதாகச் சொன்னார்கள். அப்படித் தந்தால் நான் எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னேன். அத்தோடு பிரச்சினை முடிந்துவிடுகிறது. உள்ளாட்சித்துறை அமைச்சரிடம் எந்த விளக்கத்தையும் நான் கேட்கவில்லை. திரு ரகுமான்கான் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது கூட நான் அவர்களுக்கு அனுமதி தரவில்லை.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அனுமதிக்கவில்லை என்று சொன்னாலும் அது அவைக் குறிப்பிலே இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் அனுமதிக்கவே இல்லை. அந்த பாயின்ட் ஆப் ஆர்டரை நான் அனுமதிக்கவில்லை. உள்ளாட்சித்துறை அமைச்சரை நான் அனுமதித்ததற்குக் காரணம் அவர்கள் அமைச்சராக இருந்ததால்தான். அவர்கள் இப்பிரச்சினையை எழுப்பியதால்தான் அதை விளக்க வேண்டிய துர்பாக்கியமான நிலைமை எனக்கு ஏற்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் அன்றைக்கு பினாமி நிலம் இருப்பதாக நான் சொன்னேன். உடனே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பினாமி என்று சொன்னால் உடுமலைப் பேட்டைக்குப் போகவேண்டும், திருவண்ணாமலைக்குப் போக வேண்டும், பொள்ளாச்சிக்குப் போக வேண்டும் என்று சொன்னார். ஆனால் இப்போது சொல்கிறார் நான் எந்த அமைச்சரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரும்பவும் இந்த விவாதத்திற்குள்ளே போக வேண்டாம். அப்படிப் பேசினால் பூரா வையும் எடுத்துப் பேசியாகவேண்டிய நிலைமை ஏற்படும். ஆனால் இன்றைக்கு நீதி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை யில் பேசவேண்டி இருக்கின்றது. ஆகவே இந்த விவாதத்திற் குள்ளே போக வேண்டாம். வேண்டுமானால் ஒன்று செய்யலாம். இந்தப் பிரச்சினையை கிளப்பியதிலிருந்து இதுவரைக்கும் உள்ள வற்றை இரண்டுபேரையும் கேட்டுக் கொண்டு அவைக் குறிப் பிலே இருந்து எடுத்து விடலாம். வேறு ஒன்றும் செய்ய இய லாது. அலுவல் ஆய்வுக் குழுவினைக் கூட்டி அங்கே எடுக்கப்பட்ட முடிவைத்தான் நான் அனுமதிக்கப் போகிறேன். இதிலே என் னுடைய தனிப்பட்ட முடிவை அறிவிக்க இயலாது. அதன்படி ஒத்துக்கொண்டுதான் நீங்கள் இன்றைக்கு ஆதாரத்தைத் தருவ தாகச் சொன்னீர்கள். நீங்கள் என்றைக்கு ஆதாரத்தைத் தருவ தாகச் சொன்னீர்கள் என்று சொன்னதையும் சபைக்குச் சொல்லி விட்டேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். அந்த ஆதாரத்தைக் கொடுக்க இருக்கிறேன். ஆதாரம் கையிலே இருக்கிறது. ஆனால் நான் கேட்பது என்னவென்றால் இப்போது 100 ஏக்கர் என்று சொல்கிறார். 100 ஏக்கர் என்று சொன்னது வெளியிலே பேசப்பட்டதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து பிரச்சினைக்குள்ளே போகவேண்டாம். ஆரம்பத்திலே இருந்து இதுவரையில், நான் பேசியது வரையில் எல்லாவற்றையும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்குவதுதான் நல்லது.

மாண்புமிகு திரு ப குழந்தைவேலு : தலைவர் அவர்களே; நான் சொல்வது என்னவென்றால் 100 ஏக்கர் பினாமி நிலம் என்றால் 100 ஏக்கருக்கு ஆதாரத்தை கொடுத்திருக்கிறாரா? இது நம்பர் ஒன்று. இரண்டாவதாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சருக்குச் சொல்கிறேன். நீங்கள்தான் அவருக்கு 100 ஏக்கர் இருப்பதாகச் சொன்னீர்கள். நீங்கள்தான் ஆதாரத்தைக் கொண்டுவந்து காட்ட வேண்டும். அவர் வந்து காட்ட வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அவருக்கு 100 ஏக்கர் பினாமி நிலம் சொத்துக்கள் முத்துத்தேவன் பட்டியிலே இருக்கின்றது என்று வெளியிலே பேசப்பட்டது. நான் இல்லை என்று சொல்லவில்லை. நான் கேட்கிறேன் ; 8 ஏக்கர் 74 சென்டுக்கு ஆதாரத்தைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறேன் என்று சொல்லி, இப்போது 100 ஏக்கர் இருக்கின்றது என்று நிருபிக்க வேண்டும் என்று கேட்கிறார். நான் உங்களைக் கேட்டுக் கொள்வது ; 100 ஏக்கர் என்று சொன்னால் 100 ஏக்கருக்கும் ஆகாரத்தைக் கொடுத்து என் பெயரிலே இல்லை என்று கொடுத்திருக்கிறாரா? கொடுக்க முன்வந்திருக்கிறாரா என்று நான் கேட்கிறேன். என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. (குறுக்கீடு) எதற்கு முதலிலே கொண்டு வந்து எங்கள் அப்பன் குதிருக்குள்ளே இல்லை என்று சொல்லி கொடுக்கிறார்கள்? ஏற்கனவே ஆதாரம் கொடுத்ததே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தான். ஆகவே ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு நிரூபிக்கவேண்டும் என்று சொன்னால் முதலிலே அவர்தான் நிரூபிக்கவேண்டும். ஏன் என்றால் '' ஒனஸ் ஆப் புரூப்'' ....

(முற்பகல் 11–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் முழுமையாகப் பேசுவதற்கு நான் 3 மணி நேரம் உட்காருகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் இருக்கிறார்கள். அங்கே நீங்கள் 2 பேரும் வாதம் செய்யுங்கள். சட்டசபையில் அதற்கு நேரத்தை ஒதுக்கமுடியாது, ஒதுக்குவது முறையும் அல்ல, தேவையும் இல்லாத ஒரு விவாதம் இது. இது தான் என்னுடைய முடிவு.



## 8. வரவு-செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்?

'' மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,12,31,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுத்தக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,12,31,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. கல்லன் : தலைவரவர்களே, நீதிபதிகளின் தனித்தன்மையைக் காக்க போக்குவரத்து வசதிகளை எற்படுத்தித் தருவதை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,12,31,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. ரா. இருஷ்ணன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு நீதிமன்றங்களில் நடுவர்களும், நீதிபதிகளும் நியமிக்கப்படாமலிருப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,12,31,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன்; தலைவரவர்களே, பெருந்துறை துணை நீதிமன்றத்தில் வழக்கு சம்பந்தமாக வருபவர்கள் அமருவதற்காக ஒரு கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,12,31,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும் ''.

[1983 ஏப்ரல் 4

(ஆ) கோரிக்கை எண் 14 சிறைச்சாலைகள்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,11,13,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டு சிறைச்சாலைகளில 10 ஆண்டுகள் இருந்து வந்துள்ள ஆயுட்கால தண்டனை பெற்றுள்ளவர்கள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,11,13,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

**திரு. கே. கல்லன்:** தலைவரவர்களே, கைதிகளை பராமரிப்பதில் நவீன முறையை கையாள்வதைப் பற்றி விவாதிக்க கீழ்க்கண்டவெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்

" மானியக் கொரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,11,13,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும் ."

**திரு. கு. ரமணி :** தலைவரவர்களே, சிறைச்சாலைகளில் உணவு அளவும் தரமும் நல்லமுறையில் இல்லாமலிருப்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,11,13,000இல் ரூ. 100 குறைக்கவேண்டும் ".

**திரு. செ. சிவசாமி :** தலைவரவர்களே, சிறைச்சாலைகளின் நிலைமையை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,11,13,000 இல் ரூ 100 குறைக்கவேண்டும் ".



1983 ஏப்ரல் 4]

**திரு. எஸ். என். இராமசாமி:** தலைவரவர்களே, சிறைச்சாலை கைதிகள் தண்டனை வழங்கப்பட்ட நாட்களுக்கு முன்னால் சிறையிலிருந்த நாட்களையும் சேர்த்து அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை நாட்களுடன் சேர்த்துக்கொள்வது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்.—

" மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,11,13,000 இல்-ரூ 100 குறைக்கவேண்டும் ".

(இ) கோரிக்கை எண்—23 கூட்டுறவு

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

" மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ 10,03,14,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

**திரு. த. வேணுகோபால்:** தலைவரவர்களே, கூட்டுறவு வங்கிகளில் நகைகளின் பேரில் கொடுக்கும் நகைக் கடன் தொகையை அதிகரித்துக் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,03,14,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**திரு கே. எம். தங்கமணி :** தலைவரவர்களே, கூட்டுறவு சட்டத் திருத்தம் அமலாக்கப்பட்ட உடனே அனைத்து கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,03,14,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவரவர்களே, கூட்டுறவுகள் அனைத்திற்கும் உடனடியாக தேர்தல் நடத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

" மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,03,14,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

**திரு. என். ஏ. இராமசாமி :** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,03,14,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

**திரு எஸ். என். இராமசாமி :** தலைவர் அவர்களே சாத்தான்குளம் தொகுதி, பேய்க் குளத்தில் ஒரு கூட்டுறவு வங்கி அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,03,14,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் முன் மொழிந்துள்ள 3 மானியக் கோரிக்கைகளினுடைய அரசு கொள்கைகளையெல்லாம் புத்தகங்களாக அச்சிட்டு ** அவை முன் அவை வைக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றை நான் படித்ததாக ஏற்று அவைக் குறிப்பில் ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் அரிய ஆலோசனைகளைக் கேட்ட பிறகு என்னுடைய விளக்கத்தைக் கூறுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கும் கட்சியின் சார்பிலே இந்த மானியங்களின் மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உயர் நீதிமன்றத்தின் நீதிபதி தமிழ் தெரிந்தவராக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப் பட்டது, ஆனால் இன்றைக்கு தமிழ் தெரியாத நீதிபதி இருக்கிறார், அதை மாற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

சென்னை உயர் நீதி மன்றம் இன்றைக்கும் மெட்ராஸ் ஹைகோர்ட், சென்னை உயர் நீதி மன்றம் என்று தான் இருக்கிறது. ஆனால் கேரளத்தில் கேரள உயர் நீதி மன்றம் என்று அழைக்கப்படுகிறது. சென்னைக்கு தமிழ் நாடு என்று பெயர் வைத்தவர்கள் நாம், ஆகவே இப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் வைக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

---

** 234—309 ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன





சென்னை உயர் நீதி மன்றத்தினுடைய பிராஞ்ச் மதுரைக்கு வரவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இன்னும் அது வருவதாகத் தெரியவில்லை, அமைச்சர் அவர்கள் அந்த முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே சுப்ரீம் கோர்ட்டினுடைய பிராஞ்ச் சென்னைக்கு வர வேண்டுமென்ற முயற்சியிலே அமைச்சர் அவர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீதி மன்றங்களிலே வழக்குகள் குவிந்து கிடக்கின்றன, ஜஸ்டிஸ் டிலேயிட் இஸ் ஜஸ்டிஸ் டினைட். ஆகவே அந்த வழக்குகளை விரைவாக டிஸ்போஸ் செய்வதற்காக பைசல் செய்வதற்காக இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 21 இடங்களில் சென்னை உயர் நீதி மன்ற நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டியவர்கள், ஆனால் 24 இடங்கள் அங்கீகரிக்கப்பட்ட இடங்கள், 21 இடங்களுக்குப் போடப்பட்டிருக்கிறது, மீதி இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ? அரசாங்கத்திற்கும் நீதித் துறைக்கும் ஏதாவது தகராறு இருக்கிறதா ?

இலவச சட்ட உதவி என்பது மிக அவசியம். அண்ணா சொன்னார், சட்டம் என்பது ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் என்பது ஒரு விளக்கு என்று, ஏழைகளுக்கு அந்த வெளிச்சமே கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். ஏழை எளியவர்களுக்கு இலவச சட்ட உதவி கிடைக்கக் கூடிய முறையிலே அரசாங்கம் இதற்கு ஒதுக்கக் கூடிய தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்று, முக்கியமானது, அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். சி.ஆர்.பி.சி. 321-இன்படி அரசாங்கம் நீதிபதியினுடைய அனுமதியுடன் வழக்குகளை வாபஸ் வாங்கலாம். ஒரு சப் இன்ஸ்பெக்டரை ஒரு சட்டமன்ற உறுப்பினர் தகராறு செய்து சப் இன்ஸ்பெக்டர் புகார் கொடுக்கிறார், அந்த வழக்கு ஆளுங்கட்சிக்காரர் மீது என்பதால் அந்த வழக்கை அரசாங்கம் வாபஸ் வாங்க மனுச் செய்கிறது. நீதிபதி சட்டத்தின்படி மறுக்கிறார். ஆளுங் கட்சிக்குச் சாதகமாக என்ன செய்கிறீர்கள் ? வழக்கை அவர் மறுத்தார், சப் இன்ஸ்பெக்டருக்கே அடி உதை என்றால் நீதிபதிக்கு என்ன கிடைக்கும் என்று நியாயம் கேட்கிறார், நியாயமா கேட்கிறாய் என்று சொல்லி அந்த நீதிபதியையே டிரான்ஸ்பர் செய்கிறார்கள். இது எந்த ஊர் நியாயம் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு பிரச்சினையையும் நான் கொண்டுவர விரும்புகிறேன். இலவச சட்ட உதவி பற்றி. ஜீவகன் ஒரு காவல் கைதி. 23-9-1981 அன்று ஒரு வக்கீல் வீட்டிற்குப் போகிறார், ஆனால் போலீசார் 23 ஆம் தேதியே கைது செய்கிறார்கள்,

அவரை. அவரை அடித்து உதைத்து சின்னாபின்னப் படுத்தி சித்திரவதை செய்து 29-9-1981 அன்று அரஸ்ட் செய்ததாக கோர்ட்டிற்குக் கொண்டு போகிறார்கள். நீதிபதி விசாரித்து போலீஸ், அரசியல் சட்டத்திற்கு விரோதமாக பொது விதிக்கு மாறாக குற்றம் சுமத்தியிருக்கிறது என்று கடுமையான குற்றச்சாட்டை போலீஸ்மீது சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக என்ன செய்திருக்கிறீர்கள் ? அந்த போலீஸ் அதிகாரியினுடைய பெயர் கூட இருக்கிறது. சட்டத்தை மீறியவருக்கு பொது விதியை மீறியவருக்கு நீதிக்கு தலை வணங்குவேன் என்று சொல்லக் கூடிய நீங்கள் நீதிமன்றத்தால் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு முதலமைச்சருடைய தங்க மெடல் கொடுத்தீர்கள். ஏன் என்றால் நீதிக்கு தலை வணங்காததற்காக. இது நியாயந்தானா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

இன்னொரு வேடிக்கையான சம்பவம் என்னவென்றால், மருத்துவக் கல்லூரி, 1979 ஆம் ஆண்டு, மார்க் லிஸ்ட் திருத்தப்படுகிறது, இன்னும் சொல்லப் போனால் தேர்வு சம்பந்தமான வழக்கு, அதிலே சில ஆவணங்கள் திருத்தப்படுகின்றன. நீதிபதி குற்றச்சாட்டு சொல்கிறார், அது பொய் சாட்சியம் சொல்வதற்காக அரசாங்கம் செய்கிற முயற்சி என்று சொல்வதோடு உடனே அட்வகேட் ஜெனரல் எழுந்து நாங்கள் அந்த தப்பை செய்யவில்லை, அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி அந்தத் தப்பைச் செய்து விட்டார், என்ன தப்பு என்றால் டேட்டைத் திருத்தி விட்டார், நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள், உங்களை நம்பி கோர்ட் உத்திரவிட்டது. நடவடிக்கை எடுத்தீர்களா ? அந்த அதிகாரி யார், தப்பு செய்தது நீங்களா அல்லது அந்த அதிகாரிகளா? ஆகவே கோர்ட் ரிக்கார்டை திருத்திய குற்றவாளி மீது நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு கோர்ட் தீர்ப்புக்கு தலை வணங்காமல் இருப்பது எப்படி நீதி மன்றத்தை மதிப்பது ஆகும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10.)

அதைப் போல அமைச்சர் அவர்கள் கோபப்பட வேண்டாம். உதாரணத்திற்காக சொல்கிறேன். சேலம் மாவட்டம், முனிச்சாமி செட்டி சுரங்கக் குத்தகை புதுப்பிக்க மனு செய்கிறார். அரசு நிராகரிக்கிறது. கோர்ட்டிற்கு போகிறார். அவருக்கு கொடுக்க வேண்டுமென்று கோர்ட் சொல்லுகிறது. நீதிமன்ற உத்தரவை நீங்கள் மீறுகிறீர்கள். கன்டம்ப்ட் ஆப் கோர்ட் வருகிறது. நீதியை அவமதித்த குற்றம். இந்த அரசாங்கத்திற்கு நீதி மன்றம் அபராதம் விதிக்கிறது. பார்க்கலாம் ஒருவை என்கிறீர்கள். பிறகு கோர்ட்டிலே போய் மன்னிப்பு கேட்கிறீர்கள். மன்னிப்பு கேட்ட பிறகு அரசாங்கத்திற்கு கோர்ட்



அபராதம் விதித்திருக்கிறது. நான் கேட்கிறேன், நீதி மன்றம் போற்றப்பட வேண்டிய ஒன்று ; அரசாங்கமே நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாமல், மக்களுடைய வரிப் பணத்தை, கேவலப்படுகிற விதத்திலே, ஒரு சர்க்காரே அபராதம் கட்டலாமா ? மன்னிப்புக் கேட்கலாமா ? கன்டம்ப்ட் ஆப் கோர்ட் செய்யலாமா? என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முனிச்சாமி செட்டி விவகாரம் சென்ற ஆண்டே எதிர்க்கட்சித் தலைவர் பேசி பதில் சொல்லப்பட்ட விவகாரம். அவர் சொன்னதைப் போல இதற்காக பொதுத் துறை நிறுவனத்தை, பப்ளிக் செக்டார் கார்ப்பரேஷனை நிறுவி, தமிழ் நாடு மினரல்ஸ் கார்ப்பரேஷனுக்கு தான் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்ததற்குப் பின்னாலே, தனியார் யாருக்கும் கொடுப்பதில்லை என்று முடிவு எடுத்தது. அதற்கு பின்னாலே அதன் தொடர்பாக நடைபெற்ற விவகாரம். நான் சொல்ல விரும்புவதெல்லாம், எந்த தனியாருக்கும் உதவி செய்வதற்காக, அரசாங்கம் போய் தண்டனை பணமோ அல்லது அபராதப் பணமோ கட்ட வில்லை. அதற்குப் பதிலாக அரசாங்கத்திற்கு வருமானம் வர வேண்டும் என்பதற்காக, அரசாங்கத்தினுடைய கார்ப்பரேஷனுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, தனியாருடைய லாபத்தைத்தடுக்கவேண்டும் என்பதற்காக அரசு எடுத்த முயற்சிகள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: அவருக்கேதான் புதுப்பிக்கப்பட்டு கொடுத்திருப்பதாகக் கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அதைத்தான் சொன்னேன். இறுதியில் உயர் நீதிமன்றத்தினுடைய உச்ச முடிவை ஏற்றுத்தான் ஆக வேண்டும். நீதிக்குத் தலை வணங்க வேண்டுமென்று அவரே சொல்லியிருக்கிறார்.

திரு. அ. ரகுமான்கான்: முதலில் நீதிக்கு தலை வணங்காத காரணத்தால் தான் அபராதத் தொகை அரசாங்கத்தின் சார்பில் கட்டப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். கீழ்க் கோர்ட்டிலேயிருந்து சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போக வாய்ப்பிருக்கிறது. எனவே அப்பீல் செய்கிறோம். அப்பீலுக்குப் பின்னாலே பைனல் ஸ்டேஜிலே ஒத்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமைப்பாடாகும் ; கட்டாயமாகும்.

திரு. அ. ரகுமான்கான் ; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பரவாயில்லை ; கோர்ட்டினிடத்திலே கூட வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொள்வது நாகரீகம் தான். நான் இல்லையென்று சொல்லவில்லை. அதைத்தான் இந்த விவகாரத்தில் நீங்கள் செய்தீர்கள்.

அடுத்த பிரச்சினை, மத்திய சிறைச்சாலை கொடுமை ; எமர் ஜென்சி பீரியட் ; நீதிபதி இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட் கொடுக்கப்படுகிறது. "பெண்டிங்ஸ்" என்பது பெண்டிங் அல்ல ; அதாவது ரிப்போர்ட்டின் முடிவுகளின் படி தான் நடக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்று அமைச்சர் அவர்கள் சமாதானம் சொல்லலாம். கடமையுணர்ச்சி அற்றவர், பொறுப்பில்லாதவர் என்று மத்திய சிறைச்சாலை அதிகாரி-தனிப்பட்ட யார் மீதும் எனக்கு கோபமில்லை ; நான் அவரை பார்த்தது கூட இல்லை; ஆனால் நியாயம் கேட்கிறேன்— அவருக்கு புரொமோஷன் கொடுக்கிறீர்கள். பதவி உயர்வு கொடுக்கிறீர்கள். குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கிய பிறகு அல்லது அறிக்கை சமர்ப்பித்த பிறகு அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய சர்க்கார் டி.ஐ.ஜி. யாக பதவி உயர்வு கொடுப்பது எந்த விதத்தில் நியாயம்? (**) இன்னொரு சம்பவம்.....

மாண்புமிகு திரு. சி, பொன்னையன்: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த அதிகாரி பற்றிய வழக்கு தற்போது அப்பீலுக்குப் போயிருக்கிற காரணத்தால் subjudice அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): உறுப்பினர் அவர்கள் நீதிமன்றத்தில் பெண்டிங்காக இருக்கிற கேஸ் பற்றி தயவு செய்து பேசவேண்டாம்.

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சரும் வழங்கறிஞர். சப் ஜுடிஸ் என்பதை நானும் அறிவேன். Merits of the case அதற்குள் நான் போகவில்லை. நான் சம்பவத்தைத்தான் சொல்கிறேன்.

* * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்); அந்தச் சம்பவத்தைப் பற்றிப் பேசியது குறிப்பில் வராது. அந்தக் குறிப்புகள் எல்லாம் நீக்கப்படுகின்றன.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு அ. ரகுமான்கான் : Question of Law இல்லை. சம்பவம் அமைச்சரே ஒப்புக் கொள்வார், நான் வழக்குக்குள்ளே புகவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): சம்பவத்தை ஒரு உதாரணமாகப் பேசும்பொழுது உள்ளர்த்தம் இருக்கும், ஆகவே அதைப்பற்றி பேசிய விவகாரம் நீக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு உதாரணம் சொல்கிறேன். 'ரிட்' பத்திரிகைச் சட்டம் சம்பந்தமாக ஹைகோர்ட்டிலே இருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே அந்தப் பத்திரிகைச் சுதந்திரம் பற்றி சட்டமன்றத்திலே பேசுகிறோம். குழுவை நியமித்து அதிகாரிகள் பேசுகிறார்கள். வழக்குக்குள்ளே போகக் கூடாது. பேசுவதே கூடாது என்று சொன்னால் எப்படி? நான் கேசைப் பற்றி பேசவே இல்லை. ** உள்ளே போகவில்லை. அமைச்சர் ஒப்புக்கொள்கிறார்.

நான் இன்னொரு பிரச்சினைக்கு வர விரும்புகிறேன். இன்னொன்றை நம்முடைய மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்த அரசாங்கம் அப்பீல் என்ற பெயராலே மக்களுடைய வரிப்பணத்தை வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஹவுசிங் போர்டு ஊழியர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. தொழிலாளர்களுக்கு விரோதமாக இன்றைக்கு அப்பீலில் போகிறீர்கள். அது நியாயமா என்று கேட்கிறேன்.

திரு பார்த்தசாரதி என்ற ஒருவர்; எம். எஸ். சேருவதற்கு இடம் கேட்கிறார். எல்லா தகுதியும் இருக்கிறது. அவருக்கு இடம் கொடுக்காமல் விட்டு விட்டார்கள். ஒரு இடம் தவிர்த்து விட்டோம். அதிலே இருக்கக்கூடிய தப்புகள் வெளியே தெரிந்து விடக்கூடாது என்ற காரணத்திற்காக, சுப்ரீம் கோர்ட் வரை இழுத்தடித்து விட்டார்கள். கடைசியாக ஹைகோர்ட் அவருக்கு சாதகமாகத் தீர்ப்பளித்து விட்டது. பெஞ்ச் அவருக்கு சாதகமாக தீர்ப்பளித்துவிட்டது. சுப்ரீம் கோர்ட் அவருக்குச் சாதகமாக தீர்ப்பளித்து விட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற அப்பீல்கள் நியாயமானதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்துக்குச் சென்று தீர்ப்பாகிவிட்ட காரணத்தால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். The Judiciary cannot step into the shoes of the Executive. என்பதைத் தெளிவாக்க வேண்டுமென்ற முறையிலேதான் அந்த அப்பீலுக்குச் செல்லப் பட்டது.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை குறித்து, மருத்துவக் கல்லூரியில் திரு பார்த்தசாரதி அவர்களுக்கு இடம் கொடுப்பதிலே தகுதிகள் எல்லாம் இருந்தும் தரப்படவில்லை யென்று சட்டமன்றத்திலே எல்லாவிதத்திலும் எடுத்துச் சொல்லியும்கூட அதை ஒரு மானப் பிரச்சினையாக எடுத்து, செய்து விட்ட தப்பை நியாயப்படுத்துவதற்காக, சம்பந்தப்பட்ட அமைச்சர் சென்றார் என்பதைத்தான் சொல்கிறேனே தவிர, குறிப்பாக, சட்ட இலாகா என்ற முறையில், கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி என்ற முறையில் அந்த அமைச்சருக்காக நீங்கள் பேசுவது என்பது எனக்குத் தெரியும். ஆனால் நிலைமை இதுதான்.

மாற்றுத் தலைவர் அவர்களே, இன்னொரு பிரச்சினையையும் நான் இங்கே கொண்டுவர விரும்புகிறேன். 433-ஏ மிக முக்கியமான பிரச்னை, அதாவது சிறைச்சாலைகளில் 17 வருடம் ஆயுள் கைதிகள் இருக்கிறார்கள். 12 வருஷம், 10 வருஷம் ஆயுள் கைதிகள் இருக்கிறார்கள். என்னிடத்திலே பட்டியல் எல்லாம் இருக்கிறது. அவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று நாங்கள் நீண்டகாலமாக வலியுறுத்தினாலும், அமைச்சர் போன கூட்டத் தொடரிலே சொன்னார்கள், மத்திய சர்க்கார் கிரிமினல் புரொசீஜர் கோடுக்கு ஒரு திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். 433-ஏ க்கு என்று. அதன்படி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் விடுதலை பெறுவதற்குக் குறைந்தபட்சம் 16 வருஷமாவது இருந்திருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். மாநில சுயாட்சி பற்றி இங்கே நாம் பேசுகிறோம். அரசாங்கமே பார்த்து 10 ஆண்டுகளில் போர்டு வைத்து அவர்களை வெளியே விடுவதற்கான அதிகாரம் பெற்றிருந்தது. அந்த அதிகாரத்தை மைய அரசு இப்போது எடுத்துக் கொண்டது. அது கண்டனத்துக்குரியது. அதை நாங்கள் எங்கள் கட்சியின் சார்பாகக் கண்டிக்கின்றோம். ஆனால், அதே நேரத்தில் மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல பேர்கள் 10 ஆண்டு, 12 ஆண்டு, 13 ஆண்டு என்று இருந்தும், 16 ஆண்டுகள் வேண்டுமென்று சொல்கிறீர்களே, என்னிடத்திலே ஒரு பட்டியலே இருக்கிறது. வேலூர் சிறையில் 6 ஆண்டுகள் ஒருவர் ஆயுள் கைதியாக இருந்திருக்கிறார். உங்களுக்கு வேண்டியவர்; உங்கள் கட்சிக்காரர், நான் விடுதலை செய்தது தப்பு என்றுகூடச் சொல்லவில்லை, ஆனால், 16 வருஷகாலம் இருக்க வேண்டும் என்று மற்றவர்களுக்கு



நியாயம் பேசுகிறீர்களே, 6 ஆண்டுகள் தான் ஆயுள் கைதியாக இருந்திருக்கக் கூடியவரை விடுதலை செய்திருக்கிறீர்களே, பெயர் வேண்டுமென்றால் சொல்கிறேன். என்ன நியாயம்? உங்களுக்கு வேண்டியவர், ஆளுங்கட்சிக்காரர். இன்னொருவர்—பெயர் கூட நான் சொல்ல விரும்புகிறேன்; 9 ஆண்டுகள் சிறையிலே இருந்திருக்கிறார். அவரை விடுதலை செய்திருக்கிறீர்கள். பாலதாண்டன் என்பது ஒருவருடைய பெயர்; இன்னொருவருடைய பெயர் சேகர். பரோலிலே வந்திருக்கிறார். பலமுறை தப்பு செய்திருக்கிறார். அட்வைசரி போர்டு விடக்கூடாது என்று சொல்லியிருக்கிறது. போலீசார் வேறு சொல்லியிருக்கிறார்கள். இருந்தும், ஆளும் கட்சியைச் சேர்ந்த முக்கியமான சினிமாத் துறை பிரமுகரின் சிபாரிசின்பேரிலே விடுதலை செய்திருக்கிறீர்கள்.

(முற்பகல் 11-20)

அதைப்போல இன்னும் பல பேர் இருக்கிறார்கள். நான் அவைகளையெல்லாம் அடுக்கடுக்காகச் சொல்லிக்கொண்டு போக முடியும். ஆனால் அதே நேரத்தில் 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்துவிட்ட மாசிலாமணி என்ற ஒரு ஆயுள் கைதி, நம்பர் 8682. போர்டு வைக்கப்பட்டு ஒன்றரை வருஷம் ஆகிறது. இதுவரையிலே அவர்களுடைய விடுதலை பிரகடனம் மூலம் அறிவிக்கப்படவில்லை.

அதைப்போல கோவிந்தராஜ், சின்னவன் என்பவர்கள். இன்றைக்கு அவர்கள் மீது ஒரே வழக்குத்தான். ஆனால் இது வரையில் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. கோவிந்தராஜ் கிட்டத்தட்ட எட்டாண்டுக் காலம் ஜெயிலில் இருக்கிறார்; பரோலில் ஒரு ஆண்டு கூட வெளியே விடாத சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படிப் பல பேர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். ஆளுங்கட்சிக்கு ஒரு நியாயம்; அடுத்தவர்களுக்கு ஒரு நியாயம்; மந்திரிகளுக்கு ஒரு நியாயம்; மற்றவர்களுக்கு ஒரு நியாயம் என்ற இந்த இரட்டை நிலை முறை சரியானதுதானா, நியாயமானதுதானா? மத்திய சர்க்கார் சட்டம் உங்களுக்கு வேண்டியவர்களை வெளியே விடுவதற்குமட்டும் தடையாக நிற்கவில்லையா என்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆத்திரப்படாமல் பதில் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் உள்நோக்கத்தோடு பலரைக் கைது செய்கிறீர்கள். பழனிபாபாவை தேசிய பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்தீர்கள். நீதிமன்றத்துக்குப் போனார். நீதிமன்றம் என்ன தீர்ப்பு சொல்லியது?

அவதூறாக பழனிபாபா பேசினார் என்று நீங்கள் வழக்கு போட்டீர்கள். அதற்கு நீதிபதி சொன்னார், டெஃபமேஷன் போடலாம்; சமூக விரோதிகளை கைது செய்கின்ற சட்டத்திலே, கள்ளச் சாராயம் காய்ச்சுபவன், கள்ள நோட்டு அடிப்பவன், விபச்சாரம் செய்பவர்கள் போன்ற இவர்களைக் கைது செய்யும் சட்டத்திலே நம்முடைய முதலமைச்சருக்குப் பிடிக்காதவர் என்ற ஒரேயொரு காரணத்திற்காக பழனி பாபாவைக் கைது செய்தது நியாயமா என்பதோடு மட்டுமல்லாமல், அப்படி மானம் போய்விட்டது என்பது உண்மையானால், நீங்கள் டெஃபமேஷன் சூட் போடலாம். அதை விட்டு விட்டு இதிலே கைது செய்யலாமா என்ற ஒரு அப்சர்வேஷனை, ஸ்டிரிக்சரைப் பாஸ் பண்ணியிருக்கிறார்கள். இதைக்காட்டிலும் அவமானம் என்ன என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நல்லவேளையாக நீதிமன்றம் இருக்கிறது; இல்லையென்றால் ஆயிரக்கணக்கான பேர்கள் இன்றைக்குச் சிறையிலே இருக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையிலே நடைபெறக்கூடிய மிக முக்கியமான ஊழலை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இங்கே அமைச்சரவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்த வட்டிக்கு, வாழ்வில் நலிவுற்ற மக்களுக்கு, ஆண்டு வருமானம் 3,000 ரூபாய்க்குக் குறைவாக உள்ளவர்களுக்கு, சுய தொழில் செய்ய ரூபாய் 7,000 வரை 4 சதவீத வட்டி வீதத்தில் கடன் வழங்க இந்திய ரிசர்வ் பேங்க் அனுமதித்துள்ளது. அந்தக் கடன் வசதியைத் தனி அதிகாரியாக இருக்கக் கூடிய மிஸ்டர் கன்னியப்பன் அவர்கள், அகில இந்திய அண்ணா தி.மு.க. கட்சியினருக்கு மட்டுமே பெரும் பகுதியை வழங்குகிறார். விழா நடக்கிறது; அதில் அவரும் கலந்து கொள்கிறார், இன்னொருவரும் கலந்து கொள்கிறார். நான் கேட்க விரும்புகிறேன். யார் யாருக்கு அந்தத் தொகை வழங்கப்பட்டது என்ற பட்டியல் என்னிடத்திலே இருக்கிறது. மாற்றுத் தலைவரவர்களே, உங்கள் அனுமதியோடு சொல்ல விரும்புகிறேன். இந்தப் போஸ்டர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய ஒரு விழாவைப் பற்றியது. இதிலே என்ன இருக்கிறது தெரியுமா? அன்னை சத்தியா மகளிர் மன்றம் சார்பாக கடன் தொகை வழங்குகின்ற விழா. முன்னிலை திருமதி மீரா. திருமதி மிஸ்ஸியம்மாள் பாலன்; ஈ.வி.கே. சுலோசனா சம்பத், மதுசூதனன், முத்துராமலிங்கம், அடுத்து, சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் அலுவலர் கன்னியப்பன், தனி அதிகாரி. தங்கராசு. எல். எஸ். மணி. இது அகில இந்திய அண்ணா தி.மு.க. பொதுக் கூட்டம். இதிலே கலந்து கொள்கிறார் தனி அதிகாரி கன்னியப்பன் அவர் மட்டுமா கலந்துகொள்கிறார், அதைப்போலவே



தங்கராசு, செயலாளர். மணி, ஒரு பிராஞ்ச் மேனேஜர். நான் கேட்கிறேன், இவர்கள் அதிகாரிகளா அல்லது அண்ணா தி.மு.க. அமைப்பாளர்களா? மக்களுடைய பணம் இன்றைக்கு அகில இந்திய அண்ணா தி.மு.க. கட்சிக்காரர்களுக்கு மட்டுமே பயன்படுவது எந்த விதத்திலே நியாயம் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சோழா ஹோட்டலில் அந்த அதிகாரியினுடைய ஒரு மதியச் செலவு மட்டும் 1,500 ரூபாய்க்கு மேலே பில் ஆகியிருப்பதாக, கொடுத்திருப்பதாகத் தகவல் கிடைக்கிறது. இவையெல்லாம் எப்படி வந்தன என்ற விவரங்களை அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது கூற வேண்டும். என்னிடத்திலே குற்றச் சாட்டாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கத்தின் பணம் வேறு விதத்திலே, தப்பான வழியிலே செலவழிக்கப் படுகிறது.

சிறைச்சாலைகள் பற்றி ஒன்றைச் சொல்ல மறந்து விட்டேன். அங்கே என்னென்ன பத்திரிகைகளைப் போடுகிறீர்கள். அண்ணா பத்திரிகை போடுகிறீர்கள்; உங்களுக்கு வாலி பாடுகின்ற தினத்தந்தி பத்திரிகை போடுகிறீர்கள்; உங்களுக்கு துந்துபி முழங்குகின்ற தினமலர் பத்திரிகை போடுகிறீர்கள்; எல்லோரையும் சற்றுச் சரி செய்வதற்காக தினமணி, இந்து போடுகிறீர்கள். ஆனால் முரசொலி போடுகிறீர்களா? எதிரொலி போடுகிறீர்களா? நகரன் போடுகிறீர்களா? தீக்கதிர் போடுகிறீர்களா? ஜனசக்தி போடுகிறீர்களா? நம்முடைய குமரி அனந்தன் கூட ஒரு பத்திரிகை நடத்துகிறார்; அந்தப் பத்திரிகை போடுகிறீர்களா? நம்முடைய மேலவைத் தலைவர் ம.பொ.சி. அவர்கள் ஒரு கட்சி வைத்திருக்கிறார், ஒரு பத்திரிகை நடத்துகிறார், அந்தப் பத்திரிகை போடுகிறீர்களா? இல்லை.

இதிலே ஒரு வேடிக்கை என்னவென்று கேட்டால் சிறையிலே இருப்பவர்கள் அண்ணா தி.மு.க. அமைப்பாளர்களா? அங்கே இருக்கிற கைதிகள் பொதுப் பத்திரிகைகளை தங்கள் சொந்த செலவிலே வாங்கிக்கொள்கிறோம் என்று சொன்னால் கூட, அனுமதிக்கப்படுவதில்லை என்ற தகவல் சொல்லப் படுகிறது. அது எந்த விதத்திலே நியாயம்? அதைப் போலவே நான் கேட்கவிரும்புகிறேன். ஜெயிலிலே இருக்கக்கூடிய 'ரிமேண்டு பிரிசினர்ஸ்'களை எல்லாம் கூடியானவரை ஜாமீனிலே விட்டு விடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோல இன்னொரு குற்றச்சாட்டையும் அமைச்சரவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய சிறைச்சாலையிலே 4,569 பேர்கள் 'நான்-டிரயல் பிரிசினர்ஸ்' ஆக இருக்கிறார்கள். ஒழுங்காக அவர்கள் கோர்ட்டுக்குக் கொண்டுவரப்படுவதில்லை. 60 நாளைக்கு மேல் விசாரிக்கப்படாமல் பல பேர் இருக்கிறார்கள். அவ்வாறு

(திரு. அ. ரகுமான்கான்) [1983 ஏப்ரல் 4

அவர்களை வைத்திருப்பது தவறு. சிறைச்சாலைகளிலே சாகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கைதிகள் திடீரென்று சாகின்றார்கள். விசாரணை வைக்கின்றபோது ஆர்.டி.ஓ. விசாரணைதான் வைக்கிறார்கள். அது முறையாகாது. ஜுடீஷியல் என்குயரி இருக்கவேண்டுமென்று நரசிம்மன் சிறைச்சாலை சீர்திருத்த ரிப்போர்ட்கூட தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அதைப் பின்பற்றவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை இந்த அவையிலே நம்முடைய மாற்றுத் தலைவரவர்கள் மூலம் கொண்டுவர விரும்புகிறேன். நீதிமன்றம் சுயேச்சையாக, ஆனால் துரதிருஷ்டவசமாக இன்றைக்கு தவறான முறையிலே அதிகாரிகளுக்கெல்லாம் பிரமோஷன் கொடுக்கிறார்கள் என்று நீதிமன்றத்திலே நீதிபதிகள் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இவைகளைத் தவிர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு மாபெரும் குற்றச்சாட்டையும் நான் இங்கே கடைசியாகச் சொல்லவிரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்குப் பதில் சொல்லவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து அடிக்கடி சொல்வார்கள் நான் இங்கே பேசிய போது கூட, நீதிபதிகள் நடத்தை பற்றி விமர்சனம் செய்வது தவறு ஆனால் நீதிபதிகள் அளிக்கின்ற தீர்ப்பு பற்றி இங்கே நாம் விமர்சனம் சய்யலாம் 'நேஷனலைசேஷன் ஆப் பாங்க்ஸ்' 'அபாலிஷன் ஆப்பிரீவி பர்சஸ்' போன்ற பல கேஸ்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி பேசுவது குறித்து தப்பு அல்ல, அதுபற்றி பேசுவது தப்பல்ல அதுபோல கம்யூனல் ஜி.ஓ. இருக்கிறது. அதுபற்சுவப் பேசுவது தப்பல்ல.

ஆனால் அரசியல் சட்டத்தில் 211-ஆவது பிரிவு மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்கிறது 'கான்டெக்ட் ஆப் தி ஜட்ஜ்' பற்றி சட்டமன்றத்திலே விவாதிக்கக் கூடாது. அதைப் போலவே சட்டமன்ற விதி கூட தெளிவாகச் சொல்கிறது. * * என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நீதி நிர்வாகத் துறைமீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, நீதி நிர்வாகத் துறையிலே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதை நல்ல உள்ளங்கொண்டவர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என நான் நம்புகிறேன்.

---

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1983 ஏப்ரல் 4] (திரு. கே. குப்புசாமி)

1978-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கிரிமினல் வழக்குகள் தமிழ் மொழியில் எந்தெந்த அளவிலே பயன்படுத்தப்படவேண்டிய அவசியமோ அந்த அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மக்கள் நீதிமன்றத்திலே என்ன நடைபெறுகிறது என்பதை அனைவரும் உணர்ந்துகொள்கின்ற முறையிலே இன்றைக்கு தமிழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நீதிமன்றங்களிலே தீர்ப்புகள் தமிழிலே எழுதப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 11-30)

இப்போது நீதிமன்ற தீர்ப்புகள் அது கிரிமினலாக இருந்தாலும் சரி, சிவிலாக இருந்தாலும் சரி, உயர்நீதி மன்றம் வரை, இரண்டுமே தமிழில் எழுதப்படக்கூடிய நிலையை அரசு விரைந்து ஏற்படுத்த முன்வரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே இருக்கிற பல்வேறு கிராமப்புற பகுதியிலே வாழ்கின்ற, பல்வேறு வழக்கு மன்றங்களுக்குச் செல்கிற மக்களுக்கு துணை புரிகின்ற வகையில் மாவட்டங்களிலே, தலைநகரங்களிலே இருக்கிற நீதிமன்றங்களை எல்லாம், அதன் பிரிவுகளை ஆங்காங்கு இருக்கிற சிற்றூர்களிலும், நகரங்களிலும், விரைவுபடுத்திய முதல் அரசு புரட்சித் தலைவர் அரசு என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அந்த வகையிலே நீதிமன்றங்களே இல்லாத Second Class Magistrate, First Class Magistrate, Disrict Munsiff Court, Sesstions Courts, District Courts என்று இவ்வாறாக பல ஊர்களிலே பல நகரங்களிலே இந்த நீதிமன்றங்கள் இல்லாத நிலையை மாற்றி, குறிப்பிட்ட மாவட்டத் தலைநகரங்களிலே இருந்தவற்றை மாற்றி, பல சிறு நகரங்களிலே எல்லாம் கொண்டு வந்த பெருமை நம்முடைய தமிழக அரசுக்கும், சட்டத்துறை அமைச்சருக்கும் உரியது என்பதை நான் தெளிவாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அதேபோன்று இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு நீதித்துறைக்கு, நீதிபதிகளுக்காக எந்த அளவுக்கு பயனுள்ள காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை, ஏற்கெனவே அரசின் சார்பிலே இங்கே கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. நீதிபதிகளுக்கு இப்போது வீட்டு வசதி, கார் வசதி, ஜெராக்ஸ் மெசின் வசதி,—உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்குக் கூட அருமை சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதைப் போல, காவலாளி வசதி போன்ற வசதிகளை எல்லாம், அவர்களுக்கு ஸ்டாஃப் அதிகம் செய்திருப்பதை, பல்வேறு நீதிபதிகளுக்கு நீதிமன்றங்களுக்கு பயனுள்ள பணிகளை இந்த அரசு கடந்த 4, 5 ஆண்டு காலத்திலே ஆற்றியிருக்கிறது என்பதை மனசாட்சி உள்ளவர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். 1965-க்குப் பின்னாலே தமிழகத்திலே வழக்கறிஞர்களாகப் பணிபுரிகின்ற வழக்கறிஞர்கள்

மாஜிஸ்ட்ரேட்டுகளாக ஆக முடியாத நிலைமை இருந்தது. ஏ.பி.பி.க்களாக ஆக முடியாத நிலையிருந்தது. அண்மையிலே கூட அரசினுடைய அறிவிப்பை நான் பார்த்தேன். முதன் முறையாக கிட்டத்தட்ட 25 ஆண்டுகாலத்திற்குப் பின்னாலே வழக்கறிஞர்கள் எல்லாம் இன்று மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமிக்கப்பட்டிருக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். வழக்கறிஞர்கள் சமுதாயத்தின் சார்பிலே நான் நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்டகிரேஷன் ஆப் ஜுடிசியரி, நீதித்துறையிலே இருக்கிற சிவில், கிரிமினல் இரண்டையும் இணைத்து துரிதமாக நீதி வழங்கவேண்டுமென்ற முறையிலே, ஏழை எளியவர்கள் எல்லாம் விரைந்து நீதியைப் பெறவேண்டுமென்ற வகையிலே இந்த இன்டகிரேஷன் ஆப் ஜுடிசியரி, தமிழக அரசால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் அமுலுக்கு வராத நிலையிலே இருக்கிறது. அது விரைந்து அமுல்படுத்தப்படும் என்று கொள்கை குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். அதை மீண்டும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதனுடைய பலனை கிராமப்புறத்திலே இருக்கிற ஏழை எளியவர்கள், லிட்டிகன்ட் பப்ளிக் பயன்படுத்துகிற வகையிலே இந்த இன்டகிரேசன் ஆப் ஜுடிசியரியை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்று அரசு வழக்கறிஞர்கள் என்று இருக்கிற ஏ.பி.பி. 2, ஏ.பி.பி. 1 இவர்கள் எல்லாம் இன்று காவல்துறையினுடைய கன்ட்ரோலில் வருகிறார்கள். அவர்கள் தன்னிச்சையாக செயல்பட முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு என்று தனியாக ஒரு டைரக்டரேட் — அண்டை மாநிலத்திலேகூட இருக்கிறது, டைரக்டரேட் ஆப் பிராசிகுசன். மாநில அளவிலே ஒரு டைரக்டரேட்டை நியமித்து ஒரு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் லெவலிலே ஒரு தலைவரை நியமித்து அதற்குக் கீழ் இருப்பவர்களை எல்லாம் அடிசனல் டைரக்டர், அசிஸ்டென்ட் டைரக்டர் என்பவர்களை எல்லாம் மாவட்ட அளவிலே நியமித்து இதை தனியான ஒரு துறையாக ஏற்படுத்துவோமானால், ஆண்டாண்டுக்காலமாக, ஏ.பி.பி. 1, ஏ.பி.பி. 2 என்பவர்களுக்கு, புரமோசன் கிடையாது. என்கிற நிலை மாறி அவர்கள் எல்லாம் புரமோசன் வாய்ப்பு பெறுகின்ற வகையிலே இந்த டைரக்டரேட் ஆப் பிராசிகுசன் என்று ஒரு துறையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து லா கமிஷன்கூட பரிந்துரை செய்திருக்கிறது. மாண்புமிகு தலைவர் அவர்களுடைய அனுமதியோடு ஒன்றிரண்டை மட்டும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்



It has been suggested and we see great usefulness in the suggestion. that the prosecuting agency should be separated from and made independent of the investigating agency, that is the police Department, and that it should not only be responsible for the conduct of the prosecution in the court but it should also have the liberty of scrutinising the evidence particularly in serious and important cases before the case is actually filed in court. Such a measure would ensure that the evidence in support of a case is carefully examined by a properly qualified authority before a case is instituted so as to justify the expenditure of public time and money on it.

எனவே சட்டக் கமிஷன் கூட—இந்திய அரசால் நியமிக்கப்பட்ட சட்டக் கமிஷன் கூட—டைரக்டர் ஆப் பிராசிகியுசன் என்ற அமைப்பை ஏற்படுத்துவதற்கு பரிந்துரை செய்து இருக்கிறது. இந்தப் பரிந்துரையில் நியாயம் இருக்கிறது என்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி பரிசீலித்து அப்படி ஒரு டைரக்டர் ஆப் பிராசிகியூஷன் என்ற அமைப்பை விரைவில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் பல டிஸ்டிரிக்ட்ஸ் அண்டு செஷன்ஸ் கோர்ட்டுகள் இருக்கின்றன. ஊட்டியில் அப்படிப்பட்ட ஒரு நீதி மன்றம் வேண்டும் என்று அங்கே இருக்கின்ற வழக்கறிஞர்களும், லிடிகன்ட் பப்ளிக்கும் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் திரு. உச்சி அவர்களும் வலியுறுத்தி வருகிறார்கள். அரசு கொள்கையளவில் அங்கே தனியாக ஒரு டிஸ்டிரிக்ட் அன்ட் செஷன்ஸ் கோர்ட் ஏற்படுத்த ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதை உடனடியாக அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று, மாண்புமிகு உச்சி அவர்கள் பேச இயலாத சூழ்நிலையில், அவரின் சார்பில் இந்தக் கருத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பழனியில் முன்சீப் கோர்ட் மட்டுமே இருக்கிறது. செகன்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும் இருக்கிறது. அங்கே ஒரு அடிஷனல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட் கோர்ட் தேவை. அதற்கென்று தனியாகக் கட்டிடம் கிடையாது. தற்போது இருக்கும் கோர்ட்டும், வாடகைக் கட்டிடத்தில் இடிந்து விழும் சூழ்நிலையில் இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே, அங்கே ஒரு எஸ்.டி.எம். கோர்ட் ஏற்படுத்தி, பழனியில் உள்ள முன்சீப் கோர்ட்டுக்கு ஒரு கட்டிடத்தையும் விரைவில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு இந்த அரசு பல்வேறு துறைகளின் மூலமாக பல்வேறு திட்டங்களை இங்கே நடைமுறைக்குக் கொண்டு வருகிறது. ஆனால், அந்தஏழைகள் எல்லாம் பயன்பெற முடியாத நிலையில் உயர்நீதி மன்றங்களால் அதற்குத் தடைகள் விதிக்கப்படுகின்றன. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் நீதித் துறைக்கு வக்காலத்து வாங்கி அவருடைய வல்லமையைக் காட்டினார்கள். நான் பாராட்டுகிறேன். இந்த அரசு நீதித் துறையை மதிப்பதில்லை. நீதிபதிகளின் தீர்ப்பை ஏற்று நிறைவேற்றுவதில்லை. என்று குற்றச்சாட்டு சொன்னார்கள். நான் கேட்கிறேன்., நீதிபதி சர்க்காரியா தீர்ப்பு எழுதினார்களே., தீர்ப்பு வழங்கினார்களே, அந்தத் தீர்ப்பை நீங்கள் மதித்து தீர்ப்பாக ஏற்றுக்கொண்டீர்களா ? இன்றைக்கு ஊருக்கு உபதேசம் செய்கிறவர்களே சர்க்காரியா தீர்ப்பை ஏற்றுக்கொண்டு, அவர் கூறிய தீர்ப்பை நீங்கள் ஏற்றுக்கொண்டு இருந்திருப்பீர்களானால் உங்களைப் பாராட்ட முடியும். ஆனால், இந்த அரசின் மீது ஏதோ சேற்றை அள்ளிப் பூச வேண்டுமென்று தவறான கருத்தோடு அவர்கள் நீதித்துறைக்கு வக்காலத்து வாங்குகிற வகையில் இந்த அரசை சாடியிருக்கிறார்கள். * * * *

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, * *

திரு. கே. குப்புசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, * *

திரு. என். வி. என். சோமு : சபைக்குத் தவறான தகவல் தருகிறார். **

(முற்பகல் 11-40.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : இந்த விதியைப் பற்றி பலதடவை இந்த சட்டமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். அவருக்கும் இது தெரியும்.

திரு. கே. குப்புசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் அதில் இருக்கிற விவரங்களைத் தெளிவாகச் சொல்லிக் கொண்டு வந்தேன். எனக்குப் பின்னால் பேசக்கூடியவர்கள் மாற்றுக் கருத்து இருந்தால் சொல்லலாம். * *

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மக்களுக்குப் பயன்படுகின்ற பல சட்டங்களை இயற்றுகின்றோம். அத்தகைய சட்டங்களை நிறைவேற்றுகிற அதிகாரம் மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்ற இந்த மன்றத்திற்கு உண்டு. மக்கள் பிரதிநிதிகளாகத்தான் நாம் வருகிறோம். மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காக வருகிறோம்; மக்களுக்கு நல்லது செய்ய, மக்களுக்குப் பயன்படும் சட்டங்களைத் தீட்டி நிறைவேற்றுகிறோம். சட்டம் வருவதற்கு முன்னால் துறையில் பரிசீலிக்கப்படுகிறது. இந்த சட்டமன்றத்தில் சட்டம் ஆராயப்படுகிறது. தேவைப்பட்டால் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு அங்கேயும் விவாதிக்கப்படுகிறது. அதற்குப் பின்னால் சட்டமன்றத்திற்கு வந்து, சட்டம் நிறைவேறுகிறது. அதன் பிறகு கவர்னருக்குப் போகிறது. ஜனாதிபதிக்கு போகிறது. இறுதியில் சட்டமாக நிறைவேறுகிறது. இப்படிப்பட்ட சட்டங்களை நிறைவேற்றும்போது பாதிக்கப்படுவோர் 70 கோடி மக்களில் யாராவது ஒருவர் இருக்கத்தான் செய்வார். அந்த யாரோ ஒருவர் கோர்ட்டுக்குப் போகிறார் ; இரண்டு மணி நேரத்தில் ஸ்டே கிடைக்கிறது.

நான் நீதிமன்றத்தை குறைகூறுகிறேன் என்று தயது செய்து யாரும் கருத வேண்டாம். இன்றைக்கும் நான் ' பிராக்டிசிங் லாயர் ' எனவே, அந்த வரம்பை உணர்ந்துதான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

நில ஆர்ஜித பிரச்சினை வந்தது. நீதிமன்றத்தில் போய் தடை வாங்கிவிட்டார்கள். 33,000 கிராமங்களில் இருக்கிற ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனை கொடுக்க வேண்டிய முறையில் நாம் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டபோது, அவர்களுக்கு வீட்டுமனை கொடுக்க முடியாதவாறு ஹைகோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அதைப்போன்று எக்சைஸ் ட்யூட்டி. ஆயத்தீர்வையைப் பொறுத்த மட்டில் 117 ரிட் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எக்ஸ்பார்ட்டி ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். அதனால் எத்தனை கோடி இழப்பு? அதிலே மட்டும் 6 கோடி ரூபாய் இழப்பு. கூட்டுறவுத் துறையிலே எத்தனை கோடி? இந்த நில ஆர்ஜிதம் செய்வதிலே எத்தனை கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது? இதை ஏன் கேட்கக்கூடாது. இது கண்டம்டா? இது கண்டம்ட் என்று சொன்னால் இதை எதிர்த்து எதிர் நீச்சல் செய்ய தயாராக இருக்கிறேன்.

நீதிபதிகளை குறைசொல்வதாக யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது. மக்களுக்குப் பயன்படுகின்ற ஒரு சட்டத்தை இயற்றும் போது அதைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டு ஒருவர் ரிட்

மனு போட உரிமை இருக்கிறது அரசியல் சட்டத்தில். ஆனால் கோர்ட்டுக்குச் சென்றவுடன், அதைப் பார்த்து, அரசுக்கு இரண்டொரு நாள் அவகாசம் கொடுத்து, அரசு வழக்கறிஞரைக் கேட்டு, அதற்குப் பிறகு ஸ்டே கொடுத்திருந்தால் யாரும் கவலைப்படப் போவதில்லை. ஆனால்,

without giving an opportuity to the Government, without giving notice to the Government to know what is what, without the Government knowing what is what, how can we approach it without knowing the views of the Government, stays are being obtained now-a-days

இதை ஏன் சொல்கிறேன் என்றால் சாதாரண ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் சட்டத்தைக் கொண்டுவந்தால் வசதி படைத்தவர்கள் கோர்ட்டுக்குப் போய் ரிட் மனு போட்டு, ஸ்டே வாங்குகிறார்கள். இன்செங்ஷன் வாங்குகிறார்கள். ஆண்டாண்டு காலமாக தேங்கிக் கிடக்கின்றன வழக்குகள். அதனால் சாதாரண மக்கள் என்ன நினைக்கிறார்கள்? * * *

அத்தோடு மட்டும் அல்ல, இன்று பேசிய மாண்புமிகு அருமை நண்பர் ரகுமான்கான் அவர்கள் இன்னும்கூட ஒரு படி வேகமாகச் சென்று குறிப்பிட்டார்கள். நான் கேட்கிறேன், இந்த அரசுக்கு,

நீதிமன்றத்திலே, நீதித்துறையிலே அவர்கள் எதையும் பரிசீலனை செய்யலாம். அதனுடைய ஆட்சி முறைகளை அவர்கள் கவனிக்கட்டும். ஆனால் ஒரு தீர்ப்பு வழங்குவது என்றாலும், இன்னும் சொல்கிறேன்—புள்ளி விவரத்துறையிலே ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. புள்ளி விவரத்துறையிலே சீனியாரிட்டி லிஸ்டிலே புரொமோஷனுக்கு ஒரு லிஸ்ட் தயார் செய்து வருகிறது. அது தனக்கு பாதகமாக இருக்கிறது என்று ஒருவர், அதை இப்படிச் செய்யக் கூடாது என்று கேட்டு நீதிமன்றம் செல்கிறார்.

உடனே அந்த உயர்நீதிமன்ற நீதிபதி, ஒரு இண்டீரியம் ஆர்டரைப் போடுகிறார்கள். ஒரு கேட்டலனைப் போடுகிறார்கள். என்னவென்று, 4 மாதங்களுக்குள்ளாக, அந்த புரோமோஷன் லிஸ்டை மறுபடியும் தயார் செய்து, இன்னின்ன வழிகளிலே தயார் செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்து, உயர்நீதிமன்றத்திலே தாக்கல் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசு அதை ஏற்றுக் கொண்டு, அப்படியே புதியதாக இன்னொரு லிஸ்டை தயார் செய்து, பரிசீலனைக்கு அனுப்புகிறது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அதிலே பாதிக்கப்பட்ட இன்னொருவர், ** வேறொரு நீதிபதி ** யிடம் சென்று முறையிடுகிறார்.

இதிலே இன்னொரு நீதிபதி சொல்கிறார், அந்த 2 ஆவது பட்டியலை உடனே நிறுத்த வேண்டும். ஆகவே, அரசினுடைய நிலைமையை நீதிமன்றத்திலே உணர்ந்து பார்க்கவில்லை என்று தெரிகிறது. அரசுக்கு இருக்கின்ற இ ** க்கட்டான சூழ்நி ** லைகளை அவர்கள் சிந்திப்பதே இல்லை.

அதைத்தான் நாங்கள் இங்கே எங்களுடைய உணர்வாக வெளிப்படுத்தி வருகிறோம்.

சாதாரணமாக நீதித்துறையில் மிகுந்த நம்பிக்கை உள்ளவர் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை சொல்ல வேண்டும். அவர் முதலமைச்சராக ஆவதற்கு முன்னாலேயே, அந்த நீதித்துறைக்கு தனி மரியாதையை, தனி கௌரவத்தை கொடுத்திருக்கிறார் கள். அவர் மீது போடப்பட்ட பொய் வழக்குகளிலே பலவற்றிலே கூட, நேரிடையாக சென்று வழக்குமன்றங்களிலே ஆஜராகி இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கும் பலவிதமான வேலை களுக்கிடையிலும் நேரிடையாகச் சென்றிருக்கிறார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், அவரைப் பொறுத்தவரையில், நீதித்துறைக்கும், நீதிபதிகளுக்கும், ஒரு தனி மரியாதையை, மதிப்பை எப்போதும் வைத்திருக்கிறார்கள், இந்த அரசும் வைத்திருக்கிறது என்டதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

ஆனால், இன்று உயர்நீதிமன்றமும், மற்ற நீதிமன்றங்களும் எந்தத் தீர்ப்பை எடுத்துச் சொன்னாலும், ஸ்டிச்சர்ஸ் என்று சொல்லப்படுகின்ற கண்டனங்கள் வருகின்றன. எதிர்க்கட்சிகள் வேண்டுமானால், இருக்கிற ஆளும் கட்சி மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரலாம். எதிர்க்கட்சிகள் இந்த அரசை கவிழ்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கலாம். சதிகள் கூட செய்யலாம். மத்தியிலே இருக்கின்ற ஆளும் கட்சி கூட, விதி 356-ஐ பயன்படுத்தி, எடுத்த எடுப்பிலே இந்த அரசை டிஸ்மிஸ் செய்யலாம். இது எல்லாம் ஜனநாயக நாட்டிலே எதிர்க்கட்சி களுக்கும், ஆளும் கட்சிகளுக்குமிடையே உள்ள பரிவர்த்தனை. ஆனால் உயர்நீதிமன்றத்திலே இப்போது என்ன நடக்கிறது? சொன்னால் அருமை சகோதரர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உடனே எழுந்து விடுவார்கள்.

அங்கே இப்போது என்ன நடக்கிறது என்றால், **

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**அப்படிப்பட்ட ஒரு உணர்வும் மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. இதை மறுக்க முடியாது. நான் கேட்கிறேன், இந்த ஆட்சியை கவிழ்க்க வேண்டும், இந்த ஆட்சியைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும், முதலமைச்சருக்கு அவமானத்தை ஏற்படுத்த வேண்டும், அவர்மீது களங்கம் கற்பிக்க வேண்டும், பொது மக்களிடையே அவர்களுக்கு இருக்கிற ஆதரவை குறைக்க வேண்டும் என்ற வகையில், எதிர்க்கட்சிகள் செயல்படுவதைப் போல* இதைத்தான் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோமே தவிர, இந்த நீதிமன்றங்களுக்கு உரிய மரியாதையை கொடுக்கிறோம். நீதிபதிகளின் மீது உயர்ந்த நம்பிக்கையை வைத்திருக்கிறோம்.

நான் கேட்கிறேன், எல்லோருக்கும் சமுதாயத்திலே ஒரு கோட் ஆப் காண்டக்ட் என்று இருக்கிறதே, நீதிபதிகளுக்கு எங்கே இருக்கிறது கோட் ஆப் காண்டக்ட். நான் அரசைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன், ஒவ்வொரு துறையிலும் இருப்பவர்களுக்கு கூட ஒரு கோட் ஆப் காண்டக்ட் இருக்கிறது. நீதிமன்றத்திலே இருப்பவர்களுக்கு என்ன கோட் ஆப் காண்டக்ட் இருக்கிறது?

If the Leg sla ure goes wr ng, hen the Hig Court can q es ion it. I want ask if the High C urt or if the Judiciary goes in excess, who can question it?

(முற்பகல் 11-50)

மக்கள் தவறு செய்தால் மன்னன் கேட்பான்....(குறுக்கீடு கள்) சாதாரணமாக இதுபோன்று......(குறுக்கீடு)........ மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுதந்திரம் அடைந்த 1947ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையில் இதுபோன்ற

wh never a judiciary has gone in excess, nob dy can ques ion i , even by Parliament. Can you c te an example? * *

எவ்வளவு அப்பீல்கள் இருக்கின்றன? முன்பிருந்த அப்பீல்களை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால்— ஒவ்வொரு வழக்கிலும் சுப்ரீம் கோர்ட்டு வரை அப்பீல் போகின்றது. சாதாரண மனிதனுக்கு நீதி கிடைத்திருக்குமேயானால் அவன் ஏன் அப்பீல் செய்யவேண்டும்? நீதி கிடைக்காததால்தானே சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறான். பாதிக்கப்பட்டவனுக்கு நீதி கிடைத்திருக்குமேயானால் அவன் ஏன் உச்ச நீதிமன்றம் வரை செல்லவேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



* * *

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். இந்த அவைக்கு மாற்றுத்தலைவராக இருக்கக்கூடிய தாங்களும் ஒரு வழக்கறிஞர்,

** ** **

எனவே நான் பணிவோடு ஒன்றை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் அதைப் படித்துப் பார்த்து** அப்படிப்பட்ட வார்த்தைகளை நீக்கினால்தான் நல்லது.**

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): அவர் சட்டமன்ற உறுப்பினர் என்ற உரிமையிலே என்ன கருத்துக்கள் பேசவேண்டுமோ அதைத்தான் பேசுகிறார்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் அரசியல் சட்ட வரம்புக்கு உட்பட்டு அரசியல் சட்ட சரத்துக்களைப் படித்துப் பார்த்து

Whai is contempt and what is not contempt

என்று தெரிந்துகொண்டுதான் இவ்வளவு நேரமும் பேசிக் கொண்டிருக்கிறேன். இதிலே நான் சொன்னதிலே எது கண்டெம்ப்ட் ஆஃப் கோர்ட் என்று மாண்புமிகு திரு. என். வி. என். சோமு அவர்கள் பேசும்போது விளக்கினால் நான் மிகுந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது இருக்கின்ற நிலைமைகளை, நாட்டு மக்களுடைய உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டவேண்டியது இந்த சட்டமன்றத்தின் வேலை. அது சட்டமன்றத்தின் பொறுப்பு என்ற முறையில் அந்தப் பொறுப்பினைத்தான் நான் ஆற்றிக் கொண்டிருக்கிறேனே தவிர வேறல்ல. *அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர்கள்

** ** **

திரு. கு. ப. பழனியப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது (குறுக்கீடுகள்).......... Thi s a se i s questi n

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): ஒவ்வொரு கருத்திற்கும் பதில் சொல்லவேண்டும் என்பது சரியல்ல. இடையிடையே குறுக்கிடவேண்டாம். உங்களுடைய கருத்தினை அப்புறம் நீங்கள் பேசுகின்றபோது சொல்லுங்கள்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் நீதித் துறையினைப் பற்றிய மக்களுடைய உணர்வுகளை மக்களின் பிரதிநிதி என்ற முறையிலே எடுத்துச் சொன்னேன். என்னுடைய தனிப்பட்ட கருத்துக்களுக்கு

**மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன

இங்கே இடம் இல்லை. எனவே தனிப்பட்ட முறையிலே நான் பேசவும் இல்லை. மக்களின் பிரதிநிதி என்ற உரிமை எனக்கு இருக்கின்றது. அவர்களுடைய உணர்வைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு தான் இங்கே நான் பேசுகிறேனே தவிர **என்ற எண்ணம் நிச்சயமாக எனக்கு இல்லை என்று முதலிலேயே நான் சொன்னேன். நானும் கூட ஒரு பிராக்டிசிங் லாயர் என்பதை முதலிலேயே சொன்னேன். எனவே வரம்புகளையும், நிலைமைகளையும் உணர்ந்துதான் நான் பேசிக்கொண்டிருக்கிறேனே தவிர இருக்கின்ற நிலைமைகளை இருக்கவேண்டிய இடங்களிலே இருப்பவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும், மக்களுடைய நிலைமைகளைப் புரிந்து கொள்கின்ற நிலைமையை அவர்கள் உருவாக்க வேண்டும். அரசிற்கு நல்ல ஆக்கபூர்வமான ஆலோசனையை யார் எடுத்துச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கின்றது என்பதை இந்த மன்றம் அறியும். அந்த வகையிலே அவர்களுடைய உணர்வுகளைத்தான் தெரியப்படுத்திக்கொண்டிருக்கிறேன். அந்த வகையிலே இந்த நீதித் துறையிலே இருக்கின்ற சில குறைபாடுகளை எல்லாம் அகற்றி நீதித் துறை மக்களுடைய நம்பிக்கையைப் பெறுகின்ற வகையிலே மக்களுடைய உணர்வுகளை பிரதிபலிக்கின்ற வகையிலே பணியாற்றுகின்ற ஒரு நிலைமையை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஏற்படுத்தியாக வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் அடிக்கடி சொல்வார்கள், நீதி என்றாவது ஒருநாள் வென்றே தீரும என்று. அதையே நான் திருப்பிச் சொல்லி, இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் நீதி வென்றே தீரும் என்ற அந்த நிலைமையை உருவாக்குகின்ற வகையிலே நிர்வாகத்தை நடத்திச் செல்லவேண்டும் என்று நான் கேட்டு அமைகிறேன்.

*திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள், கூட்டுறவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது காங்கிரஸ் (ஐ) யின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக எல்லாப் தமிழ், எதிலும் தமிழ் என்று கொள்கையை வைத்து இருக்கக்கூடிய இந்த அரசு, நீதிமன்றத்தில் குறிப்பாக மாவட்டம் மட்டும் அல்லாமல் வட்டத்தில் இருக்கின்ற எல்லா நீதி மன்றங்களிலும் நீதிமன்ற மொழியாக தமிழை மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எல்லா இடத்திலும் தமிழ் என்று சொல்லுகின்ற இந்த ஆட்சியானது பாமர மக்களும் வறுமை கோட்டுக்கு கீழே இருக்கக்கூடிய மக்களும் ஆங்கிலம் தெரியாத மக்களும் பல பேர் இருக்கின்ற காரணத்தினால் தான் தமிழை நீதிமன்ற மொழியாக மாற்ற வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

---

**மாண்புமிகு பே[illegible] வத் து[illegible] தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





சென்ற ஆண்டிலிருந்து மாவட்டத்தில் உள்ள மாவட்ட நீதிபதிகளுக்குகார் வசதி மற்றும் பல வசதிகளை செய்து கொடுத்து இருக்கிறார்கள். அதேபோல் எல்லா நீதிபதிகளுக்கும் நீதியை நிலைநாட்டுகின்ற அந்த இறைவனுக்கு கார் போன்ற பல்வேறு வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உயர்நீதிமன்றத்திலுடைய கிளை மதுரையிலும், உச்ச நீதிமன்றத்தினுடைய கிளை சென்னையிலும் அமைக்க வேண்டும் என்று நம்முடைய சட்டமன்றத்தில் மட்டும் அல்லாமல் வேறு இடங்களிலும் பேசப்பட்டது. அதைக் கொள்கை அளவில் அரசு ஒப்புக்கொண்டு இருந்தாலும் நம்முடைய அரசு உடனடியாக அந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு முழு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நம்முடைய உயர்நீதிமன்றத்திலுள்ள வழக்கறிஞர்களுக்கு ஒரு சேம்பர் இருக்கிறது. அதுமிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே அந்த இடத்திலே இருக்கின்ற அந்த கட்டட வசதியை விரிவுபடுத்தி வழக்கறிஞர்களுக்கு பல்வேறு வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வழக்கறிஞர்களுக்கு கூட்டுறவு சங்கம் என்பதை எல்லா மாவட்டத்திற்கும் அமைத்துத் தர வேண்டும். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். இந்த சட்டத்தின் மூலம் அல்லாமல் அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும இந்த கூட்டுறவு சங்கம் மூலமாக இந்த ஆட்சி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இப்போது சப்-மாஜிஸ்ரேட் கோர்ட் ஏற்படுத்துவதிலே அரசு ஒரு அரசியல் காரணத்தை காட்டுவதாகத் தெரிகிறது. ஆகவே எல்லா இடங்களிலும் இந்த சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளை அமைத்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரத்தநாட்டில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கோரிக்கை விட்டு இருந்தேன். நம்முடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கூட அந்த ஒரத்தநாடு பகுதியில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு ஆரம்பிக்க வேண்டும் என்று சென்ற ஆண்டு கேட்டிருந்தார்கள். அதை இந்த ஆண்டாவது நிச்சயமாக ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நம்முடைய மாநிலத்தில் மாவட்ட நீதிமன்றம் இல்லாத மாவட்டம் நீலகிரி மாவட்டம். நம்முடைய அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு பதில் கூறும்போது நிச்சயமாக இந்த வருடம் அந்த மாவட்டத்தில் ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படும் என்ற நம்பிக்கையையும் குறிப்பையும் அளித்தார்கள். ஆனால் இன்றையதினம் அந்த மாவட்டத்திலே குன்னூர் என்ற பகுதியிலே ஏறத்தாழ 150 வழக்கறிஞர்கள் இந்த மாவட்டத்திற்கு மாவட்ட நீதிமன்றம் வேண்டும் என்று உண்ணா விரதத்தை துவக்கியிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன், ஒரு மாவட்ட அளவில் இருக்கின்ற நீதிமன்றத்திற்கு அரசு வாக்குறுதி கொடுத்தும் இன்னும் செயல்படாமல் இருப்பதை நான் கண்டிக்கிறேன். இதை நான் சொல்வதற்கு காரணம் இப்போது அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நீலகிரி மாவட்டத்திற்கு உடனடியாக ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படும், குறிப்பிட்ட தேதியிலிருந்து அது ஆரம்பிக்கப்படும் என்பதை தன்னுடைய பதிலில் நிச்சயமாக கூற வேண்டும என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறைச்சாலைகளைப் பற்றி ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். சிறை என்பது வெள்ளைக்காரன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் சுதந்திரத்திற்கு பிறகு பல ஆண்டுகள் ஆகியும் கூட சிறை சீர்திருத்தம் சரியான முறையில் நடைபெறவில்லை. குறிப்பாக சிறை கைதிகளுக்கு கொடுக்கப்படுகின்ற பல்வேறு உணவு வகைகள் மட்டும் அல்லாமல் வெள்ளையன் காலத்தில் கொடுக்கப்பட்ட வசதிதான் இப்போது இருக்கிறது. சாதாரணமாக கஞ்சி, சோளம், கம்பு போன்ற உணவுகளை கொடுக்கிறார்கள். அதுவும் தரம் அற்ற ஒரு உணவாக இன்றையதினம் அது கொடுக்கப்படுகிறது. ஆக அதை எல்லாம் சீர்திருத்தம் செய்யவேண்டும். கைதியும் இந்த நாட்டில் உள்ள மனிதன் தான். அவர் தன்னுடைய நடவடிக்கைகளை மாற்றிகொள்வதற்கு ஒரு வாய்ப்பு கொடுப்பது தான் இந்த சிறைக்கூடம். ஆகவே அந்த சிறைக் கூடத்தில் மனிதனுடைய வாழ்க்கையை உயர்த்துவது மட்டும் அல்லாமல் அவனிடம் உள்ள பல்வேறு கோளாறுகளை திருத்துவதற்கு உள்ள இடம் அந்த சிறைக் கூடம். அந்த சிறைக் கூடத்தில் பல்வேறு வசதிகளை உணவு போன்ற வசதிகளை அரசு நிச்சயமாக செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறையில் கைதிகள் இருக்கிறார்கள், ஆயுள் கைதிகள் இருக்கிறார்கள். பரம்பரையாகவே சில கைதிகள் இருக்கிறார்கள், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கண்காணிப்பு குழுவை ஏற்படுத்தினால் அங்கே என்ன என்ன நடைமுறையை செய்ய முடியும் அங்கே இருக்கின்ற காவலர்களும், கண்காணிப்பாளர்களும் என்ன என்ன தவறுகளை செய்கிறார்கள் என்பதை சுட்டிக்



காட்டுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால் அங்கே கைதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவை நிச்சயமாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

சென்னையில் ஒரு மத்திய சிறைச்சாலை உள்ளது. சென்னை வளர்ந்து வருகிற நகரம், அங்கே மத்திய பகுதியிலே சிறைச்சாலை இருப்பதால் ஜனநெருக்கம் அதிகமாக மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதியாக இருக்கிற காரணத்தினால் அதை சென்னைக்குப் பக்கத்திலே வேறு ஒரு இடத்திற்கு ஏற்றமுறையிலே மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப் பணித்துறையிலே சிறை வட்டம் என்ற புதிய இலாகாவை ஏற்படுத்திப் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதாக அறிவித்து திருச்சியிலே ஒரு சிறை வட்டம் என்ற தனிப் பிரிவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலே பல்வேறு வசதிகள் பொதுப்பணித் துறை மூலமாக நடைபெறவில்லை, வேறு வேறு இடங்களிலேதான் நடைபெறுகிறதே ஒழிய சிறைச்சாலை சீர்த்திருத்தங்கள் அதிலே செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே இருக்கிற எந்தச் சிறைச்சாலையாக இருந்தாலும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலே உள்ளவர்கள் குற்றஞ் செய்தவர்கள் குற்றமில்லாதவர்களாக மாறக்கூடிய முறையிலே மனதை மாற்றிக்கொள்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுச் சட்டம், இந்தச் சட்டம் சமீபத்திலே இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டது. சாதாரணமாக கூட்டுறவுச் சங்கங்களிலே பணிபுரிகிறவர்கள் குறிப்பாக ஸ்பெஷல் ஆபீசர்களாக இருக்கிறவர்கள் ராஜாதிராஜாக்கள் வாழ்ந்த வாழ்க்கையைப்போல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் ஒரு காலத்திலே படித்ததுண்டு, ராஜாக்கள் அந்த காலத்திலே எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்று. இந்த கால கட்டத்திலே ஸ்பெஷல் ஆபீசர்கள் தங்களுடைய அனுபவரீதியாக சொகுசு வாழ்க்கை அமைச்சர் அவர்களைவிட நல்ல வாழ்க்கையை நடத்தக்கூடிய வாய்ப்புகளையும் வசதிகளையும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்ற அந்தப் பணியானது தங்களுடைய சேவைக்காகப் பயன்படுத்தப்படுகிற நிலைமையில் பல்வேறு அதிகாரிகள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்த பிறகுதான் நல்லமுறையில் நடைமுறையிலே சாத்தியமான அளவுக்கு அந்த சங்கங்கள் வளரமுடியும் என்பதால் உடனடியாக ஸ்பெஷல் ஆபீசர்களை எடுத்துவிட்டு மக்கள் பிரதிநிதிகள் கொண்ட அமைப்பை ஏற்படுத்துவதற்கு இந்தச் சட்டத்தை அமலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே என்றைக்குமில்லாத வறட்சி; எல்லா இடங்களிலுமே வறட்சி. எந்த மாவட்டமும் விடப்படவில்லை, அதனால் பல்வேறு இடங்களிலே நாட்டுமக்களுக்கு உற்பத்தி பாதிக்கப்படுகிற அளவுக்கு இருக்கிறது. நிலவள வங்கிகள் மூலமாக குறைந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆழ்குழாய் கிணறுகளைப்போட்டுக் கொடுக்கவேண்டும். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் காவிரியிலே தண்ணீர் வருமா வராதா என்ற அச்சம் இப்போது இருக்கிறது. அந்த அச்சத்தின் காரணமாக தஞ்சை மாவட்டம் இன்றைக்கு பாலைவனம்போல் காட்சியளிக்கிறது, அப்படி காட்சியளிப்பதை நிவர்த்திப்பதற்கு தஞ்சை மாவட்டத்திலே உள்ள எல்லா நிலவள வங்கிகள் மூலமாகவும் மற்ற எல்லா வங்கிகளின் மூலமாகவும் கூட்டுறவு சங்கத்தினுடைய அடிப்படையான நோக்கத்தைக் கருத்தில் கொண்டு ஆழ்குழாய் கிணறுகளை அமைக்க வேண்டும். அதற்கு அடிப்படையாக மயிலாடுதுறையிலே ஆயிரம் ஆழ்குழாய் கிணறுகள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது, அதிலே இருக்கிற கஷ்டமான நிலைமை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரிந்திருக்கும். அதிலே கடன் பாக்கியுள்ள எந்த விவசாயியும் கடன்வாங்கமுடியவில்லை. அது மட்டுமல்ல, 500 அடிக்குள்ளாக அங்கே பில்டர் பாயின்ட் போடக்கூடாது என்ற விதி இருக்கிறது. 5, 10 ஏக்கர் நிலம் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு இதன் மூலம் ஏற்படுகிற இடர்பாடு காரணமாக எல்லா இடங்களிலும் கடன் பெற முடியவில்லை, ஆகவே 500 அடிக்குக் குறைந்த இடத்திலே போடக்கூடாது என்ற விதியைத் தளர்த்தி 5 ஏக்கர் வைத்துள்ளவர்கள் அந்த இடங்களிலே பில்டர் பாயின்ட் போட்டுக்கொள்ளலாமென்றும் கடன் வசதிகளைப் பெறலாம் என்றும் வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கம் மூலமாக 15 ஆயிரம் க்டன் பெற்று விசைமூலமாக பம்புசெட் மூலமாகச் செய்கிறார்கள். போர்க்கால அடிப்படையில் இதை செய்ய வேண்டும். ஆயிரம், 500 என்று சொல்கிறார்கள், அதை 5 ஆயிரம் 10 ஆயிரமாக உயர்த்த வேண்டும். ஆழ்குழாய் கிணறுகளை சி. என். டி. பகுதியிலே 400, 500 அடி ஆழத்திலே சி. என். டி. பகுதியிலேயும் நான்–சி. என். டி. பகுதியிலேயும் கூட்டுறவு மூலமாக நிலவளவங்கிகளின் மூலமாகப் போட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கடன்களைக் கொடுத்தால் நெல் உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே அவர்கள் பாடுபட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



குறிப்பாக நம்முடைய அந்த பகுதி விவசாயிகள் நிலவள/வங்கிகளுக்கு இருக்கிற கடன்களை 15 ஆயிரத்திலேயிருந்து 40 ஆயிரமாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து கூட்டுறவுக் கடன்களை எல்லாம் ரத்து செய்யவேண்டும் அந்த பகுதி பா லவனமாக இருக்கிறது. நெல்லுக்கு கட்டுபடியாகக்கூடிய விலை இல்லாத காரணத்தால் விவசாயிகளுக்கு பெரும் கடன் சுமையிருக்கிறது. அரசாங்கம் கூட கடந்த தேர்தல் சமயத்தில் அளித்த வாக்குறுதிகளுக்கேற்ப 5 ஏக்கர்களுக்குள்ளே இருக்கிற எல்லா விவசாயிகளுக்குள்ளே இருக்கிற எல்லா விவசாயிகளுக்கும் கடன்களை ரத்து செய்துவிட்டார்கள் ஆனால் அது போதாது என்பது தான் எங்களுடைய எண்ணம். ஐந்து ஏக்கர் என்றால் எல்லா விதமான கடன்களையும் ரத்து செய்யவேண்டும். அந்த பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டுவிட்டது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்தின் அடிப்படையில் செலவு செய்த அத்தனை பொருள்களும்—சம்பா தாளடி போன்ற பயிர்கள் இன்றைக்கு கருகி, காய்ந்து விட்டன. விவசாயிகளுக்காகும் சாகுபடி செலவு எவ்வளவு என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த அளவிற்கு செலவு செய்து சாகுபடி செய்த அத்தனையும் இன்றைக்கு கருகிவிட்ட காரணத்தாலே, கூட்டுறவு சங்கத்திலே இருக்கிற கடன்கள் அத்தனையையும் ரத்து செய்யவேண்டும். கடன்பட்ட விவசாயிகள் அதிலிருந்து மீளுவதற்கு உதவியாக அரசாங்கம் இந்த விலக்கினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வறட்சி வேலைகள் இப்போது நடைபெறுகின்றன. இந்த வறட்சி வேலைகளில் கூட்டுறவு லேபர் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியை பல்வேறு இடங்களில் ஏற்படுத்தி, தனிப்பட்ட கான்ட்ராக்ட்களுக்கு விடாமல், லேபர் கான்ட்ராக்ட் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு இதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து நம்முடைய கிராம கூட்டுறவு சொசைட்டிகள் பல இடங்களில், தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. அதிலே பணிபுரிகின்ற பணியாளர்கள் மத்திய கூட்டுறவு வங்கியினரால் நியமிக்கப்படுகின்றனர். சாதாரணமாக எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்து விட்டு அவர்கள் அங்கேயிருக்கிற அத்தியாவசியமான பொருள்களான அரிசி, மண்ணெண்ணெய் போன்ற பொருள்களை கொடுப்பதற்காக இருக்கிறார்கள். 100 ரூபாய், 150 ரூபாய் என்று அவர்களுக்கு மாத சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஆடிட்டிலே அவர்களை நியமிக்கக் கூடாது என்று எழுதுகிறார்கள். அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது என்னவென்றால், அவர்களுக்கு கூட்டுறவு பயிற்சியின் மூலமாக—புட் இன்ஸ்ட்டிடியூட் பயிற்சி முகாம் என்று இருக்கிறது. அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலே புட் இன்ஸ்டிடியூட் பயிற்சி முகாமில் பயிற்சி கொடுத்து நிரந்தரமாக இந்தப் பணியிலே அவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டும். எல்லா கிராமங்களிலும் ஏறத்தாழ ஆயிரக்கணக்கான மக்கள் பணிபுரிந்து வருகிறார்கள் இதை நிச்சயமாக செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக பாரத பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் 20 அம்சத் திட்டத்தில் பல்வேறு வசதிகள் கூட்டுறவு சங்கங். களுக்கு கொடுக்கப்படுகின்றன, வறுமை கோட்டிற்கு கீழே இருக்கிற மக்களுக்கு பல்வேறு வசதிகளை கொடுப்பதற்கு பால் பண் ணை மட்டுமல்ல, மெஷின்கள் கொடுப்பது மட்டுமல்ல, நெசவுத் தொழிலில் மட்டுமல்ல எல்லாவிதமான வசதிகளையும் 20 அம்சத் திட்டத்தில் கொடுக்கிறார்கள், தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளிலே தான்அதி மாக கடன் கொடுக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக அதிகமாக கடன்களை கொடுக்கவேண்டும். நகை யீட்டு கடனாக ஏறத்தாழ 100 கோடிக்கு மேலே கொடுக்கப் படுகிறது என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லப்படுகிறது. ஆனால் அந்தத்தொகை போதாது. ஏறத்தாழ 200 கோடி, 300 கோடி என்று நகையீட்டுக் கடனாக கொடுக்கப்பட வேண்டும்? ஐ.ஆர்.பி. திட்டத்தில் 20 அம்சத் திட்டத்திற்கு ஏழை, எளிய மக்கள் நல்வாழ்விற்காக அதிகப்படியான கடன்கள் இந்த அரசு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து லேபர் காண்ட்ராக்ட் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு கொடுப்பதற்கு 25 ஆயிரம் ரூபாய் வரை எஸ்டிமேட் ரேட்டில் ஏப்ரலில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ஒப்படைக்கப் பட்டது. 1958-லோ, 1960-லோ ஒரு ஜி. ஓ போடப்பட்டது. அந்த காலத்திலேயிருந்து 20, 25 ஆண்டுகளாக அதுவே இருந்து வருகிறது. அதை ஒரு லட்சத்திற்கு மேலே அதிகப்படுத்தினால் இப்போது விலைவாசி உயர்ந்திருக்கிற நேரத்திலே அது நலமாக இருக்கும் என்று அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வந்து விடைபெறுகிறேன்.

*திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீதித் துறை, சிறைத் துறை, கூட்டுறவுத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

மாநிலத்திலே உள்ள கிளைச் சிறைச்சாலைகள் அனைத்தும் இதுவரையில் வருவாய்த் துறையினுடைய கட்டுப்பாட்டிலே இருந்து வந்ததாலே சிறைக் கைதிகள் களுக்கு சரியான பாது காப்பு இல்லாத நிலையைப் போக்கி, இப்போது எல்லாக் கிளைச் சிறைகளையும் சிறைத்துறையினுடைய கீழ் கொண்டு வந்ததற்காக அமைச்சர் அவர்களை பாராட்டுகிறேன். கடன் நிவாரணச் சட்டத்தில் அடகு பொருள்களுக்கும், ஈடு, ஒத்தி முதலிய பொருள்களுக்கும் தான் அந்த சட்டம் செல்லுபடியாகும் என்று தீர்ப்புகள் வழங்கியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

புரோ நோட்டுகள் இந்தச் சட்டத்திலே அடங்காது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதற்கேற்றவாறு அந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



தாசில்தாரிடமும் துணைக் கலெக்டரிடமும் சில சட்டங்கள் கொடுத்து, அதிலே தீர்ப்பு வழங்குகின்ற அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தாசில்தாருக்கும் துணைக் கலெக்டர் களுக்கும் சட்டம் என்பதே என்னவென்று தெரியாத சூழ்நிலையிலே அவர்கள் தற்போது எவ்வாறு எழுதுகிறார்கள், அவர்களுக்கு யார் எழுதித் தருகிறார்கள் என்று கேட்கக் கூடிய நிலைமையிருக்கிறது. எனவே, அந்த மாதிரி தீர்ப்புகள் சட்ட சம்பந்தமான பிரச்னைகள் வருவதைக் கோர்ட்டுகளுடைய அதிகாரத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியகுளத்திலே சப்-கோர்ட்டுக்கு எனத் தனியாகக் கட்டி டங்கள் கிடையாது. அதே போல சப்—ஜட்ஜுக்கெனத் தனி யாகக் குடியிருப்பு மனை இல்லை. அதையும் கட்டித் தர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொடைக்கானலிலே உள்ள கோர்ட் வருவாய்த் துறை அலு வலகத்திலே இயங்கி வருகிறது. அந்த கோர்ட்டினுடைய நீதிபதி யாக தாசில்தார்தான் செயல்பட்டு வருகிறார். மேலும் பெரிய குளம் மாவட்ட நீதிபதி மட்டும் மாதம் ஒருமுறை கொடைக்கான லுக்குச் சென்று அங்கே நீதி வழங்குகிறார். அதே போல் கிரிமி னல் வழக்குகள் 30, 40 மைல்களுக்கப்பாலுள்ள நிலக்கோட்டை நீதிபதி வாரத்திற்கு ஒருமுறை கொடைக்கானலுக்கு வந்து அங்கு நீதி வழங்குகிறார். வெளியூர்களிலேயிருந்து வந்து அங்கே நீதி வழங்கக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. அதே நேரத் திலே சில அதிகாரங்கள் தாசில்தாரிடத்திலே கொடுக்கப்பட்டி ருக்கின்றன. இந்தக் குறையைப் போக்குவதற்காக சிவில், கிரிமி னல் இரண்டையும் இணைத்து ஒரு நீதிமன்றம் அமைத்து, அதற் குத் தனியாக ஒரு நீதிபதியை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலும், கூட்டுறவுத் துறையிலே இயக்குநர்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார் கள். அந்தத் தலைவரை நீக்குவதற்கு அதே இயக்குநர்களுக்கு அதிகாரம் இல்லையென்ற நிலையிருக்கிறது. அதைப் போக்கு வதற்காகச் சட்டத்தைத் திருத்தி யார் தேர்ந்தெடுக்கிறார் களோ, அவர்களே, அந்தத் தலைவரை நீக்குவதற்கும் அதிகாரம் பெற்றிட வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே ஒரு கூட்டுறவு பண்டகசாலை இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதிலே 9 இயக்குநர்கள் இருக்கி றார்கள். 4 பேர்கள் காலியாகிவிட்டார்கள். மீதி உள்ள 5 பேர் களிலே ஒருவர் ராஜிநாமா செய்யவேண்டுமென்று விரும்பினால், அவர் போர்டுக்கும் எழுத முடியாது, டி. ஆர்.ருக்கும் எழுத முடி யாது, ஜே. ஆர்.ருக்கும் எழுத முடியாது, ரிஜிஸ்திராருக்கும் எழுத முடியாது. அதற்குச் சட்டத்திலே இடம் இல்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமையைப் போக்கி, எந்த ஒரு இயக்குநரும் விரும்பும் போது ராஜிநாமா செய்து கொள்ளக்கூடிய உரிமையை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கேரளாவில் வழக்கறிஞர்களுக்கென்று தனியாக ஒரு இன்ஷூரன்ஸ் ஆரம்பித்துள்ளதைப் போன்று, தமிழகத்திலே வழக்கறிஞர்களுக்கென்று தனியாக ஆரம்பித்து, அவர்கள் பிற்காலத்திலே நிம்மதியான வாழ்க்கை வாழ வசதி செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல் தாலுகாவிலே கூட்டுறவுஅங்காடிகள் நிறைய கிடையாது. ஒருசில கூட்டுறவு அங்காடிகளே இருக்கின்றன. அவற்றின் மூலமாகத்தான் ரேஷன் மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கப்படுகின்றன. அந்தப் பண்டங்களை வாங்குவதற்குப் பல கிராமங்களிலே இருந்து 7 மைல், 8 மைல் நடந்து வந்து ஒரு பகுதியிலுள்ள மக்கள் வேறு பகுதியிலே பொருள்கள் வாங்கவேண்டியிருக்கிறது. அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கிராமத்திற்கொரு அங்காடியை ஏற்படுத்தி, அந்த அங்காடியிலே அத்தியாவசியப் பண்டங்களை விற்பனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, தீர்ப்பு நகல்களைப் பெறுவதற்காக காப்பி அப்ளிகேஷன் பைல் செய்கிறோம். ஆர்.சி.ஓ.பி.–க்கு ரூ. 1; ஆனால் மற்ற காப்பி அப்ளிகேஷன் பெற வேண்டுமென்றால் 4 அணா. அந்த வித்தியாசத்தைப் போக்குவதற்காக, எல்லா காப்பி அப்ளிகேஷன்களும் ரூ. 1 என்று ஏற்படுத்தினால் அரசுக்கும் வருமானம் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய கோர்ட் தீர்ப்புகளை நிறைவேற்ற போலீசை அணுக வேண்டியிருக்கிறது. ஆனால், போலீசுக்குப் பந்தோபஸ்து வேலை போன்ற பலதரப்பட்ட வேலைகள் இருப்பதால் கோர்ட்டுகளுடைய தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்கு வர முடியாத சூழ்நிலை இருப்பதால், மாவட்டத்தின் மையப் பகுதியிலே மாவட்ட மன்றத்தினுடைய நீதிபதியின் கன்ட்ரோலின் கீழ் ஒரு போலீஸ் படையை நிறுவி கோர்ட்டுகளுடைய தீர்ப்பை நிலைநாட்டுவதற்கு அந்த போலீஸ் உதவியைக் கேட்டுப் பெறுவதற்கு அந்த மாவட்ட நீதிமன்றத்தின் கன்ட்ரோலிலே போலீஸ் படை ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமீனாக்கள் கிராமங்கள் தோறும் செல்கிறார்கள். அவர்களுக்கென்று ஐடென்டிபிகேஷன் கார்ட் கிடையாது. எனவே, அவர்களுக்கு ஐடென்டிபிகேஷன் சார்ட் கொடுத்து, அவர்களுடைய பெயரான அமீனா என்பதை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவில் ஜூரிஸ்டிக்ஷனைப் பொறுத்த வரையில் 5,000 ரூபாயில் இருந்ததை 15,000 ரூபாய் என்று ஏற்றியிருப்பதை 10,000 ரூபாய் என்று குறைத்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





சில வழக்குகளில் சட்டம் படித்த வழக்கறிஞர்கள் வாதாடக் கூடாது, பார்ட்டிகளைக் கொண்டுதான் வாதாட வேண்டுமென்று இருப்பதை மாற்றி, சட்டம் இயற்றப்பட்டு, சட்டம் சம்பந்தமாக தீர்ப்பு சொல்லக்கூடிய எல்லா வழக்குகளிலும் வழக்கறிஞர்கள் வாதாடுகின்ற உரிமையைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரியகுளத்தில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டு ஏற்படுத்தித்தர வேண்டுகிறேன்.

எல்லாத் துறைகளிலும் மாவட்டங்களில் இன்ஸ்பெக்ஷன் பங்களா இருக்கிறது. ஆனால் நீதிபதிகளுக்கென இன்ஸ்பெக்ஷன் பங்களா ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இல்லை. எனவே, அதை ஏற்படுத்தித் தந்தால் அவர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் செல்லுகின்றபொழுது அதிலே தங்கியிருந்து தங்கள் பணிகளைச் செய்வதற்கு உதவும் என்று கூறி, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

* **திரு. ரா. கிருஷ்ணன்** : தலைவரவர்களே, சட்டம், சிறை, கூட்டுறவு சம்பந்தமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களை நான் இங்கே கூற விரும்புகிறேன். கடந்த சில காலமாக, இந்தச் சட்டமன்றத்திற்கும், உயர்நீதி மன்றத்திற்கும் ஏற்பட்டிருக்கும் முரண்பாடு ஒரு பெரிய சர்ச்சைக்குரிய விஷயமாக இருந்து கொண்டிருக்கிறது. எங்களைப் பொறுத்த வரையில் சட்டமன்றத்திற்கென்றே சில தனித் தன்மைகள் உண்டு; அதைப்போல நீதிமன்றத்திற்கு என்றும் சில தனித் தன்மைகள் உண்டு. அந்த இரண்டு தனித் தன்மைகளும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம். அந்தத் தனித்தன்மைக்கு மாறுபட்டு ஒன்றையொன்று எல்லையை மீறுகின்றபொழுதுதான் பிரச்னைகள் உருவாகின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாகாமல் இருப்பதுதான் ஜனநாயகத்திற்கும் நல்லது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் நான் கூற விரும்புவது என்னவென்றால்,

* * * *

எக்ஸ் பார்ட்டியாக உத்தரவுகள் பிறப்பிப்பதற்குச் சட்டத்தில் இடமுண்டு, ஆனால் அரசுக்குப் பாதகமாக ஒரு நிலை ஏற்பட்டு விட்டால் அல்லது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால், உடனடியாக அந்த எக்ஸ் பார்ட்டி ஆர்டரை ரத்து செய்யவோ அல்லது வேகமாக விசாரிக்கவோ நடவடிக்கை எடுக்கலாம், அந்த அடிப்படையிலே மனுச் செய்வதற்கும் சட்டத்திலே இடமிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பரிகாரத்தைக் காண்பதுதான் சட்டபூர்வமாக இருக்கும். **

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், என். ஜி. ஓ. பிரச்னையைப் பொறுத்த வரையில், சில ஊழியர்கள்மீது அனைத்து அரசும் நடவடிக்கை எடுத்தது; சிலரை சஸ்பென்ட் செய்தார்கள்; சஸ்பென்ட் செய்யப்பட்ட என். ஜி. ஓ.க்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தடையுத்தரவு கேட்டார்கள். உயர்நீதி மன்றத்திலேயிருந்து அரசுக்கு நோட்டீஸ் அனுப்பினார்கள். அப்படி நோட்டீஸ் அனுப்பப்பட்டும், காலா காலத்தில் பதில் கொடுப்பதற்கு அரசு தயாராக இல்லை. நீண்ட நெடிய காலம் தாழ்ந்த நிலையில், உயர்நீதிமன்றத்தில் சஸ்பென்ஷன் ஆர்டரை ரிவோக் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

* * *

நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில் எல்லாவற்றையுமே விமர்சிக்கக் கூடாது என்பது அல்ல பிரச்னை. அரசியல் சட்டத்தைப் பொறுத்த வரையில், 211 என்ன சொல்கிறது என்றால், உயர்நீதிமன்றத்தின் அல்லது உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி அவர்கள் இருக்கையில் இருந்து தீர்ப்பு வழங்குவதை பொறுத்தவரையில் விமர்சனம் செய்யக் கூடாது என்பதுதான்.

No discussion shall take place in the Legislature of a State with regard to the conduct of any Judge of the Supreme Court of a High Court in the discharge of his duties.

(பிற்பகல் 12-20.)

ஆகவே இது ஏதோ ஒரு புனிதத் தன்மையுள்ளது என்ற முறையில் நாம் போக வேண்டியது இல்லை.

* * *

அதை நாம் விமர்சிக்கக் கூடாது என்பது பொருள்: ஆனால் வழங்கப்பட்ட தீர்ப்பைப் பொறுத்தவரையில் நாம் மேல் முறையீடு செய்ய வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. உயர்நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டால், டிவிஷன் பெஞ்ச் இருக்கிறது, ஃபுல் பெஞ்ச் இருக்கிறது, அதற்கு மேல் உச்ச நீதிமன்றத்திற்குப் போகலாம். அங்கேயும் வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் அதை விமர்சனம் செய்யலாமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

** ** **

இப்படிப்பட்ட சூழ்நிலையில், ''ஒரு முள்ளில் பட்ட துணியை எடுப்பது போல'' ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நீதித் துறையைப் பொறுத்தவரையில் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் கோட்பாட்டிற்கிணங்க நீதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் எங்களைப்பொறுத்த வரையில், இன்றைய Constitution is a sort of Promissory Note which does not change the rule or state of aaffirs என்பது தான் நிலைமை. அடிப்படை தேவைகளில் மாற்றம் ஏற்படுவதற்கு வழி முறைகள் இல்லாவிட்டாலும் கூட, ஒரு வரையறை, அதாவது குறைந்தபட்ச ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அந்தக் குறைந்தபட்ச ஏற்பாடு ஜனநாயகத்திற்கு ஒரு பாதுகாப்பு இல்லாத நிலைமை வந்துவிடக் கூடாது என்பது தான் இன்று இருக்கக் கூடிய நிலைமை. ஆக அந்த அடிப்படையில் இருக்கக் கூடிய வாய்ப்பு வசதிகளை சாதாரண, உழைப்பாளி, தொழிலாளி மக்களுக்கு பயன்படக் கூடிய நிலைமையை உருவாக்க வேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு சந்தேக வழக்குகள் மிகஅதிகமாகவே இருப்பதாக நான் கருதுகிறேன். சந்தேக கேஸ்கள் போடப்படுகின்ற காரணத்தால் சாதாரண மக்கள் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிறது. அதனாலே சிறைச்சாலைகளிலே இட நெருக்கடி ஏற்படுகிறது. சம்பந்தமே இல்லாத, சாதாரண அப்பாவிகள், அழுக்கு வேட்டி கட்டி இருக்கிறான் என்பதன் காரணமாக சந்தேக கேஸ்கள் அவர்கள் மீது போடப்படுவதன் காரணமாக ஜெயிலில் இட நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளை தவிர்க்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வள்ளியூர் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்டைப் பொறுத்த வரையில் இங்கே குறிப்பிட்டார்கள். பொதுவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். சேரன் மாதேவியில் ஒரு நீதிமன்றம் இயங்கி வருவதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே அது இயங்கவில்லை; ஆனால் உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. வள்ளியூர் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் அமைப்பது மிக அவசியம் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சிவகிரி ஒரு தாலுக்கா. ஏற்கனவே நீண்ட நெடுங்காலமாக இங்கே ஒரு கேம்ப் கோர்ட் செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் சமீப காலத்தில் வழக்குகள் அதிமாக இல்லை என்ற காரணத்தாலே கேம்ப் கோர்ட்டு ரத்து செய்யப்பட்டது. அதை மீண்டும் ஏற்கனவே இருந்த மாதிரி, நீதிமன்றம் தொடர்ச்சியாக செயல்பட உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கனவே கூட இந்த மன்றத்திலே குறிப்பிட்டு பேசி இருக்கிறேன்.

மாவட்ட தலைநகரில் ஒரு இடத்திலே தான் முன்சீப், சப் ஜட்ஜஸ், மாஜிஸ்டிரேட் ஆகியவர்களுக்கு குவார்ட்டர்ஸ் இருக்கிறது. மாவட்ட அளவிலே அந்த கோர்ட்டுகளுமே பக்கத்து பக்கத்திலே இருக்கிறது. ஆனால் பொதுவாக மாஜிஸ்டிரேட்டுகளும், சாட்சியம் சொல்ல வந்தவர்களும், அல்லது குற்றவாளிகளும், எல்லோருமே காரிலே போகும்போது இந்த மாஜிஸ்ட்டிரேட்டுகள் அந்த வண்டியிலே ''ஃபுட் போர்டில்'' தொ கிக்கொண்டு போக வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை மாற்ற வேண்டுமென்று சொன்னால், மாஜிஸ்டிரேட், முன்சீப், சப்—ஜட்ஜ் ஆகியவர்களுக்கு கோர்ட்டுக்கு வருவதற்கும், வீடு திரும்புவதற்கும், தனியாக ''வேன்'' ஏற்பாடு செய்தால் பொருத்தமாக இருக்குமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை உடனடியாகசெய்வது மிகஅவசியம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே, சீப் ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட்டைப் பொறுத்த வரையிலே தனியாக கார் வழங்கப்பட்டிருக்கிறது. அது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. இந்த முன்சீப் கோர்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் அந்த வேன் வழங்கும் ஏற்பாடு செய்வது மிக அவசியம் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். கேரளாவில் இருப்பதைப்போன்று வழக்கறிஞர்களுக்கு இன்ஷுரன்ஸ் திட்டத்தை அமுல்படுத்துவது மிகமிக அவசியம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழில் புத்தகங்கள், சட்டப் புத்தகங்கள் விரிவான அளவிலே மிக வேகமாக கொண்டு வருவதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இலவச சட்ட உதவியைப் பொறுத்த வரையில் இது ஒரு பொருத்தமான ஏற்பாடு இல்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இதைப் பொறுத்த அளவிலே இப்போது ஃபீஸ் மிக மிகக் குறைவு. ஒரு அக்யூஸ்டு பொறுத்தவரையிலும், அவர்களுக்கு விருப்பமான ஒரு வழக்கறிஞரை வைத்துக்கொண்டு வாதாடுவதற்கு எந்த வாய்ப்பும் வசதியும் கிடையாது. ஏற்கெனவே அதைப்பற்றி ஹைகோர்ட்டிலே கூட ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டு அதிலே கூட ஒரு தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது. அரசாங்கம் ஆலோசனை செய்வதற்கு பலவிதமான அட்வகேட்கள் வைத்து ஏற்பாடு செய்யப்படும் வாய்ப்பு வசதி இருக்கிறது இதற்கு பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்கிற வசதியிருக்கிறது. ஆனால், ஒரு அக்யூஸ்ட்டைப் பொறுத்தவரையில் தனக்கு விருப்பமான ஒரு வழக்கறிஞரை வைத்து வாதாடுவதற்கு வசதி கிடையாது. இந்த இலவச சட்ட உதவி என்றால், 35 ரூபாய் ஒரு நாளைக்கு ஃபீஸ் கொடுத்தால், எந்த ஒரு அட்வகேட்டுமே அங்கே ஆஜராகமாட்டார்கள். கொலை வழக்கு 3 நாளைக்கு வந்தாலும் 100 ரூபாய்தான் ஃபீஸ் இருக்கும். ஆகவே இன்ட்ரெஸ்ட் இல்லாமல் எந்த வழக்கையும் நடத்த முடியாது.



அநியாயமாக தண்டிக்கப்பட வேண்டிய ஒரு பரிதாபமான நிலை ஏற்படலாம். ஆக, தாராளமாக அந்த நிதி உதவியை வழங்கி விருப்பமான வழக்கறிஞர்களை வைத்து வாதாடுவதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது மிக அவசியம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் சிறைச்சாலைகள் சீர்திருத்தக் கூடமாக செயல்பட வேண்டுமென்பது தான் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய கொள்கை. ஆனால், எதிர்க்கட்சியில் இருக்கும்போது, எதிர்க்கட்சியாக செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது சிறைச்சாலை வசதிகள் பற்றி பேச வேண்டிய நிலைமையும், ஆனால் ஆளும் கட்சியாக வந்தவுடனே அதைப் பற்றி அக்கறைப்படாத ஒரு போக்குதான் தொடர்ச்சியாக இருந்துவருகிறதை நான் பார்க்கிறேன். பிரிட்டிஷ்காரர்கள் காலத்திலே காங்கிரஸ்காரர்கள் சிறைப்பட்டார்கள். அவதிப்பட்டார்கள். சிறைச்சாலைகள் எல்லாம் சீர்திருத்தப்படவேண்டுமென்று அன்றைக்கு நினைத்தார்கள். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு அதைப்பற்றி அக்கறைப்படவில்லை. ஆகையினால் ஒரு பொருத்தமான ஏற்பாடு செய்வது மிக அவசியம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அடுத்து சிறைச் சாலைக் கொடுமைகள் பற்றி நீதிபதி இஸ்மாயில் கமிஷன் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசுக்கு என்ன தயக்கம்? நடவடிக்கை எடுக்காவிட்டாலும் பரவாயில்லை, குற்றம் சாட்டப்பட்டவர்கள் இன்றைக்கு பதவி உயர்வு பெறக்கூடிய ஒரு நிலை ஏற்படுமானால்—ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பட்டார்கள்—அதன் காரணமாக தாக்கியவர்களுக்கு பதவிஉயர்வு கொடுப்பது என்பது ஒரு தவறான கொள்கை. அதை தயவு செய்து நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு, மத்திய அரசின் ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளையும் நரசிம்மன் குழுவினுடைய பரிந்துரைகளையும் நாம் அமுல்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஏற்கெனவே இங்கே கொள்கைக் குறிப்பிலே தரப்பட்ட நரசிம்மன் குழுவின் பரிந்துரைகளில் மொத்தம் 223-லே 70 பரிந்துரைகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவும் நிதி சம்பந்தமான பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு நீங்கள் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் இங்கே தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, கைதிகளின் உணவுக்கு தினப்படி ரூபாய் 6 கொடுக்க வேண்டுமென்பது பரிந்துரை. ஆனால், இன்றைக்கு 4.50 காசு அளவில்தான் வழங்கப்படுகிறது. 4.50 காசு

அளவிலே வழங்கப்பட்டாலும் கூட கைதிகளுக்கு அந்த 4.50 காசுக்கான உணவு கிடைக்கிறதா என்றால் நிச்சயமாக கிடையாது. அந்த கான்ட்ராக்ட் முறையை உடனடியாக நீக்க வேண்டும். இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக சில உணவுப் பொருள்களை வழங்கலாம். அதன் மூலமாக ஊழலைத் தவிர்ப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்யலாம். ஆகவே, அந்தக் குறைந்தபட்ச ஏற்பாட்டைச் செய்வது மிக அவசியம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இந்த கைதிகள் பணிகளுக்காக அமர்த்தப்படுகின்றபோது தரமான தொழிலாளர்களுக்குக்கூட ஒரு மாதத்திற்கு சம்பளம் ஒரு ரூபாய். ஸ்கில்டு ஓர்க்கர்ஸ், செமி ஸ்கில்டு ஓர்க்கர்ஸ், இவர்களுக்கு ஒரு மாதத்திற்கு, செமி ஸ்கில்டு 50 காசு. அன்ஸ்கில்டு ஓர்க்கர்ஸ் என்றால் 25 காசு. நம்முடைய வரலாற்றிலேயே கேள்விப்பட முடியாத அளவுக்கு நாம் சம்பளம் கொடுக்கிறோம். அதே போன்று காவலர்களைப் பொறுத்தவரையில் கன்விக்ட் வார்டர்கள் அமர்த்தப்படுகிறார்கள். அது கூடவே கூடாது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலே ஏதாவது உரிமைகளைக் கைதிகள் கேட்கும் போதும் அல்லது ஊழல் செய்கின்ற அதிகாரி தங்களை பாதுகாக்க வேண்டும் என்று ஒரு நிலைமை ஏற்பட்டால், இந்தக் கைதிகளை கன்விக்ட் வார்டர்களை வைத்துக் கொண்டு கொடுமையான முறையிலே தாக்குகின்றார்கள். நிராயுதபாணியாக இருக்கும் கைதிகளைத் தாக்குவதும் அநியாயம், அக்கிரமம். இப்படிப்பட்ட கொடுமைகள் நீக்கப்பட வேண்டுமானால் இந்த கன்விக்ட் வார்டர் முறை அடியோடு ரத்து செய்யப்பட வேண்டும்.

(பிற்பகல் 12—30)

சிற்றுண்டி நிலையம் வைக்க வேண்டும் என்று பேசினோம். அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அது கொள்கைக் குறிப்பிலும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சிற்றுண்டிச்சாலை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் பாளையங்கோட்டை சிறைச்சாலைக்குப் போனேன். அங்கே சிற்றுண்டிச்சாலை எங்கே அமைக்கப்பட்டிருக்கிறது என்றுசொன்னால், அந்த கேட்டுக்கு வெளியே வைத்து இருக்கிறார்கள். ஜெயிலுக்கு, வெளியே இருப்பவர்கள் தான் அந்தக் கடையில் டீ சாப்பிட முடியும். அல்லது அந்த ஜெயில் வார்டர்கள் சாப்பிட முடியும். கைதிகள் சாப்பிடுவதற்கு வசதிகள் இல்லை. ஜெயிலின் உள்ளே இருக்கும் கைதிகளுக்கு இந்த கேன்டீன் வசதி செய்து தரப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டது. ஆனால், அதை அரசாங்கம் கேட்டுக்கு வெளியே ஏற்படுத்தியிருப்பது சரியல்ல. அதனால் எந்தவிதமான பயனும் அந்தக் கைதிகளுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, அது ஜெயிலுக்கு உள்ளே செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அப்படி வைத்தால், அந்தக் கைதிகள் தங்களின் இஷ்டத்திற்கு தேவைப்பட்டபோது, குறைந்த பட்சம் அவர்கள் வட்டில் இருந்து வரக் கூடிய பணத்தை வைத்துக்கொண்டு ஏதாவது டீ பன் சாப்பிட முடியும். பீடி தேவையென்றால் வாங்கிக்கொள்ள முடியும். இந்த பீடி பிரச்சினைதான் சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இந்த பீடியால் அங்கே பல ஊழல்கள் நடக்கின்றன. ஒரு கட்டு பீடிக்கு ஒரு உருண்டை சோறு என்றெல்லாம் ஊழலுக்கு அது வழிவகுக்கிறது. குறைந்தபட்சம் 5 பீடி அவர்களுக்கு ஒரு நாளைக்குக் கொடுக்கலாம். அதனால் ஒன்றும் குறைந்துபோய்விடாது. ஏற்கெனவே ஜெயிலுக்குள்ளே ** ** அந்த நடவடிக்கைகள் தடுக்கப்பட்டாக வேண்டும். அப்படியிருக்கிற நேரத்தில், அவர்களுக்கு 5 பீடி கொடுக்க வேண்டும் என்பதையும் நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

அதைப்போலவே பெட்டி கேஸ்களில் சம்பந்தமாக எந்த ஒரு நபரையும் சிறைச்சாலைக்கு அனுப்பக்கூடாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜெயிலுக்குள்ளே * * என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது. இன்றைக்கு சபையை நான் மிகவும் ஜாக்கிரதையாக நடத்திக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. எல்லோரும் ஜெயிலுக்குப் போய் பழக்கம் உள்ளவர்கள்தான். நான் ஜெயிலுக்குப் போகாதவன் அல்ல. அதற்காக நமக்குத் தெரிந்ததை எல்லாம் இங்கே சொல்லிவிடுவது சரியல்ல. ஆதாரம் இருந்தால் குற்றச்சாட்டு சொல்லலாம். ஆதாரம் இல்லாமல் குற்றம் சாட்டுவதை அனுமதிக்க முடியாது. ஆகவே, அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகின்றன.

திரு. கு. ரமணி : : இவைகள் சிறைக்குள்ளே நடக்கும் விஷயங்கள். இவற்றிற்கு ஆதாரம் கொண்டுவருவதற்கு நம்மால் முடியாது. ஆனால், இதைப் பற்றி ஆதாரப்பூர்வமாக தெரிந்து கொள்வதற்கு அரசாங்கத்திற்கும், தலைவருக்கும் ஒரு வழி இருக்கிறது. இப்படி ** ** சிறைக்குள்ளே கண்டுபிடிக்கப்பட்டு, அதற்காக தண்டனையும் சம்பந்தப்பட்டவர்கள் அடைந்து இருக்கிறார்கள். அந்த பிகர்ஸ் கேட்டால் கிடைக்கும். ஆகவே, இங்கே பேசுகிறபோது பொத்தாம் பொதுவாகத்தான் பேச முடியுமே தவிர, ஆதாரம்தர இயலாது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இங்கே விளக்கம் சொல்லியதன் மூலம் மேலும் அதை விரிவாக்கிவிட்டீர்கள். உங்கள் சாமர்த்தியத்தை நான் பாராட்டுகிறேன். அப்படி ஏதோ நடந்து இருக்கலாம். அது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கலாம். அது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிந்து இருக்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் ஐந்து பீடி கொடுக்க வேண்டும், என்று பேசிக்கொண்டு வருகின்ற நேரத்தில், அவர் கருத்தை வலியுறுத்த வேண்டும் என்பதற்காக பல வழிகள் இருந்த போதிலும், இத்தகைய நடவடிக்கைகள் அங்கே நடக்கின்றன. ஆகவே, இதைக் கொடுத்தால் என்ன என்று கேட்பதுபோல் பேசுவது சரியல்ல. தப்பு செய்தவர்கள் தண்டனை அனுபவிப்பதற்காக ஜெயிலுக்கு அனுப்பப்படுகிறார்கள். அப்படி அவர்கள் ஜெயிலுக்குள் போன பின்பும் அவர்கள் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. இதையெல்லாம் வெளியே இருப்பவர்கள் பார்க்கிற நேரத்தில் தவறாகச் சுட்டிக்காட்டுவார்கள். ஆகவே, திரு. கிருஷ்ணன் மற்றும் திரு. ரமணி குறிப்பிட்ட அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: மரண தண்டனை கைதிகளை பகல் நேரத்தில் பூட்டி வைக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பு இருக்கிறது. இந்த அரசு அதை அமுல் படுத்துவதாகத் தெரியவில்லை; அந்தத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆயுள் தண்டனை கைதிகளுக்கு 10 ஆண்டுகள் முடிந்துவிட்டால், அவர்கள் கேசை பரிசீலனை செய்து விடுதலைசெய்ய வேண்டுமென்பது ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒன்று. ஆனால் இன்றைக்கும் தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கானவர்கள் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 17 ஆண்டுகள் 18 ஆண்டுகள் முடிந்த பின்னாலும் அவர்கள் சிறையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி ஏன் அவர்களை சிறையில் வைக்கிறார்கள் என்றால் அந்த கைதிகள் சிறையில் நடக்கின்ற ஊழல்களை கண்டித்து அவர்களுடைய உரிமையைப் பெறுவதற்காக போராடக்கூடிய காலத்தில் அவர்கள் எல்லாம் வம்புக்காரர்கள், விடுதலை செய்யக்கூடாது என்று அந்த ஊழல்செய்கிறது அதிகாரிகள் குறிப்பிடுகின்ற காரணத்தால் வெளியே விடாமல் வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற தகவல் முற்றிலும் தவறானது. காரணம் அட்வைசரி போர்டு இதை பரிசீலனை செய்கிறது. ஏற்கெனவே திரு. உமாநாத் அவர்களுடைய கேள்விக்கு இங்கே பதில் சொல்லியிருக்கிறேன். கடந்த 4 மாதங்களாக 15 நாட்களுக்கு ஒருமுறை மாவட்டஆட்சித் தலைவர் தலைமையில் இருக்கிற அந்தக் குழு கூடி, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒட்டி



136025
சென்னை-600 008

1978-க்கு முன்னால் தண்டனை அடைந்தவர்கள் விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், அட்வைசரி போர்டு கூட வேண்டுமென்று சொல்லி, துரிதமான அந்தப்பணி நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: நான் ஏற்கெனவே 16 ஆண்டுகள் முடிந்திருக்கிற ஒரு கைதியைப்பற்றிக் குறிப்பிட்டேன். கலெக்டரிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும பரிந்துரை எல்லாம் வந்துவிட்டது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: : அதற்காகத்தான் சொல்கிறேன். நான் என்னுடைய உரையின் இறுதியிலே சொல்கிறேன். ஏற்கெனவே திரு. உமாநாத் அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். ஒரு கைதி 3 பேர்களை 4 பேர்களை, 5 பேர்களை கொலை செய்துவிட்டு வந்திருந்தால் 'கிராவிட்டி ஆஃப் தி அஃபன்ஸ்' குற்றத்தின் தன்மையைப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. சில நேரங்களில்தான் குற்றத்தின் தன்மையைப் பொறுத்து, அப்படி எடுக்கப்படுகிறது. மற்றபடி 15 ஆண்டுக்கு மேல், ஏன் 10 ஆண்டுக்கு மேல் சிறைத்தண்டனை பெற்றவர்கள் லிஸ்டை கேட்டிருக்கிறோம். உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன்: ஏற்கெனவே செஷன்ஸ் கோர்ட்டில் டெத் சென்டன்ஸ் போட்டால் 10 ஆண்டு என்றும், லைஃப் சென்டன்ஸ் போட்டால் 14 ஆண்டு என்றும் அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் குறிப்பிட்ட வழக்கில் ஏற்கெனவே ஸ்ட்ரேய்டாக லைஃப் சென்டன்ஸ் தான் போட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் 15 ஆண்டுக்கு மேலாகி விட்டது, இன்னும் விடுதலை செய்யவில்லை. ஆகவே இந்த 'கிராவிட்டி ஆஃப் அஃபன்ஸ்' என்று சொல்லி ஆளுக்கு ஆள் வித்தியாசம் காட்ட வேண்டாம், எல்லோருக்கும் ஒரேமாதிரி இருக்க வேண்டும்; அதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைதிகள் உரிமைக்காக, உரிமை கேட்டு போராடும்போது அவர்களை ஜெயில்விட்டு ஜெயில் மாற்றுவது கடுமையான தண்டனை. அந்த கைதிகள் அவர்களுடைய குடும்பத்தினர் தங்கியிருக்கக்கூடிய இடத்திற்கு பக்கத்தில் வைக்கப்பட வேண்டுமென்று சுப்ரீம்கோர்ட் உத்தரவு போட்டிருக்கிறது இங்கே அதை அமுல் செய்யவில்லை. அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இரண்டு ஆண்டுகள் கழித்துவிட்டால் பரோல் வழங்குவதை கொஞ்சம் தாராளமாக வழங்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

தச்சுப்பட்டறை, காகித கூடம், மூலப்பொருள் வாங்குவது விற்பனை செய்வது போன்ற விஷயங்களில் ஏற்கெனவே அதிகமான ஊழல் நடப்பதாக தகவல் இருக்கிறது. இப்படி மூலப் பொருள்களை வாங்குவது, விற்பனை செய்வது போன்ற பணிகளைக் கண்காணிப்பதற்கு, அந்த வேலைகளைச் செய்வதற்கு ஒரு குழு போட்டு அதன் மூலம் செய்ய பரிசீலிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12—40)

இந்த சிறைச்சாலைகளுக்கு விசிட்டர்கள் போவது பற்றி ஒரு விஷயம். அப்படிப் போவதில், சட்டமன்ற உறுப்பினர்களை அங்கீகரிக்க வேண்டும். அவர்கள் அடிக்கடி சிறைச்சாலைகளுக்குச் சென்று பரிசீலனை செய்வது, விசாரிப்பது போன்ற சில குறைந்த பட்ச அதிகாரத்தோடு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சில வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தவேண்டும். அந்த வகையில் செய்தால் சிறைச்சாலைகளை ஓரளவு கண்காணிக்க வாய்ப்பு ஏற்படும் என்பதையும் எடுத்துச் சொல்லி, அதை அரசு சற்று பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

மாவட்ட நீதிபதிகள் ஆங்காங்கு இருக்கக்கூடிய சிறைச்சாலைகளுக்கு வாரம் ஒரு முறை சென்று பார்வையிட வேண்டும் அங்கே தனியாக வைக்கப்பட்டிருக்கிற பெட்டிகளில்உள்ள மனுக்களை பரிசீலிக்க வேண்டும் என்ற ஒரு உத்தரவு இடப்பட்டிருப்பது குறித்து வரவேற்கிறேன். அதைச் சீரிய முறையில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறைக்காவலைப் பொறுத்தவரையில் ஆர்டர்லி முறை இருந்துக் கொண்டிருக்கிறது, அது ஒழிக்கப்பட வேண்டும். ஏற்கெனவே சிறைக் காவல்களிலே, 1978 ஆம் ஆண்டிலேயே சங்கங்கள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று கேட்கப்பட்டது. அதையும் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. குறைந்தபட்ச வசதிகளைக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும், அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது பற்றி இதுவரையில் எதுவும் தெரியவில்லை அதையும் பரிசீலனை செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

திரு வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு திரு. கிருஷ்ணன் அவர்கள் பேசுகிற போது * * என்றும் சொல்லியிருக்கிறார்கள். * *

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, * * (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரிமைகள் எல்லாம் எனக்குத் தெரியும். அலுவல் ஆய்வு குழு சம்பந்தமாக அமைச்சரிடத்திலே அப்போது நான் கலந்துரையாடிக் கொண்டிருந்ததால் முழுவதும் கவனிக்க முடியவில்லை. திரு. குப்புசாமி அவர்களுடைய முழுப்பேச்சையும் படித்துப் பார்த்தப்பிறகுதான் அவரது பேச்சில் எவை எவை அவை நிகழ்ச்சிக் குறிப்பில் இடம்பெறும், எவை எவை நீக்கப் பெறவேண்டும் என்று என்னால் முடிவு கூற முடியும், ஆகவே எனது உத்தரவு வரும் வரையில் மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்களுடைய பேச்சை எந்தப் பத்திரிகையும் பிரசுரிக்க வேண்டாம். (குறுக்கீடு) இதற்குள் பிரஸ்ஸிக்கு போய் விட்டதாகக் கூற முடியாது. அப்படியே போய் இருந்தாலும் அப்பேச்சு நிறுத்தப்படவேண்டும். (குறுக்கீடு) நான் பத்திரிகைக் காரனாக இருந்திருக்கிறேன். எனக்கு பத்திரிகைகளைப்பற்றி நன்கு தெரியும்; யாரும் விளக்கம் சொல்லவேண்டாம். இதற்குள் எந்தப் பிரஸ்ஸிலும் அச்சிட்டிருக்க முடியாது. (குறுக்கீடு).

இதையொட்டி திரு. கிருஷ்ணன் அவர்களும் கூட தேவையற்ற சில கருத்துக்கைளைச் சொல்லியிருக்கிறார்கள்.

அவரது உரையையும் முழுக்கப் படித்துப் பார்த்தபின்தான் நீக்க வேண்டிய பகுதிகள் இருந்தால் நீக்குவதற்கு ஆணையிட இருக்கிறேன்.

திரு. சுவாமிநாதன் அவர்கள் தற்போது சொன்ன கருத்தும்முழுமையாக அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. ஏற்கெனவே வழக்கு மன்றத்திலேயும், சட்டமன்றத்திலேயும் இப்பிரச்சனை விவாதிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்கள் எதுவாக இருந்தாலும் அதை அவர்கள் வெளியே சொல்லிக்கொள்ளலாம். இந்த அவையில் இனிமேல் அந்தப் பிரச்சனையை யாரும் எழுப்பவேண்டியதில்லை. நீதிநிர்வாகத்தைப் பொறுத்தவரையில் கொஞ்சம் அமைதியாகப் பேசுங்கள்.

திரு. பூ. மு. நரசிம்மன்: — மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நீதி நிர்வாகம் ஆகிய மானியங்களின்மீது என்னுடைய கருத்துக்களைச்சொல்லநான்விழைகிறேன். கூட்டுறவே நாட்டுயர்வு என்ற மகத்தான கொள்கையை நாட்டு மக்கள் உணரும் வகையில் அதைப் பிரச்சாரம் செய்து கிராமப்புற மக்கள் சமுதாயத்தினர், நலிந்த பிரிவினர் பயன் பெறுகின்ற வகையில் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு மகத்தான திட்டங்களைத்தீட்டி வருவதை நான் இந்தநேரத்திலே பாராட்டக் கடைமைப்பட்டிருக்கிறேன். கடந்த சில ஆண்டுகளாக கூட்டுறவுத் துறை சோதனையான கால கட்டத்தைக் கடந்து வந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. ரிசர்வ் வங்கியிலிருந்து வட்டிக்குக் கடன் பெற்றுத்தான் கூட்டுறவுக்

கடன்களை வழங்க வேண்டி இருக்கிறது. அப்படி இருந்தாலும் புதிய கடன்களை வழங்குவதில் சிரமங்கள் ஏற்பட்ட நிலைமையிலே கூட இன்றைய கிராமப் பகுதிகளிலே வாழ்கின்ற ஏழை எளியவர்கள் கடன்களை வாங்குகின்ற ஒரு புதிய நிலைமையை ஏற்படுத்தி இருக்கிற நம்முடைய மாண்புமிகு அமைச்சரை நான்இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். சுமார் 200 கோடி ரூபாய்க்கு விவசாயிகள் கடன்களை ரத்து செய்ததால் வங்கிகளிடமிருந்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடம் இருந்து புதிய கடன்களை இப்போது நம்முடைய அரசின் மூலமாக ஏழை எளியவர்கள் வாங்கிப் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதற்காக என்னுடையபகுதியிலே இருக்கின்ற விவசாயிகளில் சார்பாக நான் இந்தநேரத்திலே நம்முடைய புரட்சித் தலைவர் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுத் துறையிலே ஆடு வளர்த்தல், பால்பண்ணைகளை அமைத்தல், போன்ற முறைகளை ஏற்படுத்தியதோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை நிறுவி மக்கள் சிறந்த முறையிலே பயன்பெறுகின்ற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. இன்றையதினம நாட்டிலே கடுமையான வறட்சி நிலவி இருந்தாலும் கூட இப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் மூலமாக ஏழை எளியவர்கள் பயன் பெறுகிறார்கள் என்று சொன்னால் அந்த வர்க்கத்தின் சார்பாக நான் இந்த நேரத்தில் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வருகின்ற ஆண்டில் கூட்டுறவுத்துறையில் பலபுதிய கடன்கள் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை நான் இந்த நேரத்தில் பாராட்டக்கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியத் துணைக்கண்டத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே இயங்கும்இந்தஅரசுதான் கிராமஊழியர்கள் துயரினைத்துடைத்து அவர்களுக்கு உதவும் வண்ணம் 11,100 கிராமக் கூட்டுறவு அங்காடிகளை நிறுவி அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருவதை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடன் நிவாரணச் சட்டம் காரணமாக கிராம மக்களுக்குத் தனியார்கள்கடன் கொடுக்காததால் கூட்டுறவு வங்கிகள் மூலம் நகைக் கடன்கள் அளிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்திருக்கின்றது. சமுதாயத்திலே உள்ள நலிந்தபிரிவினர், 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள், ஆகியோரின் துயரைத் துடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. 5 ஏக்கருக்கும் குறைவாகக்கூட நிலம் இல்லாத ஏழை விவசாயிகள் வாழ வழிசெய்கின்ற வகையிலே ரிசர்வ் வங்கியின் குறியீடு 20 சதவீதமாக இருந்தாலும் கூட 60 சதவீதம் பேருக்கு கூட்டுறவுத் துறை மூலம் கடன் வசதி அளிக்கப்பட்டிருப்பதை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து அடுத்து நில அடமானத்தை வற்புறுத்தாமல் அரசின் உத்திரவாதத்தின் பேரில் கடன் வழங்குவதற்கு சட்டத்தில் இருத்தம்



செய்ததை உள்ளபடியே நான் இந்த நேரத்திலே பாராட்டி, இதன் மூலம் ஏழை எளியவர்கள் துணைத் தொழில்கள் மூலம் முன்னேற இந்த அரசு எவ்வளவு முயற்சி எடுத்திருக்கிறது என்பதற்காகவும் இந்த நேரத்தில்நம்முடைய அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12—50)

அதே நேரத்தில் படித்து வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதற்கு சென்னையில் நாசிக் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் தொடங்கப்பட்டு கடன்களை வழங்கி வருவதை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மேம்பாட்டுக்காக பல திட்டங்களைத் தீட்டி வருகின்ற நம்முடைய அரசை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதியான பள்ளிப்பட்டு ஒரு தாலூகா மட்டத்திற்கு உயர்ந்து இருந்தாலும் அங்கே தாலூகா மார்க்கெட்டிங் சங்கம் இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட தாலூகா மார்க்கெட்டிங் சங்கத்தை பள்ளிப்பட்டு தொகுதியின் மையப் பகுதியான ஆர்.கே.பேட்டையில் நிறுவித் தரும்படி இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் செங்கற்பட்டு மாவட்ட விற்பனை விநியோகச் சங்கக் கிடங்கு ஒன்றினை என்னுடைய தொகுதியின் மையப் பகுதியான ஆர்.கே. பேட்டையில் நிறுவி எல்லாச் சங்கங்களுக்கும் உணவுப் பொருட்களை விநியோகம் செய்ய வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பள்ளிப்பட்டு தொகுதி ஒரு தாலுகாவாக இருந்தாலும் அங்கே ஒரு 2 ஆம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நிறுவப்படாமல் இருக்கிறது. ஆகவே என்னுடைய தொகுதியின் மையப் பகுதியான ஆர். கே. பேட்டையில் ஒரு 2 ம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதே போல் என்னுடைய தொகுதியில் இருந்து நீதிமன்றம் செல்லவேண்டும் என்றால் திருத்தணியில் இருக்கின்ற முனிசீப் கோர்ட்டுக்கும் அதே போல் 1 ம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கும், 2 ம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கும்

போகக்கூடிய ஒரு சூழ்நிலை அங்குள்ள ஏழை, எளிய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. திருத்தணியில் இருக்கின்ற அந்த 3 நீதிமன்றங்களும் ஒரே கட்டிடத்தில் ஏறத்தாழ 25 ஆண்டுக் காலமாக வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்று வருவதை நான் இந்த நேரத்தில் நம்முடைய மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கே இருக்கின்ற வழக்கறிஞர்கள் மன்றத்தின் சார்பாக 25 வருட காலமாக இந்த 3 கோர்ட்டுகளுக்கும் ஒரு நிரந்தரக் கட்டிடம் தேவை என்று போராடியும் இது வரையில் திருத்தணியில் உள்ள அந்த 3 கோர்ட்டுகளுக்கும் ஒரு நிரந்தரக் கட்டிடம் கட்டித்தரப்படவில்லை. ஆகவே நடப்பு ஆண்டிலே அந்த 3 கோர்ட்டுகளுக்கும் நிரந்தரக் கட்டிடத்தைக் கட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்றேன்.

அதே போல் சலவைத் தொழிலாளர்களுக்குப் பள்ளிப்பட்டில் ஒரு கூட்டுறவுச் சங்கம் வேண்டும் என்று நீண்ட நெடும் காலமாகப் போராடி வருகிறார்கள். பள்ளிப்பட்டு நகரத்தில் சலவைத் தொழிலாளர்களுக்கு ஒரு கூட்டுறவுச் சங்கத்தை நிறுவிக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகள் பயன்பெறுகின்ற பால் பண்ணைகள்; அதேபோல் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள், பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்; இப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்களை பெரும் அளவில் என்னுடைய தொகுதியில் திறந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று அமைகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சம்பந்தமாகவும், நீதி நிர்வாகம் சம்பந்தமாகவும், சிறைச்சாலைகள் சம்பந்தமாகவும் ஆக இந்த 3 மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாகவும் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

கூட்டுறவு சட்டத்தை இந்தச் சட்டமன்றத்தில் நாம் நிறைவேற்றி இருக்கிறோம். அதை மேலவையும் நிறைவேற்றியிருக்கிறது என்று நான் அறிகிறேன். உடனடியாக அதற்கான விதிகளை இயற்றி ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்துதேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளைக் கொண்ட, இயக்குநர்களைக் கொண்ட நிர்வாக சபைகளை அமைத்து கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்கக்கூடிய முறையில் அரசு துரிதமாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இருக்கின்ற அவகாசம் குறைவான அவகாசம் என்று மேலும் அதைத் தாமதப்படுத்துவது அந்தக்கூட்டுறவு இயக்கத்தை ஜனநாயக முறையில் செயல்படுத்தவிடாமல் தடுக்கிறது என்பதையும் அது சரியாக இருக்காது என்ற முறையிலும் உடனடியாகத் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் தமிழகத்தில் பரவலாக அனைத்து துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன என்றாலும் இன்னும் பரவலாக அது விஸ்தரிக்கப்பட வேண்டும். இந்த அமைப்பு பல்வேறு துறைகளிலும் அது இன்னும் ஆழமாக கிராமப்புறங்களிலும் மற்றும் பல துறைகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து விவசாயிகளுடைய கடன் பிரச்சினை. இன்றைக்கும் அது தீர்க்கப்படாத பிரச்சினையாக தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்தப் பிரச்சினையை ஆராய்வதற்காக உச்சமட்டக் குழுவை அரசு நியமித்து இருக்கிறது. இந்த உச்சமட்டக் குழு பல்வேறு பரிந்துரைகளை அரசுக்குச்சமர்பித்து இருக்கிறது. அந்தப் பரிந்துரைகளை அரசு ஏற்று அமல் செய்யாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அனைத்து விவசாய சங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து ஏற்றுக்கொண்டு ஒருமித்த கருத்தோடு செய்யப்பட்டிருக்கின்ற பரிந்துரைகள்தான் அவை அவற்றைக்கூட நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படுகிறது, அதற்கும் சமாதானம் கூறப்படுகிறது, ஆகவே அந்தக் காலதாமதத்தைத் தவிர்த்து உச்ச மட்டக் குழுவினுடைய பரிந்துரைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக பயிர்க் கடன்களுக்கு 1981-82 லிருந்து தவணை தவறாமல் செலுத்தும் எல்லா விவசாயிகளுக்கும் வட்டிச் சலுகை அளிக்கவேண்டுமென்ற பரிந்துரை உச்சமட்டக் குழுவால் செய்யப்பட்டிருக்கிறது. அதேமாதிரி இதர பயிர்க் கடன்கள் சம்பந்தமாக 18-7-1981 ஆம் தேதிக்கு முன்னர் அரசு அறிவித்து இருக்கக்கூடிய சலுகைகளைத் தொடர்ந்து நீடித்து அந்தச் சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று பரிந்துரை கொடுத்திருக்கிறது. இம்மாதிரியான பரிந்துரைகளை அரசு உடனே நிறைவேற்றி விவசாயிகளுடைய கடன் பிரச்சினையில் ஓரளவுக்கேனும் தீர்வுகாண்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே இருக்கிற மற்றொரு பரிந்துரை. கிணறு தோண்டுவதற்குக் கடன் கொடுப்பது என்று வரக்கூடிய சமயத்தில் அது 50 சதவீத மானியமாக கொடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படை இருக்கிறது. நகைக்கடன் சம்பந்தமாக அதிகமான தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு பரிந்துரைகள் இருக்கின்றன. இவையனைத்தும் நிறைவேற்றுவதன்மூலம் அல்லது செயல் படுத்துவதன் மூலம் அல்லது ஒரு அளவுக்கு உச்சமட்டக்குழுவை அரசாங்கம் நியமித்தது என்பது மட்டுமல்ல, அதற்குரிய மரியாதையைக் கொடுத்திருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம். ஆகவே அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் வறட்சி தொடர்ந்து ஏற்படுகிறது. கூட்டுறவுக்கடனை ஒத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறபோது இந்த ஆண்டு கடனை ஒத்திவைத்தால் அடுத்த ஆண்டு வசூலிக்கக்கூடிய நேரத்திலே விவசாயிகள் செலுத்தவேண்டிய வட்டிக்கு அபராத வட்டி போன்ற அதிகமான வட்டி செலுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே கடனை ஒத்திவைக்கிறபோதே அந்த ஆண்டிற்கான வட்டியைத் தள்ளுபடிசெய்து அந்தக் கடனை ஒத்திவைக்கவேண்டும். இம்மாதிரியான யதார்த்த முடிவுகளை எடுத்தால்தான் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பயனளிக்கத் தக்க முறையில், நிறைவேற்றியதாக இருக்கும்.

இன்றைக்குச் சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு அரசுத்துறையிலே பல்வேறு சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்கள் என்ற அடிப்படையிலே நம்முடைய மாநிலத்திலே 36 வட்டங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு அங்கேயெல்லாம் சிறு தொழில்களை ஆரம்பிக்கிறார்கள். அவர்களுக்கு மானியமாக 30 சதவீதம் வழங்கப்படுகிறது. ஒரு கோடி ரூபாய் என்ற அளவுக்கு ஆரம்பிக்கப்பட்டாலும் 30 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இம்மாதிரியான சலுகைகள் தொழில்களை துவங்குகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் விவசாயிகள் பாடுபட்டு தங்களுடைய சொந்த மூலதனத்தைப்போட்டு, விவசாயத்திற்குத் தேவையான உபகரணங்களை, விதைகளை, மற்றப் பொருட்களை விவசாயக் கடன் சங்கங்கள் மூலமாகப் பெற்று முதலீடு செய்திருக்கிறார்கள். விவசாயம் பொய்த்துவிடுகிறது, எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை, இம்மாதிரியான காரணங்களினால் விவசாயிகளுக்கு ஏற்படுகிற இன்னல்களைப் போக்குவதற்கு அரசாங்கம் நிரந்தரமான ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்ற அடிப்படையிலே ஆண்டிற்கு 15 கோடி ரூபாய் விவசாயிகள் கடனுக்கான வட்டியை பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வட்டி போன்றவற்றில் அவர்களுக்கு ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைப் போக்குவதற்காக அரசு தனக்கு இருக்கிற நிதி ஆதாரங்களைக் கொண்டு 15 கோடி ரூபாய் ஒதுக்குவதன் மூலமாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். இன்னும் நல்ல முறையிலே விவசாயிகளை ஊக்குவித்து அவர்கள் உற்பத்தியை அதன்மூலமாகப் பெருக்கமுடியும். பெரும் முதலாளிகள் பெரும் தொழிற்சாலைகளை துவக்குகிறார்கள். அவர்கள் அதிகமான முதலீடுகளைப் போடுகிறார்கள். பல்வேறு சலுகைகளை அவர்களுக்கு அரசு அளிக்கிறது, மின்சாரக் கட்டணத்திலே அவர்களுக்கு சலுகை அளிக்கப்படுகிறது. ஆனால் விவசாயிகளை எடுத்துக் கொண்டால் விவசாயம் சரியாக இல்லை என்றாலும் அவர்களிடமிருந்து மின்சாரக் கட்டணத்தை வசூலித்துத் தான் ஆகவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது



அதைப்பற்றி முழுமையாக விவரித்துச் சொல்வதற்கு நேரம் இல்லை. ஆகவே அந்தமாதிரியான நிலையில் அரசாங்கம் ஆண்டு ஒன்றிற்கு 15 கோடி ரூபாய் விவசாயிகளுடைய இன்னல்களை தீர்ப்பதில், கடன், வட்டி போன்றவற்றில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்க்கக்கூடிய முறையில் உதவி செய்யக்கூடிய வகையில் ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1—00)

அடுத்து விவசாயிகள் இயக்கங்கள் ஏற்கனவே பல்வேறு கோரிக்கைகளை வைத்து முழுமையாக வட்டியையாவது தள்ளுபடி செய்யுங்கள் என்ற அடிப்படையிலே கேட்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு அரசு வட்டியை தள்ளுபடி செய்து ஒவ்வொரு மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள், பிரதம நிலவள வங்கிகள், பிரதம சங்கங்கள் இதிலே எல்லாம் இருக்கிற ரிசர்வ் பண்டுகள் மற்றும் வராக்கடன் நிதி இந்த மாதிரியான நிதிகளை யெல்லாம் கணக்கிட்டுப் பாருங்கள். இந்த நிதிகளை கொண்டு, அதன்மூலமாக வட்டியிலே ஏதாவது அவர்களுக்குத் தள்ளுபடி செய்யமுடியுமா என்று ஆராய்ந்து அவர்களுக்கு அந்த நிவாரணத்தைக் கொடுத்தால் அது பயனுள்ளதாக இருக்கும்.

இன்றையதினம் கடன் வழங்குகிற அமைப்புகள் இருக்கிற நிலைமையைப் பார்த்தால் ரிசர்வ் வங்கி இப்போது நபார்ட் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலமாகக் கடன் வழங்கப்படுகிறது. மாநில வங்கிகள்; அதற்குப் பிறகு மாவட்ட வங்கிகள்; அதற்குக் கீழே சொசைட்டிகள். ஐந்தாவதாக விவசாயி கடனைப் பெறுகிறான். இந்த ஐந்து டயர் அமைப்பில் அதாவது ஐந்து அடுக்குகளைத் தாண்டி விவசாயி கடன் வாங்குகிற நேரத்தில் அவர்கள் மேலே வைக்கிற வட்டியைப் பார்த்தால் சிறு விவசாயிகளாக இருந்தால் 11 சதவீதம் ஆகிறது. ரிசர்வ் வங்கியில் வழங்குகிற கடன் அதற்கான வட்டி 7 சதவீதம். இந்த நான்கு அடுக்குகள் முறையில் வருகிறபோது உயர்ந்துவிடுகிறது. அதற்குப் பல் வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. மாநில வங்கிகள் செயல்படுவதற்கு ஏதாவது சிறிது மார்ஜின் வேண்டும்; மத்திய வங்கிகளுக்கு ஒரு மார்ஜின் தேவை. கிராம சங்கத்திற்கு ஒரு மார்ஜின் தேவை. இந்த மார்ஜின்களை எல்லாம் வைத்துப் பார்க்கிறபோது இதைக் குறைக்கிற முறையில் இந்த ஐந்து அடுக்கு அமைப்பு முறையை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேரடியாக மாநில வங்கிகள் பெற்று அது நேரடியாக விவசாயிகளுக்கு கீழே இருக்கிற அமைப்புகளின் மூலமாக, மாநில வங்கிகளிலே இருந்து அந்தக் கடனை அவர்களுக்கு வழங்கக்கூடிய முறையிலே ஒரு ஏற்பாட்டினைச் செய்யவேண்டும். 2 டயர் அடுக்கு என்று சொல்லக்கூடிய

இரண்டு அடுக்கு முறையிலே அமல் செய்வதன் மூலமாக விவசாயிகளுக்கு இன்னும் அதிமாகஅவர்கள் செலுத்த வேண்டிய வட்டிச் சுமையைக் குறைத்தால் அவர்களுக்குப் பயனுள்ள முறையிலே காரியங்களை செய்வதற்கு உதவியாக இருக்கும். மாநில வங்கிகள் இன்றைக்கு மாவட்ட வங்கிகளுக்குக் கொடுப்பது 7.66 சதவீதம்; மாவட்ட வங்கிகள் சொசைட்டிக்கு கொடுப்பது 9 சதவீதம்; சொசைட்டீஸ் விவசாயிகளுக்குக் கொடுப்பது 11½ சதவீதம்; அதைப்போல பெரிய விவசாயிகளுக்குக் கொடுப்பதை எடுத்துக்கொண்டால் 5½ சதவீதம் மார்ஜின் வருகிறது. நாம் 7 சதவீதத்திக்கு வாங்கி 12½ சதவீதத்திற்கு விவசாயிகளுக்குக் கொடுக்கிறோம். 5½ சதவீத மார்ஜின் வருகிறது; இந்த 7 சதவீதத்திலே 5½ சதவீதத்தைக் கணக்குப் போட்டால் 75 சதவீதத்திற்கு மேலே ஓவர் ஹெட் சார்ஜஸ்; நாம் அவர்களுக்குக் சுமத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசு இதைத் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே ரிசர்வ் வங்கி கூட ஹசாரி கமிட்டி என்று ஒரு குழுவை ே ரளா மாநிலம் சம்பந்தப்பட்ட வரையில் அமைத்து அதுகூட இரண்டு அடுக்கு முறையில் கடன் வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருப்பதாகத் தெரிகிறது. அந்த அடிப்படையிலே இந்த மாற்றத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு விஷயத்தைச் சொல்வதற்கு விரும்புகிறேன்.இன்றைக்குக் கூட்டுறவு அமைப்புகளிலே நிர்வாகம் செய்யக்கூடிய அமைப்பு முறைகள்—தேர்தல் கிடையாது—தனி அதிகாரிகள், அரசு அலுவலர்கள், அவர்களுடைய பொறுப்பிலே இன்றையதினம் நிர்வாகம் நடைபெறுகிறது. அரசாங்கத்தினுடைய நோக்கம் என்ன? ஏற்கெனவே 1976-ல் கூட்டுறவு அமைப்புகள் களைக்கப்பட்டபோது சொல்லப்பட்ட காரணம் என்ன? பெருவாரியான கூட்டுறவு அமைப்புகளில் ஊழல் ஏற்பட்டு விட்டது: ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளைக் கலைத்து விட்டு புதிய தேர்தலை நடத்த வேண்டுமென்ற அடிப்படையிலே ஒவ்வொரு சங்கத்திலும் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் இன்றைக்குத் தனி அதிகாரிகள் காலத்தில் பல்வேறு சங்கங்களில் நடந்து வருகின்ற ஊழலைப் பார்த்தால், இதற்கு அது பரவாயில்லை என்று நினைக்கக்கூடிய நிலைமைகள் வந்திருக்கின்றன என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய கடலூர் சட்டமன்ற உறுப்பினர் ஏற்கெனவே இந்த அவையில்—அவர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்—ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டார். கடலூரில், தென்னாற்காடு மாவட்ட விற்பனை விநியோக சங்கத்திலே நடைபெற்றுள்ள ஊழல்; சென்னையிலேயிருந்து 1,000மூட்டைகள் ரவை, மைதா போன்றவற்றை வாங்கி இங்கேயே விற்றுவிட்டு, அங்கே கொண்டு போனதாக, சொசைட்டியிலே விற்பனை செய்ததாக கணக்கு எழுதப்பட்டது; அப்படி நடந்திருப்பதாக அவரே பேசியிருக்கிறார்.



இதற்கு என்ன நடவடிக்கை என்றால், அரசு அதிகாரிகளாக இருப்பதால், அங்கேயிருக்கக் கூடிய ஸ்பஷல் ஆபீசர் உடனே அங்கேயிருந்து நீலகிரிக்கு மாற்றம் செய்யப்பட்டார். அதுதான் நடவடிக்கையாக இருக்கிறது. அதை உத்தேசித்து அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று எனக்குத் தெரியாது. என்றாலும் இம்மாதிரியாக இருக்கிறது.

மேலூரிலே ஒரு நகரக் கூட்டுறவு வங்கியைப்பற்றி சொன்னார்கள். அங்கே பார்த்தால், ரூ. 9 இலட்சம் பாங்கிலே கொண்டு வந்து கட்டப்பட்ட டெபாசிட் பணம் எங்கேயிருக்கிறது என்று தெரியவில்லை. ஊழல் நடந்திருக்கிறது. ஆனால், நடவடிக்கை என்னவென்றால், இதுவரையிலே தெரியவில்லை. ஆகவே, இந்த மாதிரியான அடிப்படையிலே, இன்னும் பல்வேறு சங்கங்களைப் பற்றி எனக்கு நேரடியாக தெரிந்தவற்றை வைத்துக் கூறமுடியும். வாங்குவதிலே, விற்பதிலே, விநியோகிப்பதிலே, என்ன, என்ன நடக்கிறது என்று சொன்னால், ஊழல்தான் நடக்கிறது. ஊழல் இல்லாத நிலைமையை உருவாக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

கோயம்புத்தூர் சிந்தாமணியைப் பார்த்தால் அங்கே நடந்திருக்கக்கூடிய ஊழல்பற்றித் தெரியும். பட்டியலை நான் நீட்டிக் கொண்டே செல்ல வேண்டியதில்லை. அதிகாரிகள் சிறப்பான முறையிலே, நல்ல முறையிலே, அரசாங்கத்தினுடைய கொள்கைகள், திட்டங்களை நிறைவேற்றி மக்களுக்குப் பயனுள்ள காரியங்களைச் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்த்ததற்குப் பதிலாக, இம்மாதிரியான முறையிலே காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன, பல்வேறு பகுதிகளிலே.

இதைப்பற்றியெல்லாம் யாராவது பேசினால், அல்லது அங்கே இருக்கக்கூடிய தொழிற்சங்கம் பேசினால் உடனேஅரசியல் சாயம், கலர் வந்து நிற்கிறது. இது நம் நாட்டைப் பிடித்த துரதிருஷ்டம் என்றுதான் கூற வேண்டும். ஆகவே, இவர் இந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர், அவர் அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர், இந்தச் சங்கம் கூடாது என்று கூறி ஒரு வலுவான தொழிற்சங்கத்தைச் சீர்குலைப்பதற்கான முறையிலே நடவடிக்கைகள் எடுப்பது என்கிற அடிப்படையிலே இன்றைய தினம் அதிகாரிகள் செயல்பட்டு வருகிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியக் கூடிய ஊழியர்கள் எவ்வளவு சிரமமான நிலையிலே பணிபுரிய வேண்டிய நிர்பந்தமான நிலை உருவாகியிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக நியாய விலைக் கடைகளை எடுத்துக்கொண்டால் அங்கே வேலை செய்யக்கூடிய சாதாரண ஊழியர்கள், ஒரு குவிண்டால் அரிசியைப் பெறும்போது, தயவுசெய்து நிறுத்துக்கொடுங்கள் என்று சொன்னால் எந்த

அதிகாரியும் எந்த இடத்திலும் நிறுத்துக் கொடுத்ததாக வரலாறு கிடையாது. சீமெண்ணெய் வருகிறது. அதை அளந்து கொடுங்கள் என்று சொன்னால் யாரும் அளந்து கொடுக்கத் தயாராக இல்லை. அது எவாப்பரேட் ஆகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதனால் குறைவு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதையெல்லாம் பற்றி அந்த ஊழியர் யாரிடத்திலே போய்ச் சொல்வது? அப்படி மேலிடத்திலேயிருக்கிற அதிகாரியிடத்திலே போய் சொன்னால் அவர்களிடத்திலே பேசும் பொழுது அது அப்படித்தான் இருக்கும். நீ எப்படியாவது சமாளித்து காரியத்தைச் செய்து கொள்ள வேண்டியதுதான் என்கிற புத்திமதி அல்லது ஆலோசனை சொல்வார்கள். ஆனால், திடீரென்று, அவர்களே வந்து சோதனை நடத்தி இருப்பில் ஒரு மூட்டை அரிசி குறைந்தது அல்லது ஒரு டின் சீமெண்ணெய் குறைகிறது என்கிற அடிப்படையிலே அவர்கள் மீது புகார்கள், நடவடிக்கைகள் என்பதெல்லாம் சர்வசாதாரணமாக இருக்கிறது. அதுவும் குறிப்பாக இன்றைக்கு வறட்சி காலத்திலே கிராமங்களிலே இருக்கிற மக்களுக்கு நியாய விலைக் கடைகளிலே பொருள்கள் ஒழுங்காக விநியோகம் செய்வதற்கு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கிற நேரத்திலே, அவர்கள் இன்றைய தினம் சொல்லமுடியாத தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஒரு பக்கத்திலே. இன்னொரு பக்கத்திலே சில இடங்களை எடுத்துக் கொண்டால் சில ரௌடிகள் தொந்தரவு. நான் அமைச்சருக்குக் கூட புகார்கள் எழுத்து மூலமாகவே அனுப்பியிருக்கிறேன். அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணிபுரியக்கூடிய ஊழியர்களைக் கடைகளுக்குள் புகுந்து அடிக்கிறார்கள். 50 கிலோ அரிசியைக் கொடு என்று 4 பேர்கள் சூழ்ந்து கொண்டு கேட்கிறார்கள். இல்லையேல் அடிக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வழியில்லை, பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். போலிசாரிடம் போனாலும் பாதுகாப்புக் கிடைக்கவில்லை. அரசாங்க அதிகாரிகளிடம், மேலே இருப்பவர்களிடம் சொன்னாலும் அதற்கான பாதுகாப்புக் கிடைக்கவில்லை. ரௌடிகள் இப்படி நடந்துகொள்கிறார்கள்.

இப்பொழுது அரசியலைப் பயன்படுத்தி சிலபேர்கள் புகுந்து கொள்கிறார்கள். இன்றைக்கு ஒரு சொசைட்டி இருக்கிறது. அங்கே சென்று தங்களுக்கு அரிசி சர்க்கரை மற்ற பொருள்கள் கொடுக்க வேண்டும் என்று நிர்பந்தப்படுத்துகிறார்கள். இல்லாவிட்டால் மற்ற அதிகாரிகள் அங்கே போய் கேட்பார்கள். கேட்டுக் கொடுக்கவில்லையென்றால், உடனே அந்த சொசைட்டி. சரியாக பங்க்ஷன் செய்யவில்லை, ஆகவே, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற அடிப்படையிலே அதிகாரிகள் புகார் செய்வார்கள். உடனே டி எஸ். ஓ. ரிஜிஸ்தரார் மற்ற அதிகாரிகள் வருவார்கள். அப்படிப்பட்ட பல்வேறு நிலைமைகளுக்கு சொல்லமுடியாத துன்பங்களுக்கும் சிரமங்களுக்கும் இந்த ஊழியர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான நிலைமைகளினின்று பாதுகாப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 1–10)

ஊழல் செய்பவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற அவசியமில்லை; அவர்களிடம் தயவு தாட்சண்யம் காட்ட வேண்டிய தேவையில்லை. அதை மறைக்க வேண்டுமென்று எங்களைப் போன்றவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசவில்லை. ஊழல் எங்கே இருந்தாலும் கண்டுபிடிக்கப்பட்டு அதற்குக் காரணமானவர்கள் தண்டனை பெற வேண்டுமென்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்கமுடியாது. ஆனால் அதே நேரத்தில் இம்மாதிரி நிலைகளின் காரணமாக சாதாரண ஊழியர்கள் ஆளாக்கப்பட்டிருக்கின்ற நிர்ப்பந்தத்திலேயிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பதிவாளர் இயற்கையாக ஏற்படும் குறைபாடுகளுக்காக 5 சதவீதம் அனுமதித்திருக்கிறார்கள். சீமெண்ணெய், அரிசி ஆகியவற்றில் குறைவு ஏற்பட்டால் இவ்வாறு அனுமதித்திருக்கிறார்கள். ஆனால், நிர்வாகத்தில் உள்ள தனி அதிகாரிகள் அந்த சொசைட்டிகளிலே அதை அனுமதிப்பதில்லை. சீமெண்ணெய் 10 லிட்டர் வைத்தால் மறுநாள் காலையிலே வந்து பார்க்கின்றபொழுது 8½ லிட்டர்தான் இருக்கும்; நிச்சயமாக அதில் குறைவு ஏற்படும். ஏனென்றால் அது எவாபரேட் ஆகிறது. இதற்கு யார் பொறுப்பு ஏற்க முடியும்? பதிவாளர் அனுமதித்துள்ளதை அனுமதிப்பதில்லை. ஊழியர்கள் பதிவாளர் உத்தரவை அமுல் செய்யக் கேட்டால், பதிவாளரின் சுற்றறிக்கை இருக்கிறது, அதையெல்லாம் அமல் செய்ய முடியாதப்பா என்று தனி அதிகாரிகள் சொல்கிறார்கள்.

அடுத்து ஊழியர்களின் நிலை சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் அவர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் இல்லை; பணிப்பாதுகாப்பு இல்லை, குடும்ப நலத்திட்டம் அமுலாக்கப்படும் என்று 1981 ஆம் ஆண்டே சட்டமன்றத்திலே அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இரண்டாண்டுக் காலம் ஆகிறது. இன்றைக்கும் அந்தத் திட்டம் அமலாகவில்லை. இறந்த ஊழியர்களின் குடும்பத்திற்கு இந்த நிவாரணம் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் என்னவென்பது நமக்குத் தெரியவில்லை. ஆகவே, அமைச்சர்கள் சட்டமன்றத்திலே அறிவித்த இந்தத் திட்டம் கூட இரண்டாண்டுக் காலமாகியும் அமலாகாத நிலைமை இருக்கிறது. ஊழியர்களுக்கு எந்தத் தொழில் சட்டத்தின்படி பாதுகாப்பு இருக்கிறது என்று தெளிவான நிலையை ஏற்படுத்த வேண்டும்.

வி. எஸ். பி. ஊழியர்கள் 150 ரூபாய்தான் சம்பளம் வாங்கும் நிலைமையிருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன் இந்த அவையில் அவர்களுக்கு ரூ. 100 என்றிருந்த சம்பளத்தை ரூ. 150 ஆக உயர்த்தி அறிவித்தார்கள். கிராமங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்குக்கூட ஒரு நாளைக்கு ரூ. 8 சம்பளம், 8 மணி நேரம் வேலை

செய்தால் போதும். ஆனால், இவர்களின் நிலைமை மிகவும் (Establishments)பரிதாபகரமாக இருக்கிறது. வர்த்தக நிறுவனங்கள் (shops) பணிபுரிபவர்களும் கூட குறைந்த பட்சசம்பளம் அரசு நிர்ணயித்துஉள்ளது. அந்தச் சம்பளம் அவர்களுக்கும் கிடைக்கும் படி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சர் அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

வேலையிருப்பவர் பணிக்காலத்திலே இறக்கின்ற நேரத்தில் அந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்கவேண்டும். அரசின் கொள்கை இதுபுதுக்கோட்டை ஜில்லா மத்திய வங்கியில் இராஜேந்திரன் என்பவர் இறந்து விட்டார். அவருடைய மனைவிக்கு வேலை போட்டுக் கொடுத்தார்கள். ஆனால் ஒரு ஆண்டு பணி செய்த பிறகு, உனக்குக் கூட்டுறவு டிரெயினிங் இல்லை, டெலிபோன் ஆப்பரேட்டர் டிரெய்னிங் இல்லை, எனவே வீட்டுக்குப் போ என்று வேலை நீக்கம் செய்துவிட்டார்கள். அவருக்கு மீண்டும் வேலை கொடுத்து எதிர்காலத்தில் இம்மாதிரியான நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரின் சர்வீசில் வருகின்றவர்களுக்கு, சம்பளம் பெறுவதில் சங்கங்களில் நிதிநிலைமை குறுக்கிடுவதில்லை. அரசு ஊழியர்கள் பெறுகின்ற சம்பளம் பஞ்சப்படி உயர்வு, லீவு மற்றும் அனைத்து சலுகைகைளைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே உள்ள ஊழியர்களுக்கோ 100 ரூபாய், 50 ரூபாய், 150 ரூபாய் என்று இருக்கிறது. அங்கே ஊழியம் செய்பவர்கள் ஊதிய உயர்வு கேட்டால் நிதிநிலைமை சரியில்லை என்று சொல்கிறார்கள். இம்மாதிரி நிலைமை நீடிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். சங்கங்களில் உள்ள ஊழியர்களைக் கொண்டே நிர்வகிக்க முடியும். ஃபாரின் சர்வீஸில் அனைத்து சங்கங்களிலும் உள்ளவர்களை வாபஸ் பெறக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில், சிறைகள் என்பது கைதிகளைச் சீர்திருத்தும் இடமாக அமைய வேண்டும். ஏற்கனவே சிறைச்சீர்திருத்தக் குழு சிபார்சுகள் செய்திருக்கிறது. அந்த சிபார்சுகளை அமலாக்கவேண்டும். 433—ஏ அமென்மெண்ட் வந்தபிறகு விடுதலை செய்வது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில், 1978 ஆம் ஆண்டுக்கு முன்பு தண்டனை பெற்றவர்கள் பத்தாண்டு சிறைத்தண்டனை அனுபவித்தவர்களை விடுவிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அது சம்பந்தமாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னிடத்தில் வந்திருக்கும் முறையீடு, முத்துசாமி என்பவர், நம்பர் 42017, திருச்சி மாவட்டச் சிறையிலே இருப்பவர்கள் பழனியப்ப கவுண்டர், என்.42016, இவர்கள் பற்றி போர்டில் வந்து மூன்று மாதங்கள் ஆகின்றன. இதில் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும். விடுதலை செய்வதில் பாரபட்சம் இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.



சிறைகளிலுள்ள நிலைமைகளை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதி நிர்வாகம் சம்பந்தமாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அந்த முறையிலே பல வட்டத் தலைநகரங்களில் நீதிமன்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழ் ஆட்சி மொழியாக உள்ளது. தமிழிலே தீர்ப்பு இன்றைக்கும் முழுமையாக அளிக்கப்படவில்லை. அவகாசம் நீடிக்கப்பட்டு வருகிறது. பல நீதிமன்றங்களில் ஆங்கிலத்தில்தான் தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. அதற்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஆங்கிலத்தை உபயோகப்படுத்துவதற்கு தடை விதித்து முழுமையாக தமிழிலே தீர்ப்புகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நடமாடும் நீதிமன்றங்கள் எற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குளித்தலையிலே ஒரு சப்-கோர்ட் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் சென்னையிலே இருக்கிற மத்திய வங்கியிலே நடக்கக்கூடிய பல்வேறு விஷயங்களை உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டார்கள். ரகுமான்கான் அவர்கள் ஒரு வால் போஸ்டர்' கூட காண்பித்தார்கள். அங்கே இருக்கக் கூடிய தனி அதிகாரி கலந்து கொள்வதைப் பற்றி. ஒரு குறிப்பிட்ட தொழிற்சங்கத்திற்கு ஆதரவு கொடுப்பது என்ற முறையிலே, மெட்ராஸ் சென்ட்ரல் கோ—ஆப்பரேட்டிவ் பாங்கில் பை—லா திருத்தங்கள் கூட கொண்டுவரப்பட்டிருக்கின்றன. "Special Casual l.ave shall he sanctioned to the office bearers of "Anna Paniyalar Sangham" President, Vice-Presidenc, General Secretary and Treasurer of the Sangham for the purpose of attending to the Sangham b t exceeding. . . . . . ." ஏற்கனவே இருக்கின்ற மெட்ராஸ் சென்ட்ரல் கோ-ஆப்பரேடிவ் பாங்க்கிலே ஸ்டாப் யூனியன் இருக்கிறது. அவர்கள் தகுதி இழந்து விட்டார்களா ? யாருக்கு தகுதி இருக்கிறது, யாருக்கு இல்லை என்பதை ஒரு வோட்டு எடுத்து தீர்மானிக்கப்பட்டு இருந்தால் ஆட்சேபணை இருக்க முடியாது. அந்த முறையிலே தீர்மானிக்கப்பட்டு அந்தச் சங்கம் தன்னுடைய தகுதியை இழந்து விட்டது என்று கூற முடியுமா? இந்த பைலா மாற்றத்தை செய்ய முற்பட்டதேன் ? ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்த ஆளும் கட்சியைச் சார்ந்திருக்கக் கூடிய ஒரு சங்கம் என்பதற்காக விசேஷமான சலுகை கொடுக்க வேண்டும் என்ற இம்மாதிரியான முறையில் நடவடிக்கைகள் மேற் கொள்வது அதற்கு பைலா திருத்தங்கள் செய்வது என்பது முறையல்ல. அதிலே சில தனி அதிகாரிகள், ஜாயிண்ட் ரிஜிஸ்டிரார் போன்றவர்கள் இன்றைக்கு அண்ணா தி.மு.க. சங்கத்தில் ஆள் சேர்க்கக் கூடிய பணியைத் தான் செய்கிறார்களே தவிர, அவர்கள் மற்ற பணியை விட்டு விட்டார்கள்.

ஊழியர்களுடைய கோரிக்கைகளை தீர்ப்பதற்கு முறையாக நடவடிக்கைகளை எடுத்து பேசித் தீர்வு காண்பதற்குப் பதிலாக, சங்கங்களை சீர் குலைப்பதன் மூலமாக, சங்கங்களை உடைப்பதன் மூலமாகத்தான் தீர்க்க முடியும் என்ற அடிப்படையிலே அதிகாரிகள் செயல் படுகிறார்கள். ஒவ்வொரு ஊழியரிடமும் இந்தச் சங்கத்தில் சேர நீ கையெழுத்து போடு என அவர்களே நிர்ப்பந்திக்கிறார்கள். அவர்களே இந்த சங்கங்களுக்கு ரெக்ரூட்மெண்ட் மாறி விட்டார்கள். அந்த மாதிரி திருச்சி மத்திய வங்கியிலே நடை பெறுகிறது. அங்கே இருக்கக்கூடிய 'சீப் எக்சிகியூடிவ் ஆபிசர்'..........(மணியடிக்கப் பெற்றது).

*திரு. சி. கணேசன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நீதி நிர்வாக மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். அதற்கு அனுமதி தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜனநாயக நாட்டிலே ஜனநாயகம் தழைத்து உள்ளபடியே ஒரு நாடாக இருக்க வேண்டுமென்று சொன்னால், நீதி தன்னுடைய சுய ரூபத்தில் இருந்து, அ த நாம் நீதியாகவே காப்பாற்ற வேண்டும், நீதியின் வரம்பை யார் மீறினாலும், எவர் மீறினாலும், அவ்வாறு செய்வதினால், நம்மை நாமே ஏமாற்றுகிறோம், நம்முடைய கண்களை நாமே குத்திக்கொள்கிறோம் என்பதனை நாம் அனைவரும் அறிய வேண்டும். மற்றவர்களும் அறிவதற்கு நாம் வழித்துணையாக இருக்க வேண்டும். இந்த நாட்டிலே வறுமையிலே உழல்கின்றவர்கள், அறியாமையால் நிறைந்தவர்கள், ஏழ்மையிலே மிகுந்தவர்கள், படிப்பின்மையால் இருக்கின்றவர்கள், இத்தனை பேரும் வகை வகையாக இருக்கிறார்கள். நான் சொன்ன இந்தப் பட்டியலில் இருக்கின்றவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்று சொன்னால், அந்த நீதி ஒரு காலத்தில் தொலைவிலே; இருந்தது, எட்டாத இடத்திலே அந்த நீதி இருந்து கொண்டிருந்தது. ஏழ்மையிலே இருப்பவர்களுக்கும், வறுமையிலே இருப்பவர்களுக்கும், படிப்பில்லாமல் இருப்பவர்களுக்கும், அந்த நீதி கிடைப்பதற்கு அரிதான ஒரு பொருளாக இருந்தது. ஆனால் நாம் அதை இப்பொழுது விசாரிக்கின்ற பாஷையும் தமிழ் தான், விவாதம் செய்கின்ற மொழியும் தமிழ் தான், தீர்ப்பு சொல்லுகின்ற மொழியும் தமிழ் மொழி தான் என்ற உணர்வு நம்முடைய அரசிற்கு வந்திருக்கிறது என்பதை யாராலும் மறந்து விட முடியாது. எவ்வளவு தான் நீதி உச்ச கட்டத்திலிருந்து உயர்ந்து பறந்து கொண்டிருந்தாலும், இங்கே இருக்கின்ற நீதி மாதிரி எங்கேயும் இல்லை என்ற பெருமை பேசிக் கொண்டிருந்தாலும், அந்த நீதி எந்த மொழியிலே பேசப்படுகிறது, யாருக்காக பேசப்படுகிறது, அந்த நீதி எவனுக்கு அளிக்கப்படுகிறதோ, அவன் ஏழ்மையில் இருக்கிறான், படிக்காமல் இருக்கிறான், வறுமையிலே பணம் கொடுத்து அங்கே போக முடியவில்லை என்ற நிலையிலே



நாட்டு மக்களை வைத்து விட்டு நீதியினுடைய பெருமையைப் பற்றி பேசுகின்ற நிலையில் பலன் இல்லை. அந்த நீதி வறுமையில் இருப்பவர்களுக்கும், ஏழ்மையில் இருப்பவர்களுக்கும், படிக்காமல் இருக்கின்ற பாமர மக்களும் புரிந்து கொள்ள வேண்டுமென்ற முக்கியத்துவத்தை இந்த அரசு தான் உணர்ந்திருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

(பிற்பகல் 1-20)

அந்த முக்கியத்துவத்தை உணர்ந்ததாலேதான் எல்லாமும் தமிழிலே இருக்க வேண்டுமென்ற கோட்பாடு இன்றைய தினம் இங்கேயிருக்கிறது. அது மட்டுமல்ல, இன்னொரு சிறப்பு அம்சம். எந்தக் காலத்திலேயிருந்து வந்தாலும், இந்தக் காலத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய துடிப்பான செயலாலே இலவச சட்ட உதவித் திட்டம், சட்டத்தை இலவசமாக தருகின்ற இந்த திட்டம் எல்லா இடங்களிலேயும் பரவி மக்களுக்கு இப்படிப்பட்ட ஒரு திட்டம் இருக்கிறது, என்று அந்தத் திட்டத்தாலே அவர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். மொழியினுடைய முக்கியத்துவம், தாய் மொழியினுடைய முக்கியத்துவம் தெரியாத காரணத்தால்தான் இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் எல்லாம் அன்றைக்கு இதை அலட்சியப்படுத்தி விட்டார்கள். அதனால்தான் பாமர மக்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற நீதியினுடைய மொழியை அறிந்து கொள்ளாமல் இருந்து விட்டார்கள். ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால் இங்கிலாந்திலே கூட அவர்களுடைய மதத்தைப் பரப்புவதற்கு, 400, 500 ஆண்டுகளுக்கு முன்னாலே லத்தீன் மொழியை எவ்வளவு வேகமாக பரப்ப, எவ்வளவு போராட்டங்கள் நடத்தி, அதிலே வெற்றி கண்டார்கள். அதனுடைய விளைவுதான் அதனுடைய எதிரொலி தான் உலகம் பூராவும் இன்றைக்கு அவர்களுடைய மதம் பரவியது. அவர்கள் மதம் பரவியதற்குக் காரணம் அவர்களுடைய மதத்திலே இருக்கின்ற லத்தீன் மொழி என்ற அளவிற்கு ஆர்வத்தோடு அவர்கள் பாடுபட்டுப் போராடினார்கள். அதை உணர்ந்து தான் நம்முடைய தமிழக அரசும், தமிழ் மாநாடுகளும், உலக மாநாடுகளும் தமிழ் உலக ஆராய்ச்சித் துறையும் ஏற்பாடு செய்து செம்மையாக அதை செயல் படுத்திக் கொண்டு வருகிறார்கள். நல்ல தமிழிலே தீர்ப்பு எழுதுகின்ற நீதிபதிகளுக்கு நான் இங்கே சொல்கிறேன். அவர்களுக்குப் பாராட்டுப் பத்திரங்கள், பரிசுகள் கூட வழங்கி அவர்களை ஊக்குவிக்கலாம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு கொலை வழக்கிலே ஒருவன் சம்பந்தப் படுத்தி விட்டால், அவன் இன்வெஸ்டிகேசன் என்றும், கமிட்டல் என்றும், இன்னும் செசன்ஸ் டிரையல் என்றும், 2, 3 ஆண்டுக்காலமாக இழுத்தடித்துக் கொண்டிருக்கும் கோரக் காட்சியை, நாம் தூக்கில் இடப்படுவோமோ அல்லது தப்பித்துப் போவோமா, நம்முடைய நிலை என்ன என்பதை அவன் எண்ணி

ஏங்கிக் கொண்டு இருக்கும் போது, அவன் ஒவ்வொரு நிமிஷமும் செத்துக் கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட நேரங்காலங்களை ஓட்டிக் கொண்டிருப்பதாலே, அவன் பாதி வகையிலே தொல்லைக்கு ஆளாக்கப் பட்டிருந்தான். ஆனால் இப்போதெல்லாம் உடனுக்குடன் நீதி வழங்கி அவர்களுக்கு ஆவன செய்கின்ற முறையை யாராலும் மறுத்து விட முடியாது. வழக்குகள் எல்லாம் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. கோர்ட்டுகள் எல்லாம் வகையாக பிரிக்கப்பட்டு காலதாமதம் தவிர்க்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை எண்ணும் போது யாராலும் இதை பாராட்டாமல் இருக்கமுடியாது.

அது மட்டுமல்ல. இன்றைக்கு ஏழைகள் எல்லாம் 60 கிலோ மீட்டர் 50 கிலோ மீட்டர் நடந்து போய் தான் அவனுக்கு இருக்கக் கூடிய நீதியை தெரிந்து கொள்ள முடிந்தது. அதனுடைய உணர்வை இந்த தமிழக அரசு புரிந்து கொண்டு தான், முன்சீப் கோர்ட்டானாலும், சப்-கோர்ட்டானாலும் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு கோர்ட்டானாலும், அந்தக் கோர்ட்டுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் வட்ட மையங்களிலே அதை அனுபவிக்க முடியும், அதை உணர முடியும் என்று சொல்லி, நூற்றுக்கணக்கான கோர்ட்டுக்களை அந்த வட்ட மையங்களிலே இந்த அரசு ஏற்படுத்தி இருக்கின்ற காரணத்தால், மலிவான வகையிலே அவர்களுக்கு நீதி கிடைக்கிறது.

அது மட்டுமல்ல. நம்முடைய இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதலோடு டெல்லி தவிர ஏனைய இடத்திலே கூட உச்ச நீதிமன்றம் அமைக்கப்படலாம் என்பது நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்திலே 13 வது பிரிவிலே இருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே கூட, உயர் நீதி மன்றத்திலே நடந்த வக்கீல்கள் சங்கக் கூட்டத்திலே தமிழக முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அங்கு எங்கோ ஒரு கோடியிலே உச்ச நீதி மன்றம் இருக்கிறது, அது மத்தியிலே வரவேண்டுமென்று. அந்தத் தர்க்கத்திலே கூட அப்போது சிலர் சொன்னார்கள். தலை மிகப் பிரதானமானது. தலை மிக நுனியில் தான் இருக்கிறது. அதனால் தலை நகரத்திலே இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் இப்போது ஆவலோடு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தமிழகத் தலை நகரில், சென்னை மாநகரில் உச்ச நீதி மன்ற ஆயம் ஒன்றை இங்கே அமைக்க வேண்டும். இதற்கான ஆலோசனைகள், பரிந்துரைகளை தமிழக அரசு வேகமாக எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது தமிழக அரசால் மிகவும் வற்புறுத்தப்பட்டு வருகிறது என்பது தமிழக மக்களுக்கு எல்லாம் தெரியும். அது மட்டுமல்லாமல், மதுரையில் உச்ச நீதிமன்ற பெஞ்ச் ஒன்று அங்கே ஏற்படுத்துவது நல்லது. மதுரையிலோ அல்லது திருச்சியிலோ இந்த உயர் நீதிமன்ற பெஞ்ச் ஒன்றை அமைத்தால், அங்கே இருக்கிற மக்கள் சென்னையை நோக்கி வர வேண்டிய அவசியம்





இல்லை. நீதிமன்றம் என்பது ஒரு கோயில் மாதிரி. அதற்குள்ளே இருக்கின்ற தெய்வம் மாதிரி நீதிபதிகள் இருக்கிறார்கள். ஆனால் அந்தக் காலத்திலே வரையறுக்கப்பட்ட சம்பள முறைகள் தான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த தெய்வங்களுடைய வாழ்க்கைத்தரம், விலை உயர்வு காலப் போக்கு, இவற்றையெல்லாம் கருத்திலே வைத்து அவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டிய எண்ணங்களை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஏ.பி.பி. 2 என்று வேலை செய்கின்ற அந்த அரசாங்க வக்கீல்கள் 750 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். அவர்கள் யாரிடத்திலே போய் வாதம் செய்கிறார்களோ, அந்த தெய்வத்திற்கு சமமாக அந்த மாஜிஸ்டிரேட்டுகளுக்கு சம்பளம் அவர்களை விட குறைவாக இருக்கிறது. ஆகவே இந்தச் சம்பளத்தையும் நாம் கருதி உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்கிற எல்லா மைய அலுவலகங்களை எல்லாம் காஞ்சீபுரத்திற்கு எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். காஞ்சீபுரத்தினுடைய கலெக்டர் அலுவலகத்தைத் திறக்கும் போது அண்ணா அவர்கள் சொன்னார்கள். இப்போது மைய அலுவலகங்கள் எல்லாம் காஞ்சீபுரத்திற்கு கொண்டு வந்தால் செங்கற்பட்டு மக்கள் கவலைப் படத் தேவையில்லை. எல்லோருக்கும் ஏற்படுகின்ற குழப்பங்களை, உள்ளுக்குள்ளேயே ஏற்படுகின்ற சச்சரவுகளை கவனித்து தீர்ப்பு அளிக்கக் கூடிய ஒரு துறை இங்கே செங்கை மாநகரத்திலே இருக்கும் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதனை நிறைவு செய்கிற வகையிலும், ஊர்ஜிதப்படுத்தும் அளவிலும் இன்றைக்கு இங்கே இருக்கும் தமிழக அரசு அங்கே 75 இலட்ச ரூபாய் செலவில் 'கம்பைன்ட் கோர்ட் பில்டிங்' கட்டுவதற்கு ஆரம்பித்து இருப்பது உள்ளபடியே அங்கே இருக்கும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

மாவட்டங்களில் உள்ள குற்றவியல் நீதிபதிகளுக்கும் மற்ற நீதிபதிகளுக்கும் கார் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்டங்களில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ள டிஸ்ட்டிரிக்ட் ஜட்ஜ்களுக்கும், சி. ஜே. எம்.-களுக்கும் கார் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு டிரைவர்களும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய இத்தகைய நல்ல வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது இந்த தமிழக அரசுதான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே எல்லா ஜுடிசியல் ஆபீசர்களுக்கும் ஒரு பியூன் தனியாக நியமித்துக்கொடுத்துள்ளது.

குற்றவியல் நீதிமன்றங்களில் எப். ஐ. ஆர். பைல் செய்ததில் இருந்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து, கேஸ் எடுக்கும் வரையில் அந்த ஏழை எளிய மக்கள் கோர்ட்டுக்கு வாராவாரம் மாதாமாதம் தவறாமல்செல்ல வேண்டும் என்று இருந்த நிலையை

இந்த அரசு இன்றைக்கு மாற்றி இருக்கிறது. இந்த நாட்டு மக்கள் நலனில் இந்த அரசு மிகக் கவனமாக இருக்கின்ற காரணத்தால் ஒரு ஆள் ஒரு கேசில் மாட்டிக் கொண்டால் அவன் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, கேஸ் எடுக்கும் வரையில் அந்த ஏழைகள், பஞ்சைகள், பறாரிகள், எந்த அளவிற்கு கோர்ட்டுக்கு அடிக்கடி வரவேண்டும் என்பதைக் கண்டறிந்து, அடிக்கடி அவனை கோர்ட்டுக்கு வரவழைப்பதன் மூலம் அவனுடைய மடிப்பணமும் அவனுடைய வாழ்க்கைப் பணமும் வீணடிக்கப்படுகின்ற காரணத்தால் 6 மாதங்களுக்குப் பிறகு வரப்போகிற குற்றப்பத்திரிகை தயார் செய்து வரும் வரையில் வரவேண்டாம் என்று சொல்லி தமிழக அரசு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அந்த ஏழை அழுத கண்ணீர் இந்த அரசுக்குத்தான் தெரிந்து இருக்கிறது. நீண்ட நெடிய நாட்களாக கோர்ட் இருந்தும், இந்த ஏழைகள் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தும் இந்த அரசு வந்த பிறகுதான் அவர்களின் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த பிறகு வந்தால் போதும் என்று சொல்லி சட்டம் கொண்டு வந்து இருப்பது அவர்கள் வயிற்றில் பால் வார்த்தது போல் ஆகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுராந்தகத்தில் முன்சீப் கோர்ட் ஒரு இடத்திலும், மேஜிஸ்ட்டிரேட் கோர்ட் ஒரு இடத்திலும் இருக்கிறது. முனிசீப் கோர்ட் வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. இந்தத் தமிழக அரசு ஏழைகளுக்கு நீதி அவர்கள் வீட்டைத் தேடிச் சென்று அளிக்க வேண்டுமென்ற ஆர்வம் மிகுதி காரணமாக ஆங்காங்கு புதிய புதிய கோர்ட்டுகளை அமைக்கின்ற நேரத்தில் வாடகைக் கட்டிடத்தில் ஆரம்பிக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் புதிய கட்டிடங்கள் கட்டுவது என்று சொன்னால் அது நொடியில் முடிந்து விடாது. ஆகவே, கட்டிடம் வாடகைக்கு எடுத்து அந்த எண்ணத்தைச் செயல்படுத்துக்கிறார்கள். நீதியை ஏழைகளுக்கு தருகிறார்கள். இருப்பினும், ஆங்காங்கு புதிய கட்டிடங்களை விரைவாகக் கட்டி அந்த நீதிமன்றங்களை இயங்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுராந்தகத்தில் முன்சீப் கோர்ட்டும், ஜே. எஸ். சி. எம். கோர்ட்டும் தனித்தனியான கட்டிடத்தில் இயங்குவதால் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, அவற்றை ஒரே இடத்தில் நிறுவ அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

காஞ்சிபுரத்தில் ஒரு ஜே. எஸ். எப். சி. கோர்ட் அமைக்க வேண்டும். நீதியை விரைவாக கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. அப்படி விரும்புகின்ற ஆட்சியில் இந்த நாட்டு மக்கள் நீதியை நல்ல முறையில் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசை மக்கள் வாழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசு தான் ஏழைகளின் கஷ்டங்



களையும், இன்னல்களையும் புரிந்துக் கொண்டு, அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துக் கொண்டு செயல்படுகிறது. அது சாதாரணமானதாக இருந்தாலும், அது ஒரு பெரிய இம்பேக்ட்டை ஏற்படுத்தியிருக்கிறது. ஆண்டாண்டுக்காலமாக ஆட்சி நடந்த போதிலும், அந்த சைக்கிளில் இருவர் செல்கிற போது அவர்களை போலீசார் விசிலடித்து நிறுத்தி, இழுத்துச் சென்று, மறுநாள் கல்யாணம் என்றாலும், கவலையில்லை. உள்ளேபோ என்று சொல்லி, அந்த பஞ்சைப்பராரிகள் அழுத கண்ணீர் இந்த அரசுக்குத் தான் தெரிந்தது. ஆகவே, இரண்டு பேர் போகலாம் என்று ஆணையிட்டது. அதனால் என்ன குடிமுழுகிப் போய் விட்டது. ஆகவே, இத்தகைய நல்ல காரியங்களைச் செய்து வருகின்ற இந்த அரசை நான் பாராட்டி, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

---

*பிற்பகல் 4-05 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

**திரு தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட—கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைக்களை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எல்லாத் துறைகளிலும் ஒரு புதிய மறுமலர்ச்சியை, வளர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. எந்தத் துறையாக இருந்தாலும் அதில் ஒரு நல்ல மாறுதல்களை, நல்ல தன்மைகளை இந்த அரசு செய்து வருகிறது. அந்த வகையில் இன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள், கூட்டுறவு போன்ற மானியங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது முழுத் திறமையை வெளிப்படுத்துகிற அளவிற்கு இங்கே சிறப்பாக தமது அறிக்கைகளை வைத்திருக்கிறார்கள். காலையில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நீதி நிர்வாகம் பற்றிப் பேசுகிற போது தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அரசு நீதித்துறையைப் பொறுத்தவரை நீதி நிர்வாகம் சிறப்பாக நடக்க வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருக்கிறதே தவிர, விரும்புகிறதே தவிர நிர்வாகத்தில் தலையிட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த அரசு இல்லை. ஆகவே எதிர்கட்சியில் இருக்கிறவர்கள் நீதிமன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் உள்ள நிலை

(பிற்பகல் 4—10)

மையை வேறுபடுத்திஅதைப் பெரிதுபடுத்தக்கூடாது என்று இந்த நேரத்தில் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் நீதி நிர்வாகம் தன்னிச்சையாக நேர்மையாக நடைபெறவேண்டும் என்றுதான் விரும்புகிறது.

அந்த வகையில் தமிழக அரசு இன்றைக்குச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. தமிழகத்திலுள்ள தலைமை நீதிபதி மட்டுமல்லாமல் உயர் நீதி மன்றத்தில் இருக்கின்ற எந்த நீதிபதியாக இருந்தாலும் தமிழ் தெரிந்த வராக இருக்க வேண்டுமென்ற அரசின் அக்கரையும், ஆர்வத்தையும் இன்றைக்கு பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீதி மன்றங்களிலே தமிழ் நடவடிக்கைகள் நடக்கின்ற போது, தமிழிலே தீர்ப்புகள் அளிக்க வேண்டுமென்ற ஆர்வம் கொண்டிருக்கின்ற நேரத்தில், தமிழ் தெரிந்த ஒருவர்தான் தமிழகத்தின் தலைமை நீதிபதியாக இருக்கவேண்டுமென்ற மாநில அரசினுடைய எண்ணத்தை மைய அரசிற்கு வற் புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நீதித் துறையிலே வழக்குகள் நிறைய தேங்கியிருப்பதால் வழக்குக்களை விரைவாக முடிக்க முடியாததால், ஏழை எளிய மக்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் என்ற காரணத்தால், புரட்சித் தலைவர் அரசு அதிகமான நீதிமன்றங்களைத் தமிழகத்திலே அமைக்கின்ற பணியை சிறப்பாக செய்து வருகிறது. 1977 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டுவரை, தமிழகத்தில் 142 புதிய நீதிமன்றங்களைத் இந்த அரசு துவக்கிச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இங்கே நீதிமன்றங்களைத் திறந்து, நீதிபதிகளை நியமித்து, அரசு வழக்கறிஞர்களை அதிமாக நியமித்து, வழக்குக்களை விரைவாக பைசல் செய்கின்ற ஒரு சூழ்நிலையை இந்த அரசு செயல் படுத்தி வருகிறது. தமிழகம் முழுவதும் புதிய நீதிமன்றங்களை திறக்கின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்களை வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரில் ஒரு அடிஷனல் செசன்சு கோர்டை நிறுவ வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை இன்றைக்கு இந்த அரசு எந்த அளவுக்கு சிறப்பாக செயல் பட்டு வருகின்றது என்பதைப் பார்க்கின்றபோது, இன்றைக்கு நமது அமைச்சர் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்கள் அரசும்தான் கூட்டுறவுத் துறைக்கு முழுக்க முழுக்க மதிப் பளிக்கின்ற வகையிலும், அதன்மூலம் மக்கள் பயன் பெறுகின்ற வகையிலும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.



'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற தத்துவத்தில் இன்றைக்கு செயல்பட்டாலும் கூட, இந்தக் கூட்டுறவுத் துறை வாயிலாக ஏழை எளிய மக்கள், விவசாய மக்கள் ஆகியோருக்கு பல திட்டங்களை இன்றைக்கு செயல்படுத்திக்கொண்டு, நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது. கூட்டுறவுத் துறையை ஒரு காலத்திலே கூட்டுக் கொள்ளை என்று சொல்லிய அந்த நிலையை மாற்றி விட்டு, இன்றைக்கு அதன்மூலம் நலிந்தோர்கள் நலன் பெறுகின்ற அளவுக்கு இந்த அரசு பல அரிய திட்டங்களை அறிவித்து, அவற்றை செயல்படுத்திக்கொண்டு வருகின்றது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட்டுறவு என்பது பொது உடைமைக்கும், தனி உடைமைக்கும் இடையே இருக்கின்ற இணைப்புப் பாலம் என்று சொன்னார்கள். அதை செயல்படுத்துகின்ற வகையில், இன்றைக்கு அரசு ஏழை எளியவர்களுக்குத் தேவையான சலுகைகளை கூட்டுறவுத் துறையின் வாயிலாக செய்து வருகின்றது. ரிசர்வ் வங்கி விதிகளின்படி வாங்கிய விவசாயக் கடனைத் திருப்பிக் கட்டாமல் இருக்கின்றபோது, கடனை ஒழுங்காகக் கட்டிய விவசாயிகள் மீண்டும் பயிர்க் கடன் பெறுவதற்கு வருகின்ற நேரத்தில், அவர்கள் கடனை திரும்ப பெறமுடியாத நிலைமை இருப்பதைப் போக்க வேண்டுமென்பதற்காக, ரிசர்வ் வங்கி அறிவித்த 40 சதவீதம் என்பதை, ரிசர்வ் வங்கியோடு பேசி 20 சதவீதமாகக் குறைத்து, இன்றைக்கு பல மைய வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு மீண்டும் கடன் பெறுகின்ற ஒரு நல்ல வாய்ப்பை இந்த அரசு செய்து முடித்திருக்கிறது.

நடப்பு ஆண்டிலே, 1983-84-ஐப் பொறுத்த வரையில், எந்த அளவுக்குக் கடன் வழங்கப் பெற்றிருக்கின்றது என்பதைப் பார்க்கின்றபோது, இந்த அரசிற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். குறுகிய காலக் கடனாக ரூ. 100 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ. 12 கோடியும், நீண்டகால கடனாக ரூ. 15 கோடியும் இன்றைக்கு இந்த அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், நகை ஈட்டுக் கடனாக இந்த ஆண்டு ஏறத்தாழ ரூ. 150 கோடி அளிக்கின்ற நிலைமையில் இந்த அரசு இருந்து வருகின்றது.

தமிழகத்தில் இன்றைக்குக் கடுமையான வறட்சி நிலவிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் கூட்டுறவுத் துறை தன்னுடைய பணியை வறட்சி நிவாரணத்திற்குச் செலவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே இன்றைக்கு விவசாயிகள் கிணற்றில் நீர் இன்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு அவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். நிதி வசதி போதவில்லை என்ற காரணத்தால், அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை இந்த அவையும் அறியும்; இந்த நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். அந்த நிலைமையை இன்றைக்குப் போக்க வேண்டுமென்றால், கூட்டுறவுத் துறை இதற்கு பொறுப்பேற்றுக்

கொள்ள வேண்டும். நிலவள வங்கி மூலம் விவசாயிகள் கடன் பெற்று, கிணறுகளை வெட்டுவதற்கு உதவித் தொகை அளிக்க வேண்டும். அதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. நிலவள வங்கி மூலம் கடன் அளிக்கின்றபோது, நிலத்தடி நீர் சான்றிதழ் தேவை என்று சொல்லுகிறார்கள்.

அந்தச் சான்றிதழைப் பெறுவதிலே இருக்கிற கஷ்டத்தின் காரணமாக விவசாயிகள் புதிய கடனைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதே நேரத்தில் ஒரு செல்வந்தர் புதிதாக கிணறு வெட்டவோ, ஆழப்படுத்தவோ நினைத்தால் அவருக்கு அந்தச் சான்றிதழ் தேவையில்லை. ஆகவே இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பயிர்ப்பாதுகாப்புத் திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. குப்புசாமி அவர்கள் பேசிய சில குறிப்புகளை, அவைக்குறிப்பைப் பார்த்துவிட்டு நீக்குவதாக அவைத் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதன்படி கீழ்க்கண்ட பகுதிகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

'வக்காலத்து வாங்குகிற வகையில் இந்த அரசை சாடியிருக்கிறார்கள்' என்பதற்கும் 'திரு. வி. கிருஷ்ணமூர்த்தி' என்பதற்கு இடைப்பட்ட பகுதி;

'மாற்றுத் தலைவர் அவர்களே' என்பதற்கும், 'திரு. கே. குப்புசாமி' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'பேரவை மாற்றுத் தலைவரவர்களே' என்பதற்கும், 'திரு. என்.வி.என். சோமு' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'தவறான தகவல் தருகிறார்' என்பதற்கும், 'மாண்புமிகு மாற்றுத் தலைவர்' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'மாற்றுக் கருத்து இருந்தால் சொல்லலாம்' என்பதற்கும் 'மக்களுக்குப் பயன்படுகின்ற பல சட்டங்களை' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'கவலைப்படப் போவதில்லை. ஆனால்' என்பதற்கும் '[illegible] அவுட் கிவ்விங்' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'[illegible] எ டேய்ஸ்' என்பதற்கும், 'இதை சொல் [illegible]' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.



'மக்கள் என்ன நினைக்கிறார்கள்?' என்பதற்கும், 'அதோடு மட்டுமல்ல' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'நான் கேட்கிறேன், இந்த அரசுக்கு' என்பதற்கும், 'நீதிமன்றத்திலே நீதித் துறையிலே' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'வேறொரு நீதிபதியிடம் சென்று முறையிடுகிறார்' என்பதற்கும், 'இதிலே இன்னொரு நீதிபதி' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'அவர்கள் சிந்திப்பதே இல்லை' என்பதற்கும், 'அதைத்தான் நாங்கள்' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'அங்கே இப்போது என்ன நடக்கிறது என்றால்' என்பதற்கும், 'அப்படிப்பட்ட ஒரு உணர்வும்' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'எதிர்க்கட்சிகள் செயல்படுவதைப்போல' என்பதற்கும், 'இதைத்தான் நாங்கள் கடுமையாக' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'சைட் ஆன் எக்சாம்பிள்' என்பதற்கும், 'எவ்வளவு அப்பீல்கள் இருக்கின்றன' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'ஏன் உச்ச நீதிமன்றம் வரை செல்ல வேண்டும்' என்பதற்கும், 'திரு. என்.வி.என். சோமு' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'தாங்களும் ஒரு வழக்கறிஞர்' என்பதற்கும், 'எனவே நான் பணிவோடு' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'நீங்கள் அதைப் படித்துப் பார்த்து' என்பதற்கும், 'மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'நான் ஆற்றிக்கொண்டிருக்கிறேனே தவிர வேறல்ல' என்பதற்கும், 'திரு. கு. பா. பழனியப்பன்' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

'இங்கே நான் பேசுகிறேனே தவிர' என்பதற்கும்,, 'என்ற எண்ணம் நிச்சயமாக எனக்கு இல்லை' என்பதற்கும் இடைப்பட்ட பகுதி.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவை அன்பார்லிமெண்டரியா அல்லது வேறு காரணம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீதிபதிகளுடைய காண்டக்ட் பற்றி பேசக்கூடாது என அரசியல் சட்டம் 211-வது பிரிவில் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாக சட்ட மன்றத்தில்விவாதம் அமையக்கூடாது என்பதால் இந்தப்பகுதிகள் நீக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம்.**

(மாலை 4-20).

**திரு. கே. குப்புசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

* * *

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

* * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவைகளை எல்லாம் ஏற்கெனவே நீக்கியாகிவிட்டது. இப்போது அது குறித்து பேசப்பட்ட பேச்சுக்களும் நீக்கப்படுகின்றன.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், மற்றும் கூட்டுறவுத் துறைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை தமிழகத்தில், மிகச் சிறப்பான முறையில் பாராட்டப்பட்ட அளவில் இருந்த அந்த நிலைமை மாறி, கடந்த 5, 6 ஆண்டுகளுக்கு மேலாக, இந்தக் கூட்டுறவுத் துறையிலே தேர்தல் நடைபெறாமல் இருந்து, தனி அலுவலர்களுடைய பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டு, அவர்களுடைய அதிகாரங்கள், அளவுக்கு மீறி போன காரணத்தால் விரைவிலே தேர்தல் நடத்த வேண்டும் என்ற காரணத்தினால் இந்தக் கூட்டுறவுச் சட்டம் படைக்கப்பட்டு, அதன் மூலம் விரைவிலே தேர்தல் நடைபெறுகின்ற அளவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் எடுத்துக் கொள்கிற முயற்சிகளை நான் வரவேற்கிறேன்

குறிப்பாக, கூட்டுறவுத் துறையிலே தேர்தல் என்று வைத்து விட்டு, அதிலே கூட, ஏதோ வழக்கு மன்றத்திற்கு போகக் கூடிய நிலைமை ஏற்படுமோ என்று ஐயத்தக்க அளவிலே இருந்த நிலைமையை மாற்றி, குறிப்பாக ஒரு சில இடங்கள் அரிசன மக்களுக்கு என்றும், ஒரு சில இடங்கள் மகளிர்க்கு என்றும், ஒரு சில இடங்கள் நலிந்த பிரிவினர்களுக்கு என்றும், ஒரு குறிப்பிட்ட

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



இடங்கள் ஒதுக்காமல், மிக தீர்க்கமான அறிவாற்றலோடு, அமைச்சர் அவர்கள் ஆழ்ந்து சிந்தித்து, தேர்தல் என்று வரும் போது, அவைகள் எல்லாம் வழக்கு மன்றத்திற்கு போக நேரிடும் என்ற எண்ணத்தில், மகளிர் பிரிவும், அரிசன பிரிவும், நலிந்த பிரிவையும், தேர்தல் முறையிலே வரவில்லை என்று சொன்னால், இவைகள் எல்லாம் சோஆப்பிரேடிவ் என்ற அந்த வகையில் சேர்த்துக் கொள்கிற மாதிரி, இந்தக் கூட்டுறவுச் சட்டத்தை அமைத்ததற்காக நான் வரவேற்கிறேன். பாராட்டு கிறேன். அந்தத் தேர்தல் விரைவிலே நடைபெறவேண்டும்.

அப்படி நடைபெறவில்லை என்று சொன்னால், அந்தத் தனி அலுவலர்கள் நம்முடைய மதிப்பிற்குரிய மன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. பாபு சோவிந்தராஜன் அவர்கள் சொன்னது போல. கூட்டுறவுத் துறையில் ஊழல்கள் தலையிடு செய்கிற நிலைமை ஏற்பட்டு விடும். ஆயிரக்கணக்கான ரவை மூட்டைகள், மைதா மூட்டைகள் சென்னையிலிருந்து கடத்தப்பட்டு, அவைகள் எங்கேயோ விற்கப்பட்டு, அதற்குப் பிறகு மற்றவை எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையாக எடுத்துச் சல்லப்பட்டு அங்கே அவைகளுக்கு தகுந்த வகையில் பில்கள் போடப்பட்டு, அந்த விவரங்கள் இந்த மன்றத்திலே பேசப்பட்டு, அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அங்கே எதேச்சாதிகரமாக நடந்துக் கொண்டிருந்த தனி அலுவலர் மீது நடவடிக்கை என்ற பெயரிலே மாற்றல் செய்திருக்கிறார்கள். பெரும் பணத்தைக் கொள்ளை அடித்த அந்தத் தனி அதிகாரியை வெறும் மாற்றல் மட்டும் தான் செய்திருக்கிறார்கள். அப்படி மாற்றல் மட்டுமே செய்கிற அந்த நிலைமையை விட்டு விட்டு இப்படிப் பட்ட தனி அதிகாரிகளுக்கு சட்டத்தின் பிடியில் இன்னும் சிக்காமல் இருக்கும் மற்ற தனி அதிகாரிகளுக்கு, மக்களின் பணத்தை கொள்ளை அடிக்கின்ற இந்தத் தனி அதிகாரிகளுக்கு எச்சரிக்கை அளிக்கின்ற வகையில் நல்ல விசாரணை செய்து, தகுந்த நடவடிக்கையை அவர்கள் மீது எடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட வகையில் தனி அலுவலர்களுக்கு யார் யார் உடந்தையாக இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து விசாரணை நடத்தவேண்டும். அப்படி விசாரணை நடத்தினால்தான் அவர்களைத் தண்டனைக்குள்ளாக்கினால்தான் இருக்கின்ற குறைபாடுகளைப் போக்கிக் கொள்கின்ற வகையிலே தனி அலுவலர்களுக்கு ஒரு அச்சம் வரும். பொதுவாக நுகர்பொருள் துறையில் பல கோடிக்கணக்கான அளவுக்கு டர்ன் ஓவர் ஆகின்ற சூழ்நிலையிலே அதிலே பெருத்த அளவிலே ஊழல் நடக்கின்றது. சரியான முறையிலே மக்களுக்கு நுகர்பொருட்கள் கிடைக்கவில்லை. குடும்பக் கார்டுகளை எடுத்துச் செல்கின்ற ஏழை எளிய மக்களுக்கு அரிசி கிடைக்கவில்லை. ஆனால் அரிசியினை மூட்டை மூட்டையாக அந்த நுகர்பொருள் இடத்திலே இருந்து கடத்துகிறார்கள். சர்க்கரையைக் கடத்தி விடுகிறார்கள். அதேபோல் மண்ணெண்ணெயைக் கடத்தி விடுகிறார்கள். எந்த ஏழை மக்கள் எளிதில் நுகர்பொருட்களைப் பெறவேண்டுமென்று அரசு ஆலோசித்ததோ

அது நடைபெற முடியாத அளவுக்கு தனி அலுவலர்கள் அக்கிரமமாக ஊழல் செய்கின்ற நிலைமை இருக்கின்றது. நியாயமாக வறட்சி இருக்கின்ற இந்த நேரத்திலே அத்தனை குடும்பக் கார்டுகளுக்கும் அரிசி கிடைக்கவேண்டும். குடும்பக் கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் கிடைக்க வேண்டும். சாதாரண கூட்டுறவுக் கடையிலே இருந்து மத்திய மாவட்ட அளவிலே இருக்கின்ற நுகர்பொருள் கடைகள் வரையிலும் கண்காணிப்பதற்குக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும். பல கட்சிகளைச் சேர்ந்தவர்களே, அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அ. தி. அ. தி. மு. க.-வைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தாலும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அல்லதுபொதுச்சேவையிலே ஈடுபட்டவராகயிருந்தாலும் இப்படிப்பட்டவர்களை எல்லாம் சேர்த்து குழுக்கள் அமைத்து அந்தக் குழுக்கள் அந்த கூட்டுறவு கடைகளை எல்லாம் கண்காணிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி ஏற்படுத்தவில்லை என்றால் இப்போது வறட்சி இருக்கின்ற சூழ்நிலையில் பல பொருட்கள் எல்லாம் கடத்தப்பட்டு அலுவலர்களும், அதிகாரிகளும் கொள்ளை அடிக்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதை இந்த நேரத்தில் ஒரு எச்சரிக்கையாகக் கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற வட்டி வீதங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. வட்டியினால் பாதிக்கப்படுகின்றவர்கள் ஏழை விவசாயிகள்தான். எனவே, அவர்கள் பெருகின்ற கடன்களையும் அந்த சிஸ்டத்தையும் பார்க்கின்ற போது ஒரு மார்வாடிக் கடையிலே கடன் வாங்கினால் எந்த அளவுக்கு வட்டி வருமோ அந்த அளவுக்கு கூட்டுறவுத் துறையிலே ஒரு விவசாயி கடன் பெற்றால்கூட வட்டி கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது என்பது குறித்து புள்ளி விவரங்களோடு சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு தலைமை நிலையத்திலே இருந்து 7.66 சதவீதம் வட்டி விகிதம் என்ற வகையில் ஷார்ட் டெர்ம் லோனுக்கு கடன் கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பிறகு மத்திய வங்கியிலே இருந்து 9 சதவீதம் வட்டி விதத்தில் கடன் கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பிறகு சொசைட்டி டு இன்டிவிஜீவல்ஸ் என்ற அளவிலே செல்கின்ற போது கிட்டத்தட்ட 11 சதவீதம் வட்டி வீதத்திலே கொடுக்கப்படுகின்றது. அதாவது 3.84 சதவீதம் அந்த வட்டி உயர்ந்து விடுகின்றது. இப்போது ரிசர்வ் வங்கியிலே இருந்து 4 அல்லது 5 டையர் சிஸ்டங்கள் வைத்திருக்கின்ற காரணத்தால்தான் இவ்வாறு உயர்கின்றது. எனவே, நேரடியாக பிரதம வங்கிகளுக்குக் கொடுக்கக் கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்தால் நிச்சயமாக 2.2 சதவீதத்தைக் குறைக்கக் கூடிய அளவிலே வட்டி விகிதத்தை மாற்றி அமைக்கலாம். எனவே, இன்றைய தினம் மார்வாடிக் கடையிலே வாங்கப்படுகின்ற வட்டி அளவுக்கு இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கொடுக்கப்படுகின்ற கடனுக்கும் வட்டியின் அளவு இருக்கின்றது.



அப்படி வட்டிவிகிதம் அதிகமாக இருப்பதன் காரணத்தால் அந்த அளவுக்கு வங்கிகளும் அதனதனுடைய சதவீதத்தை உயர்த்தி விடுவதன் காரணத்தால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட குறுகிய காலக்கடனிலே விவசாயிகள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கட்டிவிட்டால் 2 சதவீதத்தை தள்ளிவிடுகிறேன், ஏதோ ஓரளவுக்கு அவர்கள் அசலைச் செலுத்திவிட்டால் அல்லது வட்டியைச் செலுத்திவிட்டால் ஓரளவுக்குத் தள்ளுபடி செய்கிறோம் என்று கூறினார்கள். அது கூட இயந்திர வட்டியாக ஆகின்ற காரணத்தால், தவணை தவறுகின்ற போது அபராத வட்டி போடுவது அதிகமாக இருப்பதால் ஓரளவுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்வது என்பதை விவசாயிகளின் கடன் சுமையை பெருமளவில் குறைப்பதுபோல் இருக்குமே தவிர உண்மையிலேயே குறைவதில்லை. ஆகவே இந்த வட்டி விகிதங்களை மாற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே மாற்றத்தைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

(மாலை 4-30)

அதேபோல் நிலவள வங்கிகளில் இன்றையதினம் ஒரு கிணறுக்கும் இன்னொரு கிணறுக்கும் இடையில் 600 அடி இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். வறட்சியை முன்னிட்டு அதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 20 சதவீதமாவது இந்த 600 அடி என்று இருப்பதை நிச்சயமாக இந்த நேரத்தில் வறட்சியை முன்னிட்டு குறைத்தால் தான் உண்மையில் அரசு நிலவள வங்கிகள் மூலம் கொடுக்கின்ற அந்தக் கடன்களால் விவசாயிகள் பயன்பெற முடியும். இல்லை என்றால் பயன் ஏற்படாது. ஒரு கருத்தை இந்த நேரத்தில் சொல்வது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன். நிலவள வங்கிகளிலே ஒரு பம்புசெட்டுக்கு அல்லது ஆயில் இன்ஜினுக்கு கடன் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அந்த பம்புசெட்டையோ ஆயில் இன்ஜினையோ அக்ரோ செண்டரில் தான் வாங்க வேண்டும் என்ற கருத்து வற்புறுத்தப்படுகிறது. ஆனால் தனியார் இடத்திலே அந்த பம்புசெட்டு அல்லது ஆயில் இன்ஜின் வாங்கினால் அக்ரோ செண்டர் விலையை விட குறைவாக இருக்கிறது. ஆகவே அருள்கூர்ந்து அப்படி விவசாயிகளுக்கு கொடுக்கின்ற கடனை பம்புசெட்டு வாங்குவதற்கோ, அல்லது ஆயில் இன்ஜின் வாங்குவதற்கோ அவர் எங்கேயாவது வாங்கலாம் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அக்ரோ செண்டரோடு தனியார் போட்டிபோடக்கூடிய நிலையில் பலயிடங்களில் தனியார் இடங்களில் ஆயில் இன்ஜின்கள் மோட்டார் பம்புசெட்டுகள் அக்ரோ செண்டர் விலையை விட குறைவாக இருக்கிறது. ஆகவே ஆக்ரோ செண்டரில் வாங்குவதற்கு ஏதாவது ஒரு அளவு மானியம் கொடுத்து தனியார் மார்க்கெட்டில் ஈடு கொடுப்பது போன்றஅளவிலே அதை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நிலவள வங்கிகளிலே வேலை செய்பவர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுகிறது. அப்படி போனஸ் கொடுக்கப்படுகின்ற அந்த நிலைமையில் இதற்காக பாடுபடுகின்றவர்கள் பிரதம நிலவள வங்கியில் உள்ளவர்கள். ஆனால் போனஸ் பெறுபவர்கள் யார் என்றால் தலைமையில் உள்ள நிலவள வங்கியைச் சேர்ந்தவர்கள். பாடுபடுகின்றவர்கள் பிரதம நிலவள வங்கியைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு போனஸ் கிடையாது. ஆனால் மத்தியில் உள்ள தலைமை நிலவள வங்கியில் உள்ளவர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுகிறது. ஒரு கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தீர்க்க தரிசனமாக எடுத்து அதை முடித்து வைக்க வேண்டும். சட்ட அமைச்சர் அவர்கள் நினைத்தால் அதை 3 நிமிடத்தில் முடிக்கலாம். இதனால் நாட்டிலே ஒரு பெரிய ஊழல் நடைபெறுகிறது. அது என்ன என்று சொன்னால் சிறியவிவசாயிகள், பெரியவிவசாயிகள் என்று பட்டியலைப் பெறுவதற்காக ஒவ்வொரு சிறு விவசாயியும் தாலுக்கா அலுவலகத்திற்குச் சென்று சான்றிதழ் பெறவேண்டும் என்று சொன்னால் அதற்கு அவன் செலவு செய்கின்ற அந்த மானியத்தொகையில் பாதித் மானிய தொகையை அவன் அங்கே அழுகிறான். இப்படிப்பட்ட ஒரு நிலைமை அங்கே இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது). சிறு விவசாயிகள் சான்றிதழ் பெறவேண்டும் என்றால் மணியக்காரருக்கு 25 ரூபாய், ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு 25 ரூபாய், தாலுக்கா ஆபிஸில் உள்ள குமாஸ்தாவுக்கு 10 ரூபாய், ஈ. ஓ. ஏ. எச். க்கு 25 ரூபாய். கிராம சேவக்குக்கு 25 ரூபாய், சிறு சேமிப்புக்கு 25 ரூபாய் இப்படி மானியம் பெறுகின்ற நிலைமை இருக்கின்றபோது பாதி தொகையை அங்கே கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. வோட்டர் லிஸ்டு எடுப்பதைப்போல் இவர்கள்தான் சிறு விவசாயிகள், இவர்கள் தான் பெரிய விவசாயிகள் என்று லிஸ்ட்டை அரசு நினைத்தால் 3 நாட்களில் எடுத்து விடலாம். அந்த வகையில் செய்ய வேண்டும். சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று சான்றிதழ் பெறுவதற்கு பெரும் தொகையை செலவழித்து பெரும் அளவுக்கு துன்பப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகளுக்கு கடன் வழங்கும்போது, அவர்கள் தக்க முன் கடன் பெறுவதற்கு அந்த கூட்டுறவு விவசாய சங்கத்திலே கடனை பைசல் செய்த 15 நாட்களுக்குப் பிறகுதான் விவசாய கடன் பெறமுடிகிறது. ஆனால் தேசீய வங்கிகளில் பைசல் செய்தவுடனே மறு நிமிடமே விவசாய கடன் பெறமுடிகிறது. அந்த மாதிரியான நிலைமையை அரசு உடனடியாக அமுல்படுத்த நம்முடைய கூட்டுறவு, வங்கிகளிலும் விவசாயக் கடனை பைசல் செய்தவுடனே அது சார்ட் டெர்ம் லோனாக இருந்தாலும் சரி அல்லது லாங்க் டெர்ம் லோனாக இருந்தாலும் சரி பைசல் செய்த மறு நாளே கடன் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 15 நாட்கள் கழித்த பிறகுதான் அவர்கள் கடன் பெறுகின்ற அந்த நிலைமை மாறவேண்டும் என்று இந்த நேரத்தில்



தெரிவித்துக் கொள்கிறேன். உடனுக்குடன் கூட்டுறவு சங்கங்கள் கடன் கொடுக்க இந்த பிரதம விவசாய சங்கத்திற்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கங்களிலே வழங்கும் பயிர் கடன்களுக்கும் ஓவர் டிராப்ட் கொடுக்கும் முறையை ஓரளவுக்கு பரீட்சார்த்தமாக செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடனை அடைப்பதற்கு பல வியாபாரிகள் ஓ.டி. எடுத்து வியாபாரம் செய்கிறார்கள். அதுபோல விவசாயிகளுக்கும் ஓ.டி. கிடைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிராமங்களில் கூட்டுறவு கடைகள் ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் இருக்கின்றன. அந்த கூட்டுறவு கடைகளிலே இன்றையதினம் என்ன நிலைமை இருக்கிறது என்று சொன்னால் ஒரு சலிப்பான மனப்பான்மை அந்த ஊழியர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு சம்பளமாக 150 ரூபாய் தருகின்ற காரணத்தால் அவர்களுக்கு முயற்சி இல்லை. ஓரளவுக்கு அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தி எல்லாப் பொருள்களும் மக்களுக்கு கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிலே பல முறைகளை வைத்திருக்கிறார்கள். சென்ட்ரல் ஸ்டோர்ஸ் முறை மூலமாக அவர்கள் கண்ட்ரோல் இருக்க வேண்டும், அவர்கள் மத்திய வங்கிக்குக் கொடுத்து மத்திய வங்கி கண்ட்ரோலிலே கடைகள் நடைபெறுகிற, அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து கூட்டுறவுக் கடைகளுக்கு நேரடியாகப் பொருட்கள் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் நடத்திவரும் கிராமக் கடைகளை மொத்த விற்பனை பண்டகசாலைகள் ஏற்று நடத்த வேண்டும். காரணம் அவ்விற்பனையில் ஏற்படும் லாபம் பண்டகசாலையைத் தான் சார்ந்து நிற்கிறதே தவிர கூட்டுறவு சங்கத்தைச் சேரவில்லை. அதற்கு மாறாக டெபிசிட் நட்டம் மட்டும் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்கிறது. இதனால் விவசாயிகளுக்கு வழங்கும் கடன் மற்றும் இதரப் பணிகள் பாதிக்கப்படுகின்றன. பணிபுரியும் விற்பனையாளர்களை கமிட்டி நியமனம் செய்கிறது. மேற்படி நபர்கள் தவறுகள் செய்தால், கையாடல்கள் செய்தால் நியமனம் செய்த கமிட்டிமீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அதற்கு மாறாக சங்கத் தலைவர் மற்றும் பணிபுரியும் செயலாளர் மீது சர்சார்ஜ் போன்ற நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கிறார்கள். அதற்கெல்லாம் மாற்றம் தேவை. பொதுவாழ்விலே வருகிறவர்களுக்கு பாதிப்பு இருக்கக்கூடாது என்ற கருத்திலே நான் இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

லிப்ட் இரிகேஷன் சிஸ்டம் பெரும்பான்மையாக நடைமுறையில் இல்லாமல் இருக்கிறது. ஒன்று அவற்றை மூடிவிட வேண்டும், இல்லையென்றால் நல்ல முறையில் அவற்றை நடத்த ஆவன செய்ய வேண்டும். கூட்டுறவு நாணயச் சங்கங்களில் விவசாயக் கடன்கள் பெற்றுள்ள தவணை கடந்த கடன்களை ரத்து செய்ய வேண்டும். சிறு விவசாயிகளுடைய கடன்களை ரத்து செய்ய வேண்டும், பெருவிவசாயிகளுடைய கடன்களை நீண்டகாலக் கடன்களாக வறட்சியை முன்னிட்டு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜப்தி நடவடிக்கைகள் இப்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் இங்கே சொல்கிறேன் வறட்சியை முன்னிட்டு ஜப்தி கூடாது என்று அரசு சொல்கிறது. ஆனால் பல இடங்களிலே அது மாதிரி ஜப்தி செய்யப்படுகிற நிலைமை இருக்கிறது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதியிலே திரு. திருவேங்கடம் அவர்களுடைய தொகுதியிலே கெரால்பாக்கம் என்ற கிராமத்திலே ஜப்தி செய்திருக்கிறார்கள். இனிமேலாவது வறட்சியை முன்னிட்டு ஜப்தி செய்கிற நடவடிக்கையை எடுக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். வேலூரிலே மத்திய வங்கியிலே சூப்பரவைசர்கள் பதவிகள் காலியாக இருக்கின்றன . அவைகளை நிரப்பினால் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

**திரு. வி வி. சுவாமிநாதன் :** ஒழுங்குப் பிரச்சினை. சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிநிர்வாகத்தைப் பற்றி சுதந்திரமாக இந்த மாமன்றத்திலே உறுப்பினர்கள் விவாதிக்க வேண்டுமென்ற பெயரால்தான் நீதிநிர்வாக மானியம் இங்கே விவாதிக்கப்படுகிறது என்று நான் கருதுகிறேன். இந்த நேரத்திலே சில நாட்களுக்கு முன்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதிநிர்வாகத்தைப் பற்றிப் பேசிய சில வார்த்தைகள் கோர்ட்டை அவமதிக்கிற நோக்குடன் பேசப்பட்டதா பேசப்படவில்லையா என்பதைப்பற்றி ஒரு வழக்கு உயர்நீதிமன்றத்திலே இருப்பது தங்களுக்குத் தெரியும். அப்படி அந்த மன்றம் விசாரிக்கலாமா விசாரிக்கக்கூடாதா என்பதும் அதைப் பற்றி நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் முடிவு சொல்ல வேண்டுமென்று சட்டப் பேரவைத் தலைவருடைய முடிவை எதிர்பார்க்கிற நிலையில் மாமன்றத்திலே பல உறுப்பினர்கள் பலவிதமாகப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் பேசிய பேச்சிலே மாத்திரம் சில பகுதிகளை எடுக்க வேண்டுமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சைப் பற்றி ஒரு குற்றச்சாட்டைப் பேசியிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் தீர்ப்புச் சொல்வதற்கு முன்பு அப்படி ஒன்று பேசப்பட்டு அது அனுமதிக்கப்படுமானால் மாண்புமிகு திரு. குப்புசாமி அவர்கள் பேசிய பேச்சினையும் தாங்கள் அனுமதிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் இந்தச் சட்டப் பேரவையில் பாரபட்சம் காண்பிக்கக் கூடாது என்பதைப் பணிவோடு தெரிவித்து கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு சட்ட அமைச்சர் ஏதாவது கிளாரிபை பண்ணுவதாக இருந்தால் பண்ணலாம்.

**திரு. வி. வி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பை அளிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தத் தீர்ப்புக்கு முரணாக பல பதிவேட்டில் பதிவு செய்ததற்கு அப்புறம் தீர்ப்பு அளித்துப் பிரயோசனம் இல்லை. ஒன்று எல்லோருடைய பேச்சையும் அனுமதியுங்கள். இல்லையென்றால் ஒருவர் பேச்சிலே மாத்திரம் சில பகுதிகளை எடுத்தால் இன்னொருவர் பேசியதையும் எடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். ஒருவருக்கொருவர் பாரபட்சம் காட்டக்கூடாது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 4—40)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.**—மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வி. வி. சுவாமிநாதன் அவர்கள் ஒருவர் பேசிய பேச்சை சபைக்குறிப்பிலே இருந்து நீக்கிவிட்டு, அதுபற்றி மற்றொரு உறுப்பினர் பேசுகிறபோது அதை நீக்காமல் இருப்பது சரியல்ல என்ற கருத்தைச் சொல்கிறார்கள். தாங்கள் தான் அதிலே ஒரு முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். வி. என். சோமு.**—துணைத் தலைவர் அவர்களே, காலையில் மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் பேசுகிறபோது மாற்றுத் தலைவர் திரு கோபால் அவர்கள் தங்களுடைய ஆசனத்தில் இருந்தார். அப்போதே நான் ஆட்சேபணை கிளப்பினேன். அதற்கு பிறகு மாண்புமிகு தலைவர் தங்களுடைய இருக்கையில் அமர்ந்த பிறகு பார்த்து விட்டு தீர்ப்பு அளிப்பதாகச் சொல்லி, இப்போது தங்கள் மூலமாக தீர்ப்பு அளித்திருக்கிறார். திரு. ரகுமான்கான் அவர்கள் நீதிமன்றத்தை அல்லது சட்டமன்றத்தை அவமதிக்கிற வகையில் எதையும் பேசவில்லை என்பது காலையிலே நான் சபையிலே இருந்தேன் என்ற காரணத்தால் எனக்குத் தெரியும். அதனால் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசிய பேச்சை பார்த்துவிட்டு கூட நீங்கள் தீர்ப்பு அளிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.**—துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசிய பேச்சு, மற்ற உறுப்பினர்களுடைய பேச்சையும் பார்த்து விட்டு தீர்ப்பு அளிக்கிற வரையில் எவருடைய பேச்சும் பிரசுரம் ஆகக்கூடாது என்று வேண்டுமென்றால் நீங்கள் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.**—இதெல்லாம் பிரசிற்கு போய் வெளியிலே வந்திருக்குமே! எக்ஸ்பன்ஞ் பண்ணியதை என்ன செய்யலாம்?

**திரு. வி. வி. சுவாமிநாதன்.**—துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் நீதி நிர்வாகத்தைப் பற்றி பயமில்லாமல் 'வித்தவுட் பியர் பார் எனி லீகல் கான்சிகுவன்சஸ்' அது தான் இந்த மாமன்றத்தின் சுதந்திரத்தை உறுதிபடுத்துவதாகும். பேசுவதற்கு உரிமை இருக்கிறது என்பது உண்மையானால் மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் பேசியதை மறுபரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன்.**—துணைத் தலைவர் அவர்களே, பல விஷயங்களில் நீதித் துறையைப் பற்றிமாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி ஒரு கருத்து வெளியிடக் கூடாது என்று இப்போது சொல்வது புதுக் குழப்பமாக இருக்கிறது. ஆகவே இவைகளுக்கெல்லாம் நல்ல முறையில் தீர்ப்பளித்து பத்திரிகையாளர்களுக்கு ஒரு புதுக் குழப்பம் ஏற்படாமல் இருப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.**— பத்திரிகையாளர்களுக்கு குழப்பம் இல்லை. நாம் தான் ஒரு முடிவிற்கு வரவில்லை. 211-ஆ, 212-ஆ, இங்கே பேசலாமா? அங்கே பேசலாமா? என்ற பிரச்னை நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே தான் கேட்கிறேன். ஏற்கெனவே இருப்பதைப் போல பேச்சு இருக்கட்டுமா? வேண்டாமா?

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்.**—மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்த வரையில் In accordance with the provisions of Article 211 நீதிபதிகளுடைய conduct during the course of the discharge of his function பற்றி பேசக்கூடாது என்பது தெளிவாக இருக்கிறது. அது மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களுக்குத் தெரியும் அதையொட்டி சட்டமன்ற விதிகளும் இருக்கின்றன. வழக்கமாக விதிமுறைகளுக்கு ஒப்ப எற்கெனவே எடுக்கப்பட்ட பல முடிவுகளுக்கு ஒப்ப நீதிபதிகளுடைய conduct in regard to the discharge of their functions பேசக் கூடாது என்பதை நடைமுறையிலே கொண்டு வந்திருக்கிறோம். ஆனாலும் கூட அதையும் மீறி மாண்புமிகு உறுப்பினர்கள் whether intentionally or un intentionally ஒருவேளை அவர்கள் பேசுகிற பேச்சு, ஆர்ட்டிக்கிள் 211 என்ற அந்த விதியை மீறுவதாக இருக்குமானால் அது குறித்து முடிவு எடுக்கவேண்டிய அதைஅனுமதிப்பதா அல்லதுநீக்குவதா என்பது



குறித்து முடிவு எடுக்கவேண்டிய முழு அதிகாரமும் பேரவைக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் தான் இருக்கிறது காரணம் ஆர்ட்டிக்கிள் 211 no doubt protects the judiciary when any Member speaks with reference to the conduct of the Judge during the discharge of his functions ஆனாலும் கூட that article 211 is subject to article 194 2 என்பது அரசியல் சட்டத்திலே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஆர்ட்டிக்கிள் 194(2) என்பது that is absolute not subject to any other provision of the constitution என்பதும் அந்த பிரிவிலே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி 1965ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தினுடைய ஏழு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பும், அதையொட்டி பல நீதிமன்றங்களுடைய தீர்ப்பும் கூட, 211ஆவது விதியை மீறி ஒரு நீதிபதியினுடைய கான்டக்டைப் பற்றி கூறுகிறபோது, அதை முடிவெடுக்கிற அதிகாரம் பேரவைக்குத் தான் இருக்கிறது என்றும், அதை மீறி அவர்கள் பேசிவிடுவார்களேயானால், அது 194(2) என்பதன் மூலமாக அவையினுடைய உரிமை பாதுசாக்கப்படுகிறது என்பதும் தெளிவாக இருக்கிற சட்டத்தினுடைய நிலைமையையும், சட்டத்தை ஒட்டிய பல தீர்ப்புகள் நிலைமையும் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட பிரச்னைகளைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசிய பேச்சாக இருந்தாலும் சரி, மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் பேசிய பேச்சாக இருந்தாலும் சரி, அதில் ஒரு குறிப்பிட்ட நீதிபதியினுடைய கான்டக்டை ரெஃபர் பண்ணுகிறாரா என்பதைப் பார்த்து, அப்படி இருக்குமானால் அந்தப் பிரிவை நீக்கிவிடுவது அவையினுடைய மரபுகளுக்கு ஒத்ததாக இருக்கும். அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய பேச்சிலே * * * * * பற்றி 'ரெஃபரன்ஸ்' இல்லையென்றால் அதை நீக்குவதும் நீக்காததும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருடைய முடிவாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.**—நீங்கள் சொல்வது ஜெனரலாக சரிதான். அதை 'கான்டக்ட்' என்று எடுத்துக்கொள்வதா? எப்படி எடுத்துக் கொள்வது? ஒரு பிரச்னை வந்திருக்கிறது. சாதாரணமாக இருந்தால் வேறு வழியில் தீர்த்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.**—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலாகாபாத் நீதிமன்றம் ஒரு தீர்ப்பைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. what conduct refers to என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. Conduct means—During the course of dischage of functions by a purticular Judge. எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அதையும் கணக்கில் எடுத்து நீங்கள் ஆய்ந்த பிறகு முடிவெடுக்கலாம்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.—நான் இப்போது பொழுது எக்ஸ்பஞ்ச் செய்தாகிவிட்டது. இப்பொழுது ரெஸ்டோர் செய்யவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. வி. சுவாமிநாதன் கேட்டிருக்கிறார்.

திரு. வி. வி. சுவாமிநாதன்.—எக்ஸ்பஞ்ச் செய்வது என்றால் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கானுடைய பேச்சில் அப்படி ஆட்சேபணையான பகுதி இருந்தால், அதை நீக்க வேண்டுமென்று கேட்கிறேன். நான். அதை நீக்கினால் எனக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.—திரு. ரகுமான் கான் பேச்சுக் குறிப்பை நான் வரவழைத்துப் பார்க்கிறேன். அதிலே இது மாதிரி ஆட்சேபணை பகுதிகள் வந்தால்......

திரு. ரா. கிருஷ்ணன்.—திரு. ரகுமான்கான் பேசியது, திரு. குப்புசாமி பேசியது அனைத்தும் இருக்கட்டும்.

திரு. ஜே. எஸ். இராசு —திரு. ரகுமான்கான் பேசியது மாலை முரசிலே வந்துவிட்டது. நீங்கள் எக்ஸ்பஞ்ச் செய்தாலும் அது வந்துவிட்டது..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.—அவைக் குறிப்பிலே இருக்கலாமா, இல்லையா என்பதுதான் நம்முடைய கேள்வி. இருக்கலாம் என்று அவையிலே முடிவெடுத்தால் அது இருந்து விட்டுப் போகட்டும்

திரு. ஜே எஸ். இராசு :—நீங்கள் இல்லையென்று முடிவெடுத்தாலும் திரு. ரகுமான்கான் பேச்சு வெளியிலே போய்விட்டது; அது வெளிவந்த பத்திரிகை விற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. என். வ். என். சோமு.—துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இன்று காலையிலே பேசிய பேச்சுகளைக் குறித்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை, மற்ற உயர்நீதிமன்றத் தீர்ப்பைத்தான் துணைக்கு அழைத்திருக்கிறார். உச்ச நீதிமன்றத் தீர்ப்பு—மாண்புமிகு அமைச்சர் சொன்னது—It is cnly a reference ஜனாதிபதி அவர்கள் ' ரெஃபரன்ஸ் ' கொடுத்து கிடைத்தது அது. Ldgal force cf law அதற்கு இல்லை. ஏற்கெனவே, காலையிலே பேரவைத் தலைவர் எடுத்த முடிவுப்படி சிலபல பகுதிகளை நீக்கிவிடச் சொல்லியிருக்கிறீர்கள். மீண்டும் நான் சொல்கிறேன், ஏற்கெனவே சொன்னதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி பேசிய பாணியிலே மாண்புமிகு ரகுமான்கான் பேசவில்லை ஆகவே, நான்............



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை நீங்கள் சொல்ல வேண்டாம். அதுதான் அவைக் குறிப்பிலேயே இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என். வி. என். சோமு அவர்கள் கூறுவது சரியானதல்ல.

It may be a matter by way of reference to the Supreme Court. But this is a judgement by the Supreme Court by a Seven judges Bench. Hon'ble member may kindly make a note of it. அந்த வழக்கினுடைய தீர்ப்பினை ஒட்டி, 1970 ஆம் ஆண்டு Tej Ki an Jain vs N. Sanjiva Reddy வழக்கிலே உச்ச நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருக்கு நான், என்னுடைய இறுதி உரையின்பொழுது அந்த விளக்கங்களைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைக்குறிப்பிலே எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறோம். அது அப்படியே இருக்கலாமா அல்லது......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் பேசி, அதற்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர்....

(மாலை 4—50)

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி தெளிவாகவே பேசியிருக்கிறார்கள். தொடர்ந்து நாங்கள் அப்பொழுதே ஆட்சேபணை தெரிவித்தோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சட்டப்படி சிக்கல் இருப்பதால்தான் தாங்கள் இவ்வளவு சங்கடங்களுக்கும் ஆளாகியிருக்கிறீர்கள். தாங்கள் அது நாட்டு மக்களுக்கு உகந்ததாக இருக்கிறதா என்பதைப் பார்த்து, நாட்டு மக்களுக்கு உகந்ததாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளலாம் இல்லையென்றால் தள்ளிவிடலாம். எனவே, இதைப்பற்றி முடிவெடுக்க வேண்டியது தாங்கள் தானே தவிர, அமைச்சர்களோ அல்லது உறுப்பினர்களாகிய நாங்களோ அல்ல. சமுதாயத்திற்கு விரோதமாக, மக்களுக்கு விரோதமாக, நாட்டுக்கு விரோதமாக இருக்கக்கூடிய கருத்தாக உறுப்பினர்கள் பேசியிருந்தால் அது பற்றித் தாங்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படிப்பட்ட பிரச்சினையைக் கொண்டு வந்ததால்தான் இந்த நிலைமை.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * * *

பற்றி விவரித்துப் பேசிய ரகுமான்கான் அவர்கள் பேசிய அந்தப் பேச்சையும் மாண்புமிகு உறுப்பினர் ரா. கிருஷ்ணன் அவர்கள் பேசிய அந்தப் பேச்சையும் நீக்கிவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரகுமான் கான் பேசிய அந்தப் பேச்சை நான் வரவழைத்துப் பார்க்கிறேன். திரு. கிருஷ்ணன் பேசிய பேச்சில் பிரச்சினை இருப்பது மாதிரி தெரியவில்லை (குறுக்கீடு) திரு. கிருஷ்ணன் பேசிய பேச்சையும் நான் வாங்கிப் பார்க்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : துணைத் தலைவரவர்களே, காலையிலேயே இதுபற்றி விவாதம் எழுப்பப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் பேசிய பேச்சு, * *

குறிப்பைப் பரிசீலனை செய்து தள்ளுபடி செய்வதா கூடாதா என்று கூறவேண்டும். எனவே, அதையும் தாங்கள் பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : காலையிலே பேசிய உறுப்பினர்களின் பேச்சுக் குறிப்புகளை நான் வாங்கிப் படித்துப் பார்க்கிறேன். இப்படிச் சொல்லப்பட்ட குறிப்புகள் ஏதேனும் இருந்தால் அவைகளும் நீக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, காலையில் சில பகுதிகளை அவைத் தலைவரவர்கள் பரிசீலனை செய்து முடிவு செய்வதாகச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் ரகுமான்கான் பேச்சு இருந்ததா இல்லையா என்று உறுதிப்படாத நிலையில், அதுவும் பரிசீலிக்கப்பட வேண்டியிருந்தால் அதைப்பற்றி பேச்சில்லை ; இல்லையென்றால், ஏற்கெனவே குறிப்பேட்டிலே இருக்கும் ; பத்திரிக்கைக்கும் போயிருக்கும். எனவே, இப்பொழுது அதை நீக்குவது என்றால் அதனால் என்ன பிரயோசனம் இருக்கும் என்று கேட்க விரும்புறேன்.

---

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, அதை வாங்கிப் படித்துப் பார்த்து, தவறாக இருந்தால் நீக்கவேண்டுமே ஒழிய, பத்திரிக்கைகளில் வந்திருந்தால் கவலையில்லை ; நாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறோம் என்றால் சட்டசபை தன்னுடைய கடமையை நிறைவேற்றியிருக்கிறது என்று நாம் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் உறுப்பினர்கள் காலையில் பேசிய பேச்சுக்களைக் கேட்டிருக்கிறேன். அவைகளைப் பார்த்து நான் சொல்கிறேன். இனிமேல் காலையில் வரும் பத்திரிக்கைகளிலாவது, எந்தப் பத்திரிக்கையிலும், நான் இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரையில் பத்திரிக்கை நிருபர்கள் இதுகுறித்து எந்தக் குறிப்பும் எழுத வேண்டாம்.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவரவர்களே, எதை அனுமதிக்க வேண்டும், எதை அனுமதிக்கக் கூடாது என்பதைப் பற்றி ஏற்கெனவே சட்டத்துறை அமைச்சரவர்கள் ஃபெசிஸ்பிக்காகச் சொன்னார்கள். . அதாவது ஒரு நீதிபதியினுடைய தீர்ப்பைப் பற்றிய கான்டக்ஸ்ட். அதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பேச்சுக்களை வாங்கிப் பார்த்துவிட்டு நான் சொல்கிறேன். இப்பொழுது நடைபெற்ற விவாதங்கள்கூட கிருஷ்ணன் பேசியது உட்பட அவைக் குறிப்பில் இருக்கத் தேவையில்லை. நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பில் இருக்கத் தேவையில்லை.

*திரு. இரா. சண்முகம் : தலைவர் அவர்களே, இன்று அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட நீதி, நிர்வாகம், சிறைச்சாலை, கூட்டுறவு ஆகிய மானியங்கள் மீது, என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இன்றைய சமுதாய அமைப்பில், எந்தத் துறையாக இருந்தாலும், கூட்டுறவு அமைப்பில் தான் இயங்கமுடியும் என்றும் கூட்டுறவு இயக்கம் வலுப்பெற்று இருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது என்பதையும் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவு இயக்கம் நல்லநோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது என்பதை நன்கு உணர்ந்திருந்தாலும், அதனுடைய வெற்றி, தோல்விகள் அதனைக் கையாளுகின்ற முறையிலே இருக்கின்றது என்பதை நாம் நன்கு அறிவோம். கூட்டுறவு இயக்கங்கள் கையாளுகின்ற வகையிலே நலிந்து வந்திருந்தாலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களாலும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களாலும், எடுக்கப்பட்ட பெரு முயற்சி, புதிய நடவடிக்கைகள் காரணமாகவும், இன்று மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டு, ஓரளவிற்கு கூட்டுறவு இயக்கம் தலைநிமிர்ந்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற ஒட்டை உடைசல்களால், அதை முழுமையாக செம்மைப்படுத்தமுடியாமல், அதன் முழு பலனும் நாட்டு மக்களுக்கு கிடைக்காமல் இருப்பதை நம்மாலே உணர முடிகிறது. 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதை மாற்றி, கூட்டுறவுத் துறையிலே தலைவர்களாக இருந்தவர்கள் கூட்டுறவைத் தங்களுடைய குடும்ப உயர்வாக ஆக்கிக்கொண்டதன் விளைவாக இன்று தமிழகத்தில் இருக்கின்ற கூட்டுறவுத் துறைகள் நலிந்து செயலற்ற நிலையில் இருக்கின்றது. அதனாலே தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்களுக்கு அது உதவாமல், செயலற்று இருப்பதை உணர்ந்து, அதைத் திருத்தி அமைப்பதற்காக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கிற தலைவர்கள் தொடர்ந்து 2 முறைகள், அல்லது தொடர்ந்து 6 ஆண்டுகாலமாக தலைவர்களாக இருப்பார்களேயானால், அடுத்த முறை அவர்கள் மீண்டும் தலைவர்களாகவர தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள் என்ற சட்டத்தை இந்த மன்றத்திலே கொண்டுவந்திருப்பதை நான் இந்த நேரத்திலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் ஏதோ விவசாயிகளுக்கு மட்டும் தான் கடன் கொடுக்கிற பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தச் சங்கத்தில் மற்ற நலிந்த பிரிவினருக்கும் பல்வேறு வகையிலே உதவக் கூடிய வகையில் இந்தச் சங்கத்தை ஏற்படுத்தி, கிராமப் பகுதியிலே இருக்கிற மக்களுக்காக எல்லா வகையிலேயும் உதவுகின்ற சங்கமாக மாற்றியமைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, விவசாயிகள் அங்கே விளைவிக்கின்ற பொருள்களை விவசாய வங்கிகள் மூலமாக, நியாயமான விலையில் கிடைக்கின்ற வகையில், 'அந்தக் கூட்டுறவுச் சேவை சங்கமே அதற்கு பொறுப்பேற்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எப்படி கரும்பு விவசாயிகளுக்கு கடன் கொடுக்கின்ற அந்த வங்கிகள் மூலமாக, உரமோ, பணமோ பெற்றுக் கொண்டு, அதன்பிறகு, கரும்பை வெட்டி தொழிற்சாலைக்கு அனுப்பிய பின்னர், அவர்கள் கொடுத்த அந்த அசலையும் வட்டியையும் பிடித்துக்கொண்டு, மீதி தொகையை நேரடியாக விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற வகையில், அங்கே இடைத் தரகர்கள் இல்லாத காரணத்தால் முழு தொகையும் விவசாயிகளுக்கு கிடைக்கிறதோ. அதுபோல் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அனைத்துப் பொருள்களுக்கும் இடைத் தரகர்கள் இல்லா-



மல் நேரடியாக உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு உரிய பணம் கிடைக்கின்ற வகையில், நாம் இந்த விவசாயச் சங்கத்தின் மூலமாக ஏற்பாடு செய்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, விவசாயச் சங்கத்தில் எப்போதோ ஏற்படுத்தப் பட்ட பழக்கம் ஒரு ஏக்கருக்கு ரூ. 800 என்றிருக்கிறது. ஆனால் இன்றுள்ள நிலையில் ஏக்கருக்கு ரூ. 1,500 செலவாகிறது. ரூ. 1,500 கொடுப்பதற்கு நாம விவசாயச் சங்கத்தின் மூலமாக ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, ரூ. 800 கொடுத்து, அதற்கு உரமும் கொடுக்கிறார்கள். ஆக அந்த நிலையிலே அவர்கள் எதற்காக வாங்கினார்களோ, அதற்கு செலவு செய்யமுடியாமல் அவர்கள் விட்டுவிடுகிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் திரும்பவும் வாங்குவதற்கு இயலாமல் போய்விடுகிறது.

(மாலை 5-00)

ஆகவே இந்த நிலையிலே அவர்களுக்கு 1,500 ரூபாய்க்கு மேலே செலவு செய்கின்ற அந்த நேரத்திலே அந்த வங்கியிலிருந்து அந்த 1,500 ரூபாய் கடன் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த்தனன் அவர்கள் சொல்லும்போது சொன்னார்கள். விவசாயத்திற்கு அங்கே கொடுக்கின்ற— கடன் இன்று உள்ள நிலையில் போதாது, எனவே அதை உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் இணைந்துள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நுகர்பொருள் கடைகளை நாம் அதிகமாகத் திறந்து வைத்திருக்கிறோம். அதிலே மேற்பார்வை செய்யவோ, அதை தணிக்கை செய்யவோ, அங்கே தனியாக மேற்பார்வையாளர்களோ அல்லது தணிக்கையாளர்களோ இல்லை. எனவே, நாம் மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக நியமிக்க வேண்டும். அப்படி போட்டால்தான் கிராமப்புறத்திலே இருக்கிற நுகர்பொருள் கடைகளைதணிக்கைச் செய்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். அப்படி இல்லை என்றால் தற்போது நியாயவிலை கடைகளில் தணிக்கை செய்ய, அரசு அலுவலர்களாக இருக்கின்ற வி.எல்.பி. 'சி.எஸ்.ஆர் அல்லது வி.எஸ்.பி.எஸ்.ஐ. அவர்களைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த ஒன்றியத்திலே இருக்கிற, அந்தப் பகுதியிலே இருக்கிற அத்தனை நியாயவிலைக் கடைகளையும் போய்ப் பார்ப்பதற்கான வாய்ப்பை அவர்கள் பெறவில்லை. ஆனால்

அந்தக் கூட்டுறவு வங்கியில் இருக்கிற செயலாளராகிலும் அனைத்துக் கடைகளையும், ஏறக்குறைய 10, 12 கடைகள் இருக்குமானால் அவர்கள் நேரடியாக சென்று அந்தக் கடைகளை தணிக்கை செய்யவோ அன்றாடம் என்ன பொருள்கள் விற்றிருக்கிறது, என்ன பொருள்கள் தேவை என்று பார்ப்பதற்கு அவர்களுக்கு நேரம் இல்லாத காரணத்தால் மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக அதற்கு என்று தணிக்கையாளர்களை போடவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு வங்கியில் உறுப்பினர்களாக கூட்டுறவு சேவை உறுப்பினர்களாக முன்பெல்லாம் குறிப்பிட்ட வசதி படைத்தவர்கள் மட்டும் தான் அந்தக் கூட்டுறவு வங்கியில் அங்கத்தினர்களாக இருந்து கொண்டு அவர்கள் தங்கள் தேவைகளை யாருக்கும் தெரியாமல், அவர்கள் எவ்வளவு பணத்தை ஒதுக்க வேண்டுமோ அந்தப் பணத்தை மட்டும் அதிலே பெற்றுக்கொண்டு மற்றவர்களுக்கு அதிலே எந்தப் பயனும் இல்லாமல், செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு நலிந்த பிரிவினர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும், இதிலே உறுப்பினர்களாக ஆகி, அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையிலே அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தித்தரவேண்டுமென்ற எண்ணத்தோடு சிறிய சிறிய கடன் தொகைகளை அவர்களுக்கு கொடுத்து, அவர்களை வாழ்க்கையில் உயர்த்த முன்வந்து இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த விவசாய சேவைச் சங்கத்திலே ரிசர்வ் வங்கியின் மூலமாக விதிமுறைகளைத் தளர்த்தி கொடுக்கப்பட்டிருக்கிற கடன்களை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். குறுகிய காலக் கடனாக ஏறக்குறைய 100 கோடி ரூபாயும், மத்திய காலக் கடனாக 12 கோடி ரூபாயும், நீண்டகாலக் கடனாக 10 கோடியாக இருந்ததை 15 கோடி என உயர்த்துவதற்கு விதிமுறைகளைத் தளர்த்திய இந்த அரசை இந்த நேரத்திலே பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லால், கூட்டுறவு சேவைச் சங்கத்திலே விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது. காரணம் ஆண்டு மனுவை, கடன் அளவை நாம் முதலிலே நிர்ணயித்து மத்திய வங்கியிலே அதை சாங்க்ஷன் செய்து வைத்துக்கொண்டு அதற்குப் பிறகு நாம் அந்த உறுப்பினர்களுக்கு கடன் பட்டுவாடா செய்கிறோம். இதனால் ஏறக்குறைய 10, 15 நாட்களுக்கு மேலாக காலதாமதம் ஏற்பட்டு



விவசாயிகளுக்கு காலத்திலே கிடைக்கக்கூடிய அந்தப் பணமானது காலம் தாழ்ந்து கிடைக்கிற காரணத்தால், உரிய காலத்தில், உரிய பணிகளை அவர்களால் செய்யமுடியாமல் போய் விடுகிறது. ஆகவே காலதாமதம் இல்லாமல் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே கொடுப்பதைப் போல, வர்த்தக வங்கியிலே கொடுப்பதைப் போல, கடனைக் கொடுக்கும்படி கேட்டு, 2, 3 நாட்களிலே அவர்கள் கொடுத்துவிடுகிறார்கள்—அது மட்டுமல்ல, கட்டியபிறகு கடனை மறுநாளே வாங்கிக்கொள்ளலாம். இந்த முறை இருக்குமானால் நாம் கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல பலனைத் தரமுடியும். அப்படி இல்லை என்றால், அதிலே இருக்கிற சிறிய சிறிய அங்கத்தினர்கள் எல்லாம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். வர்த்தக வங்கிகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். இன்று கட்டிவிட்டால் நாளை காலையிலே நாங்கள் வாங்கிக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். எனவே அந்த நிலை இருக்கிற காரணத்தால், கூட்டுறவு ஸ்தாபனத்திலே இருக்கிற அங்கத்தினர்கள் ஒவ்வொருவராக குறைந்து கொண்டு வருகிற நிலைமையிருக்கிறது. எனவே காலதாமதம் இல்லாமல் உடனடியாக விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், விவசாய, வங்கியிலே கடன்பெற்றிருந்தால் அவர்கள் மற்றவர்களுக்கு ஜாமின் போடுகிறார்கள். ஜாமின்தார்கள் அந்த உரிய காலத்திலே கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிட்டால் அந்த ஜாமின் கொடுத்தவர்கள், அதற்கு பிறகு, உரிய ஸ்தானத்திலே இருப்பவர்கள் திருப்பிக் கடனை கட்டிவிடுகிறார்கள். ஜாமின்தாரர்கள் கட்டவில்லை என்று சொன்னால், இவருக்கும் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே ஒரு 6 மாதம் என்று காலத்தை நீட்டி, அப்படி இல்லை என்று சொன்னாலும், கடனைக் கட்டியவர்களுக்கு நீங்கள் கொடுக்கலாம் என்று தற்காலிகமாக உத்தரவு பிறப்பித்திருந்தார்கள்.

ஜாமின்தார்கட்டவில்லை என்று சொன்னால் கடன்கட்டியவர்களுக்கு உடனடியாக கடன் தொகை கிடைக்கக்கூடிய வகையிலே வழிவகை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் அந்த விவசாய கூட்டுறவுச் சங்கத்திலே பணியாற்றுகின்ற செயலர்கள் அத்தனை பேரும் கூட்டுறவு வங்கியிலே சம்பளங்களை வாங்கிக்கொள்கிறார்கள். ஆனால் கிராமப் பகுதியிலே கூட்டுறவு சேவா சங்கத்தில் பணியாற்றுகின்ற செயலர்களுக்கு சம்பளம் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் கொடுத்திருக்கின்ற கடனை வசூல் செய்த பிறகுதான் சம்பளத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்றநிலை இருக்கிற காரணத்தினால் கிராமப்

புறங்களில் கடன்கள் வசூலிக்காத நிலையில் பல செயலர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையை மாற்றி மத்திய வங்கியிலேயே அவர்களுக்கு சம்பளம் கிடைக்கின்ற முறையை ஏற்படுத்தித்தர வேண்டும். அதுமட்டுமல்லாமல் அந்த கிராமப் பகுதியிலே இருக்கின்ற கூட்டுறவு சேவா சங்கங்கள் மூலமாக கடன் கொடுப்பது அனைத்து சங்கங்களிலே அந்த நகைக் கடன் காடுப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கடைசியாக செங்கை மாவட்டத்தில், காஞ்சீபுரத்தில் முதல் வகுப்பு நடுவர் மன்றம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும்: அதை அமைச்சர் அவர்கள் கடைசி உரையில், உரையாற்றும்போது அதை அறிவிக்கவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, வட ஆற்காடு மாவட்டத்தில் ஆரணிப் பகுதியின் சப்-கோர்ட்டு வேலூரில் உள்ளது. அங்கு ஏற்கனவே மூன்று சப்-கோர்ட்டுகள் இருக்கின்றன. ஆரணிப் பகுதிக்கென்று ஒன்று தனியாக, வேலூரில் இருக்கின்ற சப்-கோர்ட்டை ஆரணிக்கு மாற்றித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், தனியார் கடைகளில், உரங்கள், பூச்சி மருந்துகள் எல்லாம் விலை குறைவாக இருக்கின்றன. ஆனால் கூட்டுறவுத் துறையிலே விற்கின்ற பூச்சி மருந்துகள், உரங்கள் எல்லாம் அதிகமான விலைக்கு கொடுக்கிறார்கள். காரணம் என்னவென்றால், உற்பத்தி செய்கின்ற கம்பெனியிலிருந்து நேரடியாக அந்த தனியார் விற்பனையாளர்கள் அவர்களுக்கு குறைந்பட்ச சதவிகிதத்தை தள்ளுபடி செய்து ஒரு மூட்டைக்கு ஒரு பொருளுக்கு எட்டணா லாபம் போதும் என்ற நிலையில் விற்றுவிடுகிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறையிலே அவர்கள் என்ன லாபத்தை கொடுக்கிறார்கள்? $6\frac{1}{4}$ 6 சதவிகிதம் நூற்றுக்கு லாபமாக கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அதை அப்படியே வைத்து விற்பதன் காரணமாக விவசாயப் பெருங்குடிமக்கள் எல்லாம் தனியார் கடையிலே அந்த பூச்சி மருந்தையும், உரத்தையும் பெற்றுக்கொண்டு, அங்கே கூட்டுறவுத் துறையிலே வாங்க முடியாத நிலையை போக்கி, குறைந்த விலையிலேயே விவசாயிகளுக்கு உரம் கொடுக்கின்ற நிலையை ஏற்படுத்தித்தரவேண்டும் என்று சொல்லி, இந்த வாய்ப்பை நல்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலை, கூட்டுறவு ஆகிய மானிய கோரிக்கைகளில் என்னுடைய கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு, முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி பொறுப்பினை ஏற்ற பிறகு பல ஆண்டுகளாக நீதி மன்றங்கள் பற்றி கவனிக்கப்படாத பிரச்சினைகள் குறிப்பாக நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் இல்லாத நிலையை மாற்றி, உயர்ந்த அளவிலே கூடுதலான



நீதி மன்றக் கட்டிடங்கள், அதே போல நீதியை நிறைவேற்றி வருகின்ற நீதிபதிகள் குறைந்த பட்ச வசதி கூட இல்லாமல் இருந்த நிலைமையை போக்கி, அதை போக்குகின்ற வகையிலே நீதிபதிகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்கின்ற வகையிலே, நீதித்துறையிலே ஒரு புரட்சியை, ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துகின்ற வகையிலே, புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி நீதித் துறையிலே பல்வேறு வகையிலே கவனம் செலுத்தி இன்றைய நீதித் துறையை சிறப்பான நிலைக்கு கொண்டு வந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. அதற்கு அரசை இந்த நேரத்திலே பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல நீதிமன்றத்தில், ஆட்சி மொழி பிரச்சினையிலேகூட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், ரகுமான் கான் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் தெரிந்த நீதிபதி தான் மாநிலத்தினுடைய தலைமை நீதிபதியாக உயர் நீதி மன்றத்திலே வரவேண்டுமென்று. அந்தப் பிரச்சினை மிக ஆணித்தரமாக முதன் முறையாக, இந்த மாநிலத்தினுடைய உயர் நீதி மன்றத்திலே தமிழ் மொழி தெரியாத ஒருவர் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்ட போது, அதற்கு குரல் கொடுத்து மத்திய அரசு அதை மாற்ற வேண்டும், இந்த மாநிலத்தினுடைய உயர் நீதி மன்றத்தில் மொழி தெரிந்த ஒருவர் தான் தலைமை நீதிபதியாக இருக்கவேண்டும் என்று கடிதம் எழுதியது. இன்று கூட அருமை நண்பர் ரகுமான்கான் அந்த கருத்தை வலியுறுத்தினார் என்றாலும்கூட திராவிட முன்னேற்றக் கழகம் இந்த கருத்தை இதய சுத்தியுடன்தான்சொல்கிறதா, உண்மையிலேயே மொழிப் பற்றுடன் தான் சொல்கிறதா, இந்த மாநிலத்தினுடைய உயர் நீதி மன்றத்திலே தமிழ் ஆட்சி மொழியாக வரவேண்டுமென்ற எண்ணம் இதய சுத்தியுடன் தான் சொல்லப்படுகிறதா என்பதை நாங்கள் நிச்சயமாக சந்தேகிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். காரணம் முதன் முதலாக இந்த மாநில மொழி தெரியாத ஒருவர், இம்மாநிலத்தில் உயர் நீதி மன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது, சட்டப் பேரவையிலே இதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் முதல்வர் அவர்களும், சட்ட அமைச்சர் அவர்களும் கடுமையாக குரல் கொடுத்து, நாங்கள் கடுமையாக இதை எதிர்ப்போம்; நிச்சயமாக மாநில மொழி தெரிந்த ஒருவர் தான் உயர் நீதி மன்றத்தினுடைய நீதிபதியாக இருக்கவேண்டுமென்று சொன்ன பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரை, நிருபர்கள் சந்தித்து கேட்கின்றபோது, இப்படிப்பட்ட பிரச்சினை —மாநில மொழி தெரிந்த ஒருவர் தான் உயர் நீதி மன்றத்தினுடைய நீதிபதியாகஇருக்கவேண்டும் என்கின்ற பிரச்சினையைப் பற்றி என்ன சொல்ல நினைக்கிறீர்கள் என்று கேட்டபோது ''நோ கமன்ட்ஸ்'' எந்த அப்பிராயமும் சொல்ல விரும்பவில்லை என்று தான் அன்றைய தினம் திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் குறிப்பிட்டார்.

(மாலை 5-10)

அதனால் தான் குறிப்பிடுகிறேன். காலையில் அருமை நண்பர் ரகுமான்கான் அவர்கள் ''தமிழ்தெரிந்தவர் தான் உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக வரவேண்டும்'' என்று சொன்னார்கள். அதை வரவேற்கிறோம். ஆனால் அவர்கள் இதயசுத்தியோடு தான் சொல்கிறார்கள் என்கிற கடுமையான ஐயப்பாடு ஏற்படுவதற்குக் காரணம், உங்கள் வாதத்திலே இருக்கிற முரண்பாடு, கொள்கையில் இருக்கும் முரண்பாடு ஆகியவைதான், உங்களைச் சந்தேகிக்க வைக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தின் தலைவர் அவர்களே, தமிழ் தெரிந்த நீதிபதி தான் உயர்நீதி மன்ற நீதிபதியாக இருக்க வேண்டும், வர வேண்டும் என்பதிலே எந்த விதமான கருத்து வேறுபாடும் எங்களுக்குள் கிடையாது. இன்னும் சொல்லப்போனால், அரசியல் சட்டத்தின்படி ஒரு மாநிலம் விட்டு இன்னொரு மாநிலம் நீதி பதிகளை உயர்நீதி மன்ற நீதிபதிகளை மாற்றுவது குறித்த வழக்கில், சுப்ரீம் கோர்ட் அப்படி மாற்றுவது சட்டப்படி செல்லத்தக்கதுதான் என்று தீர்ப்பு சொல்லி இருக்கிறது என்று சொன்னாலும், தமிழ் தெரிந்த ஒருவர் தான் தமிழ் நாட்டின் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக வரவேண்டும் என்பதில் எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. அதிலே நாங்கள் அழுத்தமாக இருக்கிறோம். எங்களுடைய தலைவர் ஒரு கூட்டத்திலே சொன்னார்கள். தமிழ் தெரியாது ஆண்டவனுக்கு என்று சொன்னால், தமிழ்தெரியாத ஆண்டவன் எங்களுக்குத் தேவையில்லை என்று கூட சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவான பிரச்சினையை மட்டும் பேசவேண்டும். பிரச்சினைக்குரிய எதுவும் பேச வேண்டாம்.

**திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ் தெரிந்த நீதிபதிதான் உயர்நீதிமன்றத்தின்தலைமை நீதிபதியாக வரவேண்டும் என்று தமிழக சட்ட அமைச்சர் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி, அதைத்தொடர்ந்து அன்றைக்கு கருத்து தெரிவித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரிடம் அதைப்பற்றி சந்தித்துக் கேட்டபோது ''நோ காமென்ட்ஸ்'' என்று சொன்னார். அந்தக் காரணத்தால் தான் உங்களின் கோரிக்கை இதய சுத்தியோடு சொல்லப் பட்ட கோரிக்கைதானா என்பதை நாங்கள் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.



இந்த மாநிலத்தின் உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாக தமிழ் தெரிந்தவர் தான் இருக்கவேண்டும் என்று உண்மையிலே இதய சுத்தியோடு இந்த அரசு நினைக்கின்ற காரணத்தால்தான் தென்னக முதலமைச்சர்கள் மாநாட்டில் அதைத் குறித்து ஒரு தீர்மானம் கொண்டு வந்து, நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்குக் காரணம், அந்தக் கொள்கை இந்த மாநிலத்தின் கொள்கை மட்டுமல்ல, தென்னக மக்களின் கொள்கை என்றஅடிப்படையில் இந்த மாநிலத்தின் மொழி காப்பாற்றப் படவேண்டும் என்ற வகையில் அந்தக் காரியத்தைக் செய்து இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விழைகிறேன் மேலும், தமிழ் மொழியிலேயே தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில், புரட்சித் தலைவர் அரசு இன்றைக்கு கண்ணும்கருத்துமாக இருக்கிறது என்ற அடிப் படையிலேயும் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுஇருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

தமிழ் மொழியிலே தீர்ப்புகள் சிவில் கோர்ட்டுகளைப் பொறுத்த வரையில் வழங்கவேண்டும் என்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. இந்த நேரத்தில் நான் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், நீதித் துறை அதிகாரிகளின் கவனத்திற்கும் ஒன்றைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். தமிழ்மொழியிலேயேதான், இந்த மாநிலத்து மக்கள் பேசும் மொழியிலேயே தான் நீதிபதிகள் தீர்ப்புகள் வழங்கவேண்டும் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்து இருந்தபோதிலும், சட்டங்களில் உள்ள பல்வேறு நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, அதற்கான அவகாசத்தை 6 மாதம், 1 ஆண்டு நீடிக்கவேண்டும் என்று பல நீதிபதிகள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதன் காரணமாக, தமிழ் மொழியிலே தீர்ப்புகள் வெளிவரும் பணி தடைபட்டு இருக்கிறது, குறைபட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, மாநில அரசும், உயர்நீதிமன்றமும் இதிலே கடுமையான சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தான் இந்த அவகாசம் கொடுக்கப்படும். அதற்கு மேல் கூடுதலாக அவகாசம் கொடுக்க இந்த அரசு விரும்பவில்லை. நீதிமன்றத்துறை விரும்பவில்லை என்பதைக் குறிப்பிட்டு, ஒரு இரண்டாண்டு காலத்தில் நீதிபதிகள் அளிக்கும் அனைத்து தீர்ப்புகளும் தமிழ் மொழியிலேயே இருக்கவேண்டும். அப்படி ஏதேனும் ஒரு நீதிபதி தமிழ் மொழியிலே தீர்ப்பு அளிக்க முன்வராவிட்டால் அந்த நீதிபதியே நம்முடைய நீதித் துறைக்கு வேண்டாம், தமிழ் மொழியிலே தீர்ப்பளிக்கக் கூடிய தகுதி படைத்தவர் தான்வேண்டும் என்று உயர்நீதிமன்றமும், அரசும் முடிவான முடிவை எடுத்து, அவர்களுக்குத் தெரிவித்து, அந்த வகையில் தமிழ் மொழியில் தீர்ப்புகள் அளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசியவர்கள் நீதிமன்றத்தைப் பற்றியும் நீதிபதிகளைப் பற்றியும் விமர்சித்துப் பேசினார்கள். நான் அதற்குள்ளே போகவிரும்பவில்லை. நீதிபதிகளைப் பற்றி சட்ட மன்றத்தில் விமர்சிக்கக்கூடாது என்று சொன்னால், அந்த நீதி பதிகளைப் பற்றி யாரும், எங்குமே விமர்சிக்கக்கூடாது என்ற நடைமுறை இருக்கவேண்டும். ஆனால், ஒரு நீதிபதியைப் பற்றி மற்றொரு நீதிபதி விமர்சித்தார் என்ற வகையில்ஒருமிகச் சிறந்த வழக்கறிஞர் ஏ. டி. மெலோனி அவர்கள் ஒரு கட்டுரை யிலே சொல்லியிருக்கிறார்கள். 1970 ஆம் ஆண்டு ஈ.எம்.எஸ். நம்பூத்திரிபாத் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னது கோர்ட்டை அவமதித்த குற்றமாகும் என்று சொன்ன பின்னால், அப்படிப் பட்ட தீர்ப்பை அளித்த நீதிபதியைப் பற்றி, வேறு ஒரு நீதிபதி இந்திய ஜெர்மன் நட்புறவுக் கருத்தரங்கில் பேசியிருக்கிறார். இப்படி அவர் மட்டும் விமர்சிக்கலாமா என்ற கருத்தைத்தான் அவர்கள் அந்தக் கட்டுரையிலே சுட்டிக் காட்டியிருக் கிறார்கள். அந்தக் கட்டுரையிலே பல்வேறு சூழ்நிலைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்தக் கட்டுரைத் தலைப்பு ExtraJudicial activities of Judges (15,2.1983)ஒரு கட்டுரையாகவே வெளியிட்டு, அதிலேபல்வேறுநிகழ்ச்சிகளைச்சுட்டிக்காட்டி, எந்த எந்த காலகட்டத்திலே நீதித் துறையிலிருக்கிறவர்கள் வரம்பு மீறி பேசியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படியெல்லாம் பேசும்போது நாம் அவர்களைப்பற்றி ஒன்றும் சொல்லக்கூடாது என்று சொல்லி, இங்கே குறிப்பிட்ட சில பகுதிகளை நீங்கள் நீக்கியிருக்கிறீர்கள். ' வசதியுள்ளவர் களுக்குத்தான் நீதி கிடைக்கின்றது என்றுசொன்னதை நீக்கிவிடச் சொன்னீர்கள். வேண்டுமென்றால் நான் சொன்னதையும் நீக்கி விடுங்கள். அந்த '' இந்தியன்-ஜெர்மன் நட்புறவுக் கழக '' கருத்தரங்கில் இந்த வார்த்தை களைக் கூறியிருக்கிறார்கள். அது பத்திரிகையில் வந்திருக்கிறது. அதை இங்கே நான் குறிப்பிடு கிறேன். பின்னால், அதை வேண்டுமென்றால் நீக்கி விடுங்கள்.

Justice O.Chinappa Reddy on January 23 at the Indo-German Republi Seminar has recently accusedthe Indian Judiciary of being over ready touphold the rights of owners ot property.

நாம் இங்கே பேசக்கூடாது என்று தடை விதிக்கிறோம். நம் முடைய சட்டமன்றத்தில் நீதிமன்றத்தைப்பற்றி விவாதிக்கக் கூடாது என்று சொல்கிறோம். ஆனால் எந்த எந்த வார்த்தை களைச் சொல்லக்கூடாது, எந்த எந்த பகுதிகள் அவைக்குறிப்பில் இருக்கக்கூடாது என்று சொல்லி நீக்கினீர்களோ அந்தப் பகுதி களை ஒரு வழக்கறிஞர் கட்டுரையாக எழுதுகிறார்கள் என்றால், நீதிபதிகளும் நீதிமன்றத்திலிருப்பவர்களும் அவர்களுடைய வரம் புக்கு உட்பட்டு நடந்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நீதித்துறையிலே தமிழ் மாநிலம் சிறப்பாகச் செயல் படுவதை நான் பாராட்டுகிறேன். சமீபத்தில் இந்தியத் துணைக் கண்ட சட்டக் கமிஷன் வழக்குகளை விரைவாகத் தீர்க்கின்ற மாநிலம் தமிழ்நாடுதான் என்று அத்தாட்சி கொடுத்திருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கிற ஒரு நீதிபதி எவ்வளவு தீர்ப்புகள் எழுது கிறார் என்ற கணக்கை எல்லாம் சொல்லி, இந்தியத் துணை


நீதிபதிகள்
எழுதுகிற
கண்டத்திலேயே அதிகமான தீர்ப்புகளை எழுதுகிற நீதிபதிகள்
தமிழ்நாட்டு நீதிபதிகள்தான் என்ற விவரத்தைத் தெரிவித்திருக்
கிறது அந்தக் கமிஷன். அதை நான் பாராட்டுகிறேன். இருந்
தாலும் இன்னும் கூடுதலாக முயற்சிகளை மேற்கொண்டு இந்த
மாநிலத்தில் பாமர மக்களுக்கு நீதி எளிதாகக் கிடைக்கின்ற
வகையில் செயல்பட்டு, தேங்கிக்கிடக்கின்ற வழக்குகளை விரை
வாக தீர்த்துவைத்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக,
வழி காட்டியாக விளங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வழக்குகளை விரைவாக பைசல் செய்ய வேண்டும் என்ற
நல்ல எண்ணத்தினால், தீர்ப்பு நகல்களை விரைவில் வழங்க
' ஜெராக்ஸ் ' இயந்திரத்தை நம்முடைய அரசு வாங்கிக்கொடுத்
தது நீதிமன்றங்களுக்கு. ஆனால் அந்த ஜெராக்ஸ் இயந்திரங்கள்
1982 அக்டோபர் வரையில் நீதிமன்றத்தில் இயக்கப்படவில்லை.
பாமர மக்களுக்கு சுலபமாக நீதி கிடைக்க வேண்டும் ; தீர்ப்பின்
நகல்கள் விரைவில் கிடைக்க வேண்டும் என்பதற்காக பல இலட்
சம் ரூபாய்களை செலவு செய்து வாங்கிக்கொடுத்த அந்த இயந்
திரங்கள் இயக்கப்படாமல் இருப்பது சரியல்ல. உடனடியாக
அந்த இயந்திரங்களை செயல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். காலதாமதத்தைத் தவிர்ப்பதற்
காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையை செயல் படுத்துவதில்
காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு
விரைவிலே அந்த இயந்திரங்களை இயக்கிவைக்க நீதிபதிகள்
முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறுபட்ட வழக்குகளை இன்றைக்கு நம்முடைய மாநிலத்
திலே தீர்த்து வைத்திருக்கிறோம். நல்ல முடிவுகளை அளித்
திருக்கிறோம். மற்ற மாநிலங்களைவிட வழக்குகளை வேகமாக
நடத்தியிருக்கிறோம். என்றாலும் பாமர மக்கள் எதிர்பார்க்கும்
நிலையில் இன்னும் தீர்ப்புகள் கிடைக்கவில்லை. இந்த நிலை
யில் பத்திரிகைகளில் பல செய்திகள் வருகின்றன. நாம் நீதி
மன்றத்தைப் பற்றி விவாதிக்கக்கூடாது என்று சொல்கிறோம்.
நீதிபதிகளைப்பற்றி விமர்சனம் செய்யக்கூடாது என்பதை நாம்
ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் சமீபத்தில் ஒருதமிழ் பத்திரிகையில்
ஒரு வழக்கைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு தீர்ப்பை
எடுத்துவைத்து அதிலே விமர்சித்திருக்கிறார்கள் என்பதைப்
பார்க்கிறோம். அந்தப் பத்திரிகையின் பெயர் துக்ளக். துக்ளக்
பத்திரிகையில் ஒரு நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட ஒரு தீர்ப்பை
எடுத்துவைத்து, அந்த நீதிபதி அப்படி தீர்ப்பு வழங்கியது தவறு
என்று சொல்லியிருக்கிறார்கள். Marrlage is preved since
there is no posstbility cf conjugal rights' the wife is not eutitled
for maintenanc. என்று ஒரு நீதிபதி தவறாகச்
சொல்லியிருக்கிறார் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதை
யும் நீக்க வேண்டுமென்று கருதினால் தலைவரவர்கள் நீக்கி
விடலாம். பத்திரிகையில் இப்படி எல்லாம் செய்தி வருகிறது.
ஆனால் நாம் நீதிபதிகளைப்பற்றிப் பேசக்கூடாது என்று சொல்
கிற நேரத்தில் அவர்களும் நம்மைப்பற்றி பேசாமல் இருக்க
வேண்டும். அவர்களுடைய வரம்பை மீறுகின்ற சூழ்நிலைகளை
உருவாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மற்றவர்கள்
உணர்வுகளையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடுதான் விரைவாகத் தீர்ப்பு வழங்கி வருகிறது. மற்ற மாநிலங்களுக்கு நாம் வழி காட்டுகிறோம். என்றாலும் இன்னும் வேகமாக நடவடிக்கைகள் எடுத்து பாமர மக்களுக்கு எளிதாக நீதி கிடைக்கின்ற சூழ் நிலைகளை உருவாக்க வேண்டும். பல்வேறு வழக்குகளில் சம் மன்ஸ் சர்வ் செய்வதில் பெருத்த காலதாமதம் ஏற்படுகிறது. 3 மாதம், 6 மாதம் கூட ஆகிறது. அந்தக் காலதாமதத்தைத் தவிர்த்தால் இன்று இருக்கக்கூடிய வழக்குகளில் பாதிஉடனடியாக பைசலாகும் அளவுக்கு வேகம் ஏற்படும். 3 மாதம், 6 மாதம், ப்ராஸஸ் வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதத்திற்கு ஒரு மாற்று கண்டுபிடிக்க வேண்டும். வழக்குகள் பைசல் ஆவதிலே விரைவு படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் யாருக்கு விரைவாக சம்மன் செல்ல வேண்டுமோ, அவர்களிடத்திலே நேரிலேயே சென்று சம்மன்களை வழங்கும் அந்த பிராஸஸர்களை ஊக்குவிக்கின்ற முறையில் ஏதாவது இன் சென்டிவ் கொடுக்க முடியும் என்றால் கொடுத்து ஊக்குவிக்க லாம், அல்லது அப்படி சரியாக, உரிய காலத்தில் நேரிடையாக சம்மன் வழங்கும் அந்தப் பணிகளை கணக்கில் கொண்டு, அவர் களுக்கு புரமோஷன் போன்றவைகள் எல்லாம் கவனிக்கப்படும் என்ற வகையிலே நடவடிக்கை எடுக்கலாம். அந்த வகையில் நடவடிக்கை எடுத்து, இதைச் செய்வோமானால், இன்னும் கூடு தலாக வழக்குகளை பைசல் செய்யலாம். விரைவாக அவைகளை தீர்க்க முயலலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(மாலை 5-20)

இப்போது நாம் இந்தியாவிலேயே முதன்மையாக இருக்கி றோம், மற்ற மாநிலங்களை விட என்றாலும் கூட, இன்னும் சற்று வேகமாகச் செய்யவேண்டும் என்றுதான் நான் நினைக் கிறேன். ஏதோ மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் நம்முடைய வேகம்கூடுதலாக இருக்கிறது என்கிற பெருமையை விட, சாதாரண ஏழை எளிய மக்களுக்கு தொண்டு செய் கிறோம், சமுதாயத்திற்கு செய்கிற தொண்டாக நினைத்து, கடமையாக நினைத்து, அவைகளை விரைவுப்படுத் தும் பணிகளை நடைமுறைப் படுத்த, நீதிமன்றம் முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு வகையிலே, சிவில் வழக்குகள் என்றாலும், கிரிமினல் வழக்குகள் என்றாலும், பல்வேறு நீதிமன்றங்களில், எவ்வளவோ விதிமுறைகள் அமுல் படுத்தப்படாமல் இருக்கிறது. அவை களை அமுல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணத் திற்கு சொல்ல வேண்டும் என்றால், அரசியலமைப்பு சட்டம் 226-ன்படி, சென்னை உயர்நீதிமன்றம் என்ன கருத்துக்களை வேண்டுமானாலும் கொடுக்கலாம். உதாரணமாகவழக்குறிஞர்கள்



வேண்டும் என்றே வாய்தா வாங்குகிற போது, அதற்கான கிராஸ்களைப் போட முடியும் என்ற விதி இருந்தும் கூட, பல வழக்குகளிலே நீதிமன்றம்அதைப்பின்பற்றுவது கிடையாது ஆகவே கடுமையான உத்தரவுகளின் மூலம் இதைப் பின்பற்ற வேண்டும் என்று நீதிமன்றத்தின் தலைமை இடம் உத்தரவு இட்டால், இன்னும் கூடுதலாக இந்த வழக்குகளைப் பைசல் செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல, மாநில அரசு சம்பந்தப்பட்ட வரையில், பல்வேறு சிறு சிறு குற்றங்கள்நடந்தால்அவைகளுக்கு தனியாக சில சலுகைகளைத் தர வேண்டும். எப்படி என்றால், மோட்டார் வாகன சட்டத்திலே கூட, விதி 139-ன் படி கீழ் சில சலுகைகள் தரப்பட்டிருக்கிறது. அதே போல நகராட்சிகள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட சிறு சிறு குற்றங்களுக்கு எல்லாம், நீதிமன்றங்களுக்கே போகாமல், இந்தந்தகுற்றங்களுக்கு இவ்வளவுதான் உயர்ந்த பட்ச தண்டனை, அல்லது பைன் என்றுவைத்து, 10 ரூபாய்20 ரூபாய் என்று, வழக்குதொடுப்பவர் களே ஒரு ரசீது போட்டுக் கொடுத்துவிட்டால், குற்றத்தை ஒப்புக் கொள்கிறவர்கள், தபாலிலேகூடஅந்தக்குற்றங்களுக்கான தண்டனை, பைனை நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட முடியும். அப்படிப்பட்ட வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். அது போன்ற ஒரு வாய்ப்பு மோட்டார் வாகன சட்டத்தின் 139-வது பிரிவிலே ஏற்கனவே இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் பல்வேறு வகைகளில், நீதிமன்றத்தின் தீர்ப்புகளைப் பெறுவதிலே கால தாமதம்ஏற்படுகிறது என்கிற குறையைத் தவிர்க்க, இது போன்ற வாய்ப்புகளை, நகராட்சிகள், பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு ஏற்படுத்தினால், ஓரளவுக்கு வழக்குகளின் எண்ணிக்கையைக்குறைக்க முடியும். அதைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில சமயங்களிலே, சில ஃபேக்சுவல் உண்மைகளை இந்த மன்றத்திலே சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அது எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட சில வார்த்தைகளைப் பற்றியோ, மாண்பு மிகு அவைத் தலைவர் அவர்கள் நீக்கிய பகுதிகளைப் பற்றியோ நான் பேசப் போவதில்லை. ஆனாலும், சில நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டு பொதுமக்களுக்கு பதில் சொல்வதற்காக மட்டுமே இருக்கிற இந்த மன்றம், கேள்வி கேட்கப்படுகையில், அந்த சூழ்நிலைகளுக்குள்ளே சென்று பதில் சொல்லப்பட வேண்டிய நிலைமை வந்துவிடுகிறது.

சிலர் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பேச்சை மட்டும் குறிப்பிட்டார்கள். இதற்கு எந்த அரசியல் கட்சியும் விதிவிலக்கு அல்ல. இதை விடக் கடுமையாக ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களுடைய தீர்ப்பை, உச்ச நீதிமன்றத்

தினுடைய தீர்ப்பை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. கே. கோபாலன் அவர்கள் விமர்சித்திருக்கிறார்கள். சச்சன் மோர்தி விமர்சித்திருக்கிறார்கள். அதைப் போலவே பைலா ரவி மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்கள். அதற்காக நான் விமர்சிக்க இருக்கிறேன் என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை தவிர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஏதோ சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் பேசாமல் இருந்துவிட்டால் சரியாகிவிடும் என்ற நிலை இருப்பது சரியல்ல. நீதிமன்றமும், நீதிபதிகளும் கூட ஒத்துழைக்க வேண்டும்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கூட அறிவித்தார்கள். கிராம நீதிமன்றம் அமைப்பது பற்றியும், பஞ்சாயத்துக்களுக்கு ஆர்ப்பிட்ரேஷன் அமைப்பது பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். அமைத்தால் அது பல்வேறு வகைகளிலே பயன் உள்ளதாக இருக்கும். குறைந்தபட்சம் 5 ஆயிரம் ரூபாய்க்கு கீழே கூட வழக்குகளை, pretrained judgem nt என்ற வகையில் அந்த வழக்குகளை எடுப்பதற்கு முன்பே ஒரு விசாரணை குழு அல்லது பஞ்சாயத்துமூலம்ஒரு விசாரணையை நடத்திவிடுவதால் இதிலே நடவடிக்கை எடுப்பதற்கு மட்டும் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையில் இதைக் கொண்டு வரும்படி அமைச்சர்அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல கடன் நிவாரணச் சட்டம் போன்ற சட்டங்கள், சமுதாயத்திற்கு, நலிந்த பிரிவினர்களுக்கு சில சலுகைகளைத் தர வேண்டும் என்று வருகிற சட்டங்கள், இப்படிப்பட்ட கால தாமதங்களால் இடையூறுகளுக்கு உள்ளாகின்றன. அவைகளை சரியாகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இந்தச் சட்டத்திலே no suit shall be entertrained என்றுபோட்டிருப்பதாகச் சொல்லப்படுவதால், இந்த 67 ஆம் ஆண்டு சட்டத்தை உயர்நீதிமன்றம் செல்லும் என்று ஒரு வகையில் சொன்னாலும், 82 ஆம் ஆண்டில் அந்த என்டர்டெயின்மென்ட் என்ற வார்த்தைமட்டும் இருந்தால் போதாது, instituted என்றும் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி அதற்குத் தேவையான வாசகங்களை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அமைத்து, இதைக் கொண்டு வந்தால்தான், நாம் நிறைவேற் வேற்ற இருக்கிற கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் பல்வேறு சலுகைகளை ஏழை எளிய மக்கள் அடைய முடியும் என்றும், அதை விரைவாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல நீதிபதிகளுடைய நியமனத்திலேயும் பல்வேறு முறைகள் இருக்கின்றன. இந்தியச் சட்டக் கமிஷன், அவர்களை தகுதிக்கேற்றவாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கருத்தை சமீபத்திலே கூட சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஒரு போட்டித் தேர்வின் மூலம் அல்லது குழுவின் மூலமாகவோ தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள். அது இதுநாள்



வரையில் அமுல்படுத்தப்படாமல் இருக்கிறது. நான் இந்த நேரத்திலே சட்ட அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புவதெல்லாம், நீதிபதிகளை நியமிக்கிற பொறுப்பு, முழுக்க முழுக்க போட்டித் தேர்வின் அடிப்படையிலோ, அல்லது ஒரு மிகப் பெரிய குழு ஒன்று போட்டு, அவர்களுடைய திறமை, தகுதிகளுக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கும் வகையிலோ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காலையிலே மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள்கூட சுட்டிக் காட்டினார்கள். இந்த மாநிலத்திலே ஒரு துறைக்கு தலைமை இடம் இல்லை என்கிற குறை இருக்கிறது. அஸிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்கியூட்டர்ஸ் என்று ஏறத்தாழ 300 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை கண்காணிப்பதற்கு, அவர்களுக்கு பணிகளைக் கொடுப்பதற்கு ஒரு டைரக்டரேட் இதுவரையில் இல்லாமல் இருக்கிறது. ஆகவே டைரக்டரேட் ஆப் பிராசிக்கியூட்டர்ஸ் என்ற ஒரு துறையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வழக்குகளைப் பொறுத்த வரையில் விரைவாகப் பைசல் செய்கின்ற வகையிலே வழக்கினை நடத்துகின்ற அரசு வக்கீல்களிடையே ஒரு போட்டி உணர்வினை ஏற்படுத்த வேண்டும். அப்படி விரைவாக நடத்தினால் தான் நீதித் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் கூடுதலான வழக்குகளைத் தருவார்கள் என்ற உணர்வினை ஏற்படுத்துகின்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது பப்ளிக் ப்ராசிக்யூட்டர் என்பவரை மாவட்டத்திற்கு ஒருவர் என்று நியமித்திருக்கிறோம். அப்படி அல்லாமல் மாவட்டத்திற்கு நான்கைந்து பேர் என்ற வகையிலே பப்ளிக் ப்ராசிக்யூட்டர் பேனல் என்பதை ஏற்படுத்த வேண்டும். அவர்களில் யாரிடம் வழக்கை ஒப்படைக்க வேண்டும் என்ற பொறுப்பினை மாவட்டத்திலே இருக்கின்ற காவல் துறை அதிகாரிகளிடத்தில் கொடுப்பது என்று வைத்தால் பப்ளிக் ப்ராசிக்யூட்டர் ஒருவர்தான் இருக்கின்றார் என்ற நிலைமை மாறி நான்கைந்து பேர்கள் இருக்கிறார்கள். எனவே விரைவாக வழக்கினைப் பைசல் செய்ய வேண்டும் என்று எண்ணுகின்ற உணர்வு அவர்களிடையே ஏற்படும். எனவே அது குறித்து மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இதுவரையில் புறக்கணிக்கப்பட்டிருக்கின்ற பிரிவினராக இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலேயே வக்கீல்கள் தான் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களுக்கு தொழில் பாதுகாப்பே கிடையாது. ஏதோ உச்ச நீதிமன்றத்திலே அரசியல் அமைப்புச் சட்டத்திலே வாதிடுகின்ற ஒரு சில வழக்கறிஞர்களை மட்டும் வைத்துக்கொண்டு பேசுவது நியாயமல்ல. இன்றைக்கு 80 சதவீத வழக்கறிஞர்களுக்கு வாழ்க்கைக்கு உத்தரவாதமே இல்லை. நாளைக்கு இந்தக்

தொழிலை விட்டுவிட்டு போனால் அவர்களால் வாழ முடியுமா என்ற சங்கடமான நிலைமையில் இருக்கிறார்கள் அப்படிப் பட்டவர்கள் ஏராளமான பேர் இருக்கிறார்கள். எனவே அவர்கள் குறித்து பரிவுடனும், கனிவுடனும் பரிசீலித்து இந்த மாநிலம் மற்றைய மாநிலங்களுக்கு வழி காட்டுகின்ற வகையில் வழக்கறிஞர்களைக் காப்பாற்றுகின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையில் வக்கீல்களுக்கு உதவுதற்காக ஒரு வெல்ஃபேர்ஃபண்டை ஏற்படுத்த வேண்டும். வழக்கறிஞர்களிட மூம் ஒரு கணிசமான தொகையை வசூலித்து மேலும் வக்கலாத்து நமூனா என்பதில் பார் கவுன்சிலுக்கு அதிகாரத்தைக் கொடுத்து அதன்படி 2 ரூபாய்க்கு ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும் என்ற வகை யிலே நிதியினை வசூலித்து அந்தத் தொழிலைவிட்டு வக்கீல்கள் போகின்ற போது ஒரு கணிசமான தொகையைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது அவர்கள் திடீரென்று இறந்துவிட்டால் அரசு ஊழியர்களுக்கு கொடுப்பது போன்று இவர்களுக்கும் கொடுக்கின்ற ஒரு பாதுகாப்பு இருக்க வேண்டும். ஏனென்றால் இப்போது அவர்களுக்குப் பாதுகாப்பு என்பதே இல்லை. ஆகவேதான் இதைச் சொல்கிறேன். எனவே இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாநில அளவிலே ஒரு சட்டக் கமிஷன் அமைக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்திற்கு முன்பு போடப்பட்ட சட்டங்கள், பின்பு போடப்பட்ட சட்டங்கள், ஒரே சட்டத்திற்கு இரண்டு சட்டங்கள் என்ற வகையிலே ஒரு குழப்பமான சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் இவற்றை எல்லாம் தவிர்ப்பதற்கு மாநில அளவிலே ஒரு சட்டக் கமிஷன் ஏற்படுத்த வேண்டும். 1969 ஆம் ஆண்டு சென்னை மாநிலத்தைத் தமிழ்நாடு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் மாற்றினார்கள். அண்ணா அவர் களைப் பின்பற்றி கர்நாடக மாநிலமும் பெயரை மாற்றியது. நீதிமன்றத்தின் பெயரையும் மாற்றியது. எனவே அந்த வகை யிலே சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரை தமிழ்நாடு உயர் நீதிமன்றம் என்று மாற்ற வேண்டும். இங்குள்ள உயர்நீதிமன் றத்தின் பிரிவு ஒன்றை மதுரையிலே விரைவாக ஏற்படுத்த வேண்டும். அந்த வகையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. இல. [illegible]ராமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள், கூட்டுறவுத் துறை ஆகிய மானியங்களை இங்கே கொண்டு வந்து அதன்மீது பல உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சிறப்பாகக் கூறினார்கள். நீதித்துறை இன்றைக்கு இந்த அவையிலே ஒரு பிரச்சினையை உருவாக்கக் கூடிய ஒரு சூழ்நிலையில் விவாதிக்கப்பட்டது. ஆனால் நீதித் துறையும், சட்டமன்றமும் இரயில்வே லைன் மாதிரி சென்றால் தான் ஜனநாயகம் செழிக்கும் என்ற உணர்வினை இந்த [illegible]லே நாம் ஏற்றுக்[illegible]கின்றோம். எனவே அந்த





நீதித்துறையும் நல்ல முறையில் இயங்கவேண்டும், சட்டமன்ற மும் அவர்களுக்குஉதவுகின்ற வகையிலே இயற்றவேண்டிய சட்டங் களை எல்லாம் இயற்றி அவர்களுக்கு வழங்கி அவர்கள் நல்ல முறையில் நீதி வழங்குவதற்கு உரிய சூழ்நிலையை உருவாக்கக் கூடிய மிகப் பெரும் பொறுப்பு இந்த சட்டமன்றத்திற்கு இருக் கின்றது. எனவே இந்த உணர்வினை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். எனவே அந்த நீதித்துறை நல்ல முறையில் இயங்கவேண்டும் என்ற வகையில் பொதுமக்களும் எதிர் பார்க்கிறார்கள். ஆனால் நீதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. அதனால் பொதுமக்களுக்குப் பல சிக்கல்கள் இன்றைக்கு ஏற்படுகின்றது என்பதையும் இப்படிப்பட்ட நிலை மைகள் கடந்த காலங்களில் இருந்து வந்தது என்பதையும்யாரும் மறுக்க முடியாது. இந்த நிலைமை இன்றைக்கு ஓரளவுக்கு முன்னேறி இருந்தாலும் இன்றையநிலைமையில் கூட மிகத் தாமதம் என்றுதான் இருக்கின்றது.

(மாலை 5—30)

உதாரணமாக சொல்லவேண்டும் என்றால் சாதாரண மக்கள் ஒரு பகுதியில் ஒரு புறம்போக்கு நிலத்தில் குடிசைப்போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் திடீர் என்று எனக்குத்தான் சொந்தம் என்று ஒருவர் வந்து அப்புறப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே உருவாகி அந்த குடிசைகளை பிரிக்கப்போகும் போது நீதிமன்றத்திற்கு அவர்கள் செல்கிறார்கள்; பிறகு உயர்நீதி மன்றத்திற்கு அவர்கள் வருகிறார்கள். ஆனால்குடிசைகளை அப்புறப்படுத்துவதற்கு ஒரு சில மணி நேரம் ஆகும். நீதிமன்றத் தில் போய் நீதி வேண்டும் அதற்குண்டான தடை உத்திரவு வேண்டும் என்று போகும்போது அங்கே பல மாதங்கள் ஆகிறது: 6 மாதம் அல்லது 1 வருடம் கூட ஆகிறது. இந்த பரிதாபத் திற்குரிய நிலையில் அந்த சாதாரண மக்கள் ஆளாகிறார்கள் என்று பார்க்கும்போது இது அனுபவபூர்வமான ஒரு நிலை. அதற்காக அங்கே என்ன நடக்கிறது என்று விசாரிக்கும்போது அதற்குண்டான தஸ்தாவேஜிகள் அங்கே இல்லை. நீதிமன்றத் திலுள்ள நீதிபதிகள் எடுத்துச்சென்று இருக்கிறார்கள் என்ற உணர்வு கூட அங்கே நீதிமன்றத்தில் ஏற்படுகிறது. இவைகளை யெல்லாம் களையவேண்டும் என்பதுதான் எங்களைப் போன்றவர் களுக்கு இருக்கக்கூடிய அவா. இதைதான் பொதுமக்களும் விரும்புகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கூற விரும்பு கிறேன்.

பல வசதிகள் அவர்களுக்கு தேவை என்ற நிலைமை இங்கே கூறினார்கள். நீதித்துறை ஒழுங்காக செம்மையாக செயல்பட வேண்டும் என்றால் அவர்களுக்கு கொடுக்கக்கூடிய ஊதியம் காணாது என்ற நிலையில் அவர்களுக்கு ஊதிய உயர்வும் மற்ற அனைத்து வசதிகளையும் செய்து தரவேண்டும் என்பதை யாரு

மறுக்க முடியாது. அப்போதுதான் அவர்கள் தன்னிச்சையாக செயல்படவேண்டிய ஒரு நிலைக்கு ஆளாகுவார்கள். அந்த நிலைமைகளை அரசு அவர்களுக்கு செய்து கொடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பல நிலைகளில் நீதி கீழே வரவேண்டும். நீதியை மற்ற மக்களுக்கும் வழங்கக் கூடிய நிலையில் தாலுக்கா மட்டத்தில நாம் பல நீதிமன்றங்களை ஏற்படுத்தித் தருகிறோம். மேலும் தேவை என்ற நிலைக்கு இன்றையதினம் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஒன்றை குறிப்பாக சொல்லவேண்டும் என்றால் இன்றைக்கு நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் வேண்டும் என்று அங்குள்ள வழக்கறிஞர்கள் ஒரு கோரிக்கை விட்டிருக்கிறார்கள். அந்த நிலை என்னவென்று கேட்டால் அங்கே தங்களுக்கும் தங்கள் வசதிக்கும் மக்கள் வசதிக்கும் மாவட்ட நீதிமன்றம் தேவை என்ற உணர்வு இன்றைக்கு நாட்டு மக்களிடத்திலே ஏற்பட்டு இருக்கிறது. அதே நிலையில் தான் கடந்த காலங்களில் இருந்த பஞ்சாயத்து கோர்ட்டுகள் என்று கூறுவார்கள் அது தேவை என்ற உணர்வு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. சிறு சிறு வழக்குகளுக்கு அவர்கள் நீதி மன்றங்களுக்கு செல்லமுடியாத ஒரு சூழ்நிலை கிராமப்புறங்களில் அனுபவபூர்வமாக ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நீதி வழங்குவதற்கான சூழ்நிலை ஏற்படுவதற்கு பல உறுப்பினர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தந்தார்கள். அதற்குண்டான ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. விரைவாக ஏற்படுத்துவோம் என்ற ஒரு வாக்குறுதியை கொடுத்தார்கள். அந்த பஞ்சாயத்து கோர்ட்டுகள் வருவதற்கான சூழ்நிலையை விரைவாக எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிறைச்சாலைகளை இன்றைக்கு சீர்திருத்தம் செய்யவேண்டும் என்ற நிலையில் மனிதாபத்தோடு நாம் எல்லோரும் அதை பரிசீலிக்க வேண்டும் என்ற நிலைக்கு ஆளாகி இருந்தாலும் இந்த அவை அதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்து இருந்தாலும் அது போதாது என்ற ஒரு குறை தான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

சிறைச்சாலைக்கு செல்வதில் அரசியல் வாதிகள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற நிலை இல்லாமல் நாமும் சிறைச்சாலைகளுக்கு செல்லவேண்டிய நிர்பந்தம் அரசியல் ஏற்படுகிறது. அங்கே பார்க்கும்போது குறைகள் அங்கே அதிகமாக இருக்கிறது. அவைகளை எல்லாம் போக்கவேண்டும். அங்குள்ள நிலைமைகளை மாற்றவேண்டும். பல வசதிகளை செய்து தரவேண்டும். அங்குள்ள ஊழியர்களுக்கு ஊதியங்கள் உயர்த்தித்தரவேண்டும் என்று எல்லாம் இங்கே கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். அவைகளை எல்லாம் பரிசீலிக்க வேண்டிய ஒரு நிலைக்கு கூட அமைச்சர் அவர்கள் ஆளாக வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



வேலூர் மத்திய சிறைச்சாலை பெரிய சிறைச்சாலை. அங்கே ஒரு அடிப்படை தேவையை கேட்டு நீண்ட நாட்களாக கோரிக்கை இருக்கிறது. அரசியல் கைதிகள் அதிகமாக அங்கே அடைக்கப்படுகிறார்கள். தண்ணீர் வசதி இல்லாத ஒரு நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அதற்குண்டான நிரந்தர தீர்வை காண்பதற்கு நடவடிக்கை இதுவரையில் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அங்கே இருக்கக்கூடிய பழைய கட்டிடங்களை மேலும் விரிவுபடுத்தித் தரவேண்டும் என்ற கோரிக்கை கூட இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் நல்ல முறையில் செயல்படுத்தி சிறைச்சாலைகளை சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளில் கடந்த காலங்களின் பல தொழில்கள் இருந்தன. கம்பளி நெய்வது, காலணிகள் செய்வது போன்ற பல்வேறு தொழில்கள் இருந்தன. அவைகள் இன்றைக்கு பல சிறைச்சாலைகளில் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. அது ஏன் என்று கேட்டால் அதற்குண்டான தகவல் இல்லை. அரசு ஏதோ தடை விதித்து இருப்பதாக அறிகிறேன். அது போன்று இல்லாமல் அவைகளை எல்லாம் மீண்டும் துவக்கி அந்த சிறையில் அடைக்கப்பட்டுள்ள குற்றவாளிகள் அங்கே பயிற்சி பெறுவதற்கும் அல்லது பயிற்சி ஆனவர்கள் ஊதியம் சம்பாதிப்பதற்கும் ஆன சூழ்நிலையை உருவாக்கினால் அது அவர்களுக்கு பொழுது போக்காகவும், வேறு மன மாற்றத்திற்கு அது ஒரு சந்தர்ப்பமாக இருக்கும். ஆகவே அந்தத் தொழில்களை மீண்டும் துவக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு என்பது மிக முக்கியமான அத்தியாவசியமான மக்களுக்கு அடிப்படைத் தேவையான ஒரு இயக்கம், மக்கள் இயக்கமாக அது இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு தேர்தல் இல்லாததால் ஜனநாயக அமைப்பு இல்லாததால் அது சிதறுண்டு சின்னாபின்னமாக இருந்தாலும் நல்ல முறையிலே இயங்கவேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரும் ஆர்வம் காட்டி இதற்கென ஒரு புதிய சட்டத்தை இயற்றினார்கள். அந்தச் சட்டம் இயற்றப்பட்ட பின்னால் அவசியம் தேர்தலை விரைவாக நடத்தப்போவதாக வாக்குறுதி அளித்திருந்தாலும் விரைவாக நடத்தவில்லை, ஆகவே அதை விரைவாக நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டு உயர்வு என்பது வெறும் வாசகமாக மட்டுமில்லாமல் நாட்டுயர்வின் உயிர்நாடியே கூட்டுறவு தான் என்ற அளவுக்கு ஒரு காலத்திலே உணர்ச்சிப்பூர்வமாக இருந்தாலும் இடைக் காலத்திலே அதற்குதடை வந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த நிலையை மாற்றி மக்கள் இயக்கமாக அதை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. இல பலராமன்] [1983 ஏப்ரல் 4

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் அமைச்சரிடம் இருந்தவையெல்லாம் இன்றைக்குத் தொழில் அமைச்சரிடத்திலே சென்றிருக்கின்றன. அதனால் அடிப்படையே மாறியிருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஏன் இந்த அரசு மாற்றியதோ தெரிய வில்லை. மக்களிடம் இருந்து பணம் வசூலித்து கூட்டுறவு முறை யிலே மக்கள் தொடர்புள்ள இயக்கமாக மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற அடிப்படையிலே சர்க்கரை ஆலையோ நூற்பாலையோ நிறுவப்படுகிறது. ஆனால் இந்தத் துறை அமைச்சருக்கு வராமல் தொழில் அமைச்சருக்கு வருவது ஏன் என்பது எங்களுக்குப் புரியவில்லை. அந்த அளவுக்கு இல்லாமல் கூட்டுறவுத் துறை அமைச்சரிடம் அது இருந்தால்தான் நியாயமாக இருக்கும் என்பதை அமைச்சரவை பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த அளவுக்கு இருந்தால் தான் அது மக்கள் இயக்கமாக மலர முடியும். ஏதோ தொழில் ரீதியாக, வியாபார ரீதியாக கருதாமல்—வியாபார ரீதியாக அது இன்றைக்குக் கருதப்படுகிற காரணத்தினால் சர்க்கரை ஆலையாக இருந்தாலும் நூற்பாலை யாக இருந்தாலும் என்ன மோசமான நிலைமை இருக்கிறது என்பது தெரியும், ஆனால் அதைப்பற்றி விமர்சனம் செய்ய வேண்டுமென்றால் அதற்காக நிதி ஒதுக்கீடு இப்போது இதிலே செய்யப்படவில்லை. ஆகவே நிறுத்திக் கொள்கிறேன். அந்த அளவுக்கு அதனால் நிர்வாகச் சீர்கேடுகள் இருக்கின்றன. அந்த அளவுக்கு சர்க்கரை ஆலைகளும் நூற்பாலைகளும் இந்தத் துறைக்கே வர வேண்டும், இந்தத் துறை அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே பல நல்ல காரியங்கள் செய்து இருந் தாலும் வறட்சியான காலத்திலே சாதாரண கிராம மக்களுக்கு கடன் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் மேலும் கடன் வழங்குவதற் கான சூழ்நிலை இருக்கிறதா என்று பார்த்தால் கடன் வழங்கப்பட வில்லை. ஏற்கனவே கடன் கட்ட முடியாததை ஒத்திவைத் திருக்கிறோம், மேலும் கடன் வழங்குவதற்காக இன்றைக்கு சூழ்நிலை உருவாகியிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் கூறமுடியும். அவர்களுக்கு உதவினால்தான் எதிர் காலத்திலே அவர்களுடைய தொழிலை செய்ய முடியும் என்பதை உணர்ந்து மேலும் கடன் வசதிகளைச் செய்வதற்கு உடனடியாகச் சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நிலவள வங்கிகள் சாதாரண மக்களுக்கு கடன்கள்வழங்கவேண்டுமென்றால் பல சிக்கல்கள் இருக்கின்றன. அவர்கள் கேட்கக்கூடிய பதிவேடுகள் அல்லது மற்றவைகள் மிகவும் கடுமையாக இருக்கிறது. என்று உணர்வதாலே நிலவள வங்கிகளிலே செல்லாமல் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே கடன் வாங்குவதாகச் சொல்கிறார்கள். நிலவள வங்கிகளில்



1983 ஏப்ரல் 4] [திரு. இல. பலராமன்]

இருக்கக்கூடிய சட்டங்கள் மேலும் ஓரளவுக்கு தளர்த்தப்படு வதற்கான வேண்டுதலை நான் இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன். அனுபவ பூர்வமாகப் பார்க்கிற போது ஒரு பத்திரத்திலே ஏதோ நீதிமன்றத்திற்கு சென்ற சீல் அதில் இருக் கிறது. 30 வருடத்திற்கு முன்னாலே ஏற்பட்ட ஒரு வழக்கிலே இது போன்ற நிலைமை ஏற்பட்டது அது பைசல் செய்யப்பட்டு 30 ஆண்டுகளுக்குப் பின்னாலே அதற்குப் பிறகு அனுபவப்பூர்வ மாக எந்தவிதமான வழக்கும் இல்லாத நிலையில் சீல் வைத்ததற்கு என்ன காரணம் என்று அந்த தீர்ப்பை வாங்கி வர வேண்டு மென்று சொல்கிறார்கள். 30 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த வழக்கின் தீர்ப்பை கோர்ட்டிற்குச் சென்று கேட்டால் அது எங்கே இருக்கிறது என்று தெரியாத நிலைமை இருக்கிறது. அதனால் மாதக் கணக்கிலே காலதாமதம் ஏற்படுகிறது. இது போன்ற காரணத்தினால் சட்டப் பளு ஏற்படுகிறதே தவிர, விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படக்கூடிய நிலைமை இல்லை. நில வள வங்கிகளில் கடன் வழங்குவதிலே இது போன்ற சட்ட சிக்கல்கள் இருப்பதன் காரணமாக வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

(மாலை 5–40)

அரசு ஆயில் என்ஜின்களை வழங்கலாம், அல்லது கிணறுகளை ஆழப்படுத்துவதற்கான கடனை வழங்கலாம். மற்றும் 20 அம்சத் திட்டத்திலே இருக்கிற கடன்களை வழங்கலாம் என்று இருந்தாலும் அந்த கடன்களை வழங்குவதற்கான நிலை இன் றைக்கு இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. கிரவுண்ட் வாட்டர் சான்று வாங்க வேண்டும்; அல்லது 3 ஏக்கர்களுக்கு மேலே இருப்பவர்களுக்கு மட்டும் தான் கடன் வழங்குவோம் என்ற நிலை இன்றைக்கு நில வள வங்கிகளிலே இருக்கிறது. ஒரு ஏக்கர் வைத்து இருப்பவர்கள் கூட கிணறு வைத்திருக்கிறார் கள். பம்ப் செட் வைத்திருக்கிறார்கள். ஒரு ஏக்கரில் பயிரிடக் கூடிய நிலை இன்றைக்கு எங்கள் மாவட்டத்திலே இருக்கிறது. 2 ஏக்கர்கள் வைத்திருப்பவர்களும் அதிகமாக இருக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு அந்த நில வள வங்கியிலே கடன் வழங்கு வதற்கான நிலை இல்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவைகளுக்கெல்லாம் கடன் வழங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட் டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் பழம் பதனிடும் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. அது கூட்டுறவுத் துறையின் மூலமாக ஆரம் பிக்கப்பட்டிருந்தாலும் இன்றைக்கு அதனுடைய பங்குதாரர்கள் எல்லாம் அதனுடைய நிலை என்ன? அதனுடைய வளர்ச்சி என்ன? யார் நடத்துகிறார்கள்? என்று பார்க்கிறபோது, அது யாரோ ஒரு தனிநபரிடம் காண்ட்ராக்ட் விட்டிருப்பதாகக்கூட அறிகிறோம். அந்த நிலைக்கு ஆளாகாமல் பங்கு போட்டவ

களுக்கு உற்சாகம் ஏற்படுகிற நிலையை ஏற்படுத்த வேண்டும். அது ஒரு நல்ல நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டது. அந்த மாவட்டத்திலே தக்காளியை பயிரிடுகின்ற விவசாயிகளிடம் வாங்கி பதனிட்டு பாட்டிலிலோ அல்லது டின்களிலோ அடைத்து ஏற்றுமதி செய்வதற்கான சூழ்நிலையில் அதற்கான சாதனத்தை வைத்து அங்கே ஏற்படுத்தினார்கள். அதே போல மாம்பழம் காலங்களில் அவைகளையும் பதப்படுத்துவதற்கும் அந்த தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். ஒன்று, இரண்டு மாதங்களுக்கு முன்னால் எங்கள் மாவட்டத்தில் ஒரு கிலோ தக்காளி 30 பைசா விற்றபோது அங்கே எடுத்துச் சென்றவர்களுக்கெல்லாம் அந்த தக்காளியை எடுத்துக்கொள்ளாமல், அப்புறப்படுத்தினார்கள் ; வாங்க முடியாது என்ற ஒரு நிலை ஏற்பட்டது ; அப்படியென்றால் கூட்டுறவுத் துறையில் விவசாயிகளுக்கு என்ன நன்மை செய்யப்படுகிறது ? அவர்கள் வாங்க முடியாத நிலை ஏற்பட்டதின் காரணம் என்ன? என்று கேட்க ஆசைப்படுகிறேன். அதற்கு பிறகு அந்த தக்காளியை அவர்கள் பாலாற்றிலே கொட்டினார்கள். இதுபோன்ற நிலை அந்த பதனிடும் தொழிற்சாலையில் ஏற்பட்டிருக்கிறது. அவை நல்ல முறையில் செயல்படுவதற்கும், விவசாயிகளுக்கு உறுதுணையாக இருப்பதற்கும் நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் இன்றைக்கு வறட்சியின் காரணமாக விவசாயிகள் பல பழப் பொருள்களை பயிரிடுகிறார்கள். அங்கே குளிர் பதனம் வைப்பதற்கான சூழ்நிலை இருந்தும், பல மாநிலங்களுக்கு எங்கள் மாவட்டத் திலிருந்து தக்காளி போன்ற காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்படுகிற நிலையிருந்தும் அது வைக்கப்படவில்லை. குளிர் பதனிடும் வசதி அங்கேயிருந்தால் அங்கே உற்பத்தி செய்யக்கூடிய பண்டங்கள், பொருள்கள், பழங்கள் பாதுகாக்கப்படும். மாம்பழங்கள் தக்காளி போன்றவற்றை பதப்படுத்துவதற்கான வசதிகள் இருக்கின்றன. அது போன்ற நிலையில் கூட்டுறவுத் துறையில் குளிர் பதனிடும் வசதிகளை அமைப்பதற்கு வாய்ப்புகள் இருந்தும், அமைக்காமல் இருப்பது வருத்தத்தைத் தருகிறது என்று கூறி, அதை வைக்கிற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண். 13 நீதி நிர்வாகம், கோரிக்கை எண். 14 சிறைச்சாலைகள், கோரிக்கை எண். 23 கூட்டுறவு ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறைக்கும், சட்டத் துறைக்கும் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு தமிழகத்தில் இந்தத் துறைகளில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது நிச்சயமாக மிகையாகாது. கூட்டுறவுத்



துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நீண்ட நெடுங்காலமாக அதிகார பற்றற்றவர்கள் அந்த நிர்வாகக் குழுவிலே இல்லாது போன காரணத்தாலே அந்த துறையில் சற்று தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நல்ல சட்டத்தை அவையிலே கொண்டு வந்து மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றி இருக்கிறார்கள். அதை உடனடியாக அமலுக்கு கொண்டு வந்து தேர்தல்கள் மூலமாகவோ, அல்லது தேர்ந்தெடுப்பதற்கு சற்று இடைக்காலம் பிடிக்குமென்றால், அந்த இடைக்காலத்திலே ஒரு நிர்வாகக்குழுவை நியமனம் செய்வதன் மூலமாகவாவதுகொண்டுவந்துஉடனடியாகஅந்ததுறைக்குபுதியபுத்துணர்ச்சியை கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ நான்கு மணி நேரமாக இந்த அவையில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு மணி நேரம் விவாதம் ஏறக்குறைய எடுக்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். இந்தநீதி நிர்வாகத்தைப்பற்றி பேசுவதற்கேகூடக் கொஞ்சம அச்சமாக இருக்கிறது. ஏனென்றால், அது அவைக் குறிப்பில் இடம் பெறாமல் போய் விடுமோ என்ற நிலைக்கு இன்றைக்கு அந்த சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட தேவ தூதுவர்களா என்ற சந்தேகம் கூட இன்றைக்கு நாட்டு மக்களுக்கு வந்துவிடும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், எப்படியும் பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். நீதிமன்றங்களைப் பற்றி விவாதத்திலே கலந்து கொண்ட உறுப்பினர்களுடைய பேச்சுக்கள் அங்கங்கே எடுக்கப்பட்டன என்று எழுதுவார்கள். அப்படி வரும்போது இது மக்களிடையே நீதி மன்றம் பெரிதா, சட்ட மன்றம் பெரிதா என்ற சந்தேகத்தை கூட உண்டாக்கி விடும் என்று நினைக்கின்றேன். ஆகவே, அந்தப் பிரச்சினைக்குள்ளே போகாமல், தொகுதியைப்பற்றி பேசுகிறேன்.

ஆம்பூர் நகரிலே நீண்ட நெடுங்காலமாக, சுமார் 10 ஆண்டுக் காலமாக, அங்கே மாவட்டத் துணை முன்சீப் நீதிமன்றம் வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகின்றது. அங்கே இருக்கக்கூடியவர்கள் சிவில் வழக்குகளைச் சந்திக்க வேண்டுமென்றால் திருப்பத்தூருக்குத்தான் சென்றாக வேண்டும். அங்கே சுமார் 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே கூட ஜஸ்டிஸ் வரதராஜன் அவர்களுடைய குழுவின் ஆய்வு அறிக்கையில் ஆம்பூர்க்கு ஒரு துணை நீதிமன்றம் தரவேண்டுமென்று பரிந்துரையும் இருக்கிறது. ஆகவே, பன்னெடுங்காலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கக் கூடிய அந்த நல்லதொரு கோரிக்கையை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தந்து, ஆம்பூர் பகுதியிலே ஒரு மாவட்டத் துணை முனிசீப் நீதிமன்றம் அமைய ஆவன செய்து, இன்றைக்கு அதற்கான அறிவிப்பினை அளிக்க வேண்டுமென்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்தப் பகுதியிலே இருந்துதான் ஏறத்தாழ 45 சதவீத வழக்குகள் திருப்பத்தூருக்குப் போகின்றன. திருப்பத்தூரில் இருக்கக் கூடிய இரண்டு கோர்ட்டுகளில் ஒன்றை ஆம்பூர் பகுதிக்குத் தருவார்களானால் அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆம்பூரிலே தற்போது இயங்கி வரும் சப் ஜெயில் பழுது பார்க்கக்கூடிய நிலையிலே சுமார் 6 மாத காலமாக மூடப்பட்டுள்ளது. அதனால் மிகவும் சாதாரண வழக்குகள் காரணமாகபாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் திருப்பத்தூர் அல்லது வேலூர் சிறைக்கு அனுப்பப்பட வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். அதனால், வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களும் காவல் துறையினரும் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே, அரசு அதில் உடனடியாக கவனம் செலுத்தி, ஆம்பூரிலே உள்ள சப்–ஜெயிலை உடனடியாகப் பழுது பார்த்து, அதை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விருமபுகிறேன்.

சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக தண்டனை அனுபவித்து விட்ட ஆயுள் கைதிகள் விடுதலைப் பெறுவதற்குத் தற்போது உள்ள முறைகளை அரசு மிகவும் எளிதாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாக ஆயுள் தண்டனை அனுபவித்து விட்ட கைதிகள் உடனடியாக விடுதலைப் பெறுவதற்கு அரசு வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வழக்கிலே உள்ள கைதிகள் என்றால் நீதிமன்றங்களுக்குக் கொண்டு வரப்படும்போது, வழக்கு காலையிலேயிருந்து மாலை வரை நடைபெற்றாலும் அல்லது, அந்தக் கைதிகள் மீண்டும் சிறைக்கு வரும் வரையிலும் அந்தக் கைதிகளுக்கு உணவு வழங்கப்படவில்லையென்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்குமானால் அரசு அதிலே கவனம் செலுத்தி விசாரணைக் கைதிகளுக்கு, அவர்களுடைய காலத்திற்கு ஏற்ற வகையிலே, நீதிமன்றங்களுக்கு வெளியிலே விசாரணைக்கு வந்திருந்தாலும்கூட, அவர்களுக்கு உணவு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான் அதிலும், குறிப்பாக, இந்தத் துறைக்கு நமது சட்ட அமைச்சர் அவர்கள்பொறுப்பேற்ற பிறகுதான் சிறைக் கைதிகள் நல்ல முறையிலே நடத்தப்படுகிறார்கள் என்ற அளவுக்கு சிறை கைதிகள் மிகவும் திருப்தியாக இருக்கிறார்கள் என்பதிலே யாருக்கும்மாற்றுக்கருத்துஇருக்கமுடியாது. இன்னும்கூட அவர்கள் கௌரவமாக நடத்தப்படுவதற்கும் சுகாதாரச் சூழ்நிலைகள் காரணமாக அவர்களுடைய உடல்நலம் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு மருத்துவ உதவி கொடுப்பதற்கும் அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



மத்திய சிறையிலே உள்ள கைதிகளை அவர்களுடைய உற வினர்களும், நண்பர்களும், குடும்பத்தினரும், சென்று சந்திக்க வேண்டுமென்றால் தற்போது மிகுந்த சிரமத்திற்குள்ளாகித்தான் அவர்களைப் பார்க்க முடிகிறது. ஆகவே, இந்த நிலைமையினை மாற்றி அவர்களைச் சந்திக்கச் செல்பவர்கள் மிகவும் எளிதாகச் சந்தித்து, அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது நீதிமன்றங்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டிடங் களிலே இயங்கி வருகின்றன. ஆவர்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டும்போதும், வர இருக்கின்ற ஆண்டுகளிலே கட்டப்படும் நீதி மன்றங்களுக்கும் ஒரே மாதிரியான வரைபடங்களைக் கொடுத்து, எல்லா கட்டிடங்களும் எல்லா வசதிகளும் படைத்த தாக இருக்கக்கூடிய வகையிலே, அரசு எல்லா நீதிமன்றக் கட்டி டங்களும் ஒரே மாதிரியாக இருக்குமாறு பார்த்துக்கொள்வதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 5–50.)

குறிப்பாக இப்பொழுதெல்லாம் நீதிமன்றங்களுக்கு வெளியே இருக்கின்ற அந்தப் பெயர்ப் பலகைகளைப் பார்க்கின்ற பொழுது அவைகள் மிகவும் சிறியதாக இருக்கின்றன. ஆம்பூர் குற்றவியல் நீதிமன்றமாக இருந்தாலும்சரி, திருப்பத்தூர் நீதிமன்றமானாலும் சரி, அந்தப் பெயர் பலகைளைத் தேடிக் கண்டுபிடிப்பது என்பது மிகவும் சிரமமாக இருக்கின்ற அளவிற்குச் சிறியதாக இருக்கின்றன. ஆகவே, நீதிமன்றங்களில் நல்ல இடத்திலே பெயர் பலகைகளைப் பெரிதாகப் பொருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது இருக்கக்கூடிய சாதாரண சிறிய குற்றவியல் நீதிமன்றங்களிலே எல்லாம் வழக்கறிஞர்களுக்குத் தேவை யான பர்னிச்சர்கள் இல்லை. அந்த வசதிகளையெல்லாம் அரசு உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறிய கோர்ட்டுகளிலே பார்வையாளர்களுக்கு காலரி போன்ற எந்த வசதியும் கிடையாது. எனவே, பார்வை யாளர்களுக்கு ஒவ்வொரு நீதி மன்றத்திலேயும், அது குற்ற வியல் நீதிமன்றமாக இருந்தாலும் சரி, சிவில் வழக்கு நீதிமன்றமாக இருந்தாலும் சரி, அங்கே பார்வையாளர்கள் காலரி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களிலே இப்பொழுது அலுவலர்களுக்கும், அதிகாரிகளுக்கும், பார்வையாளர்களுக்கும் டாய்லட் போன்ற வசதிகள் இல்லாமலிருக்கின்றன. எனவே, புதிதாகக் கட்டப்பட இருக்கின்ற அரசுக் கட்டிடங்களாக இருந்தாலும், அல்லது வாடகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுச் செயல்

படுகின்ற கட்டிடங்களாக இருந்தாலும் அந்தக் கட்டிடங்களிலேயெல்லாம் இப்படிப்பட்ட வசதிகள் இருக்கின்றனவா என்று அரசு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது நீதிமன்றங்களிலே தீ மற்றும் இயற்கைப் பாதிப்புகளிலிருந்து ஆவணங்களைப் பாதுகாப்பதற்காக சரியான வசதிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த ஆவணங்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புப் பெட்டக வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களுக்கு முன்னால் கோர்ட் ஸ்டாம்பு, ஸ்டாம்பு பேப்பர்கள் போன்றவைகள் கிடைப்பது மிகவும் கடினமான சூழ்நிலை இருப்பதால், அவைகள் அங்கே தாராளமாகக் கிடைக்கத் தக்க வகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அரசு ஒரு ஏற்பாட்டைச் செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களுக்கு வெளியே கான்டீன் போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆம்பூரிலே துணை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தை அமைச்சரவர்கள் இன்றைக்கு அறிவித்து, ஆம்பூர் பகுதி மக்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு திரு. கிருஷ்ணன் அவர்கள் பேசிய பேச்சையும் படித்துப் பார்த்து, நீக்க வேண்டிய பகுதிகள் ஏதேனும் இருந்தால் அறிவிப்பதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் காலையிலேயே குறிப்புரைத்துள்ளார்கள். அதன்படி, முதலமைச்சர் சம்பந்தமாக நீதிமன்றத்திலுள்ள வழக்கை ஒட்டி திரு. கிருஷ்ணன் அவர்கள் உரையில் உள்ள சில பகுதிகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** என்னைப் பொறுத்தவரையில் விதிகளுக்கு மாறாக நான் எதுவுமே குறிப்பிடவில்லை. அன்பார்லிமென்டரியாக எதுவும் சொல்லவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** எல்லாப் பேச்சையுமா அல்லது எந்தப் பகுதியை நீக்குகிறீர்கள் என்று தெரிவியுங்கள் (குறுக்கீடுகள்).



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** **பற்றியும் அந்தக் குறிப்பையொட்டியும் வந்துள்ள கருத்துக்கள் மட்டும் நீக்கப்படுகின்றன.

**திரு. சோ. அழகர்சாமி :** அவைத் தலைவராக இருக்கிறவர்கள் இங்கே பேசுவதற்கு முன்பாக எதையெல்லாம் பேசலாம், எதையெல்லாம் பேசக் கூடாது என்று சொல்லியிருக்கவேண்டும். பேசியதற்குப் பிறகு நீக்குவது என்பது எவ்வாறு பொருந்தும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் பேசும்போது பொறுப்போடு, விதிகளுக்குட்பட்டு, சட்டத்திற்குட்பட்டு பேசினால் இதுபோன்ற பிரச்சினைகள் எழ இடமிருக்காது. (குறுக்கீடுகள்).

**திரு. சோ. அழகர்சாமி :** ** **

**திரு. ரா. கிருஷ்ணன் :** ** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவரம் எதுவும் வேண்டாம். உட்காருங்கள். நான் முன்பு அறிவித்ததோடு கூட, இப்போது பேசப்படுகிற எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. அது விதிகளுக்குப் புறம்பானது. (குறுக்கீடு).

(இரவு 6—00.)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் பேசியதைப் பொறுத்தவரைக்கும் இப்போது வழக்கு மன்றத்தில் இருக்கக்கூடிய பிரச்னை நீங்கள் சொன்னதைப் போல. * * * *

மாண்புமிகு தலைவர் அவர்கள் முடிவு செய்கின்ற வரை வேண்டாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது ** **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இது இந்த மன்றத்தை பொறுத்த பிரச்சினை. இந்த மன்றத்திலே உள்ள அனைத்து உறுப்பினர்களையும் பொறுத்தது. நமக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? இங்கே பேசுகிறபோது, இதிலே எந்தவித பாதுகாப்பு? இருக்கிறது. அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்ட பாதுகாப்புப்படி நாம் பேசுகிறோம். எனவே அந்த விதிகளுக்கு உட்பட்டு நாம் பேசுகிறபோது, வழக்கு தொடர முடியுமா என்று அதற்கு கான்ஸ்டிடியூசனலாக நாம் அதைப் பேசுகிறபோது மேலும் நாம் இதன் உள்ளே போய் விவாதத்தை உண்டாக்கி, மேலும் இந்தப் பிரச்சினையை வளர்க்கவேண்டாம் என்ற காரணத்தால் தான் அந்தப்பகுதியை மட்டும், அப்படி பேசியதை மட்டும் நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது உங்களுக்கும் நல்லது என்ற காரணத்தால்தான் நான் வலியுறுத்துகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: கேள்வி கேட்கவோ, அல்லது தலையிடவோ கோர்ட்டுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்பதை நாங்கள் எங்களுடைய கட்சியின் சார்பிலே ஒத்துக்கொள்கிறோம். அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே அது சம்பந்தப்பட்ட விஷயங்களை இங்கே பேசவில்லை. * *

ஆகவே அதேமாதிரியாக இப்போது கட்சிகளின் தரப்பிலே, எங்கள் கட்சியிலோ, அல்லது மார்க்சிஸ்ட் கட்சியின் தரப்பிலோ இருந்து எங்களுடைய கட்சியின் நிலை என்று சொல்லும்போது, அந்தந்த துறை, நம்முடைய சட்டமன்றத் துறை பொறுத்தமட்டிலும், நமக்கு என்று வரைமுறைகள் இருக்கின்றன. அதன்படி நாம் இருக்கவேண்டும். அதேமாதிரி கோர்ட்டுக்கு என்று சில வரைமுறைகள் இருக்கின்றன. அதிலே நாம் தலையிட முடியாது. அதிலே எந்தவிதமான ** ** ஆட்சேபணையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் பிரச்சினைக்குள் போகவில்லை. பேரவைத் தலைவர் அவர்கள் இது பற்றி தம் முடிவை அறிவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் அப்பிரச்சினை குறித்து பேசப்பட்டவற்றை நீக்கும்படி ஆணையிட்டேன். (குறுக்கீடு). நீங்கள் எல்லோரும் அமருங்கள். (குறுக்கிடுகள்).

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். நம்முடைய அவைத் தலைவர் அவர்கள் அப்பிரச்னை பற்றி தீர்ப்பு அளிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பு வருவதற்கு முன்னாலே நாம் இங்கே விவாதிக்கவேண்டாம் என்று சொல்லி, அப்பிரச்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



சினை குறித்து நீக்கிவிடலாம் என்று சொல்லியிருக்கிறேன். அதையொட்டித்தான் உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் பேசியது நீக்கப்படுகிறது. நம்முடைய ரகுமான்கான் அவர்கள் பேசியதும் நீக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர், எனக்கு வாய்ப்பு கொடுங்கள். மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, காலையிலே நான் பேசுகின்றபோது சொல்லிய வாசகம் இது தான். நீதிமன்றம் சுயேச்சையாக இயங்க வேண்டும். இந்திய அரசியல் சட்டத்தின் 211 ஆவது பிரிவின்படி நீதி மன்றம் வழங்குகின்ற தீர்ப்புகளைப் பற்றி நாம் விவாதம் செய்யலாம். அதாவது, நேஷனலைசேஷன் ஆப் பாங்க்ஸ், அபாலிஷன் ஆப் பிரிவி பர்சஸ். இதுபோன்ற பல்வேறு தீர்ப்புகளை .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லாவற்றையும் எடுக்கவில்லை. முதலமைச்சரை ஒட்டிய கருத்துக்கள் மட்டும் நீக்கப்படும் ; மற்றவை இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : அவரைப் பற்றி ரெபரென்ஸ் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இல்லையென்றால் அது இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : எந்த போர்ஷன் நீக்கப்பட்டிருக்கின்றது என்பது தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவற்றை நான் படித்து விடுகிறேன். அரசியல் அமைப்பு சட்டம் 211 ஆவது பிரிவில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நீதிபதிகளின் பாதுகாப்பைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : நான் பேசியதில் எதை நீக்குகிறீர்கள் என்பது தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * *

திரு. அ. ரகுமான்கான் : அதிலே என்ன தப்பு ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தப்பில்லை. திரு. ஆர். கிருஷ்ணன் அவர்கள் பேசியதில் தப்பில்லை ; திரு. அழகர்சாமி அவர்கள் பேசியதில் தவறு கிடையாது. அதையொட்டிய தீர்ப்பு 7 நாட்களில் வரப் போகிறது. அரசாங்கம் நீதிமன்றத்தை மதிக்க வேண்டும். திடீரென்று கேட்டால் எப்படி நான் படித்துவிட்டு சொல்லுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. அ. ரகுமான்கான் : இட் இஸ் மை பிரிவிலேஜ் டு நோ இட்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கான்டெக்ட் ஆப் ஜட்ஜஸ் பற்றி இங்கே பேசக் கூடாது என்று சட்டமன்ற விதியிலே இருக்கிறது. நீதி மன்றத்திற்கு ஒரு மாசு ஏற்படுத்தி யிருக்கிறது. நீதிமன்றத்தை கேலிக் கூத்தாக செய்யக்கூடிய காரியங்களைச் செய்யக் கூடாது. எனவே, இம்மாதிரியான வாச கங்கள் வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : இட் இஸ் ஆல்ரெடி ஆன் ரெக் கார்ட். இம்மாதிரி ஏற்கனவே சபையில் பேசப்பட்டிருக்கிறது. சபைக் குறிப்பிலே இருந்து எடுப்பதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அதிலே என்ன தப்பு? ஏற்கனவே முதலமைச்சர் பேசிய பேச்சுதான். நாங்கள் ஏன் பேசக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இருப்பதிலே தப்பில்லை. ஆனால், அன்றைக்கு இதுபற்றி இந்த அவையிலே பேசப்பட்டு, அன்றைக்கு அவைத் தலைவர் இதை அனுமதித் திருக்கிறார். இப்போது அது பிரச்சினையாக ஆகியிருக்கிறது, இந்த அவையிலே எழுப்பப்பட்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : அரசியல் சட்டத்திலே இருப்பதை நான் சொல்கிறேன். 'கான்பிளிக்ட்' வரக்கூடாது என்பதற் காகச் சொல்கிறேன். இது என் கருத்து. நான் யாரையும் பற்றிச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையொட்டி பேசிய கருத்துக்கள் இங்கே வேண்டாம். நீதிமன்றத்தின் தீர்ப் பைப்பற்றி நான் சொல்லவில்லை. நாங்கள் ஒரு முடிவு எடுத் திருக்கிறோம். இந்த அவையிலே, ஒரு தீர்ப்பைத் தருவதாக அவைத் தலைவர் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பு வருகிற வரையில் இதிலே விவாதம் வேண்டாம். ஆகவே, அதை ஒட்டியவைகள் நீக்கப்படுகின்றன. அவைகளைத்தான் நான் நீக்குகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : என் கருத்தை நான் சொல்லியிருக் கிறேன். அந்தக் கருத்தை எடுப்பதென்றால், நாங்கள் சபைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. நீக்குவதாக இருந்தால், நாங்கள் எதற்காக இங்கே இருக்கிறோம்? எல்லாவற்றையும் நீக்கிவிடலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவும் ஒரு தவறான முன் மாதிரி ஆகும். சட்டமன்றத்திலே பேசப்படுகின்றபோது, நீங்கள் சட்டமன்ற மரபுக்கு முரணான கருத்துக்கள் என்றோ அல்லது வழக்குமன் றத்திலேஇருக்கிறபோது, அதுபற்றி இங்கே பேசுவது சப்ஜுடிஸ்



என்றோ கருதினால், அதை நீக்குவதற்கான முழு அதிகாரம் உங்களுக்கு இருக்கிறது. அப்படி நீக்கிய பின்னாலே, ஒவ்வொரு பிரச்சினையிலும் மறு பரிசீலனை செய்வது என்பது சரியல்ல. இதுவே பின்னாலே உங்களுக்கே பாதுகாப்பு இல்லாமல் போய் விடும். பேரவைத் தலைவராகிய நீங்கள் எது தவறு என்று நினைக்கிறீர்களோ, அதிலே விவாதம் கூடாது என்பது வழக்கறி ஞராகிய உறுப்பினருக்கு தெரியும். உங்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது; அதைப் புரிந்துக் கொண்டு தான் இப்படி தாங்கள் செய்கிறீர்கள். இந்த விவகாரம் வழக்கு மன்றத்திலே இருக்கிறது. எனவே, அது சப்ஜுடிஸ்; எனவே, அதிலே மேற்கொண்டு விவாதம் நடத்துவது முறையாக இருக்காது. எனவே இது பற்றி பேச வேண்டாம் என்று தெரிந்து, தாங்கள் முடிவு சொல்லி யிருக்கிறீர்கள். இந்த முடிவைத் தெரிவித்ததற்குப் பின்னாலே, மேலும் பேசி, பிரச்சினையை சிக்கலாக்க வேண்டியதில்லை. ஏற்கனவே நான் சொல்லியபடி, இதிலே முதல்வரைப் பற்றியது மட்டுமல்ல; இந்த சட்டமன்றத்தின் எல்லா உறுப்பினர்களின் கவுரவத்தையும், அவர்களுக்கு இருக்கின்ற பொறுப்பையும், கடமையையும் தடுப்பது போன்ற பல்வேறு பிரச்சினைகள் இதிலே இருக்கின்றது. இதைப் பார்த்துத்தான் தடுத்திருக்கிறீர்கள். எனவே, இதுகுறித்து திருப்பித் திருப்பிக் கேட்பது முறையாகாது.

(இரவு 6–10).

திரு. ரா. கிருஷ்ணன்: நீங்களே சொல்கிறீர்கள், அதிலே எந்தவிதமான தப்பும் இல்லை என்று, அப்படியிருக்கிறபோது ஏன் அதை நீக்க வேண்டும். (குறுக்கீடு).

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் துணை தலைவர் அவர்களே, மந்திரி பேசப் போகிறார், நீங்கள் எல்லாம் கீழே உட்காருங்கள் என்று இங்கேயிருந்து ஒரு உறுப்பினர் சொல்வது சரியா? நீங்கள் கட்டளையிட்டால் கேட் டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : : அப்படி யார் சொன்னாலும், அது தவறு. இந்த அவையின் தலைமை பெ பொறுப்பில் இருப்பவர்தான் அதைச் சொல்ல முடியும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவை இதிலே மிக எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும் என்பதற்காக நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நீதி மன்றத்திலே இருக்கும் ஒரு வழக்கு அது அவையைப் பற்றிய வழக்காக இல்லாதபோது, அவையின் அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட வழக்காக இல்லாதபோது, அதுவும் அவையில், அவையாலே அவையின் அங்கத்தினர்களாலே செயல்முறைக்குக் கொண்டு வரப்பட்ட அல்லது பேசப்பட்ட அல்லது பேசப்பட்ட நிகழ்ச்சியை ஒட்டியவழக்காகயில்லாதபோது

'சப்-ஜுடிஸ்' என்று வராது என்பது தான் தெளிவான நிலை. எனவே, உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருப்பதால் அவையிலே, அவையின் உறுப்பினர்கள் அதைப்பற்றி பேசக்கூடாது என்பது இல்லை. Legislature cannct be Construed as a subject to Judiciary. இதுமிகத்தெளிவாக இருக்கிறது. இதை நீதிமன்றங்களின் தீர்ப்பை ஒட்டி நான் சொல்லவில்லை. 211-பிரிவிலே ஏற்கனவே தெளிவு படுத்தப்பட்டு இருக்கிறது. 194 (2)-க்கு உட்பட்டது இது என்று பல கட்டங்களில், நீதிபதிகள் கிருஷ்ணய்யர், சென்னப்ப ரெட்டி, சாஸ்லா ஆகிய பலரும் சொல்லியிருக்கிறார்கள். பாராளுமன்றத்திலும் இதுபோன்ற தீர்ப்புகள் வந்து இருக்கின்றன. 'சப்-ஜுடிஸ்' என்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் ரகுமான்கான், கிருஷ்ணன் ஆகியோர் இது குறித்துப் பேசியதை நீக்குகிறேன் என்று தீர்ப்பை வழங்குவது அவை உரிமையை நீதிமன்றத்தின் சார்பாக விட்டுக் கொடுத்ததாக அமைந்து விடும். ஆகவே, அத்தகைய ஒரு தீர்ப்பு கூடாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நீங்கள் சொல்லலாம். அவையிலே ஏற்கனவே இது பற்றிப் பேசப் பட்டு, அந்தப் பேச்சை ஏற்கனவே பல தீர்ப்புகளின் அடிப்படையில், சட்டமன்ற விதிகளின் அடிப்படையில் கூட, சட்டப் பேரவையில் ஆர்ட்டிகிள் 211 ஆவது விதியை மீறி ஒரு உறுப்பினர் பேசுகிறார் என்று இருந்தால், அப்படிப் பேசினால், அதை அனுமதிக்கலாமா வேண்டாமா என்பது அவர் பேசிய பேச்சு. Whether it is with reference to the conduct of any judge. என்பதனை ஆய்ந்து தீர்ப்பளிக்கலாம். அந்த அதிகாரம் எந்த ஒரு நீதிமன்றத்திற்கும் இல்லை. ஆனால் உங்களுக்கு இருக்கிறது. அந்த அதிகாரம். ஆகவே, அந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு, அந்தத் தீர்ப்பை பின்னால் வழங்குகிறேன் என்று பேரவைத் தலைவர் சொல்லியிருக்கிறார். நீங்கள் வேண்டுமானால் அத்தகைய தீர்ப்பு பேரவைத் தலைவர் வழங்க இருப்பதால், அதுகாறும் அதைப் பற்றி அவையில் பேசாமல் இருக்கலாம் என்று சொல்லலாமே தவிர, நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால், அதைப் பற்றி இப்போது பேசக் கூடாது என்று தீர்ப்பளிக்க வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் தலைவர் இதுபற்றி தம் தீர்ப்பை இந்த அவையிலே தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கின்ற காரணத்தால் இதுபற்றிய விவாதம் தேவையில்லை என்ற கருத்தில்தான் நீக்கப்பட்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே,

* * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது பற்றி மேலும் எவ்வித விவாதமும் வேண்டாம். நான் எதையும் அனுமதிக்கவில்லை.

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது திரு. ரகுமான்கான் அவர்கள் பேசியதும் நீக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என் அனுமதியின்றி பேசப்படுகிறவைகள் எதுவும் அவைக் குறிப்பில் இடம் பெறாது. திரு. அ. ரகுமான்கான் அவர்கள் உட்கார வேண்டும்.

திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் அவைக்கு அளிக்கப்பட்டிருக்கும் 1983—84-ஆம் ஆண்டுக்கான நீதி நிர்வாகம், சிறைத்துறை, கூட்டுறவுத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 6—20)

இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, வரவேற்று, ஒரு சில கருத்துக்களை எடுத்துவைக்க முன்வருகிறேன்.

முதற்கண், சென்ற ஆண்டிலே மணப்பாறையிலேஒரு மாவட்ட முன்சிப் கோர்ட் நீதிமன்றம் ஏற்படுத்தியதற்காக, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களுக்கு, என்னுடைய தொகுதியின் சார்பாக, மணப்பாறை தொகுதி மக்களின் சார்பாக, நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தத் தொகுதி மக்கள் சார்பாக மேலும் ஒரு கோரிக்கையை விடுக்க ஆசைப்படுகிறேன்.

மணப்பாறை மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தினுடைய ஜூரிஸ்டிக்ஷனின் அப்பேலட் கோர்ட், கரூரிலே இருக்கிறது. அந்தக் கோர்ட்டுக்கு செல்ல வேண்டும் என்றால், மணப்பாறையிலுள்ள மக்கள், 75 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. அந்த நிலைமையை மாற்ற, திருச்சி சப்-கோர்ட்டிலேயே, மணப்பாறை முன்சிப் நீதிமன்றத்தின் ஜூரிஸ்டிக்ஷன்னை மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அடுத்தபடியாக, மணப்பாறை ஜுடிஷியல் கோர்ட்டுக்கு, மாவட்ட முன்சீப் நீதிமன்றத்திற்கு, மணப்பாறையிலேயே ஒரு நிரந்தரமான கட்டிடத்தைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்தத் தீண்டாமை ஒழிப்பு, புரொகிபிஷன் கோர்ட்டுகளுக்காக ஏறத்தாழ 100 மைல்களுக்கு மேல் திருச்சிக்குச் சென்று, திருச்சி மாவட்டத்திலே உள்ள பொது மக்கள், அந்த வழக்குகளில் கலந்துகொள்ள வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால், ஒவ்வொரு ரெவின்யூ ஜுரிஸ்டிக்ஷனிலும், அந்தக் கோர்ட்டுக்களை அமைத்து, அந்த மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருச்சியிலே, உள்ள நீதிபதிகள் அவர்களுடைய குவார்ட்டர்ஸ்ஸுக்குச் செல்ல வேண்டும் என்றால் 6 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அந்தக் குறையைப் போக்கும் வகையில் அவர்களுக்கு, திருச்சி மாவட்ட நீதிமன்றத்தின் உள்ளேயே குவார்ட்டர்ஸ்ஸுகள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீதிமன்றத்திலே வேலை செய்யும் குமாஸ்தாக்கள் வேலைப் பளுவின் காரணமாக, இரவு 7, 8 மணி வரையில் வேலை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அந்தக் குறையைப் போக்கும் வகையில் அதிக அளவில் குமாஸ்தாக்களை நியமிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீதித் துறையிலே, தமிழ்நாடு ஜுடிஷியல் மினிஸ்டிரியல் அசோசியேஷன் என்று ஒரு அசோசியேஷன் இருக்கிறது. அந்த அசோசியேஷனானது, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடத்தில், அவர்களுடைய கோரிக்கைகள் சிலவற்றை வலியுறுத்தி, சென்ற ஆண்டு ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுவைப் பரிசீலித்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு, இந்த மன்றத்தின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, திருச்சியிலே உள்ள நீதிமன்றத்திலே, வழக்கறிஞர்களுக்கு என்று சேம்பர்கள் கிடையாது. ஆகவே, அவர்களுக்கான சேம்பர் ஒன்றை அந்த காம்பவுண்டுக்குள்ளேயே கட்டித் தர வேண்டுமாய் கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று அவையிலே வைத்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளின் மீது சுருக்கமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

இன்று நீதிமன்றங்கள், நீதிபதிகள் பற்றி ஒரு சர்ச்சை இந்த மன்றத்திலே எழுந்திருக்கிறது. நான் சொல்ல விரும்புவது எல்லாம், நீதிபதிகளைப்பற்றியோ, நீதிமன்றங்களைப் பற்றியோ, விமரிசனமே செய்யக் கூடாது. விமரிசனம் செய்வதே பாவ





மான காரியம் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு விமரிசனம் செய்வதற்கு நாட்டினுடைய பிரஜைகளுக்கு உரிமை உண்டு. இங்கே எழுப்பப்பட்டிருக்கக்கூடிய சில உண்மையான சம்பவங்களை நாம் பார்க்க வேண்டும் என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் நம்முடைய நாட்டிலே ஜனநாயக உணர்வு வளர்ந்திருப்பதன் காரணமாக, ஜனநாயக உணர்வு எழுச்சி பெற்றிருப்பதன் காரணமாக, சில அபிவிருத்திகள், முன்னேற்றங்கள் நீதிமன்றங்களிலே ஏற்பட்டு வருகிறது என்பதை பார்க்கிறோம். சமீபத்தில் நம்முடைய நாட்டிலே ஒரு சரியான தீர்ப்பு சுப்ரீம் கோர்ட்டிலே வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆலை மூடப்படுகிற போது, அதில் வெறும் மூலதனத்தை மட்டும் பார்க்கக்கூடாது. அதிலே இருக்கக்கூடிய மூலப் பொருள்களை மட்டும் பார்க்கக் கூடாது. அதிலே உழைக்கின்ற உழைப்பாளர்களின் உழைப்பினுடைய மதிப்பையும் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆகவே, அவனுடைய சம்மதம் இல்லாமல், சம்மதம் பெறாமல் ஒரு ஆலையை மூடிவிடக் கூடாது என்று சமீபத்திலே சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. சமுதாயத்திலே ஏற்பட்டு வரும்படியான ஜனநாயக உணர்வுகள் இத்தகையத் தீர்ப்புகளை கொடுக்க வைக்கிறது. நீதிபதிகள் சமுதாயத்தின் நிலைமைகளுக்கு தலை வணங்க வேண்டிய நிலை இருக்கிறது. நீதிபதிகள் சட்டங்களைப்பற்றி விமர்சனங்களை, வியாக்கியானங்களை முற்போக்கு திசையிலே தரவேண்டிய அவசியமான ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஏதோ அவர்கள் நீதிபதிகளாக இருக்கிறார்கள் என்பதினாலேயே அவர்கள் தராசு தவறாமல்தான் இருப்பார்கள், ஆகவே கடவுள் என்று சொல்லப்படுகிற நியதிகளுக்கும் அப்பாற்பட்டவர்களாகத்தான் இருப்பார்கள் என்று நாம் நினைக்கவில்லை.

எனவே, அதிலேயும் விமர்சனத்திற்கு இடம் உண்டு. ஆகவே நடைபெற்று இருக்கக்கூடிய காட்சி என்ன என்பதை இந்த மன்றமும் இந்த நாடும் கவனிக்க வேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துக் காட்டுகின்றது. ஆகவே, நம்முடைய நாட்டின் வரலாற்றில் 1976-ஆம் ஆண்டு நடந்த சம்பவங்களை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். டெல்லியிலிருந்து ஒரு நீதிபதி ஒரே நாளில் அஸ்ஸாமுக்கு மாற்றப்படுகிறார். அவருடைய பெயர் ஷா கமிஷனில் வெளிவந்திருக்கின்றது.

** ** **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்னொன்றை நான் சொல்ல விரும்புகிறேன். சஞ்சய் காந்தியின் வழக்கிலே டெல்லியிலே இருக்கும்படியான நீதிமன்றம் தண்டனை அளித்தது. ஆனால், அந்த நீதிபதி என்ன ஆனார். அந்தத் தண்டனை அவர் அளித்தது குற்றமா ? அந்த நீதிபதிக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை. இது நாட்டிலே நடந்து இருக்கும்படியான உண்மை, சத்தியம்.

ஆகவே, அப்படிப்பட்ட வகையில் விமர்சனம் என்ற ஒன்று நீதிபதிகளை மிரட்டவும், பழிவாங்கலாகவும் போய்விடக்கூடாது என்பதில் இந்த நாடு மிகவும் அழுத்தமாக இருக்க வேண்டும். ஆகவே, விமர்சனம் செய்ய உரிமை உண்டு. அப்படி விமர்சனம் செய்யும்போது பழி வாங்க இடம் இருக்கக்கூடாது. அந்தத் திசையிலேதான் நீதிமன்றத்தைக் கவனிக்க வேண்டும் என்று, நாம் விரும்புகிறோம். அந்தத் திசையில்தான் இந்த மன்றமும் அந்த விவாதத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தப் போக்கிலே நம்முடைய தமிழ்நாட்டு நீதிமன்றமும் அவை பற்றிய நம்முடைய விமர்சனமும் இருக்க வேண்டும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இங்கே பிரச்சினையை வேறு ஒரு திசையில் திருப்பி ஏதோ சஞ்சய் காந்தி வழக்கிலே தீர்ப்பு வழங்கப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். என்ன அடிப்படையிலே அதைப் பேசினார்கள் என்பதை விளக்க வேண்டும்.

திரு. என். வரதராஜன்: அது அந்த. . கமிஷன் ரிப்போர்ட்டிலே (மணியடிக்கப்பெற்றது.)........

*டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள், கோரிக்கை எண். 23-கூட்டுறவு, கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் ஆகிய மானியங்கள் குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய உணர்வுகளை இந்த மன்றத்திலே வைக்க நான் முன் வருகிறேன். பொதுவாக சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டிலேயும், இந்தியத் துணைக் கண்டத்திலேயும் கூட்டுறவு இயக்கம் சிறப்பாக இயங்கவில்லை என்ற கருத்து எல்லா வட்டத்திலும் உருவாகி அது நல்ல முறையிலே சீர்திருத்தப்பட வேண்டும். மக்களைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற அடிப்படையில் கோவாப்பரேடிவ் செலக்ட் கமிட்டி என்ற முறையில் ஆய்வுக்குழு ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக எல்லா கட்சிக்காரர்களையும் உள்ளடக்கிய அந்த கமிட்டி ஆய்வு செய்து அதன்மூலம் விற்பவர்கள், வாங்கக் கூடியவர்கள், உற்பத்தி செய்யக்கூடியவர்கள் மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடியவர்கள் ஆகியவர்களுடைய சாட்சியங்களை எல்லாம் பதிவு செய்து கூட்டுறவுத்துறை எதிர்காலத்திலே நல்ல முறையில் இயங்கக்கூடிய வகையிலே ஒரு சட்டம் கொண்டு வந்திருப்பதற்காக இந்த அரசையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்



அடுத்து சிறைச்சாலைகள் என்று வருகின்றபோது சிறைச்சாலைகள் எல்லாம் இன்றைய தினம் சீர்திருத்த ப் பள்ளிகளாக தமிழகத்திலே மலர்ந்து வருகின்றன. மறுமலர்ச்சி அடைந்துள்ளன என்பதை எல்லாம் எண்ணுகின்றபோது நாம்பெருமைப் படுகிறோம். மேலும் அங்கே சிறைச்சாலைகளில் சிறு சிறு தொழில்களைப் பெருக்கக்கூடிய வகையில் அந்தக் குற்றவாளிகளை எல்லாம் கடமையுணர்ச்சியுள்ளவர்களாக, பொறுப்புணர்ச்சியுள்ளவர்களாக, நாட்டுப்பற்று உள்ளவர்களாக ஆக்குவதற்குரிய பலவிதமான முனைப்பான திட்டங்களை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருப்பதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். மதுவிலக்கு தளர்த்தப்பட்டதால் பல்வேறிடங்களில் இல்லீகல்-ஆகவிற்கக் கூடியநிலமைஇருப்பதையறிந்து துறையிலே இருப்பவர்கள் உடனடியாகக் கவனித்து அவற்றைப் போக்க வேண்டும் என்பதற்கு வழிமுறைகள் செய்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

(இரவு 6-30]

தொடர்ந்து தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் 7 ஆயிரம் வழக்குகளுக்கு மேலாக இருக்கின்றன. அதனை செய்தவர்கள் 500-க்கும் குறைவானவர்கள். அவர்களுக்கு தண்டனையும் கொடுக்காமல் அவர்களை விடுதலையும் செய்யாமல் இருக்கின்ற காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு நல்ல ஒரு சூழ்நிலையில் அவர்களுக்கு நல்ல ஒரு தீர்ப்பை வழங்கக்கூடிய வகையில் முடிவு எடுக்கக்கூடிய வகையில் பிரச்னையை தீர்க்கக்கூடிய வகையில் உடனடியாக கோர்ட் அமைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை செய்து இருப்பதை கண்டு நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக சொல்கின்ற விஷயம் நீதிபதியைப் பற்றி வருகின்றபோது மொழி தெரிந்தவர்களாக, மாநில மொழியுணர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது எல்லோருடைய அபிப்பிராயம். ஜாதி மத பேத அரசியல் கட்சிகளுக்கு அப்பால் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற தன்மைகளுக்கு அப்பால் ஏற்றுக் கொண்ட கருத்தாகும். சாதாரணமாக சப்-கலெக்டர் பயிற்சி நடைபெறுகிறபோது அவர்களுக்கு டிரெயினிங் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு கர்ணம், முனிசீப், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆகியவர்களிடம் பயிற்சியும் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் உட்கார்ந்து பேசி சில தீர்ப்புகள் வழங்க வேண்டிய நிலைமையும் வருகிறது. அவர்களுக்கு 4 (1) (ஜே), 4 (1) (ஏ), 323 இந்த மாதிரியான கேஸ்களை எல்லாம்செய்யக்கூடிய ஒரு வாய்ப்பைக்

கொடுக்கிறார்கள் ஒரு ஊரில்ஒரு ஆட்டைத்திருடி விட்டு ஒருவன் வந்தான். அவனுடைய கேஸ் நடந்தது. அதைக் கேட்டு பரிசீலனை செய்தவருக்கு தமிழ் தெரியாது அவருக்கு ஆங்கிலம் மட்டும் தெரியும். 15 நாட்களுக்கு வழக்கு நடந்தது. கடைசியில் தீர்ப்புச் சொன்னார். அவர் ஆங்கிலத்தில் தீர்ப்பைப் படித்தார். As the prorecution has not proved the case beyond any reas nabledoubt acquit the accused of all the charges இப்படிச் சொன்னாரோ இல்லையோ உடனே கேட்டவனுக்கு என்னவென்று தெரியவில்லை, " ஐயோ சாமி என்னை விட்டு விடுங்கள் நான் ஒரே ஒரு முறை தான் வயிற்று வலிக்காக ஆட்டைத் திருடினேன். அதற்கு இந்த கதியா " என்று சொன்னான், நீதிபதிக்கு எதுவும் புரியவில்லை. அவர் சப்-கலெக்டராக ட்ரெயினிங்கில் இருந்த ஒருவர். அவருக்கு எதுவும் புரியவில்லை. அவன் என்ன சொல்கிறான் என்று பக்கத்தில் இருப்பவரைப் பார்த்து 'வாட் ஹாப்பன்ட்' என்று கேட்டார் " ஒன்றும் இல்லைங்க அவன் தான் ஆட்டை ஒரே ஒரு முறைதான் திருடினானாம். நீதிபதியாகிய நீங்கள் அவனை விடுதலை செய்துவிட்டீர்கள். சந்தேகத்திற்குகிடமில்லாமல் இவன் குற்றவாளி அல்ல " என்று சொல்லி நீங்கள் விடுதலை செய்துவிட்டீர்கள் என்று அவனுக்குத் தெரியாமல் அலறுகிறான் என்று சொன்னார்

Oh; my God என்று சொல்லி வியப்பில் ஆழ்ந்தாராம். பேசாமல் இருந்தாராம். இப்படிப்பட்ட நிலமை ஒரு சாதாரண வழக்கில் ஏற்பட்டிருக்கிறது. இது மாவட்ட நீதிமன்றத்தை விட்டு ஹைக் கோர்ட்டுக்குச் செல்கிறபோது மொழி தெரியாத காரணத்தினால் உணர்வு தெரியாத காரணத்தினால் அவர்களுடைய உணர்வை எப்படி எதிரொலிக்கிறார்கள், எப்படி பிரதிபலிக்கிறார்கள் என்று தெரியாத காரணத்தினால் நீதிபதிகள் நல்லவர்களாக இருக்கலாம் வல்லவர்களாக இருக்கலாம் சட்டத்தை கரைத்துகுடித்தவர்களாக இருக்கலாம், ஆண்டவனின் மறுஅவதாரமாகக்கூட இருக்கலாம். ஆனாலும் சொன்னவன் யார் அவன் சொல்லியது என்ன என்பதை புரிந்துகொள்ளமுடியாத மொழி தகராறு காரணமாகவே தவறான தீர்ப்பு வழங்குவதற்கு இடம் தருகிறது. இது தேவையா என்பதுதான் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினுடைய கேள்வி. அந்த அடிப்படையில் அருள்கூர்ந்து மாநில உணர்வு பெற்றவர்கள், மொழி தெரிந்தவர்கள் அந்த உணர்வு சம்பந்தமாக புரிந்துகொள்ள ஆற்றல் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய ஒரு கோரிக்கை என்பதை நான் இந்த நேரத்தில் இந்த சட்டமன்றத்தின் வாயிலாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டும் அல்ல, சட்ட மன்றம் என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிதிநிதிகளைக் கொண்ட சட்ட மன்றம் ஒரு சட்டத்தைப் போடுகிறது. உதாரணமாக தர்மபுரி மாவட்டம் கேளவரப் பள்ளிடாம். இந்தியாவிலே 250 மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்கள். அதிலே 20 மாவட்டங்கள் மிக மிக பின்தங்கிய மாவட்டங்கள்என்று பல்வேறு மாவட்டங்களை சொல்கிறோம். அதிலே தர்மபுரி ஒன்று. அந்த தர்மபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஒசூர் கேளவரப்பள்ளி டாமை கட்ட கவர்மெண்டு ஆணை போடுகிறது சென்ட்ரல் கவர்ன்மெண்டு பணம் கொடுக்கிறது. ஸ்டேட் கவர்ண்மெண்டு பணம் கொடுக்கிறது. 6 கோடி, 7 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறோம். அதை இன்வஸ்டிகேஷன் செய்கிறார்கள். எல்லாம் பார்த்துவிட்டு வேலை ஆரம்பித்துவிட்டார்கள். வேலை ஆரம்பித்து 2 வருடமாக தொடர்ந்து வேலை நடக்கிறது. 3, 4, 5 கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்துவிட்டார்கள். அப்படி செய்த பிறகு அதிலே இருக்கக்கூடிய ஒருவர் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கப் போகிறார். அப்படி கோர்ட்டுக்கு ஸ்டே வாங்கப் போனால் ஸ்டே கொடுக்கலாமா ? கொடுத்து இருக்கிறது. கேளவரப்பள்ளி டாமினுடைய நோக்கம் என்ன ? அதில் அரசின் நோக்கம் என்ன ? குடிநீர் பிரச்சனையை தீர்க்க வேண்டும். பாசன நீர் பெருக வேண்டும், தொழிற்சாலைகளை பெருக வேண்டும். 100 கோடி ரூபாய்க்கு மேலே கவர்ண்மெண்டு அங்கே இன்வெஸ்ட் செய்து சிப்காட் இன்டஸ்ட்ரியல் காம்பிளக்ஸ் போட்டிருக்கிறது. தனியார்கள் பல்வேறு மூலதனங்களை அங்கே கொண்டுபோய் போட்டிருக்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்தில் உள்ள பல்வேறு மாநிலங்களில் உள்ள பல்வேறு தொழில் நிபுணர்கள் அங்கே குடியேறியிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க கூடியது சூழ்நிலை இருக்கிற 10 ஏக்கருக்கு சொந்தக்காரன், 2 வருடமாக சும்மா இருந்தால் 2 வருடம் சும்மா இருந்துவிட்டு கோர்ட்டுக்கு போய் இருக்கிறான். கோர்ட் அதை நிறுத்தியிருக்கிறது. அதனால் வேலை தடைபட்டு இருக்கிறது என்று சொன்னால் அந்த மக்கள் பாதித்து இருக்கிறார்கள், என்றால் அதற்கு யார் காரணம் சட்டமன்றமா ? நீதி மன்றமா ? அதற்கு யார் பொறுப்பு இந்த திட்டத்தைக் கொண்டு வந்த முதலமைச்சரா ? அல்லது அங்கே அது வேண்டாம் என்று ஸ்டே கொடுத்தார்களே அந்த நீதிபதியா அதற்கு யார் பொறுப்பு என்பதை அருள்கூர்ந்து எண்ணிப்பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில்இன்றைய தினம் அங்கே இருக்கின்றவர்கள் 100-க்கு 30 சதவீதத்திற்கு மேலே வேறு இடத்திற்கு போகிறார்கள். பெங்களூருக்கு எல்லாம் வேலைக்கு போகிறார்கள். குடிநீர் இல்லை. அடிஷனலாக நாம் குழாய் கிணறுகளை போடுகிறோம். போர்வெல் போடுகிறோம். கிணறுகளை நாம் ஆழப்படுத்துகிறோம். லாரியில் தண்ணீர் கொண்டுபோய்க் கொடுக்கிறோம். இந்தச் செலவை யார் கொடுக்கிறார்கள் ? கவர்ன்மெண்ட் கொடுக்கிறதா ? கோர்ட் கொடுக்கிறதா ? அது சென்ட்ரல் கவர்ன்மெண்டாக இருக்கட்டும், ஸ்டேட் கவர்ன்மெண்டாக இருக்கட்டும். இந்தப் பழிபாவத்திற்கு ஆளாவது யார் ? அந்தத் தொழிலாளர்களின் அவதியைப் போக்குவது யார் ? அந்தத்

(டாக்டர் கே. சமரசம்) [1983 ஏப்ரல் 4

தொழிலதிபர்கள் போட்ட பணத்தை எபபடி எடுக்க முடியும்?
வேறு தொழிலதிபர்கள் எப்படி அங்கே தொழில் புரிய முடியும்
என்பதை தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும். அரசு
கொடுத்த கடனும் மான்யமும் என்ன ஆவது?

நீதிபதிகளைப்பற்றியோ நீதிமன்றங்களைப்பற்றியோ நான்
குற்றம் சொல்வதற்காக அல்ல. ஒரு குடம் பாலிலே ஒரு துளி
விஷம் இருந்தால் அந்தப்பால் முழுவதுமே பாழாகிப் போய்
விடுகிறது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் அருள்கூர்ந்து
எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகி
இரண்டு வருஷங்களுக்கு அப்புறம் ரிட் போனது, அது நின்று
விட்டது, தண்ணீர் இல்லை, தொழிற்சாலை ஃபட்,
பாசன வசதி பெருகவில்லை, குடிநீர் பெருகவில்லை
இப்படிப்பட்ட நிலையில் நீதிமன்றங்கள் ஆக்கப் பூர்வமான பணி
களுக்கு உதவி செய்யக்கூடிய நிலையில் இல்லாவிட்டால் சுதந்திரம்
அடைந்ததற்குரிய நோக்கம் நிறைவேறுமா? நாட்டிலே ஆட்சி
மன்றத்திற்கு வருகிறோமே, சட்டமன்றத்திற்கு வருகிறோமே
மக்களுடைய பிரதிநிதிகளாக வருகிறோம் என்று சொல்கிறோமே
எதற்காக வருகிறோமோ அந்த எண்ணத்தை நிறைவேற்ற
முடியுமா? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்ட
மன்றத்திற்கு வருகிறார்கள். மெஜாரிட்டி கட்சியின் சார்பிலே
தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு

திரு. ஜே எஸ். இராசு : துணைத் தலைவர் அவர்களே,
அது நீக்கப்படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீக்கி விட
வேண்டியது தான். உறுப்பினர்கள் பேசுகின்ற ரெஸ்பான்ஸிபி
ளாக எதையும் உணர்ந்து பேசவில்லையென்றால் எதைச் சொல்ல
வேண்டுமென்று உணர்ந்து பேசவில்லை என்றால் எவ்வளவு பேசி
னாலும் அதை நாம் நீக்கித்தான் ஆக வேண்டும்.

திரு. ஜே எஸ். இராசு: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்,
மாண்புமிகு உறுப்பினர் திரு. சமரசம் அவர்கள் * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறிப்பைச்
பார்த்து அது நீக்கப்படும்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே;
நான் தங்களிடமிருந்து தீர்ப்பு ஒன்றைப் பெற விரும்புகிறேன்.
நீதித்துறையைப்பற்றி விவாதம் செய்கிறோம். மக்களுடைய நல
னுக்கு நீதித் துறை எதிராக செயல்படுகிறது என்று சொல்கிற
போது அது காண்டக்ட் ஆப் தி ஜட்ஜ்தான் அதைஅனுமதிக்கிறீர்
களா?

---

** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப் பெற்றது.



1983 ஏப்ரல், 5]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீதி நிர்வாகம்
மானியக்கோரிக்கை மீது நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.
அது சம்பந்தமாக ஸ்பெஸிக்காக பேசாமல் ஜெனரலாகப் பேசு
வதிலே ஒன்றும் இல்லை. குறிப்பு வந்தவுடன் பார்த்து எதை
நீக்க வேண்டுமோ அதை நீக்குகிறேன்.

டாக்டர் கே சமரசம் : மன்றத்தினுடைய துணைத் தலைவர்
அவர்களே, ஒரு நாட்டின் மக்களின் தேவைக்காக
வளர்ச்சிக்காக செய்யக்கூடிய திட்டங்கள் இடையே
சட்டம் என்ற பெயரால் நிறுத்தி வைக்கப்படுகிறது என்றால்
ஜனநாயகம்மறுமலர்ச்சியுறுமா? என்பதை மறுபரிசீலனை செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீதிமன்றத்திலே
கொடுக்கிற தீர்ப்பைப்பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை.
ஒரு சட்டத்தை நாம் உருவாக்கக்கூடிய நிலைமையைப் பெற்
றிருக்கிறோம். அந்தச் சட்டத்தை நாம் உருவாக்கிக் கொடுக்கி
றோமா அதன் படி அவர்கள் நடக்கிறார்கள். ஆகவே
சட்டத்தை வைத்து நடக்கிறபோது நீதிபதிகளைப் பற்றிப் குறை
சொல்லத் தயாராக இல்லை. அந்தச் சட்டத்தை மறு ஆய்வு
செய்ய வேண்டுமென்ற எண்ணமே தவிர வேறு ஒன்றும் இல்லை
என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்
கொள்கிறேன். அது மட்டுமல்ல கோர்ட் என்று வருகிறபோது
திரு.கிருஷ்ணய்யர் ஒரு கருத்தைச் சொல்யிருக்கிறார். அருமை
யாக ஒரு பாயின்டை சொல்லியிருக்கிறார். எப்படி கோர்ட் இருக்
கிறது என்று அவர் சொல்கிறபோது ஏற்கெனவே பல்வேறு
உதாரணங்களை விஷயங்களை பற்றிப் பேடுகின்ற போது திரு.
வி. ஆர். கிருஷ்ணய்யர் சொல்கிறார், இந்த கோர்ட் எல்லாம்
இப்போது ''ஸ்டேகோர்,'', இன்ஜங்ஷன் கோர்ட்'' என்று இருக்க
லாமா என்ற வார்த்தையை வைத்து இருக்கிறார். இதை
முதலமைச்சர் சொல்லவில்லை அரசியல்வாதி சொல்லவில்லை,
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி சொல்லவில்லை,
சுப்ரீம் கோர்டினுடைய ரிடையர்டு ஜட்ஜ் திரு. வி. ஆர். கிருஷ்
ணய்யர் சொல்லிருக்கிறார். இப்போது இருக்கிற சூழ்நிலையில்
கோர்ட் சட்டங்கள் அதிகாரங்களை மறு ஆய்வு செய்ய வேண்டுமா
இல்லையா என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

(இரவு 6.40).

சட்டமன்றத்திலே இருக்கிற நாம் மக்களாலே தேர்தெடுக்கப்
பட்ட பிரதிநிதிகள். சொத்துக்களை எல்லாம்
நாம் சட்டமன்றத்திலே வைக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது.
ஒரு எம்.எல்.ஏ., எம். பி. மந்திரி என்று சொன்னால்
அவர்களுடைய சொத்துக்களே மக்கள் தான். அந்த மக்க
ளாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கே சொத்துக்களை
மக்கள் மன்றத்திலே, சட்டமன்றத்திலே வைக்க வேண்டு
மென்று சொல்கிறபோது, ஏன் நீதிபதிகளுடைய சொத்துக்களை
பாராளுமன்றத்திலே வைக்கவேண்டுமென்ற நிலைஇல்லை? அதை
வைக்க வேண்டும். நீதிபதிகள் குற்றத்திற்கு அப்பாற்பட்டவர்கள்

என்பதை விட்டு, சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று நீதிமன்றங்களுக்குச் செல்லக்கூடிய பாதிக்கப்பட்டவர்களும் பொதுமக்களுக்கும் எண்ணம் வரக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கவேண்டும். அதே நேரத்தில் நீதிமன்றங்களுக்கு கொடுத்திருக்கிற அதிகாரங்கள் நாட்டுமக்களுக்கு உகந்ததாக இருக்கக்கூடியவைகளை எதிர்க்கக் கூடிய வகையில் நாட்டினுடைய வளர்ச்சித் திட்டங்களை பாதிக்கக் கூடிய அளவிலே இருக்கிறது என்று சொன்னால் எப்படியும் அவை மறு ஆய்வு செய்து வளர்ச்சி பாதிக்காத நிலையில் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அந்த அடிப்படையில் இன்று இருக்கிற சூழ்நிலையில் இதை எண்ணிப் பார்க்க வேண்டிய காலம் கட்டம், அவசரம் வந்து விட்டது. எல்லா மாநிலங்களிலும் இருக்கிற நீதிபதிகள் நிச்சயமாக அந்த மாநில மொழி தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். மாநிலங்களிலே தீர்ப்பு வழங்குகிறபோது ஆக்கப்பூர்வமான பணிகள் தாமதப்படாமல் நிறுத்தி வைக்கப்படாமல் தொடர்ந்து செய்யக் கூடிய வகையிலே செய்ய வேண்டும். அவர்களுக்கு இருக்கிற பிரச்சினைகள், கொடுக்கல், வாங்கல், அது 100 கோடி, 500 கோடி கொடுக்க வேண்டுமா? வேண்டாமா? என்பது வேறு விஷயம். கேளவரப் பள்ளி டாம் கட்டிக்கொண்டே இருக்க வேண்டும். மீதிப் பிரச்சினைகளைப் பற்றி கொடுக்கல், வாங்கல் முதலியவை எப்படி தீர்ப்பு சொல்கிறோமோ அப்படி இருக்க வேண்டும் சொல்லி இருக்கவேண்டுமே தவிர, அதை நிறுத்தி விட்டு, ஆண்டு பலவாக நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது யார் என்பதை கேட்க விரும்புகிறேன். ஆகவே அந்த அடிப்படையிலே இதுபோன்ற பல்வேறு விஷயங்கள் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இன்றைய தினம் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற நீதிமன்றங்களுக்கு வந்திருக்கிறது என்பது தான் எங்களுடைய வாதமாகும். அந்த அடிப்படையிலே பாராளுமன்றத்திலே இப்படி ஒரு மசோதா கொண்டு வரக்கூடிய வகையிலே, தமிழ்நாடு சட்டமன்றம் ஆலோசனைக் செய்யக் கூடிய வகையிலே உணர்வுகளை, எண்ணங்களை பிரதிபலிக்கின்ற வகையில் மாண்புமிகு சட்ட அமைச்சர்வர்கள் இதை ஒரு முன்னோடியாக கொண்டு வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வணங்கி, விரும்பி கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: துணைத் தலைவர் அவர்களே மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் பேசுகின்றபோது, இந்த அளவிலே ஒன்றைச் சொன்னார்கள். நீதிமன்றங்களைப் பற்றியும், நீதிபதிகளையும் பற்றியும் அவர் பேசுகிறபோது சொன்னார்கள். கடவுள் நம்பிக்கை உண்டோ, இல்லையோ, ஆண்டவனுக்கு அப்பார்ப்பட்டவர்களாக இருக்கக் கூடியவர்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள்.*

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆகவே அதை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குறிப்பிலே இல்லை என்று நீங்கள் சொல்வதால் அது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

திரு. என். வரதராஜான் : துணைத் தலைவர் அவர்களே. என்னுடைய பேச்சில் இருக்கிற ஒரு வார்த்தையை குறித்துவைத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் இந்த சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். சமீப காலத்திய பார்லிமெண்ட் நடவடிக்கையை நான் சொல்லவேண்டும். நம் முடைய பாராளுமன்ற நடவடிக்கையை சொல்கிறேன். இன்றைய நாடாளுமன்றத்திலிருக்கிற மத்திய அமைச்சர் நாடாளு மன்றத்தில் என்ன கேட்டார் தெரியுமா? இன்றைய அரசியல் சட்டத்தை வியாக்கியானம் செய்கிற உரிமை சுப்ரீம் கோர்ட்டிற்கு தேவையில்லை. அதற்காக தனியாக ஒரு பென்சை நியமிக்கலாமா என்று கேட்டார். பாராளுமன்றம் அதை நிராகரித்தது. சுப்ரீம் கோர்ட் வழங்குகின்ற சமய தீர்ப்புகள் அங்கே ஆளுகின்றவர்களுக்கு பிடிக்காததால் மீறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அது தான் உண்மை. அந்த அடிப்படையிலே தான் இதுவும் நிகழ்ந்தது. (கூச்சல், குழப்பம்).

திரு. அ. ரகுமான்கான்; துணைத் தலைவர் அவர்களே. நம்முடைய இளையபெருமாள் அவர்கள் பேசியதை நீக்கினீர்கள். திரு. வரதராஜன் அவர்கள் பேசியதை சேர்த்திருக்கிறீர்களா? நீக்கியிருக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சேர்த்திருக்கிறேன்.

திரு. இல. பலராமன் : சேர்க்கக் கூடாது சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலில் வா கமிஷன் குறித்துசொன்னவைகளை நீக்கியாகிவிட்டது. இரண்டாவதாக திருவரதராஜன் அவர்கள் சொன்னவை அவைக்குறிப்பிலே இருக்கின்றன.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையில் தலைவர் இந்த அவையை விட்டு சென்றபிறகு நீங்கள் நிறைய பேர் பாய்ன்ட் ஆப் ஆர்டர் சேட்க அனுமதி தருகிறீர்கள். நீங்கள் வழக்கறிஞர் என்ற முறையில் வழக்கறிஞர்களுக்கே பாய்ன்ட் ஆப் ஆர்டர் தந்து கொண்டிருக்கிறீர்கள் அதிகமாக என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கிளையன்ட் என்பதால் உங்களுக்கு இப்பொழுது அனுமதி கொடுத்திருக்கிறேன். (சிரிப்பு).

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவர் அவர்களே, ஃபீஸ் எவ்வளவு வக்கீலுக்கு, கிளையன்ட் கொடுப்பது? (சிரிப்பு)

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சட்டம், சிறை ஆகிய துறைகளின் மீதான மானியக் கோரிக்கைகளில் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அரசியல் சட்டம் எனக்குச் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் வழங்கியிருக்கக் கூடிய அந்த உரிமைகளின் அடிப்படையிலேயே இங்கே நான் பேச விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில் வழக்கறிஞர்என்ற ஒரு கடமையும் சட்டமன்ற உறுப்பினர் என்ற ஒரு கடமையும் இருக்கிருக்கிறது. அரசியல் சட்டம் 194;வது பிரிவு அளித்துள்ள அந்த உரிமைகளின் அடிப்படையிலேயும் அது விதித்துள்ள சில கட்டுப்பாடுகளையும் மனதில் கொண்டே நான் பேச விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இங்கே கூட்டுறவுத் துறையில் காலை முதல் பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழ்நாடு கூட்டுறவு நுகர்பொருள்கழகம் சென்னையிலே இருக்கிறது. அங்கே ரூ. 5 இலட்சத்துக்கு கோதுமை வாங்கப்பட்டு கேட்பாரில்லாமல் கிடக்கிறது. அந்தக் கோதுமை ரூ. 5 இலட்சத்திற்கு வாங்கப்பட்டு கெட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகாலமாக இது அங்கே அப்படியே இருக்கிறது என்று நான் அறிகிறேன்.
அதே போல, 2 இலட்சம் கேஸ்அடுப்புகள் வாங்கப்பட்டு அதே தமிழ்நாடு நுகர்பொருள் கூட்டுறவுக் கழகத்திலே அப்படியே தேங்கியிருக்கிறது என்ற தகவல்........

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நுகர்பொருள் கழக என்ற கழகம் தமிழ் நாட்டிலே இல்லை. I want to know wheathe he referes to the civil supplies corporation



திரு. வி என். என். சோமு :I mean the R. D. C. நான் சொல்கின்ற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனக்கு இருக்கக் கூடிய பலவிதமான வாய்ப்பு வசதிகளைக் கொண்டு விசாரித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் கூறுகிறேனே தவிர நான்அமைச்சரவைமீதோ அல்லது அமைச்சரின் மீதோ அல்லது.........

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த எண்ணத்தோடு நான் சொல்லவில்லை. கூட்டுறவு நுகர்பொருள் என்று சொன்னவுடன், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேரஷன் என்ற எண்ணம் வந்தது. அதற்காகத்தான் சொன்னேன்.

திரு. என். வி. என். சோமு :I mean the R.D.C அதே போல, கேஸ் அடுப்புகள் 2 இலட்சம் வாங்கப்பட்டு இன்றைக்கு விற்காத நிலையிலே இரண்டு ஆண்டுக்காலமாக இருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக, அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதே போல பிளாஸ்டிக் பக்கெட்டுக்கள் 1 இலட்சத்திற்கு வாங்கப்பட்டு அவைகள் விற்கப்படாமல் உள்ளன. இரண்டு ஆண்டுக் காலமாக இந்த நிலைமை இருக்கிறதென்றால் கூட்டுறவுத் துறையிலே ஏற்படக்கூடிய பண விரயத்தை நாம் எப்படி தடுக்கவேண்டுமென்று பல சட்டங்கள் கொண்டு வருகிறோம். All for each each for all கூட்டுறவே நாட்டுயர்வு என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அப்படிப்பட்ட விரயங்களை நீங்கள் தடுத்தால் தான் நாட்டு மக்கள் மத்தியிலே, கூட்டுறவுப் பற்றிய ஒரு நல்ல எண்ணம் உருவாகும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல, கூட்டுறவுத் துறையிலே பணி புரிகின்ற ஊழியர்கள் மிகவும் கஷ்டப்பட்டு பணி புரிகிறார்கள். அவர்களுக்கும் இந்தக் குடும்ப நலத் திட்டம், அதாவது பணியாற்றும்போது இறந்து விட்டால், ரூபாய் 10,000 அளிக்கக் கூடிய அந்தத் திட்டத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினால், அந்தக் கூட்டுறவுத் துறை ஊழியர்கள் எல்லாம் அமைச்சரை வாழ்த்துவார்கள் என்று தெரிவித்து, அதைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறைத் துறையைப் பொறுத்தவரையிலும் என்னுடைய நண்பர் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் கூறியது போன்று, சிறைச் சாலையிலே செய்திப் பத்திரிகைகள் வாங்குவதிலே கூட எதிர்க்கட்சிப் பத்திரிக்கைகள் ஒன்றுகூட இல்லை. நாங்கள் பல முறை சிறை சென்றிருக்கிறோம்.

சென்ற ஆண்டு சிறை சென்ற பொழுதுகூட எங்களுக்கு அதிகாரப் பூர்வமாக எங்கள் கட்சிப் பத்திரிகைகள் கிடைக்கவில்லை ; மற்றத் தோழமைக் கட்சிகளின் பத்திரிகைகள் கிடைப்பதில்லை. குறிப்பாக முரசொலி, தினகரன், எதிரொலி போன்ற பத்திரிகைகளும், மற்ற எந்தப் பத்திரிகைகளும் கிடைப்பதில்லை. நான் சொல்வது உண்மை. ஆகவே, நாளைக்கேகூட அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலித்து இந்தக் குறைபாட்டை நீக்குவார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

[இரவு 6.50]

நீதிமன்றத்தைப் பற்றி நாம் இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஒரு இடிகன்மெண்டாலிட்டி வழக்காடும் மனப்பான்மையிலே இருந்து கொண்டிருக்கிறது. எதற்கெடுத்தாலும், ஏதாவது ஒரு தீர்ப்பைச் சொன்னால், அந்தத் தீர்ப்புக்குக் கட்டுப்படுகின்ற எண்ணத்தோடு இல்லாமல், அதை எதிர்த்து அப்பீல் செய்கின்ற மேல்முறையீடு செய்கின்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டு இருப்பதால் குடிமக்கள் எவ்வளவு பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப்பற்றி ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்திலே எங்கள் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நாங்களும் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

சேலம் மாவட்டத்தில் முனுசாமி செட்டி என்பவர் சுரங்க குத்தகையைப் புதுப்பிக்கக் கொடுத்த மனுவை நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும் அரசு நிராகரித்ததன்பேரில் நீதிமன்றம் சென்றார் 1981-ஆம் ஆண்டில், அந்த வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி இராமானுஜம் தீர்ப்பு கூறுகையில், ஐகோர்ட் ஜஸ்டிஸ் இராமானுஜம், '' மனுதாரர் மூலைக்கு மூலை இந்த அரசின் முரட்டுத்தனமான பிடிவாதம் காரணமாக, அலைக்கழிக்கப்படுகிறார். இந்த அரசு, நீதிமன்றம் அளித்த முதல் ஆணையைப் புறக்கணித்திருக்கிறது. சட்டத்தின் ஆட்சி இந்த அரசால் காற்றிலே பறக்க விடப்பட்டிருக்கிறது. அரசாங்கமே நீதிமன்ற உத்தரவைப் புறக்கணித்து அலட்சியமாக நடந்து கொள்ளுமேயானால் நாட்டின் குடிமகன் நீதிமன்றத்தைப் புனிதமாகக் கருதுவதிலேயிருந்து விலகிப் போய் விடுவான். அரசின்போக்கு, நீதிமன்றத்தின் கண்ணியத்தையே குலைக்கிறது. இந்தக் காரணங்களால் இந்த அரசு குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டு இந்த நீதிமன்றத்தின் 26—11—1981-ஆம் தேதியிட்ட உத்தரவைப் புறக்கணித்து அவமதித்த குற்றத்திற்காக இரண்டு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது '' என குறிப்பிட்டார் நீதிபதி இராமானுஜம் அவர்கள். இதை எங்கள் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் சுட்டிக் காட்டிப் பேசியபோது, உடனே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்த அபராதம் [illegible]



ஒப்புக்கொண்டு பேசியதோடு, அந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப் போவதாகவும், அப்பீலில் வரும் தீர்ப்பை ஒட்டி அரசு என்ன செய்ய வேண்டுமென்பதை முடிவு செய்யும் என்றும் கூறினார். ஆனால் நடந்தது என்ன ?

கன்டெம்ட் அப்பீல் போட்டார்கள், கன்டெம்ட் அப்பீல் 2 ஆஃப் 82, நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் மேல் முறையீடு எண். 2, 82-ஆம் மனு 2-வது முறையீடு எண். 13—3—1983 என்று அதைப் போட்டார்கள். அந்த வழக்கு, மாண்புமிகு நீதிபதிகள் கோகுலகிருஷ்ணன், இரத்தினம் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்பு 20—4—1983 அன்று அந்த வழக்கு நீதிபதிகள் பாலசுப்பிரமணியம், பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வருகிறது. அப்பொழுது அட்வகேட்-ஜெனரல் எழுந்து, அரசாங்கம் செய்த அப்பீலை வாபஸ் பெற்றுக் கொள்கிறார். தீர்ப்பை அப்பீல் செய்திருக்கிறோம். இரண்டாயிரம் ரூபாய் அபராதத்தை நாங்கள் எப்படியும் ரத்து செய்து விடுவோம் என்று சொல்லி, அந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்கிறார்கள், பாலசுப்பிரமணியம், பத்மநாபன் ஆகிய இரண்டு நீதிபதிகளும், வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வதாக அட்வகேட் ஜெனரல் சொல்கின்ற காரணத்தால் இட் இஸ் டிஸ்மிஸ்ட் ஆஸ் வித்ட்ரான். அது திரும்பப் பெற்றுக் கொள்ளும் நிலையில் அந்த வழக்கு டிஸ்மிஸ் செய்யப்படுகிறது என்று ஒரு தீர்ப்பையும் அளித்து, பிறகு மாண்புமிகு நீதிபதி இராமானுஜத்திடம் அரசாங்கம் வருகிறது. அங்கே ஒரு ரெவ்யூ போட்டார்கள் ; மறுபரிசீலனை மனு போட்டு, முனுசாமி செட்டி கேட்ட இருபதாண்டு ஒப்பந்தத்தை, குத்தகையைத் தருகிறோம், தயவு செய்து இரண்டாயிரம் அபராதத்தை ரத்து செய்யுங்கள் என்று மனுப்போட்டு பிரச்சினையை முடித்துக் கொண்டது.

நான் கேட்கிறேன், அன்றைக்கு மார்தட்டிப் பேசினீர்கள் அப்பீல் செய்யப்போகிறோம் என்று. ஆனால் இது அப்பீல் அல்ல ; அப்பாலஜி, இந்த அப்பாலஜியை செய்ய வேண்டாமென்றுதான் அன்றைக்கே சொன்னார்கள் எதிர்க்கட்சித் தலைவரவர்கள். இதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல இன்னொரு பெரிய முறைகேடு, 1979-ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரி தேர்வு சம்பந்தமாக ஒரு மாணவர் வழக்குத் தொடர்ந்தார். அதில் நீதிமன்றத்திற்குத் தரப்பட்ட அரசின் ரெக்கார்டுகளில் தேதி திருத்தப்பட்டிருந்த மோசடியை நீதிபதிகள் இராமசாமி, இரத்தினம் ஆகியோர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஐ கோர்ட் ஜஸ்டிஸ் இராமசாமி அன்ட் ஜஸ்டிஸ் இரத்தினம் '' இந்த நீதிமன்றத்தைத் தவறாக வழி நடத்தும் திட்டவட்டமான நோக்கத்தோடுதான் இதைச்செயல்படுத்தினார்

கள் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை. இலாக்கா பூர்வமாக நடவடிக்கை எடுக்க இந்த விவகாரத்தைத் தன்னிடம் விட்டு விடும்படி அறிவார்ந்த அட்வகேட்-ஜெனரல் கேட்டுக் கொள்வதால் நாங்கள் இதற்குமேலும் ஏதும் சொல்லாமல் விடுகிறோம். சம்பந்தப்பட்டவர்கள் மீது தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் பொறுப்பை அரசிடம் விடவும் செய்கிறோம்'' என்று மாண்புமிகு நீதிபதிகள் இராமசாமி அவர்களும், இரத்தினம் அவர்களும் 1979-ஆம் ஆண்டு தீர்ப்பளித்தார்கள். உயர் நீதிமன்றத்திலே தரப்பட்ட, தேதியைத் திருத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம் என்று அட்வகேட்-ஜெனரல் உத்தரவாதம் அளித்தார் நீதிமன்றத்தில். அதற்காக மேலும் சொல்லாமல் விடுகிறோம் என்று அவர்கள் தீர்ப்பளித்தார்கள். ஆனால் அவர்கள் மீது இன்றுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? தேதியைத் திருத்தியது யார்? கண்டு பிடித்தார்களா? இப்படி நீதிமன்றத்தை திவச திருப்பியது யார்? அதைக் கண்டு பிடித்தார்களா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அமைச்சரவர்கள் அதை அருள்கூர்ந்து தெரிவிக்க வேண் மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு அமைச்சரவர்கள் சொன்ன அந்தக் குறிப்பில், நீதிமன்றங்களில் 1981-ஆம் ஆண்டு 8,897 ரிட் மனுக்கள் தேக்கமாக இருக்கின்றன. நான் அதனுள்ளே நுழைய விரும்பவில்லை. கடைசி பாராவில் அமைச்சரவர்கள் சொல்லும்போது,

However, in Sub-Courts there is decrease in disposal of Civil suits during the yea 1982 when compared with that of the number of cases during the yea. 981

என்று அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள்.

உயர்நீதிமன்றத்தில் 1980ஆம் ஆண்டில் 8,897 வழக்குகள் தேக்கம் அடைந்திருக்கின்றன. எவ்வளவு பேர்கள் பாதிக்கப்படுவார்கள்? 1981ஆம் ஆண்டில், 12,305 வழக்குகள் தேங்கியிருக்கின்றன. 1982ஆம் ஆண்டில் 18,969 வழக்குகள் தேக்கமடைந்திருக்கின்றன. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படி தேக்கங்கள் இருந்தால், உயர்நீதிமன்றம், மற்ற நீதிமன்றங்களுடைய நீதி பரிபாலனம் என்ன ஆவது? இதைப்பற்றி பொறுப்பிலுள்ள அமைச்சரவர்கள் அதை விட்டுவிட்டு, வேறு எதிலோ கவனத்தில் கொண்டிருக்கிறார்கள் என்ற வருத்தம்தான் எனக்கு. சென்னை உயர்நீதிமன்றத்தில் 5 நீதிபதிகள் பதவி காலியாக இருக்கின்றன. அதுவும் பல ஆண்டுகளாக காலியாக இருக்கின்றன. நீங்கள் யாரை வேண்டுமானாலும் நியமியுங்கள். இப்படி காலியாக இருக்கின்ற காரணத்தால், வழக்குகளில் தேக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.



நம்முடைய விவர அறிக்கையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நீதிபதிகளின் வசதிக்காக இரண்டு சேஸிஸ் வாங்கியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அவை உயர்நீதிமன்றத்திலே இருக்கின்றன. எம்.எஸ்.க்யூ. 8189, 8285. இந்த இரண்டு பஸ்களுக்கும் அரசாங்கம் டிரைவர்களை தேர்ந்தெடுக்காத காரணத்தால் பல நாட்களாக தும்பு தூசி படிந்து, கண்ணாடிகள் தூக்கப்பட்டு, நவராத்திரி கொலுப் பொம்மைபோல் உயர்நீதிமன்றத்திலே பக்கத்துப் பக்கத்திலே நிற்க வைக்கப்பட்டிருக்கின்றன. கேட்பாரற்று இருக்கின்றன. இவைகளை கொடுத்து என்ன? கொடுக்காவிட்டால் என்ன? இவை இரண்டையும் நீதிமன்றத்திற்கு டிரைவர் இல்லாது கொடுத்த காரணத்தினால், 'இட் இஸ் கன்டேம்டு தேர்' என்ற நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் பேசும்போது மொழி தெரிந்தவர்களாக நீதிபதிகளை அமர்த்த வேண்டுமென்று அழகாகக் குறிப்பிட்டார்கள்.

தீர்ப்பு திரட்டு என்ற நூல் மாதந்தோறும் நீதிமன்றத்தின் மூலமாக வெளியிடப்படுகிறது. இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பாகஅந்த நூலுக்கு நீதிபதி தான் ஆசிரியராக இருந்தார்கள். ஆனால் தற்பொழுது பெல்லி என்ற ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு தாய்மொழி தமிழல்ல. தீர்ப்பு திரட்டு என்ற நூல் வருவது தமிழில்தான். பிறகு யார் யாரை நீங்கள் போட்டிருக்கிறீர்கள்? ஆக தமிழ் தெரியாத ஒருவரைப் போட்டிருக்கிறீர்கள். ஆகவேதான் இப்படிபட்ட தவறு ஏற்பட்டிருக்கிறது. தமிழ் தெரிந்த நீதிபதிகள் பலர் இருக்கும் பொழுது, அவர்களை நியமிக்க ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, தீர்ப்பு திரட்டு என்ற நூலுக்கு ஆசிரியராக தொடர்ந்து வருகின்றவர்கள் 2, 3 ஆண்டு காலமாக இருந்தால் தான் உருப்படியான காரியம் ஏதாவது செய்யமுடியும். ஆகவே அவரை சாதாரண டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், மாஜிஸ்டிரேட் போன்றவர்களைப்போல அவ்வப்போது மாற்றினால் எங்கே செல்வது, நீதி எங்கே செல்கிறது? என்பதைத் தான் நான் கேட்க விரும்புகிறேன்.

சென்னையிலே 3,000 வழக்கறிஞர்கள் உருவாகியிருக்கிறார்கள். ஒவ்வொரு புதன்கிழமையும் பார்த்தால் குறைந்தபட்சம் 50 வழக்கறிஞர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் பல்லாயிரக் கணக்கான வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். சென்னையிலே தொழில் புரியக் கூடிய 3,000 வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் இருக்கிற அறைகளோ 200 தான். அது போதுமா? இதை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாமா? ஒரு வழக்கறிஞர் இன்னொரு வழக்கறிஞரோடு ஒண்டிக்

குடித்தனம் இருந்து பிராக்டீஸ் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. அதே போல் மாவட்ட நீதிபதிகள் முதல் தரம் இரண்டாம் தரம் நீதிபதிகளாக அமர்த்துவதில் குழப்பம் ஏற்படுகிறது. பதவி உயர்வை சீனியாரிட்டி அடிப்படையில் கொடுத்தால், ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது.

(இரவு 7—00).

சில நேரங்களில் மூத்த நீதிபதிகளைவிட இளைய நீதிபதிகளுக்கு தனிப் பொறுப்பு கொடுக்கப்படுகிறது. இன்டிபென்டன்ட் சார்ஜ். அப்படிக் கொடுக்கிறபோது பல சங்கடங்கள் நேருகின்றன. அதையும் தவிர்க்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இன்று காலை முதல் பல நண்பர்கள் சொன்னார்கள், டைரக்டர் ஆப் பிராசிகியூசன் அமைக்கவேண்டுமென்று. இதற்கு உதவி பப்ளிக் பிராசிகியூட்டர்கள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்சப்படுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் கலெக்டர். கலெக்டராக இருப்பவர்களுக்கு சட்டம் நன்றாகத் தெரியும். நான் இல்லை என்று சொல்லவில்லை. அவர்கள் ஐ.ஏ.எஸ். எழுதுகிறபோது சிலபல சட்டத் தேர்வுகளையும் எழுதிவிட்டுத்தான் வரவேண்டுமென்ற முறையிருக்கிறது. ஆனால் ஒரு டைரக்டர் ஆப் பிராசிகியூசன் என்று வைத்து அந்த வழக்கறிஞர்கள் துறையிலே தேர்ச்சி பெற்ற ஒருவரை அதற்கு தலைவராக நியமித்து அவர்கள் மூலமாக பதவி உயர்வுகளைக் கொடுத்தால், இதிலே லீகல் கன்ட்ரோல் அதாவது சட்டத்தினுடைய கட்டுப்பாடு அங்கே வரும். தவறுகளைத் தடுக்கலாம். மற்ற மாநிலங்களில்கேரளா,கர்நாடகா மற்றும் ஆந்திராவிலேஇதைப் போலவே டைரக்டர்ஆப்பிராசிகியூசன்என்று இருப்பதாகநான்கருதுகிறேன். அதையும் கூட நீங்கள் இங்கே அமுலுக்குக் கொண்டு வரலாம்.

அடுத்து, சென்ற 2 ஆண்டுகளுக்கு முன்னால் 108 உதவி, பப்ளிக் பிராசிகியூட்டர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெற்றது. ஆனால் இன்றுவரை ஒருவர்கூட நியமனம் செய்யப்படவில்லை. தேர்வு நடைபெற்று அப்படியேதான் இருக்கிறது. இன்னும் அவர்கள் இன்டர்வியூ நிலைமையிலே தான் இருக்கிறார்கள். அதையும் கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புதிதாக உருவாக்கப்பட்ட முன்சீப் கோர்ட்டுகளில் டைபிஸ்ட் கிடையாது. ஒரே ஒரு சுருக்கெழுத்தாளர் தான் இருக்கிறார். அவர் நீதிமன்றத்தின் மற்ற சாதாரண அதிகாரபூர்வமான வேலைகளையும் அந்த ஸ்டெனோதான் செய்யவேண்டும். அதைச் செய்துவிட்டு, இந்த ஒரிஜினல் ஆர்டரை அடிக்கவேண்டியவர், இந்த மூலத் தீர்ப்பை அடிக்க வேண்டியவர் இந்த டைபிஸ்ட் ஒருவர்தான் அடிக்கவேண்டும். ஆக இப்படி முரண்படுகிற காரணத்தால் நீதிமன்றத்திலே தீர்ப்புகளைப் பெற்றுக்கொண்டு சாதகமாக தீர்ப்பு இருந்தால் பரவாயில்லை, காலதாமதமாகப் பெற்றுக்கொள்ளலாம்,



பாதகமான தீர்ப்பினால் பாதிக்கப்படுபவர்கள் மேல் முறையீட்டுக்குச் செல்லவேண்டுமானால், அதிகாரபூர்வமான தீர்ப்புக் கிடைத்தால்தான் மேல் முறையீட்டுக்குச் செல்லமுடியும். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும்போது ஒரே ஒரு ஸ்டேனோ முன்சீப் கோர்ட்டிலே உட்கார்ந்துக்கொண்டு அவர், ஜட்ஜ் சொல்லுகின்ற வேலைகளையும் செய்யவேண்டும், நீதிமன்றத்தின் மற்ற வேலைகளையும் செய்துகொண்டு அதையும் அவரே அடிக்கவேண்டும். இதிலே ஏற்படக்கூடிய கால நேரங்களையும் இதிலே ஏற்படக்கூடிய தாமதங்களையும் கவனித்து நல்ல முறையிலே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முன்சீப் கோர்ட்டுகளின் அதிகார வரம்பை அண்மையிலே ரூபாய் 4 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரத்திற்கு உயர்த்தினார்கள். 5 ஆயிரத்தில் இருந்து 15 ஆயிரத்திற்கு உயர்த்துகின்ற நேரத்தில் பல வழக்குகள் டிஸ்ட்டிரிக்ட் முன்சிப் கோர்ட்டுக்கு Opening the flood ates என்று சொல்வதுபோல் பல வழக்குகள் அங்கே வந்து குவிந்து விடுகின்றன. அப்படி குவிகின்ற நேரத்திலே வழக்குகளுடைய அதிகார வரம்பை உயர்த்துகின்றவர்கள் அங்கே போதுமான ஊழியர்களைக் கொடுத்தார்களா, அதையும் புரப்போர்சனேட்டிலே அதிகரித்தார்களா என்றால் நிச்சயமாக அதிகரிக்கவில்லை. அதனால் பல குந்தகங்கள் ஏற்படுகின்றன என்பதை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதேபோல் குற்றவியல் நீதிமன்றங்களில், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளிலே பணியாற்றுபவர்களுடைய பெயர் எம்.சி. என்று சொல்வார்கள். தங்களுக்குத் தெரியும். மாஜிஸ்ட்ரேட் கிளார்க் என்று சொல்வார்கள். டிஸ்ட்டிரிக்ட் முன்சிப் கோர்ட்டிலே பணியாற்றுகின்றவர்களுக்கு பி.சி. அதாவது பெஞ்ச் கிளார்க் என்று சொல்வார்கள். ஆனால் இந்த பி.சி.-க்கள் எல்லாம் ஜூனியர் அசிஸ்டென்ட், இளநிலை உதவியாளர்கள், எம்.சி. என்று சொல்லுகின்ற மாஜிஸ்ட்ரேட் கிளார்க்குகள் எல்லாம் இளநிலை உதவியாளர்கள் அல்ல. ஏன் இப்படிப்பட்டதாரதம்மியம்என்று நான் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். இதனால்பதவி உயர்வு பல பேர்களுக்கு பாதிக்கப்படுகிறது. அதை நீக்கவேண்டும். இப்படி நீக்கி எல்லோரையும் எம். சி., பி.சி. இரண்டு பேர்களையும் நீங்கள் ஜூனியர் அசிஸ்டென்ட் என்று சொல்லி, தரத்தை உயர்த்துகின்ற காரணத்தால், அரசாங்கத்திற்கு எந்தப் பணச் செலவும் ஏற்படாது. ஏன் என்றால் அவர்கள் ஒரு சாச்சுரேசன் பாயின்ட் என்று சொல்வார்களே, மாக்சிமம், தங்களுடைய சம்பளத்தின் உச்சகட்டத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

அடுத்து, இலவச சட்ட உதவி பற்றி நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு மிகமிகத் தேவை. நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. சில அதிகாரிகள் ஒத்துழைப்புத் தர மறுக்கின்ற காரணத்தால் இலவச சட்ட உதவி என்பது எட்டிக் காயாகப் போய்விடுகிறது. அதிகம் நில ஒதுக்க மனுக்கள்தான் இன்றைக்கு இலவச சட்ட உதவி கோரி வந்துகொண்டிருக்கின்றன. இதற்கு போலீஸ் துறையும் ஒத்துழைக்க வேண்டும். ரெவின்யூ துறையும் ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைத்தால்தான் இந்த இலவச சட்ட உதவிக்கு அர்த்தம் இருக்க முடியும். அதோடு, மட்டுமல்லாமல், அரசாங்கம் இலவச சட்ட உதவிக்கு பணம் வழங்குகிறது. அதிலும்கூட ஒரு பாரபட்சம். சில இலவச சட்ட உதவிகளுக்குத்தான், சில வகையான வழக்குகளுக்குத்தான் அரசாங்கம் பணம் கிடைக்கிறது. வேறு வகையான வழக்குகளுக்கு அரசாங்கத்தினுடைய பணம் கிடைப்பதில்லை. அதிலேகூட ஏன் பாரபட்சம்? அதை நீங்கள் போக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், விழுப்புரத்தில் ஒரு வழக்கறிஞர். இ. தட்சிணாமூர்த்தி என்பவர் அந்த வழக்கறிஞர். அவர்கள்தான் டியூட்டி கவுன்சில். இப்போது லீகல் எய்ட். இலவச சட்ட உதவி செய்யக்கூடியதற்கு அவர்கள்தான் வழக்கறிஞர்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

சப் ஜெயில் உள்ளே சென்று பார்வையிட அவருக்கு அதிகாரம் இருக்கிறது. 21—3—1983 அன்றைக்கு அந்த தட்சிணாமூர்த்தி என்ற வழக்கறிஞர் சப்ஜெயிலுக்கு உள்ளே சென்று பார்வையிடச் சென்றார். அங்கே டி. டி. என்று சொல்லக்கூடிய டிப்டி தாசில்தார் அதனுள்ளே அனுமதிக்கக் கூடிய பொறுப்பிலே இருக்கிறார். அவர் இந்த வழக்கறிஞரை உள்ளே அனுமதிக்க மறுத்து விட்டார். பலமுறை எடுத்துச் சொல்லியும், டியூட்டி கவுன்சிலின் கடமை உள்ளே சென்று பார்வையிட்டு, மனுக்களைப் பெற்றுக்கொள்வது, அதற்கு அவருக்கு உரிமையிருக்கிறது என்று அந்த வழக்கறிஞர் சொல்லியும் டிப்டி தாசில்தார் ஒப்புக் கொள்ளவில்லை. அதற்குப் பின்னாலே அந்த வழக்கறிஞர் மாவட்ட துணைநீதிபதிக்கு ஒரு மனுவை 22-3-1983 அன்று கொடுத்திருக்கிறார். அது 24—3—1983 அன்று ஐ.ஜி. ஆப் பிரிசன்ஸ் மற்றும் பலருக்கு எழுதி இருக்கிறார்கள். இன்று வரை எந்தவிதமான நடவடிக்கையும் அதன்மேல் எடுக்கப்படவில்லை. (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் 20 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள், முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. என். வி. என். சோமு : ஐ ஹாவ் அல்மோஸ்ட் கம்டு மை கன்க்ளூஷன்.



இப்படி வழக்கறிஞர் ஒருவர் தன்னுடைய கடமையைக் கூட செய்ய முடியாமல் தடுக்கின்ற அந்த தவற்றினை, துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்கு மிக மிகக் கடுமையான நடவடிக்கையைஅரசாங்கமும், அமைச்சர்அவர்களும் எடுக்க வேண்டுமென்று நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலிலே சொன்னதைப் போல இந்த அரசாங்கம் லிட்டிகன்ட் மென்ட்டாலிட்டி என்ற வழக்காடும் மனப்பான்மையை விட்டுவிட வேண்டுமென்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப் பல குறைபாடுகள் நீதி பரிபாலனத்திலே இருக்கின்றன. நமக்கு நிர்ணயிக்கப்பட்ட, வரையறுக்கப்பட்ட உரிமைகள் எவ்வளவு என்பதையும், நமக்கு இருக்கக்கூடிய கடமைகள் எவ்வளவு என்பதையும் நாம் உணர்ந்து கொண்டு பேசினோமானால் எந்தக் குழப்பத்திற்கும் நாம் ஆளாக வேண்டிய அவசியம் இல்லை, என்பதை தங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கே. கல்லன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர் சோமு அவர்கள் பேசுகிறபோது திரு. பெல்லி என்ற நீதிபதியைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் 1-ம் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு வரை தமிழில்தான் பயின்றவர்கள். அவருக்கு தமிழ் நன்றாகத் தெரியும். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தான்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதிபதி திரு. பெல்லி அவர்கள் மீது எனக்கு நிரம்ப மதிப்பு உண்டு. ஆனால் ' கேஸ் லா ' வை தமிழில் எழுதுவதற்கு தமிழ் தெரிந்தால் மட்டும் போதாது. பட்டம் பெற்றவர்களை எல்லாம் நியமிக்க முடியாது. எத்தனையோ எம்.ஏ., பி.எல். படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நியமிக்கமுடியாது. அந்த ரிப்போர்ட்களை தமிழிலே கொண்டு வருவதற்கு நல்ல தமிழார்வமும், தமிழறிவும்மட்டுமல்ல வழக்கறிவும், வரலாற்று அறிவும் இருந்தால்தான் நன்றாக இருக்கும். அதைத்தான் நான் சொன்னேன்.

(இரவு 7—10.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்மொழிந்த மூன்று மானியக் கோரிக்கைகளின் கீழும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறார்கள். சில நல்ல ஆலோசனைகளையும் வழங்கி இருக்கிறார்கள். குறிப்பாக, நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும், நான் அதன்

உள்ளே சென்று விளக்குவதற்கு முன்னால் ஒன்றைமட்டும் தெளிவாக்க விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், நாட்டிலே உள்ள எல்லா குடிமக்களுக்கும் பாரபட்சமின்றி நீதி கிட்டியாக வேண்டும். பணக்காரர்களுக்கு ஒரு நீதி, ஏழைகளுக்கு ஒரு நீதி என்ற நிலை இல்லாமல் அனைவருக்கும் நியாயமான முறையில் நீதி கிட்டியாக வேண்டும் என்ற முறையில் மிக அக்கறையோடு உள்ள அரசாக இந்த அரசு இருக்கிறது. இந்தக் கட்டுக்கோப்பை ஏற்படுத்த வேண்டும் என்று இருந்தபோதிலும், நீதித்துறையைப் பொறுத்த வரைக்கும், தன்னிச்சையாக, அரசின் தலையீடு இல்லாமல், நீதி பரிபாலனம் இயங்குகிறபோது செம்மையான முறையில், சிறப்பான வகையில் நீதியைக் கிட்டச் செய்யும் என்ற முறையில் இந்த அரசுக்கு நம்பிக்கை இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் நாங்கள் பிரச்னைகளை அணுகுகிறோம் என்பதை முதற்கண் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு சாதாரண அட்ஜர்ன்மென்ட் கேசாக இருந்தாலும் கூட, நீதி நிர்வாகத்திலே தலையிட்டு, அரசு சார்பிலே தலையீடு செய்து, அங்கே ஒரு காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணுகிறபோது அதனால் பலன் பெறுகிறவர்கள் சிலர் என்று இருந்தபோதிலும், பாதிப்புக்குள்ளாகிறவர்கள் குறிப்பாக நலிந்த பிரிவினர், சாதாரண மக்கள் என்று உணர்ந்த முறையில் தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதித்துறையைப் பொறுத்தவரையில், தன்னிச்சையாக— நான் ஏற்கனவே சொன்னதைப்போல—இன்டிபென்டென்ட் ஆப் ஜுடிஷியரி இயங்க வேண்டும் என்பதிலே நாங்கள் மிகுந்த அக்கறையோடு இருக்கிறோம் என்பதை அரசின் சார்பிலே நான் அவைக்கு மீண்டும் கூறிக்கொள்ள விழைகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், இங்கே தற்போது இருக்கும் நீதிமன்றங்களின் எண்ணிக்கை குறிப்பாக கீழ் மட்டத்தில் இருக்கும் நீதிமன்றங்களின் எண்ணிக்கை போதாது என்பதை 1975 ஆம் ஆண்டு நீதிமன்றங்களின் வரம்பு குறித்து பரிசீலனை செய்து, பரிந்துரைகளைச் செய்த குழு தெரிவித்த தன் அடிப்படையில், புதிதாக 28 சிவில் நீதிமன்றங்களையும் 27 குற்றவியல் நீதிமன்றங்களையும தமிழகத்தில் அமைக்க வேண்டும் என்று பரிந்துரை செய்ததின் அடிப்படையில், அரசுக்கு அவர்கள் சொன்னதன் அடிப்படையில், கடந்த பல ஆண்டுகளாக நாங்கள் நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம். அந்த அடிப்படையில், சிவில் நீதிமன்றங்களைப் பொறுத்தவரைக்கும் 28 சிவில் நீதிமன்றங்கள் அமைக்க வேண்டும் என்ற பரிந்துரையின் அடிப்படையில் 27 இடங்களில் சிவில் நீதிமன்றங்களை நாம்



துவங்கியிருக்கிறோம். அதைப்போலவே 27 இடங்களில் குற்றவியல் நீதிமன்றங்கள் துவங்க வேண்டும் என்று பரிந்துரை செய்ததை ஒட்டி, இதுகாறும் 19 குற்றவியல் நீதிமன்றங்களை நாம் புதிதாகத் துவக்கியிருக்கிறோம். மீதமுள்ள 8 குற்றவியல் நீதிமன்றங்களைத் துவங்குவதுபற்றி உயர் நீதிமன்றத்தின் ஆலோசனைகளை அரசு கேட்டு இருக்கிறது. உயர்நீதிமன்றத்திடமிருந்து அதற்கான செயற்குறிப்புகள் அரசுக்கு வந்தவுடன் அது குறித்தும் நாம் நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல், நாங்கள் ஆட்சிக்கு வந்து, பொறுப்பேற்றுக்கொண்ட $1\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் கிட்டத்தட்ட 28 இடங்களில் புதிய நீதி மன்றங்களை, அதிகப்படியான நீதிபதிகளை ஒதுக்கி நாங்கள் அமைத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜுடிசியல் செகன்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டைப் பொறுத்தவரையில், தற்போது தமிழகத்தில் 143 இருக்கின்றன. அவற்றில் நாம் புதிதாக அமைத்து இருக்கும் நீதிமன்றங்கள் 15. அடுத்த ஆண்டு மேலும் 2 நீதிமன்றங்களை அமைக்க இருக்கிறோம்.

ஜுடிஷியல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் தற்போது 57 நீதிமன்றங்கள் இருக்கின்றன. அவற்றிலே 1978-க்கு முன்னால் இருந்தவை 19. 1978-க்குப் பிறகு இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்தப் பிறகு 38 நீதிமன்றங்களை புதிதாக அமைத்திருக்கிறோம். கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 29 நீதி மன்றங்களை அமைத்து நாம் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, துணைக் கோட்ட நீதித் துறை மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்களைப் பொறுத்த வரையில் 5 நீதி மன்றங்களை அமைத்திருக்கிறோம்

இந்த 5 நீதி மன்றங்களும் கடந்த மூன்றாண்டு காலத்தில் அமைக்கப்பட்டவையாகும்.

டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் அண்ட் கோர்ட் ஆஃப் ஸ்மால் காஸஸ் கோர்ட்ஸ்என்பதைப் பொறுத்தவரையிலும்,இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் 95 இருந்தன. இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 47 புதிய நீதிமன்றங்களை நிறுவி இருக்கிறோம்.

அதைப் போன்று சீஃப் ஜுடிஷியல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் தற்போது இருக்கிற 19 நீதிமன்றங்களில் 5 நீதிமன்றங்கள் இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு அமைக்கப்பட்டிருக்கின்றன.

சப் கோர்ட்ஸைப் பொறுத்தவரையில் 66 நீதி மன்றங்கள் இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் இருந்தன. இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பின்னால் 25 நீதிமன்றங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

அதைப் போன்று டிஸ்டிரிக்ட் செஷன்ஸ், அடிஷனல் டிஸ்ட் ரிக்ட் செஷன்ஸ் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் தற் போது 44நீதிமன்றங்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அவற்றில் 24 நீதி மன்றங்கள் 1978-க்குப் பிறகு இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு நிறுவப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, எக்கனாமிக் அஃபன்செஸ் என்று சொல்லு கின்ற பொருளாதார குற்றங்களை எல்லாம் விசாரிப்பதற்கு இரண்டு புதிய நீதி மன்றங்கள் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த இடத்திலே கூடுதலாக மொபைல் கோர்ட் இரண்டை இன்றைக்கு நாம் நிறுவியிருக்கிறோம். வரும் ஆண்டிலே உரிமையியல் நீதி மன்றங்களைப் பொறுத்த வரையில் சேலத்தி லுள்ள கூடுதல் துணை நீதி மன்றத்தை சங்ககிரிக்கு மாற்றி அதை துணை நீதிமன்றமாக சங்ககிரியில் அமைக்கவும் , வேலூரில் உள்ள கூடுதல் துணை நீதிமன்றத்தை ஆரணிக்கு மாற்றி அதை துணை நீதி மன்றமாக ஆரணியில் அமைக்கவும் , கூடுதல் மாவட்ட முன்சிப் நீதிமன்றம் ஒன்றை இராசிபுரத்தில் அமைக் கவும் , ஒரு கூடுதல் மாவட்ட முன்சிப் நீதி மன்றத்தை மதுரை நகரில் அமைக்கவும் , வாகனங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் குறைக்க ஒரு கூடுதல் நீதிமன்றம் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அது மட்டுமல்ல, குற்றவியல் நீதிமன்றம் (இரண்டாவது வகுப்பு) ஒன்றை பெரியார் மாவட்டத்திலே காங்கேயத்திலும், இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை ஒரத்த நாட்டிலும் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. பெரி யார் மாவட்டம் ஈரோட்டில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு நூல் நிலையமும், மதுரை வடக்கு மாவட்டத்தில் திண்டுக் கல்லில் ஒரு நூலகமும் ஆக இரண்டு நூலகங்களை அமைக்க அரசு தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசும் போது பல இடங்களில் கட்டிடங்கள் இல்லை ; கட்டிடங்களை அமைக்க நிதி வேண்டுமென்ற கோரிக்கையைச் சொன்னார்கள். சுருக்க மாகச் சொல்ல வேண்டுமானால் 1972-லிருந்து 1977 ஆம் ஆண்டு வரையில் நீதி மன்ற கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 76,78,000 ரூபாய்தான். ஆனால் இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு 1980 ஆம் ஆண்டு முதல்நடப்பாண்டு வரையில் ஒதுக்கியிருக்கிற தொகை 3,08,52,000 ரூபாய் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



நிதித் தட்டுப்பாட்டு நிலை இருந்த போதிலும் கூட நீதி மன்றங்களுக்கு கட்டிடம் தேவை, அது இன்றியமையாத ஒன்று என்பதை உணர்ந்த காரணத்தினால் தான் இருக்கிற நிதிப் பிரச்சினை எந்த அளவுக்கு இருந்த போதிலும் நீதிமன்றங் களுக்கு கட்டிடங்களைக் கட்ட நிதி ஒதுக்கி, இந்த நடவடிக்கை களை தற்போது நாம் எடுத்திருக்கிறோம். வருமாண்டில் ஈரோட்டில் 25 வழக்கறிஞர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் அறைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு பேசும் போது கூட உயர் நீதிமன்றத்திலே போதிய இட வசதி வழக்கறி ஞர்களுக்கு இல்லை என்று சொன்னார். சென்ற ஆண்டுதான் அதற்கான நிதியை ஒதுக்கி கூடுதல் அறைகள், 49 அறைகள் என்று கருதுகிறேன், கட்டுவதற்கு புதிதாக தற்போது இருக்கிற அடிஷனல் லா சேம்பர் கட்டிடத்தினுடைய மாடிப் பக்கத்திலும் அடிஷனல் லா சேம்பர் கேரேஜுக்கு முதல் மாடியாகவும் கொண்டு வழக்கறிஞர்களுக்கு அறைகள் கட்ட நடவடிக்கை எடுத்து வரு கிறோம்.

(இரவு 7-20)

ஏற்கனவே உத்தரவிட்ட அந்த உத்தரவின் அடிப்படையிலே மேற்கொள்ளப்பட்டது. அது மட்டும் அல்லாமல் உதகை மண்டலத்திலே உள்ள நீதி மன்றத்தில் 1 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்புச் செலவில் வழக்குரைஞர்களுக்கான தங்கும் அறைகள் கட்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே, திருக்கோயிலூரிலும், திருவாரூரிலும், நாமக்கலில்லும் ஆங்காங்கே கட்டிடங்களை கட்டுவதற்காக வரும் ஆண்டிலே, நடப்பு ஆண்டிலே நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளயிருக் கிறோம். இதிலே ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். 1976 ஆம் ஆண்டு மைய அரசினுடைய சட்டம், 3—1—1977 ஆம் நாள் நடை முறைக்கு வந்தது, அதாவது 42—வது அரசியல் அமைப்புச் சட்டத்தை ஒட்டி, நீதி நிர்வாகத்தைப் பொறுத்த வரைக்கும் Adminis ration of Justice has becn taken to the concur- rent list from the State list. என்பது மாண்புமிகு அவை அங்கத்தினர்களுக்கு தெரியும். அப்படி மைய அரசு கன்கரண்ட் லிஸ்டுக்கு அட்மினிஸ்ட்டிரேஷன் ஆப் ஜஸ்டிஸை எடுத்துச் சென்றதற்குப் பிறகு, நமக்கு இந்த நீதித் துறைக்காக ஒதுக்கி யிருப்பது, இது வரைக்கும் 15 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் தான் என்பதை மட்டும் நான் வேதனையோடு சொல்ல விரும்புகிறேன்.

கோரிக்கைகள் பலவற்றை நாம் கொடுத்த போதிலும் கூட, நீதிமன்றங்களுடைய கட்டிடங்களுக்கு, நீதிமன்றங்களுடைய மேம்பாட்டுக்கு, நீதிபதிகளுடைய நல்ல நிலைமைக்கு உதவி தருகின்ற வகையில் ஒரு நிதி வேண்டும் என்று நாம் கேட்டதற்கு

காரணம், மாநிலப் பட்டியலிலே இருந்த அட்மினிஸ்ட்டிரேஷன் ஆப் ஜஸ்டிஸை, கன்கரண்ட் லிஸ்டுக்கு எடுத்துச் சென்று, மாநில அரசினுடைய அதிகாரத்தை பிடுங்கி விட்ட நிலையிலும்கூட, மாநில அரசுக்கு நிதி ஒதுக்கித் தர, நீதித் துறைக்காக நிதி ஒதுக்கித் தர மைய அரசு தயக்கம் காட்டுகிறது. பல முறை கேட்டும் கூட அவர்கள் அதற்கு செவி சாய்க்காமல் இருக்கின்ற நிலை இருக்கிற காரணத்தாலேதான், நம்மால் நீதிமன்றங்களுக்கு என்று அதிகமான கட்டிடங்களைக் கட்ட முடியாத நிலை இருக்கிறது. 1977 ஆம் ஆண்டிலேயிருந்து, நீதித் துறை மைய அரசுக்கு கன்கரண்ட் லிஸ்டுக்கு சென்று விட்ட பிறகும் கூட, மைய அரசு தீர்மானமாக இதற்காக தனியாக பணத்தை செலவழிக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டு விட்ட பின்னாலும் கூட, அவர்கள் ஒதுக்காத நிலை இருக்கிறது.

நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, 3 கோடியே 4 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாயை மாநில அரசினுடைய நிதியிலிருந்து கட்டிடங்களைக் கட்டுவதற்காக நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்பதைக் கூறிக் கொள்ள விழைகின்றேன். அதைப் போலவே, தற்போது கூட, இது கன்கரண்ட் லிஸ்டிலே இருக்கிற காரணத்தால், மைய அரசினுடைய பொறுப்பு அதிகமான பொறுப்பாக இருக்கிற காரணத்தால், மாநில அரசினுடைய அதிகாரத்தை பிடுங்கி விட்ட பிறகு, இந்த நீதித்துறை சம்பந்தமாக மாநில அரசுக்கு 26 கோடி ரூபாயை ஒதுக்க வேண்டும் என்று பல வகை காரணங்களையும் சொல்லி, நீதித் துறையினுடைய செலவினங்களுக்காக ஒதுக்க வேண்டும் என்று, 8வது நிதிக் கமிஷனிடத்திலே கேட்டிருக்கிறோம். அவர்கள் எந்த அளவிற்கு தருவார்கள் என்று தெரியவில்லை. ஆனால் நாம் வற்புறுத்தி வருகிறோம்.

அது மட்டும் அல்லாமல், இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு, நீதித் துறையிலே வழக்குகளின் தேக்கம் அதிகமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் என்.வி.என்.சோமு அவர்கள் பாலிசி நோட்டிலே குறிப்பிட்டிருப்பதை சுட்டிக் காட்டி என்னிடத்திலே சொன்னார்கள். அதை நான் உண்மையிலே,ஒத்துக் கொள்கிறேன். ஒத்துக் கொண்ட காரணத்தால் தான் பாலிசி நோட்டிலேயே அதை ஒரு தனிப்பட்ட முறையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

1977 ஆம் ஆண்டுக்கு முன்னாலே இருந்த நிலைமையைவிட அதிகமான அளவிலே நீதிமன்றங்களை நாம் பல்வேறு பகுதிகளிலே வைத்து இருப்பதை நான் முன்பே எடுத்துச் சொன்னேன். பல புதிய நீதி மன்றங்களையும், உரிமை இயல் நீதிமன்றமாக இருந்தாலும் சரி, குற்றயியல் நீதிமன்றமாக இருந்தாலும் சரி, நாம் அவைகளைக் கொண்டு வந்ததன் நோக்கம், நீதிமன்றங்களிலே தேங்கிக் கிடக்கின்ற வழக்குகள் விரைவாக முடிவுக்கு வர வேண்டும், ஆகவே [illegible] பார்க்கிற போது, [illegible]



வொரு ஜுரிஸ்டிக்ஷனிலும், Reorganis:tion of the Juriscictio$^{n}$ என்ற முறையிலே தேங்கிக் கிடக்கின்ற வழக்குகள் ஆங்காங்கே பகிர்ந்து அளிக்கப்படுகிறபோது, வழக்குகளின் தேக்கம் குறைந்து மக்கள் வெகு எளிதில், வெகு சீக்கிரத்தில் நீதியை பெற முடியும் என்ற முறையிலேதான், அந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறோம்.

அத்தோடு மட்டும் அல்லாமல், பல்வேறு வழக்குரைஞர்கள் தயார் நிலையில் இல்லாத காரணத்தால், அரசு துறை வழக்குரைஞர்கள் போதிய அளவு இல்லாத காரணத்தால் தான், பல வழக்குகளிலே தீர்வு அளிக்க இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால், தான் இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு, குறிப்பாக மொபசல் என்று சொல்லப்படுகிற கிராமப் புறங்களிலே இருக்கிற அடுத்த பகுதிகளிலே இருக்கிற சிவில் நீதிமன்றங்களுக்கு மட்டும் கூடுதலாக ஒரு 9 வழக்குரைஞர்களை, 9Gov.rnment Pleaders, andfadditional Gove nment Pleaders—Pleaders doing Government work என்று கேட்கிற அடிப்படையிலே நாம் ஒரு 10 இடங்களிலே கூடுதலான வழக்குரைஞர்களை அமர்த்தியிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் வரும் ஆண்டுக்கு மட்டும் இன்னும் 13 வழக்குரைஞர்களை கூடுதலாக மாவட்டப் பகுதிகளில் நியமித்து அதன் மூலமாக வழக்குகளின் தேக்கத்தைப் போக்கத் தற்போது நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதைப் போலவே மாவட்டப் பகுதிகளில் இருக்கின்ற கிரிமினல் வழக்குகளைப் பொறுத்த வரையில் தேக்கம் இருக்கக்கூடாது என்பதற்காக புதிதாக இந்த அரசு பொறுப்புக்கு வந்தபிறகு ஏற்கெனவே இருந்த 16 பப்ளிக் ப்ராசிக்யூட்டர்கள் என்ற எண்ணிக்கையை மாற்றி 17ஆக ஆக்கியபோதிலும் அடிஷனல் பப்ளிக் ப்ராசிக்யூட்டர்கள் என்ற அளவிலே 29 பேர் இருந்த நிலைமையை மாற்றி அங்கே கூடுதலாக 8 பேரை நியமித்திருக்கிறோம். வரும் ஆண்டிலே கூடுதலாக 6 பப்ளிக் ப்ராசிக்யூட்டர்களையும் 3 அடிஷனல் பப்ளிக் ப்ராசிக்யூட்டர்களையும் 10 அஸிஸ்டன் பப்ளிக் ப்ராசிக்யூட்டர்களையும் நாம் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு அவர்கள் பேசும்போது ஏ.பி.பி. தேர்வு முடிந்த பிறகும் கூட இன்னும் பல இடங்களில் நியமனம் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் 109 ஏ.பி.பி.-க்கள் இருந்தார்கள். ஆனால் 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு குறிப்பாக 1980 ஆம் ஆண்டிற்குப் பிறகு நாம் கூடுதலாக ஏ.பி.பி.-க்களை நியமித்து தற்போது 166 ஏ.பி.பி.-க்கள் இதுகாறும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் கூட நாம்

தற்போது எண்ணுவது எல்லாம் பல இடங்களில் அந்த ஏ.பி.பி.க்களாக இருப்பவர்கள் விதிகளின் அடிப்படையில் சட்டப்படிப்பினை முடித்து இரண்டாண்டுக் காலம் முடிந்து விட்டால் போதும் whether they are active practitioners in the court of law or not, that is not taken into consideration at all அப்படி இரண்டாண்டுக்காலம் முடிந்துவிட்டால் போதும், வழக்கு மன்றத்திலே வழக்காடி அனுபவம் பெற்றவர்களாக அவர்கள் இருக்க வேண்டும் என்ற கட்டாயத் தகுதி தேவையில்லை, அவர்கள் ஏ.பி.பி-க்களாக வந்துவிடலாம் என்ற நிலைமை இருக்கின்றது. இதை மாற்றி குறைந்தபட்சம் 5 ஆண்டுக் காலம் அனுபவம் உள்ளவர்களாக இருப்பவர்கள்தான் ஏ.பி.பி. களாக வரவேண்டும், அப்போதுதான் சாதாரண மக்களுக்கு பாதுகாப்பு ஏற்படும், மக்களுக்கு நல்ல முறையில் நீதி வழங்க அந்த ஏ.பி.பி.க்கள் உதவிகரமாக இருப்பார்கள் என்பதற்காகத் தக்க திருத்தத்தைக் கொண்டு வரவேண்டி இருக்கின்றது. அப்படி திருத்தம் கொண்டுவருவதற்காகத்தான் அதிலே தாமதம் இருக்கின்றது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக நீதிமன்றங்களில் கூடுதல் வழக்குரைஞர்களைப் போடக்கூடாது என்ற எண்ணம் இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் இதுகாறும் 109 என்று இருந்ததை 166 என்ற அளவுக்கு நாம் உயர்த்தி இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, உயர் நீதிமன்றத்திலே வழக்குகள் தேங்கிக் கிடப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் எடுத்துச் சொன்னார்கள். உயர் நீதிமன்றத்திலே 5 நீதிபதிகளின் இடம் காலியாக இருக்கின்றது என்று நான் கருதவில்லை, உயர் நீதி மன்றத்தைப் பொறுத்தவரையில் டோட்டால் வேகன்சியாக இருப்பது 4 வேகன்சிதான். அந்த 25 நீதிபதிகள் இடத்தைப் பொறுத்தவரையில் அவற்றில் 24 சாங்ஷன்ட் போஸ்ட். எனவே அதிலே 4 நீதிபதிகளுக்காக இடங்கள்தான் நிரப்பப்பட வேண்டியதிருக்கின்றது. அந்த 4 நீதிபதிகள் என்பது மொத்த இடங்களில் 16 சதவீதம்தான். ஆகவே வழக்குகளின் தேக்கத்தை நீங்கள் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்தப் புள்ளிவிவரத்தை நான் கொடுத்திருக்கிறேன். உதாரணமாக உயர்நீதிமன்றத்தை எடுத்துக்கொண்டால் அப்பீல் ஃப்ரம் தி ஒரிஜினல் சூட் என்ற வகையிலே 11.57 சதவீதம் டிஸ்போஸல் ஆகி இருக்கின்றது. பென்டன்சியில் இருப்பது 88.43 சதவீதம். ஆனால் நீதிபதிகளைக் கூடுதலாகப் போட வேண்டும் என்பதைப் பொறுத்த வரையில் 4 பேர்தான் போட வேண்டும், அது 16 சதவீதம்தான். ஆனால் பென்டன்சியை எடுத்துக்கொண்டால் 88 சதவீதம் இருக்கின்றது. எனவே நீதிபதிகளுக்கான இடங்களை நிரப்பாததது மட்டுமே இந்த பென்டன்சிக்கு காரணம் இல்லை என்பதை எல்லோரும் உணரவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்லிக்கொள்கிறேன்.



அடுத்து பலவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன. நீதித் துறையினைப் பொறுத்த வரையில் அவர்களுக்குச் சில வசதிகள் செய்து தரவேண்டும் என்ற நோக்கத்தோடு ஜிராக்ஸ் காப்பி மெஷினை தரவேண்டும் என்ற உத்தரவை இட்டு சென்ற ஆண்டு நீதிமன்றத்திற்குத் தந்திருக்கிறோம். இப்படி பல்வேறு ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து நீதித் துறையில் வசதிகளைப் பெருக்க வேண்டும் என்று நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்

(இரவு 7-30)

அதைப்போலவே பல்வேறு வழக்குகளை எடுத்துக்கொள்வோமானால் ஒரிஜினல் சைடு, அப்பீல் சைடு என்று இருக்கிறது. அப்பீல் சைடை எடுத்துக் கொண்டால் pending is 76 percent. 15.18 is the percentage of diposal. But pendency is 84.82 per cent. இப்படி நாம் கணக்கிட்டுக்கொண்டு போனால் தேய்ந்த நிலையில் இருக்கின்ற வழக்குகளுடைய சதவீதம் மிக அதிகமாகி இருக்கிறது. அதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் மாநில அரசு மட்டும் அல்லாமல் மைய அரசும் இதில் அக்கறையாக இருக்கிறது. அதற்கு அவர்கள் கூட ஒரு கமிஷனை போட்டு ஆய்வு செய்து எப்படி இந்த பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என்பதற்காக தற்போது ஆராய்ந்து வருகிறார்கள். உயர்நீதி மன்றமும், மாநில அரசும் அவ்வப்போது இது குறித்து கலந்து பேசி இந்த பெண்டென்சியை குறைப்பதற்கான வழிவகைகள் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் பேசி அரசு அதனுடைய நிதி அதிகாரத்திற்கு உட்பட்டு பல நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்து வருகிறது. மற்றும் உயர்நீதி மன்றத்தை எடுத்துக்கொண்டால் தற்போது இருக்கின்ற அடிஷனல் கவர்மென்டு பிளீடர் இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் ஒருவர்தான் இருந்தார். ஆனால் தற்போது நாம் அடிஷனல் கவர்மென்டு பிளீடராக 3 பேரை போட்டிருக்கிறோம். கவர்மென்டு அட்வேகேட் என்ற முறையில் முன்பு யாரும் இல்லை. தற்போது 8 பேரை புதிதாக போட்டிருக்கிறோம். Special Government Pleader என்ற முறையில் ஒருவரை போட்டிருக்கிறோம். புதிதாக வருகின்ற ஆண்டு லேண்டு அக்யுசேஷனுக்காக ஒரு அடிஷனல் கவர்மெண்டு பிளீடரையும், அது மட்டும் அல்லாமல் லேண்டு ரிபார்ம்ஸ்க்காக ஒரு அடிஷனல் கவர்மெண்டு பிளீடரையும் அதோடு மேற்கொண்டு 6 கவர்மெண்டு அட்வகேட்டுகளையும் புரகிபிஷன் அண்டு எக்சைஸ் என்ற பிரிவுக்காக தனியான முறையில் ஒரு ஸ்பெஷல் கவர்ன்மெண்டு பிளீடரையும் போட இருக்கிறோம். காரணம் பல கோடி ரூபாய் அளவுக்கு அரசுக்கு வரவேண்டிய வருமானம் எல்லாம் தடை ஆணையில் இருக்கின்ற காரணத்தினால் அதை துரிதப்படுத்த வேண்டும் என்பதற்காக

Special Government Pleader and 2 Advocates affiliated to the Office of the Special Government Pleader என்ற முறையிலே வரும் ஆண்டிலே இந்த புதிய பதவிகளை கூட நாம் நிரப்ப இருக்கிறோம். அது மட்டும் அல்லாமல் கிரிமினல் சைடை எடுத்துக்கொண்டால் தற்போது பி.பி. ஒருவர் இருக்கிறார், 3 Government Advocates affiliated to the criminal side இருக்கிறார்கள். வரும் ஆண்டில் நாம் இதை சற்று அதிகமாக்கி இன்னும் 3 கவர்மெண்டு அட்வகேட்ஸ் அப்ளியேட்டட்டு டு தீ கிரிமினல்சைடுஎன்றும் அடிஷனல் பப்ளிக்பிராஸிக்யூட்டர் 2பேரை புதிதாக போடுவதற்கு ஒட்டுமொத்தமாக வரும் ஆண்டில் 46 புதிய அரசு வழக்குரைஞர்கள் for both Criminal and Civil side போடுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நான் ஏற்கனவே சொன்னதைப்போல 88 மைக்ரோ கேசட்ஸ் அடங்கிய 18 micro recordor எல்லாம் சென்ற ஆண்டு நாம் நீதிமன்றங்களுக்கு வழங்கியிருக் கிறோம், உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் பயன்படுத்திக் கொள்வதற்காக,இதனுடைய காரணம் உயர்நீதிமன்றத்தில் வேலை பளுவை குறைக்க வேண்டும் அங்கே தேக்க நிலையில் வழக்குகள் இருக்ககூடாது, நீதிபதிகளைப் பொறுத்த வரைக்கும் பலவிதபிரச்சனைகள் இல்லாத நிலையிலே அவர்கள் இருப்பார் களானால் அட்மினிஸ்ட்ரேஷன் என்ற முறையிலே கவனத்தை எல்லாம் அவர்கள் செலுத்திக்கொண்டு இந்த பிரச்சனை இருக்கிறது,அந்த பிரச்சனைஇருக்கிறது என்று அதில் காலத்தை அவர் செலவழிக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்குகிறபோது நீதிபரிபாலனத்தை செம்மையாக நடத்த நேரம் இல்லாத நிலை கூட அவர்களுக்கு ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால் தான் நீதிபதிகளுக்கு தேவையான வசதிகளை கட்டாயம் செய்து தர வேண்டும் என்ற நோக்கோடு அரசு பிரச்சனைகளை அணுக அந்த அடிப்படையில் தான் முதல் முறையாகசென்ற ஆண்டு நாம் கொடுத்தோம். அது மட்டும் அல்லாமல் மாவட்ட அளவில் இருக்கின்ற நீதிபதிகளுக்கு அவர்களுக்கு வாகன வசதிகள் இல்லாத போது அவர்களுக்கு 16 மாவட்டத்தில் இருக்கின்ற நீதிபதிகளுக்கு கார்களைத் தந்தோம். அதைப்போலவே பேருந்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு அவர்கள் சொன்னார்கள், அங்கே ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தால் அவை ஓடாத நிலையில் இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். உண்மையிலே நாங்கள் ஒரு உத்திரவை இட்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம் இப்பொழுது நிலை என்னவென்று தெரியாது. அதை விசாரித்து தக்க நடவடிக்கை உடனே எடுப்போம் என்பதை மட்டும் நான் முதற்கண் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டும் அல்லாமல் நீதிபதிகளுக்கு, நீதிமன்றங்களுக்கு தொலைபேசி வசதி கூட இதுகாறும் இல்லாமல் இருந்தது. அது இன்றியமையாத தேவையும் கூட என்ற அடிப்படையில் 119 நீதிமன்றங்களுக்கு முதல் முறையாக தமிழ் நாட்டில் நாம் சென்ற



ஆண்டுதான் தொலைபேசிகளை தரவேண்டும் என்ற உத்திர வினையும் இவர்களுடைய வசதிகளை கருத்தில் கொண்டு சென்ற ஆண்டு கொடுத்து இருக்கிறோம். இந்த ஆண்டு இன்னும் ஒரு சலுகை கூட நீதிபதிகளுக்கு செய்து ஆகவேண்டும் என்ற முறையில் நேரடி நியமனம் மூலம் பணியில் நியமிக்கப்படுகின்ற நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள், மாவட்ட முன்சிப்புகள், மற்றும் மாவட்ட நீதிபதிகள் ஆகியோர் எந்த வயதில் பணியில் சேர்ந்தாலும் அவர்களுக்கு முழு ஓய்வு ஊதியம் பெறுவதற்காகக் குறித்த பணி அடைய அவர்கள் ஆயுட் பணிக்கால அளவோடு கூடுதலாக பணிக்கால அளவை சலுகையாக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு நீதித்துறை அலுவலர் சங்கம் ஒரு கோரிக்கை விடுத்தது. அந்தக் கோரிக்கையை ஏற்று அந்த அடிப்படையில் கூடுதலாக ஓய்வு ஊதியம் பெறுகின்ற வகையில் அவர்களது பணி கால அளவோடு 5 ஆண்டு பணிக்கால அளவை கூட்ட அரசு தற்போது உத்திரவை போட்டிருக்கிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் தமிழ்நாடு நீதித்துறை அலுவலர்கள் சங்கம்கொடுத்துள்ள நீதித்துறை 2-ஆம் வகுப்புமாஜிஸ்திரேட்டு களின் சம்பள விகிதம் திருத்தி அமைக்கப்படவேண்டும் மற்றும் நீதித்துறை முதலாம் வகுப்பு , 2-ஆம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு களின் இல்லங்களுக்கு பணிபுரிவதற்காக 200 அடிப்படை ஊழியர் கள் பதவி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை உயர் நீதிமன்றத்தோடு கலந்தோம், அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதிலே அரசு நடவடிக்கைஎடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை நகரத்திலே வழக்கறிஞர்களுடைய கூட்டுறவு சங்கம் ஒன்று செம்மையாகப் பணியாற்றுகிற காரணத்தினால்
An excellent libra y is provided by the said Co-operative society for the Advocates whether he may be rich or poor so that he will be able to get all the facilities in the said Co-operative Society.
என்ற முறையிலே மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிலே மிகச் சிறப்பாக அந்தக் கூட்டுறவுச் சங்கம் பணியாற்றுவதைத் தன்கூடாகக் கண்ட பிறகு அதைப்போன்று 9 கூட்டுறவு வழக்கறிஞர்கள் சங்கங்களை அவர்களுடைய வசதிகளுக்காக நூலகம் போன்றவற்றை அமைக்க, அவர்களுக்கு வேண்டிய மற்ற பொருட்களை வாங்க அரசே ஆரம்பத்தில் முதலீடு செய்து அமைக்க வரும் ஆண்டிலே நாம் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். இன்னொரு உத்திரவைக்கூட அரசு இட்டிருக்கிறது. நீதிமன்றங்களிலே வழக்குகளின் தேக்கத்தைப் போக்கும் முகத்தான் முதல் கட்டமாக விசாரணை கைதிகளுக்கு எதிராக உள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கு ஒரு ஆய்வைச் செய்து அந்த ஆய்வின் அடிப்படையில் ஒரு புதிய உத்திரவு இட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது the plight of the under trial and remand prisoners wasvery much highlighted by many members again, என்ற

கருத்தைத் தெரிவித்தார்கள். சென்ற மானியக் கோரிக்கையின் போது பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அந்த அடிப்படையில் பல்வேறு வழக்குகளைச்சந்தித்து under-tri3l and remand prisoners பொறுத்தவரைக்கும் அவர்களுக்கு எப்படிப் பரிகாரம் தேடித்தருவது எப்படி வழக்குகளைத் தீர்ப்பது, அந்த வழக்குகளை எப்படி திரும்பப் பெறுவது என்பதை ஆய்வதற்காக ஒரு குழுவைப் போட்டு அந்தக் குழு தற்போது செயலாற்ற இருக்கிறது. சென்னை நகரத்திலேCommissioner of Police அவர்களின் தலைமையிலும் மாவட்டங்களைப் பொறுத்த வரைக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் Superictendent ofpolice Superintendent of ja l அந்த அந்த மாவட்டங்களிலே உள்ள சட்ட உதவி ஆலோசனைக் குழுவில் உள்ள பிரதிநிதிகள் அந்த அந்த மாவட்டத்தினுடைய அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர் ஆகியோர் அடங்கிய குழு அவற்றை எல்லாம் ஆய்வு செய்து அவர்களையெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று சொல்கிறபோது விடுதலை செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுக்கிறோம். இதை நாம் நடைமுறைப் படுத்துகிறபோது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கூறிய போது 4 ஆயிரம் என்றார்கள், 4 ஆயிரம் அல்ல, 2 ஆயிரம் என்ற அளவுக்குத்தான் remand pr sone s என்று இருக்கிறார்கள். அந்த நிலைகூட இல்லாமல் இருக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு காரணங்களால் நீதிமன்றத்தில் சார்ஜ் ஷீட் பைல் பண்ணாத நிலைமை இருக்கிறது என்றும் அப்படி சார்ஜ்ஷீட் பண்ணாவிட்டாலும் கூட பல நேரங்களில் வழக்குகள் ஒத்தி வைக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டு இறுதியிலே ஒருவன் நிரபராதி என்ற தீர்ப்பு வரக்கூடிய நிலையில் இருந்தாலும் கூட அந்த நிரபராதி தான் செய்யாத குற்றத்திற்காக இறுதியிலே பெறவிருக்கின்ற சாதகமான தீர்ப்பைப் பெறுவதற்கு பல மாதங்கள் சில நேரங்களிலே சில ஆண்டுகள்கூட சிறையில் இருக்கவேண்டியநிலைமையைப் போக்க வேண்டும் என்பதற்காக அந்த நோக்கத்தோடு நடவடிக்கையை அரசு எடுத்து நீதி மன்றங்களை ஒருங்கிணைக்க வேண்டுமென்ற ஒரு சட்டத்தை நாம் நிறைவேற்றினோம் காரணம் Justice should be made available to the public under one roofs என்ற முறையில் ஒவ்வொரு வட்டத்திலும் நாம் Distrifo Munsif Court Magistrat Court என்றவகையில் நீதிமன்றங்களை அமைத்து சிவில் கிரிமினல் ஆகியஇரண்டு வித வழக்குகளையும் கிரிமினல் வழக்குகளையும் கூட I and II Class offences என்றுள்ள இரண்டு வித வழக்குகளையும் விசாரிக்க ஒரு நீதி மன்றத்தின் கீழ் வரவேண்டுமென்ற ஒரு நடவடிக்கையை அரசு எடுத்து அது சில பிரச்சினைகளின் காரணமாக உயர் நீதி மன்றத்தோடு கலந்தாய்ந்துவருகிறோம். District Munsccourt Magist ate



என்ற பதவிகளை உயர்த்துகின்ற போது அவர்களுடைய ஊதியமும் உயர்ந்து விடுகிறது. அவர்களுடைய ஊதியம் உயர்ந்து விடுகிறபோது உயர்நீதிமன்றம் தெரிவித்த கருத்து உயர்ந்த ஊதியத்தில்கூட நாங்கள் படிப்படியாக அவர்களை அந்தப்பதவியில் போடுகிறோம். இதுகாறும் உயர்ந்த ஊதியத்தில் அவர்கள் II Class Magistrate works, SubMagistrate' உடைய பணியையும் செய்ய வேண்டும்.

(இரவு 7—40)

அட்டெண்டிங் டு தி செகண்டு கிளாஸ் அபன்சஸ் என்று சொன்னார்கள். ஆனால் உங்களுக்குத் தெரியும். சப்-மாஜிஸ்ட்ரேட்களாக இருக்கிற பலரை பொறுத்தவரைக்கும் இதுகாறும் அரசினுடைய பல்வேறு துறைகளிலே இருந்து சென்று வழக்கறிஞர்களாக இருக்கிற காரணத்தால் இதை அறிந்த பிறகு அவர்கள் அரசிடம் சொல்லியிருப்பது, அதிலே பிரச்சினை எழும், என்று சொல்லியிருக்கிறார்கள். காரணம் ஒரு குறிப்பிட்ட துறையைச் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வை தந்துவிட்டு அந்த அதிகப்படியான பணி பொறுப்பைத் தராமல் இருக்கிறபோது எங்களுக்கும் பதவி உயர்வை, ஊதிய உயர்வை அவர்களைப் போல தாருங்கள்; ஆனால் பணியை செய்ய மாட்டோம் என்ற பிரச்சினை உருவாகும் என்று அவர்கள் சொல்லியிருக்கிற காரணத்தால், இதை எப்படி நடைமுறைப் படுத்துவது என்று உயர்நீதி மன்றத்தோடு அரசு தீவிரமாககலந்துஆய்ந்துவருகிறது. அதைநடைமுறைப்படுத்தவிருக்கிறோம். உரிமையியல் நீதி மன்றங்களிலே தமிழ் மொழியை 1—2—1982 முதல் கொண்டு வரவேண்டுமென்ற உத்தரவை 18—1—1962 -ஆம் நாளிட்ட 9;ஆம் எண்ணுள்ள அரசாணையில் நாம் ஆணையிட்டோம். அதற்கு பலவித சட்ட நூல்களை மொழி பெயர்க்க வேண்டியிருந்தது. தற்போது தேவையான சட்ட நூல்கள் எல்லாம் மொழி பெயர்க்கப்பட்டு தரப்பட்டிருக்கிறது. இதிலே பல இடங்களில் தாமதம் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் வேடசந்தூர் பாலு அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதற்குகாரணம் Since the Judicial officers are well experienced in englishit will take littletime to switch over to adopting Tamil என்று நமக்கு தகவல் சொல்லியிருக்கிறார்கள். உயர் நீதி மன்றமும் இதில் ஆவலோடு இருக்கிறது. அவர்களுக்கு ரெப்ரெஷர் கோர்ஸ் எல்லாம் வைத்து தமிழிலே தீர்ப்பு எழுத வேண்டுமென்பதற்காக அவர்களை தீவிரப்படுத்த, துரிதப்படுத்த உயர் நீதி மன்றமும் தீவிரமான முறையில் பணிகளை ஆற்றிவருகிறது என்பதைச் சொல்ல விழைகிறேன்.

நடமாடும் நீதிமன்றங்களை நாம் இடையிலே எடுத்திருந்தோம். ஆனால் நடமாடும் நீதிமன்றங்கள் கண்டிப்பாக தேவை என்பது, ஏற்படுகிற சாலை விபத்துக்கள், கவனக்குறைவு காரணமாக சிறு வாகனங்கள் பெரிய வாகனங்களால் தாக்கப்ப

வதும், மக்கள் சாலை விதிகளை கடைபிடித்து நடக்காத காரணத்தால், தங்களுடைய இன்னுயிர்களை எல்லாம் இழக்கக் கூடிய நிலை உருவாவதும் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிற காரணத்தால் அதை போக்கவேண்டுமென்பதற்காக சிறு குற்றங்களை புரிந்து தண்டனை தர வேண்டும் That w uld createpsycl o logical and mofal fe-r in the minds of offende s tr: ff c offenders என்ற முறையிலே ட்ராபிக் அபெண்டர்ஸ் என்ற முறையிலே தொடர்ந்து சவுத் அண்ட் நார்த் ஆப் மெட்ராஸ் ஆகிய இரண்டு பகுதிகளில் தொடர்ந்து மொபைல் கோர்ட்களை தற்போது ஏற்படுத்தி இருக்கிறோம். அது விரைவிலே நடைமுறைக்கு வர இருக்கிறது.

ஏழைகளுக்கு சட்ட உதவி கிடைப்பதை பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அதிலே போதிய அளவிற்கு அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் என்.வி.என். சோமு அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன். ரகுமான்கான் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்களும் கூட இது குறித்துச் சொன்னார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் பார்த்திலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகப்படியான நிதியை இந்த இலவச சட்ட உதவிக்கு ஒதுக்குவது நமது மாநிலம் தான். செம்மையான முறையில் நடைபெறுவதும் நம்முடைய மாநிலத்தில் தான். சில நேரங்களில் மாண்புமிகு கிருஷ்ணன் அவர்கள் சொன்னதைப் போல நல்ல வழக்குரைஞர்கள், திறமை மிக்க வழக்குரைஞர்கள் இந்த இலவச சட்ட உதவிக்கு ஏழைகளுக்கு முன் வராமல் இருக்கலாம். அதற்கு மனம் இல்லை அவர்களுக்கு என்று பொருள் இல்லை. திறமை மிக்க வழக்கறிஞர்கள் The hon Vemberis an advccate H: isawere that expe ienced a vocates will b: over R ad dwith the court work அந்த நிலையில் தான் அவர்கள் அகப்படவில்லை. இதை மாண்புமிகு நீதிபதிகள் கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும், இராமகிருஷ்ணன் அவர்களும் சொன்னார்கள். ஆனாலும் கூட திறமை மிக்க நீதிபதிகளை இலவச சட்ட குழுவிலே சேர்த்து அந்த அளவிற்கு சிறப்பான பணியை ஆற்றவேண்டும் என்பதற்காக அவர்கள் மும்முரமாக செயல்பட்டு வருகிறார்கள். அரசு இதிலே ஒருசிறிதும் தலையிடுவதில்லை. நேர்மை மிக்க, நல்ல தொண்டுள்ளம் படைத்த கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும், நீதிபதி இராமகிருஷ்ண அய்யர் அவர்களும் சிறப்பான முறையிலே இந்த பணியை ஆற்றி வருவதால் நாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சூப்பரிண்டென்ட் ஆப் போலீஸ் ஆப் தி டிஸ்ட்ரிக்ட்ஸ், ஆர்.டி.ஓ.ஸ்; தாசில்தார்ஸ் ஆப் தி தாலுக் ஹெட் குவார்ட்டர்ஸ், என்ற முறையிலே அனைவருக்கும் கண்டிப்பான உத்தரவுகளை இட்டிருக்கிறோம். வாகன வசதிகளை கூட அவர்களுக்கு தந்திருக்கிறோம். அவர்கள் ஆற்றுகிற பணிகளுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல், தங்குதடை இல்லாமல் உதவிகளை செய்யவேண்டுமென்று உத்தரவை



இட்டிருக்கிறோம். சென்ற ஆண்டிலேயிருந்து நல்லமுறையிலே நடந்து வருகிறது. குறைகள் எங்கெங்கு இருந்தாலும் சுட்டிக் காட்டுகிறபோது கண்டிப்பாக அது களையப்படும். சென்ற ஆண்டு 21 லட்சம் நிதி ஒதுக்கி, இந்த ஆண்டு 20 லட்சம் நிதி ஒதுக்கியிருக்கிறோம். ஏன் ஒரு லட்சம் குறைந்தது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கலாம். அந்த 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிற அதேநேரத்தில் எவ்வப்போது நிதி இதற்கு தேவையென்று சட்ட ஆலோசனை குழுவின் பொறுப்பாளர்களாக இருக்கிற, கவர்னராக இருந்தாலும் சரி, தலைமை நீதிபதியாக இருந்தாலும் சரி, நேரடி பொறுப்பிலேமுழுநேரம்பணியாற்றுகின்ற மாண்புமிகு கிருஷ்ணசாமி ரெட்டியார், இராமகிருஷ்ண அய்யர் யாராக இருந்தாலும் சரி, இன்னென்ன பிரிவுகளுக்கு நிதி வேண்டுமென்று கேட்பார்களானால் உடனுக்குடன் நிதி தருவோம் என்று சொல்லி அந்த அடிப்படையிலே நாம் செய்திருக்கிறோம்.

இலவச சட்டஉதவியைப் பொறுத்தவரைக்கும் மற்ற மாநிலங்களைவிட நமதுமாநிலத்தில் பெரிய சிறப்பு, கிட்டத்தட்ட இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மட்டும் 1896 வழக்குகளை அவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள். இதுவே இதனுடைய சிறப்புக்கு எடுத்துக்காட்டு, அதைவிட முக்கியமாக, அவர்கள் நீதிமன்றத்திலே வழக்காடி, வழக்குகளைத் தீர்ப்பது என்பது ஒரு புறம். ஆனால், மற்றொன்று, Se tlement out of court whatever may be the case என்ற முறையிலே அவர்கள் பிரச்னைகளை அணுகுகிறார்கள். குறிப்பாக பிரிந்து வாழ்கிற கணவன் மனைவி நீதிமன்றங்களுக்கு டைவர்ஸ் என்ற அளவுக்கு அவர்கள் செல்லும்போது—பிரிந்து வாழ எண்ணுகிறவர்கள் மெய்டெனன்ஸ் சூட் போடுகிறபொழுது இதெல்லாம்வேண்டாம்; நமது பண்புக்கேற்றவாறு குடும்பங்களை இணைக்க வேண்டுமென்ற முறையிலே சமுதாயப் பெரியவர்கள் செய்கின்ற பணிகளைக் கூட இலவச சட்ட உதவி ஆலோசகர்கள் செய்து, இன்று 547 பிரிந்த குடும்பங்களை இணைக்கின்ற மாபெரும் பணியை மாண்புமிகு நீதிபதிகள் தலைமையிலே இருக்கிற இலவச சட்ட ஆலோசனைக் குழு சிறப்பாகச் செய்திருப்பதை நான் அரசின் சார்பிலே அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலவச சட்டஉதவியைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதி பி.என். பகவதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

I believe the Sta'e of Tamil Nadu is the one State where the Legal aid programme is going on splendidly and leg l aiq is provdied to the weaker seceions of thecommunity in an organised and systematic basis. என்று அவர் வெகுவாக இதைப் பாராட்டியிருக்கிறார். அதைப்போலவே மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி கிருஷ்ண ஐயர் கூட am glad that the State

Legal Aid to po›r is bringing a periodical news letter. It is very impo tant that the Legal Aid Board must inform the peopıe of Tam l adn and outside about the great work it is doirg and incident·ly educa e the common man in his legal rights so that the jutice syst m may be a source of hope for him. என்று வெகு அதிகமான முறையிலே நம்மைப் பாராட்டியிருக்கிறார்.

அது மட்டுமல்லாமல் உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்த வரைக்கும் ஒரு தீர்ப்புபில்கூட இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களில் இலவசச் சட்ட உதவி எப்படி நடைமுறையில் இருக்கிறது என்பதனை ஆயக்கூடிய நிலை வந்துஒருதீர்ப்பிலே Sheila arthe vs. State cf M.harashtra. We may point out that is procedure that is free legal aid ·ystem is being followed with immence benefit to theprisonners in jails by the Tamil Nadu State Legal aid AdvisoryBoard; என்றுஉச்சநீதிமன்றம் நமதுஇலவச சட்டஉதவிக் கழகம் செயல்படுகின்றதைப் பாராட்டி இருக்கிறார்கள்.

சென்னையிலே உச்ச நீதிமன்றத்தினுடைய ஆயம் ஒன்று அமைய வேண்டுமென்ற கோரிக்கையினை மாண்புமிகு உறுப் பினர் பலர் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். நாம் மைய அரசுக்குப் பலமுறை எழுதியிருக்கிறோம். உச்ச நீதிமன்றத் திடம் நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம். உச்ச நீதி மன் றம் சென்னையிலே இருக்கிற சட்டக் கல்லூரியிலே உச்ச நீதி மன்றத்தினுடைய ஆயத்தை அமைக்கலாம் என்று அவர்கள் கொள்கை அளவிலே ஏற்றியிருக்கிறார்கள். மைய அரசினுடைய அனுமதிக்காகக் காத்திருக்கிறோம். மைய அரசு விரைவிலே அனுமதியைத் தரும் என்று நம்புகிறேன்.

மதுரையிலே உயர்நீதிமன்றத்தின் ஆயம் அமைக்க வேண்டு மென்பதை நாம் மிக வலியுறுதித்தி மைய அரசைப் பல முறைக் கேட்டியிருக்கிறோம். அதிலே கூடஉச்சநீதிமன்றத்தைப் பொறுத்த வரைக்கும் அது தடையாக இல்லை. ஆனால், மைய அரசைப் பொறுத்தவரைக்கும் இன்னும் முடிவெடுக்காத நிலையிலே இருக்கிறது. வலியுறுத்தி வருகிறோம். இதற்கும் விரைவிலே முடிவு கிட்டும் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேடசந்தூர் பாலசுப்பிரமணி யம் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும் பேசுகின்ற பொழுது சென்னை உயர்நீதிமன்றப் பெயரினைத் தமிழ் நாடு உயர்நீதிமன்றம் என மாற்ற வேண்டு மென சொன்னார்கள். அதற்காக ஒரு தீர்மானம்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. வேடசந்தூர் பாலசுப்பிரமணியம் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதைக் கொள்கை அளவிலே மாநில அரசு ஏற்று மைய அரசுக்கு 9-3-1983-ஆம் தேதி அன்று நினைவூட்டப்பட்டிருக்கிறது. இதை நடைமுறைப்படுத்த



அரசு விரும்புகிறது. உங்களுக்குத் தெரியும், உயர்நீதி மன் றத்தினுடைய பெயரை மாற்ற வேண்டுமென்றால் அந்த அதிகாரம்கூட—நமக்கு வேண்டிய பல இன்றியமையாத அதி காரங்கள் மைய அரசின் கையிலே குவிந்திருப்பதைப் போல இந்த அதிகாரம் கூட—மைய அரசின் கையிலே குவிந்திருக் கிற காரணத்தால், மைய அரசின் அனுமதியோடுதான் இந்தப் பெயரை மாற்ற வேண்டியிருக்கிறது.

(இரவு 7-50)

தமிழ்நாடு என்று பெயரை மாற்ற நாம் செய்த தியாகத்தின் அளவிற்குத் தியாகம் செய்ய வேண்டிய அவசியமில்லாமலேயே மைய அரசு இந்தப் பெயர்மாற்றத்திற்கு ஒத்துக்கொள்ளும்என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. Directorate of p.ose.ution என்ற ஒன்று இன்றியமையாத தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் குப்புசாமி அவர்களும் என்.வி.என். சோமு அவர்களும், பாலு அவர்களும் இதை எடுத்துச் சொன்னார்கள். பொறுத்தவரைக்கும், Di.cto.ate of prosecution எப்படி மற்ற மாநிலங்களில் பணியாற்றுகிறது என்று கண்டறியும் நோக்கத்தோடு, உள்துறைச் செயலாளர் வெங்கட்ராமன் அவர்களையும் சட்டச் செயலாளர் வடிவேலு அவர்களையும் கர்நாடக மாநிலத்திற்குஅனுப்பி அங்கு இந்த சிஸ்டம் எப்படி நடைமுறையில் இருக்கிறது என்று கண்டறிந்து வந்திருக்கிறார்கள். இது தேவையான ஒன்று என்று அரசு முடிவுசெய்திருக்கிறது. Di ectorat: cf Prosecution என்று போடும்பொழுதுதான் ஒவ்வொரு நீதிமன்றத்திலேயும், கிரிமினல் சைடு நீதிமன்றங்களிலேயெல்லாம் அரசு வழக்கறிஞர் கள் எப்படி வழக்கை நடத்துகிறார்கள். How about :he perfo mance periodicallyஎப்படி இருக்கிறது. Impr. vemeni pendency என்பதை ஆய்ந்து அவ்வப்பொழுது தக்க நடவடிக்கை எடுக்க வழிவகை இல்லாத அளவிற்கு here is not co-ordination at all அந்த நல்ல ஒரு கோவார்டினேஷன் வேண்டுமென்ற முறையில் Directo.ate of p.osec.ıion உடனடியாக அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள், சேரன்மா தேவியில் ஒரு நீதிமன்றம், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் இயங்கவில்லை என்று சொன்னார்கள். இயங்க இருக்கிறது. சேரன் மாதேவியில் ஒருநீதிமன்றம் இயங்க இருப்பதால் வள்ளியூருக்கு நீதிமன்றம் இல்லை என்ற அச்சவுணர்வை அவர் கள் கருதினார்கள் என்று நான் எண்ணுகிறேன். வள்ளியூருக் கும் ஒரு நீதிமன்றத்தைத் தர இருக்கிறது. மாண்புமிகு துணைத் தலைவரவர்கள், சேரன்மா தேவிக்கு ஒருநீதிமன்றம் வேண்டுமென்றமக்களின் கோரிக்கையை எடுத்துச் சொன்னபிறகு

அந்த அடிப்படையிலே அங்கு ஒரு நீதிமன்றம் தரப்பட்டது. வள்ளியூருக்கும் தேவை என்ற கோரிக்கை பெறப்பட்டு, அங்கேயும் ஒரு நீதிமன்றம் தர அரசு நடவடிக்கை எடுக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற பொழுது, கிரிமினல் புரொசிஜர் கோடு 321 பிரிவின்படி அரசாங்கம் நீதிபதியினுடைய அனுமதியுடன் வழக்குகளை வாபஸ் வாங்கலாம. ஒரு சப் இன்ஸ்பெக்டரை ஒரு சட்ட மன்ற உறுப்பினர் தகராறு செய்து சப் இன்ஸ்பெக்டர் புகார் கொடுக்கிறார், அந்த வழக்கு ஆளுங்கட்சிக்காரர் மீது என்பதால் அந்த வழக்கை அரசாங்கம் வாபஸ் வாங்க முயன்று, நீதிபதி ஏற்காதகாரணத்தால் அந்த நீதிபதியையே மாற்றல் செய்து விட்டார்கள் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நீதிபதிகளை மாற்றும் அதிகாரம் உயர்நீதி மன்றத்திற்கு இருக்கிறது. நாம் ஏற்கனவே சொன்னபடி, எந்தவொரு நீதிபதியையும் இங்கே மாற்றுங்கள், அங்கே மாற்றுங்கள் என்று, நான் சட்டஅமைச்சராகப் பொறுப்பேற்ற நாளிலிருந்து இதுநாள் வரையில் நீதிமன்றத்தில் தலையிட்டதே இல்லை என்பதே— இது தலையீடு அல்ல என்றாலும்கூட தலையிட்டதே இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் இதைச் செல்வதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதற்குப்பிறகு ஹைகோர்ட்ரிஜிஸ்தார் இங்கே இருக்கிறார். அவரிடம் என்ன என்றுவிளக்கம் கேட்டேன். அப்படி இல்லை என்று சொல்லியிருக்கிறார். மாற்றவேண்டுமென்றால் உயர்நீதிமன்றம் மாற்றுகிறது. அவர்கள் மாற்றுவது என்பது அட்மினிஸ்ட் ரேட்டிவ் ரீசன். வேறு காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுங்கட்சிக்கு வேண்டியவர் என்பதற்காக, ஒரு நீதி முடிவுக்கு வந்துவிட்டால், அதற்குக் சாதகமாகச் செயல்பட இந்த அரசு ஒருக்காலும் செயல்படாது என்பதை மீண்டும் ஒருமுறை இந்த அளவிற்கு அவைக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற பொழுது, ரிமான்ட் பிரிசினர்களின் எண்ணிக்கை 4,000, 5,000-க்கு மேல் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி அல்ல. 2,774 பேர்கள், ஆய்வுக் குழுவைப் போட்டிருக்கிறோம். காரணம் இன்றி அல்லது தக்க காரணம் இன்றி, அல்லது நிர்வாகத்திலே பல பிரச்சினைகள் தடைக் கற்களாக இருக்கின்ற காரணத்தால் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் சிறையிலே இருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்பது குறித்து ஆய்வுக் குழு போடப்பட்டிருப்பதால் இந்தப் பிரச்னை அறவே களையப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



நான் இந்த நீதி பரிபாலனத்தைப் பொறுத்தவரையில் மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் எந்தவொரு பிரச்சனைக்கும் இந்த ஆட்சி நீதித் துறையில் என்றுமே, எதற்குமே, தலையிடாது என்ற உறுதியை இந்த அவைக்கு நான் உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, சிறைச்சாலை நிர்வாகத்தைப் பற்றி கூற விரும்புகிறேன். சிறைச்சாலை நிர்வாகத்தைப் பொறுத்த வரைக்கும் தற்பொழுது சென்னையிலே இருக்கிற மத்திய சிறைச்சாலையை, அங்கே இட நெருக்கடி அதிகமாக இருக்கிற காரணத்தால் அதை வேறு இடத்திற்கு மாற்ற தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறப்பட்டது. ரூ. 1.43 கோடி செலவில் இரண்டாவது கட்டப்பணி துவக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே சென்ட்ரல் பிரிசனைப் பொறுத்தவரைக்கும், சென்னையிலே மையப்பகுதியிலிருந்து மாற்றப்பட்டு புழலேரிக்குச் சென்று, சென்ட்ரல் பிரிசன் இருக்கின்ற அந்த இடம் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு தரப்பட இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 8-வது நிதிக் குழுவினுடைய பரிசீலனையின்படி, ரூ. 17 கோடி மூலதனச் செலவாகவும், ரூ 5 கோடி வருவாய் இனச் செலவாகவும் திட்டம் தீட்டப்பட்டு, அந்த அடிப்படையிலே மாநில அரசு கோரிக்கை வைத்திருக்கிறது. தற்போது மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டு, நிதி கிடைத்தவுடன் சிறை நிர்வாகத்தைச் செம்மையாக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. ரூ. 8,62,00,000 ஏழாவது நிதிக் குழு மாநில அரசிற்குத் தந்தது.

திரு. எல். இளையபெருமாள் : நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது தாழ்த்தப்பட்ட மக்கள், மலை வாழ் மக்கள்அவர்களுடைய ரிசர்வேஷன் சம்பந்தமாக உச்ச நீதி மன்றத்திலே கேட்டிருக்கிறோம். அவர்கள் கொடுக்கப்படும் என்று உறுதி சொன்னார்கள் என கேள்வி நேரத்தில் கூடசொல்லப் பட்டது. கிராமப் பஞ்சாயத்து கோர்ட்டுகள் சம்பந்தமாக சொல்கிறபோது, நிச்சயமாக செய்யப்படும் என்று சொன்னார்கள். இப்பொது அதனுடைய நிலைமை என்னவென்று விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : "Rule of reservation should be strictly adhered to in regard to the Scheduled Caste and Scheduled Tribes என்பதனை உயர்நீதிமன்றத்திற்கு மாநில அரசு தெரிவித்திருக்கிறது. உயர்நீதிமன்றம் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்த, உயர்நீதி மன்றமும், அரசும் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

கிராமப் பஞ்சாயத்து போர்டுகளைப் பொறுத்தவரைக்கும், நான் ஏற்கனவே அவையில் அறிவித்தது போல, கொள்கை அளவிலே இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மத்திய அரசு ஒரு தனிச் சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறது. மத்திய அரசு கொண்டு வருகிற சட்டத்தைப் பார்த்து, அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிற காரணத்தால், கொள்கை அளவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

7-வது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி சிறைச்சாலை மேம்பாட்டிற்காக ரூ. 8.62 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இதிலே மட்டும் மத்திய அரசு சற்றுத் தாராளமாக நிதி ஒதுக்கியது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையிலே நம் சிறைச்சாலைகளிலே 4,450 கூடுதல் கைதிகளை அடைப்பதற்கு சிறைக்குள் கழிப்பறை வசதி, தண்ணீர் வசதி, உணவிலே மாற்றங்கள் ஆகியவற்றுக்கு நிதியுதவி செய்து தற்போது நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல சப் ஜெயில் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 26 கிளைகள் மட்டுமே ஒட்டுமொத்தமாக சிறைச்சாலை நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது. மீதி எல்லாம் ரெவின்யூ துறையின் கீழ் இருக்கிறது. ஆனால் முழுவதுமே சிறைச்சாலைத் துறையின் கீழ் கொண்டுவரவேண்டுமென்று, பல்வேறு திட்டங்கள், சத்துணவுத் திட்டம், கழிப்பறை வசதிகள் தண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில், இதுகாறும் 26 கிளைகள் சிறைத் துறை நிர்வாகத்தின் கீழ் இருந்துவந்தது. மேற்கொண்டு நடப்பு ஆண்டில் 55 சப் ஜெயில்களை சிறைச்சாலை நிர்வாகத்தின் கீழ் எடுக்கவேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. வருகின்ற 2, 3 மாதங்களில் மீதமுள்ள 38 சப் ஜெயில்களை சிறைத்துறை நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்து, அங்கு இருக்கின்ற கைதிகளுக்கு வசதிகளைச் செய்து தர நடவடிக்கை எடுத்திருக்கிறது. இன்னும் 2, 3 மாதங்களில் 38 சப் ஜெயில்களை சிறைத்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருகிறபோது

All the sub-jails will be under the control of the prisons Administration and all will be having the facilities that are n w being provided to the prisoners under the control of the Prisons Department. என்ற முறையிலும் ஆங்காங்கே நடவடிக்கை தற்போது எடுத்து வருகிறோம்.

(இரவு 8—00.)

அதுமட்டுமல்லாமல் இந்த மைய அரசினுடைய 8 கோடி 62 லட்சம் ரூபாய் நிதி வந்தபிறகு நான் ஏற்கனவே சொன்னதைப் போல சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவிலே முன்னேற்றத்தையும், ஊதிய ஈட்டுத் திட்டமும், சிறைவாசிகளுக்கு



பல்வேறு கைவினைத் தொழில்களில் பயிற்சி அளிக்கும் திட்டத்தையும் சிறைச் சாலைகளில் சிற்றுண்டிச்சாலையும் அமைக்கின்ற திட்டத்தையும் நாம் தற்போது நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், புதிதாக நாம் சிறையிலே இருப்பவர்களுக்கு, மேல்படிப்பு படிக்க விழைகின்றவர்களுக்கு படிப்பு வசதிக்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்ற முறையிலே நாம் நடவடிக்கைகளை 1982 ஆம் ஆண்டிலே எடுத்து, அந்த அடிப்படையிலே தற்போது 12 சிறைக்கைதிகள் பி.ஏ. படிக்கிறார்கள். ஒரு சிறைக்கைதி பி. காம். படிக்கிறார். 6 பேர்கள் எம்.ஏ. படிக்கிறார்கள். ஒருவர் எம்.காம். படிக்கிறார். ஒருவர் எம்.எஸ்சி. படிக்கிறார். சென்ற ஆண்டு ஒருவர் எம்.பி.,பி.எஸ்.-லே சேர்க்கப்பட்டிருக்கிறார். பிளஸ் 2-விலே 2 பேர்கள் படிக்கிறார்கள். இப்படி பல்வேறு படிப்பு வசதிகளுக்குக் கூட அவர்களுக்கு வசதியைச் செய்து தரவேண்டுமென்ற முறையிலே நாம் ஏற்பாடுகள் செய்துவருகிறோம். ஒரு சிறைவாசிக்கு இதற்கு செலவு 700 ரூபாய் ஆகின்ற போதிலும் அந்தச் செலவை ஏற்று அவர்களுக்கு தற்போது படிப்பு வசதிகளை அரசு செய்து கொண்டிருக்கிறது.

அதைப்போலவே புதிய ஒரு முடிவைக்கூட தற்போது அரசு எடுத்திருக்கிறது. சிறைவாசிகளுடைய எதிர்கால வாழ்க்கையை முன்னிட்டு ஒரு சிறைக்கைதி சிறைச்சாலையிலே இருந்து விடுதலை பெறுகின்றபோது அவன் விடுதலை பெற்ற பின்பு சமுதாயம் பெரும்பாலும் அவனை ஏற்றுக்கொள்வதில்லை. குற்றவாளி என்ற காரணத்தால், சிறையிலே தண்டனையை அனுபவித்துவிட்டு வந்தபிறகும் கூட மக்கள் அவர்களை ஒதுக்கிவிடுகின்ற காரணத்தால் மக்களால் அவன் தண்டிக்கப்படுகின்ற நிலை இருந்து வருகிறது. ஒரு சொந்தத் தொழிலில் ஈடுபடாத நிலை. ஒரு அவசரத்திற்கு ஒரு 5 ரூபாய் கடன் வாங்க வேண்டுமென்றாலும்கூட முடியாத நிலை. பல ஆண்டுக்காலம் குடும்பத்தைவிட்டு விலகி இருக்கின்ற காரணத்தால் குடும்பத்தினுடைய பொருளாதாரம் சீரழிகின்ற நிலைகள் எல்லாம் ஏற்பட்டு, சிறைக்கைதிகள் விடுதலைக்குப் பின்னால் அவர்கள் ரிபார்ம் ஆகமுடியாமல் அவர்கள் மீண்டும் பல தவறுகளில் ஈடுபடக்கூடிய சர்க்கம்ஸ்டான்சியல் பேக்டார்ஸ் இருக்கிற காரணத்தால் அதை மாற்றவேண்டுமென்று ஆய்வு செய்து, அந்த அடிப்படையிலே இப்போது Tamil Nadu Prisoners Welfare Corportion என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதற்கு மத்திய அரசினுடைய அனுமதியையும் பெற வேண்டியிருக்கிறது. காரணம், அதற்குத் தேவையான நிதியை நாம் ஏழாவது நிதி உதவிக் குழுவின் நிதி உதவியிலிருந்து பெற உத்தேசிக்கிறோம். ஒரு ''வெல்பேர்-கார்ப்பரேஷன்'' என்ற அமைப்பை ஏற்படுத்தி, அந்த அமைப்பின் மூலமாக விடுதலை ஆகின்ற கைதிகளுக்கு ''செல்ப்-எம்ப்ளாய்மெண்ட்'' சுயதொழிலில் ஈடுபடுவதற்கு, அவர்களுக்கு ஒரு சிறைவாசிக்கு ஐயாயிரம் ரூபாய் வரையிலும், அவர்கள் கூட்டுறவு நிறுவனம் அமைத்தால் 25,000 ரூபாய் வரை கடன் தரவும், எந்தத் தொழிலை அவர்கள் வேண்டுமென்றுகூட இந்தத் தொழிலை [illegible]

லாபம் கிட்டும்; நஷ்டம், இல்லாமல் இருக்கும் என்பதை ஆய்வு செய்து அந்த அடிப்படையில் தொழிலை வகுத்துத் தரவும், அந்தத் தொழிலின் மூலமாக பெறப்படுகின்ற end products should have markatability என்ற முறையிலே விற்பனை செய்யக்கூடிய வசதி செய்யவும், அதன் மூலமாக நடவடிக்கை எடுக்க அரசு அதை ஆய்ந்து நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சில பத்திரிகைகளை சிறைச்சாலைகளிலே வழங்குவதில்லை என்று சொன்னார்கள். அதுபற்றி விசாரித்து அந்த அடிப்படையிலே நான் நடவடிக்கை எடுக்கிறேன். திரு நல்லப்பன் அவர்கள் பெருந்துறை வட்டத்திற்கு He wants a District Munsif Court or a Sub-Magistrate Court. டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் ஒன்று வேண்டுமென்ற கோரிக்கையை தந்திருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து அந்த ஆய்வின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது குறிப்பாக ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது, பிரிமெச்சூர் ரிலீப் பற்றிப் பேசினார்கள். மற்ற பல உறுப்பினர்களும் பேசினார்கள். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் இவருக்கு பிரிமெச்சூர் ரிலீப் தரலாம், அவருக்குத் தரக்கூடாது என்ற எண்ணம் இல்லை. அதற்காக சில விதிமுறைகளை அங்கே வைத்திருக்கிறார்கள். அந்த விதிமுறைகளுடைய அடிப்படையிலே பிரச்சனையை அணுகுகிறோம். 433-ஏ வைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அவைக்கும் தெரியும். அவையிலே நாம் ஒரு தீர்மானத்தை இயற்றி (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன்.

I am answering your question. I will complete it; I know what question the Hon. Member Thiru Rahman Khan is going to raise I am going to answer your question.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 433-ஏ பிரிவைப் பொறுத்தவரைக்கும் ஒரு திருத்தத்தை கொண்டு வந்தோம். மாநில அரசுகளை எல்லாம் வெறும் பஞ்சாயத்துக்களாக முனிசிபாலிடிகளாக ஆக்கக்கூடிய மனப்பான்மையை மைய அரசு கைவிட வேண்டும் என்ற கோரிக்கை பெரும்பான்மையான நமக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலே நாம் இந்தப் பிரச்சனைகளை அணுகுகின்ற காரணத்தால், 433-ஏ என்ற அதிகாரத்தைப் பொறுத்து, 14 ஆண்டுகளுக்கு முன்னால் சிறையிலே இருக்கின்ற ஒருவரை விடுதலை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று மைய அரசு கிரிமினல் ப்ரொசீஜர் கோடுக்கு 1978 ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்ததை எதிர்த்து நாம் ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வந்து மைய அரசுக்கு அனுப்பினோம். மைய அரசு அதை ஏற்கவில்லை. ஆனால், அண்மையில் அறிந்தது மத்திய அரசு மீண்டும் அதை ஆய்ந்து வருவதாக கருதுகிறோம். நல்ல ஒரு முடிவை மைய



அரசு எடுப்பார்கள் என்று நம்புகிறோம். உச்ச நீதிமன்றத்தில் இதுகுறித்த வழக்குகள் எல்லாம் சென்று 1978 ஆம் ஆண்டுக்கு முன்னால் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் அவர்கள் 10 ஆண்டுகாலத்திற்கு மேலே இருப்பார்களேயானால் அவர்களை அட்வைசரி போர்டுக்கு அனுப்பி அங்கே ஆய்ந்து, அட்வைசரி போர்டினுடைய ஆய்வின் அடிப்படையில், பரிந்துரை அடிப்படையில் விடுதலை செய்யலாம் என்ற தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. அந்த அடிப்படையில் நாம் தற்பொழுது பிரச்சனைகளை அணுகி வருகிறோம்.

அதுமட்டுமல்ல. பாலகாந்தன் என்ற ஒருவரை ஆறு ஆண்டு காலத்திலே ரிலீஸ் செய்ததாக சொல்லியிருக்கிறார்கள். பாலகாந்தன் என்ற ஒருவரைப் பொறுத்தவரைக்கும் பத்மாசேஷாத்ரி பால பவனைச்' சேர்ந்த கல்லூரி ஆசிரியரும், அங்கு இருக்கின்ற 'ஹெட் ஆப் தி டிபார்ட்மெண்ட்.' எல்லாம் அவருக்கு— ஆல்சோ பை மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ்.' நிறுவனங்கள் எல்லாம் அவர் திருந்தி விட்டவர் என்று சொன்ன பிறகு, அதை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் ஆளுநர் வரைக்கும் சென்று, அவருக்கு 6 ஆண்டு காலத்தில் விடுதலை தரப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் மற்றவர்கள் பிரச்சனை இருந்தாலும் இந்த அரசு அணுகாது என்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்கு இருக்கிற அச்சம்—பாலகாந்தன் அவர்களை ரிலீஸ் செய்துவிட்டு மற்றவர்களை எல்லாம் ரிலீஸ் செய்யாது விட்டுவிடுவார்கள் என்ற எண்ணம் வேண்டாம்.

மாசிலாமணியைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். மாசிலாமணியைப் பற்றி திரு. ரகுமான்கான் அவர்களுக்கு தெரியுமோ தெரியாதோ பல காலம் அவருக்கு விதிகளை தளர்த்தி பரோல் தந்து கொண்டிருக்கிறோம். அதைச் செய்ததும் நான்தான் என்பது மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் பாபு ஜனார்த்தனன் அவர்களுக்குத் தெரியும் (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற மாசிலாமணி அவர்கள் சிதம்பரம் பல்கலைக் கழகத்தில், எம்.ஏ. பயின்ற ஒரு மாணவர். வேலூர் சிறையிலே அவர்கள் இப்பொழுது இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில சந்தர்ப்பங்களில், அண்மையில் திருமணமானபோது கூட பரோல் வழங்கினார்கள். அதற்கு, இப்பொழுது கூட நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அந்தப் பிரச்சினையை இப்பொழுது சொல்லவில்லை. ஆனால் நான் சொல்வது மாசிலாமணி என்று சொல்லக்கூடிய கைதியின் நண்பரை, காலையிலே நான் அவர்களுக்குச் சொன்னேன். இங்கிருக்கக்கூடிய மத்திய சிறைச்சாலையிலே ஏற்கனவே அட்வைசரி போர்டு, வைத்து 12 ஆண்டுகளாக அவர்கள் அங்கு இருக்கிறார்கள். ஒன்றரை ஆண்டு காலமாகிவிட்டது. அட்வைசரி போர்டு வந்துபோய், எந்த விதமான பதிலும் இல்லை. ஆகவே, இந்த பாலகாந்தன் அவர்கள்

விடுதலை செய்யப்பட்டது தப்பென்று சொல்லவில்லை. ஆயிரக்கணக்கான பாலகாந்தன்கள் ஆறு ஆண்டுகளில் விடுதலை செய்யப்பட்டது போல் எல்லோரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோள். ஆனால், பாலகாந்தனுக்கு ஒரு நியாயம் மற்றவருக்கு ஒரு நியாயம் என்பது கூடாது.

**திரு. பாபு ஜனார்த்தனன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் மாசிலாமணி அவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தோடு, பரோல் கேட்கின்ற நேரத்தில் எல்லாம், பரோலில் விடுத்திருக்கிறார். அது மட்டுமல்ல. அவருடைய விடுதலையைப் பற்றி மாசிலாமணி அவர்கள் —அவரை மணந்திருக்கிற அம்மையார் ஒருவழக்கறிஞர். ஒரு கைதியை விரும்பி மணந்து கொண்டவர். அந்த எண்ணத்தில், அவர் மனிதாபிமானத்தோடு அவரை பல முறை பரோலில் விடுத்து இருக்கிறார் என்பது உண்மை என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 8—10)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆயிரம் பாலகாந்தன்களை இந்த 6 ஆண்டு காலத்தில் நாங்கள் விடுதலை செய்தோம் என்பது தவறு. ஒரே ஒரு பாலகாந்தனைதத்தான் நாங்கள் விடுதலை செய்து இருக்கிறோம். (குறுக்கீடு) அரசின் கொள்கையைப் பொறுத்தவரையில், மாசிலாமணி என்பவரை விடுதலை செய்யவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, 14 ஆண்டு காலம் சிறையில் இருந்து இருந்தால் கட்டாயமாக விடுதலை செய்ய வேண்டும் என்ற தீர்ப்பு இல்லை. அட்வைசரி போர்டின் பரிந்துரை வருமானால், விடுதலை செய்யக்கூடிய அளவிற்கு அந்த வழக்கின் தன்மை, குற்றத்தின் தன்மை இவைகளை ஆய்ந்து, எந்த அளவிற்கு தண்டனை பெற்ற அந்தக் கைதியின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை ஆய்ந்து விடுதலை செய்ய வேண்டும் என்ற அறிவுரைதான் இருக்கிறது. அந்த அடிப்படையில் பிரச்னைகளை நாங்கள் அணுகுகிறோம். 10 ஆண்டு காலத்திற்கு மேல் சிறையில் ஒருவன் இருந்தால், அவன் முழுக்க முழுக்க திருந்தப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னால், 10 ஆண்டுக் காலத்திற்கு மேல் சிறையிலே இருந்த யாராக இருந்தாலும் அவனை விடுதலை செய்யலாம். இந்த அட்வைசரி கமிட்டி மாதத்திற்கு இருமுறை கூடி இப்படிப்பட்ட கேஸ்களை ஆய்வு செய்து பரிந்துரைக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறோம். கடந்த நான்கு மாத காலமாக அந்தப் பணி தீவிரமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. கூடியவிரைவில் இதன் காரணமாக பலர் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்ததாக, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சிலவற்றை நான் கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது, சென்னையிலே இருக்கிற ஒரு ஸ்பெஷல் ஆபீசர் ஆப்தி மெட்ராஸ் சென்ட்ரல் கோவாப்பரேட்டிவ் பாங்க் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றத் கழகத்தின் நிகழ்ச்சி ஒன்றிலே பங்கேற்று இருக்கிறார் என்று சொன்னார். இது குறித்து உடனடியாக தற்போது விசாரித்தேன். அந்த நிகழ்ச்சி நடந்தபோது அந்தப் பகுதியில் இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் போஸ்டர்கள் போட்டு இருக்கிறார்கள். அவர்கள் அந்த அதிகாரியின் பெயரையும் சேர்த்துப் போட்டு இருக்கிறார்கள். நான் கூட்டுறவுத் துறை செயலாளர் அவர்களையும் விசாரிக்கச் சொன்னேன். அவர்களும் விசாரித்து இருக்கின்றார்கள். அந்த நிகழ்ச்சிக்கு அந்த அதிகாரி செல்லவில்லை என்பதை அவர்கள் தற்போது தகவலாக எனக்குத் தந்து இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1982 ஆம் ஆண்டு கால வாக்கில் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரைக்கும் நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ள காரணத்தால் 'ஆடமேடிக் அட்மிஷன்' என்பதை புதிய சட்டத்தில் நாம் கொண்டு வந்திருந்தாலும், நாம் எக்சிகியூடிவ் ஆர்டர் போட்டே அவ்வாறு செய்ய வேண்டும் என்று சொல்லியிருப்பதால், இந்த 1½ ஆண்டுக் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகி உள்ள விவாசயக் குடும்பங்களின் எண்ணிக்கை முன்பிருந்ததைவிட தற்போது 4 சதவிகிதம் அதிகமாக உயர்ந்து இருக்கிறது. அதைப் போலவே தாழ்த்தப்பட்ட, மக்கள் கூட்டுறவில் சேரவேண்டும் என்பதைப் பொறுத்தவரைக்கும் அவர்களும் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே அங்கத்தினர்களாக சேரவேண்டும் என்ற அடிப்படையில், அவர்களுக்கு வசதி வாய்ப்பு இல்லாத நிலையில், அவர்களுக்கு ஆளுக்கு 100 ரூபாய் மானியமாக தரவேண்டும் என்று சென்ற ஆண்டு உத்தரவிட்டோம். நடப்பு ஆண்டில் கூட 20,000 பேர்களை அதிலே அங்கத்தினர்களாகச் சேர்க்க வேண்டும் என்ற முறையில் அவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 100 ரூ. அரசு ஒதுக்கியிருக்கிறது. தொடர்ந்து இதைப்போல அந்த தாழ்த்தப்பட்ட, மக்கள் அந்தக் கூட்டுறவுத் துறையில் நாட்டம் பெற வேண்டும் என்ற வகையில், அவர்கள் அதிலே அங்கத்தினர்களாக ஆவதற்காக அரசு சார்பில் மானியம் கொடுத்து உதவ வேண்டும் என்ற முறையில் அரசு அந்தப் பணியைச் செய்து வருகிறது.

நான் ஏற்கெனவே பல நேரங்களில் சொன்னதைப்போல நலிந்த பிரிவினருக்கு கடன் வசதி செய்து தரவேண்டுமென்ற நோக்கத்தோடு நாம் குறுகிய கால கடன் 45.98 கோடி ரூபாயை இதுகாறும் கூட்டுறவுத் துறையில் பல்வேறு அமைப்புகள் மூலம் தந்திருக்கிறோம்.

அதைப்போன்று குறித்த காலத்தில் கடனை திருப்பிச் செலுத்துகிறவர்களுக்கு வட்டியில் இரண்டு சதவீதம் குறைப்போம் என்ற அறிவிப்பை விட்ட பிற கு கடந்த இரண்டாண்டுகளில் 8,445 விவசாயிகள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னாலேயே வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தி விட்டதனால் அவர்களுடைய உற்சாகத்தைப் பாராட்டுகிற அதே நேரத்தில் இந்த முறையைத் தொடர்ந்து நீடிக்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது வறட்சி நிலை தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருப்பதால் உழவர்களுடைய பிரச்சினையைக் கருத்திற்கொண்டு உழவர்களுடைய கடனை வசூல் செய்யக்கூடாது என்றும், சில இடங்களில் வசூல் செய்கிறார்கள். ஜப்தி நடவடிக்கை நடக்கிறது என்று கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சொன்னார்கள். ஆனால் தென்மேற்குப் பருவமழையும் வடகிழக்குப் பருவமழையும் பொய்த்து விட்டதால் எந்த அளவுக்கு உழவர் பெருமக்கள் இன்னல் அடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த அரசு உணர்ந்து, அந்த அடிப்படையில் அவர்களுக்கு நாம் மேற்கொண்டு தொல்லை தரக்கூடாது என்ற நோக்கத்தோடு மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும், ரிசர்வ் வங்கியைப் பொறுத்த வரைக்கும், உலக வங்கியைப் பொறுத்த வரைக்கும் ரிசர்வ் வங்கியின் கிளையாக செயல்படுகிற 'நபார்டு' என்பதைப் பொறுத்தவரைக்கும் உழவர்களுக்கு கடன் வசதி செய்துதர வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். கடன் வசூலைப் பொறுத்த வரையில் நிலுவையை 40 சதவீதத்திற்கும் குறைவாக கொண்டுவரவில்லை என்றால் தமிழ்நாடு 'பிளாக் லிஸ்ட்' செய்யப்படும்; கடன்தருவது நிறுத்தப்படும் என்ற கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து பலமுறை கூறிவந்தாலும் கூட நடப்பாண்டில் ஏற்பட்டிருக்கிற இடர்ப்பாடுகள் எல்லாம் இயற்கையின் சோதனையால் ஏற்பட்டவை என்பதால் நீண்டகாலக் கடன், குறுகிய காலக் கடன்களை எல்லாம் ஜப்தி நடவடிக்கை மூலம் வசூல் செய்யக் கூடாது என்ற உத்தரவை அரசு இட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. நபார்டு—நேஷனல் பாங்க் ஃபார் ஆக்ரிகல்சர் அண்ட் ரூரல் டெவலப்மென்ட்—என்ற மதிய அரசு அமைப்போடு மாநில அரசு கலந்துபேசி, அவர்கள் அனுமதியைப் பெற்று குறுகிய காலக்கடனை மத்திய காலக்கடனாக மாற்றியமைக்கவும் நீண்டகால கடன் தவணையைத் திருப்பிச் செலுத்துவதை தள்ளிப் போடவும் அரசு தற்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ் தரணி பூராவுக்கும் நெல் தருகிற தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் பிரச்சினை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், மத்திய அரசு தலையீடு இல்லாத காரணத்தால், கர்நாடகத்தைத் தட்டிக் கேட்காத காரணத்தால் நமக்கு வரவேண்டிய தண்ணீர் வராமல் காவேரி வறண்ட காவேரியாகிவிட்டதால் நெல் விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து விவசாயிகளைக் காப்பது மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்குத் தேவையான குறைந்த பட்ச அரிசியைப் பெறவும் ஒன்றைக் கோடி ரூபாய் செலவில் ஆயிரம் குழாய்க் கிணறுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.



அது மட்டுமல்ல. 1983-84 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி தஞ்சை மாவட்டத்தில் 4000 குழாய்க் கிணறுகளை 6 கோடி ரூபாய் செலவில் அமைத்து, தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து, நெல் விளைவிக்க அரசு நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், கூட்டுறவு துறையிலே நாம் ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளை எடுத்ததன் பலனாக 1980 ஏப்ரல் முதல் 1982 மார்ச் 31 வரையுள்ள காலத்தில் வைப்புத் தொகை — டிபாசிட்— எல்லாம் ஏற்கனவே

இருந்த நிலையைவிட, அதாவது 1980 ஆம் ஆண்டில் இருந்ததைவிட 36 சதவீதம் உயர்ந்துள்ளது. இதை கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளுடைய சிறப்பான பணிக்கு உதாரணமாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

மேலும் புதிதாக ஒரு அமைப்பை தற்போது நிறுவ நாம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

(இரவு 8-20).

புதியதாக ஒரு Organisaion of Growers Co-operative Society என்று, ஏற்கனவே மார்க்கெட்டிங் சொசைட்டீஸ் இருந்த போதிலும், உற்பத்தியாளர்களுடைய சங்கங்களாக, அக்ரிகல்சுரல் கோவாப்ரேட்டிவ் மார்க்கெட்டிங் சொசைட்டீஸ் என்று இருந்த போதிலும் கூட, அவைகள் எல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்ட அளவிலும் இயங்கக் கூடிய கூட்டுறவுச் சங்கங்களாக மட்டும்தான் இருக்கின்றன. அவைகள் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் இருக்கிற உழவர்களுக்கு பயன் அளிக்காத நிலையில் இருப்பதை உணர்ந்து, அந்த ஏழை உழவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு, உற்பத்தி செலவுக்குக்கூட கட்டுப்படியாகாத நிலையில், குறைந்த பட்ச வருமானம்கூட இல்லாத வகையில் அவர்கள் துன்பப்படுவதை உணர்ந்த, நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலே உள்ள தேர்ந்தெடுக்கப்பெற்ற சில கிராமங்களிலேயும், Growers Co-operative sales Society என்று அமைத்து, அதன் மூலமாக அவர்களுக்கு குறைந்த பட்ச விலைக்கு நுகர் பொருள்கள் எல்லாம் கிடைக்கவும், அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்கள் எல்லாம் நல்ல விலைக்கு, மேல் அமைப்புகளின்

மூலமாக வருமானம் பெறக்கூடிய வகையில் புதிய கூட்டுறவுச் சங்கங்களை வரும் ஆண்டிலேயிருந்து தமிழகத்தில் ஏற்படுத்தி, அதன் மூலமாக கிராமத்திலே இருக்கிற உழவுப் பெருமக்களை உறிஞ்சுகின்ற இடைத்தரகர்களை அறவே ஒழிக்க அரசு இத்தகைய ஒரு புதிய நடைமுறையைக் கொண்டுவர இருக்கிறது.

பயிர் காப்புறுதித் திட்டத்தைப் பற்றிமாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். பயிர் காப்புறுதித் திட்டத்தைப் பொறுத்த வரைக்கும் 42 தாலுக்காக்களில் இதுவரையில் நடைமுறைப் படுத்தி வருகிறோம். அந்தத் திட்டத்தைப் பொறுத்த வரைக்கும், பயிர் காப்பு உறுதித் திட்டத்தை ஜி.ஐ.சி.யுடன் சேர்த்து நடைமுறைப்படுத்துகிற காரணத்தால், அந்த அமைப்புடன் கலந்து என்ன நடவடிக்கையை எடுக்கலாம் என்பது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.

அதைப் போலவே, நகைக் கடன்களைப் பொறுத்தவரைக்கும், பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அவைகளை அதிகமாக வழங்க வேண்டும் என்ற முடிவை இந்த அரசு எடுத்திருக்கிறது. ஆனால் ஒரு நிலையிலேயே வருமானத்தை பெருக்குவதற்கு என்ன செய்வது என்ற அடிப்படையிலேதான், அவர்கள் காட்டேஜ் பேஸ்ட் இன்டஸ்ட்ரீஸ், ஃபார்ம் பேஸ்ட் இன்டஸ்ட்ரிஸ் அமைக்க வேண்டும். அதற்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஒரு ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் வைத்திருக்கிற சிறு உழவர்களுடைய வருமானத்தைப் பெருக்க, அவர்களுக்கு நிலவள வங்கிகள் மூலமாக கடன் தரவேண்டும், அதன் மூலமாக அவர்கள் ஃபார்ம் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் அமைக்க வேண்டும் என்பதற்காக, இந்தஅரசு பெருமளவில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதற்கு உதவி செய்கிற முறையிலேதான் கூட்டுறவுச் சட்டத்திலே கூட ஒரு ஷரத்து கொண்டு வந்திருப்பதை இந்த அவையிலேயே முன்பே சொல்லியிருக்கிறேன். அந்தஅடிப்படையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம். கிட்டத்தட்ட 22 தொழில்களை நாம் கண்டு அறிந்திருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்திலும் உழவர்கள் இன்னின்ன பயிர்களை பயிர் செய்வார்களேயானால், அந்தப் பயிர்களின் மூலமாக, that can be converted into cottage or farm based industries இடைத்தரகர்கள் இல்லாமல் ஏற்படுத்தினால் அவர்கள் இன்னும் லாபம் காணமுடியும், அவர்களுக்கு கூடுதலாக வருமானம் கிடைக்கும் என்று சட்டத்திலே அதற்கென்று இடம் தந்து, அந்த அடிப்படையிலே கொண்டு வந்திருக்கிறோம்.

நகை ஈட்டுக் கடனைப் பொறுத்தவரைக்கும், சென்ற ஆண்டு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கிட்டத்தட்ட 160 கோடி ரூபாய் அளவுக்கு தந்தோம். அதன் மூலமாக 11 இலட்சம் மக்கள் பலன் அடைந்தார்கள். வரும் ஆண்டிலும் கிட்டத்தட்ட 160 கோடியிலிருந்து 170 கோடி வரைக்கும் நகை ஈட்டுக்



கடன் தரவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. நலிந்த பிரிவினர்களுக்கு நன்மை விளைவிக்கின்ற திட்டமாக இது இருக்கின்ற காரணத்தாலே, வட்டிக்குப் பணம் கொடுக்கும் மணிலெண்டர்கள் ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சுவதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக பெருவாரியான நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள் பயன்படுகிற அளவுக்கு நகை ஈட்டுக் கடன் தருகிற திட்டத்தினை, சுமார் 160 கோடி வரையில் தரவேண்டும் என்கிற திட்டத்தினை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம்.

ஏற்கெனவே அறிவித்ததைப் போல, இப்படிப்பட்ட சட்டம் நாட்டுக்கு நல்லது. 4 percent differential rate of interest, என்ற வகையில் நலிந்த பிரிவினர்களுக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கடன் என்ற பெயரால் ஒரு சில இடங்களில், ஒரு சில வங்கிகள் 10 பேர்களுக்கு மட்டும் தந்துவிட்டு, கடன் கொடுக்கப்பட்டதாக கணக்கு காட்டப்பட்டு, உண்மையாகவே தேவைப்படும் ஏழை எளிய மக்களுக்கு கடனைக் கொடுக்க மறுக்கிறார்கள்.

இப்போதெல்லாம் நேஷனலைஸ்டு வங்கிகள் வசதி படைத்தவர்களுக்கும், பணம் படைத்தவர்களுக்கும் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் கடனைத் தந்துவிட்டு, நடுத்தர ஏழை எளிய மக்களுக்கு தர மறுக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. நான் இதை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மீது ஒரு குறையாகவே சொல்ல விரும்புகிறேன். மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நலிந்த பிரிவினர்களுக்காகவே இந்தத் திட்டத்தை தீவிரமாகச் செய்ய வேண்டும் என்று கொண்டு வந்தார்கள். ஆனால் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள், அவைகள் எந்தப் பணிக்காக முக்கியமாக நாட்டுடமையாக்கப்பட்டனவோ, அந்தப் பணியினைச் செய்யாமல் இருப்பது வேதனைக்குரிய ஒன்றாகும்.

சிலருக்கு மட்டுமே அந்தக் கடனைத் தந்துவிட்டு, மற்றவர்களுக்கு மறுத்துவிடுவதால், வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் சொந்தமோ என்று அவர்கள் ஐயுறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், நலிந்த பிரிவினரைக் காக்க வேண்டிய நிலைமையில் இருக்கும் நேஷனலைஸ்டு வங்கிகள் அவற்றைச் செய்யவில்லை என்று சொன்னாலும், அந்தப் பணி நமது பணி என்ற முறையிலே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நலிந்த பிரிவினர்களுக்கும், சிறு தொழில் முனைவர்களுக்கும் கடன் தரவேண்டும் என்று சென்ற ஆண்டு உத்தரவு இட்டு, வரும் ஆண்டிலே அதை மேலும் தீவிரமாக்கி, அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

அடுத்து. 200 கிராமங்களில் கோடவுன்களைக் கட்டவேண்டும் வரும் ஆண்டிலே என்று உத்தரவினை நாம் இட்டிருக்கிறோம். நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் 1979-80-வது ஆண்டில் தமிழகத்திலே உள்ள 29 ஹோல்சேல் ஸ்டோர்களில் 12 ஹோல்சேல் ஸ்டோர்கள்தான் இலாபத்திலே

இயங்கி வந்தன. மற்றவை எல்லாம் நட்டத்திலேதான் இருந்து வந்தன. ஆனால் 1980 ஆம் ஆண்டுக்குப் பிறகு பல்வேறு கடுமையான நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, ஊழல்கள் புரிபவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்ததன் காரணமாக தற்போது அந்த 29 ஹோல்சேல் ஸ்டோர்களில் 23 இலாபத்திற்கு வந்திருக்கின்றன. இதை எல்லாம் நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் குறைபாடுகள் ஆங்காங்கே இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் பலர் சுட்டிக்காட்டியதைப் போல தனி அதிகாரிகளின் கையிலே கூட்டுறவு இயக்கம் குறிப்பாக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றபோது சில மக்களின் கண்காணிப்பு இல்லாத காரணத்தால் குறைபாடுகள், தவறுகள் நிகழ்ந்தாலும்கூட இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு நல்ல நிலைமையில் அங்காடிகள் இருப்பது தமிழகத்தில் தான் என்று மத்திய அரசே பாராட்டி இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் சுய வேலைவாய்ப்புக்காக முதல் முறையாக அன் எம்ப்ளாய்ட் எஜுகேட்டட் யூத் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி என்பதை நாம் சென்னையிலே அமைத்தோம். தற்போது கோவையிலே ஒன்றைப் பதிவு செய்திருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அப்படிப் பதிவு செய்ய வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். காரணம் unemployed Educated youth co-operative societyis meant for self-employment என்ற முறையில் அந்த அமைப்பை ஒவ்வொரு மாவட்டத்திலும் நாம் அமைக்கின்றபோது அவர்கள் கடன் பெறுகின்ற வாய்ப்பு ஏற்படும். அதிலும் சாதாரண ஏழை எளியவர்களுக்கு அதன் பலன் அதிகமாகக் கிட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு அதை தற்போது நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கிறோம்.

1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 110 கோடி ரூபாய் அளவுக்கு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மூலமாக விவசாயிகளிடமிருந்து விளைபொருட்களை வாங்கி விற்று அதன் மூலமாக உழவர்களுக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய வகையிலே பணிகளை விரிவாக்கி இருக்கிறோம் என்பதைக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, சென்னையிலே சென்ற ஆண்டு தீவிரமாக்கப்பட்ட காய்கறி வினியோகத் திட்டத்தை கோவைக்கும், திருச்சிக்கும், மதுரைக்கும், தஞ்சைக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் சில மாதங்களில் வேலூருக்கும், கும்பகோணத்திற்கும், நெல்லைக்கும், நாகர்கோவிலுக்கும் அந்த காய்கறி வினியோகத் திட்டத்தை, நவீனத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து சாதாரண மக்களுக்கு குறைந்த விலையில் காய்கறி கிடைக்க வேண்டும் என்பதற்காக அந்தத் திட்டத்தை அந்த மாவட்டங்களுக்கு எல்லாம் நாம் விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.



அடுத்து இன்னும் ஒன்று. அரசு ஊழியர்கள் பணியிலே இருக்கும்போது மரணம் அடைந்தால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய் 10 ஆயிரம் வழங்கும் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஆனால் கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு அந்த வசதி இல்லை. எனவே எல்லா கூட்டுறவு நிறுவனங்களிலும் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு உதவுகின்ற வகையிலே குடும்ப நலத் திட்டத்தை செயலாக்க முடிவு செய்திருக்கிறோம்.

அந்த வகையில் தற்போது 26–3–1983 அன்று அரசு ஒரு ஆணையினை இட்டிருக்கின்றது. அதன்படி கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் மரணம்அடைந்தால்அவர்களுடைய சட்டபூர்வமான வாரிசுதாரர்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக அவர்கள் மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் செலுத்த வேண்டும். அவர்களை பணியில் அமர்த்தி இருக்கும் கூட்டுறவு நிறுவனமும் ஒரு ரூபாய் செலுத்த வேண்டும். இதற்காக இந்தியன் ஆயுள் காப்புறுதிக் கழகம் ஒட்டுமொத்தமாக அனைவருக்கும் சேர்த்து ஒரு ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தை வழங்கும். இந்தத் திட்டத்தின் மூலமாக 10 ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 55,000–க்கு மேற்பட்ட ஊழியர்கள் பயனடைவார்கள். இந்தத் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துகிறோம் என்ற நிலைமையில் இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் எந்த அளவுக்கு நலிந்த நிலைமையில் இருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், இந்த அவைக்கும் நன்கு தெரியும். பல கூட்டுறவுச் சங்கங்கள் நட்ட நிலைமையிலே இருந்து அரசினுடைய வேஸ் அன்ட் மீன்ஸ் அட்வான்ஸ் இல்லை என்றால் ஊழியர்களுக்கு சம்பளமே கொடுக்க முடியாத நிலையில் கூட இருக்கின்றது. ஆனால் மாண்புமிகு திரு. கருப்பையா அவர்களுடைய உள்ளத்திலே ஒன்று எழக்கூடும், 6 ஆயிரம் ரூபாய் ஏன், அவர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய் என்று வழங்கலாமே என்று அவர்கள் எண்ணக்கூடும்.

(இரவு 8–30)

26—3—1983-ல் உத்திரவு போட்டிருக்கிறோம். அதை 10 ஆயிரமாக உயர்த்துவது என்பது இந்தத் திட்டத்தை 6 ஆயிரம் என்று தற்போது நடைமுறை செய்துவிட்டு நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கும்போது கூட்டுறவு சங்கங்கள் சற்று வலுவினைப் பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அடுத்த கட்டமாக அதை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்த அரசு ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே தமிழ்நாடு மாதில கூட்டுறவு வங்கியும், மற்றும் மாவட்ட அளவில் உள்ள 17 மத்திய கூட்டுறவு வங்கிகளும் மக்களுக்கு சிறப்பான சேவையை செய்யும் வகையில் அதிகமான வங்கிகளைத் திறக்கவேண்டும் என்ற

முடிவுக்கு இந்த அரசு வந்தது. 1977-ம் ஆண்டுக்கு முன்னால் 360 கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் தமிழகத்தில் இருந்தன. ஆனால் தற்போது நாம் அதிகப்படியாக இந்த ஐந்து ஆண்டு காலத்தில் 80 கூட்டுறவு வங்கி கிளைகளை திறந்து ஒட்டுமொத்தமாக 440 என்ற நிலைக்கு கொண்டு வந்து இருக்கிறோம்.

அது மட்டும் அல்லாமல் கூட்டுறவு மைய வங்கியினுடைய காமன் குட் பண்டு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி போன்றவர்கள் எல்லாம் பொறுப்புக் குழுவில் அவர்கள் தெரிவித்த வருத்தம் common good fund sho ld be properly and purpose fully utilised என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே காமன் குட் பண்ட் பொறுத்தவரைக்கும் மேலவையில் கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பெரியவர் சங்கரலிங்கம் அவர்கள் சொல்கிறபோது மருத்துவமனை வசதி இல்லாத பல பகுதிகளில் மருத்துவமனைகளை கட்ட இந்த காமன் குட் பண்டை உபயோகப்படுத்தலாம் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் கூட பல ஆலோசனைகளைச் சொன்னார்கள் அதன் அடிப்படையில் கூட்டுறவு மைய வங்கியினுடைய பொது நல நிதியிலிருந்து இன்றைய இன்றியமையாத தேவையான குடிநீர் பிரச்சனையை தீர்க்க மத்திய அரசினுடைய போதிய நிதி வசதி இல்லாத நேரத்தில் நாம் காமன் குட் பண்டிலிருந்து குடிநீர் வசதிக்காக மாண்புமிகு அண்ணன் திரு. இராகவானந்தம் அவர்கள் துறையின் மூலமாக நிதியினை தந்து பல பகுதிகளில் குடிநீர் திட்டங்களை அமைக்க இந்த கூட்டுறவு மைய வங்கிகள் மூலமாக நிதியை தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், சில இடங்களில் மருத்துவமனைகள் கட்டுவதற்கும் வசதி செய்து தரப்படும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே மருத்துவ வசதிகளைப் பொறுத்த வரைக்கும் ஒவ்வொரு மாவட்டத்தில் இருக்கிற மத்திய கூட்டுறவு வங்கியும் இதர கூட்டுறவு நிறுவனங்களும் சாதாரண நிலையில் உள்ள கிராமங்களில் மகப்பேறுமருத்துவமனைகளைக் கட்டித்தர அந்த காமன் குட் பண்டிலிருந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட நாம்முடிவு செய்து இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபுகோவிந்தராஜன் அவர்கள் அன்று அவையில் சுட்டிக் காட்டிய கடலூர் கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கத்தில் ஏற்பட்ட ஒரு ஊழல் பற்றி சொன்னார்கள். இதை நான் உங்களுக்கு விளக்கிச் சொல்லுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக மற்றும் விற்பனை சங்கத்தைப் பொறுத்தவரைக்கும் இந்த நிகழ்ச்சி 29—11—1982-ம் தேதி நடந்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அண்மையில் சென்றவாரம் அவையில் இதைப்பற்றிச் சொன்



னார்கள். அன்று நான் அவையில் இல்லை. இருந்து இருந்தால் அதற்கான விளக்கத்தைக்கூட நான் தந்து இருப்பேன். மாண்புமிகு உறுப்பினர் எனக்கு தபால் அனுப்பி இருப்பதாக சொன்னார்கள். உண்மையில் தபாலை எனக்கு 9—3—83-ல் அனுப்பியிருக்கிறார்கள். அது ஆர்டினரி தபாலில் வந்த தால், எனக்கு வந்து சேருவதற்கு சற்று காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் கூட 29—11—1982-ம் தேதி அன்று தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக மற்றும் விற்பனை சங்கத்தில் நடந்த குறைபாடுபற்றி மக்களிடமிருந்து மனுக்கள் வந்ததன் அடிப்படையில் அப்போது நான் விசாரணைக்கு உத்தரவிட்டேன். சங்கத் தணிக்கையாளர் சங்கத்தில் நடந்த குறைபாட்டைக் கண்டுபிடித்து தனி அறிக்கையை அனுப்பினார். ஆய்வு செய்து 7—12—1982 அன்று ஜாயின்ட் ரிஜிஸ்ட்டிரார் அவர்கள் பிரத்தியேகமாக பணித்து ரகசிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிக்கப்பட்டது. அவரும் விசாரணை செய்தார்கள்.

Primea Facil there is a ca e அங்கே குற்றம் நடந்து இருக்கிறது என்பதை அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் கூட மிக சாமர்த்தியமாக அந்த ஊழல் நடந்து இருக்கிற காரணத்தால், கண்டுபிடிப்பதற்கு சற்று சிரமமாக இருக்கிறது என்பதை அவர்கள் தெரிவித்த பிறகு ஸ்பெஷல் ஸ்குவார்டு வேண்டும் என்று ஆர்.சி.எஸ்.—ஐ கேட்டார்கள். ஸ்பெஷல் ஸ்குவார்டு தரப்பட்டது. அப்படி ஸ்பெஷல் ஸ்குவார்டு தரப் பட்டும் கூட எந்த விதத்தில் அந்த தவறு நடந்தது என்பதை முழுமையாகக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு இருக்கிறது. சென்னையிலே இருக்கிற சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் உத்திரவின் அடிப்படையில் ஒரு ஆலையிலிருந்து எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் செல்கிறபோது வழியிலே செக்போஸ்ட் இருக்கிறது. செக்போஸ்டிலே சீல் எல்லாம் போட்டு இருக்கிறார்கள். லாரி அங்கே சென்று இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோகவிற்பனை சங்கம் சம்பந்தப்பட்ட ? பிராஞ்சு களுக்கும் கிளைகளுக்கும் சென்று இருக்கிறது. சென்று, அங்குகூட வந்ததாக அவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வந்தது என்று சொல்லிவிட்டார்கள். எங்களுக்கு எல்லாம் வந்தது சென்னையிலிருந்து லாரியில் வந்தது இதோ பார் ரசீது இருக்கிறது, அதைப்போலவே எங்களுக்கு பிராஞ்சுக்கு வந்து இருக்கிறது, அதையும் நாங்கள் வாங்கி யிருக்கிறோம், இங்கிருந்து நாங்கள் கிராமங்களில் இருக்கிற சாதாரண சங்கங்களுக்கு கொடுத்துவிட்டோம், அவர்கள் என்ன செய்தார்களோ தெரியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். Records have been made Perfect என்பதற்காகச் சொல்கிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு கோவிந்தராஜன் சற்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாலும்கூட உண்மையைப் பேசுவார் என்பதை நான் அறிவேன். எனவே இதை எப்படியும்

கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக சாதாரண விசாரணையில் கண்டுபிடிக்கமுடியாது என்பதற்காக உடனடியாக சி.ஐ.டி. Commrecial Crime Branch Police in vestigation செய்யவேண்டுமென்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரி உயர்திரு. சரவணப்பெருமாள் தலைமையில் இருக்கிற ரகசியப் பிரிவுக்கு அந்தப் பொறுப்பை ஒப்படைத்தோம். அவர்கள் பல குற்றச்சாட்டுகளைத் தந்தார்கள். காவல் துறை ரகசியபோலீஸ் சென்று ஆய்ந்த பிறகு அவர்கள் இப்போது கண்டுபிடித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எழுந்திருக்கிற ஐயமெல்லாம் ஒருவேளை சென்னையிலே இது விற்கப்பட்டிருக்க வேண்டும், லாரிக்காரனும் உடந்தையாக இருந்திருக்கவேண்டும், செக்போஸ்ட் சம்பந்தப்பட்டவனும் உடந்தையாக இருந்திருக்கவேண்டும், அங்கே இருக்கிற பிராஞ் மேனேஜரும் உடந்தையாக இருந்திருக்க வேண்டும், இதே இருக்கிற அப்பாவி சங்கத்தின் தலையில் கையை வைக்கலாம் என்று போட்டார்கள், ஒருவேளை சற்று காலதாமதமாகியிருந்தால்கூட இதைக்கூட கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கலாம். நுண்ணியமான முறையிலே குற்றத்தை யாரும் எளிதில் கண்டுபிடிக்க முடியாமல் செய்த குற்றத்தைக் கண்டுபிடித்த திரு. சரவணப்பெருமாள் அவர்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும்கூட நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நடவடிக்கை எடுக்காமல் இல்லை, கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. புதுப்பாளையம் பிராஞ் மேனேஜர் பன்னீர்செல்வம் என்பவரும், உடுமலைப்பேட்டை பிராஞ் மேனேஜர் மகாதேவன் என்பவரும், திருக்கோயிலூர் பிராஞ் மேனேஜர் சோமசுந்தரமும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைப் போலவே முத்தையா, சுப்பிரமணியம் என்ற மற்ற இருவர்கூட பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த முறைகேட்டிலே முக்கியமான மூளை செலவழித்து செயல்பட்டவரே இந்த முத்தையா என்று ரகசிய காவல்துறை சொல்லியிருக்கிற காரணத்தினால் அவர்கள்மீது முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒருவேளை ஸ்பெஷல் ஆபீசர் மீதும் தவறு இருக்குமோ என்ற ஐயம் இருக்கிற காரணத்தினால் அவர் உடனடியாக மாற்றப்பட்டிருக்கிறார். மாற்றப்பட்டதற்குக் காரணம் C.I.D. is going to register a case. அதிலே, அவர்கள் ஆய்வில் அவருக்கும் தொடர்பு இருக்கும் என்று வருமேயானால், விரைவாக அவர்கள் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவரும் பணிநீக்கம் செய்யப்பட்டு அவர்மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் நிறைய பேசவேண்டுமென்றாலும்கூட நேரம் இல்லாத காரணத்தினால் முடியவில்லை. இதைப்போலவே சென்னையிலே இருக்கிற சிந்தாமணியில்கூட 4 தினங்களுக்கு முன்னால் பத்திரிக்கை களிலே பார்த்து இருக்கலாம். சென்னை சிந்தாமணியிலே



19 மூடை அரிசி என்று கருதுகிறேன், இரவு 12 மணி, 1 மணிக்கு அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களே அரிசியை கடத்தி விற்க முயற்சி செய்திருக்கிறார்கள். நல்லவேளையாக தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ்ஆகியமூன்று இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் பொதுமக்களின் சார்பிலே இருக்கிறவர்களும் அந்தக் குற்றவாளிகளை—சில நாட்களாகவே இரவிலே முயன்று முயன்றுஏமாந்திருக்கிறார்கள்-கண்டுபிடித்து உடனடியாக நாங்கள் காவல் துறைக்குச் சொல்லி அவர்கள் பாலோ பண்ணி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதை நான் சொல்வதற்கு காரணம் கூட்டுறவு அங்காடிக்கு நாம் விற்கிற பொருள்கள் எல்லாம் விலை குறைவாக இருக்கிறது. குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்கிறோம், ஆனால் இன்றைக்கு நாட்டிலே வறட்சி காரணமாக விலைவாசிகள் ஓரளவுக்கு வெளிச் சந்தையிலே ஏறியிருக்கிற காரணத்தினால் எப்படியும் 1, 2 மூட்டைகளைக் கடத்தி விற்றால்கூட லாபம் கிடைக்கும் என்று அந்த முயற்சியிலே பலதரப்பட்டவர்கள் அதிலே தலையிட்டு அந்தத் தவறை செய்திருக்கிறார்கள். சிலரை நாம் கண்டுபிடித்து வருகிறோம். கண்டுபிடிக்காமல்கூட சில இருந்துவிடுமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. இந்தக் குறையை களைய வேண்டுமென்ற நோக்கத்தோடு தற்போது வருகிற ஏப்ரல் 14 ஆம் தேதியிலிருந்து தமிழகத்திலே இருக்கிற ஒவ்வொரு கூட்டுறவு நுகர்வோர் அங்காடிக்கும் மக்கள் கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டுமென்று அரசு உத்திர விட்டு இருக்கிறது.

(இரவு 8—40.)

அந்த மக்கள் கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரைக்கும் அந்த நகரிலே, அந்த ஊரிலே, கிராமத்திலே இருக்கிற பொது மக்களும், அனைத்து அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் இடம்பெற வேண்டுமென்றும், இதுபோன்ற தவறுகள், — ஏனென்றால் 'ஸ்பெஷல் ஆபீசர்ஸ் ரெஜிம்' இருக்கிற காரணத்தால் மக்களுடைய கண்காணிப்பு இல்லாமலிருந்து குறைகள் வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சுட்டிக் காட்டி இருக்கிறீர்கள்-இந்தக்குறை இருக்கக் கூடாது என்று புதிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இருக்கிற சந்து பொந்துகளை எல்லாம் அடைக்கிற அளவிற்கு பல திருத்தங்களை இந்த சட்டத்திலே நாம் கொண்டு வந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கிற காலம் வரையில் மக்கள் குழு இருந்தால் தான் இதுபோன்ற குறைபாடுகள், பஞ்சம் நாட்டிலே இருக்கிற நேரத்தில், வறட்சி இருக்கிற நேரத்தில் நுகர்வோர் கூட்டுறவு அங்காடிகளில் தவறு செய்ய நினைக்கிறவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில் நாம் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அதைப் போலவே பல வழக்குகளை நாம் கண்டு பிடித்திருக்கிறோம். சென்னை சிந்தாமணியில் மட்டுமல்ல. கோவை சிந்தாமணியில், அதைப் போலவே உதகமண்

டலம் சூப்பர் மார்க்கெட்டிலே மற்றும் தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு இடங்களில் கிட்டத்தட்ட 15, 18 இடங்களில் இது போன்ற பெரிய தவறுகள் ஆங்கே சில இடங்களில் அதிகாரிகளே உடந்தையாக இருந்து, சில இடங்களில் அதிகாரிகளும், பணியாளர்களும் இணைந்து செயல்பட்டதைக் கண்டு பிடித்து பல வழக்குகளை நாம் பதிவு செய்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து பலரை பணி நீக்கம் செய்திருக்கிறோம். கோவையிலே சிந்தாமணியிலே மட்டும் கிட்டத்தட்ட 39 பேர்களை பணி நீக்கம் செய்திருக்கிறோம். வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஆனாலும் கூட அந்த அளவிற்கு காவல் துறை மூலமாக நடவடிக்கை அரசு எடுத்தாலும் முழுமையான ஒரு செம்மையை ஏற்படுத்த முடியாது என்று கருதுகிறேன். காரணம் மக்கள் கண்காணிப்புக் குழு இருந்து மக்களே இதை பார்க்கிற போது தான் அச்ச உணர்வோடு அவர்கள் செயல்படுவார்கள் என்பதற்காகத்தான் ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதியிலிருந்து கூட்டுறவுத் துறையிலே உள்ள, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பொறுப்பிலே உள்ள அனைத்து கூட்டுறவு அங்காடிகளுக்கும் மக்கள் கண்காணிப்புக் குழுவைப் போட்டு அங்கே ஒழுக்கமான வகையில் எல்லாம் நடக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதைச் சொல்கிறேன். வருகிற கூட்டுறவுச் சட்டத்திலே இதுபோன்ற குறைகள் எல்லாம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் பொருள்களை வாங்குகிறபோது மாண்புமிகு உறுப்பினர் என். வி. என். சோமு அவர்கள் பேசுகிறபோது ஒரு குறிப்பிட்ட அமைப்பிலே பொருள்கள் வாங்கி அவை தேக்கத்தில் இருக்கின்றன என்றுகூட சொன்னார்கள். அதைப் போல குறைகள் சட்டத்திலே இருக்காத அளவிற்கு வருகிற சட்டம்

Because these are certain happenings consequent on the loopholes that are existing in the Acts and the rules framed thereunder.

இந்த சந்து பொந்துகளை புதிய சட்டத்திலே அடைத்திருக்கிறோம். 162வது பிரிவு சற்று கடினமான பிரிவாக இருக்கிறது. இருந்தாலும் கூட ஸ்டாக் டெபிசிட் என்ற பெயரிலே, ஏதோ பொருள்களை எல்லாம் எலி கடித்து விட்டது, இப்படி போய் விட்டது, அப்படி போய் விட்டது என்று ஏமாற்றினாலும் கூட, அந்த பெர்மிசிபிள் ஸ்டாக் டெபிசிட்டிற்கு மேலே எங்கே ஸ்டாக் டெபிசிட் இருந்தாலும் அது கிரிமினல் குற்றம் என்று நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதைப் போல உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம். உற்பத்தியாளர்களிடமிருந்து தான் பொருள்களை வாங்க வேண்டும். அப்படி வாங்குகிறபோது பொருள்கள் தரமான பொருள்களாக இருக்க வேண்டும். அக்மார்க் அல்லது ஐ.எஸ்.ஐ. பொருளாக இருக்க வேண்டும் என்பதை சட்டத்திலே இடம் பெற செய்திருக்கிறோம். அப்படி மீறி அதை செய்கிறவர்கள் எல்லாம்

'Anything other than that will be construed as corrupt practice'

என்று 162வது பிரிவிலே கொண்டுவந்திருக்கிறோம். புதிய கூட்டுறவுச் சட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துகிறபோது



பல ஆண்டுகள் தவறு செய்திருந்தும்கூட கண்டு பிடிக்க முடியாத நிலை பழைய சட்டத்திலே இருந்தது. புதிய சட்டத்தில் ஒரு வருட காலத்தில் ஆடிட்டை முடிக்கவேண்டும். 9 மாத காலத்திலே இன்ஸ்பெக்ஷனை முடிக்க வேண்டும். 6 ப்ளஸ் 6;3 பிளஸ் 6 என்று ஆறு அல்லது மூன்று மாதக்காலத்திலேயிருந்து அதிகப்படியாக ஆறு மாத காலம் என்று கொடுத்து, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக, ஒருஊழல் குற்றம்சாட்டி என்க்வயரி வந்தால்; இன்வெஸ்டிகேஷன் வந்தால் இத்தனைமாதத்திற்குள் முடிக்கவேண்டும்; ஆடிட், இன்ஸ்பெக்ஷன் வந்தால்இத்தனைமாதத்திற்குள் முடிக்கவேண்டுமென்ற ஷரத்தை கூட்டுறவுச் சட்டத்திலேதான் கொண்டு வந்திருக்கிறோம். நமது கூட்டுறவுச் சட்டத்திலேதான் மெத்தனமாக இருந்து தவறுகளுக்கு காரணம் அதிகாரிகள் இருந்துவிடக் கூடாது என்பதற்காக உடந்தையாக

'To be a deterrent factor in regard to officers'.

என்ற முறையிலே கொண்டு வந்திருக்கிறோம். புதிய கூட்டுறவுச் சட்டத்தின் அடிப்படையில் தேர்தலை நடத்தி பிரச்சினைகளை அணுகுகிற போது, கூட்டுறவு இயக்கத்தில் தற்போது இருக்கிற சந்து பொந்துகள், முறைகேடுகள் அறவே இல்லாத நிலைக்கு செம்மையான நிலையில் கூட்டுறவு இயக்கம் இயங்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. மாண்புமிகு திரு. கருப்பையா, அவர்கள் சொன்னார்கள், வில்லேஜ் ஷாப் ப்ரோக்ராமை பொறுத்தவரையில் அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு 150 ரூபாய் போதாது என்று சொன்னார்கள். உண்மையிலேயே நானும் ஒத்துக் கொள்கிறேன். இன்றைய நிலையில் பணத்தின் மதிப்பு

'Taking into account the erosion into money value and inflationery trend, Rs. 150 is absolutelymeagre and inadequate.'

என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனாலுங்கூட ஏற்கனவே, ரூ. 100 என்று மட்டுமே இருந்தது. பல சங்கங்களில் சம்பளமே இல்லையென்று இருந்ததை ரூ. 150 என்று சென்ற ஆண்டு நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்தோம். அது போதாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். புதிய சட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகிற பொழுது, இது போன்ற நலிந்த நிலையிலே இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களிலிருக்கிற பணியாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு மட்டுமல்ல, சம்பளப் பாதுகாப்பும் தர வேண்டுமென்பதை நான் நடைமுறைக்குக் கொண்டு வருவேன் என்று ஏற்கனவே அவையிலே சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், பல ஆலோசனைகளைக் கூறினார்கள். எல்லோருக்கும் பதில் சொல்ல இயலாத நிலையில் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊட்டியிலே வழக்குரைஞர்கள் ரிலே பாஸ்ட் செய்கிறார்கள் என்றும் அவர்களுக்குத் தனியாக ஒரு மாவட்ட நீதிமன்றம் ஊட்டிக்குத் தேவை என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி அவர்களும், திரு. கல்லன் அவர்களும் என்னிடம் சொன்னார்கள். அவர்கள் சார்பிலே இரண்டு மூன்று உறுப்பினர்கள் கூடப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு.அரங்கநாதன் கூடச் சொல்லி இருக்கிறார்கள், ஒத்துக் கொள்கிறேன். ஆனால், இந்த ஆண்டு நம் நிதி நிலைமை காரணமாகக் கொண்டுவர முடியாமல் போய்விட்டது. ஆனாலுங்கூட சுற்றோட்டத்தில் இது குறித்த கோப்பை அனுப்பி, நிதி அமைச்சரிடம் பேசி, மிகத் தேவையான இதை விரைவிலே நடைமுறைப்படுத்த இந்த அரசு ஆவன செய்யும் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகுஉறுப்பினர்கள் திரு குலசேகரபாண்டியன் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு ஆரணி சண்முகம் அவர்களும் நீதிமன்றம்பற்றிய கோரிக்கையைத் தந்திருக்கிறார்கள். அதுகுறித்தும் அரசு ஆய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லி மாண்புமிகுஉறுப்பினர் வெங்கடசுப்பிரமணியம் கூறிய கோரிக்கை ஏற்கனவே அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அது குறித்தும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

பெருந்துறையைப்பற்றிநான் ஏற்கனவே சொல்லி விட்டேன். திரு. நல்லப்பன் அவர்கள் சொன்ன கோரிக்கையின் மீதும், அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:
விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

திரு. செ. இராமலிங்கம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

திருவாளர்கள் கே. கல்லன், ரா. கிருஷ்ணன், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

" மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,12,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."



மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

திருவாளர்கள் கு. ரமணி, செ. சிவசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கே. கல்லன், எஸ்.என்.இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 14— சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,11,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றபபெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 23—கூட்டுறவு.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். ஏ. பூங்காவனம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் த. வேணுகோபால், எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,03,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, றவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் ற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் ல 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8—49 மணிக்கு ஒத்திவைக்கப் ற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

224. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெரும் திட்டத்தில் றம் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் றயின் 19-7-1982 ஆம் தேதியிடப்பெற்ற 636 ஆம் எண் சாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) (தமிழ் 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் த்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(3) பிரிவின்கீழ் வைமுன் வைக்கப்பெற்றது).

225. திருநாகேஸ்வரம் கிராமத்தின் சென்னை பெருநகர்ப் திக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20—7—1982 ஆம் தியிடப்பெற்ற 657 ஆம் எண் அரசாணையில் வெளியான விக்கை (தமிழ், ஆங்கிலம்). (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு -நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண். 972) 123(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

226. திருநின்றவூர் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகு கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது சம்பந்தமாக வீட்டு தி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20-7-1982ஆம் தேதி ப்பெற்ற 665ஆம் எண் அரசாணையில் வெளியான விக்கை (தமிழ்,ஆங்கிலம்). தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர- டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 972) 123(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

227. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் றம் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் றயின் 20-7-1982ஆம் தேதியிடப்பெற்ற 671ஆம் எண் சாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்).(தமிழ் 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் த்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(3) பிரிவின்கீழ் வைமுன் வைக்கப்பெற்றது).



228. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர் துறையின் 20—7-1982ஆம் தேதியிடப் பெற்ற 674 ஆம் எ அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்).(த நாடு 1971ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புறத் திட்டச் சட்டத் (தமிழ்நாடு சட்டம் எண் 35/1972) 123(3) பிரிவின்கீழ் பேர முன் வைக்கப்பெற்றது).

229. பாடியநல்லூர் கிராமம், நி. அ. பு. எண்கள் 112/18,11 11, 12 மற்றும் 13-ன் சென்னைப் பெருநகர்ப் பகுதிக் பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது சம்பந்தமாக வீட்டுவ நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20—7—1982ஆம் தேதிய பெற்ற 672ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவி (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட புற அமைப்பு திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1 123(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

230. பாலவாக்கம் கிராமம் நி. அ. எண் பாகம் 128, ப 139, மற்றும் 140-ன் சென்னை பெருநகர்ப்பகுதிக்கான பெ திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர் வளர்ச்சித் துறையின் 20—7—1982ஆம் தேதியிடப்பெற்ற 66 எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கி (தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமை திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(3) வின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

231. தமிழ்நாடு 1970ஆம் ஆண்டு நகராட்சிப்பொதுப்பண விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊர்வள உள்ளாட்சித் துறையின் 24-10-1981ஆம் தேதியிடப்பெ 1785 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு, ( நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவை வைக்கப்பெற்றது).

232. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981—82 ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) (ஆங்கி (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்க

142. தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் குறித்த கொ விளக்கக் குறிப்பு, 1983—84 (தமிழ், ஆங்கிலம்).

143. கோரிக்கை எண் 23—கூட்டுறவு குறித்த கொ விளக்கக் குறிப்பு, 1983—84 (தமிழ், ஆங்கிலம்).

[1983 ஏப்ரல் 4

**144.** தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி பற்றிய சிறு குறிப்பு— 31-12-1982-ல் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

**145.** தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் பற்றிய குறிப்பு, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

**146.** தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு—30-6-1982-ல் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

**147.** '' தமிழகத்தில் மத்திய கூட்டுறவு வங்கிகள் '' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

**148.** உழவர்களின் நண்பன், '' டான்பெட்—தமிழக உழவர்களுக்கு ஒரு கூட்டுறவு நிறுவனம் '' என்ற புத்தகம் (1982–83) (தமிழ், ஆங்கிலம்).

**149.** ஆதி திராவிடர் நலம் குறித்த மத்திய சிறப்பு நிதி உதவியின் கீழ் ஏற்பளிக்கப்பட்ட திட்டங்கள் என்ற குறிப்பு (தமிழ்).



[1983 ஏப்ரல் 4

## தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம்.

### 14 ஆம் எண். மானியக் கோரிக்கை குறித்த கொள்கைக் குறிப்பு 1983–84.

இம்மாநிலத்திலுள்ள எட்டு மத்திய சிறைகள் புதுக்கோட்டையில் உள்ள சிறுவர் சீர்திருத்தப்பள்ளி பல்லாவரத்திலுள்ள ஆடவர் பிறகாப்பு இல்லம், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறை, சேலம், திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், சிங்காநல்லூரில் உள்ள திறந்த வெளிச் சிறை, சேலம் மத்திய சிறையோடு இணைக்கப்பட்டுள்ள பண்ணைச் சிறை, தஞ்சாவூர், நாகர்கோவில் ஆகிய இடங்களிலுள்ள கிளைச் சிறைகள், செங்கற்பட்டு, பெரியார், கோவை, நீலகிரி மாவட்டங்களிலுள்ள 26 எண்ணிக்கைகள் கொண்ட அனைத்துக் கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு, கட்டுப்பாடு, நிர்வாகம் முதலியவற்றை சிறைத்துறை கவனிக்கிறது. மேலே குறிப்பிட்டுள்ள நான்கு மாவட்டங்கள் தவிர எஞ்சிய பிற மாவட்டங்களிலுள்ள 93 கிளைச் சிறைகளும் இத்துறையின் மேற்பார்வையுடன் வருவாய்த்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ளன. குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்புப் பிரிவும் இத்துறையின் பொறுப்பில் இயங்குகிறது. குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யும் நிலைக்குத் திரும்புவதைத் தடுத்து நிறுத்தவும், அவர்கள் விடுதலையான பின்னர் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நன்மக்களாக வாழவும், மீண்டும் சமூகத்துடன் இணைந்து நன்கு செயற்படவும், உரிய பயிற்சிகளை நல்கி சீர்திருத்துவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

**1. சிறைகளின் வகைப்பாடு :**

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் பின்வருமாறு ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன :—

(1) மத்திய சிறைகள்.

(2) தனிச்சிறை (மாநில மகளிர் சிறை, வேலூர்).

(3) திறந்த வெளிச் சிறைகள்.

(4) தனிக்கிளைச் சிறைகள்.

(5) கிளைச் சிறைகள்.

பொதுவாக, ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும் ஒரு திங்களுக்குக் குறைவாகத் தண்டனை பெற்றவர்களும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயதுவந்த கைதிகள், இளங்குற்றவாளிகளிடமிருந்து பிரித்துவைக்கப்படுகின்றனர். அதுபோல ஆண் கைதிகளும், பெண் கைதிகளும் தனித்தனியே பிரித்து சிறை வைக்கப்பன்றனர். வழக்கமாகக்

குற்றம் செய்யும் கைதிகள் (Aabitual ρ risoners) சேலத்திலும், கடலூரிலும் உள்ள மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். ஒரு திங்களுக்கு மேலாகச் சிறைத் தண்டனை பெற்ற பெண் கைதிகள் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையில் வைக்கப்படுகின்றனர். இளங் கைதிகளைக் காவலில்வைத்திருப்பதற்காக புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி இயங்குகிறது. தற்காலிக நடவடிக்கையாக, மனநோய்க் கைதிகள் சென்னை அரசினர் மனநலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். வேலூர் மத்திய சிறையில் தொழுநோய் கைதிகளுக்கென தனிச் சிறைக் கூடங்கள் உள்ளன.

சிறைத்துறையின் பொறுப்பிலுள்ள பல்வேறு வகைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. மத்திய சிறைகள் .. .. .. | | 8 |
| 2. மாநில மகளிர் சிறை, வேலூர் .. .. | | 1 |
| 3. சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை .. | | 1 |
| 4. தனிக்கிளைச் சிறைகள் .. .. .. | | 3 |
| 5. கிளைச் சிறைகள் :— | | |
| (அ) சிறைத்துறையின் நேரடிக்கட்டுப்பாட்டில் உள்ளவை | 26 | |
| (இ) வருவாய்த்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளவை. | 93 | 119 |
| 6. திறந்த வெளிச்சிறைகள் .. .. | | 1 |
| 7. பண்ணைச் சிறை .. .. .. | | 1 |
| 8. ஆடவர் பிற்காப்பு இல்லம் .. .. | | 1 |

கிளைச் சிறைகள் நீங்கலாக மத்திய சிறைகளில் மொத்தம் 12,079 கைதிகளுக்கும், கிளைச் சிறைகளில் 3,446 கைதிகளுக்கும் இடவசதி உண்டு. சிறைத்துறை, வருவாய்த்துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள சிறைகள் குறித்த பட்டியலொன்று இணைப்பு IV-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## II. நிர்வாகம் :

சிறைத்துறையின் நிர்வாக அமைப்பைக் காட்டும் விளக்கப் படம் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இத்துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.



1972–73 முதல் 1981–82 வரையிலான ஆண்டுகளில் சிறைத்துறையின் செலவினங்கள், 1982–83க்குரிய திருத்த மதிப்பீடு, 1983–84 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1972–73 முதல் 1981–82 ஆம் ஆண்டு வரை சிறைத்துறையின் வரவினங்கள், 1982–83 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு, 1983–84 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு குறித்த விவரங்கள் ஆகியவை இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கிளைச் சிறைகளைப்படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் சிறைத்துறை நிர்வாகத்தில் எடுத்துக்கொள்ளுதல்.

இம்மாநிலத்திலுள்ள 119 கிளைச் சிறைகளில் 1977 ஆம் ஆண்டிற்கு முன்னர், 10 கிளைச் சிறைகள் சிறைத் துறையின் நிர்வாகத்தில் கொண்டுவரப்பட்டன. 1—10—1981 ஆம் நாளில் இருந்து பெரியார், கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ள 16 கிளைச் சிறைகள் இத்துறையின் நிர்வாகத்தில் கொண்டுவரப் பட்டன. வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, மதுரை, இராமநாத புரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள 55 கிளைச் சிறைகள் சிறைத்துறையின் நிர்வாகத்தின் கீழ் வெகு விரைவில் கொண்டுவரப்பட இருக்கின்றன. தென் ஆர்க்காடு. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களில் எஞ்சியுள்ள 38 கிளைச் சிறைகள் 1983–84 ஆம் ஆண்டில் சிறைத் துறை நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும். ஏழாம் நிதிக் குழு பரிந்துரைத்ததன் பேரில் மேற்சொன்ன திட்டங்கள் அக்குழுவின் நிதி உதவியின் கீழ் வருகின்றன.

(இ) சிறைக்காவலர்கள் பயிற்சிப் பள்ளி :

சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று வேலூரில் உள்ளது இதில் பல்வேறு சிறைகளிலுள்ள 48 இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்களுக்குச் சீர்திருத்த முறைகள், சிறை நிர்வாகம், ஒழுங்கு உடற்பயிற்சி போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் கால அளவு 6 திங்களாகும். மேலும், மத்திய சிறைகள், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியைச் சேர்ந்த 6 முதல் நிலைச் சிறைக்காவலர்களுக்கும், 6 முதன்மைத் தலைமை சிறைக் காவலர்களுக்கும் முறையே 30, 15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், பயிற்சிக் காலத்தில் சீர்திருத்த முறைப்படி சிறைக் கைதிகளை அணுகும் முறை குறித்து பயிற்சியளிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

(உ). (குற்றவாளிகள்) சீர்திருத்த அலுவலர்களுக்கான மண்டலப் பயிற்சிப் பள்ளி :

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு), குற்றவாளிகள் சீர்திருத்த அலுவலர்களுக்கானமண்டலபயிற்சிப் பள்ளிவேலூரில் 1-10-1979 முதல் செயல்பட்டு வருகிறது. சிறைகள், நன்னடத்தை, சான்றளிக்கப்பட்ட பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளிகள், இதர இணைந்த சீர்திருத்தப் பணியிலுள்ள அலுவலர்களுக்கு குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைச் சீர்திருத்தவும் பயிற்சியளிக்கப்படுவதுடன், குற்றவாளிகளைச் சிறந்த முறையில் நடத்தி காலத்திற்கேற்ற மறுவாழ்வு அளிக்கவும், தக்க நடைமுறை நுணுக்கங்கள், வழிமுறைகள் ஆகியவற்றை அளிப்பதை இப்பயிற்சி நோக்கங்களாகக் கொண்டுள்ளது. மத்திய சிறைகளில் கூடுதல் கண்காணிப்பாளர் முதற்கொண்டு, உதவிச் சிறை அலுவலர் வரையுள்ளவர்களுக்கும், ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் உள்ள அதற்கு நிகரான பதவித் தர அலுவலர்களுக்கும், இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. குற்றவியல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை நிருவாகம், இளங்குற்றவாளிகள், நன்னடத்தை, சமூக நலப்பணி, சட்டம், நிறுவன மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. ஒரே நேரத்தில் இம்மாநிலத்தைச் சேர்ந்த 9 அலுவலர்களுக்கு இந்நிறுவனத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது. இதுவரை இம்மாநிலத்தைச் சார்ந்த 50 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தில் தொடர் மற்றும் தொடரா இனச் செலவுகள், நான்கு தென் மாநிலங்களாலும் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன.

## II.I திறந்த வெளிச் சிறைகள்.

இம்மாநிலத்தில் ஒரே ஒரு திறந்த வெளிச்சிறை தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் உள்ளது. இதில் 100 கைதிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது. இதைத் தவிர, சேலம், மத்தியச் சிறையுடன் பண்ணைச் சிறை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூரில் திறந்த வெளிச்சிறை வைத்திருந்த நிலத்தை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுத்ததைத் தொடர்ந்து, அத்திறந்த வெளிச்சிறை மூடப்பட்டுள்ளது.

2. திறந்தவெளிச் சிறைகளின் நோக்கங்களாவன:

(அ) சிறைகளில் காணப்படும் நெருக்கடியைத் தவிர்த்தல்.

(இ) சிறைவாசிகளின் எதிர்காலப் புது வாழ்விற்காக, அவர்களுக்குச் சரியான முறையில் வேளாண்மையில் பயிற்சியளித்தல்.

(உ) உணவுப் பொருள் உற்பத்தியில் சிறைகள் தன்னிறைவு அடைதல்.





(எ) நன்முறையில் நடந்துகொள்ளும் கைதிகளுக்கு நம்பிக்கையின் பேரில் அவர்களுக்கு ஓரளவு உரிமை அளித்தல்.

(ஐ) கைதிகள் குறைந்த அளவே அடைத்து வைக்கப்பட வேண்டும். சிறைகளில் அவர்களை நல்ல முறையில் நடத்த வேண்டும். அவர்கள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் என்பன போன்ற கோட்பாடுகளைச் செயலுக்குக் கொண்டுவருதல்.

3. தற்போதுள்ள திறந்த வெளிச் சிறைகளைப் போன்று, பின்வரும் இடங்களில் திறந்த வெளிச் சிறைகளை அமைப்பது குறித்து செயற்குறிப்புகள் தீவிர பரிசீலனையிலுள்ளன.

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகங்கை அருகில் முத்துப்பட்டி ;

(இ) திருநெல்வேலி மாவட்டத்தில் சிங்கம்பட்டி;

(உ) தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வேலப்பாக்கம் அரசு வி தப்பண்ணை;

(எ) செங்கற்பட்டு மாவட்டத்தில் வேங்கடமங்கலம்.

ஏழாம் நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசு அளிக்கும் நிதியுதவியைக் கொண்டு, மேற்குறிப்பிட்ட நான்கு திறந்த வெளிச் சிறைகளையும் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

## IV. கைதிகளின் வகைப்பாடும் சிறப்புரிமைகளும்.

சிறையில் கைதிகளுக்காக ''ஏ'', ''பி'' என்ற இரு பிரிவுகள் உள்ளன. தண்டனை வழங்கும் நீதி மன்றங்கள் சமூகத் தகுதி, கல்வி, வாழ்க்கைத்தரம், நடத்தை, முன் வரலாறு, சொந்தமாக வைத்துள்ள சொத்து விவரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கைதிகளுக்கு மேற்கண்ட வகுப்புகளை நிர்ணயிக்கின்றன. சமூகத் தகுதி, கல்வி, பழக்க வழக்கம் ஆகியவற்றால் உயர் வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டிருக்கும் கைதிகள் ''ஏ'' வகுப்புப் பெறத் தகுதியுடையவராவர். முற்றிலும் நாகரீகமற்ற முறையில் அல்லது நன்னடத்தையற்ற முறையில் நடந்து கொண்ட குற்றத்தைச் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட எவருக்கும் ''ஏ'' வகுப்பு அளிக்கப்படமாட்டாது. சமுதாயத்திற்கு எதிராகக் குற்றங்கள் புரிந்த கைதிகளும் சிறையில் ''ஏ'' வகுப்பு பெறத் தகுதியுடையவரல்லர். '' ஏ '' வகுப்பில் இல்லாத இதர சிறைவாசிகள் ''பி'' வகுப்பைச் சேர்ந்தவர்களாவார்.

V. (அ) உணவு.

(1) சாதாரண உணவு முறை :

''ஏ'' வகுப்பு கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவு பின்வரும் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது :—

(1) சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் ; (2) சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள் ; (3) அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள். (4) அசைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள், இக்கைதிகள் தங்களது சொந்தச் செலவில் பழங்களையும், பிஸ்கட்டு, கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற உணவுப் பொருட்களையும் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ''பி'' வகுப்புக் கைதிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர், கைதிகளுக்கு, மருத்துவக் காரணங்களுக்காக பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய், பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க அனுமதி வழங்கலாம்.

(2) திருத்தியமைக்கப்பட்ட சீராக்கப்பட்ட உணவு.

இம்மாநிலத்தில், மத்திய சிறையில் ''பி'' வகுப்புக் கைதிகளுக்கு முன்பு, பின்வரும் இருவகை உணவுகள் வழங்கப்பட்டன :—

(i) சத்துணவு.

(ii) ஓரளவு சத்துணவு.

கைதிகளுக்கான உணவில், கலோரி அளவை அதிகம் அளிப்பதற்கு வகை செய்யும் சத்துணவுத் திட்டம் முதலில் சென்னை மத்தியச் சிறையில் 1971 ஆம் ஆண்டு சோதனை அடிப்படையில் செயற்படுத்தப்பட்டது. இத்திட்டம் பின்னர், மதுரை, கோயம்புத்தூர், மத்தியச் சிறைகளிலும் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து செயற்படுத்தப்பட்டது. சத்துணவுத் திட்டத்தின்படி, காலையில் கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக, வாரத்தில் மூன்று நாட்களுக்கு இட்டிலியும், நான்கு நாட்களுக்கு பிட்டும் அளிக்கப்படுகின்றன. மாலையில் தரப்படும் கடலைச் சுண்டலுக்குப் பதிலாக, வேர்க்கடலைப் பருப்பு வழங்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், பாளையங்கோட்டை, சேலம் ஆகிய இடங்களிலுள்ள மத்தியச் சிறைகளிலும் வேலூரிலுள்ள மகளிருக்கான மாநிலச் சிறையிலும், ஓரளவு சத்துணவுத் திட்டம் நடைமுறையில் இருந்தது. இத்திட்டத்தின் கீழ் ''பி''



வகுப்புக் கைதிகளுக்கு வாரத்திற்கு மூன்று நாட்களுக்கு இட்டிலியும், பிட்டும்வழங்குவதைக் கைதிகள் விரும்பாததால் வாரத்தில் நான்கு நாட்களுக்கு கஞ்சி அல்லது இட்டிலியும் வழங்கப்பட்டது. மாலையில் கடலைச் சுண்டல் வழங்கப்பட்டது.

''ஏ'', ''பி'' வகுப்புக் கைதிகளுக்கும், சாதாரண ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கும், விசாரணைக் கைதிகளுக்கும், தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவை வழங்க, உள்துறையின் (சிறை III) 14-9-1982 ஆம் நாளிட்ட 2366 ஆம் எண் அரசாணையில் அரசு கட்டளை பிறப்பித்துள்ளது. ''பி'' வகுப்புக் கைதிகளுக்குத் தற்போது, புளிச்சாதம், தயிர் சாதம், தேங்காய் சாதம் போன்ற பல்வேறு உணவு வகைகள் பொருத்தமான கூட்டுக் கறியுடன் வழங்கப்படுகின்றன. இவ்வாறு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மத்திய சிறைகளில் நடைமுறையில் இருந்த சத்துணவுத் திட்டத்தை விடச் சிறந்ததோர் உணவுத் திட்டம் அனைத்து மத்தியச் சிறைகளிலும், வேலூரிலுள்ள மகளிருக்கான மாநிலச் சிறையிலும், சேலம், கொக்கிராகுளம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள மூன்று தனிக் கிளைச் சிறைகளிலும், சிங்காநல்லூரிலுள்ள திறந்தவெளிச் சிறைகளிலும் 1-10-1982-லிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

சோளத்திற்குப் பதிலாக மில் அரிசி வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்தது.

(3) உணவுக்கான செலவு :

பல்வேறு வகைக் கைதிகளுக்கு அனுமதிக்கத்தக்க, பல்வேறு அளவு உணவுக்கு கைதி ஒருவருக்கு நாளொன்றுக்குஆகும் தோராயமான செலவு குறித்த விவரங்கள் வருமாறு :—

( ) ''ஏ'' வகுப்புக் கைதிகள்:

| | |
|---|---|
| சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள். | ரூ. 8.45 |
| சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள். | ரூ. 9.40 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள். | ரூ. 11.50 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள். | ரூ. 10.10 |

(ii) ''பி'' வகுப்புக் கைதிகள் சாதாரண ரிமாண்டில் வைக்கப்பட்டவர்கள், விசாரணைக் கைதிகள் ஆகியோருக்கு உள்துறையின் (சிறை-III) 14-9-1982 ஆம் நாளிட்ட 2366 ஆம் எண்ணுள்ள அரசாணையின்படி திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு வகைகள் வழங்குவதற்கு.

| | அரிசி உணவு. | கோதுமை உணவு. |
|---|---|---|
| வேலை செய்வோர்-வேலை செய்யாதோர். | ரூ. 4.50 | ரூ. 4.70. |

சிறப்புணவு :—பொங்கல், சுதந்திர தினம் முதலிய விழாக்களின்போது, கைதிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

(இ) உடையும், படுக்கையும் :

''ஏ'' வகுப்புக் கைதிகள் சொந்தப் படுக்கையைப் பயன்படுத்தவும், வேலை செய்யும் நேரத்தைத் தவிர, மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். ''ஏ'' வகுப்புக் கைதிகள் அவர்களது உறவினர்களைக் காணும் போது தங்கள் சொந்த உடைகளை அணியலாம். ''பி'' வகுப்புக் கைதிகள், எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணிய வேண்டும். அனைத்து மத்தியச் சிறைகள், வேலூரிலுள்ள மகளிருக்கான மாநிலச் சிறை, தனிக் கிளைச் சிறைகள், திறந்தவெளிச் சிறைகள் ஆகியவற்றில் சிறை வைக்கப்பட்ட ''பி'' வகுப்புக் கைதிகளுக்கும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியில் உள்ளவர்களுக்கும், உறையுடன் கூடிய ஒரு தலையணை வழங்க 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அரசு ஒப்புதலளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட எல்லாச் சிறைகளுக்கும் உறையுடன் கூடிய தலையணை வழங்கப்பட்டுள்ளது.

(உ) சோப்பு முதலியவை:

திங்களுக்கொரு முறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக ஒவ்வொரு கைதிக்கும் 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும் அவர்களுக்கு சிகைக்காய்த் தூளும் (Soapnut powder), சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்தியச் சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் கைதிகளுக்குக் கூடுதலாக எண்ணெய் வழங்கப்படுகிறது.

நன்னடத்தை உடைய அனைத்து வகுப்புக் கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரண்டு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.



(உ) சோப்பு முதலியவை:

(எ) நேர் காணலும், கடிதங்களும் :

'ஏ' வகுப்புக் கைதிகள் வாரத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதுவதற்கும், பெறுவதற்கும், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரைமணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு கைதிகள் மாதத்திற்கு இரண்டு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும், மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஐ) செய்தித்தாள்களும் இதழ்களும் :

அரசுச் செலவில் 'பி' வகுப்புக் கைதிகளுக்குக் கீழ்க்கண்ட நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன:—

1. தினமணி.
2. சுதேசமித்திரன்.
3. அண்ணா.
4. தினத்தந்தி.
5. தினமலர்.
6. இந்து.

'ஏ' வகுப்புக் கைதிகள் தங்களது சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த செய்தித் தாள்களை வாங்கிக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகுப்புக் கைதிகளும், தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிகைகளை வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். இது தவிர, சிறை நூலகத்தில் சில புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் நூலக ஆணைக் குழுவிடமிருந்தும் புத்தகங்கள் பெறப்பட்டு கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநரைக் கலந்தாலோசித்து, தயாரிக்கப்பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியல் ஒன்று அவசியமேற்பட்டால் அவற்றை வாங்குவதற்குச் சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பப்படுகிறது.

(ஒ) இதர சலுகைகள் :

'ஏ' வகுப்புக் கைதிகள் மேசை, நாற்காலி, கொசுவலை ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும் அருந்துவதற்கும் தேவைப்படும் கலன்கள், புகையிலை ஆகியவை போன்ற பிற வசதிகளை, பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இதற்கு முன் சிறைத் தண்டனை அடையாத, வழக்கமாக குற்றம் செய்யாத, சிறை மருத்துவ மனையில் இருக்கும் கைதிகள் மருத்துவ

ஆலோசனையின்பேரில், சிறை மருத்துவமனையின் வெளிப்புறத்தில் தகுந்த காவலோடு உறங்க சிறைக் கண்காணிப்பாளரின் விருப்பத்தின் பேரில் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைக் கைதிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொறுத்தும், அவர்கள் அனுபவித்துள்ள தண்டனைக் காலத்தைக் கணக்கிட்டும் இரவுக் காவற்காரர்கள் (Convict Night watchmen) மேற்பார்வையாளர் (Convict Overseer) காவலர்கள் (Convict Warders) என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர்.

(ஔ) பொழுது போக்கு வசதிகள் :

ஞாயிற்றுக் கிழமைகள், சிறை விடுமுறை நாள்களில் மத்திய சிறைகளிலுள்ள எல்லாக் கைதிகளும், கைப்பந்து சடுகுடு, பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை விளையாடவும், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையின் பெண் சிறைவாசிகள் வளைபந்து (Tennikoit) விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். மதுரை மத்திய சிறையைப் பொறுத்தமட்டில், ஆழ்நிலை தியான முறை, மதுரை சமூகப் பணி நிறுவனத்தின் மூலமும், பெண்களுக்கான மாநிலச் சிறைச்சாலை உட்பட ஏனைய மத்திய சிறைச் சாலைகளிலும் புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், மகரிஷி நிறுவனம் மூலமும் விரும்பும் கைதிகளுக்குக் கற்பிக்கப்படுகிறது.

VI. கைதிகளுக்கான செய்தொழிலும் சிறைகளின் தொழிற்சாலைகளும்.

கடுங்காவல் தண்டனை பெற்ற கைதிகளுக்குச் சிறையில் வேலை அளிக்கப்படுகிறது. கைதிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களுக்குப் புதுவாழ்வு கிடைக்க வகை செய்வதே இதன் நோக்கம். எனவே, பயனில்லாத வேலை உற்பத்தியை நோக்கமாகக் கொண்டிராத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. சிறை வேலை கடினம், நடுத்தரம், எளிமை என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி கைதிகளுக்கு உரியவேலை கொடுக்கப்படுகிறது. கைதிகளின் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சுவேலை, தையல் வேலை, நெசவு, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோலால் பொருட்களைச் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்த ஆகிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. கைதிகள் தங்களது விடுதலைக்குப் பின் தங்களைச் சொந்தத் தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில் நவீன வேளாண்மை முறைகள், பால் பண்ணை ஆகிய தொழில்களிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவு, சாயப்பிரிவு அடங்கிய துணி ஆலை ஒன்றுள்ளது. இத்தொழிற்சாலைப் பிரிவுகள் 1977–79-ல் இந்திய அரசின் உதவி பெற்று நவீனப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய சிறைகள், வேலூர், மாநில மகளிர் சிறை, புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவை. ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின்/வாழ்க்கை தொழில்களின். பட்டியல் இணைப்பு V இல் குறிக்கப்பட்டுள்ளது.



ஏழாவது நிதிக் குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசு வழங்கிய நிதி உதவியிலிருந்து, எட்டு மத்திய சிறைச் சாலைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், பின் வரும் எளிய தொழில்கள் தொடங்கவும் சிறைக் கைதிகளுக்குப் பயிற்சி அளிக்கவும் அரசு ஏற்பளித்துள்ளது.

(1) செங்கல் உற்பத்தித் தொழில்.

(2) குழாய்களைப் பழுதுபார்த்து இணைத்தல்.

(3) எளிய மின் இணைப்புப் பயிற்சி.

(4) மோட்டாருக்கான மின் கம்பியை மீண்டும் சுற்றுதல்.

(5) வண்ணம் பூசுதல் (பெயர்ப் பலகை எழுதுதல் உட்பட).

(6) சைக்கிள் பழுதுபார்த்தல்.

இத்தொழில்களில் பயிற்சி பெற்ற ஆதரவற்ற கைதிகள் குறைந்த முதலீட்டில் சொந்தமாகத் தொழில் செய்யலாம்.

கைதிகள் கீழ்க்காணும் பணி செய்கையில் கீழ்க்காணும் வீதங்களில் பணிக்கொடை பெறத் தகுதி பெற்றவர்களாவர் :—

| | பணிக்கொடையின் வீதம் (ஒரு திங்களுக்கு) ரூ. | காசு. |
|---|---|---|
| (1) காவற்காரர் .. .. .. | 0 | 50 |
| (2) மேற்பார்வையாளர் .. .. | 1 | 00 |
| (3) காவலர் .. .. .. | 2 | 00 |

சேலம் மத்திய சிறையில் ஏற்கெனவே செயலில் உள்ள கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டத்தை, எஞ்சியுள்ள ஏழு மத்திய சிறைகளுக்கும் அதாவது சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, கடலூர், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள மத்திய சிறைகளுக்கும், வேலூர் மாநில மகளிர் சிறைக்கும் விரிவு படுத்த, உள்துறையின் (சிறைகள் III) 17—7—1982 ஆம் நாளிட்ட 1815 ஆம் எண் அரசாணையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசு, கைதிகளுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படக்கூடிய ஊதிய வீதங்களையும் பின்வருமாறு உயர்த்தியுள்ளது. (சேலம் மத்திய சிறையில் ஏற்கெனவே வழங்கப் பட்ட ஊதிய வீதங்கள் அடைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன).

| | ரூ. காசு | |
|---|---|---|
| தேர்ச்சி பெற்ற வேலையாள் | 1.00 | (0.40 காசு) |
| ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாள் | 0.50 | (0.20 காசு) |
| தேர்ச்சி பெறாத வேலையாள் | 0.25 | (0.10 காசு) |

இத்திட்டம், 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது.

## VII. மருத்துவ துப்புரவு நல ஏற்பாடுகள்.

சிறைகளில் போதுமான மருத்துவ, துப்புரவு நல ஏற்பாடுகள் உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், ஒரு மருத்துவ அலுவலரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவ அலுவலரும், ஒரு மருந்தாளுநரும் கொண்ட மருத்துவமனை ஒன்று உள்ளது. பல்லாவரம் ஆடவர் பிற்காப்பு இல்லத்தில் பகுதிநேர மருத்துவர் ஒருவரையும் முழு நேர மருந்தாளுநர் ஒருவரையும் கொண்ட மருந்தகம் ஒன்று உள்ளது. கண் மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அரசின் செலவில் தேவைப்படுகின்ற கைதிகளுக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும், சிறையைப் பார்வையிடும் பல் துணை மருத்துவரால் பல் நோய் சிகிச்சைக்கும் வகை செய்யப்படுகிறது. வேலூர் மத்திய சிறையில் தொழு நோய்க் கைதிகள், தனியாகப் பிரித்து, தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். மனநிலை சரியில்லாத கைதிகள், மனநோய்க் கைதிகள் உளநோய் மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் சென்னை மனநல நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்றனர்.

**அனைத்து மத்திய** சிறைகளிலும், **வேலூரிலுள்ள** மாநில மகளிர் **சிறையிலும், புது**க்கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலும் **தனிக் கிளைச் சிறைகளிலு**ம், 89கிளைச் சிறைகளிலும், **தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக்கழி**ப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. **ஏழாம் நிதிக்குழுவின்** பரிந்துரையின்படி ரூ. 67.87 லட்சம் மதிப்பீட்டில் இம்மாநிலத்தில் எஞ்சிய கிளைச் சிறைகளில் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக்கழிப்பிடங்களை அமைக்கும் செயற்குறிப்புகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

## (VIII) கைதிகளுக்குக் கல்வி வசதி அளித்தல்

கல்வியின் மூலம் பயனடையக்கூடிய கைதிகளுக்குச் சிறையில் கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர்கல்வியில்பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளில் புதிய முறையில் முதியோருக்குக் கல்வி புகட்டப்படுகின்றது. சிறைக்கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு சிறைக் கண்காணிப்பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வரவழைத்துச் சிறைவிடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடுசெய்கிறார்கள். கைதிகள் பல்கலைக்கழகங்கள் அஞ்சல் வழிக்கல்வி நடத்தும் முதுகலைப் பட்டப்படிப்பு பி.ஜி.எல். பி.எல்., பி.எட்., எம். எட்., முதலியன போன்ற தொழிற்கல்வி வரையிலான தேர்வுகள் எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பான புத்தகங்கள், தேர்வுக் கட்டணம், இதர செலவுகளை அரசு ஏற்றுக்கொள்கிறது. கைதிகள் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால் **மறுமுறையும் தேர்வுக்கு அரசு செலவில் செல்லலாம். இது**



போல் மொத்தம் மூன்று தடவை தேர்வுக்குச் செல்ல அனுமதிக் கப்படுகிறார்கள். மேலும் கைதிகள் தேர்வு எழுதச் செல்லு போது அவர்களது சொந்த உடையிலேயே தேர்வு எழுத இசை வளிக்கப்படுகிறார்கள். அதே போல் அவர்களைக் காவல் காத்து, அழைத்துச் செல்லும் காவலர்களும் சாதாரண உடை அணிந்தே செல்கின்றனர்.

சிறையில் சமயம், நீதி, நெறி வகையான விரிவுரைகள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் நீதி மற்றும் சமய சம்பந்த மான உரைகள் என்ற பெயரால் மதமாற்றம் செய்தல் கூடாது என்பதோடு விரிவுரையாற்றுவோர் எம்மதத்தைச் சேர்ந்தவராக உள்ளனரோ அம்மதத்தைச் சார்ந்த சிறைவாசிகளிடம் மட்டுமே உரையாற்றவேண்டுமென்ற நிபந்தனையுடன் அத்தகைய உரை களும், போதனைகளும் அனுமதிக்கப்படுகின்றன.

## IX. சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை.

இப்பள்ளியில் 18 வயதில்ருந்து 23 வயது வரை உள்ள இளங்குற்றவாளிகள் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாண வர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

(அ) தச்சு வேலை.

(ஆ) கருமார் வேலை.

(இ) புத்தகம் கட்டுதல்.

(ஈ) தையல் வேலை.

(உ) வேளாண்மை.

(ஊ) கொத்து வேலை.

(எ) சலவைத் தொழில்.

(ஏ) 'பாண்டு' இசைக் கருவிப் பயிற்சி.

(ஐ) சமையல் வேலை போன்றவீட்டு வேலைகள்.

இப்பள்ளியில் உள்ளவர்கள், அங்கிருந்து அனுப்பப்பட்டபின்னர் தாங்களாகவே வேலையைத் தேடிக்கொள்ள இயலும் பொருட்டு, அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இங்குள்ள துயிற் கூடம் ஒன்று இளங்குற்றவாளிகளுக்கான இடமாக மாற்றப்பட்டு அங்கு 24–25 வயது பிரிவைச் சேர்ந்த இளங்குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். இத்தகைய கைதிகள் இங்கு 25 வயது வரை வைக்கப்படுகின்றனர். புதுக் கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலுள்ள துயிற்கூடம் 1894– ஆம் ஆண்டு சிறைகள் சட்டத்தின் (Prison Act) கீழ், சிறை யாக மாற்றப்பட்டுள்ளது. விடுதலை செய்யப்பட்ட பார்ஸ்டல் பள்ளி மாணவர்களின் புது வாழ்வுக்காக எந்திரங்கள் அல்லது பசுமாடு அல்லது எருமை மாடுகள் வாங்குவதற்காக நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்நிதி உதவி அவர்களிடமிருந்து எளிய தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

## X. ஆடவர் பிற்காப்பு இல்லம், பல்லாவரம்.

பல்லாவரம் ஆடவர் பிற்காப்பு இல்லம், சீர்திருத்த நிறுவனங்களில் இருந்து அல்லது சீர்திருத்தப்பணி சாராத நிறுவனங்களிலிருந்து வெளிவருபவர்கள் இலாபகரமான, சொந்த, தொழில் புரிந்து நல்ல முறையில் வாழ்வை அமைத்துக் கொள்ள இயலும் வண்ணம், இரண்டு ஆண்டுகளுக்கு தச்சு வேலை, உலோகவேலை, அல்லது தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, இருப்பிடம், அளிக்கப்படுவதோடு முதலாண்டில் நாள் ஒன்றுக்கு ரூபாய் 1.50 வீதமும், இரண்டாம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூபாய் 2.00 வீதமும் தொழிற் பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவர்களுக்குத் தொழிற்பயிற்சிக் கூடங்களில் நடைமுறையில் உள்ள பாடத்திட்டத்தின் கீழ், ஆனால் பிற்காப்பு இல்லத்தின் நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்றாற்போன்ற மாற்றங்களுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது. உரிய வயது வந்த ஆடவர் மட்டுமே இவ்வில்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். இப்பிற்காப்பு இல்லத்தில் உள்ளவர்களுக்கும் சத்துணவுத்திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

தற்போது இவ்வில்லம் பல்லாவரத்தில் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. சிறைத்துறைக்குச் சொந்தமான புழலில் உள்ள கட்டிடங்கள் இவ்வில்லத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வில்லம் விரைவில் அங்கு மாற்றப்படும்.

## XI. சிறைப் பார்வையாளர்கள்.

குற்றவியல் நீதித்துறை, நீதித்துறை மருத்துவம், துப்பரவு நலம், தொழில், தீயணைப்புப் பணிகள் ஆகிய துறைகளிலிருந்து நியமிக்கப்படும் அரசு சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொதுமக்கள் முக்கியமாக சமூகப் பணியாளர்கள் உளநோய் வல்லுநர்கள், மனவியல் நிபுணர்கள், சமூகவியல், வல்லுநர்கள் ஆகியோரும் ஒவ்வொரு சிறையிலும் அரசு சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். அரசு சார்பற்ற சிறைப் பார்வையாளர் வழக்கமாக விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகள் உதவிச் சங்கத்தின் உறுப்பினர்களாகவும், சிறைவாசிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ளவர்களாகவும் உள்ளனர். ஒவ்வொரு சிறைக்கும் அரசு சார்பற்ற சிறைப்பார்வையாளர்கள் நியமிக்கப்படுவதுடன் மாவட்ட அரசு சார்பற்ற சிறைப்பார்வையாளர்களையும் அரசு நியமித்துள்ளது. இவர்கள் மாவட்டத்திலுள்ள எந்தச் சிறையையும் பார்வையிடலாம். சிறைக்கைதிகள், சிறைகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தை முறைப்படுத்தும் சட்டங்கள், விதிகள் ஆகியவை சிறைகளில் உரியவாறு செயல்படுத்தப்படுகின்றனவா என்று தாம் தெரிந்துகொள்வதும், சிறைகளில் பல பகுதிகளைச்



சென்று பார்வையிடுவதும் அவரிடம் கைதிகள் எவரேனும் புகார் செய்தால் அதனைக் கேட்டு விசாரணை செய்வதும் பார்வையாளரின் கடமையாகும். சிறைப் பார்வையாளரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

## XII. சிறைக்கைதிகளை விடுப்பில் விடுவித்தல்.

சிறைக்கைதிகள் தங்களது குடும்ப தேவைகளை கவனிப்பதற்காக அவர்களுக்கு வழங்கப்படும் விடுப்பு சம்பந்தப்பட்ட நன்னடத்தை கண்காணிப்பு அலுவலரின் அறிக்கையைப் பெற்ற பிறகு அரசால் அளிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக, அத்தகைய விடுப்பு அளிக்கப்படுவதற்கு முன்னர், காவல்துறையினரிடமிருந்து அறிக்கை பெறும் முறையை கைவிட்டுவிட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதிகார வரம்புடைய சம்பந்தப்பட்ட நன்னடத்தைக்கண்காணிப்பு அலுவலர், சிறைக்கைதிகளின் முதல் விடுப்புக் கோரிக்கை சம்பந்தப்பட்ட எல்லா நேர்வுகளிலும் உள்ளூர் காவல் துறை சப்-இன்ஸ்பெக்டரை கலந்தாலோசித்து தனது அறிக்கையை அரசுக்கு நேரடியாக அனுப்புகிறார். அதன் பிறகு விடுக்கப்படும் விடுப்பிற்கான கோரிக்கைகளின் மீதான தனது அறிக்கையை நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர் உள்ளூர் காவல்துறை சப்-இன்ஸ்பெக்டரை கலந்து ஆலோசிக்காமலேயே அரசுக்கு அறிக்கையை அனுப்புகிறார். 5ஆண்டு சிறை வாசகம் அனுபவித்தவரும், இதுவரையில் விடுப்பில் சென்றிடாதவருமான சிறைக் கைதிகளுக்கு முதலில் ஒரு மாத விடுப்பு அளிக்கப்படுகிறது. அதன் பிறகு, இதற்கு முன்னர் கடைசியாக விடுப்பில் சென்று திரும்பிய நாளிலிருந்து இரண்டாண்டுகள் சிறைவாசம் அனுபவித்த பிறகு மீண்டும் விடுப்பு அளிக்கப்படுகிறது. இன்னும் 3 ஆண்டு காலம் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய சிறைக் கைதிகள், அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

இவற்றோடு அவசரக்கால விடுப்பு சிறைக்கைதிகளுக்கு அவர்கள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களான தந்தை, தாய், கணவன் மனைவி, சொந்த மகன், சொந்த மகள் மற்றும் சொந்த சகோதரி, சொந்த சகோதரர்கள் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்துபோனாலோ அவர்களைச் சென்று பார்க்கவோ மற்றும் நெருங்கிய உறவினர்களான சொந்த மகன், சொந்த மகள் மற்றும் சொந்த சகோதரன், சொந்த சகோதரி ஆகியோரின் திருமணத்தில் கலந்துகொள்வதற்காகவும், ஆண்டுக்கு இத்தகைய அவசர கால விடுப்பு 15 நாட்களுக்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள் 4 தவணைகளில் அளிக்கப்படுகின்றன. முதல் தவணை 6 நாட்களுக்கும் மற்ற மூன்று தவணைகள் மூன்று நாட்களுக்கும் அளிக்கப்படு

கின்றன. ஆனால் அந்தக் கைதி குறிப்பிட்டகாலத்திற்கு தண்டனை அல்லது ஆயுள் தண்டனை பெற்றிருக்க வேண்டும். மேலும், சிறையில் அவருடைய நடத்தை மனநிறைவு தருவதாயிருக்க வேண்டும்.

## XIII. தண்டனைக் குறைப்பு.

கைதிகளின் நன்னடத்தை, வேலைசெய்யும் ஆர்வம் ஆகியவற்றை வளர்க்க ஊக்கமளிக்கும் வகையில் பல விதமான தண்டனைக் குறைப்புகள் சிறைக் கைதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சிறைக்கைதிகளின் நன்னடத்தைக்காக, ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும் சாதாரண வகைத் தண்டனைக் குறைப்பாக அளிக்கப்படுகிறது. சிறைகளில் ஞாயிறன்றும் ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும், சமையற்காரர்களாகவும், துப்புரவு செய்வோராகவும் பணிபுரியும் சிறைக் கைதிகளுக்கு இவ்விதிகளின் கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு, மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. கான்விக்ட் வார்டர்களுக்கு மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளின் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டை பேணிவரும் கைதிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்பு தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும், சிறந்த நற்பணிக்காக சிறப்பு தண்டனைக் குறைப்பாக சிறைத் துறைத் தலைவரால் ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும், சிறப்பு தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் சிறைவாசிகளுக்கு, உயரளவு ஓராண்டுக்கால சிறப்பு தண்டனைக் குறைப்பும், இரத்த தானம் செய்யும் கைதிகளுக்கு ஒரு நேரத்தில் 10 முதல் 15 நாட்களுக்கு தண்டனைக் குறைப்பும், அளிக்கப்படுகிறது. மேற்கண்ட தண்டனைக் குறைப்புத் தவிர, இரண்டாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற சிறைக் கைதிகளை, அக்கால அளவிற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து, ஆலோசனைக் குழு கருதிப் பார்க்கிறது. இதற்காக அந்த சிறைக் கைதியின் கடந்த கால நன்னடத்தைப் பற்றிய குறிப்புகளையும், உள்ளூர் அதிகாரிகள், அதாவது மாவட்ட ஆட்சியர் நன்னடத்தைக் கண்காணிப்பு அதிகாரி ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து, அச் சிறைக் கைதியை அவருக்கு அளிக்கப்பட்ட சிறைதண்டனை கால அளவு முடிவடைவதற்கு முன்னரே அவரை விடுவிக்க அரசு கருதிப் பார்ப்பதற்காக, இக் குழு தனது பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

இந்திய அரசு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையில் 433-ஏ என்னும் புதிய பிரிவை அமைக்கும் முன்னர் ஆயுள் தண்டனைக் கைதிகளை அவர்களுடைய தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து பரிசீலிப்பதற்காக அவர்களைப் பற்றிய நேர்வுகள்





ஆலோசனைக் குழுவின் முன் வைக்கபட்டன. ஆனால். அவர்கள் சிறையில் நன்முறையில் நடந்திருக்க வேண்டும் என்பதோடு 10 ஆண்டு சிறைத் தண்டனையை அனுபவித்திருக்க வேண்டும். இந்த 10 ஆண்டில் அவர்கள் இரு பிரிவின் கீழ் ஈட்டிய தண்டனைக் குறைப்புக் காலமும் அடங்கும். ஆனால் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை 433-ஏ என்னும் புதிய பிரிவின்படி, ஆயுள் தண்டனை அடைந்த கைதிகள் தாம் ஈட்டிய தண்டனைக் குறைப்புகளை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் 14 ஆண்டுகள் சிறைவாசத்தைக் கழித்த பிறகே அவர்களை உரிய தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து ஆலோசனைக் குழுவின் முன் பரிந்துரைக்கு வைக்க வேண்டும். இப்புதிய பிரிவு செல்லுபடியாகும் என்று தீர்ப்பு அளித்த போதிலும், இப்பிரிவு செயலுக்கு வருமுன்னர் அதாவது 18—12—1978-க்கு முன் விசாரணை நீதி மன்றத்தால் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, சிறைத் தண்டனையளிக்கப்பட்ட சிறைக் கைதிகளுக்குப் பொருந்தாது, என்றும் 18—12—1978 ஆம் நாளுக்கு பின்னர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, சிறைத் தண்டனையளிக்கப்பட்ட சிறைக் கைதிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் இந்திய தலைமை நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இந்திய தலைமை நீதிமன்றத்தின் மேற்சொன்ன கருத்தினையொட்டி, குற்றவியல் நடைமுறைச் சட்ட கோவையின் 433-ஏ என்னும் புதிய பிரிவு செயலுக்கு வருவதற்கு முன்னர், செயலிலிருந்த ஆலோசனைக் குழு திட்டத்தின் கீழுள்ள நடைமுறை விசாரணை நீதி மன்றத்தால் 18—12—1978-க்கு முன்னர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சிறைக் கைதிகள் குறித்து கருதிப் பார்ப்பதற்குப் பின்பற்றப்படும் என்று அரசு, உள்துறையின் 6—1—1981 ஆம் நாளிட்ட 34 ஆம் எண் அரசாணையில் ஆணை பிறப்பித்துள்ளது.

65 வயதுக்கு மேற்பட்ட ஆண் சிறைக் கைதிகளும் 55 வயதிற்கு மேற்பட்ட பெண் சிறைக் கைதிகளும் முதன் முறையாக தண்டனை அளிக்கப்பட்டிருந்து அவர்கள் ஈட்டிய தண்டனைக் குறைப்பு உட்பட 2½ ஆண்டுகள் அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்திருந்தால், ''வயது முதிர்வுத் திட்டத்தின்'' கீழ் அவர்களை விடுதலை செய்ய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யத் தகுதி உடையவர்களாவார்கள். மாநில சிறை நடைமுறை நூல் விதிகளில் குறிப்பிடப்பட்டவாறு, சிறை மருத்துவ அதிகாரி சான்றிதழ் வழங்குவதன் பேரில், நோயுற்ற ஆயுள் தண்டனைக் கைதிகள் அவர்கள் தண்டனை காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்யக் கருதிப் பார்க்கப்படுகிறது.

புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்தவரையில், காலக் கெடு முடியுமுன் விடுதலை செய்யும் முறை பின்தொடரு நடைமுறைப் படி செயலில் உள்ளது. இம்முறை ''நல்லிணக்கத்தின் பேரில்'' விடுதலை செய்தல் அல்லது விடுவித்தல் என்று அழைக்கப்படுகிறது. 1925 ஆம் ஆண்டு

பார்ஸ்டல் பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (i) உட்பிரிவின்படி, கண்காணிப்பாளர் நல்லிணக்கத்தின் பேரில், விடுதலை செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சி குறித்த விவரங்களையும், அவசியமான விசாரணைகளைச் செய்து பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம், தாக்கல் செய்ய இயலும் வகையில், அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் வெளியூர்களிலுள்ள அந்தந்த மாவட்ட நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர்களுக்கும், சென்னை மாநகரில் நன்னடத்தைக் கண்காணிப்புத் தலைமைக் கண்காணிப்பாளருக்கும், பார்ஸ்டல் பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பி வைக்க வேண்டும். நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காக பார்வையிடும் குழு பரிவுரை செய்துள்ள சிறைக் கைதிகளைப் பற்றி, சிறைத் துறைத் தலைவரால் பரிசீலிக்கப்படுகிறது.

1925 ஆம் ஆண்டு பார்ஸ்டல் பள்ளிகள் சட்டத்தின் 10-A விதியின் கீழ் ஏனைய மத்திய சிறைகளிலிருந்து பார்ஸ்டல் பள்ளிக்கு மாற்றப்படும் (ஆயுள் தண்டனை அடைந்தவர்கள்) மாணவர்கள், 23 வயது அடைந்ததும், அவர்களை விடுதலை செய்வது குறித்து, அவர்கள் 23 வயதை அடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக அரசால் பரிசீலனை செய்யப்படுகிறது. அவர்களது தண்டனையை தள்ளுபடி செய்ய அரசு மறுத்தால், இம்மாணவர்கள் 25 வயதை அடையும்வரை சீர்திருத்தப் பள்ளியிலுள்ள 'துயிற் கூடத்தில் வைக்கப்பட்டு, பின்னர் அவர்கள் எந்த மத்திய சிறையிலிருந்து பார்ஸ்டல் பள்ளிக்கு மாற்றப்பட்டார்களோ அந்த சிறைக்கே மீதமுள்ள தண்டனையைக் கழிக்க மாற்றப்படுகின்றனர்.

## XIV சிறைக்கைதிகளின் நலன்.

தற்போது சிறைக்கைதிகள் நல அலுவலர் பதவிகள் மொத்தம் பத்து உள்ளன. எட்டு மத்திய சிறை ஒவ்வொன்றிற்கும் ஒரு பதவியும், வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறைக்கு ஒரு பதவியும், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளிக்கு ஒரு பதவியும் உள்ளன. இந்த நல அலுவலர் சிறையின் விதிமுறைகளுக்கேற்ப சிறைக் கைதிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும், அவர்கள் உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்தும் வருகிறார்கள்.

பெண் சிறைக்கைதிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால், அக்குழந்தைகள் தாயோடு சிறையில் வைக்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்காக ஒரு குழந்தை காப்பிடமும் வேலூர் மாநில மகளிர் சிறையில் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களை சரியான





முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன்வராவிட்டால் குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன் சென்னை மாநகரைச் சேர்ந்தவர்களாயிருந்தால் சென்னையிலுள்ள பாலமந்திர் மருத்துவமனைக்கும், மாநிலத்திலுள்ள இதர இடங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தால், மதுரை காந்தி கிராமத்திலுள்ள குழந்தைகள் இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர்.

சிறைக்கைதிகளின் பயனுக்காக ஒவ்வொரு மத்திய சிறையிலும் பண்பாட்டு குழு அமைக்கப்படுள்ளது. இந்தப் பண்பாட்டுக்குழு, சிறைக் கைதிகளின் நன்மைக்காகக் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக் கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

மத்திய சிறைகளில் எல்லாவற்றிலும் சிறைக்கைதிகளுக்காகச் சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. பணிக்கொடை ஈட்டும் சிறைக் கைதிகளும் தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைக்கைதிகளும் இந்த சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். இந்த சிற்றுண்டி விடுதிகளை முழுஅளவில் சிறந்த முறையில் செயல்படுத்த மத்திய அரசு வழங்கிய நிதியுடன் மாநில அரசு உள் துறையின் 23—1—1983 ஆம் நாளிட்ட 144 ஆம் எண் அரசாணையில் ரூ. 20,000 வழங்கியுள்ளது. சிறைக்கைதிகளுக்கு அவர்களின் விடுதலைக்குப் பின்னர் அவர்களுக்கு புதுவாழ்வு அளிக்கும் வகையில் பெரம்பூரிலுள்ள டான்சி தோல் தொழிற்சாலையில் பூட்சு மற்றும் ஷூக்கள் தயாரிப்பிலும், இயந்திரங்களை இயக்குவதிலும், 50 ஆயுள் தண்டனை பெற்ற சிறைக்கைதிகளுக்கு பயிற்சி அளிக்க அரசு அனுமதியளித்துள்ளது. இந்த ஏற்பாடானது வேலூர் மத்திய சிறையில் தயாரிக்கப்படும் பூட்சு மற்றும் ஷூக்களின் தரத்தை மேம்படுத்த உதவும்.

இந்திய குடியரசுத் தலைவரால், கருணை மனு நிராகரிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட இருக்கும் சிறைக் கைதியின் நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய், மனைவி/கணவன்/ மகன்/மகள், சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகியவர்கள், 5 நபர்களுக்கு மேற்படாமல் அச்சிறைக்கைதி தூக்கிலிடப்படுவதற்கு முன் வந்து பார்ப்பதற்கு வசதியாக, தமிழ்நாட்டிலுள்ள எவ்விடத்திலுமிருந்தும் குறைந்த வழித்தடம் மூலம் குறைந்த பட்ச வகுப்பில் புகை வண்டி மற்றும் சாலை வழிப் பயணத்திற்கான போக்குவரத்துச் செலவுகளை அனுமதிக்க எல்லா மத்திய சிறை கண்காணிப்பாளர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் மாநில மகளிர் சிறை, வேலூர் கண்காணிப்பாளருக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது.

## XV. சிறைக்கைதிகளுக்கு சட்ட உதவி.

விசாரணைக்கைதிகளுக்கும், தண்டனை பெற்றுள்ள கைதிகளுக்கும் தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு சட்ட உதவி அளித்து வருகிறது. மேலும் கைதிகளின் பிரச்சனையை ஆராய்ந்து அவர்களுக்கு உதவி செய்ய மத்தியச் சிறைகளில் வழக்குரைஞர்களை அமர்த்தும் திட்டத்தை இக்குழு கொண்டு வந்துள்ளது.

## XVI. சிறைகளில் புகார் பெட்டிகள் வைத்தல்.

அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி, எட்டு மத்திய சிறைகளிலும், பார்ஸ்டல் பள்ளியிலும், வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறையிலும், கைதிகள் புகார் மனுக்களைத் தாக்கல் செய்ய முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப் பட்டுள்ளன. கைதிகள் தங்கள் புகார்களை எழுதி அப்பெட்டிகளில் இட எழுது பொருள் கொடுக்கப்படுகின்றன. அப் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு சிறையிலும் இருக்கும் புகார்ப் பெட்டிகளின் எண்ணிக்கை வருமாறு :

| தொடர் எண். | சிறையின் பெயர். | பெட்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சென்னை மத்திய சிறை .. .. | 3 |
| 2 | வேலூர் மத்திய சிறை .. .. .. | 3 |
| 3 | கடலூர் மத்திய சிறை .. .. .. | 1 |
| 4 | திருச்சிராப்பள்ளி மத்திய சிறை .. .. | 3 |
| 5 | சேலம் மத்திய சிறை .. .. .. | 3 |
| 6 | கோயம்புத்தூர் மத்திய சிறை .. | 3 |
| 7 | மதுரை மத்திய சிறை .. .. .. | 3 |
| 8 | பாளையங்கோட்டை மத்திய சிறை .. | 3 |
| 9 | புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி .. .. | 3 |
| **10** | **வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறை ..** | **2** |





## XVII. நன்னடத்தைப் பணி.

நன்னடத்தைப் பணியானது குற்றவாளிகள் வளர்ந்த சூழ்நிலை அவர்கள் நடந்துகொள்ளும் விதம் பற்றி விசாரிப்பது பிணையப் பத்திரத்தின் பேரில் முன் விடுதலையாகும் இளங்குற்ற வாளிகளையும், நன்னடத்தை ஜாமீனில் பார்ஸ்டல் பள்ளியிலிருந் தும், சீர்திருத்தப்பள்ளியிலிருந்தும் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லத்திலிருந்தும் விடுதலை செய்யப்பட்டவர்களைக் கண் காணிப்பதும் நீதிமன்றங்களுக்கு ஆலோசனை நல்குவதும் முதலி யன ஆகும். சிறைத் துறைத் தலைவரின் முழுக்கட்டுப்பாட்டிற் கும், கண்காணிப்பிற்கும் உட்பட்ட நன்னடத்தைப் பணிப் பிரிவு, நன்னடத்தைக் கண்காணிப்புத் தலைமைக் கண்காணிப்பாளரின் நேரடிப் பொறுப்பில் உள்ளது. வட்டார அலுவலர் ஒருவரைக் கொண்டு நன்னடத்தை ஆராய்ச்சிப் பிரிவும் இப்பிரிவில் உள்ளது.

தமிழ்நாடு குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்புச் சட் டத்திற்குப் பதிலாக, 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத் தைக் கண்காணிப்புச் சட்டம் எனப்படும் மத்தியச் சட்டம் ஒன்று (மத்தியச் சட்டம் 20/58) கொண்டு வரப்பட்டது. இம்மத்தியச் சட்டம், சென்னை மாநகரத்திலும், செங்கல்பட்டு மாவட்டத் திலும் 1-12-1962-லிருந்தும், தமிழ்நாடு முழுவதும் 1-5-1964 லிருந்தும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. குற்றவாளிகள் புரிந்த குற்றம் முதல் தடவையாக இருந்தாலும், அக்குற்றத் திற்கான தண்டனை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது அபராத தண்டனையோ அல்லது இவ்விரு தண்டனைகளோ விதிக்கக்கூடிய வகையில் இருந்தால், தக்க முன் நடவடிக்கையின் பேரில், நன்னடத்தைக் கண்காணிப்பில் விடுதலை செய்ய இச் சட்டம் நீதி மன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. மத்தியச் சட்டத்தின் விதித் துறைகள் சீர்திருத்த நிர்வாகத்தின் தற்காலப் போக்கிற்கேற்ப உள்ளது.

## XVIII. விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம், தமிழ்நாடு.

தமிழ்நாடு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. குற்றம் புரிந்து தண்டிக்கப்பட்ட வர்களுக்குப் புதுவாழ்வு அமைத்துக் கொடுத்தல், தேவைப்படும் பலவித உதவிகள் செய்து கொடுத்தல், தற்செயலாகக் குற்றம் புரிந்தவர்களும், இளங்குற்றவாளிகளும் வழக்கமாகக் குற்றம் புரி கிறவர்களாக மாறுவதைத் தடுத்தல், அவர்களின் நலனுக்காக புதிய சட்டங்களை இயற்றுதல், ஏற்கெனவே இருக்கும் சட்டங் களை நல்ல முறையில் பயன்படுத்துதல் ஆகியவை இச் சங்கத்தின் நோக்கங்களாகும். சிறு தொழில்கள் நடத்துவதற்கும், கருவி கள், தேநீர் கெண்டி, தையல் இயந்திரங்கள் வாங்குவதற்காகவும், இச்சங்கம் உதவித் தொகை கொடுக்கிறது. மேலும் புலை

வண்டி பேருந்து செலவிற்காக உதவித் தொகையும், தொழில் செய்வதற்கும் துணைக் கருவிகள் வாங்குவதற்கும் மானியங்களையும் வழங்குகிறது. தொழில் பயிற்சி பெறுவதற்கும் வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளவும், வழக்காட சட்ட உதவி செய்வதற்கும், வயது முதிர்வு ஓய்வூதியம் பெறுவதற்கும், உதவி செய்கிறது. ஆடைகள் மூக்குக் கண்ணாடி ஆகியவற்றையும் வழங்குகிறது.

இச் சங்கத்திற்கு அரசினால் அளிக்கப்பட்டு வந்த ஆண்டு மானிய உதவி ரூபாய் 12,000, 1980-81-லிருந்து ரூபாய் 18,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

XIX. சென்னை நகரத்திலும், செங்கல்பட்டு மாவட்டத்திலும் தண்டனை சிறைவாசிகளை வைப்பதற்கென ஒரு புதிய சிறையைப் புழலில் (செங்குன்றம்) கட்டுதல் :

புழல் கிராமத்தில், சிறைத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீனமாக ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

1981-82 ஆம் ஆண்டு காலத்தில், முதற்கட்டமாக, கீழ்க் காணும் பணிகளை நிறைவேற்றிட, அரசு உள்துறையின் 23-7-1981 ஆம் நாளிட்ட 1726 ஆம் எண்ணுள்ள அரசாணையில் ரூபாய் 50 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

(1) சுற்றுச் சுவர்.

(2) நிர்வாகக் கட்டிடம்.

(3) 200 சிறைக் கைதிகளுக்கு இடவசதி அளிக்க இணைக் கட்டிடத் தொகுதி ஒன்று.

(4) புறப்பணியாளர் சிகிச்சைக்காக மருத்துவக் கட்டிடம்,

(5) தொடக்கத்தில் தேவையான தண்ணீர் வசதி அளித்தல்.

மேற்காணும் பணிகளைப் பொதுப்பணித் துறையினர் நிறைவேற்றி வருகின்றனர். தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம் 1981-82 ஆம் ஆண்டில் புழலில் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக, உள்துறையின் 31—10—81 ஆம் நாளிட்ட 2555 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அரசு ரூபாய் 10 இலட்சம் வழங்கியுள்ளது.

(1) மேல் நிலை நீர்த் தொட்டி கட்டுதல்.

(2) கழிவு நீரின் நச்சுத் தன்மை நீக்கும் இயந்திரத் தொகுதி.



இப்பணிகளை தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம் நிறைவேற்ற எடுத்துக் கொண்டுள்ளது. மேலும், ஏழாவது நிதி உதவிக் குழுவின் மூலம் ரூபாய் 143.01 இலட்சத்தில் புழல் மத்தியச் சிறையில் இரண்டாவது கட்டுமானப் பணியை எடுத்துக் கொள்ள அரசு கருதியுள்ளது.

XX. சிறை சீர்திருத்தக் குழு.

தண்டனை பெற்றவர்கள் சிறையிலிருந்து விடுதலையான பிறகு சமுதாயத்தில் கண்ணியமாகவும் நேர்மையுடனும் வாழ்க்கை நடத்தும் வகையில் அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதும், சமூகத்தில் மதிப்பை ஏற்படுத்துவதும் இம் மாநிலத்தின் சிறைச் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். இம்மாநிலத்தில் சிறைகள் நிர்வாகத்தில் செய்ய வேண்டிய மேம்பாடுகள் குறித்துப் பரிசீலித்து தக்க சீர்திருத்தங்களைத் தெரிவிக்க வேண்டி பாட்னா உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ஆர். எல். நரசிம்மன், ஐ. சி. எஸ். அவர்கள் தலைமையில், முன்னாள் சிறைத்துறைத் தலைவர் திரு. எஸ். எம். டயஸ் அவர்களையும், மனத்தத்துவப் பேராசிரியர் டாக்டர் ஏ. வெங்கோபராவ் அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு 1978 பிப்ரவரியில் அரசு சிறை சீர்திருத்தக் குழுவை நியமித்தது. சிறைகள், கைதிகள், தொடர்பாக பல பரிந்துரைகளை இக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. மொத்தம் 223 பரிந்துரைகளில், 70 பரிந்துரைகள் குறித்து அரசு இதுவரையில் ஆணைகள் பிறப்பித்துள்ளது. இக்குழுவின் ஏனைய பரிந்துரைகள் அதிக நிதி ஒதுக்கம் தேவைப்படுபவை. சிறைச் சட்டங்களைத் திருத்த வேண்டியவை; இம் மாநிலத்தின் நிதி ஆதாரம், மத்திய அரசு உறுதி அளித்துள்ள நிதி உதவி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, அரசு இவை குறித்துத் தீவிரமாக பரிசீலித்து வருகிறது. சிறைகளின் நிலையிலும், கைதிகளின் நிலையிலும் மேலும் நல்ல முன்னேற்றம் காணும் வகையில், அரசு இயன்றவரையில் முடிந்த அளவிற்குப் பல பரிந்துரைகளைச் செயல்படுத்த பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளது.

XXI. மாநிலச் சிறை நடைமுறை நூலைத் திருத்துதல்.

மத்திய அரசின் மாதிரிச் சிறை நடைமுறை நூலில் அடங்கியுள்ள விதித் துறைகளையும் 1978-79 ஆம் ஆண்டு சிறைத் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளையும் கருத்திற் கொண்டு தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்த நடைமுறை நூலின் தொகுதி II பாகம் 1-ல் சட்டப்படியான விதிகளைத் திருத்தும் பணி 1980 ஆம் ஆண்டு ஏப்ரல்-மாதம் மேற்கொள்ளப்பட்டது. இவ்விதிகள், பிற்சேர்க்கைகள் இணைப்புகள், படிவங்கள் முதலியவற்றிற்கு அரசு ஏற்பளித்துள்ளது ; எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநரின் ஆலோசனையுடன் இப்புத்தகங்களை அச்சிட நடவடிக்கை எடுக்கப்பட்டு

வருகிறது. திருத்தப்பட்ட தமிழ்நாடு சிறை சீர்திருத்த விதிகளின் தொகுதி IIஐ இரண்டு தொகுதிகளாக, அதாவது ஒரு தொகுதி படிவங்கள் முதலியவற்றைக் கொண்டதாயும் மற்ற தொகுதி பிற்சேர்க்கை கொண்டதாயும் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது.

## XXII. 1983-84 ஆம் ஆண்டில் நிறைவேற்ற உத்தேசிக்கபட்டுள்ள திட்டங்கள்.

| தொடர் எண். | திட்டம். | செலவு. ரூபாய். |
|---|---|---|
| 1. | வேலூர் மத்திய சிறைவார்டர்களுக்கென்று 12 குடியிருப்புகள் கட்டுதல். | 5,25,000 |
| 2. | சேலம் மத்தியசிறை, பணியாளர் குடியிருப்பில் நீரடிக் கழிவிடங்கள் கட்டுதல் ; 23 வார்டர்களுக்கென்றும், 8 முதுநிலை சார் பணியாளர்களுக்கென்றும் உள்ள குடியிருப்புகளில் அவற்றைக் கட்டுதல். | 1,25,000 |
| 3. | சிறைத் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகம் ரிட் (writ) மனுக்களைப் பற்றிய வேலைகளை செய்யும் பொருட்டு உதவியாளர் பதவி ஒன்றும், தட்டச்சர் பதவி ஒன்றும் ஏற்படுத்தல். | 20,000 |
| 4. | சென்னை, மத்திய சிறை-செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கிளைச் சிறைகள் தொடர்பான விவகாரங்களைக் கவனிக்கும்பொருட்டு, உதவியாளர் பதவி ஒன்றும், தட்டச்சர் பதவி ஒன்றும் ஏற்படுத்தல். | 20,000 |
| 5. | சேலம், மத்திய சிறை 35 எம். எம். திரைப்படம் (Proj:c or) காட்டும் கருவி வாங்குதல். | 90,000 |
| 6. | சிறைத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத்திற்காக, புதிய கார் ஒன்று வழங்குதலும், வார்டரை சர்க்கார் ஓட்டுநராக நியமித்தலும். | 1,06,000 |
| 7. | நன்னடத்தைத் தலைமைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உதவியாளர் பதவி ஒன்றை ஏற்படுத்தல். | 11,000 |
| | மொத்தம் .. | 8,97,000 |





## XXIII. ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரை

அனைத்து மாநிலங்களிலுள்ள சிறைகள் நிர்வாகத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று ஏழாவது நிதிக்குழு வலியுறுத்தியுள்ளது. நாளொன்றுக்கு கைதி ஒருவருக்கு 6 ரூபாய் செலவிடப்பட வேண்டுமென்றும், தற்போதுள்ள சிறைகளை விரிவுபடுத்துவதன் மூலமும், புதிய சிறைகள் கட்டுவதன் மூலமும் சிறைகளில் அதிக எண்ணிக்கையில் கைதிகளை வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும், இக்குழு வலியுறுத்தி உள்ளது. அதன்படி, இக்குழு 1979—80 முதல் 1983—84 வரையிலுள்ள காலத்திற்கு வருவாயினச் செலவு வகையில் ரூ. 631 லட்சமும், மூலதனச் செலவு வகையில் ரூ.862 லட்சமும் ஆக மொத்தம் 1493 இலட்சம் ஒதுக்கீடு செய்யும்படி பரிந்துரைத்துள்ளது. ஆண்டு வாரியான பிரித்தளிக்கப்பட்ட இவ்வுதவித் தொகையின் விவரம் பின் வருமாறு :—

மூலதனச் செலவு.

| ஆண்டு | | கட்டிடங்கள் கட்ட. | வசதிகள் செய்து கொடுக்க. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1979—80 | .. | 269.78 | 30.60 | 300.33 |
| 1980—81 | .. | 180.87 | 71.61 | 252.48 |
| 1981—82 | .. | 99.82 | 19.00 | 118.82 |
| 1982—83 | .. | 91.72 | 20.00 | 111.72 |
| 1983—84 | .. | 69.84 | 8.50 | 78.34 |
| மொத்தம் | .. | 712.03 (அல்லது) 712.00 | 149.71 (அல்லது) 150.00 | 861.74 (அல்லது) 862.00 |

வருவாயினச் செலவு.

| உ. வரிசை எண். (1) | (2) | 1979–80 (3) | 1980–81 (4) | 1981–82 (5) | 1982–83 (6) | 1983–84 (7) | மொத்தம். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1 | சத்துணவுத் திட்டத்தை விரிவு படுத்தல் சிறைக்கைதிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்துதல், சிறையில் பணி புரியும் காலங்களில் காவலர்களுக்கு ஒரு வேளை உணவு வழங்குதல் | 5 | 28 | 31 | 34 | 37 | 135 |
| 2 | சிறைக் கைதிகளுக்கு கூடுதல் படுக்கைகள் பாத்திரங்கள் வழங்குதல். | 3 | 4 | 5 | 6 | 7 | 25 |
| 3 | கூடுதல் பணியாளர்களுடன் கூடிய மேற்பார்வை கணக்குப் பிரிவுகள், உட்பட கூடுதல் பாதுகாப்புப் பணியாளர்களுக்கான நிர்வாகச் செலவு | .. | .. | 52 | 55 | 58 | 165 |
| 4 | எட்டு மத்தியச் சிறைகளுக்கு மெட்டடோர் வண்டி வழங்குதல் | .. | .. | 3.65 | 2.19 | .. | 5.84 |
| 5 | தட்டச்சுப் பொறி | .. | .. | 0.34 | 0.16 | .. | 0.50 |
| 6 | தொலைபேசி .. | .. | .. | 0.07 | 0.08 | .. | 0.15 |
| 7 | மேசை நாற்காலி முதலியன. | .. | .. | 1.00 | 0.58 | .. | 1.58 |
| 8 | சிறைக் கைதிகளுக்குப் பணி வசதி அளித்தல். | .. | .. | 2.75 | 2.60 | .. | 5.35 |
| 9 | வருவாய்த்துறையிடமிருந்து கிளைச் சிறைகளின் நிர்வாகத்தை சிறைத்துறை மேற்கொள்ளுதல். | .. | .. | 18.00 | 78.00 | 117.00 | 213.00 |
| 10 | சிறைக் கைதிகளுக்கு ஊதியம் ஈட்டும் திட்டத்தை விரிவுபடுத்துதல். | .. | .. | 8.60 | 10.00 | 10.00 | 28.60 |
| 11 | சிறைக் கைதிகளுக்கு சிறு தொழிலில் பயிற்சி அளித்தல். | .. | .. | 13.20 | 16.00 | 17.00 | 46.20 |
| 12 | சிறைக் கைதிகளுக்காக சிற்றுண்டிச் சாலை வசதிகள் செய்து கொடுத்தல். | .. | .. | 0.20 | .. | .. | 0.20 |
| 13 | செலவு ஒதுக்கீடு. | .. | .. | .. | .. | .. | 4.58 |
| | மொத்தம் .. | 8.00 | 32.00 | 135.81 | 204.61 | 246.00 | 631.00 |



மூலதனச் செலவு.

2. மூலதனச் செலவு வகையின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்த தொகையான ரூ. 862 இலட்சத்தில், மத்திய அரசு இது நாள் வரை கீழ்க்காணும் செலவினங்களை ஒப்பளித்துள்ளது:—

| | திட்டம். (1) | ஒப்பளித்த வருடம். (2) | ரூபாய் இலட்சத்தில் (3) |
|---|---|---|---|
| 1. | 1979–80ஆம் ஆண்டில் கூடுதல் இடவசதி ஏற்படுத்த, குடியிருப்புகள் கட்ட. | ஜூன்—1980 | 200.00 |
| | | பிப்ரவரி 1981 .. | 100.00 |
| 2. | தற்போதுள்ள சிறைகளில் கூடுதல் இடவசதி பெருக்க மற்றும் அடிப்படை வசதிகள் செய்துகொடுக்க. | பிப்ரவரி 1982 .. | 118.82 |
| 3. | சிறைகளில் கூடுதல் இடவசதி பெருக்கவும், அடிப்படை வசதிகள் செய்யவும். | செப்டம்பர் 1982 .. | 111.72 |
| | | மொத்தம் .. | 530.54 |

மூலதனச் செலவு வகையில் ஒப்பளிக்கப்பட்ட ரூ. 530.54 இலட்சத்தில் மாநில அரசு கீழ்க்காணும் திட்டங்களை ஒப்பளித்துள்ளது.

| திட்டத்தின் பெயர். (1) | செலவுத் தொகை. (2) | அரசு ஆணை எண். (3) |
|---|---|---|
| | ரூபாய். | |
| 1. பாளையங்கோட்டை, சென்னை மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம் ஆகிய மத்திய சிறைகளில் கூடுதல் இடவசதி செய்து கொடுக்க குடியிருப்புகள் கட்ட ..<br>நீரடி கழிப்பிட வசதி, குடி நீர் வசதி முதலிய வசதிகளை ஏற்படுத்த<br>கடலூர், செங்கற்பட்டுகிளைச் சிறைகளை தனிக்கிளைச் சிறைகளாக மாற்ற .. .. .. | 2,96,73,215 | 487. உள். நாள்: 22-2-1980 |
| 2. புழலில் மத்திய சிறையை கட்ட (முதற்கட்ட கட்டிடப் பணிகள்) | 50,00,000 | 1,726, உள். நாள்: 23-7-1981. |
| 3. புழலில் குடிநீர் மேலேற்றும் தொட்டி கட்ட .. .. | 10,00,000 | 2,555, உள். நாள்: 31-10-1981. |

உடனடியாக நிறைவேற்ற இருக்கும் திட்டங்களின் பட்டியல்.

| திட்டத்தின் பெயர். (1) | செலவுத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) (2) |
|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி, கோவை, கடலூர் மத்திய சிறை மற்றும் செங்கை, பெரியார், கோவை மாவட்டங்களில் கூடுதல் கட்டிடங்கள், கட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க .. .. .. .. .. .. | 232.75 |
| 2. புழலில் உருவாகிக் கொண்டிருக்கும் மத்திய சிறைக்கான இரண்டாவது கட்ட கட்டிடப் பணிகள் .. .. | 143.01 |
| 3. கிளைச் சிறைகளில் நீரடிக் கழிப்பிட வசதிபோன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க .. .. .. | 67.87 |
| மொத்தம் | 443.63 |



வருவாயினச் செலவு.

வருவாயினைச் செலவு வகையில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 631 இலட்சத்தில், மத்திய அரசு இந்நாள் வரை கீழ்க்கண்டவாறு ரூ. 272 இலட்சத்தை ஒப்பளித்துள்ளது.

| திட்டத்தின் பெயர். (1) | ஒப்பளித்த வருடம். (2) | செலவுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்.) (3) |
|---|---|---|
| 1. சிறைவாசிகளுக்கு சத்துணவு, சாப்பிடுவதற்குத் தேவையான பாத்திரங்கள் மற்றும் உறையுடன் கூடிய தலையணைகள் வழங்க. | ஜூன் 1980 | 40 |
| 2. சிறைகளில் கைதிகளை கூடுதலாக வைப்பதால் கண்காணிப்பு மற்றும் கணக்குப் பிரிவுகளில் கூடுதல் பாதுகாப்புப் பணியாளர்கள் குறித்த செலவு .. | ஜூன் 1981 | 52 |
| 3. கிளைச் சிறைகளை வருவாய்த்துறை நிர்வாகத்திலிருந்து சிறைத் துறை நிர்வாகத்திற்கு கொண்டு வருதல் .. | ஜூன் 1981 | 18 |
| 4. கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டத்தை விரிவு படுத்தல் மற்றும் சிறைக்குள் சிற்றுண்டி வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் .. .. .. .. | ஜூன் 1981 | 22 |
| 5. சத்துணவு திட்டத்தை விரிவு படுத்துதல் | செப்டம்பர் 1982. | 29 |
| 6. (அ) கிளைச் சிறைகளை வருவாய்த்துறை நிர்வாகத்திலிருந்து சிறைத்துறை நிர்வாகத்திற்கு கொண்டுவருதல் .. | .. | 78 |
| (இ) சிறைவாசிகளுக்கு கூடுதல் படுக்கை மற்றும் பாத்திரங்கள் வழங்க .. | .. | 6 |
| (உ) கைதிகளுக்கு ஊதியம் ஈட்டும் திட்டத்தை விரிவுபடுத்த, கைதிகளுக்கு சிறுதொழில்களில் பயிற்சி அளிக்க, சிறைக்குள் சிற்றுண்டிச் சாலையை ஏற்படுத்த .. .. .. | .. | 27 |
| மொத்தம் | .. | 272 |

வருவாயினச் செலவு வகையில் கீழ்க்காணும் திட்டங்களுக்கு மாநில அரசு ஒப்பளித்துள்ளது.

| திட்டத்தின் பெயர். | செலவு (ரூபாய் இலட்சத்தில்.) | அரசு ஆணை எண். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 சிறைவாசிகளுக்கு சத்துணவு வழங்க .. .. .. | 5.00 | 487, உள்: நாள். 22—2—80. |
| 2 சிறைவாசிகளுக்கு பாத்திரங்கள் மற்றும் உறையோடு கூடிய தலையணை வழங்க. | 3.00 | 487, உள். நாள். 22—2—80. |
| 3 பெரியார், கோவை, நீலகிரி மாவட்டங்களிலுள்ள கிளைச் சிறைகளை வருவாய்த்துறை நிர்வாகத்திலிருந்து சிறைத் துறை நிர்வாகத்திற்கு கொண்டு வர. | 18.00 | 1840, உள். நாள். 5—8—81. |
| 4 சிறைவாசிகளுக்கு சிற்றுண்டிச் சாலையை திறக்க. | 0.20 | 144, உள். நாள். 23—1—82. |
| 5 கைதிகளின் ஊதியம் ஈட்டும் திட்டத்தை நிறைவேற்ற. | 5.86 | 1815, உள்: நாள். 17—7—82. |
| 6 சிறைச்சாலைகளில் கைத்திறத் தொழில் அறிமுகப்படுத்த. | 13.20 | 1326, உள். நாள். 28—5—82. |
| 7 திருத்தியமைக்கப்பட்ட உணவு வழங்க. | 3.19 | 2366, உள். நாள். 14—9—82. |





மேலே காணும் திட்டங்களைத் தவிர, கீழ்க்காணும் செயற் குறிப்புகள் உடனடியாக நிறைவேற்ற அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

| திட்டத்தின் பெயர். | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| (1) | (2) |
| 1 வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி, மதுரை இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 7 மாவட்டங்களிலுள்ள வருவாய்த்துறை நிர்வாகத்தின் கீழுள்ள 55 கிளைச் சிறைகளை சிறைத்துறை நிர்வாகத்திற்கு கொண்டுவர (இரண்டாவது கட்டமாக) .. .. .. | 60 |
| 2 சிறைகளில் கைதிகளைக் கூடுதலாக வைப்பதால் கண்காணிப்பு—கணக்குப் பிரிவுகளில் கூடுதல் பாதுகாப்புப் பணியாளர்களை அமர்த்தும் திட்டம் .. .. | 52 |

## XXIV. எட்டாவது நிதி உதவிக் குழு.

சிறைத்துறையின் நிர்வாக மேம்பாட்டிற்காக 1984—85 முதல் 1988—89 வரையில் உள்ள காலத்திற்கு முக்கியமாகத் தேவைப்படும் புதிய செலவு விபரங்களினை, அதனைச் செயல்படுத்தும் விபரமான குறிப்புகளுடன் தமக்கு அனுப்புமாறு, எட்டாவது நிதி உதவிக் குழு, இவ்வரசினை கேட்டுக் கொண்டுள்ளது.

அதன்படி, மூலதனச் செலவு வகையில் ரூபாய் 1,700.30 இலட்சத்திற்கும் வருவாயினச் செலவு வகையில் ரூபாய் 500.55 இலட்சத்திற்கும், எட்டாவது நிதி உதவிக் குழுவின் பரிசீலனைக்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இணைப்பு I-ஐ பக்க எண், 307-இல் காண்க.

[1983 ஏப்ரல் 4

## இணைப்பு II

(II ஆம் எண் இனத்தைக் காண்க)

சிறைத் துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் அறிக்கை.

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். | | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 | சிறைத்துறைத் தலைவர் .. .. .. | 1 |
| 2 | சிறைத்துறைத் துணைத் தலைவர் .. .. | 1 |
| 3 | கணக்கு அதிகாரி .. .. .. .. | 1 |
| 4 | உதவி கணக்கு அதிகாரி .. .. ... | 1 |
| 5 | சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர். | 1 |
| 6 | சிறை கண்காணிப்பாளர்கள் (தேர்வு நிலை) | 7 |
| 7 | சிறைக் கண்காணிப்பாளர்கள் .. .. | 3 |
| 8 | கண்காணிப்பாளர், மகளிர் மாநிலச் சிறை, வேலூர். | 1 |
| 9 | கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்கள் .. | 6 |
| 10 | துணைக் கண்காணிப்பாளர்கள், மகளிர் மாநில சிறை மற்றும் சீர்திருத்தப் பள்ளி. | 2 |
| 11 | சிறை அலுவலர்கள் .. .. .. .. | 3 |
| 12 | அரசு உதவி மருத்துவர்கள் ... ... | 17 |
| 13 | நன்னடத்தை தலைமை கண்காணிப்பாளர் .. | 1 |
| 14 | நன்னடத்தை வட்டார அதிகாரிகள் ... | 12 |
| 15 | கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பு இல்லம். பல்லாவரம். | 1 |



1983 ஏப்ரல் 4]

### பணியாளர் அமைப்பு.

#### I. பொதுவான வகையினர்.

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். | | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | | (2) |
| 16 | அலுவலகக் கண்காணிப்பாளர்கள் ... ... | 7 |
| 17 | உதவியாளர்கள் .. .. .. .. | 64 |
| 18 | இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 81 |
| | இளநிலை உதவியாளர்கள் (தேர்வு நிலை) .. | 4 |
| 19 | சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ... .. | 3 |
| 20 | தட்டச்சர்கள் .. .. .. .. | 27 |
| 21 | மேல்நிலைத் தட்டச்சர்கள் .. .. | 5 |
| 22 | பதிவேட்டு எழுத்தாளர்கள் .. .. .. | 38 |
| 23 | பதிவேட்டு எழுத்தாளர்கள் (தேர்வு நிலை) .. | 4 |
| 24 | டபேதார் (தேர்வு நிலை) .. .. .. | 1 |
| 25 | அரசு அடிப்படை பணியாளர்கள் .. .. | 92 |
| 26 | அரசு அடிப்படை பணியாளர்கள் (தேர்வுநிலை) | 3 |

#### II. தனி வகையினர்.

| | | |
|---|---|---|
| 27 | காப்பாளர் ... .. .. ... .. | 1 |
| 28 | துணைச் சிறை அலுவலர்கள் .. .. | 9 |
| 29 | உதவி கண்காணிப்பாளர் ... .. | 1 |
| 30 | சார்நிலை உதவிக் கண்காணிப்பாளர்.. .. | 1 |
| 31 | கண்காணிப்பாளர்கள்—தனிக்கிளைச் சிறைகள் | 3 |

[1983 ஏப்ரல் 4

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 32 கண்காணிப்பாளர்கள்—கிளைச் சிறைகள் I .. | 1 |
| 33 சேம உதவிக்காப்பாளர் .. .. .. | 1 |
| 34 கண்காணிப்பாளர்கள்—கிளைச் சிறைகள் II .. | 15 |
| 35 உளவியல் வல்லுநர்கள் .. .. .. | 5 |
| 36 சமூகப் பணியாளர்கள் .. .. .. | 3 |
| 37 உதவிச் சிறை அலுவலர்கள் .. .. .. | 22 |
| 38 தொழிற்சாலை மேலதிகாரி .. .. | 1 |
| 39 செவிலியர் .. .. .. .. .. | 10 |
| 40 மருந்தாளுநர் .. .. .. .. | 16 |
| 41 மருந்தாளுநர்கள் (தேர்வு நிலை) .. .. | 2 |
| 42 செவிலியர் உதவியாளர்கள் (ஆண்) .. .. | 26 |
| 43 முதன்மைத் தலைமைச் சிறைக் காலவர்/ வாயில் காவலர்கள். | 34 |
| 44 வாயிற் காவலர்கள் தனிக் கிளைச் சிறைகள்.. | 5 |
| 45 சிறைக்காவலர்/சிற்றலுவலர் (நிலை I) .. | 16 |
| 46 சிறைக்காவலர்/சிற்றலுவலர் (நிலை II) .. | 1,313 |
| 47 அலுவலக மேலதிகாரிகள் (நிலை I) .. .. | 3 |
| 48 அலுவலக மேலதிகாரிகள் (நிலை II)தேர்வு நிலை உதவியாளர்கள். | 21 |
| 49 சிப்ப எழுத்தர்கள் .. .. .. .. | 7 |
| 50 சிப்ப எழுத்தர்கள் (தேர்வு நிலை) .. | 2 |



1983 ஏப்ரல் 4]

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 51 இடைநிலை ஆசிரியர்கள் .. .. .. | 25 |
| 52 இடைநிலை ஆசிரியர்கள் (நிலை I) .. .. | 7 |
| 53 முதுநிலை ஆசிரியர்கள் (தேர்வு நிலை) .. | 5 |
| 54 உடற்பயிற்சி ஆசிரியர் .. .. .. | 1 |
| 55 தச்சுத் தொழில் பயிற்றுநர்கள் (நிலை I மற்றும் நிலை II). | 17 |
| 56 நெசவுத் தொழில் பயிற்றுநர்கள் .. .. | 5 |
| 57 புத்தகம் கட்டும் மேஸ்திரிகள் (தேர்வுநிலை) | 2 |
| 58 தையல் தொழில் பயிற்றுநர்கள் .. .. | 11 |
| 59 தையல் தொழில் பயிற்றுநர்கள் (தேர்வுநிலை) | 3 |
| 60 கருமார் தொழில் பயிற்றுநர்கள் (தேர்வு நிலை) | 3 |
| 61 தச்சுத் தொழில் முதலாள் .. .. .. | 2 |
| 62 தச்சுத் தொழில் முதலாள் (தேர்வு நிலை) | 1 |
| 63 மின் கம்பியாட்கள் .. .. .. .. | 11 |
| 64 மின் கம்பியாட்கள் (தேர்வு நிலை) .. .. | 1 |
| 65 கிளைச் சிறை அலுவலர்கள் (நிலை I) .. | 5 |
| 66 கிளைச் சிறை அலுவலர்கள் (நிலை II) .. | 5 |
| 67 நன்னடத்தைக் கண்காணிப்பு அதிகாரிகள் .. | 96 |
| 68 நல அதிகாரிகள் .. .. .. .. | 10 |
| 69 லாரி ஓட்டுநர்கள் .. .. .. .. | 7 |
| 70 லாரி ஓட்டுநர்கள் (தேர்வு நிலை) .. .. | 1 |

[1983 ஏப்ரல் 4

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். | | பதவி களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | | (2) |
| 71 | பிரம்புத் தொழில் பயிற்றுநர் .. .. | 1 |
| 72 | தச்சுத் தொழில் கம்மியர் (தேர்வு நிலை) .. | 1 |
| 73 | லாரி ஆள் .. .. .. .. .. | 1 |
| 74 | காலணி தயாரிப்புப் பணி மேற்பார்வையாளர் | 1 |
| 75 | காலணி தயாரிப்புப் பணி கம்மியர் (தேர்வு நிலை). | 1 |
| 76 | காலணி தயாரிப்புப் பணி மேஸ்திரிகள் (தேர்வு நிலை). | 3 |
| 77 | அலுமினிய பட்டரை முதலாள் (தேர்வு நிலை) | 1 |
| 78 | வண்டிக்காரர்கள் .. .. .. .. | 4 |
| 79 | வண்டிக்காரர்கள் (தேர்வு நிலை) .. .. | 2 |
| 80 | நூற்பு ஆசிரியர் (தேர்வு நிலை) .. .. | 1 |
| 81 | நெசவு ஆசிரியர் (தேர்வு நிலை) .. .. | 1 |
| 82 | சாய வேலை ஆசிரியர் (தேர்வு நிலை) .. | 1 |
| 83 | பாவு ஆசிரியர் (தேர்வு நிலை) .. .. | 1 |
| 84 | இசைக்குழு ஆசிரியர் .. .. .. | 1 |
| 85 | உயரிய பயிற்சி பெற்ற தொழிலாளர் .. | 1 |
| 86 | பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் (நிலை II மற்றும் III). | 5 |
| 87 | கூடார உதவி மேஸ்திரி .. .. .. | 1 |
| 88 | பாவு அமைத்துக் கஞ்சி போடும் பணியாள் (தேர்வு நிலை). | 1 |



1983 ஏப்ரல் 4]

| தொடர் எண். | பதவிகளின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 89 | கொதிகலன் சிற்றாள் (தேர்வு நிலை).. .. | 1 |
| 90 | பொருத்துத் தச்சர் (தேர்வு நிலை) .. | 1 |
| 91 | நெசவுப் பணியாளர் (நிலை I) .. .. | 1 |
| 92 | நெசவுப் பணியாளர்கள் (நிலை II) .. .. | 2 |
| 93 | நெசவுப் பணியாளர் (நிலை III) .. .. | 1 |
| 94 | கட்டு கட்டும் பணியாள் .. .. .. | 1 |
| 95 | பொருத்துபவர் [நீரேற்று நிலையத்திற்குப் பொறுப்பு வகிப்பவர் (தேர்வு நிலை)] .. | 1 |
| 96 | கொதிகலன் முதலாள் (தேர்வுநிலை) .. | 1 |
| 97 | குழாய் பொருத்துநர் (தேர்வுநிலை) .. | 1 |
| 98 | உருளை மூடுபவர் (தேர்வு நிலை) .. | 1 |
| 99 | மோட்டார் பணியாட்கள் (தேர்வு நிலை) .. | 3 |
| 100 | நூற்புத் தலைமைப் பணியாளர் (தேர்வு நிலை) | 1 |
| 101 | உதவி நூற்புப் பணியாளர் (தேர்வு நிலை) .. | 2 |
| 102 | நூற்பு ஆசிரியர் .. .. .. .. | 1 |
| 103 | செய்முறை விளக்குநர்கள் .. .. | 2 |
| 104 | எந்திரம் இயக்குபவர்கள் (நிலை 1) .. | 1 |
| 105 | உற்பத்தி உதவியாளர் .. .. .. | 1 |
| 106 | தச்சர்கள் .. .. .. .. | 4 |
| 107 | பால்காரர் .. .. .. .. | 1 |
| 108 | கால்நடை உதவியாளர்கள் .. .. | 5 |
| 109 | செவிலியர் உதவியாளர் (பெண்) .. .. | 1 |

| தொடர் எண். (1) | பதவிகளின் பெயர். (2) | பதவிகளின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 110 | பற்ற வைப்பவர்கள் | 2 |
| 111 | தலைமை ஆயா | 1 |
| 112 | ஆயாக்கள் | 8 |
| 113 | மின்சார மோட்டார் பணியாட்கள் | 2 |
| 114 | மேற்பார்வையாளர்கள், ஆசிரியர்கள் கையால் தயாரிக்கப்படும் காகிதத் தொழில் | 5 |
| 115 | மின்துறை மேற்பார்வையாளர்கள் (தேர்வு நிலை) | 1 |
| 116 | சவுக்கார வேதியல் பணியாளர் (தேர்வு நிலை) | 1 |
| 117 | இயந்திரம் ஓட்டுநர் | 1 |
| 118 | மெருகிடும் உதவியாளர் | 1 |
| 119 | காகிதக்கூழ் செய்யும் உதவியாளர்கள் | 4 |
| 120 | காவற்காரர்கள் | 10 |
| 121 | கிளைச் சிறையின் அடிப்படைப் பணியாளர்கள்/வார்டர்கள் | 77 |
| 122 | இயன்மருத்துவத் தொழில் நுட்பப் பணியாளர் (தேர்வு நிலை) | 1 |
| 123 | கால்நடை மேய்ப்பவர் | 1 |
| 124 | எந்திரக் கலப்பை (உழுவை) ஓட்டுநர்கள் | 2 |
| 125 | துப்புறவாளர்கள் | 3 |
| 126 | சமையற்காரர்கள் | 19 |
| 127 | சமையற்காரர் (தேர்வு நிலை) | 1 |
| 128 | தோட்டக்காரர் | 1 |
| 129 | உழுவை (எந்திரக் கலப்பை) சுத்தம் செய்பவர் | 1 |





## இணைப்பு-III.

(II ஆம் எண் இனத்தைக் காண்க.)

1972–73 முதல் 1981-82 ஆம் ஆண்டு வரை சிறைத் துறை தொடர்பான செலவு, வருவாய் குறித்த விவரங்களையும், 1982-83 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீட்டையும், 1983–84 ஆம் ஆண்டுக்குரிய வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டையும் காட்டும் விவர அறிக்கை.

| (1) | (2) | (3) (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| I செலவு. | | |
| 1972–73 | | 2,58,50 |
| 1973–74 | | 2,91,61 |
| 1974–75 | | 3,76,34 |
| 1975–76 | | 4,78,26 |
| 1976–77 | | 4,56,44 |
| 1977–78 | | 4,27,02 |
| 1978–79 | | 4,53,23 |
| 1979–80 | | 5,32,94 |
| 1980–81 | | 5,61,44 |
| 1981–82 | | 6,30,72 |
| 1982–83 | திருத்திய மதிப்பீடு | 6,75,40 |
| 1983–84 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 7,01,44 |
| II வருவாய் வரவுகள். | | |
| 1972–73 | | 96,12 |
| 1973–74 | | 1,33,13 |
| 1974–75 | | 1,00,61 |
| 1975–76 | | 99,82 |
| 1976–77 | | 1,18,61 |
| 1977–78 | | 1,24,99 |
| 1978–79 | | 1,14,02 |
| 1979–80 | | 80,43 |
| 1980–81 | | 1,41,20 |
| 1981–82 | | 1,60,13 |
| 1982–83 | திருத்திய மதிப்பீடு | 1,34,74 |
| 1983–84 | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு | 1,34,74 |

## இணைப்பு IV

(I ஆம் எண் இனத்தைக் காண்க.)

I. சிறைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ளவை

1 மத்திய சிறை, சென்னை.
2 மத்திய சிறை, வேலூர்.
3 மத்திய சிறை, கடலூர்.
4 மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி.
5 மத்திய சிறை, சேலம்.
6 மத்திய சிறை, கோயம்புத்தூர்.
7 மத்திய சிறை, மதுரை.
8 மத்திய சிறை, பாளையங்கோட்டை.
9 மாநிலச் சிறை, மகளிர், வேலூர்.
10 பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை.
11 தனிக் கிளைச் சிறை (ஆண்கள்), சேலம்.
12 தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம்.
13 தனிக் கிளைச் சிறை, திருச்சிராப்பள்ளி.
14 திறந்த வெளிச் சிறை, சிங்காநல்லூர்.
15 கிளைச் சிறை (நிலை I), சைதாப்பேட்டை.
16 கிளைச் சிறை (நிலை I), நாகர்கோவில்.
17 கிளைச் சிறை (நிலை II), செங்கல்பட்டு.
18 கிளைச் சிறை (நிலை II), மதுராந்தகம்.
19 கிளைச் சிறை (நிலை II), பூவிருந்தவல்லி.
20 கிளைச் சிறை (நிலை II), திருவள்ளூர்.
21 கிளைச் சிறை (நிலை II), திருத்தணி.
22 கிளைச் சிறை (நிலை II), பொன்னேரி.



23 கிளைச் சிறை (நிலை II), காஞ்சீபுரம்.
24 கிளைச்சிறை (நிலை II), தஞ்சாவூர்.
25 கிளைச் சிறை, அவினாசி.
26 கிளைச் சிறை, மேட்டுப்பாளையம்.
27 கிளைச் சிறை, திருப்பூர்.
28 கிளைச் சிறை, உடுமலைப்பேட்டை.
29 கிளைச் சிறை, பொள்ளாச்சி.
30 கிளைச் சிறை, பல்லடம்.
31 கிளைச் சிறை, தாராபுரம்.
32 கிளைச் சிறை, பவானி.
33 கிளைச் சிறை, ஈரோடு.
34 கிளைச் சிறை, கோபிச்செட்டிப்பாளையம்.
35 கிளைச் சிறை, காங்கேயம்.
36 கிளைச் சிறை, சத்தியமங்கலம்.
37 கிளைச் சிறை, பெருந்துறை.
38 கிளைச் சிறை, உதகமண்டலம்.
39 கிளைச் சிறை, குன்னூர்.
40 கிளைச் சிறை, கூடலூர்.

II. வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கிளைச் சிறைகள் பற்றிய பட்டியல் (மாவட்ட வாரியாக).

(i) வட ஆர்க்காடு மாவட்டம்.

1 கிளைச் சிறை, அரக்கோணம்.
2 கிளைச் சிறை, ஆம்பூர்.
3 கிளைச் சிறை, செய்யார்.
4 கிளைச் சிறை, ஆரணி.
5 கிளைச் சிறை, செங்கம்.
6 கிளைச் சிறை, குடியாத்தம்.

7 கிளைச் சிறை, போளூர்.

8 கிளைச் சிறை, திருப்பத்தூர்.

9 கிளைச் சிறை, திருவண்ணாமலை.

10 கிளைச் சிறை, வாணியம்பாடி.

11 கிளைச் சிறை, வாலாஜாபேட்டை.

12 கிளைச் சிறை, வந்தவாசி.

(ii) தென் ஆர்க்காடு மாவட்டம்.

13 கிளைச் சிறை, கள்ளக்குறிச்சி.

14 கிளைச் சிறை, சிதம்பரம்.

15 கிளைச் சிறை, கடலூர்.

16 கிளைச் சிறை, செஞ்சி.

17 கிளைச் சிறை, காட்டுமன்னார் கோயில்.

18 கிளைச் சிறை, பரங்கிப்பேட்டை.

19 கிளைச் சிறை, திண்டிவனம்.

20 கிளைச் சிறை, திருக்கோவிலூர்.

21 கிளைச் சிறை, உளுந்தூர்பேட்டை.

22 கிளைச் சிறை, விழுப்புரம்.

23 கிளைச் சிறை, விருத்தாசலம்.

24 கிளைச் சிறை, பண்ருட்டி.

(iii) சேலம் மாவட்டம்

25 கிளைச் சிறை, ஆத்தூர்.

26 கிளைச் சிறை, நாமக்கல்.

27 கிளைச் சிறை, ஓமலூர்

28 கிளைச் சிறை, பரமத்தி.

29 கிளைச் சிறை, இராசிபுரம்

30 கிளைச் சிறை, சங்ககிரி.

31 கிளைச் சிறை, திருச்செங்கோடு

32 கிளைச் சிறை (மகளிர்), சேலம்.



(iv) மதுரை மாவட்டம்.

33 கிளைச் சிறை, திண்டுக்கல்.

34 கிளைச் சிறை, கோடைக்கானல்.

35 கிளைச் சிறை, நிலக்கோட்டை

36 கிளைச் சிறை, பழனி.

37 கிளைச் சிறை, பெரியகுளம்.

38 கிளைச் சிறை, திருமங்கலம்.

39 கிளைச் சிறை, உசிலம்பட்டி.

40 கிளைச் சிறை, உத்தமபாளையம்.

41 கிளைச் சிறை, வேடசந்தூர்.

42 கிளைச் சிறை, மேலூர்.

(V) கன்னியாகுமரி மாவட்டம்.

43 கிளைச் சிறை, தக்கலை.

44 கிளைச் சிறை, குழித்துறை.

(vi) இராமநாதபுரம் மாவட்டம்.

45 கிளைச் சிறை, அருப்புக்கோட்டை.

46 கிளைச் சிறை, முதுகுளத்தூர்.

47 கிளைச் சிறை, பரமக்குடி.

48 கிளைச் சிறை, இராமநாதபுரம்.

49 கிளைச் சிறை, சாத்தூர்.

50 கிளைச் சிறை, திருவில்லிபுத்தூர்.

51 கிளைச் சிறை, திருப்பத்தூர்.

52 கிளைச் சிறை, திருவாடாணை.

53 கிளைச் சிறை, விருதுநகர்.

54 கிளைச் சிறை, சிவகங்கை.

(vii) திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

55 கிளைச் சிறை, அரியலூர்.
56 கிளைச் சிறை, செயங்கொண்டான்.
57 கிளைச் சிறை, குளித்தலை.
58 கிளைச் சிறை, லால்குடி.
59 கிளைச் சிறை, மணப்பாறை.
60 கிளைச் சிறை, முசிறி,
61 கிளைச் சிறை, பெரம்பலூர்.
62 கிளைச் சிறை, துறையூர்.
63 கிளைச் சிறை, கரூர்.

(viii) புதுக்கோட்டை மாவட்டம்.

64 கிளைச் சிறை, புதுக்கோட்டை.
65 கிளைச் சிறை அறந்தாங்கி.
66 கிளைச் சிறை, கீரனூர்.
67 கிளைச் சிறை, திருமயம்.

(ix) திருநெல்வேலி மாவட்டம்.

68 கிளைச் சிறை, அம்பாசமுத்திரம்.
69 கிளைச் சிறை, கோவில்பட்டி.
70 கிளைச் சிறை, சங்கரன்கோவில்.
71 கிளைச் சிறை, தூத்துக்குடி.
72 கிளைச் சிறை, ஸ்ரீவைகுண்டம்.
73 கிளைச் சிறை, தென்காசி.
74 கிளைச் சிறை, திருச்செந்தூர்.
75 கிளைச் சிறை, நாங்குநேரி.

(x) தஞ்சாவூர் மாவட்டம்.

76 கிளைச் சிறை, கும்பகோணம்.
77 கிளைச் சிறை, மயிலாடுதுறை (மாயவரம்)
78 கிளைச் சிறை, மன்னார்குடி.
79 கிளைச் சிறை, நாகப்பட்டினம்.



80 கிளைச் சிறை, நன்னிலம்.
81 கிளைச் சிறை, பட்டுக்கோட்டை.
82 கிளைச் சிறை, பாபநாசம்.
83 கிளைச் சிறை, சீர்காழி.
84 கிளைச் சிறை, திருத்துறைப்பூண்டி.
85 கிளைச் சிறை, திருவையாறு.
86 கிளைச் சிறை, திருவாரூர்.
87 கிளைச் சிறை, தரங்கம்பாடி.
88 கிளைச் சிறை, திருவிடைமருதூர்.

(xi) தருமபுரி மாவட்டம்.

89 கிளைச் சிறை, ஓசூர்.
90 கிளைச் சிறை, அரூர்.
91 கிளைச் சிறை, தருமபுரி.
92 கிளைச் சிறை, கிருஷ்ணகிரி.
93 கிளைச் சிறை, ஊத்தங்கரை.

[1983 ஏப்ரல் 4

## இணைப்பு— V

(VI ஆம் எண். இனத்தைக் காண்க.)

மத்திய சிறைகள்/வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறை/ புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, பல்லாவரத்திலுள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம் ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின் பட்டியல் :—

| நிறுவனம். | தொழிற்சாலைகள். |
|---|---|
| (1) | (2) |
| 1 மத்திய சிறை, சென்னை. | தச்சு, தையல், பினைல் உற்பத்தி, நாடா உற்பத்தி, அட்டை கட்டுதல், முத்திரை அரக்கு காகித உற்பத்தி. |
| 2 மத்திய சிறை, வேலூர். | நெசவு, தையல், அட்டை கட்டுதல், தச்சு, பூட்ஸ் தயாரித்தல், பல வகை. |
| 3 மத்திய சிறை, சேலம். | அலுமினியம், கருமார் பட்டறை, தச்சு, நெசவு, காகித உற்பத்தி, அட்டை கட்டுதல், தையல். |
| 4 மத்திய சிறை, கோவை. | நெசவு, சாயம் தோய்த்தல், தையல், கூடாரம் உற்பத்தி, காகித கைவினை உற்பத்தி, புத்தக அட்டை கட்டுதல், சோப்பு தயாரிப்பு, தச்சு. |
| 5 மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி. | தச்சு, நெசவு, பாய் உற்பத்தி, தையல், அட்டை கட்டுதல், சோப்பு தயாரித்தல். |
| 6 மத்திய சிறை, மதுரை | நெசவு, தையல், காகித உற்பத்தி, மற்றும் அட்டை கட்டுதல் தச்சு. |
| 7 மத்திய சிறை, பாளையங்கோட்டை | தச்சு, நெசவு, தையல், காகிதக் கைவினை உற்பத்தி, மற்றும் அட்டை கட்டுதல். |
| 8 மத்திய சிறை, கடலூர். | நெசவு, தையல், தச்சு. |
| 9 ஆண்கள் பிற்காப்பு இல்லம், பல்லாவரம், சென்னை. | தச்சு, தையல், உலோக வேலை. |
| 10 பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. | தச்சு, தையல், அட்டை கட்டுதல், கருமார் பட்டறை. |
| 11 மாநில மகளிர் சிறை, வேலூர். | நாடா உற்பத்தி, முறுக்கு நூல் உற்பத்தி, தையல் மற்றும் நெசவு. |



1983 ஏப்ரல் 4]

## கூட்டுறவுத் துறையின் 1983–84-ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கம்.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களுக்கிணங்க, கிராமப் பொருளாதாரத்திற்கு புத்துயிர் ஊட்டுவதில் விரிவான முறையில் செயலாற்றி வருகின்றன.

2. சில முக்கியப் பணிகளில் எய்தியுள்ள முன்னேற்றம் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| விவரம். | முன்னேற்றம். | | | திட்டம் |
|---|---|---|---|---|
| | 1980–81-ல் | 1981–82-ல். | 1982–83 டிசம்பர் முடிய. | 1983–84-க்காக. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் கோடியில்.) | | | |
| 1. குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்கள் வழங்குதல். | 25.77 | 86.99 | 64.00 | 112.00 |
| 2. நீண்டகாலக் கடன்கள் வழங்குதல். | 4.76 | 5.52 | 10.50 | 15.00 |
| 3. நகை ஈட்டுக் கடன்கள் வழங்குதல். | 116.23 | 179.86 | 125.62 | 150.00 |
| 4. விவசாய விளை பொருட்கள் விற்பனை செய்தல். | 89.87 | 89.98 | 90.30 | 115.00 |
| 5. இரசாயன உரங்கள் வழங்குதல். | 21.14 | 54.37 | 26.11 | 75.00 |
| 6. நுகர்பொருட்கள் சில்லறை விற்பனை செய்தல். | 181.55 | 211.30 | 175.00 | 220.00 |
| 7. கிராமக் கடைகளில் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதல். | 29.53 | 85.20 | 58.71 | 100.00 |

**3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு.**—கூட்டுறவு வளர்ச்சி திட்டங்களுக்காக, அரசு 1980–81 ஆம் ஆண்டிலிருந்து செய்த செலவு, நடப்பாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் திருத்த மதிப்பீடு 1983–84, ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| திட்டங்களின் விவரங்கள். | செலவு. 1980–81ல். | செலவு. 1981–82-ல் | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1982–83. | திருத்த மதிப்பீடு 1982–83. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1983–84 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் கோடியில்.) | | |
| அ. மாநிலத் திட்டப் பணிகள் :— | | | | | |
| (1) கொள்முதலும் விநியோகமும் (கிராம அங்காடித் திட்டம்) .. .. .. | 1.57 | 2,92 | 2.59 | 2.63 | 2.66 |
| (2) கடன் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. | 4.00 | 8.75 (அ) | 2.34 | 5.82 (ஆ) | 1.29 |
| (3) விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. | 0.44 | 0.61 | 0.28 | 0.30 | 0.20 |
| (4) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. | 0.37 | 0.62 | 0.24 | 0.45 | 0.27 |
| (5) ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 0.04 | 0.14 | 0.20 | 0.31 | 0.05 |
| (6) கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி .. .. .. | .. | .. | 0.01 | 0.01 | 0.01 |
| (7) பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் .. | 0.30 | 0.31 | 0.37 | 0.35 | 0.35 |
| மாநிலத் திட்டப் பணிகளின் மொத்தம் .. .. .. | 6.72 | 13.35 | 6.03 | 9.87 | 4.83 |
| ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நிதியுதவி அளிக்கும் திட்டங்கள் .. .. .. .. | 3.71 | 3.89 | 1.81 | 3.26 | 1.51 |
| திட்டப் பணிகள்-மொத்தம் .. | 10.43 | 17.24 | 7.84 | 13.13 | 6.34 |
| இ. திட்டத்தில் சேராத பணிகள். | 74.25 (இ) | 89.21 (ஈ) | 0.38 | 16.81 (உ) | 0.41 |
| பெரு மொத்தம் .. | 84.68 | 1,06.45 | 8.22 | 29.94 | 6.75 |

குறிப்பு.—(அ) முடக்கப்பட்ட கணக்கில் வசூல் குறைவை ஈடு செய்யும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கு உதவித் தொகையாக 2.07 கோடி ரூபாயும், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து விற்பனையில் வழங்கப்பட்ட மானியம் 2.40 கோடி ரூபாயும் இதில் சேர்ந்துள்ளன.

(ஆ) முடக்கப்பட்ட கணக்கில் வசூல் குறைவை ஈடுசெய்யும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கு உதவித்தொகையாக 1.71 கோடி ரூபாயும், வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் கிணறுகள் வெட்டுவதற்காக கூட்டுறவு நிலவள வங்கிகளுக்கு உதவித் தொகையாக 1.50 கோடி ரூபாயும் இதில் சேர்ந்துள்ளன.

(இ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் வழிவகை முன்பணம் 78.87 கோடி ரூபாய் இதில் சேர்ந்துள்ளது.

(ஈ) விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் மானியமாகவும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழிவகை முன்பணமாகவும் 88 கோடி ரூபாய் இதில் சேர்ந்துள்ளது.

(உ) விவசாயிகளுக்கு நிவாரணமளிக்கும் வகையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு உதவித் தொகையாக 2.84 கோடி ரூபாயும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கு வழிவகை முன்பணமாக 13.13 கோடி ரூபாயும் இதில் சேர்ந்துள்ளன.



கூட்டுறவு விவசாயக் கடனுதவி.

(குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட காலக்கடன்கள்.)

4. வலுவான கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல்.—தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் மைய அமைப்பாக கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குகின்றன. இவ் வகைச் சங்கங்கள் 4,670 பயிர்ச் செலவிற்காகக் குறுகிய காலக் கடன்களையும், விவசாயத்தைச் சார்ந்த துணைத் தொழில் களுக்காக மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. அடிமட்ட அளவில், தன்னிறைவும், திறமையாகச் செயல்படு பவையுமாக உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டிருப்பது, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கொள்கை அளவிலான ஒரு முக்கிய நோக்கமாகும். இந்த மாநிலத்தில் உள்ள விவசாயச் சேவைக் கூட்டுறவு சங்கங்கள் தன்னிறைவு அடைந்துள்ளனவா, இல்லையா என்பது ஆராயப் பட்டு, ஒவ்வொன்றும் தன் எல்லைக்குள் மானாவரிக் கணக்கில் 3,000 ஏக்கருக்கும் குறைவாகப் பயிர்நிலங்களையும், இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் குறைவாக குறுகிய காலக் கடன் பட்டு வாடாவையும் கொண்டுள்ள 327 தன்னிறைவற்றச் சங்கங்களை இணைத்து தன்னிறைவுள்ள சங்கங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தன்னிறைவுள்ளனவாக அமைக்கப்பட்ட 182 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள், நிலமேம்பாட்டிற்காகவும், இதர பலவகைக்காரணங்களுக்காகவும் நீண்டகாலக் கடன்களை வழங்கி வருகின்றன.

5. விவசாயிகளைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர் களாகச் சேர்த்தல்.—விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் 1980-82 காலத்தில் மாநிலத்தில் உள்ள விவசாயக் குடும்பங் களில் மேலும் நான்கு சதவீதத்தினரை உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளன. அச்சங்கங்களில் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி அன்று, கீழ்க்கண்ட விவரங்களின்படி,

மாநிலத்தில் உள்ள விவசாயக் குடும்பங்களில் முக்கால் பங்கிற்கும் மேல் உறுப்பினர்களாகி உள்ளன :—

| விவரம். | விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை (விவசாய நிலவுடைமைகள்படி). மொத்த விவசாயக் குடும்பங்கள். | சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளின் குடும்பங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. | 53.14 | 42.05 |
| 2. கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களான குடும்பங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. .. | 43.00 | 32.90 |
| 3. உறுப்பினர்களாக்கப்பட்ட குடும்பங்களின் சதவீதம் | 80.9 | 78.2 |

6. ஷெட்யூல்டு வகுப்பினரை உறுப்பினர்களாகச் சேர்த்தல்: ஷெட்யூல்டு வகுப்புக்களைச் சேர்ந்த விவசாயிகளைப் பெருமளவில் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன், ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொருவரை விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்ப்பதின் மூலம், 1981-82 ஆம் ஆண்டில் நாற்பது ஆயிரம் குடும்பங்களும், நடப்பு ஆண்டில் இருபது ஆயிரம் குடும்பங்களும் ஆக ஷெட்யூல்டு வகுப்புகளைச் சேர்ந்த விவசாயிகளின் குடும்பங்களில் அறுபதாயிரம் குடும்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் பயிர்ச் செலவிற்காக குறுகிய காலக் கடன்களையும், பால்பண்ணை கோழி வளர்ப்பு, ஆடு வளர்த்தல் போன்ற காரியங்களுக்காக, மத்திய காலக் கடன்களையும், சங்கங்கள் வழங்கும் இதர சேவைகளையும் பெற்று, அவ்வகையில் தமது வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியும். கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்க்கப்படும் ஒவ்வொருவருக்கும் அவர் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக அரசு மானியம் நூறு ரூபாய் வழங்கப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டிலும் அரசு மானியம் வழங்கி மேலும் இருபதாயிரம் இவ்வகைக் குடும்பங்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.





7. கடன் வழங்குதல்.—கூட்டுறவுச் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை விவசாயிகளின் சங்கங்கள் 1977-78 ஆம் ஆண்டிலிருந்து திட்டமிட்டு கடுமையாக எதிர்த்து வந்ததால் உறுப்பினர்களின் தவணை தவறிய கடன்கள் பெருமளவு அதிகரித்தும்கூட, கடன் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயக் கடன்களை வழங்குவதில், 1981-82 ஆம் ஆண்டிலிருந்து கீழ்க்கண்ட விவரங்களின்படி, முன்னேற்றம் கண்டுள்ளன :—

| ஆண்டு. | வழங்கிய கடன்கள். (ரூபாய் கோடியில்.) குறுகிய காலப் பயிர்க் கடன்கள். | விவசாயம் மற்றும் துணைத் தொழில் களுக்காக மத்திய காலக் கடனகள். | விவசாய காரியங் களுக்காக நீண்ட காலக் கடன்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1980-81 .. | 21.52 | 4.25 | 4.76 | 30.53 |
| 1981-82 .. | 77.20 | 9.79 | 5.52 | 92.51 |
| 1982-83 (ஜனவரி முடிய). | 58.19 | 11.77 | 11.45 | 81.41 |

மத்திய காலக் கடன்களை வழங்கியதில் உள்ள சிறப்பான முன்னேற்றம் காரணமாக, விவசாயிகள், குறிப்பாக நலிந்த பிரிவினர், பால்பண்ணை, ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களில் ஈடுபட்டு பெருமளவில் தங்களது வருவாயை அதிகரித்துக்கொள்ள முடிந்தது. பிரதம நிலவள வங்கிகள் நீண்டகாலக் கடன்களை வழங்குவதற்குண்டான விதிமுறைகளை இந்திய ரிசர்வ் வங்கி 1982-83-ல் தளர்த்தியதன் பயனாக நடப்பு ஆண்டில் நீண்ட காலக் கடன்கள் வழங்குவதில் நல்ல முன்னேற்றம் அடைய முடிந்தது. நடப்பு ஆண்டிற்கான இலக்கு 10 கோடி ரூபாயாக இருக்க, 15 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்க முடியும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. குறுகிய காலக் கடன்களாக 100 கோடி ரூபாயும் மத்திய, காலக் கடன்களாக 12 கோடி ரூபாயும் நீண்ட காலக் கடன்களாக, 15 கோடி ரூபாயும் வழங்குவது 1983-84 ஆம் ஆண்டிற்கான கடன் வழங்கும் திட்டமாகும்.

[1983 ஏப்ரல் 4

8. நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல்.—தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) வகுத்துள்ள வழிமுறைகள்படி, வழங்கப்படும் மொத்த குறுகிய காலக்கடன்களில் இருபது சதவீதம் நலிந்த பிரிவினருக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலங்களைச் சொந்த மாக வைத்திருப்பவர்களுக்கு அல்லது குத்தகைக்குப் பயிரிடு பவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். மொத்தக் கடன் பட்டு வாடாவில் குறைந்தது ஐம்பது சதவீதத்திற்கு நலிந்த பிரிவினரின் பங்கை அகில இந்திய ரீதியில் உயர்த்த வேண்டும் என்பதே ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கொள்கை அளவிலான நோக்கமாகும். தமிழ்நாட்டில் உள்ள விவசாயச் சேவைக் கூட்டு றவுச் சங்கங்கள் 1981-82 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினருக்குக் குறுகிய காலக் கடன்களை 45.98 கோடி ரூபாய் அளவிற்கு, அதாவது வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் சுமார் 60 சதவீத அளவிற்கு வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய காலக் கடன்களில் நலிந்த பிரிவினரின் பங்கு 98 சதவீத அளவிற்கு மிகவும் உயர்ந்துள்ளது. வழங்கிய கடன்களில் நலிந்த பிரிவின ருக்கான பங்கை உயர்த்தியதிலான முன்னேற்றம் கீழே கொடுக் கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | | நலிந்த பிரிவினரின் பங்கு (சதவீதம்.) குறுகிய காலக் கடன்கள். | மத்திய காலக் கடன்கள். | நீண்ட காலக் கடன்கள். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1980-81 | .. | 42 | 96 | 30 |
| 1981-82 | .. | 60 | 98 | 44 |

வழங்கும் கடன்களில் நலிந்த பிரிவினருக்கான பங்கை மேலும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

9. நீண்டகாலக் கடன்களை பல்வகைக் காரணங்களுக்காக வழங்குதல்.—நிலவள வங்கிகள், விவசாய அடிப்படையிலான தொழில்களை நிறுவுவது உட்பட பல்வகைக் காரியங்களுக்காகப் பெருமளவில் கடன்களை வழங்குவதற்கு ஏதுவாகும் வகையில், தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகளின் சட்டம், 1934, தக்க முறையில் திருத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட சட்டத்துக் கேற்ப, தென்னை, திராட்சை, மா, காப்பி, தேயிலை, முந்திரி, சவுக்கு, முசுக்கொட்டை மற்றும் மல்லிகை போன்ற தோட்டப்



1983 ஏப்ரல் 4]

பயிர்களை சாகுபடி செய்வதற்கும், பால் பண்ணை, ஆடு வளர்த் தல், கோழிப் பண்ணை, இறால் வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களில் ஈடுபடுவதற்கும் நீண்டகாலக் கடன்கள் வழங்கப் படுகின்றன. இந்த காரணங்களுக்காக கடன்கள் வழங்கும் பொருட்டு, 17.55 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட 82 திட்டங் கள், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிட மிருந்து நிதி உதவி பெற்று, 22.58 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட வழக்கமான 87 சிறு பாசனத் திட்டங்களோடும் கூட, தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நில அட மானத்தை வற்புறுத்தாமல் அரசு உத்திரவாதத்தின் பேரில் கடன் கொடுப்பதற்கு, சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நிலவள வங்கிகள் நிலமற்றவர்களுக்கு நில அடமானமின்றி திட்ட ரீதியாகப் பல்வகை காரணங்களுக்காகக் கடன்கள் வழங்கும் பொருட்டு அரசு 5 கோடி ரூபாய் அளவிற்கு உத்தரவாதம் அளித் துள்ளது.

10. தஞ்சாவூர் மாவட்டத்தில் குழாய்க்கிணறுகள் அமைப் பதற்கான கடுவிரைவுத் திட்டம்.—தென்மேற்குப் பருவமழை பொய்த்து மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீர்நிலை மோசமடைந்ததன் காரணமாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்போதைய சம்பாப் பயிரைக்காக்கும் பொருட்டு, 1,000 குழாய்க் கிணறுகளை அமைப் பதற்கான ஒரு கடுவிரைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதற்காக, விவசாயிகளுக்குப் பிரதம நிலவள வங்கிகள் மூலமாக கடன்கள் வழங்கும் பொருட்டு அரசு 1.50 கோடி ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி தஞ்சாவூர் மாவட்டத்தில் 4,000 குழாய் கிணறுகள் ரூபாய் 6.00 கோடி செலவில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

11. தவணை தவறிய கடன்கள்.—தவணை தவறிய கடன்கள் பற்றிய நிலை கீழ்வருமாறு :—

| நாள். | கேட்புக்குத் தவணை தவறிய கடன்களின் சதவீதம். விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள். | பிரதம நிலவள வங்கிகள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980 ஜூன் 30-ல் .. | [illegible].4 | 44.0 (முடக்கப்பட்ட பின்) |
| 1981 ஜூன் 30-ல் .. | 43.8 | 66.4 |
| 1982 ஜூன் 30-ல் .. | 58.3 | 67.2 |
| 1982 டிசம்பர் 31-ல் | 81.4 | 89.4 |

இம் மாநிலத்தில் சில பகுதிகளில் ஏற்பட்ட வறட்சி நிலை மற்றும் விவசாயிகளின் எதிர்ப்பின் காரணமாக விவசாயச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் தவணை தவறிய கடன்கள் 1982 ஜூன் 30-ல் அதிகரிக்க நேரிட்டது. கடன்தாரர்களை இசையச் செய்வதற்கான முயற்சிகள் வாயிலாகக் கூட்டுறவுச் சங்கங்களின் தவணை தவறிய கடன்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் தொடரப்படுகின்றன. இயற்கைப் பேரிடர்களினால் பாதிக்கப்பட்ட நீண்டகாலக் கடன்தாரர்களுக்கு நிவாரணம் அளிக்கும்பொருட்டு 1.39 இலட்சம் கடன்தாரர்களிடம் நிலுவை நின்ற 75.84 கோடி ரூபாய் அளவிற்கான தவணை மாற்றியமைக்கப்பட்ட கடன்கள், நீடிக்கப்பட்ட காலத்தில், சுலப தவணைகளில் வசூலிக்கப்படும் வகையில், ஒரு தணிக்கைக்கு முடக்கப்பட்டன. இவ்வேற்பாட்டினால் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ல் இருந்த தவணை தவறிய கடன்களின் சதவீதத்தை 79.6-லிருந்து 66.4-க்குக் கருத்தளவில் குறைக்க முடிந்தது. முடக்கப்பட்ட கணக்கின்கீழ் வசூலில் இருந்த குறையை 14.63 கோடி ரூபாய் அளவிற்கு மாநில அரசு ஈடுசெய்துள்ளது. இதைக் கருத்திற்கொண்டு, 1982, ஜூன் 30-ல் பிரதம நிலவள வங்கிகள் அளவில் இருந்த தவணை தவறிய கடன்களின் சதவீதம் 67.2-லிருந்து 41.4-க்குக் குறைக்கப்பட்டது. இதன் பயனாக 1982—83 ஆம் ஆண்டில் 182 பிரதம நிலவள வங்கிகளில் 55 வங்கிகள் வரையறையின்றி கடன்வழங்கும் தகுதியையும் மீதமுள்ள 127 வங்கிகள் வரையறுக்கப்பட்ட அளவு கடன் வழங்கும் தகுதியையும் பெற்றன.

12. விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்தல்.—விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன், அரசு 1979—80 ஆம் ஆண்டிலிருந்து வட்டி தள்ளுபடி அல்லது திருப்பித் தருதல், சிறு விவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்ட அல்லது தவணை நீடித்துத் தரப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்தல் முதலியவற்றிற்காக 98 கோடி ரூபாய் அளவிற்கு நிதி உதவி அளித்துள்ளது. அன்றியும் தவணை தவறாத கடன்களை ஈடு கட்டுவதில் உள்ள குறையை நீக்குவதற்காக அல்லது தவணைத் தேதியில் செலுத்தத் தவறிய தொகையைச் செலுத்துவதற்காக மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு நாடு கூடி ரூபாயும், நீண்டகாலக் கடன் வசூலைத் தள்ளி வைத்த வழங்கியுள்ளது... நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக தமிழ் ...நில நிலவள வங்கிக்கு 38 கோடி ரூபாயும் அரசு

13. பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து உதவி. பொய்த்த வடிகுழாய்க்கிணறுகள் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகளால் பாசனம் செய்யப்பட வேண்டிய நிலத்தின் ஏக்கர் அளவு உயர்த்தப்பட்டும் பொய்த்த கிணறுகளால் பாதிக்கப்பட்டவர்கள் செலுத்தவேண்டிய கடனுக்கான வட்டியில், சிறு விவசாயிகளுக்கு 90 சதவீதமும்





பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீதமும், தள்ளுபடி செய்தும் பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து உதவி அளிப்பதற்கான விதி முறைகளை அரசு தளர்த்தியுள்ளது. 1982, டிசம்பர் 31 ஆம் தேதி முடிய, 1,883 பொய்த்த கிணறுகளுக்காக 47.89 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

14. குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தினால் வட்டி குறைப்பு.—குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன்தாரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமது குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன் தவணைகளையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு அரசு 1981—82 ஆம் ஆண்டிலிருந்து வட்டியில் 2 சதவீதத்தைத் தள்ளுபடி செய்து வருகிறது. 1981—82 ஆம் ஆண்டில், 8,445 சிறு விவசாயிகள் ஒரு கோடி ரூபாய் அளவிற்குத் தம் கடன்களைக் குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தி, 0.95 இலட்சம் ரூபாய் அளவிற்கு வட்டி தள்ளுபடியைப் பெற்றனர். நடப்பு ஆண்டில் மேலும் அதிக எண்ணிக்கையிலான சிறு விவசாயிகள் இந்த வட்டி குறைப்பைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

15. கடன் வசூலைத் தள்ளி வைத்தல்.—தென்மேற்குப் பருவ மழையும் வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்ததால் மாநிலத்தில் தற்போது நிலவி வரும் வறட்சி நிலை காரணமாக, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் பெற்று, குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றி அமைக்கவும், நீண்டகாலக் கடன் தவணைகள் திருப்பிச் செலுத்தப்படுவதைத் தள்ளிப் போடவும் நடவடிக்கை தொடரப்படுகிறது.

16. உள்நிதி வசதிகளைப் பெருக்குதல்.—கடன் கூட்டுறவுச் சங்கங்கள் தமது உள்நிதி வசதிகளைப் பெருக்குவதில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டுள்ளன. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், சென்னையில் உள்ளது தவிர இதர மத்தியக்கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின், மொத்தப் பங்கு மூலதனம் (அரசு முதலீடு நீங்கலாக) 1980—81 ஆம் ஆண்டு இறுதியில் 58.50 கோடி ரூபாயிலிருந்து, 1981—82 ஆம் ஆண்டு இறுதியில் 60.41 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. அவற்றின் மொத்த வைப்புத் தொகைகள் 1980—81 ஆம் ஆண்டு இறுதியில் 379.30 கோடி ரூபாயிலிருந்து, 1981—82 ஆம்ஆண்டு இறுதியில் 425.81 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. 1980 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 1982 மார்ச் 31 தேதி முடியவுள்ள காலத்தில் வைப்புத் தொகைகள் 36 சதவீத அளவிற்கு அதிகரித்துள்ளன என்பது முக்கியமாகக் கவனிக்கத்தக்கது.

128/59—37

[1973 ஏப்ரல் 4

17. பங்கு மூலதனத்திற்கும் கடன் ஈட்டுப் பத்திரங்களுக்கும் அரசு நிதி அளித்தல்.—கடன் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய கடன் வாங்கும் தகுதியைப் பெறுவதற்கு உதவும் பொருட்டு, அரசு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தேசிய ஊரகக் கடனுதவி (நீண்ட காலச் செயல் முறைகள்) நிதியிலிருந்து கடன் பெற்று, அச்சங்கங்களின் பங்கு மூல தனத்தில் முதலீடு செய்து வருகிறது. நில அடமான வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், உட்பட, கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த மூலதனம் 1982 டிசம்பர் 31-ல் 31 கோடி ரூபாயாக இருந்தது. மாநில நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்களிலும் அரசு முதலீடு செய்கிறது. 1982 டிசம்பர் 31-ல் நிலுவை நின்ற அரசு முதலீடு 14 கோடி ரூபாய் ஆகும். 1983–84-ல் 40 இலட்சம் ரூபாய் முதலீடு செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

18. பயிர்க் காப்புறுதித் திட்டம்.—விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல் பயிருக்கான பயிர்க் காப்புறுதித் திட்டத்தை தேர்ந்தெடுத்த வட்டங்களில் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றன. வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை இடர்களால் பயிர் சேதமடைந்து அதனால் எற்படும் இழப்பிற்கு மட்டுமே காப்புறுதி முன்னால் இருந்தது. இக்காப்புறுதி தற்போது, (அ) போர் மற்றும் அதையொட்டிய இடர்கள் மற்றும் (ஆ) அணு சம்பந்தப்பட்ட (நியூக்லியர்) இடர்கள் தவிர, காப்புறுதி செய்யப் பட்ட பயிர்ப் பருவத்தில் ஏற்படும் ஏனைய அனைத்து இடர்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது, ஒரு விவசாயி காப்புறுதி செய்து கொள்ளக்கூடிய அதிக அளவுத் தொகை, 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் அல்லது பயிர்க் கடனின் 110 சதவீதம் இவற்றில் எது குறைவோ அவ்வளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தை 1981–82 ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றியது பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.—

| விவரம். | நெல் 1 1981. | நெல் 2 1981–82. | நெல் 1 1982. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. வட்டங்களின் எண்ணிக்கை .. | 9 | 13 | 25 |
| 2. பயனடைந்தோரின் எண்ணிக்கை | 1,996 | 1,653 | 3,294 |
| 3. திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நிலம் (ஏக்கரில்.) | 2,746 | 3,270 | 6,499 |
| 4. காப்புறுதி செய்யப்பட்ட தொகை (இலட்சம் ரூபாயில்). | 20.49 | 21.68 | 53.32 |
| 5. வசூலிக்கப்பட்ட தவணைத் தொகை (இலட்சம் ரூபாயில்). | 0.87 | 0.66 | 1.56 |



1983 ஏப்ரல் 4]

புள்ளி விவரத்துறை கிராமங்களில் நடத்திய பயிர் விளைச்சல் தேர்வாராய்ச்சி வெளிப்படுத்தியபடி, காப்புறுதிக்கு நிர்ண யிக்கப்பட்ட அளவிற்கும் கீழ் விளைச்சல் குறைவாக இருந்த போது கீழ்க்காணும் விவரங்களின்படி இழப்புத் தொகை தரப் பட்டது :—

| பயிர். | வட்டங்களின் எண்ணிக்கை. | பயனடைந்தோரின் எண்ணிக்கை. | திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நிலம் (ஏக்கரில்) | அவர்கள் செலுத்திய தவணைத் தொகை (இலட்சம் ரூபாயில்) | தரப்பட்ட இழப்பீடு (இலட்சம் ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| நெல் 1, 1981 | 1 | 332 | 201 | 0·11 | 0·13 |
| நெல் 2, 198!–82 | 2 | 158 | 213 | 0·07 | 0·13 |

1982, நெல் 1 பயிருக்கான விளைச்சல் தேர்வாராய்சிச் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. 1982–83, நெல்-2 பயிருக்காக 22 வட்டங்களில் மொத்தம் 42 இலட்சம் ரூபாய் அளவிற்கு காப்புறுதி செய்ய இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

நகையீட்டுக் கடன்கள்.

19. கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டு நிறுவன அமைப்பில்லாத தனியார்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதாகியதால் ஏற்பட்டுள்ள நிதி வசதிக் குறைவைத் தீர்ப் பதில் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், நகையீட்டின் பேரில் கடன்கள் வழங்குதல் மூலம், முக்கிய பங்கு ஆற்றி யுள்ளன. 1,229 விவசாய சேவைக் கூட்றவுச் சங்கங்களும், மாநில மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 403 கிளை களும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும், அவற்றின் 12 கிளை களும் ஆக 1,772 கூட்டுறவு அமைப்புகள் தற்பொழுது நகைக் கடன்கள் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டு இறுதியில் 1,666 கூட்டுறவு அமைப்புகளே நகைக் கடன் கள் வழங்கின. 1981–82 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய நகைக் கடன்களின் அளவு 179·86 கோடி ரூபாயாகும். இது மாநிலத்தில் உள்ள கடன் வழங்கும் சங்கங்களின் இது வரையில் இல்லாத சாதனையாகும். இதனால், 11·82 இலட்சம் பேர்கள் பயன் அடைந்துள்ளனர். முந்தைய 1980–81 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன் தொகை 116 23 கோடி ரூபாயும், பயனடைந்தோரின் எண்ணிக்கை 9.43 இலட்சமும் ஆகும். நடப்பு ஆண்டில் டிசம்பர் 1982 முடிய, கூட்டுறவுச் சங்கங்களின் 125·62 கோடி ரூபாய்

அளவிற்கு நகையீட்டுக் கடன்களை 7·44 இலட்சம் பேர்களுக்கு வழங்கியுள்ளன. 1983—84 ஆம் ஆண்டிற்கான இலக்கு 150 கோடி ரூபாயாகும். மாநிலம் முழுவதிலும், அநேகமாக கிராமப்புறங்களில் 1,772 கூட்டுறவு அமைப்புகளில் நகைக் கடன்கள் வழங்குவதின் மூலம், கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்த பிரிவினர்களின் அவசரக் கடன் தேவைகளைப் பயன் விளையத் தக்க வகையில் நிறைவு செய்து வருகின்றன.

### குறைந்த வட்டிக்குக் கடன்கள்.

20. மிகக் குறைந்த வட்டிக்கு, அதாவது ஆண்டொன்றுக்கு 4 சதவீதத்தில், தொழில் கடன்களை நலிந்த பிரிவினருக்கு தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், உழவர் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 70 கூட்டுறவு நகர வங்கிகள் தொடர்ந்து வழங்கி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அங்கீகரித்துள்ள 22 வகை சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களில் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ள, எல்லாவகையிலும் ஆண்டு வருவாய் கிராமப்புறங்களில் 2,500 ரூபாய்க்கும், ஓரளவு நகர்ப்புறங்களிளிலும் நகரங்களிலும் 3,000 ரூபாய்க்கும் அதிகமாகமல் உள்ளவர்களுக்கு இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இக் கடன் நபர் ஜாமீன் பேரில் ஒருவருக்கு மூலதனச் செலவிற்காக 5,000 ரூபாயும் நடைமுறைச் செலவிற்காக 2,000 ரூபாயும் ஆக மொத்தம் 7,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், முதல் ஆண்டு ஆகிய 1981—82 ஆம் ஆண்டில் 85 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப் பட்டன.

### நகர்பபுற கடன் உதவி.

21. நகரங்களிலும் ஓரளவு நகர்ப்புறங்களிலும் உள்ளவர்களுக்குக் கடன்கள்.—தமிழ்நாட்டில் 132 கூட்டுறவு நகர வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், வங்கி வசதிகளை அளிப்பதோடு, நகர்ப்புற மக்களுக்கும் ஓரளவு நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள மக்களுக்கும், குறுகிய காலக் கடன்களையும் மத்திய காலக் கடன்களையும் 1981—82 ஆம் ஆண்டில் 129·78 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கியுள்ளன. அதற்கு முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட கடன்கள் 111·39 கோடி ரூபாயாகும். இவ்வங்கிகளிடமிருந்த வைப்புத் தொகைகள் முந்தைய ஆண்டில் 77·46 கோடி ரூபாய் அளவிற்கே இருந்திருக்க, 1981—82 ஆம் ஆண்டு இறுதியில் 100·41 கோடி ரூபாயாக உயர்ந்தது. குடிசை தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதியுதவி செய்யும் திட்டத்தின் கீழ், இவ்வங்கிகள் 1981—82 ஆம் ஆண்டில் 202·03 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்களை வழங்கியுள்ளன. அதற்கு முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட கடன்கள் 147·86 இலட்சம் ரூபாய் மட்டுமே ஆகும். நடப்பு ஆண்டில் டிசம்பர் 1982 முடிய இத்திட்டத்தின் கீழ் 186·29 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.



22. சென்னை மாநகரில் நடமாடும் வங்கிக் கிளை.—சென்னை மாநகரில் உள்ள சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளில் 3.80 கோடி ரூபாய் மூலதனத்தையும், 27·31 கோடி ரூபாய் வைப்புத் தொகைகளையும் கொண்டு, விவசாயம் நீங்கலான இதர காரியங்களுக்காக கடன் வழங்குவதில் ஒரு முக்கிய பங்கைத் தொடர்ந்து வகித்து வருகிறது. தமிழ்நாட்டில் வங்கித் துறையின் வரலாற்றில் ஒரு புதிய துணிகரச் செயலாக 1980 ஆம் ஆண்டு மே திங்களில் தொடக்கப் பெற்ற இவ்வங்கியின் நடமாடும் கிளை, எல்லாவித வங்கி வசதிகளையும் அளிப்பதோடு, சிறு சேமிப்பில் தனிக்கவனம் செலுத்தி தனது வாடிக்கையாளர்கள். குறிப்பாக நலிந்த பிரிவினைச் சார்ந்தவர்கள், பிற்காலத்திற்காகச் சேமித்து வைப்பதற்காக உதவுகிறது. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 28 07 இலட்சம் ரூபாய் அளவிற்கு அது வைப்புத் தொகைகளை வசூலித்துள்ளது.

### கூட்டுறவு விற்பனை பதப்படுத்துதல் மற்றும் கிடங்கு வசதி.

### கூட்டுறவு விற்பனை.

23. விவசாய விளைபொருட்கள் விற்பனை செய்தல் .—மாநிலத்தில் உள்ள 115 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தம் உறுப்பினர்களின் விவசாய விளைபொருட்களை விற்பனை செய்வதில் அவர்களுக்குத்தொடர்ந்து உதவி செய்து, அதன் வாயிலாக அவர்கள் நியாயமான வருமானம் பெறுவதில் அவர்களுக்குத் துணை புரிகின்றன. 1981—82 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மதிப்பு 89·98 கோடி ரூபாயாகும். இதில் பருத்தி மட்டுமே 21·23 கோடி ரூபாய்க்கு அடங்கும். இவ்வகையில் நடப்பு ஆண்டில் எய்தியுள்ள குறிப்பிடத் தக்க முன்னேற்றம். 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய உள்ள 9 மாத காலத்திலேயே 90·30 கோடி ரூபாய் அளவிற்கு அதாவது முந்தைய ஆண்டின் முழுவதற்குமான அளவை விட அதிகமாக, விவசாய விளைபொருட்கள் விற்பனை செய்யப் பட்டிருப்பதிலிருந்து விளங்கும். 1983—84 ஆம் ஆண்டிற்கான இலக்கு 115 கோடி ரூபாய். தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்துடன் கொண்டுள்ள இணைந்த ஏற்பாட்டின் கீழ், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் அக்கழகத்திற்கு பருத்தியை 1981—82 ஆம் ஆண்டில் 72 இலட்சம் ரூபாய் அளவிற்கும், நடப்பு ஆண்டில் டிசம்பர் திங்கள் முடிய 163 இலட்சம் ரூபாய் அளவிற்கும் வாங்கிக்கொடுத்துள்ளது.

24. விளைபொருளீட்டுக் கடன்கள் வழங்குல்.—விவசாய உறுப்பினர்கள் தம் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரையில் காத்திருக்கும் பொருட்டு, அவர்களது விளைபொருட்களின் ஈட்டின் பேரில் கூட்டுறவு விற்பனைச் சங்

கங்களும், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் கடன்களை வழங்குகின்றன. இவ்வகைக்கடன்கள் 1.69 கோடி ரூபாய் அளவிற்கு 1981—82 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

25. நெல் கொள்முதல்.—தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் சம்பா 1982 பருவத்தில், அரசு ஆதரவு விலைத் திட்டத்தின் கீழ் 2·25 கோடி ரூபாய் மதிப்புள்ள 0·18 இலட்சம் டன் நெல் கொள் முதல் செய்தது. அந்த நெல் முழுவதும் அரிசியாக அறைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகப் படுத்துவதற்காக, கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

26. இரசாயன உர விநியோகம்.—விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்குப் பயிர்க்கூட்டங்களின் ஒரு பகுதியாகவும், உறுப்பினர்களுக்கும் உறுப்பினரல்லாதவர்க்கும் ரொக்கத்திற்கும்தொடர்ந்து விநியோகித்து வருகின்றன. உற்பத்தித் திறன் ஆண்டு, 1982-க்கான செயல் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 100 ஆக இருக்க 122 கூடுதல் உர விற்பனைக் கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் திறந்தன. இதனால் கூட்டுறவுச் சங்கங்களின் சில்லரை உர விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை 4,683 உயர்ந்தது. உர விற்பனையிலும் 1981—82 ஆம் ஆண்டில் நல்ல முன்னேற்றம் இருந்தது. அவ்வாண்டில் 2·32 இலட்சம் டன் உரங்கள் 54·37 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டன. அதற்கு முந்தைய 1980—81 ஆம் ஆண்டில் 1·44 இலட்சம் டன்களே 21·14 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டன. நடப்பு ஆண்டில் டிசம்பர் திங்கள் முடிய 1·14 இலட்சம் டன் உரங்கள் 26·11 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளன. 1983—84 ஆம் ஆண்டிற்கான இலக்கு 75 கோடி ரூபாயாகும்.

27. உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைத்தல்.—வாணிகச் சூதாட்டத்தில் ஈடுபடும் இடைத்தரகர்களை அகற்றி, உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகியோரது நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைப்பததற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

28. விற்பனை வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டம்.—கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாக ஒரு கோடி ரூபாய். அளவிற்கு விற்று முதல் செய்யத் துணை புரியும் பொருட்டு, ஒவ்வொன்றும் ஒரு விற்பனைக் களம் கட்டவும், ஒரு லாரி வாங்கவும், மற்றும் தரம் பிரிக்கும் கருவிகள் வாங்கவும்,ஒவ்வொரு ஆண்டிலும் ஐந்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கும் ஒருங்கிணைந்த திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்தின் ஐந்தாவது ஆண்டாகிய 1983—84-ல் மேலும் ஐந்து சங்கங்களுக்கு இவ்வுதவி தரப்படும்.



## கூட்டுறவுப் பதனிடுதல்

29. பதப்படுத்தும் பிரிவுகளை அமைத்தல்.—உறுப்பினர்களாக உள்ள உற்பத்தியாளர்களுக்கு விளைபொருட்களைக் குறைந்த செலவில் பதப்படுத்தப்படும் வசதிகளை அளிக்கும் பொருட்டு அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து கடனாகவும் உதவி பெற்று, கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைக்கு உறுதுணையாக, பதப்படுத்தும் பிரிவுகளை நிறுவியுள்ளன. அரிசி ஆலைகள் 37-ம் கடலை உடைக்கும் இயந்திரங்கள் 24-ம் பருத்தி விதை நீக்கும் இயந்திரங்கள் 18-ம், எண்ணெய் ஆலைகள் 9-ம் உட்பட, 95 பதப்படுத்தும் பிரிவுகள் உள்ளன. 1980—81-ஆம் ஆண்டில் நிதி உதவி ஒப்பளிக்கப்பட்ட சங்கரன் கோவில் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் பருத்தி விதை நீக்கும் இயந்திரமும், திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் அரிசி ஆலையும் நிறுவப்படுகின்றன. மாநிலத்தில் மேலும் 7 பருத்தி விதை நீக்கும் இயந்திரங்களை நிறுவ 7 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு 1981-82 ஆம் ஆண்டில் அரசு நிதி உதவி ஒப்பளித்தது. இப்பிரிவுகளும் நிறுவப்படுகின்றன. நடப்பு ஆண்டில் ஒரு மஞ்சள் தூள் இயந்திரம் நிறுவுவதற்காக ஈரோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

30. மணிலா எண்ணெய் தயாரித்தல்.—வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒண்டிப்புதூரிலும் உள்ள மூன்று கூட்டுறவு எண்ணெய் ஆலைகள் 1981—82 ஆம் ஆண்டில் 2,657 டன் அளவிற்கும் நடப்பு ஆண்டில் டிசம்பர் திங்கள் முடிய 757 டன் அளவிற்கும் கடலை எண்ணெய் தயாரித்துள்ளன.

31. பூச்சிக் கொல்லி மருந்த தயாரித்தல்.—கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள துடியலூர் கூட்டுறவு விவசாய சேவை சங்கம் 1981—82 ஆம் ஆண்டில் 61 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கும் நடப்பு ஆண்டிம் டிசம்பர் திங்கள் முடிய 44 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கும் பூச்சிக் கொல்லி மருந்துகளை தயாரித்தது.

32. அரிசி ஆலைகளை முழுமையாகப் பயன்படுத்துதல்.—அரிசி ஆலைகளை வைத்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், அவ்வாலைகள் தொடர்ந்து வேலை செய்யவும் அவை முழுமையாகப் பயன் படுத்தப்படவும் தேவையான நெல்லை வாங்கத் தேவைப்படும் நடைமுறை மூலதனத்தை திரட்டும் பொருட்டு தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மாநில அரசு மூலமாக, நெல் வாங்கி அரைப்பதற்கு தேவையான நிதி உதவியைத்

தருகிறது. 1981–82 ஆம் ஆண்டில் 6 அரிசி ஆலைகளுக்காக 12.30 இலட்சம் ரூபாய் தரப்பட்டது. நடப்பு ஆண்டில் 7 அரிசி ஆலைகளுக்காக 13.50 இலட்சம் ரூபாய் வழங்குவதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

### கிடங்கு வசதி.

33. ஊரக மற்றும் விற்பனைக் கிடங்குகள்.—கூட்டுறவு சங்கங்கள் அரசிடமிருந்து 40 சதவீத மானியத்தையும், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 60 சதவீத கடனையும் பெற்று, கிராம அளவில் ஊரகக் கிடங்குகளையும், மண்டி அளவில் விற்பனைக் கிடங்குகளையும் கட்டி வருகின்றன. இக் கிடங்குகளின் ஒரு பகுதியை சங்கங்களின் அலுவலகத்திற்காகப் பயன்படுத்துவதோடன்றி, இரசாயன உரங்கள், இன்றியமையா நுகர்பொருட்கள் மற்றும் விவசாய விளைபொருட்களைச் சேமித்து வைத்து விற்பனை செய்ய இக் கிடங்குகள் பயன்படுத்தப்படுகின்றன. கட்டுவதற்காகக் கொடுக்கப்படும் நிதி உதவியின் அளவு, 107 டன் கொள்திறன் கொண்ட ஒரு ஊரக கிடங்கிற்காக 85,500 ரூபாயும், 1.000 டன் கொள்திறன் கொண்ட ஒரு விற்பனைக் கிடங்கிற்காக 3.40 இலட்சம் ரூபாயும், 500 டன் கொள்திறன் கொண்ட ஒரு விற்பனைக் கிடங்கிற்காக 2 இலட்சம் ரூபாயும் ஆகும். 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில், 5.28 இலட்சம் டன் மொத்தக் கொள்திறன் கொண்ட 3,495 ஊரகக் கிடங்குகளுக்கு, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் 4 கிடங்குகள் உட்பட 252 விற்பனைக் கிடங்குகளும் இருந்தன. மொத்தம் 0.69 இலட்சம் டன் கொள்திறன்கொண்ட 450 ஊரகக் கிடங்குகளும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் 11 கிடங்குகள் உட்பட 26 விற்பனை கிடங்குகளும் கட்டப்பட்டு வருகின்றன. 200 ஊரகக் கிடங்குகளையும் 5 விற்பனைக் கிடங்குகளையும் கட்டுவதற்காக 1983–84 ஆம் ஆண்டில் நிதி உதவி தரப்படும்.

34. குளிர்ப்பதனம்.—உருளைக் கிழங்கு, ஆப்பிள் போன்ற அழுகும் பொருட்களைச் சேமித்து வைப்பதற்காக தமிழ்நாடு, கூட்டுறவு விற்பனை இணையம் 1,250 டன் திறனுள்ள ஒரு குளிர்ப்பதன ஆலையை நடத்தி வருகிறது. இவ்விணையம் 2,000 டன் திறனுள்ள இரண்டாவது குளிர்ப்பதன ஆலையை நிறுவ ஏற்பாடு செய்து வருகிறது. இதற்காக அரசும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் நிதி உதவி தந்துள்ளன. அரசிடமிருந்தும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும் நிதி உதவி பெற்று, 2,000 டன் திறனுள்ள ஒரு குளிர்ப்பதன ஆலையை நிறுவ, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் ஏற்பாடு செய்து வருகிறது.



### நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

35. நுகர் பொருட்கள் சில்லரை விற்பனை.—மாநிலத்தில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் 2,873 கல்லூரி மற்றும் உயர் நிலைப்பள்ளி மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகள்; 288 தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் பண்டக சாலைகள் மற்றும் 15 மகளிர் பண்டக சாலைகள் உட்பட 3,731 பிரதமப் பண்டக சாலைகளையும் அவற்றின் 394 கிளைகளையும் 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளையும் அவற்றின் 975 கிளைகளையும், மேலும் மாநில நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும் கொண்டு அடங்கியுள்ளது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லரை விற்பனையின் மதிப்பு, முந்தைய ஆண்டில் 181.55 கோடி ரூபாயிலிருந்து, 1981–82 ஆம் ஆண்டில் 211.30 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. நடப்பு ஆண்டு முழுவதற்குமான இலக்கு 200 கோடி ரூபாயாக இருக்க, டிசம்பர் திங்களுடன் முடிந்த ஒன்பது மாத காலத்தில் 175 கோடி ரூபாய் அளவிற்கு சில்லரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1983–84 ஆம் ஆண்டிற்கான இலக்கு 220 கோடி ரூபாயாகும்.

36. கிராமங்களில் இன்றியமையாப் பொருட்கள் விற்பனை.—இன்றியமையாப் பொருட்கள் தாராளமாகவும் நியாய விலையிலும் கிடைக்கச் செய்யும் பொருட்டு, 1978 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட, ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடை நடத்தும் திட்டத்தின் கீழ், 1981–82 ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்தில் மேலும் ஒன்பது கிராமக் கடைகள் திறக்கப்பட்டன. இதனால், மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் கிராமக் கடைகளின் மொத்த எண்ணிக்கை 11,110 ஆக உயர்ந்தது. விற்பனையாளர் சம்பளம், வாடகை மற்றும் இதரச் சில்லரைச் செலவுகளுக்காக ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு முழுநேரக் கடைக்கும் 3,000 ரூபாய், ஒவ்வொரு பகுதி நேரக் கடைக்கும் 2,100 ரூபாய், மாற்றியமைக்கப்பட்ட ஒவ்வொரு கடைக்கும் 600 ரூபாய் என்ற வீதத்தில் அரசு தொடர்ந்து மானியம் அளித்து வருகிறது. கிராமக் கடைகள் 1981–82 ஆம் ஆண்டில் இன்றியமையாப் பொருட்கள் 85.20 கோடி ரூபாய் அளவிற்கு விற்றன. அதற்கு முந்தைய ஆண்டில் விற்பனை 29.53 கோடி ரூபாயே ஆகும். நடப்பு ஆண்டில், டிசம்பர் திங்கள் முடிய விற்பனை 58.71 கோடி ரூபாய்.

37. சிறப்பங்காடிகளும் சிறப்புச் சிற்றங்காடிகளும் செய்த விற்பனை.—1981–82 ஆம் ஆண்டில் மன்னார் குடியில் தொடங்கப் பெற்ற ஒரு சிறப்பங்காடியையும், மாநிலத்தில் தொடங்கப் பெற்ற 11 நவீன சில்லரை அங்காடிகளையும் சேர்த்து, தற்பொழுது மாநிலத்தில் 30 சிறப்பங்காடிகளும், 159 நவீன பெரிய அளவிலான சில்லரை அங்காடிகள் எனப்படும் சிறப்புச் சிற்றங்காடிகளும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளாலும்

பிரதமப் பண்டக சாலைகளாலும் நடத்தப்படுகின்றன. இந்த அங்காடிகள் 1981–82 ஆம் கூட்டுறவு ஆண்டில் 76.44 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்தன. நடப்புஆண்டில் மாநில அரசின் உதவி பெற்ற, மேலும் 10 நவீன சில்லரை அங்காடிகள் திறக்கப்பட இருக்கின்றன. அவற்றில் ஒன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் பொன்னேரியில் ஆதிதிராவிடர்கள் குடியிருப்பை அடுத்து நிறுவப்படும். மேலும் 10 நவீன சில்லறை அங்காடிகளுக்காக 1983-84 ஆம் ஆண்டில் மாநில அரசின் நிதி உதவி அளிக்க வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு உதவியுடன் 3 சிறப்பங்காடிகளையும் 7 பெரிய அளவிலான சில்லறை அங்காடிகளையும் நிறுவுவதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

38. நலிந்த பிரிவினருக்குச் சேவை.—மாநிலத்தில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினர் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் முதலியோரின் தேவைகளுக்கேற்ப நிறுவப்பட்ட 66 சிறு கிளைகளும், மாநகரங்களிலும் நகரங்களிலும் குடிசைப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினருள் மிகவும் நலிந்த பிரிவினருக்கென நிறுவப்பட்ட 100 மிகச் சிறு கிளைகளும் (மக்கள் அங்காடிகள்), தமது விற்பனையை முந்தைய ஆண்டின் 5.99 கோடி ரூபாயிலிருந்து, 1981–82 ஆம் ஆண்டில் 8·78 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தின. தொழிற்சாலை தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள்/கூலிகள், குறைந்த வருவாய் பிரிவினர்/பின்தங்கிய வகுப்பினர்/குடிசைப் பகுதிகள் மற்றும் ஷெட்யூல்டு வகுப்பினர்/பழங்குடியினர் நிறைந்துள்ள இதர குடியிருப்புப் பகுதிகளில் உள்ளவர்கள் ஆகியோரின் தேவைகளை நிறைவேற்ற 13 சிறிய அளவிலான சில்லறை அங்காடிகளை நிறுவுவதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

39. மாணவ சமுதாயத்துக்குச் சேவை.—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1981–82 ஆம் கல்வி ஆண்டில் 5.69 கோடி ரூபாய் மதிப்புள்ள நாட்டுடைமை ஆக்கப்பட்ட பாட நூல்களையும். 2.83 கோடி ரூபாய் மதிப்புள்ள குறிப்பேடுகளையும் விற்பனை செய்து, மாணவ சமுதாயத்திற்கு தொடர்ந்து சேவை செய்து வந்தன. நடப்பு கல்வி ஆண்டில் இதுவரை செய்துள்ள விற்பனை முறையே 5.35 கோடி ரூபாயும் 3.66கோடி ரூபாயும் ஆகும்.

40. காய்கறி விற்பனையை விரிவாக்குதல்.—உற்பத்தியாளர்களுக்குத் தகுந்த வருமானமும் நுகர்வோருக்கு நியாயமான விலையும் அமையும் பொருட்டு சென்னை மாநகரில் 1981–82 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற காய்கறி விநியோகத் திட்டம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு விரிவாக்கப்படுகிறது. இதற்காக, முச்சக்கர வண்டிகளும் பெட்டிக்கடைகளும் வாங்க அரசு நிதி உதவி அளித்துள்ளது.



41. தரச் சோதனை வசதிகளைப் பெருக்குதல்—நுகர்வோருக்குத் தரமான பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு அவர்களுக்கு விற்பனை செய்யப்படுகிற உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுகர் பொருட்களின் தரம் குறித்து முன் சோதனை செய்வதற்காக, மூலதனச் செலவில் ஒரு பங்கு அரசு நிதி உதவியுடன், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையில் தரச் சோதனை ஆய்வுக் கூடங்களை நிறுவியுள்ளன. நடப்பு ஆண்டில் சேலத்தில் மேலும் ஓர் ஆய்வுக் கூடம் நிறுவப்படுகிறது. மேலும் நான்கு தரச் சோதனை ஆய்வுக் கூடங்களை நிறுவுவதற்காக 1983–84 ஆம் ஆண்டில் நிதி உதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

42. மண்டல விநியோக நிலையங்கள் செய்த விற்பனை.—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வாங்கும் சக்தியைத் திரட்டி, பேரம் செய்யும் சக்தியை வலுவாக்கி, கூட்டுறவுச் சில்லறை அங்காடிகளுக்குத் தயாரிப்பாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்து சுமுகமாகவும் தொடர்ச்சியாகவும் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, கோயம்புத்தூரிலும், சென்னையிலும் இரு மண்டல விநியோக நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள நிலையம் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பணியைத் தொடங்கியது. இவ்விரு நிலையங்களும் 1981–82 ஆம் ஆண்டில் 16.55 கோடி ரூபாய் அளவிற்கும், நடப்பு ஆண்டில் டிசம்பர் திங்கள் வரையில் 16.04 கோடி ரூபாய் அளவிற்கும் நுகர் பொருட்களை விநியோகித்துள்ளன.

43. நுகர்வோர் தொழிற் பிரிவுகள்.—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வரும் தொழில் பிரிவுகளுள் எண்ணெய் ஆலைகளும், அரிசி ஆலைகளும், காப்பிப் பொடி பிரிவுகளும் அடங்கும். திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலை 1981–82 ஆம் ஆண்டில் 35,945 டஜன் பனியன்களைத் தயாரித்தது. சென்னையில் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தொடங்கிய பாலிதின் பை செய்யும் பிரிவு 1982 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரையில் 600 கிலோ கிராம் பாலிதின் உறைகளைத் தயாரித்தது.

44. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய தனிக் குழுவின் அறிக்கை.—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய பல சிக்கல்களையும் ஆராய்ந்து தக்க பரிந்துரைகளை வழங்குவதற்காக அரசு 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் தலைமையில் அமைத்த குழு, தனது அறிக்கையை 1983 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் வழங்கியுள்ளது. அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

45. ஆலோசனைக் குழுக்கள் அமைத்தல்.—பொது விநியோக முறையைப் பயன் விளைவிக்கும் வகையில் நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனை தரவும் உதவி புரியும்

பொருட்டும், மாநிலத்தில் உள்ள மாவட்டங்களில் அலுவலர் சார்பில்லா ஆலோசனைக் குழுக்களை அமைப்பதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**46.** மின்சக்தி வினியோகத்தை விரிவாக்குதல்.—கிராமப் புறங்களில் மின் சக்தியைப் பரவலாக வழங்குவதற்காகவும், பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்காகவும் இயங்கி வரும் கும்பகோணம் கிராமப்புற மின் இணைப்புக் கூட்டுறவுச் சங்கம் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில், நலிந்த பிரிவினருக்கான '' ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு மின் விளக்குத் '' திட்டத்தின் கீழ் 2,859 மின் இணைப்புகள் உட்பட மொத்தம் 8,116 மின் இணைப்புகளை வழங்கியுள்ளது. மற்றுமொரு கிராமப்புற மின் இணைப்புக் கூட்டுறவுச் சங்கம் திருமயத்தில் 1982 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் வாரியம், திருமயம் வட்டம் முழுவதையும் தம்மிடம் ஒப்படைப்பதை இச் சங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இது போன்ற ஒரு மூன்றாவது சங்கத்தை வட ஆற்காடு மாவட்டத்தில் வந்தவாசியில் அமைப்பதற்கான கருத்துருக்கள் ஆராயப்படுகின்றன.

### நலிந்த பிரிலினருக்காக கூட்டுறவுச் சங்கங்கள்.

**47.** தனிவகை கூட்டுறவுச் சங்கங்கள் .—தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் மலைச் சாதியினர் போன்ற நலிந்த பிரிவினரின் நலனுக்காகவே சில கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்த வேலைகளைப் பெறுவதின் வழியாக அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றன. பிற வகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு சேவைகளையோ அல்லது கடன் உதவியையோ அளிக்கின்றன. இச்சங்கங்களுக்கு மானியம், பங்கு மூலதனம், கடன் மற்றும் துறை அலுவலர்களின் இலவசச் சேவை போன்ற உதவிகளை அரசு அளித்து வருகிறது.

**48.** மோட்டார் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்.—ஓராயிரம் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு ஒவ்வொருவருக்கும் செலவில் 25 சதவீத அளவிற்கு 1,125 ரூபாய்க்கு மேற்படாமல் அரசு மானியம் அளித்து, சைக்கிள் ரிக்கஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள உதவும் திட்டம், நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ்வுதவி சென்னை மாநகரில் உரிமம் பெற்ற சொந்தக்காரரே ஓட்டும் ரிக்ஷாக்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. செலவில் மீதி, மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் பெறுவதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்கப்படுகிறது. இத் திட்டத்தை நிறைவேற்ற வட சென்னையில் ஒன்றும், தென்சென்னையில் ஒன்றுமாக இரண்டு



மோட்டார் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு, சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகின்றனர். சைக்கிள் ரிக்ஷாக்களைச் செப்பனிட்டு அவற்றில் மோட்டார் பொருத்தும் பணியும் நடந்துக் கொண்டிருக்கிறது.

49. சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்த கூட்டுறவுச் சங்கம்.—படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்காக சென்னையில் ' நாசே ' (NAESEY ) கூட்டுறவுச் சிக்கன மற்றும் நாணயச் சங்கம் என்னும் பெயரில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஒரு புதுவகைக் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப் பெற்றுள்ளது. இச்சங்கம் தனி நபர் ஜாமீன் பேரிலும், கடன்களைக் கொண்டு வாங்கும் இடம் பெயராச் சொத்துக்களின் இணைப் பிணையத்தின் பேரிலும் கடன்களை வழங்குகிறது.

50. வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகளுக்கான கட்டுமானக் கூட்டுறவுசங்கம்.—பொதுப் பணித்துறையில் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதில் கூடிய வரையில் தனியார் ஒப்பந்த முறையைத் தவிர்ப்பதன் வாயிலாக, வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகளுக்கும் டிப்ளமோதாரர்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன், பரிசோதனை முறையில், வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகளுக்கும் டிப்ளமோதாரர்களுக்குமான கட்டுமானக் கூட்டுறவுச் சங்கமொன்று சென்னையில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பதியப்பட்டது. பஞ்ச நிவாரணத் திட்டங்களையும் இதர முக்கிய கட்டிடத் திட்டங்களையும் நிறைவேற்றுவதில் உள்ள கட்டுமானப் பணிகள் இச்சங்கத்திற்குக் கொடுக்கப்படும். இச் சங்கத்திற்கு அரசு 3.64 இலட்சம் ரூபாய் நிதி உதவி தந்துள்ளது. இச்சங்கம் 2.38 இலட்சம் ரூபாய் மதிப்பீடு உள்ள 7 கட்டுமானப் பணிகளை ஏற்று, நிறைவேற்றப்படுவதற்காக அவற்றை தனது உறுப்பினர்களுக்குக் கொடுத்துள்ளது.

51. ஷெட்யூல்டு வகுப்பினருக்கான தனிப் பகுதித் திட்டம்.—ஷெட்யூல்டு வகுப்பினரின் மேம்பாட்டுக்காக, கடன் வழங்கும், கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், உப்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முதலியவற்றிற்கு, அரசு 1981—82 ஆம் ஆண்டில் தனிப் பகுதித் திட்டத்தின் கீழ் 44.45 இலட்சம் ரூபாய் அளவிற்கு உதவி வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டிற்கான ஒதுக்கீடு 34.16 இலட்சம் ரூபாயாக இருக்க, 1983 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் வரையில் 24.08 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

**52. பழங்குடியினர் மேம்பாடு.**—நீலகிரி மாவட்டத்தில் மசின குடி மலையில் பழங்குடியினருக்கான பெரிய அளவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்று 1982–83 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் புட்டுள்ளது. இத்துடன் பழங்குடியினருக்கான பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 13 உள்ளன. பழங்குடியினரின் நலிந்த பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு, அரசு இப்பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தொடர்ந்து தாராளமாக நிதி உதவி செய்து வருகிறது. தனது விவகார எல்லையில் உள்ள பழங்குடியினர் குடும்பங்களில் 70 சதவீதத் தினரை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள தென்னாற்காடு மாவட் டத்தில் இருக்கும் வெள்ளிமலை பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைத் தவிர, ஏனைய 12 பெரும் பலநோக்குக் கூட் டுறவுச் சங்கங்களும் தமது விவகார எல்லையில் உள்ள எல்லாப் பழங்குடிக் குடும்பங்களையும் உறுப்பினர்களாக்கியுள்ளன. 13 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் 36,456 உறுப்பினர்கள் இருந் தனர். இச்சங்கங்கள், பயிரிடுவதற்கும், பிற உற்பத்திக் காரியங் களுக்கும் ஆண்டொன்றுக்கு 4 சதவீதம் என்கின்ற சலுகை வட்டியில் கடன்களையும், இதர சேவைகளையும் ஒரே இடத்தில் தொடர்ந்து வழங்கி வருகின்றன. இச்சங்கங்கள் செய்துள்ள சேவைகளின் விவரங்கள் மற்றும் அவற்றின் அளவுகள் கீழே குறிக்கப்பட்டு உள்ளன :—

| ஆண்டு. | 4 சதவீத வட்டியில் வழங்கிய கடன்கள். | கொள்முதல் செய்த சிறு வனப் பொருட்களின் மதிப்பு. | வழங்கிய விவசாய இடு பொருட்களின் மதிப்பு. | விநியோகித்த நுகர் பொருட்களின் மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (இலட்சம் ரூபாயில்.) | | |
| 1980–81 .. | 23.85 | 8.01 | 7.31 | 33.51 |
| 1981–82 .. | 48.46 | 7.73 | 12.17 | 56.46 |
| 1982–83 .. (டிசம்பர் முடிய.) | 23.93 | 5.58 | 5.26 | 41.38 |



சேலம் மாவட்டத்தில் பச்சமலையில் ஒன்றும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் நம்பியம்பேட்டையில் மற் றொன்றும் ஆக, மேலும், இரண்டு பெரும பலநோக்குக் கூட் டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான கருத்துருக்கள் அரசின் பரி சீலனையில் உள்ளன.

## கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

**53. கொள்கைப் பரப்புதல் மற்றும் விளம்பரங்களைத் தீவிரப் படுத்துதல்.**—தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்கொள்கை பரப்பு தல், விளம்பரம் செய்தல் ஆகிய தம் பணிகளைத் தீவிரப்படுத்தி யுள்ளது. கூட்டுறவு பற்றி தமிழிலும், ஆங்கிலத்திலும் மாத இதழ்களைத் தொடர்ந்து வெளியிடுவதுடன், கூட்டுறவுத் துறை யின் முக்கிய நடவடிக்கைகளையும், சாதனைகளையும், திட்டங் களையும் பலதரப்பட்ட பொதுமக்களுக்குப் பரவலாக எடுத்துக் கூறுவதற்காக அவ்வொன்றியம் ஆங்கிலத்தில் ஒரு இருவார செய் திக் கடிதத்தை வெளியிட்டு வருகிறது. அவ்வொன்றியம், மா நிலத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் புகழ் பெற்ற பத்திரிகை களில் துறையின் முக்கியமான திட்டங்கள் பற்றி விளம்பரங்கள் செய்து வருகிறது. கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளைப் பரப்ப அவ்வொன்றியம் தொலைக்காட்சி, வானொலி ஆகியவற் றைப் பெரிதும் பயன்படுத்தி வருகிறது. கொள்கை பரப்புதலுக் காக அது 7 ஊர்திகளைப் பயன்படுத்தி வருகிறது. கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதன் அவசியம் பற்றியும் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் பற்றியும் உறுப்பினர் களுக்கு எடுத்துரைக்கும் வகையில், அது மூன்று சிறு சினிமாப் படங்களை தயாரித்துள்ளது. கூட்டுறவுக் கடன்களைத் திருப் பிச் செலுத்துவது பற்றி சுமார் இரண்டு இலட்சம் சிறு வெளியீடு களை அது விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விநியோகித்துள்ளது. அது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா கொண்டாடியும், நூலகங்கள் நடத்தியும், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தியும், மேலும் பொருட்காட்சிகளில் பங்கு கொண்டும் வருகிறது. மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும், மாத இதழ்கள் வெளியிட்டும், மாவட்ட அளவில் நூலகங்கள் நடத்தியும் வருகின்றன. மிகச் சிறந்த முறையில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் கொண்டாடப்படும் அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவின் போது கேடயங்கள் வழங்கப்படுகின்றன.

**54. ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளுதல்.**—பல்வகைச் கூட் டுறவுச் சங்கங்களின் செயல்பாடு, துறையின் பல திட்டங்களின் நிறைவேற்றம், மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பின்பற்றும் பல நடைமுறைகள் ஆகியவற்றைத் தனித்து நின்று ஆராயவும், கூட் டுறவுச் சங்கங்களின் செயல் திறனை மேம்படுத்த, திட்டங்களி னால் ஏற்படும் நன்மைகளை அதிகரிக்க மற்றும் முறைகளையும்

நடைமுறைகளையும் ஒழுங்குபடுத்த வேண்டிய வழிவகைகளைப் பரிந்துரைக்கவும், நடப்பு ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் ஒருவர் தலைமையில் ஒரு ஆராய்ச்சிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

55. **மேலாண்மைப் பயிற்சி.**—பெரிய கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை நிர்வாக அலுவலர்களாகப் பணிபுரியும் கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்குக் கொள்முதல், விற்பனை, கணக்குப் பணியாளர் மேலாண்மை போன்ற நடவடிக்கைகளில் நவீன நுட்பங்களை விளக்கும் நோக்கத்துடன், நடப்பு ஆண்டில் சென்னை அண்ணா இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்டிட்ல் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் 25 தலைமை நிர்வாக அலுவலர்களுக்கு, மேலாண்மையின் பொதுக் கொள்கைகள், திட்டமிடுதல் மற்றும் சம்பந்தப்பட்ட பொருள்களில் ஒருவார காலப் பயிற்சி தரப்பட்டது.

56. **கூட்டுறவுப் பயிற்சி.**—இளநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி சென்னை மத்திய கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திலும், மாவட்டங்களில் உள்ள ஏழு கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களிலும் அளிக்கப்படுகிறது. நடுநிலைப்பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி, சென்னை நடேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் அளிக்கப்படுகிறது. நடுநிலைப் பணியாளர்களுக்காக மதுரையில் இரண்டாவது கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை நிறுவ, மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது. தக்க இட வசதி கிடைத்ததும், இந்த இரண்டாவது கல்லூரி தொடங்கப்படும்.

பொது.

57. **சட்டத்தைத் திருத்துதல்.**—கூட்டுறவு இயக்கத்தின் சீரிய வளர்ச்சிக்காக 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தையும், 1934-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகளின் சட்டத்தையும் தள்ளுபடி செய்தும், இணைத்தும் விரிவான சட்டம் ஒன்றைக் கொண்டுவரும் பொருட்டு 1980-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட முன்வடிவு, 1980-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 6-ஆம் நாள் சட்ட மன்றத்தில் மறுபடியும் கொண்டுவரப்பட்டு ஒரு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது. அது வுக்குழு சட்ட முன் வடிவை ஆராய்ந்து, ஒரு திருத்திய முன் வடிவை பரிந்துரைத்தது. அந்தத் திருத்திய சட்ட முன் வடிவு சட்டமன்றத்தில் 1982-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29-ஆம் நாள் வைக்கப்பட்டது. அது தற்பொழுது சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. புதிய சட்டத்தின் கீழ் விதிகள் விரைவில் வெளியிடப்படும்.



58. **கூட்டுறவாளர்களின் இரத்த நன்கொடை.**—முந்தைய, ஆண்டுகள் போலவே 1982-ஆம் ஆண்டுலும் நவம்பர் திங்களில் அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவின்போது சென்னை, பொது மருத்துவ மனையில் உள்ள இரத்த வங்கிக்கு 102 கூட்டுறவாளர்கள் மனமுவந்து இரத்த நன்கொடை செய்தனர்.

59. **உடல் ஊனமுற்றோர், ஏழை மகளிர் குழந்தைகள் போன்றவருக்கு உதவி.**—தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் 1978-ஆம் ஆண்டிலிருந்தே உடல் ஊனமுற்றோர், ஏழை மகளிர் போன்றவர்களுக்கு உதவி புரிந்து, சமூக சேவையில் ஆர்வம் காட்டி வந்துள்ளன. கடந்த 5 ஆண்டுகளில், சென்னை மாநகரில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், ஆண்டுதோறும் கிடைக்கும் இலாபத்திலிருந்து பிரித்து ஏற்படுத்தப்பட்டுள்ள தம் பொது நல நிதிகளிலிருந்து, 1.26 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சக்கர நாற்காலி, ஊன்றுகோல், போன்ற துணைக் கருவிகளை 323 உடல் ஊனமுற்றோருக்கு வழங்கியும், 3,600 ரூபாய் செலவில் செம்பியத்தில் உள்ள புத்தூர் சி.எஸ்.ஐ. ஆப்பர்சூனிட்டி பள்ளியில் பயிலும் 10 ஊனமுற்ற மாணவர்களுக்கும் அவர்களுடைய வழித் துணைவர்களுக்கும் பேருந்து அனுமதிச் சீட்டுகள் வழங்கியும், ஏழை மகளிருக்கு 17 தையல் மெஷின்களைக் கொடுத்தும், தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியும் உதவி புரிந்துள்ளன. மேலும், இக்கூட்டுறவுச் சங்கங்கள் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்காக 19 இலட்ச ரூபாய் நன்கொடை அளித்துள்ளன.

60. **கூட்டுறவு விளையாட்டுக் குழுக்கள்.**—அலுவலக சார்பில்லாதவர்கள், அலுவலர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களைக்கொண்ட கூட்டுறவாளர்களிடையே விளையாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்டங்களில் கூட்டுறவு விளையாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநில அளவிலும் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட மற்றும் மாநில சட்டங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

V2;11,31 N83
136025

128-59—40



## இணைப்பு I.

(II ஆம் எண் இனத்தைக் காண்க)

**சிறைத் துறைத் தலைவர்**
**(ரூ. 1,600-75-1,750-100-2,250.)**

- **ஆடவர் பிற்காப்பு இல்லம், பல்லாவரம்.**
  - கண்காணிப்பாளர் (ரூ. 750-50-1,350)
  - உற்பத்தி உதவியாளர் (ரூ. 525-25-675-30-855 35-925)
  - செய்முறை விளக்குநர் (ரூ. 400-15-490-20-650 25-700)
  - தச்சர் (ரூ. 325-10-445-15-550).
  - இணைப்பர் (ரூ. 325-10-441-15-550)
  - எந்திரம் இயக்குபவர் நிலை I (ரூ. 325-10-445-15-550)
  - எந்திரம் இயக்குபவர் நிலை II (ரூ. 295-5-315-10-475)
- **நன்னடத்தைப் பிரிவு**
  - முதன்மை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் (ரூ. 1,000-60-1,300-70-1,650)
  - வட்டார நன்னடத்தை அலுவலர் (ரூ. 750-50-1,350)
  - நன்னடத்தை அலுவலர் (ரூ. 600-30-750-35-890-40-1,050).
- **சிறைத் துறைத் துணைத் தலைவர் (ரூ. 1,300-75-1,900-100-2,000)**
  - **மத்திய சிறைச்சாலைகள் (தேர்வுநிலை) கண்காணிப்பாளர் (ரூ. 1,000-60-1,300-70-1,050)**
    - கண்காணிப்பாளர் (ரூ. 850-50-1,200-60-1,500)
      - **அலுவலகம்**
      - **சிறைச்சாலைக்குள்**
        - கூடுதல் கண்காணிப்பாளர் (ரூ. 750-50-1,350)
        - சிறை அலுவலர் (ரூ. 600-30—750-25-890-40-1,050)
        - சிறைத் துணைத் அலுவலர் (ரூ. 450-20-590-25-740-30-800)
        - சிறை உதவி அலுவலர் (ரூ. 400-15-490-20-650-25-700)
        - முதன்மை தலைமைச் சிறைக் காவலர் வாயிற் காவலாள் (ரூ. 350-10-420-15-600)
        - சிறைக்காவலர் நிலை I (ரூ. 295-5-315-10-475)
        - சிறைக் காவலர் நிலை II (ரூ. 280-5-320-10-450)
      - **உற்பத்தி நிறுவனம்**
        - தொழிற்சாலை மேலாளர், (ரூ. 600-30-750 35-890-40-1,050)
        - காலணி தயாரிப்பு பணி மேற்பார்வையாளர் (ரூ. 525-25-675-30-855-35-925)
        - தச்சு ஆசிரியர், நிலை தச்சு கம்மியர் (ரூ. 400-15-490-20-650-25-700)
        - நூற்பு ஆசிரியர் நெசவு ஆசிரியர், சாய வேலை ஆசிரியர், சணல், கம்பளி சிக்கு, எடுப்பு ஆசிரியர் (ரூ. 525ம25-675-30-855-35-925)
        - தையல் ஆசிரிய நிலை I (ரூ. 325-10-445-15-550)
        - தையல் ஆசிரியர் நிலை II முதலியவர்கள் (ரூ. 280-5-320-10-450)
        - சிப்ப எழுத்தர், நெசவுப் பணியாள், புத்தகம் கட்டும் மேஸ்திரி, (ரூ. 265-5-325-10-425)
      - **பயிற்சி**
        - இடைநிலை ஆசிரியர் (ரூ. 350-10-420-15-600)
        - தொடக்க நிலை ஆசிரியர் (ரூ. 280-5-320-10-450)
  - **பெண்கள் மாநிலச் சிறைச்சாலை, வேலூர் கண்காணிப்பாளர் (ரூ. 850-50-1,200-60-1,1,500)**
    - **பாலர் பள்ளி**
      - இடை நிலை ஆசிரியர் (ரூ. 350-10-490-15-600)
      - தொடக்க நிலை ஆசிரியர் (ரூ. 280-5-320-10-450)
      - ஆயா (ரூ. 280-5-320-10-450)
    - **சிறைச்சாலைக்குள்**
      - துணைக் கண்காணிப்பாளர் (ரூ. 600-30-650-35-890-40-1,050)
      - மூதாய் (ரூ. 450-20-590-25-740-30-800)
      - உதவி மூதாய் (ரூ. 450-20-590-25-740-30-800)
      - தலைமை வாயிற் காவலாள் (பெண்) முதன்மைத் தலைமைச் சிறைக்காவலர்பெண் (ரூ. 350-10-420-15-600)
      - சிறைக்காவலர் (பெண்) நிலை I (ரூ. 295-5-315-10-475).
      - சிறைக்காவலர் (பெண்) நிலை II (ரூ. 280-5-320-10-450).
  - **பார்ஸ்டன் பள்ளி, புதுக்கோட்டை கண்காணிப்பாளர் (ரூ. 850-50-1,200-60-1,500)**
    - **அலுவலகம்**
    - **பள்ளிக்கூடம்**
      - துணைக் கண்காணிப்பாளர் (ரூ. 600-30-750-25-890-40-1,050)
      - உதவிக் கண்காணிப்பாளர் (ரூ. 450-20-590-25-740-30-800)
      - துணை உதவிக் கண்காணிப்பாளர் (ரூ. 400-15-490-20-650-25-700)
      - முதன் அலுவலர் (ரூ. 350-10-420-15-600)
      - சிற்றலுவலர் நிலை I (ரூ. 295-5-315-10-475)
      - சிற்றலுவலர் நிலை II (ரூ. 2805-320-10-450)
  - **அலுவலகம்**
    - **கணக்குகளும் தணிக்கையும்**
      - கணக்கு அலுவலர் (ரூ. 750-50-1,350)
      - உதவி கணக்கு அலுவலர் (ரூ. 675-35-885-45-1,200)
      - கண்காணிப்பாளர் (ரூ. 525-25-675-30-885-35-925)
      - உதவியாளர் (ரூ. 400-15-490-20-650-25-700).
      - இளநிலை உதவியாளர் (ரூ. 350-10-420-15-600).
    - **நிர்வாகம்**
      - சிறைத் துறைத் தலைவரிசு நேர்முக உதவியாளர் (ரூ. 750-50-1,350)
      - தேர்வு நிலை கண்காணிப்பாளர் (ரூ. 675-35-885-45-1,200).
      - அலுவலக மேலாளர் நிலை I கண்காணிப்பாளர் (ரூ. 525-25-675-30-855-35-925)
      - அலுவலக மேலாளர் நிலை II தேர்வு நிலை உதவியாளர் (ரூ. 450-20-590-25-740-30-800)
      - உதவியாளர் (ரூ. 400-15-490-20-650-25-700)
      - இளநிலை உதவியாளர் (ரூ. 350-10-420-15-600)